الكوكب الساطع من الخطب الجوامع

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைகள், அதன் அழகிய அம்சங்கள், மேன்மைகள், தனிச்சிறப்புகள் மற்றும் அதை பாதிக்கும் காரணிகள் பற்றிய குத்பா (சொற்பொழிவு) தொகுப்பு - தமிழ் மொழிபெயர்ப்பு

தொகுப்பு : மாஜித் பின் சுலைமான் அர்-ரஸ்ஸி

மொழிபெயர்ப்பு:

ஹாமித் ஃபத்ஹூர் ரஹ்மான்

முஹம்மது ஷாஃபி

பல்வேறு குத்பாக்களின் தொகுப்பு

இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைகள், அதன் அழகிய அம்சங்கள், மேன்மைகள், தனிச்சிறப்புகள் மற்றும் அதை பாதிக்கும் காரணிகள்

பற்றிய குத்பா (சொற்பொழிவு) தொகுப்பு - தமிழ் மொழிபெயர்ப்பு

தொகுப்பு : மாஜித் பின் சுலைமான் அர்-ரஸ்ஸி

தமிழில்: ஹாமித் ஃபத்ஹுர் ரஹ்மான் முஹம்மது ஷாஃபி

மின்னஞ்சல் : fikhsunnah998@gmail.com

டெலிகிராம் : https://t.me/+xQ5TA4qtwkgzM2I0

الكوكب الساطع من الخطب الجوامع

مجموع خطب في أصول الدين ومحاسنه
وفضائله ومزاياه ونواقضه

(الترجمة التاملية)

تأليف:

فضيلة الشيخ ماجد بن سليمان الرسي

பொருளடக்கம்

1. அல்லாஹ்வின் உள்ளமையை விசுவாசம் கொள்ளல்……………………..7
2. அல்லாஹ்வின் இறைமையை விசுவாசம் கொள்ளல்…………………18
3. வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்வது கடமை….26
4. அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்ளல்…………...38
5. மலக்குமார்களை விசுவாசித்தல்……………………………………...…49
6. வேதங்களை ஈமான் கொள்ளல்…………………………………………66
7. இறைத் தூதர்களை விசுவாசம் கொள்ளல் – 1……………………..........77
8. இறைத் தூதர்களை விசுவாசம் கொள்ளல் – 2………..………………….86
9. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 1…………………………………98
10. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 2……………………………..107
11. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 3………………………………116
12. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 4………………………………127
13. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 5………………………………143
14. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 6………………………………157
15. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 7………………………………167
16. மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் 8………………………………178
17. விதியை விசுவாசம் கொள்ளல்………………………………………………191
18. நபியவர்களை தூதராக ஏற்பதன் நிபந்தனைகளும் அவற்றை முறிப்பவையும்…………………………………………………………201
19. நபியவர்களை விசுவாசிப்பதன் உள்ளடக்கங்கள்…………………………211
20. நபியவர்களின் மகத்துவத்தை உணர்த்தும் 10 ஆதாரங்கள்……………225
21. நபியவர்களுக்குக் கட்டுப்படுவதன் அவசியம்……………………………238
22. நபியவர்களுக்கு மாறு செய்வதை அஞ்சுதல்………………………………245
23. நபியவர்களை நேசித்தல்………………………………………………………254
24. நபித்தோழர்களைக் கண்ணியப்படுத்தல்…………………………………264
25. நபியவர்களின் மனைவியரைக் கண்ணியப்படுத்தல்……………………276
26. நபியவர்களின் குடும்பத்தைக் கண்ணியப்படுத்தல் ……………………285
27. நபியவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறல் …………………………292

28. நபியவர்கள் மீது ஸலவாத் கூறுவதன் பயன்கள் ………………………..299
29. ஹிஜ்ரத் கற்றுத் தரும் பதினாறு பாடங்கள் ………………………………..307
30. நவாகிதுல் இஸ்லாம் 1……………………………………………………319
31. நவாகிதுல் இஸ்லாம் 2……………………………………………………334
32. நவாகிதுல் இஸ்லாம் 3……………………………………………………347
33. நவாகிதுல் இஸ்லாம் 4……………………………………………………356
34. நவாகிதுல் இஸ்லாம் 5……………………………………………………365
35. நவாகிதுல் இஸ்லாம் 6……………………………………………………374
36. நவாகிதுல் இஸ்லாம் 7……………………………………………………384
37. நவாகிதுல் இஸ்லாம் 8……………………………………………………396
38. நவாகிதுல் இஸ்லாம் 9……………………………………………………401
39. நவாகிதுல் இஸ்லாம் 10…………………………………………………..410
40. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (1)………………………418
41. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (2)………………………427
42. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (3) ………………………435
43. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (4) ………………………442
44. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (5) ………………………450
45. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (6) ………………………457
46. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (7) ………………………465
47. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (8) ………………………471
48. ஜும்ஆ நாளின் தனித்துவங்களும் சிறப்புக்களும்……………………478
49. ஜுமுஆத் தொழுகைக்கு உள்ள பத்து சிறப்பம்சங்கள்………………..486
50. தொழுகையின் முக்கியத்துவம்……………………………………………..494
51. 5 தொழுகைக்காக நேரகாலத்துடன் செல்வதன் சிறப்பு………………501
52. ஜமாஅத் தொழுகைக்காக விரைந்து செல்வது அவசியம் என்பதற்கான 10 ஆதாரங்கள்…………………………………………………………..507
53. துல்ஹஜ் முதல் பத்தின் சிறப்புகள்……………………………………….517
54. அரஃபா தினத்தின் சிறப்புகள்…………………………………………….528
55. ஈதுல் அழ்ஹா பெருநாள் உரை……………………………………………537

56. முஹர்ரம் மாதத்தின் மகத்துவம் மற்றும் ஆஷூ ரா நோன்பின் சிறப்புகள்……………………………………………………………………………………547
57. ஈதுல் பித்ர் பெருநாள் உரை………………………………………………………………….561
58. ரமழானின் 10 இரகசியங்கள்…………………………………………………………….570
59. ரமழான் நோன்பின் 30 சிறப்பம்சங்கள் – 01……………………………………581
60. ரமழான் நோன்பின் 30 சிறப்பம்சங்கள் – 02……………………………………594
61. ரமழான் மாதத்தில் அதிகமாக அல்குர்ஆனை ஓதுதல்……………………608
62. பைத்துல் முகத்தஸ் மற்றும் மஸ்ஜிதுல் அக்ஸாவின் பத்து சிறப்புகள்…………617
63. பூமியில் அநியாயமும் குழப்பமும் செய்யக் கூடாது…………………….635
64. கொரொனா - நோயும் நிவாரணமும்………………………………………….644

அல்லாஹ்வின் உள்ளமையை விசுவாசம் கொள்ளல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

﴿ يٰـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْـتُمْ مُّسْلِمُوْنَ ﴾

﴿ يٰـاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً‌ ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ‌ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا ﴾

﴿ يٰـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا ۙ يُّصْلِحْ لَـكُمْ اَعْمَالَـكُمْ وَيَغْفِرْ لَـكُمْ ذُنُوْبَكُمْ‌ ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيْمًا ﴾

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும் நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள் மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்” (அல்குர்ஆன் : 3:102)

“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர்

இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள் மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்" (அல்குர்ஆன் : 4:1)

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். (அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான் அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார். (அல்குர்ஆன் : 33:70)

பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டலில் மிகச்சிறந்தது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிக மோசமானது, அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே செல்லும்.

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை ஈமான் கொள்வது என்பது நான்கு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது :

1. அல்லாஹ்வின் உள்ளமையை விசுவாசம் கொள்ளல்

2, அவனது ருபூபிய்யாவை விசுவாசம் கொள்ளல்.

3. அவனது உலூஹிய்யாவை விசுவாசம் கொள்ளல்

4. அவனது பெயர்களையும் பண்புகளையும் விசுவாசம் கொள்ளல்.

இவ்வுரையில் அல்லாஹ்வின் உள்ளமையை விசுவாசம் கொள்வது பற்றி மாத்திரம் பேச இருக்கின்றோம்.

அல்லாஹ்வின் உள்ளமையை மனித உள்ளுணர்வு, பகுத்தறிவு, புலனுணர்வு மற்றும் மார்க்கம் என்பவை உறுதிப்படுத்துகின்றன.

மனித உள்ளுணர்வு எவ்வாறு அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்துகின்றது என்றால், ஒவ்வொரு படைப்பும் சிந்திப்போ கற்பித்தலோ இன்றி, இயல்பிலேயே தமது படைப்பாளனை விசுவாசிக்கவே செய்கின்றன. இதனைப் பின்வரும் வசனம் உணர்த்துகின்றது:

﴿ وَ اِذْ اَخَذَ رَبُّكَ مِنْۢ بَنِىْۤ اٰدَمَ مِنْ ظُهُوْرِهِمْ ذُرِّيَّتَهُمْ وَ اَشْهَدَهُمْ عَلٰۤى اَنْفُسِهِمْ‌ ۚ اَلَسْتُ بِرَبِّكُمْ‌ؕ قَالُوْا بَلٰى‌ ۛۚ شَهِدْنَا ﴾

“ஆதமுடைய மக்களின் முதுகுகளிலிருந்து அவர்களுடைய சந்ததிகளை வெளியாக்கி, அவர்களைத் தங்களுக்கே சாட்சியாக வைத்து: “நான் உங்களுடைய இறைவன் அல்லவா?” என்று கேட்டதற்கு, அவர்கள் “மெய் தான். நாங்கள் சாட்சி கூறுகிறோம்” என்று கூறியதை (அவர்களுக்கு) நினைவூட்டுவீராக” (அல்குர்ஆன் 7 : 172)

மனிதன் இயல்பிலேயே அல்லாஹ்வின் இருப்பை ஏற்பவனாக இருப்பான் என்பதையே இவ்வசனம் உறுதிப்படுத்துகின்றது. இடையூறான ஓர் அம்சத்தினால் உள்ளம் பாதிக்கப்பட்டவனைத் தவிர, இந்த இயல்பின் தேற்றத்தை விட்டு யாராலும் வெளிச்செல்ல முடியாது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : *“எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)தில்தான் பிறக்கின்றன. பெற்றோர்கள்தான் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தைவிட்டுத் திருப்பி) யூதர்களாகவோ கிறித்தவர்களாகவோ அக்னி ஆராதனையாளர்களாகவோ மாற்றிவிடுகின்றனர்.”*

இதனால் தான் மனிதனுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டு விட்டால் இயற்கையாகவே அவன் “யா அல்லாஹ்” என்று கூறி விடுகின்றான். நபி அவர்களது காலத்தில் இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வின் இருப்பை ஏற்றுக்கொள்ளவே செய்தார்கள்.

﴿ وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَهُمْ لَيَقُولُنَّ ٱللَّهُ ﴾

“அவர்களைப் படைத்தது யார்? எனக் கேட்டால் ‘அல்லாஹ்’ என்று தான் நிச்சயம் கூறுவார்கள்” (ஸூரா ஜுக்ருப் : 87)

அல்குர்ஆனில் இது தொடர்பான வசனங்கள் ஏராளம் உள்ளன.

அல்லாஹ்வின் அடியார்களே! பகுத்தறிவு எவ்வாறு அல்லாஹ்வின் இருப்பை அறிவிக்குமென்றால், முந்திய, பிந்திய எல்லா படைப்புக்களுக்கும் ஒரு படைப்பாளன் இருப்பது அவசியமாகும். ஏனெனில் அவற்றால் தம்மைத் தாமே உருவாக்கிக் கொள்ள முடியாது. “இல்லாமை” தன்னைத்தானே படைத்துக்கொள்ளாது. ஏனெனில், அது உருவாக முன்னர் இல்லாமை எனும் நிலையிலேயே இருந்துள்ளது. அவ்வாறு இருந்து கொண்டு உள்ளமையில் உள்ளவற்றை அதனால் எவ்வாறு படைக்க முடியும்? அதேபோன்று இந்தப் படைப்புகள் படைப்பாளன் யாரும் இன்றி தானாக உருவாகுவது இரு காரணிகளால் சாத்தியமற்றதாகும்:

புதிதாக உருவாகும் ஒவ்வொன்றையும் உருவாக்கும் ஒருவர் இருப்பது கட்டாயமாகும். அறிவும் மார்க்கமும் அதை உறுதிப்படுத்துகின்றன.

﴿ أَمْ خُلِقُوْا مِنْ غَيْرِ شَيْءٍ أَمْ هُمُ الْخٰلِقُوْنَ ﴾

“அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா?” (ஸூரா அத்தூர் : 35)

இந்த புதுமையான ஒழுங்கு முறையில், இணைந்த ஒத்திசைவில், காரண காரியங்களும் படைப்புக்களுக்கும் இடையில் எந்த ஒரு மோதலோ முரண்பாடு இன்றி இவை இருப்பது என்பது, உருவாக்கிய ஒருவர் இன்றி அவை தானாகவே உருவாவதற்கான சாத்தியத்தை முற்றிலும் மறுக்கின்றன. ஏனெனில் திடீரென உருவாகியவை என்று வரும்போது, அதன் ஆரம்பம் ஓர் ஒழுங்கற்ற விதத்திலேயே இருக்கும். அவ்வாறிருக்கும் போது, அது நிலைத்து நின்று வளரும்போது எவ்வாறு ஒழுங்கமைப்பில் இருக்க முடியும்? அல்லாஹ்வின் பின்வரும் வசனத்தை செவிமடுத்துப் பாருங்கள்:

﴿ لَا الشَّمْسُ يَنْبَغِيْ لَهَا أَنْ تُدْرِكَ الْقَمَرَ وَلَا الَّيْلُ سَابِقُ النَّهَارِ وَكُلٌّ فِيْ فَلَكٍ يَّسْبَحُوْنَ ﴾

“சூரியன் சந்திரனை (நெருங்கிப்) பிடிக்க முடியாது. இரவு பகலை முந்தமுடியாது. இவ்வாறே எல்லாம் (தம்) வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன.” (ஸூரா யாஸீன் : 40)

ஒரு கிராமப்புறத்து அரபியிடம், "உமது ரப்பை எவ்வாறு அறிந்து கொண்டாய்" எனக் கேட்கப்பட்டபோது அவன் பின்வருமாறு பதில் அளித்தான்: "ஒட்டகத்தின் விட்டை ஒட்டகம் சென்றுள்ளதை அறிவிக்கின்றது. கால்தடம் மனிதர்கள் சென்றுள்ளதை அறிவிக்கின்றது. கோள்களை உடைய வானமும், தட்டுக்களை உடைய பூமியும் அறிவுமிக்க படைப்பாளனை அறிவிக்கவில்லையா?"

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வின் அற்புதப் படைப்புக்களில் ஒன்றுதான் இந்தக் கொசு. அது சிறிய படைப்பாக இருப்பினும், அல்லாஹ் அதில் பல நுட்பங்களை வைத்துள்ளான். அதனுள் நினைவாற்றல் மற்றும் சிந்தனை சக்தியையும், தொடல், பார்த்தல், கேட்டல் புலன்களையும், உணவு செல்லும் வழியையும் வைத்துள்ளதோடு, எலும்புகள், மூளை, நரம்புகள் மற்றும் வாய் என பல அம்சங்களை வைத்துள்ளான். அளவுபட நிர்ணயித்து, வழிகாட்டிய, எந்த ஒன்றையும் வீணாக விட்டு விடாத அல்லாஹ் எவ்வளவு தூய்மையானவன்!

ஒரு கவிஞர் இவ்வாறு பிரார்த்திக்கின்றார்:

இரவின் காரிருளிலும் கொசு தன் இறக்கையை நீட்டுவதைக் காண்பவனே!

அதன் கழுத்தில் ஒட்டி உள்ள நரம்புகளைக் காண்பவனே!

அந்த மெல்லிய எலும்புகளுக்கு இடையில் அதன் மூளையைக் காண்பவனே!

அதன் நாளங்களில் மூட்டுவிட்டு மூட்டு தாண்டி ஓடும் இரத்தத்தின் சப்தத்தைக் காண்பவனே!

அதன் வயிற்றின் இருளிலும் அதில் உணவு சென்றடைவதை சிரமமின்றிக் காண்பவனே!

அதன் நடையிலும் வேகமான ஓட்டத்திலும் அது பாதங்களை வைக்கும் இடங்களைக் காண்பவனே!

இதையும் விட நுண்ணிய அம்சங்களையும், பயங்கரமான கடல் ஆழத்திலும் காண்பவனே!

எனக்கு ஒரு பாவமன்னிப்பு வழங்கி எனது ஆரம்ப பாவங்களை மன்னித்து விடுவாயாக!

எனவே சுருக்கமாக கூறினேன், இந்த படைப்புகள் தம்மைத் தாமே உருவாக்கவில்லை என்று இருந்தால், அல்லது எதேச்சையாக உருவாகவில்லை என்றும் இருந்தால், அவற்றை உருவாக்கிய ஒருவன் நிச்சயம் இருக்க வேண்டும், அவன் தான் அல்லாஹுத் தஆலாவாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ் தஆலா இந்தப் பகுத்தறிவு ரீதியான, தெளிவான ஆதாரத்தை ஸூரா அத்தூரில் கூறியுள்ளான்:

﴿ اَمْ خُلِقُوْا مِنْ غَيْرِ شَيْءٍ اَمْ هُمُ الْخٰلِقُوْنَ ﴾

“அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா?”

ஜுபைர் பின் முத்இம் (லி) அவர்கள் இணைவைப்பாளராக இருந்த சமயத்தில் ஒரு தடவை ஸூரா தூரின் பின்வரும் வசனங்களை ஓதக் கேட்டார்கள்:

﴿ اَمْ خُلِقُوْا مِنْ غَيْرِ شَيْءٍ اَمْ هُمُ الْخٰلِقُوْنَ اَمْ خَلَـقُوا السَّمٰوٰتِ وَالْاَرْضَ ۚ بَلْ لَّا يُوْقِنُوْنَ اَمْ عِنْدَهُمْ خَزَآٮِٕنُ رَبِّكَ اَمْ هُمُ الْمُصَۜيْطِرُوْنَ ﴾

அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா? அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? அல்ல. அவர்கள் உறுதி கொள்ளமாட்டார்கள். அல்லது, அவர்களிடம் உம்முடைய இறைவனின் பொக்கிஷங்கள் இருக்கின்றனவா? அல்லது இவர்கள் தாம் (எல்லாவற்றையும்) அடக்கியாள்பவர்களா? (ஸூரா அத் தூர் : 35-38)

இவ்வசனத்தைக் கேட்டவுடன் “தனது உள்ளம் பறந்துவிடப் போவது போல் இருந்தது” என்று கூறினார்கள் அவர்கள். இதுவே முதலாவதாக அவரது உள்ளத்தில் ஈமான் பதிந்த சந்தர்ப்பமாகும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும்

பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் இருப்பை மார்க்கமும் உறுதிப்படுத்துகின்றது. செமித்திய வேதங்கள் அனைத்தும் அதை தெளிவாகக் கூறுகின்றன. அதேபோன்று படைப்புக்களின் நலன்களை உள்ளடக்கும் விதத்தில் அவ்வேதங்கள் கொண்டு வந்துள்ள சட்டங்கள், தன் படைப்புக்களின் நலன்களை அறிந்த ஞானமிக்க இறைவனிடமிருந்து அவை வந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதுபோன்று அவற்றில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சம் சார்ந்த செய்திகள் நடைமுறை உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ள. தான் அறிவித்ததை, நிகழ்த்திக் காட்ட சக்தி மிக்க ஒருவனிடம் இருந்து அது வந்துள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

மேலும் அல்குர்ஆன் தனக்குள் முரண்பாடுகள் இன்றி, இணங்கிப் போவதும், அதன் ஒரு பகுதி மற்றையதை உண்மைப்படுத்துவதும் கூட, அது அறிவும் தீர்க்கமும் மிக்க இறைவனிடம் இருந்து வந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ ۚ وَلَوْ كَانَ مِنْ عِندِ غَيْرِ اللَّهِ لَوَجَدُوا فِيهِ اخْتِلَافًا كَثِيرًا ﴾

“அவர்கள் இந்த குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லாஹ் அல்லாத ஒருவரிடம் இருந்து இது வந்திருந்தால் இதில் நிறைய முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள்” (ஸூரா அந்நிஸா : 82)

இது இந்த பேச்சுக்கு உரியவனாகிய அல்லாஹ் இருக்கின்றான் என்பதை அறிவிக்கின்றது,

அல்லாஹ்வின் அடியார்களே! புலன்கள் அல்லாஹ்வின் இருப்பை இரு விதங்களில் உறுதிப்படுத்துகின்றன:

அழைப்பாளர்கள் பதிலளிக்கப்படல், துன்பத்தில் இருப்பவர்கள் பாதுகாக்கப்படல் போன்று நாம் காணும், கேள்விப்படும் அம்சங்கள் அல்லாஹ்வின் இருப்பை மிக உறுதியாக அறிவிக்கின்றன. ஏனெனில்

அழைப்புக்கு பதில் அளிக்கப்படுவது என்பது அழைப்பவனின் அழைப்பை கேட்டு பதில் அளிக்கும் ஒரு ரப்பு உள்ளான் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான: *“முன்னர் நூஹ் எங்களை அழைத்த நாம் அவருக்கு பதில் அளித்தோம்”, “நீங்கள் உங்கள் ரப்பிடம் உதவி தேடியபோது அவன் உங்களுக்கு பதிலளித்தான்”*

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை அன்று (சொற்பொழிவு மேடைமீது) நின்று உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, மேடைக்கு எதிர்த் திசையிலிருந்த வாசல் வழியாக ஒரு மனிதர் (பள்ளிவாசலுக்குள்) வந்தார். அவர் நின்றுகொண்டே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை நோக்கி, “அல்லாஹ்வின் தூதரே! (பஞ்சத்தால்) கால்நடை(ச் செல்வங்)கள் அழிந்துவிட்டன. சாலைகளில் போக்குவரத்து நின்றுவிட்டது. அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். அவன் எங்களுக்கு மழை பொழியச்செய்வான்” என்று கூறினார்.

உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் கைகளை உயர்த்தி, “இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச்செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக!” என்று பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹ்வின் மீதாணையாக! வானத்தில் மேகக் கூட்டத்தையோ தனி மேகத்தையோ (மழைக்கான அறிகுறிகள்) வேறு எதையுமோ நாங்கள் காணவில்லை. எங்களுக்கும் (மதீனாவிலுள்ள) ‘சல்உ’ மலைக்கும் இடையே (மழை மேகத்தைப் பார்க்க முடியாதவாறு தடுக்கக்கூடிய) எந்த வீடும் கட்டடமும் இருக்கவில்லை. (வெட்டவெளியே இருந்தது.) அப்போது அம்மலைக்குப் பின்னாலிருந்து கேடயம் போன்று (வட்ட வடிவில்) ஒரு மேகம் தோன்றியது. அது நடுவானில் மையம் கொண்டு (அடிவானில்) பரவியது. பிறகு மழை பொழிந்தது. அல்லாஹ்வின் மீதாணையாக! ஆறு (ஏழு) நாட்கள் சூரியனையே நாங்கள் பார்க்கவில்லை.

அடுத்த ஜுமுஆவில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நின்று உரை நிகழ்த்தியபோது ஒரு மனிதர் அதே வாசல் வழியாக வந்தார். (வந்தவர்) நின்றவாறே நபி (ஸல்) அவர்களை நோக்கி, “அல்லாஹ்வின் தூதரே! (தொடர்ந்து பெய்த பெருமழையால் எங்கள் கால் நடைச்) செல்வங்கள்

அழிந்துவிட்டன. பாதைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. எனவே, மழையை நிறுத்துமாறு அல்லாஹ் விடம் பிரார்த்தியுங்கள்" என்றார்.

உடனே அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் கைகளை உயர்த்தி, "இறைவா! எங்கள் சுற்றுப்புறங்கள்மீது (இம்மழையைத் திருப்பிவிடுவாயாக!) எங்களுக்குப் பாதகமாக இதை நீ ஆக்கி விடாதே! இறைவா! குன்றுகள், மலைகள், கோட்டைகள், மேடுகள், ஓடைகள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றின் மீது (இம்மழையைப் பொழியச்செய்வாயாக!)" என்று பிரார்த்தித்தார்கள். உடனே (மதீனாவில்) மழை நின்றது. நாங்கள் வெயிலில் நடந்து சென்றோம்.

அழைப்பாளர்களுக்கு பதிலளிக்கப்படுவது என்பது பதில் அளிப்பதற்கான காரணிகளை சரியாக செய்து உண்மையாகவே யாரெல்லாம் அல்லாஹ்விடம் இறைஞ்சுகின்றார்களோ அவர்கள் கண்கூடாக காணும் உண்மையாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! இரண்டாவது விதம் என்னவென்றால், முஃஜிஸாத் என்னும் பெயரில் உள்ள நபிமார்களின் அத்தாட்சிகளை, மக்கள் பார்த்தும், கேள்விப்பட்டும் உள்ளார்கள். அவர்களை அனுப்பியவனாகிய அல்லாஹ் உள்ளான் என்பதற்கு இது தெளிவான ஆதாரமாகும். ஏனெனில் அவை மனித சக்திக்கு அப்பாற்பட்டவை. தனது தூதர்களை பலப்படுத்தவும் அவர்களுக்கு உதவவும் அல்லாஹ் அவ்வாறு செய்து காட்டுகின்றான்.

நபி மூஸா (அலை) அவர்களின் அத்தாட்சி ஓர் உதாரணமாகும். தனது தடியால் கடலை அடிக்குமாறு அல்லாஹ் ஏவ, அவர்கள் அடித்தார்கள். உடனே அது காய்ந்த பன்னிரண்டு பாதைகளாகப் பிரிந்து, அவற்றுக்கு இடையில் நீர் மலைகள் போன்று காணப்பட்டது.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَأَوۡحَيۡنَآ إِلَىٰ مُوسَىٰٓ أَنِ ٱضۡرِب بِّعَصَاكَ ٱلۡبَحۡرَۖ فَٱنفَلَقَ فَكَانَ كُلُّ فِرۡقٖ كَٱلطَّوۡدِ ٱلۡعَظِيمِ ﴾

"உம் கைத்தடியினால் இந்தக் கடலை நீர் அடியும்" என்று மூஸாவுக்கு வஹீ அறிவித்தோம். (அவ்வாறு அடித்ததும் கடல்) பிளந்தது (பிளவுண்ட) ஒவ்வொரு பகுதியும் பெரும் மலை போன்று ஆகிவிட்டது."(ஸூரா அஷ்ஷுஃரா : 63)

முஸ்லிம்களே! அல்லாஹ்வின் இருப்பை ஏற்றுக்கொள்வது என்பது உள்ளுணர்வும் புலன்களும் உறுதிப்படுத்தும் இயல்பான ஒரு விடயம் என்பதனாலேயே, ரஸூல்மார்கள் தம் கூட்டத்தினரைப் பார்த்து, *“வானங்கள் மற்றும் பூமியைப் படைத்துள்ள அல்லாஹ்வின் விடயத்திலா சந்தேகம்?”* (அல்குர்ஆன்) எனக் கேட்டார்கள்.

மேற்கூறிய அனைத்தினதும் சுருக்கம் என்னவென்றால், அல்லாஹ்வின் இருப்பை ஏற்றுக் கொள்வது இயல்பிலேயே பதிந்துள்ள ஒன்றாகும். பகுத்தறிவு, புலன்கள் மற்றும் மார்க்கத்தின் ஊடாகவும் அது அறியப்படுகின்றது. உள்ளம் சீர் கெட்டுப்போன நாத்திகனைத் தவிர யாரும் அதனை மறுக்க மாட்டார்கள். அப்படியான மனிதர்கள் குறைவாகவே உள்ளனர். அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்!

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَـٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக! யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக! யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக !அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! எங்களுக்கும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் யாரெல்லாம் தீங்கு செய்ய நினைக்கின்றார்களோ, அவர்களுக்குள் பிரச்சனையை ஏற்படுத்தி விடுவாயாக! அவர்களது சதியை அவர்களுக்கே திருப்பி விடுவாயாக! யா அல்லாஹ்! விலை உயர்வு, தொற்றுநோய், வட்டி, விபச்சாரம், பூகம்பங்கள், சோதனைகள், வெளிப்படையான மற்றும் மறைமுகமான கெட்ட குழப்பங்கள் அனைத்தையும் விட்டும் பொதுவாக அனைத்து முஸ்லீம் நாடுகளையும், குறிப்பாக எமது இந்த நாட்டையும் பாதுகாப்பாயாக! யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் சுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

அல்லாஹ்வின் இறைமையை விசுவாசம் கொள்ளல்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டலில் மிகச்சிறந்தது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிக மோசமானது, அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே செல்லும்.

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை ஈமான் கொள்வது என்பது நான்கு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது :

1. அல்லாஹ்வின் உள்ளமையை விசுவாசம் கொள்ளல்
2, அவனது ருபூபிய்யாவை விசுவாசம் கொள்ளல்.
3. அவனது உளூஹிய்யாவை விசுவாசம் கொள்ளல்
4. அவனது பெயர்களையும் பண்புகளையும் விசுவாசம் கொள்ளல்.

இவ்வுரையில் அல்லாஹ்வின் இறைமையை விசுவாசம் கொள்வது பற்றி மாத்திரம் பேச இருக்கின்றோம்.

அல்லாஹ்வின் இறைமையை விசுவாசித்தல் என்பதன் அர்த்தமாவது, அல்லாஹ் மாத்திரமே இணையோ, துணையோ அற்ற ரப்பு என ஈமான் கொள்வதாகும். ரப்பு என்றால், படைத்தல், அதிகாரம் செலுத்தல் (அதாவது இவ்வுலகை நிர்வகிக்கும் அதிகாரம் கொண்டிருத்தல்), ஆட்சிசெய்தல் போன்ற செய்களுக்கு உரித்துடையவனாகும். எனவே, அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இல்லை. அவனைத் தவிர வேறு ஆட்சியாளன் இல்லை. அவனைத் தவிர வேறு அதிகாரம் கொண்டவன் இல்லை.

விசுவாசிகளே! படைத்தலில் தான் தனித்து நிற்பதை அல்லாஹ் இவ்வாறு விளக்குகின்றான்:

﴿ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ﴾

"படைப்பும், ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா?" (ஸூரா அல்அஃராப் : 54)

﴿ بَدِيعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ﴾

"(அல்லாஹ்) வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றி (இல்லாமையிலிருந்து), தானே உண்டாக்கினான்" (ஸூரா அல்பகரா : 117)

﴿ اَلْحَمْدُ لِلّٰهِ فَاطِرِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ﴾

"அல்ஹம்துலில்லாஹ் - எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே வானங்களையும், பூமியையும் படைத்தவன்" (ஸூரா பாதிர் : 01)

விசுவாசிகளே! அல்லாஹ்வின் பிரமாண்டமான படைப்புக்கள் பதின்மூன்றாகும். அவையாவன: வானங்கள், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், இரவு, பகல், மனிதர்கள், பிராணிகள், மழை, காற்று, கடல்கள், ஆறுகள். இவற்றை, தான் படைத்துள்ளதாகக் கூறி அல்லாஹ் பல இடங்களில் தன்னைப் புகழ்ந்துள்ளான். குறிப்பாக, சில ஸூராக்களின் ஆரம்பத்தில் இவ்வாறு கூறியுள்ளான். உதாரணமாக, ஸூரா ஜாஸியாவின் ஆரம்பத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ حٰمٓ تَنْزِيلُ الْكِتٰبِ مِنَ اللّٰهِ الْعَزِيزِ الْحَكِيمِ اِنَّ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ لَاٰيٰتٍ لِّلْمُؤْمِنِينَ وَفِى خَلْقِكُمْ وَمَا يَبُثُّ مِنْ دَآبَّةٍ اٰيٰتٌ لِّقَوْمٍ يُّوْقِنُوْنَ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ وَمَا اَنْزَلَ اللّٰهُ مِنَ السَّمَآءِ مِنْ رِّزْقٍ فَاَحْيَا بِهِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا وَتَصْرِيفِ الرِّيٰحِ اٰيٰتٌ لِّقَوْمٍ يَّعْقِلُوْنَ ﴾

“ஹா, மீம். (1) இவ்வேதம், யாவரையும் மிகைத்தோனும் ஞானம் மிக்கோனுமாகிய அல்லாஹ்விடமிருந்தே இறக்கியருளப்பட்டது. (2) முஃமின்களுக்கு நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் அத்தாட்சிகள் இருக்கின்றன. (3) இன்னும் உங்களைப் படைத்திருப்பதிலும், அவன் உயிர்ப் பிராணிகளைப் பரப்பியிருப்பதிலும் (நம்பிக்கையில்) உறுதியுள்ள சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (4) மேலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும், வானத்திலிருந்து அருள் மாரியை அல்லாஹ் இறக்கி வைத்து, இறந்து போன பூமியை அதைக் கொண்டு உயிர்ப்பிப்பதிலும் காற்றுகளை மாறி மாறி வீசச்செய்வதிலும் அறிவுடைய சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (5)” (ஸூரா ஜாஸியா : 1-5)

ஆட்சியில் அவன் தனித்து நிற்பதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும் :

﴿ وَقُلِ الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ لَمْ يَتَّخِذْ وَلَدًا وَّلَمْ يَكُنْ لَّهٗ شَرِيْكٌ فِى الْمُلْكِ وَلَمْ يَكُنْ لَّهٗ وَلِىٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا ﴾

“அன்றியும், (தனக்குச்) சந்ததியை எடுத்துக் கொள்ளாதவனும், (தன்) ஆட்சியில் தனக்குக் கூட்டாளி எவரும் இல்லாதவனும், எந்தவித பலஹீனத்தை கொண்டும் எந்த உதவியாளனும் (தேவை) இல்லாமலும் இருக்கிறானே அந்த நாயனுக்கே புகழ் அனைத்தும்” என்று (நபியே!) நீர் கூறுவீராக. இன்னும் (அவனை) எப்பொழுதும் பெருமைப் படுத்த வேண்டிய முறையில் பெருமைப் படுத்துவீராக.” (ஸூரா அல்இஸ்ரா : 111)

﴿ ذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ وَالَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ مَا يَمْلِكُوْنَ مِنْ قِطْمِيْرٍ ﴾

“அவனே உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ் அரசாட்சியெல்லாம் அவனுக்குரியதே, அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை)க்கின்றீர்களோ, அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை.” (ஸூரா பாதிர் : 13)

அதிகாரத்தில் அவன் தனித்து நிற்பதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும்:

﴿ اَلَا لَهُ الْخَلْقُ وَالْاَمْرُ ﴾

“படைப்பும், ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா?” (ஸூரா அல்அஃராப் : 54)

﴿ اِنَّمَاۤ اَمْرُهٗۤ اِذَاۤ اَرَادَ شَيْـًٔا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴾

“எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்” (ஆகுக!) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.” (ஸூரா யாஸீன் : 82)

முஸ்லிம்களே! இறைக் கட்டளைகள் இரு வகைப்படும்: மார்க்க ரீதியான கட்டளை மற்றும் பிரபஞ்சரீதியான கட்டளை என்பனவே அவையாகும். அவனுடைய ஷரீஆ மற்றும் மார்க்க ரீதியதான கட்டளையாயவது, ஷரீஆக்கள் மற்றும் நபித்துவம் தொடர்பான அவனது கட்டளைகளாகும். ஏனெனில் அல்லாஹ் மாத்திரமே - தனது அறிவு ஞானத்தின் அடிப்படையில் - தான் விரும்பும் சட்டங்களைக் கொண்டு ஏவுகின்றான், தான் நாடிய சட்டங்களை மாற்றுகின்றான். அவனே மனிதர்களுக்கு, அவர்களுக்குப் பொருத்தமான, அவர்களது நிலைமைகளை சீர்செய்யும், அவனிடம் ஒப்புக்கொள்ளப்படும் வணக்கங்களையும், செயல்களையும் விதிக்கின்றான். அவனே அவர்களது நிலைமைகளை நன்குபுரிந்தவனும், அவர்களை சீர்த்திருத்தும் அம்சங்களை அறிந்தவனும், அவர்கள் மீது இரக்கம் கொண்டவனும் ஆவான்.

இரண்டாவது வகை, அல்லாஹ்வின் பிரபஞ்சம் சார்ந்த கட்டளைகளாகும். இது பிரபஞ்சத்தை நிர்வாகிப்பதனுடன் தொடர்பான கட்டளைகளாகும். ஏனெனில், அல்லாஹ் தான், மேகங்களை ஓடச் செய்யுமாறும், மழையைப் பொழியச் செய்யுமாறும், வாழ்வு, மரணம், வாழ்வாதாரம், படைப்பு, பூகம்பங்கள், துன்பங்களை நீக்குதல் போன்ற இப்பிரபஞ்சத்தில் நிகழும் விடயங்களைக் கொண்டும் ஏவுகின்றான். எனவே அல்லாஹ் இவற்றில் ஏதாவதொன்றை ஏவிவிட்டான் என்றால், சந்தேகமேயின்றி அது நடக்கும். அவனை மிகைக்கவோ, தோற்கடிக்கச் செய்யவோ யாராலும் முடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَا أَمْرُنَا إِلَّا وَاحِدَةٌ كَلَمْحٍ بِالْبَصَرِ ﴾

“நம்முடைய கட்டளை (நிறைவேறுவது) கண் மூடி விழிப்பது போன்ற ஒன்றே அன்றி வேறில்லை.” (ஸூரா அல்கமர் : 50)

﴿ إِنَّمَا أَمْرُهُ إِذَا أَرَادَ شَيْئًا أَنْ يَقُولَ لَهُ كُنْ فَيَكُونُ ﴾

“எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்” (ஆகுக!) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.” (ஸூரா யாஸீன் : 82)

அதாவது, ஏதாவதொன்றை நிகழவேண்டும் என்று நாம் நாடினால், “ஆகிவிடு” என்ற ஒரே வார்த்தையையே கூறுவோம். அது ஒரு வினாடியும் தாமதிக்காது, கண் சிமிட்டும் வேகத்தில் நிகழ்ந்துவிடும்.

சுருக்கமாக, அல்லாஹ்வின் கட்டளைகள் இரு வகைப்படும்: பிரபஞ்சக் கட்டளை, மார்க்க ரீதியான கட்டளை. மறுமையின் கூலி தொடர்பான சட்டங்கள் இந்த வகையுடனே சம்பந்தப்படும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! மனிதர்களில், ஆணவம் கொண்ட, தன் உள்ளத்திற்கும் முரணாகப் பேசும் ஒருவனைத் தவிர வேறு யாரும் அல்லாஹ்வுடைய இறைமையை மறுக்கவில்லை. உதாரணமாக, பிர்அவ்ன் தனது சமுதாயத்தினரைப் பார்த்து இவ்வாறு கூறினான்:

﴿ فَقَالَ أَنَا رَبُّكُمُ الْأَعْلَىٰ ﴾

“நான்தான் உங்களுடைய மாபெரும் இறைவன் - ரப்புக்குமுல் அஃலா” என்று (அவர்களிடம்) கூறினான்.” (ஸூரா அந்நாஸிஆத் : 24)

﴿ وَقَالَ فِرْعَوْنُ يَا أَيُّهَا الْمَلَأُ مَا عَلِمْتُ لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرِي ﴾

“இன்னும் ஃபிர்அவ்ன் சொன்னான்: “பிரமுகர்களே! என்னைத்தவிர உங்களுக்கு வேறொரு நாயன் இருக்கின்றான் என்பதாக நான் அறியவில்லை.” (ஸூரா அல்கஸஸ் : 38)

இதனை அவன் உள்ளத்தினால் உண்மையாகக் கூறவில்லை. மாறாக, அகம்பாவத்தின் விளைவாகவே இவ்வாறு கூறினான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَجَحَدُوا بِهَا وَاسْتَيْقَنَتْهَا أَنفُسُهُمْ ظُلْمًا وَعُلُوًّا ۚ فَانظُرْ كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِينَ ﴾

“அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள்.” (ஸூரா அந்நம்ல் : 14)

பின்பு, அறிந்துகொள்ளுங்கள்! நபியவர்களின் காலத்தில் காணப்பட்ட இணைவைப்பாளர்கள் - வணக்கவழிபாடுகளில் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்துக்கொண்டும் - இந்த தவ்ஹீதுல் ருபூபிய்யாவை ஏற்றுக்கொண்டுதான் இருந்தார்கள். அல்லாஹ்தான் இப்பிரபஞ்சத்தைப் படைத்துப் பரிபாலித்து, வாழ்வாதாரம் அளிக்கின்றான் என அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனாலும், அதனுடன், அவர்கள் வணக்கங்களில் அல்லாஹ்வுடன் சிலைகளையும், விக்கிரகங்களையும் கூட்டுச் சேர்ப்பவர்களாக இருந்தார்கள். எனவே, அவற்றிற்காக, துஆ, ஸுஜூத், அறுத்துப் பலியிடல் போன்ற வணக்கங்களை செய்துவந்தார்கள். விளைவாக, அவர்கள் காபிர்களாக மாறினார்கள். அவர்கள் தவ்ஹீதுர் ருபூபிய்யாவை ஏற்றுக்கொண்டிருந்தது அவர்களுக்கு எந்தப் பயனையும் அளிக்கவில்லை. ஏனெனில், தவ்ஹீதுர் ருபூபிய்யா கட்டாயப்படுத்தும், தவ்ஹீதுல் உலூஹிய்யாவை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இஸ்லாத்தில் நுழைவதற்கு தவ்ஹீதுர் ருபூபிய்யா மாத்திரம் போதாது. மாறாக, வணக்கவழிபாடுகளை அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்வதும் அவசியம் என்பது அறியப்பட்ட ஒரு விடயமே! அல்லாஹ் தனது மாபெரும் வேதத்தில், இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வின் இறைமைக் கோட்பாட்டை ஏற்றிருந்தார்கள் என்பதை விளக்கி இவ்வாறு கூறுகின்றான்:

﴿ قُل لِّمَنِ الْأَرْضُ وَمَن فِيهَا إِن كُنتُمْ تَعْلَمُونَ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ أَفَلَا تَذَكَّرُونَ قُلْ مَن رَّبُّ السَّمَاوَاتِ السَّبْعِ وَرَبُّ الْعَرْشِ الْعَظِيمِ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ أَفَلَا تَتَّقُونَ قُلْ مَن بِيَدِهِ مَلَكُوتُ كُلِّ شَيْءٍ وَهُوَ يُجِيرُ وَلَا يُجَارُ عَلَيْهِ إِن كُنتُمْ تَعْلَمُونَ سَيَقُولُونَ لِلَّهِ ۚ قُلْ فَأَنَّىٰ تُسْحَرُونَ ﴾

“நீங்கள் அறிந்திருந்தால், இப் பூமியும் இதிலுள்ளவர்களும் யாருக்குச் சொந்தம்? என்று (நபியே!) நீர் கேட்பீராக! (84) “அல்லாஹ்வுக்கே” என்று அவர்கள் கூறுவார்கள் “(அவ்வாறாயின் இதை நினைவிற்கொண்டு) நீங்கள் நல்லுணர்வு பெறமாட்டீர்களா?” என்று கூறுவீராக! (85) “ஏழு வானங்களுக்கு இறைவனும் மகத்தான அர்ஷ்/க்கு இறைவனும் யார்?” என்றும் கேட்பீராக. (86) “அல்லாஹ்வே” என்று அவர்கள் சொல்வார்கள் “(அவ்வாறாயின்) நீங்கள் அவனுக்கு அஞ்சி இருக்கமாட்டீர்களா?” என்று கூறுவீராக! (87) “எல்லாப்

பொருட்களின் ஆட்சியும் யார் கையில் இருக்கிறது? - யார் எல்லாவற்றையும் பாதுகாப்பவனாக - ஆனால் அவனுக்கு எதிராக எவரும் பாதுகாக்கப்பட முடியாதே அவன் யார்? நீங்கள் அறிவீர்களாயின் (சொல்லுங்கள்)" என்று கேட்பீராக. (88) அதற்கவர்கள் "(இது) அல்லாஹ்வுக்கே (உரியது)" என்று கூறுவார்கள். ("உண்மை தெரிந்தும்) நீங்கள் ஏன் மதி மயங்குகிறீர்கள்?" என்று கேட்பீராக." (ஸூரா அல்முஃமினூன்: 84-89)

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ اللهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِىِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்வது கடமை

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டலில் மிகச்சிறந்தது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிக மோசமானது, அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே செல்லும்.

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்!

அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் ஏவியுள்ளவற்றில் மிக முக்கியமானது தவ்ஹீத் ஆகும். அதாவது, அல்லாஹ்வுக்கு மாத்திரம் வணக்கங்களை செலுத்துவதாகும். எனவே, நாம் அவனுக்கு எந்த இணையையும் கற்பிக்காத நிலையில் அவனை வணங்கவேண்டும். மனிதர்கள் மற்றும் ஜின்கள் படைக்கப்பட்டதன் நோக்கமும் அதுவே. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴾ [الذاريات: ٥٦]

“இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை.” (ஸூரா அத்தாரியாத் : 56)

அல்லாஹ்வின் அடியார்களே! வணக்கம் என்பது, அல்லாஹ் விரும்பும், பொறுந்திக் கொள்ளும், வெளிப்படையான, உள்ளார்ந்த எல்லா சொல், செயற்களையும் உள்ளடக்கிக்கொள்ளும்.

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: “தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ், உண்மை பேசுதல், அமானிதத்தை நிறைவேற்றல், பெற்றோருக்குப் பணிவிடை செய்தல், உறவுகளை சேர்ந்து நடத்தல், உடன்படிக்கைகளை நிறைவேற்றல், நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல், நிராகரிப்பாளர்களுடனும், நயவஞ்சகர்களுடனும் போரிடல், அண்டைவீட்டார், அனாதை, ஏழை, வழிப்போக்கன், அடிமை ஆகியோருக்கு உபகாரம் புரிதல், விலங்குகளுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளல், துஆக் கேட்டல், திக்ர், அல்குர்ஆன் ஓதுதல் போன்ற அனைத்தும் இபாதத்களாகும்.

அதேபோன்று, அல்லாஹ்வையும் தூதரையும் நேசித்தல், அல்லாஹ்வை அஞ்சுதல், அவனிடம் மீளுதல், வணக்கங்களை அவனுக்கு மாத்திரம் செய்தல், அவனது சட்டங்களை பொறுமையோடு நடைமுறைப்படுத்தல், அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துதல், அவனது விதியை திருப்தியோடு ஏற்றல், அவனை சார்ந்து இருத்தல், அவனது அருளை எதிர்பார்த்தல், அவனது தண்டனையை அஞ்சுதல், போன்றவையும் இபாதத்களில் உள்ளவையாகும்.”

அல்லாஹ்வின் அடியார்களே! அனைத்துத் தூதர்களின் அழைப்புப் பணியும் தவ்ஹீதுல் உளூஹிய்யா எனப்படும் இந்த வகையை மையப்படுத்தியே காணப்பட்டது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ ﴾ [الأنبياء: ٢٥]

“(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: “நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்” என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.” (ஸூரா அல்அன்பியா : 25)

அனைத்துத் தூதர்களும் தமது சமுதாயத்தைப் பார்த்து இவ்வாறு தான் கூறினார்கள் :

﴿ مَا لَكُم مِّنْ إِلَٰهٍ غَيْرُهُ ﴾ [الأعراف: ٥٩]

"அல்லாஹ்வையே வணங்குங்கள், உங்களுக்கு அவனன்றி வேறு நாயனில்லை" (ஸூரா அல்அஃராப் : 59)

விசுவாசிகளே! தனித்து வணங்கப்படத் தகுதியான ஒரே ஒருவனாக அல்லாஹ் மாத்திரமே உள்ளான் என்பதற்கான மிகப் பெரிய ஆதாரம், இப்பிரபஞ்சத்தைப் படைத்தாள்வதில் இணையாளனோ, உதவியாளனோ இன்றி அவன் தனித்தவனாக இருப்பதாகும். "ருபூபிய்யா" எனப்படும் இதுவாகின்றது, படைத்தல், ஆட்சி செய்தல், நிர்வகித்தல், வாழ்வாதாரம் அளித்தல் என்பவற்றை உள்ளடக்கிக் கொள்ளும். அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளர்கள் இல்லை. அவனைத் தவிர வேறு ஆட்சியாளர்கள் இல்லை. அவனைத் தவிர வேறு வாழ்வாதாரம் அளிப்பவர்கள் இல்லை. அவனைத் தவிர வேறு நிர்வகிப்பவர்கள் யாரும் இல்லை.

படைப்பதில் தான் தனித்து நிற்பதை அல்லாஹ் இவ்வாறு தெளிவுபடுத்துகின்றான்:

﴿ اللَّهُ خَالِقُ كُلِّ شَيْءٍ ﴾ [الزمر: ٦٢]

"அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன்" (ஸூரா அஜ்ஜுமர் : 62)

ஆட்சியதிகாரம் செலுத்துவதில் தான் தனித்து நிற்பதை அல்லாஹ் இவ்வாறு தெளிவுபடுத்துகின்றான்:

﴿ ذَٰلِكُمُ اللَّهُ رَبُّكُمْ لَهُ الْمُلْكُ ۚ وَالَّذِينَ تَدْعُونَ مِن دُونِهِ مَا يَمْلِكُونَ مِن قِطْمِيرٍ ﴾

[الفاطر: ١٣]

"அவனே உங்களுடைய இறைவனாகிய அல்லாஹ் அரசாட்சியெல்லாம் அவனுக்குரியதே, அவனையன்றி நீங்கள் எவர்களை பிரார்த்தி(த்து அழை)க்கின்றீர்களோ, அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை." (ஸூரா பாதிர் : 13)

இங்கு கித்மீர் என்பது, ஈச்சம்பழ விதையின் மேல் இருக்கும் மெல்லிய வெள்ளைநிறத்தினாலான ஒரு தோளாகும்.

வாழ்வாதாரம் அழிப்பதில் அவன் தனித்து நிற்பதற்கான ஆதாரம் ஆவது, பின்வரும் இறைவசனமாகும் :

﴿ إِنَّ اللَّهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ ﴾ [الذاريات: ٥٨]

“நிச்சயமாக அல்லாஹ்தான் உணவு அளித்துக் கொண்டிருப்பவன் பலம் மிக்கவன் உறுதியானவன்” (ஸூரா அத்தாரியாத் : 58)

நிர்வகித்தல் மற்றும் அதிகாரம் செலுத்துவதில் அவன் தனித்து நிற்பதற்கு பின்வரும் வசனம் ஆதாரமாகும்.

﴿ وَإِلَيْهِ يُرْجَعُ الْأَمْرُ كُلُّهُ ﴾ [هود: ١٢٣]

“அவனிடமே எல்லாக் கருமங்களும் (முடிவு காண) மீளும்” (ஸூரா ஹூத் : 123)

உயிர்வழங்கல், மரணிக்கச் செய்தல், மழை, வரட்சி, செல்வம், வறுமை, ஆரோக்கியம், நோய், பாதுகாப்பு, அச்சம் போன்ற இவ்வுலக நிகழ்வுகள் ஊடாக இப்பிரபஞ்சத்தை நிர்வகிப்பதென்பது அல்லாஹ்வின் கட்டளையூடாக நிகழக்கூடியதாகும்.

முஸ்லிம்களே! தவ்ஹீதுல் உளூஹிய்யாவுக்கு நேர் எதிரானது, வணக்கவழிபாடுகளில் அவனுக்கு இணைகற்பிப்பதாகும். அதாவது, ஏதாவதொரு வணக்கத்தை அல்லாஹ் அல்லாதவர்களுக்காக நிறைவேற்றுவதாகும். உதாரணமாக, மனிதன் அல்லாஹ்வுக்கு நிகராக ஒரு இணையாளனை ஏற்படுத்தி, அல்லாஹ்வை வணங்குவது போன்று அவனை வணங்கிக் கொண்டும், அல்லாஹ்வை அஞ்சுவது போன்று அவனை அஞ்சிக்கொண்டும், வணக்கவழிபாடுகள் கொண்டு அல்லாஹ்வை நெருங்குவது போன்று அவனை நெருங்குவதுமாகும். கப்ருகளை வணங்கிக்கொண்டும், அவற்றிற்காக அறுத்துப் பலியிட்டுக் கொண்டும், அவற்றிற்காக நேர்ச்சைகளை முன்வைத்தும், அவற்றை வலம் வந்துகொண்டும், அதன் வாயில்களைத் தொட்டு, பரக்கத் எதிர்பார்த்துக் கொண்டும் இருப்பதும், அவற்றால் வாழ்வாதாரம் வழங்கமுடியும் எனவும், நன்மை செய்யவோ, தீங்கிழைக்கவோ அவற்றால் முடியும் எனவும் எண்ணுவதும் இதற்கான உதாரணங்களாகும். இவ்வாறான இணைவைப்புச் செயல்கள், ஓர் அடியான் அல்லாஹ் மாத்திரமே வணங்கப்படத் தகுதியானவன் எனக் கொண்டிருக்கும் நம்பிக்கையை முறித்துவிடும்.

அல்லாஹ்வின் அடியார்களே! இணைவைப்புத் தான் அல்லாஹ் தடுத்தவற்றில் மிகப் பாரதூரமானதாகும். அல்லாஹ் தனது நபியைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான்:

﴿ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ بَلِ اللَّهَ فَاعْبُدْ وَكُن مِّنَ الشَّاكِرِينَ ﴾

[الزمر: ٦٥-٦٦]

"நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்" ஆகவே, நீர் அல்லாஹ்வையே வணங்குவீராக! மேலும், அவனுக்கு நன்றி செலுத்துபவர்களில் நின்றும் இருப்பீராக!" (ஸூரா அஜ்ஜுமர் : 65-66)

இணைவைப்பில் ஈடுபடுவதற்கு அல்லாஹ் கடுமையான தண்டனைகளையும் விதித்துள்ளான் :

﴿ إِنَّهُ مَن يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ حَرَّمَ اللَّهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّارُ ۖ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنصَارٍ ﴾

[المائدة: ٧٢]

"எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை." (ஸூரா அல்மாஇதா : 72)

விசுவசிகளே! பல்வேறுபட்ட மார்க்க ரீதியான, பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களைக் கொண்டு அல்லாஹ் இணைவைப்பை முறியடித்துள்ளான். மார்க்க ரீதீயான ஒரு ஆதாரமாவது,

﴿ إِنَّهُ مَن يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ حَرَّمَ اللَّهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّارُ ۖ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنصَارٍ ﴾

[المائدة: ٧٢]

"எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை யசைஉசயகவ ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை." (ஸூரா அல்மாஇதா : 72)

இணைவைப்பு அசத்தியமானது என்பதற்கான பகுத்தறிவு ரீதியான ஆதாரங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றில் மிக முக்கியமானவை இரண்டாகும்:

1. இணைவைப்பாளர்கள் வணங்கும் இந்தக் கடவுள்களிடம் வணங்கப்படுவதற்கான எந்த சிறப்பம்சங்களும் இல்லை. அவை படைக்கும் சக்தியற்ற படைப்புக்களே! தம்மை வணங்குபவர்களுக்கு அவற்றால் எந்த நன்மைகளையும் செய்யமுடியாது. அவர்களை விட்டும் எந்த தீமைகளையும் தடுக்கமுடியாது. அவர்களை உயிர்ப்பிக்கவோ, மரணிக்கவோ செய்யமுடியாது. வானம், பூமிகளில் அவர்களுக்கு எந்த உரிமைகளும் இல்லை. அவற்றை உடமையாக்கிக் கொண்டிருப்பதில் அவர்கள் அல்லாஹ்வுடன் இணையாளர்களும் அல்ல. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَاتَّخَذُوا مِن دُونِهِ آلِهَةً لَّا يَخْلُقُونَ شَيْئًا وَهُمْ يُخْلَقُونَ وَلَا يَمْلِكُونَ لِأَنفُسِهِمْ ضَرًّا وَلَا نَفْعًا وَلَا يَمْلِكُونَ مَوْتًا وَلَا حَيَاةً وَلَا نُشُورًا ﴾ [الفرقان: ٣]

“(எனினும் முஷ்ரிக்குகள்) அவனையன்றி (வேறு) தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் - அவர்கள் எந்தப் பொருளையும் படைக்க மாட்டார்கள் (ஏனெனில்) அவர்களே படைக்கப்பட்டவர்கள். இன்னும் அவர்கள் தங்களுக்கு நன்மை செய்து கொள்ளவோ தீமையை தடுத்துக் கொள்ளவோ சக்திபெற மாட்டார்கள் மேலும் அவர்கள் உயிர்ப்பிக்கவோ, மரணிக்கச் செய்யவோ, மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவோ, இயலாதவர்களாகவும் இருக்கின்றனர்.” (ஸூரா அல்புர்கான்: 3)

﴿ قُلِ ادْعُوا الَّذِينَ زَعَمْتُم مِّن دُونِ اللَّهِ ۖ لَا يَمْلِكُونَ مِثْقَالَ ذَرَّةٍ فِي السَّمَاوَاتِ وَلَا فِي الْأَرْضِ وَمَا لَهُمْ فِيهِمَا مِن شِرْكٍ وَمَا لَهُ مِنْهُم مِّن ظَهِيرٍ وَلَا تَنفَعُ الشَّفَاعَةُ عِندَهُ إِلَّا لِمَنْ أَذِنَ لَهُ ۚ حَتَّىٰ إِذَا فُزِّعَ عَن قُلُوبِهِمْ قَالُوا مَاذَا قَالَ رَبُّكُمْ ۖ قَالُوا الْحَقَّ ۖ وَهُوَ الْعَلِيُّ الْكَبِيرُ ﴾ [الفاطر: ٢٢-٢٣]

“அல்லாஹ்வையன்றி எவரை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்களை அழையுங்கள் வானங்களிலோ, இன்னும் பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் அதிகாரமில்லை - அவற்றில் இவர்களுக்கு எத்தகைய பங்கும் இல்லை - இன்னும் அவனுக்கு உதவியாளர்களும் அவர்களில் யாருமில்லை.

அன்றியும், அவன் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவருக்குத் தவிர, அவனிடத்தில் எந்த பரிந்துரையும் பயனளிக்காது; எனவே (நியாய விசாரணைக்கு நிற்கும்) அவர்களின் இருதயங்களிலிருந்து திடுக்கம் நீக்கப்படுமானால் "உங்கள் இறைவன் என்ன கூறினான்" என்று கேட்பார்கள். "உண்மையானதையே! மேலும், அவனே மிக்க உயர்ந்தவன் மகாப்பெரியவன்" என்று கூறுவார்கள்." (ஸூரா பாதிர் : 22-23)

இந்தக் கடவுள்களின் நிலைமை இவ்வாறுல்லதென்றால், அவற்றைக் கடவுள்களாக எடுத்துக்கொள்வது, மிகப் பெரிய மடமையாகும். அசத்தியத்திலும் அசத்தியமாகும்.

2. அல்லாஹ்வின் அடியார்களே! இந்த இணைவைப்பாளர்கள், அல்லாஹ் மாத்திரமே படைக்கும் ரப்பு எனவும், அவன் கையிலேயே அனைத்து அதிகாரங்களும் உள்ளன எனவும், அவனே பாதுகாப்பவன் எனவும், அவனது தண்டனையை விட்டும் யாராலும் யாரையும் பாதுகாக்க முடியாது எனவும் ஏற்றுக்கொள்கின்றார்கள். எனவே, இவ்வாறு அவர்கள் ருபூபிய்யாவில் அவனை ஒருமைப்படுத்தும் போது, கட்டாயமாக உளூஹிய்யாவிலும் அவர்கள் ஒருமைப்படுத்தவே வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ يَا أَيُّهَا النَّاسُ اعْبُدُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ وَالَّذِينَ مِن قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُونَ الَّذِي جَعَلَ لَكُمُ الْأَرْضَ فِرَاشًا وَالسَّمَاءَ بِنَاءً وَأَنزَلَ مِنَ السَّمَاءِ مَاءً فَأَخْرَجَ بِهِ مِنَ الثَّمَرَاتِ رِزْقًا لَّكُمْ ۖ فَلَا تَجْعَلُوا لِلَّهِ أَندَادًا وَأَنتُمْ تَعْلَمُونَ ﴾ [البقرة: ٢١-٢٢]

"மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் தக்வா (இறையச்சமும் தூய்மையும்) உடையோராகலாம்.

அ(ந்த இறை)வனே உங்களுக்காக பூமியை விரிப்பாகவும், வானத்தை விதானமாகவும் அமைத்து, வானத்திலிருந்தும் மழை பொழியச்செய்து அதனின்று உங்கள் உணவிற்காகக் கனி வர்க்கங்களை வெளிவரச் செய்கிறான் (இந்த உண்மைகளையெல்லாம்) நீங்கள் அறிந்து கொண்டே இருக்கும் நிலையில் அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள்." (ஸூரா அல்பகரா : 21-22)

எனவே, அல்லாஹ்வைத் தவிர்த்தோ, அல்லாஹ்வுடனோ வணங்கப்படும் எந்தக் கடவுளுக்காகச் செய்யப்படும் வணக்கமும் அசத்தியமானதாகும்.

﴿ ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِن دُونِهِ هُوَ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ ﴾

[الحج : ٦٢]

“இது (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மை (இறைவன்) மற்றும் அவனையன்றி (வேறு) எதை அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ - அது பொய்யாகும் இன்னும்: நிச்சயமாக அல்லாஹ் - அவனே உயர்ந்தவன், மிகவும் பெரியவன்.” (ஸுூரா அல் ஹஜ் : 62)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்! மக்கள் அல்லாஹ்வுடன் அதிகம் இணைகற்பிக்கும் வணக்கமாக இருப்பது துஆ எனும் வணக்கமாகும். துஆவில் உளத்தூய்மையுடன் செயற்படுமாறும், அதை ஏனையோருக்கு செலுத்தவேண்டாம் எனவும் அல்குர்ஆனில் பல இடங்களில் உறுதிபடக் கூறியுள்ளான். உதாரணமாக அல்லாஹ் கூறுகின்றான்,

﴿ ادْعُوا رَبَّكُمْ تَضَرُّعًا وَخُفْيَةً ۚ إِنَّهُ لَا يُحِبُّ الْمُعْتَدِينَ ﴾ [الأعراف : ٥٥]

“உங்களுடைய இறைவனிடம் பணிவாகவும், அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்யுங்கள்” (ஸுூரா அல்அஃராப் : 55)

﴿ أَمَّن يُجِيبُ الْمُضْطَرَّ إِذَا دَعَاهُ وَيَكْشِفُ السُّوءَ وَيَجْعَلُكُمْ خُلَفَاءَ الْأَرْضِ ۗ أَإِلَٰهٌ مَّعَ اللَّهِ ۚ قَلِيلًا مَّا تَذَكَّرُونَ ﴾ [النمل : ٦٢]

“கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்?” (ஸூரா அந்நம்ல் : 62)

﴿ وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ ﴾ [البقرة: ١٨٦]

“(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் “நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்” (ஸூரா அல்பகரா : 186)

﴿ وَسْئَلُوا اللَّهَ مِنْ فَضْلِهِ ﴾ [النساء : ٣٢]

“அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள்” (ஸூரா அந்நிஸா : 32)

துஆவை அல்லாஹ்வுக்கு மாத்திரமே செலுத்துமாறு அல்குர்ஆனில் பல்வேறுபட்ட விதங்களில் கிட்டத்தட்ட முன்னூறுக்கும் மேற்பட்ட இடங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ்வின் அடியார்களே! இக்லாஸைப் பேணிக்கொள்ளுங்கள்! வெற்றியடைவீர்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ”அல்லாஹ்வையன்றி அவனுக்கு நிகராக ஒருவனை அழைத்துப் பிரார்த்தித்த நிலையில் யார் மரணிக்கின்றாரோ அவர் நரகமே நுழைவார்.”[1]

நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்விடத்தில் மிகப் பாரதூரமான பாவம் எது ? எனக் கேட்கப்பட்ட போது, “உன்னைப் படைத்த அல்லாஹ்வுக்கு நீ இணைகற்பிப்பதாகும்” என்று கூறினார்கள்.[2]

எனவே, யாரெல்லாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் அழைக்கின்றார்களோ, அல்லது அவர்களிடம் இரட்சிக்கத் தேடுகின்றார்களோ, அல்லது நேர்ச்சை செய்யவோ, அறுத்துப் பலியிடவோ செய்கின்றார்களோ, அவர்கள் நபியாகவோ, வலிய்யாகவோ, மலக்காகவோ, ஜின்னாகவோ, சிலையாகவோ அல்லது வேறு யாரகவோ இருந்தாலும் அவர்களை இறைவனுக்கு இணையாக்கிவிட்டார்.

[1] புகாரி : 4497

[2] புகாரி : 4761, முஸ்லிம் : 86

முஸ்லிம்களே! அல்லாஹ், தன் அல்லாதோரை அழைக்கப்படுவதை அசத்தியம் என அல்குர்ஆனில் இரு இடங்களில் அடையாளப்படுத்தியுள்ளான். முதலாவது இடம் ஸூரா அல்ஹஜ்ஜின் பின்வரும் வசனமாகும்.

﴿ ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِن دُونِهِ هُوَ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ ﴾

[الحج : ٦٢]

“இது (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மை (இறைவன்) மற்றும் அவனையன்றி (வேறு) எதை அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ - அது பொய்யாகும் இன்னும்: நிச்சயமாக அல்லாஹ் - அவனே உயர்ந்தவன், மிகவும் பெரியவன்.” (ஸூரா அல் ஹஜ் : 62)

இரண்டாவது இடம் ஸூரா லுக்மானின் பின்வரும் வசனமாகும்.

﴿ ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِن دُونِهِ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ ﴾ [لقمان : ٣٠]

“எதனாலென்றால் நிச்சயமாக அல்லாஹ்வே மெய்யான (இறை)வனாவான் அவனை அன்றி அவர்கள் பிரார்த்திப்பவையாவும் அசத்தியமானவை் மேலும் நிச்சயமாக அல்லாஹ்வே உன்னத மிக்கவன் மகாப் பெரியவன்.” (ஸூரா லுக்மான்: 30)

விசுவாசிகளே! துஆவில் இணைவைத்தல் என்பது, அன்றும், இன்றும் நிகழ்ந்தே உள்ளது. உதாரணமாக, அடிப்படையில் நிராகரிப்பாளர்களாக உள்ள கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை அழைத்துப் பிரார்த்திக்கின்றார்கள். இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் மாட்டையும், செதுக்கி வடிவமைக்கட்ட சிலைகளையும் அழைத்துப் பிரார்த்திக்கின்றார்கள். இவை தவிர இன்னும் பல உள்ளன.

அதேபோன்று, துஆவில் இணைவைப்பு என்பது இஸ்லாத்தோடு தம்மை இணைத்துக்கொள்ளும் சில பிரிவுகளிலும் நிகழ்ந்துள்ளது. உதாரணமாக, எல்லைமீறிய ஸூபிகள் தமது ஷைகுகளை அழைத்துப் பிரார்த்தித்து, அவர்களிடம் பரக்கத்தை எதிர்பார்க்கின்றார்கள். மேலும், ராபிழாக்கள் அஹ்லுல் பைத்தினரை அழைத்துப் பிரார்த்திக்கின்றார்கள். கப்ரு வணங்கிகள் கப்ரில் உள்ளவர்களை அழைத்துப் பிரார்த்திக்கின்றார்கள். இவ்வாறான இணைவைப்பை செய்துகொண்டும் அவர்கள் தம்மை, நபியவர்களை நேசிக்கும். முஸ்லிம்கள் என்று நினைத்துக்கொள்கின்றார்கள். இஸ்லாத்திற்கும் அவர்களது இணைவைப்பிற்கும் எந்த சந்தேகமும் இல்லை. அகப்பார்வைகள்

குருடாகிப் போவதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றோம். தவ்ஹீத், ஸுன்னா ஆகிய அருட்கொடைகளை எமக்கு நிரந்தரமாகப் பாதுகாத்துத் தரவேண்டும் எனவும் அவனிடம் கேட்கின்றோம்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ اللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَٰٓأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴾

[الأحزاب : ٥٦]

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம். யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்ளல்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டலில் மிகச்சிறந்தது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிக மோசமானது, அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே செல்லும்.

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்!

அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதற்கு இஸ்லாமிய அகீதாவில் மிக முக்கியமான ஒரு இடம் உள்ளது. அல்லாஹ் தனது கண்ணியமான வேதத்தில் அதிகமாகத் தனது பெயர்களையும், பண்புகளையும் கூறித் தன்னைப் புகழ்ந்துள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَكَانَ اللّٰهُ سَمِيعًا بَصِيرًا ﴾

"அல்லாஹ் கேட்பவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கின்றான்" (ஸூரா அந்நிஸா : 134)

﴿ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيمًا ﴾

"அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்." (ஸூரா அந்நிஸா : 96)

இவையல்லாத, எண்ணிலடங்காத வேறு பல ஆதாரங்களும் உண்டு.

நபிகள் (ஸல்) அவர்களும், பல்வேறு சிறப்புப் பண்புகளையும், பரிபூரண வர்ணனைகளையும் கூறி தமது ஸுன்னாவில் பல இடங்களில் தமது ரப்பைப் புகழ்ந்துள்ளார்கள்.

அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வது, அடியானிடத்தில் அவனைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்துவடன், விளைவாக, அவனைத் திருப்திப்படுத்தும் விதத்தில் வணங்கவும் வைக்கின்றது. ஏனெனில், சில அறிஞர்கள் கூறுவது போன்று, யார் அல்லாஹ்வை அதிகம் புரிந்திருக்கின்றாரோ, அவரே அவனை அதிகம் அஞ்சுவார். இதனாலேயே, அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை அறிந்திருப்பவர்கள், மனிதர்களிலேயே அல்லாஹ்வை அதிகம் அஞ்சுபவர்களாக இருந்துள்ளார்கள். அல்லாஹ் கூறுகின்றான்,

﴿ إِنَّمَا يَخْشَى اللَّهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ ﴾

"நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் - ஆலிம்கள் (அறிஞர்கள்) தாம்" (ஸூரா பாதிர் : 28)

அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதற்கு இந்தளவு முக்கியத்துவம் உள்ள காரணத்தினால், மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள விதத்தில் அதனை நிறைவேற்றுவது கட்டாயமாகும். அதாவது, அல்லாஹ் தனது வேதத்திலோ, தனது நபியின் ஸுன்னாவின் ஊடாகவோ தனக்கு உறுதிப்படுத்தியுள்ள அனைத்து பெயர்கள் மற்றும் பண்புகளை அவற்றிற்கே உரிய விதத்தில் ஈமான் கொள்வதாகும்.

விசுவாசிகளே! ஏற்கனவே கூறிய பிரகாரம் அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதை நிறைவேற்றுவதென்பது, இரண்டு விடயங்களை வேண்டி நிற்கின்றது. முதலாவது : அவை வந்துள்ளது போன்றே, திரிபுபடுத்தாமலும், கருத்து நீக்கம் செய்யாமலும், முறை கற்பிக்காமலும், ஒப்பாக்கமலும் ஈமான் கொள்வது. அதற்கான ஆதாரம் பின்வரும்

﴿ وَلِلَّهِ الْمَثَلُ الْأَعْلَىٰ ﴾

"அல்லாஹ்வுக்கோ மிக உயர்ந்த தன்மை இருக்கிறது" (ஸூரா அந்நஹ்ல் : 60)

அதாவது, பரிபூரணமான வர்ணனை.

﴿ لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ ۖ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ ﴾

"அவனைப் போன்று எப்பொருளும் இல்லை. அவன் தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்" (ஸூரா அஷ்ஷூரா : 11)

இரண்டாவது: அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் வந்துள்ள அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும், பண்புகளோடு மாத்திரம் நின்றுகொள்வதும், அவ்விரண்டிலும் வராத எந்தப் பெயர்களையோ, பண்புகளையோ உருவாக்காமல் இருப்பதுமாகும். இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ளவற்றிற்கு மேலதிகமாக எந்தப் பண்புகளையும் அவனுக்கு இணைப்பது கூடாது.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதற்கு எதிரானது, அதில் "இல்ஹாத்" எனும் மறுத்தலில் ஈடுபடுவதாகும். அரபு அகராதியில் "இல்ஹாத்" என்பது சாய்ந்து செல்வதைக் குறிக்கும். ஒரு பக்கம் சாய்ந்த நிலையில் வைக்கப்படும் கப்ருக்கு "லஹ்த்" எனப்படுவதும் அதனால் ஆகும். அதனடிப்படையில், அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளில் "இல்ஹாத்" செய்வதென்பது, அவற்றைப் புரிந்துகொள்வதில், அரபுமொழி, மற்றும் ஸலபுகளின் புரிதல்களை விட்டும் விலகிச் சாய்ந்து செல்வதாகும்.

இந்த இல்ஹாத் பல வகைப்படும். சுருக்கமாக அவையனைத்தும் ஒன்றில், சரியான அர்த்தத்தை, நாடப்படாத அர்த்தத்தை நோக்கி மாற்றல் அல்லது முழுமையாக கருத்து நீக்கம் செய்தல் ஆகியனவாகும். அவையனைத்துமே அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை ஈமான் கொள்வதற்கு முரணானதாகவும், அறிவின்றி அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுவதாகவும், ஸலபுகள் மற்றும் அவர்கள் வழிவந்தோரால் கடுமையாக கண்டிக்கப்பட்ட பித்அத்களாகவும், அல்லாஹ்வால் கடும் தண்டனைகள் கொண்டு எச்சரிக்கப்பட்ட பாவங்களாகவும் உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَلِلَّهِ الْأَسْمَاءُ الْحُسْنَىٰ فَادْعُوهُ بِهَا ۖ وَذَرُوا الَّذِينَ يُلْحِدُونَ فِي أَسْمَائِهِ ۚ سَيُجْزَوْنَ مَا كَانُوا يَعْمَلُونَ ﴾

“அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன் அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள், அவனுடைய திருநாமங்களை தவறாக பயன்படுத்துவோர்களை (புறக்கணித்து) விட்டு விடுங்கள் - அவர்களுடைய செயல்களுக்காக அவர்கள் (தக்க) கூலி கொடுக்கப்படுவார்கள்.” (ஸூரா அல்அஃராப் : 180)

﴿ وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ ۚ إِنَّ السَّمْعَ وَالْبَصَرَ وَالْفُؤَادَ كُلُّ أُولَٰئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا ﴾

“எதைப்பற்றி உமக்குத் தீர்க்க) ஞானமில்லையோ அதை(ச் செய்யத்) தொடரவேண்டாம் நிச்சயமாக (மறுமையில்) செவிப்புலனும், பார்வையும், இருதயமும் இவை ஒவ்வொன்றுமே (அதனதன் செயல் பற்றி) கேள்வி கேட்கப்படும்.” (ஸூரா அல்இஸ்ரா : 36)

முஸ்லிம்களே! அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளில் செய்யப்படும் இல்ஹாதின் வகைகளில் மிகப் பிரபல்யமானது, திரிபுபடுத்தலாகும். அதாவது, அரபுமொழியும், நல்வழிநடந்த ஸலபுகளான நபித்தோழர்கள் மற்றும் அவர்களை அழகியமுறையில் பின்பற்றி வந்தவர்கள் நபியவர்கள் ஊடாகப் பெற்றுக்கொண்ட புரிதலும் உணர்த்தி நிற்கும் உண்மையான கருத்தை விட்டும் திரிபுபடுத்துவதாகும். அவர்கள் தாம் மிகச் சரிதான புரிதல் கொண்டவர்கள். அவர்கள் சிறந்தவர்கள் என்பதற்கு சாட்சியமாக நபியவர்கள், “மக்களில் சிறந்தவர்கள் எனது நூற்றாண்டில் வாழ்பவர்களே! பின்பு அவர்களை அடுத்து வருபவர்கள், பின்பு அவர்களுக்கும் அடுத்து வருபவர்கள்”[3] என்று கூறியுள்ளார்கள். எனவே, நபித்தோழர்களின் புரிதலுக்கு முரணான எதுவும், அல்லாஹ்வின் மார்க்கத்தில் உள்ள ஒன்றல்ல. மாறாக, அது புதிதாக உருவாக்கப்பட்ட வழிமுறையாகும். அது இஸ்லாத்தில் உள்ள ஒன்றாக இருக்கமுடியாது.

இவ்வாறான திரிபுபடுத்தலுக்கான ஒரு உதாரணம், அல்லாஹ் அர்ஷின் உயர்ந்துள்ளான் என்ற அர்த்தத்தைத் தரும், “இஸ்திவா” என்பற்கு, அவ்வர்த்தத்தை வழங்காமல் “ஆக்கிரமித்தல்” என்ற அர்த்தம் வழங்குவதாகும்.

அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளில் செய்யப்படும் இல்ஹாதின் வகைகளில் ஒன்று, முறை கற்பிப்பதாகும். அதாவது, அல்லாஹ்வின் ஏதாவதொரு பண்பின் விதத்தை அறிந்துள்ளதாக வாதிடுவதாகும். இது ஹராமாகும். அல்லாஹ், தனது பண்புகள் எதனையும் அடியார்கள்

[3] புகாரி : 2652, முஸ்லிம் : 2533

முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியாது என மறுத்துக் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلَا يُحِيطُونَ بِهِ عِلْمًا ﴾

"ஆனால் அவர்கள் அவனை(த் தங்கள்) கல்வியறிவு கொண்டு சூழ்ந்தறிய மாட்டார்கள்." (ஸூரா தாஹா : 110)

இந்த வசனத்தில் அல்லாஹ், தனது பண்புகளின் யதார்த்த நிலையை அரியவேண்டும் என்ற எதிர்பார்ப்பை இல்லாமல் ஆக்குகின்றான்.

இதனை அறிந்துகொள்ள முயற்சிப்பவர்களை ஸலபுகள் கடுமையாகக் கண்டித்துள்ளார்கள். ஒரு மனிதர், இமாம் மாலிக் அவர்களிடம் வந்து, "அபூ அப்தில்லாஹ் அவர்களே! அல்லாஹ், "ரஹ்மான் அர்ஷின் மீது உயர்ந்துவிட்டான்" எனக் கூறுகின்றான். அவன் எவ்வாறு உயர்ந்துவிட்டான்?" என்று கேட்டார்.

இந்த சம்பவத்தை அறிவிப்பவர் கூறுகின்றார்: உடனே இமாம் அவர்கள் தமது தலையைத் தாழ்த்திக்கொண்டார்கள். அவர்களது தலை வேர்த்து வியர்த்திருந்தது. பின்பு அவர்கள் இவ்வாறு கூறினார்கள். "இஸ்திவா என்பது அர்த்தம் அறியப்படாத ஒன்றல்ல. ஆனால் அதன் விதம் புரிந்துகொள்ளப்படமுடியாது. அதை ஈமான் கொள்வது வாஜிபாகும். அதைப் பற்றிக் கேட்பது பித்அத் ஆகும். உன்னை நான் ஒரு பித்அத்வாதியாகவே காண்கின்றேன்" பின்பு அவரை வெளியேற்றுமாறு ஏவினார்கள். அவர் வெளியேற்றப்பட்டார்.

மேற்கூறப்பட்ட இமாம் மாலிகின் கருத்திற்கு இப்னு உஸைமீன் (ரஹ்) அவர்கள் வழங்கிய விளக்கத்தின் சுருக்கம் பின்வருமாறு, "இமாம் மாலிகின் பேச்சுதான் அனைத்துப் பண்புகளுக்குமான ஒரு அளவீடாகும். பண்புகளின் யதார்த்தம் பற்றிக் கேற்பவர்களின் கேள்வியே பித்அத் ஆகும். ஏனெனில், அல்லாஹ்வுக்கு அவசியமான பண்புகள் மற்றும் ஏனைய நல்லம்சங்கள் பற்றி அறிந்துகொள்வதில் நபித்தோழர்கள் தான் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருந்துள்ளார்கள். அவ்வாறிருந்தும் அல்லாஹ்வின் பண்புகளின் யதார்த்த நிலைகள் பற்றி ஒருபோதும் அவர்கள் கேட்கவில்லை."

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளில் செய்யப்படும் இல்ஹாதின் வகைகளில் ஒன்று, ஒப்பாக்குவதாகும். அதாவது, உதாரணமாக, அல்லாஹ்வின் கையைப் படைப்புக்களின் கைகளோடு

ஒப்பிடுவது போன்றதாகும். — அல்லாஹ் தனது படைப்புக்களுக்கு ஒப்பாகுவதை விட்டும் உயர்ந்தவன் -

இமாம் புகாரியின் ஆசானாகிய, நுஜம் பின் ஹம்மாத் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : “யார் அல்லாஹ்வை அவனது படைப்புக்களுடன் ஒப்பிடுகின்றாரோ, அவர் நிராகரித்துவிட்டார். மேலும், யார் அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ள வர்ணனைகளை மறுக்கின்றாரோ, அவரும் நிராகரித்துவிட்டார். அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ள வர்ணனைகளைக் கூறுவது ஒப்பாக்குதல் ஆக மாட்டாது.

விசுவாசிகளே! அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளை — அவை வந்துள்ளது போன்று — திரிபுபடுத்தாமல் புரிந்துகொள்வது தான், நான்கு மத்ஹபுடைய உலமாக்கள் உட்பட, அனைத்து முஸ்லிம்களும் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட கருத்தாகும். இமாம் அபூ ஹனீபாவின் மாணவரான, இமாம் முஹம்மத் இப்னுல் ஹஸன் அஷ்ஷைபானி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : “ரப்புடைய பண்புகள் தொடர்பாக அல்குர்ஆனிலும், நம்பகமானவர்கள் நபியவர்களைத் தொட்டு அறிவித்த ஹதீஸ்களிலும் வந்துள்ளவற்றை விளக்காமலும், வர்ணிக்காமலும், ஒப்பாக்காமலும் ஈமான் கொள்ளவேண்டும் என்பதை, கிழக்கு தொடக்கம் மேற்கு வரை உள்ள அனைத்து அறிஞர்களும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனவே, அவற்றில் ஏதாவதொன்றுக்கு யாராவது விளக்கமளித்தால், அவர் நபியவர்கள் கடைப்பிடித்த வழிமுறையை விட்டும் வெளியேறிவிட்டார். மேலும், முஸ்லிம் ஜமாஆ விட்டும் வெளிப்பட்டுவிட்டார். ஏனெனில், அவர்கள் வர்ணிக்கவோ, விளக்கவோ இல்லை. மாறாக, அல்குர்ஆனிலும், ஸுன்னாவிலும் உள்ளதைக் கூறிவிட்டு, மௌனித்தவிட்டார்கள்.”

இமாம் சாபிஈ (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : “அல்லாஹ்வின் பேச்சை அவன் நாடுகின்ற அர்த்தத்தில் நான் ஈமான் கொள்கின்றேன். நபி (ஸல்) அவர்களின் பேச்சை, அவர்கள் நாடுகின்ற அர்த்தத்தில் நான் ஈமான் கொள்கின்றேன்.”

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : “அல்குர்ஆனில் வந்துள்ள, ஸிபாத்துக்கள் தொடர்பான எந்த வசனத்தின் விளக்கத்திலும் நபித்தோழர்கள் கருத்துவேற்றுமை கொள்ளவில்லை. நபித்தோழர்களைத் தொட்டும் அறிவிக்கப்பட்ட அல்குர்ஆன் விளக்கங்கள் மற்றும் அவர்கள் அறிவித்த ஹதீஸ்களை நான் தேடிப்பார்த்த போது, அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரம், பெரிய மற்றும் சிறிய நூற்களில் நூற்றுக்கும் மேற்பட்ட தப்ஸீர்களைப்

பெற்றுக்கொண்டேன். ஆனாலும், இந்த நேரம் வரை, எந்தவொரு நபித்தோழரும், ஸிபாத்துக்கள் தொடர்பான வசனங்களையோ, ஹதீஸ்களையோ அவற்றின் அறியப்பட்ட விளக்கத்திற்கு மாற்றமாக விளக்கியதாகக் காணவில்லை. மாறாக, அவர்கள் அவற்றை உறுதியாக ஏற்றுக்கொண்டு, வலிந்துரை செய்பவர்களின் கருத்துக்களுக்கு மாற்றமாக, அவை அல்லாஹ்வின் பண்புகளே எனத் தெளிவுபடுத்தியுள்ளமையை அறிவிக்கும் ஆதாராங்கள் அதிகமாக உள்ளன.

﴿ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ ﴾

"பின்பு அல்லாஹ் அர்ஷின் மீது உயர்ந்தான்" (ஸூரா அல்அஃராப் : 54)

என்ற வசனத்தை விளக்கும் போது இமாம் இப்னு கஸீர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : " *"பின்பு அல்லாஹ் அர்ஷின் மீது உயர்ந்தான்"* என்ற வசனத்தைப் பொறுத்தளவில், இந்த இடத்தில் மக்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். அவற்றையெல்லாம் இங்கு விளக்கமுடியாது. ஆனாலும், இந்த இடத்தில் ஸலபுகளான, மாலிக், அவ்ஸாஈ, ஸவ்ரீ, லைஸ், ஷாபிஈ, அஹ்மத், இஸ்ஹாக் போன்ற ஆரம்பகால, பின்வந்த இமாம்களின் அணுகுமுறையே பின்பற்றப்படவேண்டும். அதாவது, அவற்றை, விதம் கற்பிக்காமலும், ஒப்பாக்காமலும், கருத்துநீக்கம் செய்யாமலும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒப்பாக்குபவர்களின் சிந்தனையில் தோன்றும் வெளிப்படையான அர்த்தம் அல்லாஹ்வுக்குக் கிடையாது. அல்லாஹ்வுக்கு அவனது படைப்புக்களில் யாரும் ஒப்பாகமாட்டார்கள். மாறாக, இவ்விடயம் இமாம்கள் கூறியது போன்றே புரிந்துகொள்ளப்படவேண்டும். நுஐம் பின் ஹம்மாத் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : "யார் அல்லாஹ்வை அவனது படைப்புக்களுடன் ஒப்பிடுகின்றாரோ, அவர் நிராகரித்துவிட்டார். மேலும், யார் அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ள வர்ணனைகளை மறுக்கின்றாரோ, அவரும் நிராகரித்துவிட்டார். அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறியுள்ள வர்ணனைகளைக் கூறுவது ஒப்பாக்குதல் ஆக மாட்டாது. தெளிவாக வசனங்களிலும், ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களிலும் வந்துள்ளவற்றை, அல்லாஹ்வின் கண்ணியத்திற்குப் பொருந்தும் விதத்தில் யார் ஏற்றுக்கொண்டு, அல்லாஹ்வுக்கு குறைப் பண்புகள் இல்லை என மறுக்கின்றாரோ, அவர் நேர்வழியின் பாதையில் நுழைந்துவிட்டார்."

அப்துர் ரஹ்மான் இப்னுல் காஸிம் அல்மாலிகீ அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : "யாரும், அல்லாஹ் அல்குர்ஆனில் தன்னைப் பற்றி வருணித்துக் கூறியுள்ளவற்றைத் தவிர, வேறு எதனையும் கொண்டு அவனை

வர்ணிக்கக் கூடாது. மேலும், அவனது கையையோ, முகத்தையோ எதற்கும் ஒப்பிடவும் கூடாது. மாறாக, "அல்லாஹ்வே கூறியுள்ளது போன்று, அவனுக்கு இரு கைகளும், அவன் கூறியுள்ளது போன்றே அவனுக்கு முகமும் உள்ளது" எனக் கூறவேண்டும். அவன் தன்னைப் பற்றி வர்ணித்துக் கூறியுள்ளவற்றுடன் நிறுத்திக்கொள்ளவேண்டும். ஏனெனில், அவனுக்கு நிகரான, ஒப்பான எதவுமே கிடையாது. மாறாக – அவனே கூறியுள்ளது போன்று – அவன் வேறு கடவுள்கள் அற்ற ஒரே கடவுளாகும். அவனே கூறியுள்ளது போன்று, அவனது கைகள் விரிக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَالْأَرْضُ جَمِيعًا قَبْضَتُهُ يَوْمَ الْقِيَامَةِ وَالسَّمَاوَاتُ مَطْوِيَّاتٌ بِيَمِينِهِ ﴾

"இன்னும் இந்தப்பூமி முழுதும் கியாம நாளில் அவனுடைய ஒரு பிடிதான் மேலும், வானங்களனைத்தும் அவனுடைய வலக்கையால் சுருட்டப்பட்டதாக இருக்கும்" (ஸூரா அஜ்ஜுமர் : 67)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளின் அர்த்தங்களை அறிந்துகொள்வது, ஓர் அடியானின் அறிவுக்கும், உள்ளத்திற்கும் உறுப்புக்களுக்கும் நிறைய பயன்களைப் பெற்றுத் தருகின்றது.

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : "அழகான திருநாமங்களும், உயர்வான பண்புகளும் படைப்பு மற்றும் உருவாக்கத்துடன் தொடர்பான அவற்றின் விளைவுகளைத் தேடிநிற்கின்றது போன்றே, இறையதிகாரம், மற்றும் அவனுக்கு அடிபணிதல் தொடர்பான அவற்றின் விளைவுகளையும் தேடிநிற்கின்றது. ஒவ்வொரு பண்பிற்கும் தனித்துவமான அடிபணிதல் முறையொன்று உள்ளது. இது, அவற்றை முழுமையாகக் கற்று,

அறிந்துகொள்வதன் விளைவாக வரக்கூடியது. இது உள்ளம் மற்றும் உறுப்புக்களுடன் தொடர்பான அனைத்து வித அடிபணிதல்களுடனும் வரக்கூடியது. தனது ரப்பு தீங்கிழைத்தல், நன்மைசெய்தல், கொடுத்தல், தடுத்தல், படைத்தல், வாழ்வாதாரம் அழித்தல், உயிர்ப்பித்தல், மரணிக்கச் செய்தல் போன்றவற்றில் தனித்தவனாக உள்ளான் என்பதை அறிந்துகொள்வது, அவன் மீது தவக்குல் வைத்தல் எனும் அடிபணிதல் முறையை உள்ளத்திலும், அந்தத் தவக்குலில் பயன்களை உறுப்புக்களிலும் ஏற்படுத்திவிடும்.

அவன் கேட்கின்றான், பார்க்கின்றான் மற்றும் அறிகின்றான் என்றும், வானங்கள் மற்றும் பூமியில் உள்ள ஒரு அணுப் பிரமானமும் அவனை விட்டும் மறையமாட்டாது எனவும், இரகசியத்தையும், மறைவானதையும் அவன் அறிவான் எனவும், கண் சாடைகள் மற்றும் உள்ளங்கள் மறைத்துவைப்பவற்றையும் அவன் அறிவான் எனவும் ஓர் அடியான் அறிந்துகொள்வதன் விளைவாக, அவன் தனது நாவையும், உறுப்புக்களையும், உள ஊசலாட்டங்களையும் அல்லாஹ் விரும்பாத அனைத்தையும் விட்டுக் காத்து, இவ்வுறுப்புக்களின் எல்லாத் தொடர்புகளையும் அல்லாஹ் விரும்பிப் பொருந்திக் கொள்ளும் அம்சங்களுடன் வைத்துக்கொள்வான். அது அவன உள்ளத்தில் வெட்கத்தை ஏற்படுத்தும். அந்த வெட்கம் ஹராமான, அறுவறுக்கத்தக்க அம்சங்களைத் தவிர்க்கச் செய்யும்.

அல்லாஹ் தேவையற்ற தன்மை, தாராளத் தன்மை, பெருங்கொடை, நல்லுபகாரம் புரியும் தன்மை, தயாளகுணம், இரக்கம் என்பவற்றை அறிந்துகொள்வது அவனிடம் விசாலமான எதிர்பார்ப்பை ஏற்படுத்தும். இது, அவனது அறிவுக்கு ஏற்ப, உள் மற்றும் புற அடிபணிதலை உருவாக்கும்.

அவ்வாறுதான், அல்லாஹ்வின் கண்ணியம், மகத்துவம், சிறப்பு ஆகியவற்றை அறிந்துகொள்வது, அன்பு, தாழ்மை, அடிபணிவு ஆகிய நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதோடு, அவற்றின் விளைவாக, மேலும் பல புறம் சார்ந்த அடிபணிதல்களையும் ஏற்படுத்தும்.

அவ்வாறே, அவனது பரிபூரணத்தன்மை, அழகு மற்றும் உயர்வான பண்புகளை அறிந்துகொள்வது, அடிபணிதலின் அனைத்து வகைகளைகளையும் உள்ளடக்கும் விசேட அன்பைப் பெற்றுத் தரும். எனவே, அடிபணிதல் முழுவதும், அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகளின் அர்த்தங்களை நோக்கியே திரும்புகின்றன. படைப்புக்கள் எவ்வாறு அவற்றுடன்

இணைந்துள்ளனவோ, அதே போன்று அவையும் அவற்றுடன் இணைந்துள்ளன. அல்லாஹ்வின் படைப்பும் அதிகாரமும் அவனது பெயர்கள் மற்றும் பண்புகளுக்கு இவ்வுலகில் விளைவுகளாகும்."

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ اِنَّ اللّٰهَ وَمَلٰٓىِٕكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِىِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!
இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)
யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

வானவர்களை ஈமான் கொள்ளல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! நான் உங்களுக்கு இறையச்சத்தைக் கொண்டு உபதேசம் செய்கின்றேன். ஆரம்பமாகவும், இறுதியாகவும் வந்த அனைவருக்கும் அதுவே அல்லாஹ்வின் உபதேசமாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَلَقَدۡ وَصَّيۡنَا ٱلَّذِينَ أُوتُواْ ٱلۡكِتَٰبَ مِن قَبۡلِكُمۡ وَإِيَّاكُمۡ أَنِ ٱتَّقُواْ ٱللَّهَۚ ﴾ [النساء: ١٣١]

“உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசம் செய்தோம்” (அல்குர்ஆன் : 4:131)

அறிந்துகொள்ளுங்கள்! மலக்குமார்களை ஈமான் கொள்வதற்கு இஸ்லாத்தில் அதிக முக்கியத்துவம் உள்ளது. அது ஈமானின் தூண்களில் இரண்டாவது தூணாகும். அவர்கள்தாம் அல்லாஹ்வுக்கும் தூதர்களுக்கும் இடையில் செய்தி பரிமாறுபவர்களாகும். “மலக்குமார்கள் என்போர் மறைவான ஓர் உலகமாகும். அவர்களுக்கு உளூஹிய்ய, ருபூபிய்யத் தனித்துவங்கள் எதுவும் கிடையாது. அல்லாஹ் அவர்களை ஒளியினால் படைத்துள்ளான். மேலும், அவர்களை முழுமையாக அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிப்படுமாறு செய்து,

அக்கட்டளைகளை நிறைவேற்றுவதற்கான சக்தியையும் வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ لَّا يَعْصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ۝٦ ﴾ [التحريم: ٦]

"அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்." (ஸூரா அத்தஹ்ரீம் : 06)

وَمَنْ عِندَهُۥ لَا يَسْتَكْبِرُونَ عَنْ عِبَادَتِهِۦ وَلَا يَسْتَحْسِرُونَ ۝١٩ ﴾ [الأنبياء: ١٩]

"மேலும் அவனிடம் இருப்பவர்கள் அவனுக்கு வணங்குவதை விட்டுப் பெருமையடிக்க மாட்டார்கள் சோர்வடையவுமாட்டார்கள்." (ஸூரா அல்அன்பியா : 19)

- மலக்குமார்கள் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள். அவர்களை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் மட்டிடமுடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَا يَعْلَمُ جُنُودَ رَبِّكَ إِلَّا هُوَ ﴾ [المدثر: ٣١]

"அன்றியும் உம்முடைய இறைவனின் படைகளை அவனைத் தவிர மற்றெவரும் அறிய மாட்டார்கள்" (ஸூரா அல்முத்தஸ்ஸிர் : 31)

அதாவது, அவர்களது எண்ணிக்கையையும், பிரமாண்டத்தையும் அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள்.

மிஃராஜ் பற்றிய, அனஸ் (ரலி) அவர்கள் வாயிலாக, புகாரி மற்றும் முஸ்லிம் கிரந்தங்களில் அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸில், நபி (ஸல்) அவர்கள், தனக்கு பைதுல் மஃமூர் காட்டப்பட்டதாகவும், அதைப் பற்றி ஜிப்ரீலிடம் வினவிய போது அவர்கள் பின்வருமாறு கூறியதாகவும் கூறினார்கள்: இந்த பைதுல் மஃமூரில் ஒவ்வொரு நாளும் எழுபதாயிரம் மலக்குகள் தொழுகின்றார்கள். அவர்கள் வெளியேறினால் மீண்டும் வரமாட்டார்கள். அதுவே அவர்களது கடைசி முறையாகும்." [4] அதாவது, அவ்வாறு ஒவ்வொரு நாளும் நுழையும்

[4] புகாரி : 3207, முஸ்லிம் : 164

எழுபதாயிரம் பேர் மீண்டும் ஒரு தடவை அங்கு வரமுடியாது என்பது, அவர்களது அதிக எண்ணிக்கைக்கு ஆதாரமாகும்.

- விசுவாசிகளே! மலக்குமார்களை ஈமான் கொள்வது ஆறு விடயங்களை உள்ளடக்குகின்றது:

1. அவர்களது உள்ளமையை ஈமான் கொள்ளல்.

2. அவர்களை நேசித்தல். அவர்களை யார் விரோதிக்கின்றாரோ, அவர் காபிராவார். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ مَن كَانَ عَدُوًّا لِّلَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَرُسُلِهِۦ وَجِبۡرِيلَ وَمِيكَىٰلَ فَإِنَّ ٱللَّهَ عَدُوٌّ لِّلۡكَٰفِرِينَ ٩٨ ﴾ [البقرة: ٩٨]

“எவன் அல்லாஹ்வுக்கும், அவனுடைய மலக்குகளுக்கும், அவனுடைய தூதர்களுக்கும், ஜிப்ரீலுக்கும், மீக்காயிலுக்கும் பகைவனாக இருக்கிறானோ, நிச்சயமாக (அவ்வாறு நிராகரிக்கும்) காஃபிர்களுக்கு அல்லாஹ் பகைவனாகவே இருக்கிறான்.” (ஸூரா அல்பகரா : 98)

3. அவர்களில் - ஜிப்ரீல் போன்ற — பெயர் குறிப்பிடப்பட்டவர்களை பெயர்களுடன் ஈமான் கொள்ளுதல். பெயர் அறியப்படாதவர்களைப் பொதுவாக ஈமான் கொள்ளல்.

4. அவர்களது, படைப்புசார் தன்மைகளில் நாம் அறிந்துள்ளவற்றை ஈமான் கொள்ளல். உதாரணமாக, ஜிப்ரீல் (அலை) அவர்கள் பற்றிய வர்ணனையில், அவர்கள் படைக்கப்பட்டுள்ள தோற்றத்தில் தாம் அவரைக் கண்டதாகவும், முழு வானத்தையும் அடைக்குமளவு அறுநூறு இறக்கைககளை அவர்கள் கொண்டிருந்ததாகவும் நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.[5]

சிலபோது, அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் ஒரு மலக்கு மனிதராக மாறலாம். உதாரணமாக, ஜிப்ரீல் (அலை) அவர்களை அல்லாஹ் மர்யம் (அலை) அவர்களை நோக்கி அனுப்பிய போது, அவர்கள் அழகான ஒரு மனிதரின் தோற்றத்தில் மாறினார்கள்.

அதேபோன்று, நபியவர்கள் தமது தோழர்களுடன் அமர்ந்திருக்கும் போது, மிக வெண்மையான ஆடையணிந்த, கடுமையான கறுப்புநிற முடிகள் கொண்ட

[5] புகாரி : 3232, 3233, முஸ்லிம் : 174,177

ஒரு மனிதராகத் தோற்றம் பெற்றார்கள். அவரிடம் பயண அடையாளங்கள் எதுவும் காணப்படவில்லை. நபித்தோழர்களில் யாரும் அவரை அறிந்திருக்கவும் இல்லை. அவர் நபியவர்கள் முன்னிலையில், தமது முன்னங்கால்களை நபியவர்களது முன்னங்கால்களோடு இணைத்து, தமது இரு கரங்களையும் நபியவர்களின் தொடைக்கு மேல் வைத்து, நபியவர்களிடம் இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் மறுமை மற்றும் அதன் அடையாளங்கள் பற்றிக் கேட்டார். அவருக்கு நபியவர்கள் பதிலளித்ததும் அவர் எழுந்து சென்றுவிட்டார். பின்பு நபித்தோழர்கள் அவரைப் பற்றி நபியவர்களிடம் கேட்டபோது, இவர் "ஜிப்ரீல், மக்களுக்கு அவர்களது மார்க்கத்தைக் கற்றுக்கொடுக்க வந்தார்" என்று கூறினார்கள்.[6]

அதேபோன்று, இப்ராஹீம் மற்றும் லூத் (அலை) ஆகியோரிடம் அல்லாஹ் அனுப்பிய மலக்குகள் ஆண்களின் தோற்றத்தில் காணப்பட்டார்கள்.

- அல்லாஹ்வின் அடியார்களே! மலக்குமார்களின் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்களாகும். படைகோலம், நற்குணங்களில் அவர்தாம் மலக்குகளிலேயே உயர்ந்தவர். அல்லாஹ் தனது வேதத்தின் இரு வசனங்களில் அவரை ஐந்து தன்மைகள் கொண்டு வருணித்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّهُۥ لَقَوۡلُ رَسُولٖ كَرِيمٖ ١٩ ذِي قُوَّةٍ عِندَ ذِي ٱلۡعَرۡشِ مَكِينٖ ٢٠ مُّطَاعٖ ثَمَّ أَمِينٖ ٢١ ﴾ [التكوير: ١٩-٢١]

"நிச்சயமாக (இக்குர்ஆன்) மிகவும் கண்ணியமிக்க ஒரு தூதுவர் (ஜிப்ரீல் மூலம் வந்த) சொல்லாகும். (அவர்) சக்திமிக்கவர் அர்ஷ/க்குடையவனிடம் பெரும் பதவியுடையவர். (வானவர் தம்) தலைவர் அன்றியும் நம்பிக்கைக்குரியவர்." (ஸூரா அத்தக்வீர் : 19-21)

அல்லாஹ் அவரை கண்ணியமானவர் என்று வர்ணித்துள்ளது, அவரது நற்குணங்களுக்காகவும், புகழுக்குரிய குணாதிசங்களுக்காகவும் ஆகும். பின்பு அவர் பலமானவர் என்றும், பின்பு பதவியுடையவர் என்றும் வர்ணித்துள்ளான். அதாவது அவர் தனது ரப்பிடத்தில் மதிப்புக் கொண்டவர்கள். பின்பு அல்லாஹ் தலைவர் என்று கூறுகின்றான். அதாவது அனைத்து மலக்குகள் அவருக்குக் கட்டுப்படுவார்கள். வஹ்யின் விடயத்தில் நம்பிக்கையானவர்.

---

[6] முஸ்லிம் : 09

மேலும், நபியவர்கள் பற்றிக் கூறிக்கொண்டுவரும் போது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் பலமான படைப்பைக் கொண்டவர் என்றும் கூறுகின்றான்:

﴿ عَلَّمَهُۥ شَدِيدُ ٱلۡقُوَىٰ ۝٥ ذُو مِرَّةٖ فَٱسۡتَوَىٰ ۝٦ ﴾ [النجم: ٥-٦]

“மிக்க வல்லமையுடைவர் (ஜிப்ரீல்) அவருக்குக் கற்றுக் கொடுத்தார். (அவர்) மிக்க உறுதியானவர் பின்னர் அவர் (தம் இயற்கை உருவில்) நம் தூதர் முன் தோன்றினார்.” (ஸூரா அந்நஜ்ம் : 5-6)

அதாவது, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வஹ்யைக் கற்றுக்கொடுத்தவர் ஜிப்ரீல் (அலை) அவர்களாகும். அவர் கடுமையான பலம் கொண்டவர் என அல்லாஹ் வர்ணிக்கின்றான். அதாவது, உள்ளகத்திலும், வெளிப்படையிலும் கடுமையான பலம் கொண்டவர். அல்லாஹ் நிறைவேற்றுமாறு கூறிய அம்சங்களை நிறைவேற்றுவதற்கு சக்திபெற்றவர். வஹியை ரஸூல்மார்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவும், ஷைத்தான்கள் அவற்றை மறைமுகமாக அறிந்துகொள்ளாமல் பாதுகாத்துக் கொள்ளவும், அவர்கள் அதில் இல்லாதவற்றை நுழைத்துவிடாமல் பாதுகாத்துக்கொள்ளவும் சக்தியுள்ளவர்கள். அதாவது, தனது வஹியைப் பாதுகாக்கும் நோக்கில் அல்லாஹ், அதனை இந்த நம்பிக்கையான, பலம்மிக்கத் தூதுவருடன் அனுப்பி வைத்துள்ளான்.

இங்கு “மிர்ரா” என்பது, வெளிப்படையான, மறைமுகமான அனைத்துக் குறைகளையும் விட்டும் ஈடேற்றமாக இருப்பதைக் கூறிக்கும். எனவே, அது அழகான, பரிபூரணமான படைகோலத்தை உணர்த்துகின்றது. எனவே, பலம், ஆரோக்கியம், அழகு என அனைத்தையும் இது உள்ளடக்கியுள்ளது.

5. அவர்களது குணம்சார் தன்மைகளில் நாம் அறிந்துள்ளவற்றை ஈமான் கொள்ளுதல். உதாரணமாக, வெட்ககுணம். அதற்கான ஆதாரமாக, உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி நபியவர்கள் கூறிய ஹதீஸில் இவ்வாறு உள்ளது: “மலக்குமார்களே வெட்கப்படும் ஒரு மனிதரைப் பார்த்து நான் வெட்கப்படக் கூடாதா!”[7]

அல்லாஹ் வெறுப்பவற்றை மலக்குகளும் வெறுப்பார்கள். எனவே, நாயோ, சிலைகளோ இருக்கும் வீட்டில் அவர்கள் நுழையமாட்டார்கள். நபி (ஸல்)

[7] முஸ்லிம் : 2401

அவர்கள் கூறினார்கள் : “நாயோ சிலை உருவங்களோ இருக்கும் வீட்டில் மலக்குகள் நுழையமாட்டார்கள்.”[8]

மனிதர்களுக்கு நோவினையை ஏற்படுத்தும் அம்சங்கள் மலக்குகளுக்கும் நோவினையை ஏற்படுத்தும். வெங்காயம், வெள்ளைப் பூண்டு, லீக்ஸ் போன்றவற்றைச் சாப்பிட்டவர்கள் பள்ளிவாசலுக்கு வரவேண்டாம் என நபியவர்கள் தடுத்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “யார் வெங்காயம், வெள்ளைப் பூண்டு, லீக்ஸ் போன்றவற்றைச் சாப்பிட்டுள்ளாரோ அவர் எமது பள்ளிவாசலை நெருங்கவேண்டாம். ஏனெனில், மனிதனர்கள் நோவினைப்படும் அம்சங்களில் மலக்குகளும் நோவினைப்படுகின்றார்கள்.”[9] புகைத்தல் போன்ற துர்வாடை கொண்டவர்களும் இதனுடன் சேர்க்கப்படுவார்கள்.

6. அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க, அவர்கள் மேற்கொள்ளும் பொதுவான, குறிப்பான செயற்களில் நாம் அறிந்துள்ளவற்றை ஈமான் கொள்ளுதல். பொதுவானவற்றிற்கு உதாரணமாக, அல்லாஹ்வைத் துதிப்பது, சோர்வோ, களைப்போ இன்றி இரவு, பகலாக அல்லாஹ்வை வணங்குவது போன்றவற்றைக் கூறிப்பிடலாம். அல்லாஹ் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

﴿ فَٱلتَّٰلِيَٰتِ ذِكۡرًا ۝٣ ﴾ [الصافات: ٣]

“(நினைவூட்டும்) வேதத்தை ஓதுவோர் மீது சத்தியமாக,” (ஸூரா அஸ்ஸாப்பாத் : 3)

அவர்களில் சிலருக்கு சில குறிப்பான பணிகளும் இருக்கும். உதாரணமாக, ஜிப்ரீல் (அலை) அவர்கள், அல்லாஹ் தனது தூதர்களுக்கும் நபிமார்களுக்கும் அனுப்பும் வஹியுக்குப் பொறுப்பாக இருந்தார்கள். வேறுசில மலக்குகளும் சிலபோது வஹியைக் கொண்டு இறங்குவார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱلۡمُلۡقِيَٰتِ ذِكۡرًا ۝٥ عُذۡرًا أَوۡ نُذۡرًا ۝٦ ﴾ [المرسلات: ٥-٦]

8 புகாரி : 3225, முஸ்லிம் : 2106
9 முஸ்லிம் : 564

“(இதயங்களில்) உபதேசத்தைப் போடுவோர் (வானவர்) மீதும் (சத்தியமாக) (அந்த உபதேசம்) மன்னிப்பையோ, அல்லது எச்சரிக்கையையோ (உள்ளடக்கியதாகும்)” (ஸூரா அல்முர்ஸலாத் : 5-6)

அதாவது அவர்கள் உபதேசங்களை நபிமார்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அதன் நோக்கம் ஒன்றில், எத்திவைப்பின் மூலம் பொறுப்பை நிறைவேற்றி வைப்பது அல்லது எச்சரிக்கை செய்வதாகும்.

குறிப்பிட்ட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ள மலக்குமார்களில் ஒருவர், மீகாஈல் (அலை) அவர்களாகும். அவருக்கு மழைபொழியச் செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ள மலக்குமார்களில் ஒருவர், ஸூர் ஊதுவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள மலக்காகும். அவரது பெயர் இஸ்ராபீல் என்பதே பிரபல்யமான கருத்தாகும். ஸூர் என்பது, - ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள பிரகாரம் - மறுமை ஏற்படும் போதும், மக்கள் மீண்டும் எழுப்பப்படும் போதும் ஊதப்படும் ஒரு ஊதுகுழல் ஆகும்.[10]

இம்மூவரும் தான் மலக்குமார்களில் மிக முக்கியமானவர்களாகும். இவர்கள் ஒவ்வொரு விதமான வாழ்வைக் கொண்டு பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள், ஆன்மாக்களுக்கு வாழ்வளிக்கும் வஹ்யுக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளார். மீகாஈல் (அலை) அவர்கள், பூமிக்கு வாழ்வளிக்கும் மழைக்குப் பொறுப்பாக நியமிக்கபட்டுள்ளார். இஸ்ராபீல் (அலை) அவர்கள் ஸூர் ஊதுவதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளவர். அதற்குப் பின்னர் தான், மறுமையில் உடல்களுக்கு உண்மையான வாழ்க்கை உள்ளது.

விசுவாசிகளே! மலகுல் மௌத் என்பவரும் மலக்குமார்களில் ஒருவராகும். இவர், மரணத்தின் போது உயிர்களைக் கைப்பற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளவராகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ قُلْ يَتَوَفَّىٰكُم مَّلَكُ ٱلْمَوْتِ ٱلَّذِى وُكِّلَ بِكُمْ ثُمَّ إِلَىٰ رَبِّكُمْ تُرْجَعُونَ ﴾ [السجدة: ١١]

“உங்கள் மீது நியமிக்கப்பட்டிருக்கும், “மலக்குல் மவ்து” தாம் உங்கள் உயிரைக் கைப்பற்றுவார் - பின்னர் நீங்கள் உங்கள் இறைவனிடம் மீள்விக்கப்படுவீர்கள்” என்று (நபியே!) நீர் கூறும்” (ஸூரா அஸ்ஸஜ்தா : 11)

[10] அபூ தாவூத் : 4742, திர்மிதி : 3244

ஆனால், மலகுல் மௌத்துக்கு “இஸ்ராஈல்” எனும் பெயர் வழங்குவதற்கு, அல்குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ எந்த ஆதாரமும் இல்லை. மாறாக, அல்குர்ஆனில் - முன்கூறிய வசனத்தைப் போன்று – மலகுல் மௌத் என்றே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது,

மலக்குல் மௌத்துக்கு உதவியாக வேறு சில மலக்குகளும் உள்ளனர். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ مَا غَرَّكَ بِرَبِّكَ ٱلْكَرِيمِ ۝٦ ٱلَّذِى خَلَقَكَ فَسَوَّىٰكَ فَعَدَلَكَ ۝٧ فِىٓ أَىِّ صُورَةٍ مَّا شَآءَ رَكَّبَكَ ۝٨ كَلَّا بَلْ ﴾
[الأنعام: ٦١]

“அவன் தன் அடியார்களை அடக்கியாளுபவனாக இருக்கிறான் அன்றியும், உங்கள் மீது பாதுகாப்பாளர்களையும் அனுப்புகிறான் உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால், நம் அமரர்கள் அவர் ஆத்மாவை எடுத்துக் கொள்கிறார்கள் - அவர்கள் (தம் கடமையில்) தவறுவதில்லை.” (ஸூரா அல்அன்ஆம் : 61)

“நம் அமரர்கள்” என்பதன் அர்த்தம் மலக்குமார்கள் என்பதாகும். அதாவது, அவர்கள் மலக்குல் மௌதின் உதவியாளர்களாகும். “அவர்கள் (தம் கடமையில்) தவறுவதில்லை” என்பதன் அர்த்தமாவது, அவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பில் கவனயீனமாக இருக்கமாட்டார்கள் என்பதாகும்.

பூமியில் சுற்றிக் கொண்டிருக்கும் சில மலக்குகளும் உள்ளனர். அவர்கள் திக்ருடைய சபைகளைத் தேடிச் செல்வார்கள். ஏதாவதொரு அறிவுடைய, திக்ருடைய சபைகளை அவர்கள் கண்டால், ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு, அங்கு அமர்ந்துகொள்வதோடு, தமது இறக்கைகள் மூலம் அடிவானம் வரை அச்சபையில் உள்ளோரைச் சூழ்ந்துகொள்வார்கள்.[11]

கருவில் உள்ள சிசுக்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள சில மலக்குகளும் உள்ளனர். தனது தாயின் வயிற்றில் ஒருவருக்கு நான்கு மாதங்கள் நிறைவடைந்துவிட்டால், அல்லாஹ் அவரிடம் ஒரு மலக்கை அனுப்பி, அவரது வாழ்வாதாரம், வாழ்நாள், அமல்கள், அவர் பாக்கியவாதியா? அல்லது துர்ப்பாக்கியவாதியா ஆகியவற்றை எழுதுமாறு ஏவுவான்.[12]

---
[11] புகாரி : 6408, முஸ்லிம் : 2689
[12] பார்க்க : புகாரி : 3208, முஸ்லிம் : 2643

மனிதர்களின் செயற்களைப் பாதுகாத்து, எழுதிவைக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள சில மலக்குகளும் உள்ளனர். ஒவ்வொரு மனிதனுக்கும் இரு மலக்குகள் உள்ளனர். ஒருவர் அவரது வலப்புறத்திலும், மற்றையவர் அவரது இடப்புறத்திலும் இருப்பார். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ عَلِمَتْ نَفْسٌ مَّا قَدَّمَتْ وَأَخَّرَتْ ۝ يَٰٓأَيُّهَا ٱلْإِنسَٰنُ مَا غَرَّكَ بِرَبِّكَ ٱلْكَرِيمِ ۝ ٱلَّذِى خَلَقَكَ فَسَوَّىٰكَ فَعَدَلَكَ ۝ ﴾ [ق: ١٧-١٨]

"(மனிதனின்) வலப்புறத்திலும், இடப்புறத்திலும் அமர்ந்து எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும் போது- கண்காணித்து எழுதக்கூடியவர் அவனிடம் (மனிதனிடம்) இல்லாமல் எந்த சொல்லையும் அவன் மொழிவதில்லை." (ஸூரா காப் : 17-18)

﴿ وَإِنَّ عَلَيْكُمْ لَحَٰفِظِينَ ۝ كِرَامًا كَٰتِبِينَ ۝ يَعْلَمُونَ مَا تَفْعَلُونَ ۝ ﴾ [الإنفطار: ١٠-١٢]

"நிச்சயமாக, உங்கள் மீது பாது காவலர்கள் (நியமிக்கப்பட்டு) இருக்கின்றனர். (அவர்கள்) கண்ணியம் வாய்ந்த எழுத்தாளர்கள். நீங்கள் செய்கிறதை அவர்கள் அறிகிறார்கள்." (ஸூரா அல்இன்பிதார் : 10-12)

ஒரு மய்யித் கப்ரில் வைக்கப்பட்டவுடன், அவரிடம் கேள்விகேட்க நியமிக்கப்பட்டுள்ள மலக்குகளும் உள்ளனர். அவர்கள் அவரிடம், அவரது ரப்பு, மார்க்கம் மற்றும் நபியைப் பற்றிக் கேட்பார்கள்.[13]

சுவனவாதிகளுக்கு பணிவிடை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மலக்குகளும் உள்ளனர். அவர்கள் அந்த சுவனத்தின் பொறுப்பாளிகளாகும். சுவனவாதிகள் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَٱلْمَلَٰٓئِكَةُ يَدْخُلُونَ عَلَيْهِم مِّن كُلِّ بَابٍ ۝ سَلَٰمٌ عَلَيْكُم بِمَا صَبَرْتُمْ ۚ فَنِعْمَ عُقْبَى ٱلدَّارِ ۝ ﴾ [الرعد: ٢٣-٢٤]

"மலக்குகள் ஒவ்வொரு வாயில் வழியாகவும் இவர்களிடம் வருவார்கள். "நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்ததற்காக "ஸலாமுன் அலைக்கும்" (உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக!) உங்களுடைய இறுதி வீடு மிகவும் நல்லதாயிற்று!" (என்று கூறுவார்கள்.)" (ஸூரா அர்ரஃத் : 23-24)

---

[13] பார்க்க : புகாரி : 1374

நரகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள சில மலக்குகளும் உள்ளனர். அவர்களுக்குத் தலைவர், நரகத்தின் பொறுப்பாளராக உள்ள மாலிக் (அலை) அவர்களாகும். நரகவாதிகள் இவ்வாறு கூறுவார்கள் என அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

﴿ وَنَادَوْاْ يَٰمَٰلِكُ لِيَقْضِ عَلَيْنَا رَبُّكَۖ قَالَ إِنَّكُم مَّٰكِثُونَ ۝٧٧ ﴾ [الزخرف: ٧٧]

“மேலும், அவர்கள் (நரகத்தில்) “யா மாலிக்” உமது இறைவன் எங்களை முடித்து விடட்டுமே!” என்று சப்தமிடுவார்கள் அதற்கு அவர் “நிச்சயமாக நீங்கள் (இங்கு) நிலைத்து இருக்க வேண்டியவர்களே” என்று கூறுவார்.” (ஸூரா அஜ்ஜுக்ருப் : 77)

மலைக்குப் பொறுப்பான ஒரு மலக்கும் இருக்கின்றார். நபியவர்கள் தமது சமுதாயத்தினரிடமிருந்து பல கொடுமைகளைச் சந்தித்த பின்னர், அவர் நபியவர்களிடம் வந்து இவ்வாறு கேட்டார்: நீங்கள் நாடினால், நான் இவ்விரு மலைகளையும் இணைத்து (அவர்களை அழித்து). அதற்கு நபியவர்கள், “இல்லை. அவர்களது வழித்தோன்றல்களில் அல்லாஹ்வை மாத்திரம், இணைகற்பிக்காமல் வணங்குபவர்கள் வருவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்” என்று கூறினார்கள்.

மேகங்களை விரட்டிக் கொண்டு. அல்லாஹ் நாடும் இடத்திற்கு அவற்றைக் கொண்டு செல்லும் பொறுப்பு வழங்கப்பட்ட சில மலக்குகளும் உள்ளனர். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱلزَّٰجِرَٰتِ زَجْرًا ۝٢ ﴾ [الصافات: ٢]

“பலமாக விரட்டுபவர்கள் மீது சத்தியமாக,” (ஸூரா அஸ்ஸாப்பாத் : 02)

அல்லாஹ்வின் அடியார்களே! மலக்குகள் விசுவாசிகளை நேசிக்கின்றார்கள். அவர்களுக்காக துஆக் கேட்கவும், பாவமன்னிப்புக் கேட்கவும் செய்கின்றார்கள். அர்ஷை சுமந்துகொண்டிருக்கும் மலக்குகள் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ ٱلَّذِينَ يَحْمِلُونَ ٱلْعَرْشَ وَمَنْ حَوْلَهُۥ يُسَبِّحُونَ بِحَمْدِ رَبِّهِمْ وَيُؤْمِنُونَ بِهِۦ وَيَسْتَغْفِرُونَ لِلَّذِينَ ءَامَنُواْۖ رَبَّنَا

وَسِعْتَ كُلَّ شَيْءٍ رَّحْمَةً وَعِلْمًا فَٱغْفِرْ لِلَّذِينَ تَابُواْ وَٱتَّبَعُواْ سَبِيلَكَ وَقِهِمْ عَذَابَ ٱلْجَحِيمِ ۝٧ رَبَّنَا

وَأَدۡخِلۡهُمۡ جَنَّٰتِ عَدۡنٍ ٱلَّتِي وَعَدتَّهُمۡ وَمَن صَلَحَ مِنۡ ءَابَآئِهِمۡ وَأَزۡوَٰجِهِمۡ وَذُرِّيَّٰتِهِمۡۚ إِنَّكَ أَنتَ ٱلۡعَزِيزُ ٱلۡحَكِيمُ ۝٨ وَقِهِمُ ٱلسَّيِّـَٔاتِۚ وَمَن تَقِ ٱلسَّيِّـَٔاتِ يَوۡمَئِذٖ فَقَدۡ رَحِمۡتَهُۥۚ وَذَٰلِكَ هُوَ ٱلۡفَوۡزُ ٱلۡعَظِيمُ ۝٩ ﴾ [غافر: ٧-٩]

"அர்ஷை சுமந்து கொண்டிருப்பவர்களும், அதைச் சுற்றியுள்ளவர்களும் தங்கள் இறைவனின் புகழைக் கொண்டு அவனைத் தஸ்பீஹ் செய்து கொண்டும் இருக்கிறார்கள் அவன் மேல் ஈமான் கொண்டவர்களாக மற்ற ஈமான் கொண்டவர்களுக்காக மன்னிப்புக் கோருகின்றனர்: "எங்கள் இறைவனே! நீ ரஹ்மத்தாலும், ஞானத்தாலும், எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து இருக்கிறாய்! எனவே, பாவமீட்சி கோரி, உன் வழியைப் பின்பற்றுபவர்களுக்கு, நீ மன்னிப்பளிப்பாயாக. இன்னும் அவர்களை நரக வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக! "எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு வாக்களித்திருக்கும், நிலையான சுவர்க்கத்தில், அவர்களையும், அவர்கள் மூதாதையர்களிலும், அவர்கள் மனைவியர்களிலும், அவர்கள் சந்ததியார்களிலும் நன்மை செய்தோரையும் பிரவேசிக்கச் செய்வாயாக. நிச்சயமாக நீ தான் (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன். "இன்னும், அவர்களைத் தீமைகளிலிருந்து காப்பாயாக! அந்நாளில் நீ யாரை தீமைகளிலிருந்து காத்துக் கொள்கிறாயோ, அவர்களுக்கு நிச்சயமாக நீ அருள் புரிந்து விட்டாய் - அதுவே மகத்தான வெற்றியாகும்" (என்றும் கூறுவர்)." (ஸூரா அல்முஃமின் : 7-9)

பள்ளிவாசலில் தொழுகையை எதிர்பார்த்திருப்பவர்களுக்காக மலக்குகள், "யா அல்லாஹ்! அவருக்கு பாவமன்னிப்பு வழங்கு! யா அல்லாஹ் அவருக்கு அருள்புரி!" எனப் பாவமன்னிப்புக் கேட்பார்கள்.[14]

பள்ளிவாசலில் ஆரம்ப வரிசைகளில் தொழுபவர்களுக்காக மன்னிப்பையும், அருளையும் கேட்டு மலக்குகள் பிரார்த்திப்பார்கள்.[15]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ்வும், மலக்குளும் ஆரம்ப ஸப்புகளுக்கு ஸலவாத் சொல்லுவார்கள்." அதாவது, மலக்குகள் அவர்களுக்காக பாவமன்னிப்பையும், அருளையும் கொண்டு பிரார்த்திப்பார்கள்.

[14] அபூ தாவூத் : 469, திர்மிதி : 330, நஸாஈ : 733, இப்னு மாஜஹ் : 799
[15] அபூ தாவூத் : 674, நஸாஈ : 646, இப்னு மாஜஹ் : 997

மேலும், மலக்குகள், மக்களுக்கு நல்லவற்றைக் கற்றுக்கொடுப்பவர்களுக்காக ஸலவாத் கூறுவார்கள். அதாவது, அவர்களுக்கு உயர்வான அந்தஸ்தும், சிறப்பும் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ உமாமா அல்பாஹிலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “நிச்சயமாக அல்லாஹ்வும், மலக்குகளும், வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவர்களும் பொந்தில் இருக்கும் எறும்பு, மீன்கள் ஆகியவை உட்பட, மக்களுக்கு நன்மையைக் கற்றுக்கொடுப்பவர்களுக்கு ஸலவாத் கூறுகின்றனர்.”[16]

தனது சகோதர முஸ்லிமைத் தாக்குவதற்காக, இரும்பையோ, ஆயுதத்தையோ தூக்குபவனை மலக்குமார்கள் சபிக்கின்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “யார் தனது சகோதரனை நோக்கி ஓர் ஆயுதத்தைக் கொண்டு சைகினை செய்கின்றாரோ, அவர் அதை விடும் வரை மலக்குகள் அவரை சபித்துக்கொண்டே இருப்பார்கள். அது அவரது கூடப்பிறந்த சகோதரனாக இருந்தாலும் சரியே!”[17]

மலக்குமார்கள் விசுவாசிகளுடன் பஜ்ர் தொழுகையில் கலந்துகொள்கின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ أَقِمِ ٱلصَّلَوٰةَ لِدُلُوكِ ٱلشَّمۡسِ إِلَىٰ غَسَقِ ٱلَّيۡلِ وَقُرۡءَانَ ٱلۡفَجۡرِۖ إِنَّ قُرۡءَانَ ٱلۡفَجۡرِ كَانَ مَشۡهُودٗا ٧٨ ﴾ [الإسراء: ٧٨]

“(நபியே!) சூரியன் (உச்சியில்) சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும் வரை (ளுஹ்ரு, அஸ்ரு, மஃரிப், இஷா) தொழுகையை நிலை நிறுத்துவீராக் இன்னும் ஃபஜ்ருடைய தொழுகையையும் (நிலைநிறுத்துவீராக) நிச்சயமாக ஃபஜ்ரு தொழுகை சான்று கூறுவதாகயிருக்கிறது.” (ஸூரா அல் இஸ்ரா : 78)

அதற்கு குர்ஆன் எனப் பெயர் கூறப்படக் காரணம், ஏனைய தொழுகைகளை விட அதில் நீண்டநேரம் அல்குர்ஆன் ஓதுவது வலியுறுத்தப்பட்டுள்ளதும், பொதுவாகவே அதில் அல்குர்ஆன் ஓதுவது சிறப்பாக இருப்பதுமாகும். ஏனெனில், பகல் நேர, இரவுநேர மலக்குகள் அனைவருமே அந்தத் தொழுகைக்கு சமுகமளிக்கின்றார்கள்.

[16] திர்மிதி : 2685
[17] முஸ்லிம் : 2616

சில மலக்குகள் எப்போதும் அல்லாஹ்வுக்காக வணக்கங்களில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “வானம் சத்தமிட்டுவிட்டது. அதற்கு சத்தமிடுவதற்கான உரிமையுள்ளது. (ஏனெனில்) அதில் நான்கு விரல்கள் வைக்கும் அளவு ஓர் இடமிருந்தாலும், அங்கும் ஒரு மலக்கு, ஸுஜூத் செய்தவராக தனது நெற்றியை அல்லாஹ்வுக்காக வைத்துக் கொண்டிருப்பார்.”[18]

விசுவாசியே! அவ்வளவு விசாலமான வானமும், வணக்கத்தில் ஈடுபடும் அதிக மலக்குகளின் காரணத்தினால் நெரிசலடைகின்றது என்பதைப் பாருங்கள்! அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

சுருக்கம் என்னவென்றால், மலக்குமார்கள், அல்லாஹ்வால் தமக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள பிரபஞ்ச விடயங்களை செயற்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுகின்றார்கள். இதனாலேயே அல்லாஹ் மலக்குமார்களைத் தூதர்கள் என்று கூறியுள்ளான். ஏனெனில், அவர்கள் அல்லாஹ் கொடுத்து அனுப்பியுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றார்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ ٱلۡحَمۡدُ لِلَّهِ فَاطِرِ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ جَاعِلِ ٱلۡمَلَٰٓئِكَةِ رُسُلًا أُوْلِيٓ أَجۡنِحَةٖ مَّثۡنَىٰ وَثُلَٰثَ وَرُبَٰعَۚ يَزِيدُ فِي ٱلۡخَلۡقِ مَا يَشَآءُۚ إِنَّ ٱللَّهَ عَلَىٰ كُلِّ شَيۡءٖ قَدِيرٞ ١ ﴾ [فاطر: ١]

“அல்ஹம்து லில்லாஹ் - எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே வானங்களையும், பூமியையும் படைத்தவன் இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான்” (ஸூரா பாதிர் : 01)

அல்லாஹ்வின் அடியார்களே! மலக்குமார்களின் மகத்துவம் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் பணிகள் என்பவற்றின் காரணமாக அல்லாஹ் அவர்களைக் கொண்டு சத்தியம் செய்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱلۡمُدَبِّرَٰتِ أَمۡرٗا ٥ ﴾ [النازعات: ٥]

“ஒவ்வொரு காரியத்தையும் நிர்வகிப்பவர்(களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக-” (ஸூரா அந்நாஜிஆத் : 05)

[18] திர்மிதி : 2312, இப்னு மாஜஹ் : 4190

இது அவர்களது சிறப்பை உணர்த்துகின்றது. இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : மலக்குமார்களைப் பொறுத்தவரை, அவர்களது விடயம் மிகக் கண்ணியமானது. இவ்வுலகை நிர்வகிப்பதில் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَٱلۡمُدَبِّرَٰتِ أَمۡرٗا ۝٥ ﴾ [النازعات: ٥]

"ஒவ்வொரு காரியத்தையும் நிர்வகிப்பவர்(களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக-" (ஸூரா அந்நாஜிஆத் : 05)

மேலும் கூறுகின்றான்:

﴿ فَٱلۡمُقَسِّمَٰتِ أَمۡرًا ۝٤ ﴾ [الذاريات: ٤]

"(பூமியிலுள்ளோருக்கு விதியானவற்றை அல்லாஹ்வின்) கட்டளைப்படி பங்கிடுவோர் மீதும் சத்தியமாக" (ஸூரா அத்தாரியாத் : 4)

அல்லாஹ் தஆலா தனது வேதங்களில் அவர்கள் பற்றிய செய்திகளையும், அவர்களது வகைகளையும் அதிகமாகவே கூறியுள்ளான். அவர்களது தாக்கங்கள் இப்பிரபஞ்சத்தில் இருக்கின்றன.

விசுவாசிகளே! இது மலக்குமார்களை ஈமான் கொள்வது பற்றி பயனுள்ள ஓர் அறிமுகமாகும். அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

<u>இரண்டாம் குத்பா</u>

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்! மலக்குமார்களை ஈமான் கொள்வது பல்வேறு பயன்களைத் தருகின்றது:

1. அல்லாஹ்வின் மகத்துவம், பலம் மற்றும் அதிகாரம் பற்றி அறிநதுகொள்ளல். ஏனெனில் பிரமாண்டம் மிக்க ஒரு படைப்பு, படைப்பாளன் பிரமாண்டமானவன் என்பதை அறிவிக்கின்றது,

2. மனிதர்கள் விடயத்தில் கவனம் செலுத்துவதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தல். அதாவது, அவன் மலக்குமார்களில் சிலரை நியமித்து மனிதர்களைப் பாதுகாத்தல், அவர்களது அமல்களைப் பதிவுசெய்துவைத்தல் போன்ற பல்வேறு நலவுகளைச் செய்கின்றான்.

3. மலக்குமார்கள் மேற்கொள்ளும் வணக்கவழிபாடுகளுக்காக அவர்களை நேசித்தல்.

அறிந்துகொள்ளுங்கள் - அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும் - மனிதர்கள் ஸாலிஹானவர்கள் மலக்குகளை விடச் சிறந்தவர்கள். இதுவே அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் கருத்தாகும். ஏனெனில், மனிதர்கள் தம்மிடம் இயல்பாக உள்ள இச்சைகளை எதிர்த்து, அதனை அடக்குகின்றார்கள். அவர்களிடம் பாவங்களை ஏவும் ஆத்மாவும் உண்டு. அவர்களை வழிகெடுக்கும் ஷைத்தான்களும் உண்டு. ஆனால் மலக்குகள் அவ்வாறல்ல. அவர்கள் இயல்பாகவே, அல்லாஹ்வை வழிப்படவும், அவனது கட்டளையில் நிலையாக நிற்கவும் செய்பவர்கள். ஷைத்தான்கள் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தமாட்டார்கள். எனவே, மனிதர்களில் யாராவது இறைவழிப்பாட்டில் உறுதியாக இருந்து, தனது மனோஇச்சைகளைக் கட்டுப்படுத்துகின்றாரோ, அவர் மலக்குமார்களை விடச் சிறந்தவராவார்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஊன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம்

செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

வேதங்களை விசுவாசம் கொள்ளல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும் நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! எனக்கும் உங்களுக்கும் தக்வாவைக் கொண்டு உபதேசிக்கின்றேன். அது ஆரம்பத்திலும் இறுதியிலும் வந்து அனைவரதும் உபதேசமாகும்.

﴿ وَلَقَدْ وَصَّيْنَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَـٰبَ مِن قَبْلِكُمْ وَإِيَّاكُمْ أَنِ ٱتَّقُوا۟ ٱللَّهَ ﴾ [النساء: ١٣١]

“உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசம் செய்தோம்” (அல்குர்ஆன் : 4:131)

எனவே அவனை அஞ்சி எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! அவனுக்குக் கட்டுப்படுங்கள்! மாறு செய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள் இறைவனால் அருளப்பட்ட வேதங்களை விசுவாசம் கொள்வது இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். அது ஈமானின் மூன்றாவது தூணாகும். தனது படைப்புகள் மீது கொண்ட அருளின் காரணமாக, அவர்களுக்கு நேர்வழிகாட்டி,

அவர்களை ஈருலக சுபீட்சத்தையும் அடையச் செய்வதற்காகவேண்டி ஒவ்வொரு தூதருடனும் ஒரு வேதத்தை கொடுத்து அனுப்பினான்.

﴿ وَإِنِ ٱمۡرَأَةٌ خَافَتۡ مِنۢ بَعۡلِهَا نُشُوزًا أَوۡ إِعۡرَاضًا فَلَا جُنَاحَ عَلَيۡهِمَآ أَن ﴾ [الحديد: ٢٥]

"நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம் அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக, அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கினோம்" (அல்குர்ஆன் : 57:25)

இறக்கப்பட்ட அனைத்து வேதங்களையும் ஈமான் கொள்ளுமாறு அல்லாஹ் கட்டாயப்படுத்தி உள்ளான்.

﴿ وَأُحۡضِرَتِ ٱلۡأَنفُسُ ٱلشُّحَّۚ وَإِن تُحۡسِنُواْ وَتَتَّقُواْ فَإِنَّ ٱللَّهَ كَانَ بِمَا تَعۡمَلُونَ خَبِيرٗا ١٢٨ وَلَن تَسۡتَطِيعُوٓاْ أَن تَعۡدِلُواْ بَيۡنَ ٱلنِّسَآءِ وَلَوۡ حَرَصۡتُمۡۖ فَلَا تَمِيلُواْ كُلَّ ٱلۡمَيۡلِ فَتَذَرُوهَا كَٱلۡمُعَلَّقَةِۚ وَإِن ﴾ [البقرة: ١٣٦]

"(முஃமின்களே!)"நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம் அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம் இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்" என்று கூறுவீர்களாக." (அல்குர்ஆன் : 2:136)

தனது நபியைப் பார்த்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَكَانَ ٱللَّهُ عَلَىٰ ذَٰلِكَ قَدِيرٗا ١٣٣ مَّن ﴾ [الشورى: ١٥]

"இன்னும், "அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களை நான் நம்புகிறேன்" என்று கூறுவீராக! (அல்குர்ஆன் : 42:15)

இறை விசுவாசிகளே! வேதங்களை விசுவாசம் கொள்வது ஏழு அம்சங்களை உள்ளடக்கும்.

1. அவை உண்மையிலேயே அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்டது என விசுவாசம் கொள்ளல், இறைவிசுவாசிகளின் பண்புகள் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

 ﴿ ١٣٠ وَلِلَّهِ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلْأَرْضِۗ وَلَقَدْ وَصَّيْنَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَٰبَ مِن ﴾ [البقرة: ٢٨٥]

 “(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார் (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர் இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்” (அல்குர்ஆன் : 2:285)

 வேதங்கள் அருளப்பட்டது வஹியின் ஊடாகவே! வானத்திலிருந்து நபிமார்களுக்கு வஹியை இறக்கி வைக்கும் பொறுப்பை சுமந்துள்ள ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வேதங்களை வஹியாக அறிவிக்க, ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஒவ்வொரு நபிக்கும் அவருக்கே உரிய வேதத்தை எத்திவைத்தார்கள்.

2. அவற்றில் நாம் பெயர் அறிந்துள்ளவற்றை அவ்வாறே ஈமான் கொள்ளல். அவை ஆறாகும்: மூஸா அலைஹிஸ்ஸலாம், இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஸஹுஃ/புகள், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கப்பட்ட தவ்ராத், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கப்பட்ட இன்ஜீல், தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஸபூர் மற்றும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அல்குர்ஆன் என்பவையே அவையாகும். சில அறிஞர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸஹுஃ/ப் தான் தவ்ராத் என்றும் கூறுவர். அப்படியாயின் பெயர் குறிப்பிடப்பட்ட வேதங்கள் ஐந்தாகும்.

 பெயர் குறிப்பிடப்படாத வேதங்களைப் பொறுத்தவரை, பொதுப்படையாக அவற்றை ஈமான் கொள்வோம்.

3. அல்லாஹ் தனது நபிமார்களுக்கு இறக்கிய அசல் வேதத்தையே விசுவாசம் கொள்ள வேண்டுமே அன்றி, அவற்றில் திரிபுபடுத்தப்பட்டவையை அல்ல. உதாரணமாக, அல்லாஹ் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கிய தௌராத்தையும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இறக்கிய இன்ஜீலையும் ஈமான் கொள்வோம், அவையே உண்மையான தவ்ராத்தும் இன்ஜீலும் ஆகும். இன்று யூத, கிறிஸ்தவர்களிடம் பரவலாக உள்ள தவ்ராத்தும்

இன்ஜீலும் அல்லாஹ் மூஸா, ஈஸா (அலை) ஆகியோருக்கு இறக்கிய அசலான வேதங்கள் அல்ல. அவர்கள் அதே பெயரை வைத்திருந்தாலும் சரியே! மாறாக, இன்று வேதக்காரர்களின் கையில் உள்ளவை சில மனிதர்கள் தமது மூதாதையோரிடம் இருந்து கேட்டவைகளை எழுதி வைத்தது தான். அவற்றில் சரி, பிழை இரண்டுமே உள்ளன. பின்பு, பின் வந்தோர் இவற்றை அசல் தவ்ராத், இன்ஜீலுடன் இணைத்து விட்டனர், இவ்வாறே பல நூற்றாண்டுகள் கடந்து விட்டன. அவர்களும் வழிகெட்டு, ஏனையோரையும் வழிகெடச் செய்துவிட்டார்கள்.

நபிமார்களின் வேதங்கள் பாதுகாக்கப்படாமல் வீணாகிப் போனபோது அல்லாஹ் நபி முஹம்மது (ஸல்) செல்லும் அவர்களை, அல்குர்ஆனைக் கொடுத்து அனுப்பினான். திரிபுபடுத்தப்பட்டு, வீணாகிப் போகாமல் அதைப் பாதுகாத்தான்.

﴿ ١٣٠ وَلِلَّهِ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِ ﴾ [الحجر: ٩]

“நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலனாகவும் இருக்கின்றோம்.” (அல்குர்ஆன் : 15:09)

4. அவற்றின் செய்திகளில் ஆதாரப்பூர்வமானதை உண்மைப்படுத்தல். உதாரணமாக, அல்குர்ஆனில் உள்ள செய்திகளையும், முந்தைய வேதங்களில் மாற்றப்படாத, திரிபுபடுத்தப்படாத செய்திகளையும் போல. ஆனால், அல்குர்ஆனோ, ஸுன்னாவோ ஒன்றை உண்மை என்றோ, பொய் என்றோ கூறாத பட்சத்தில் நாம் அதனை பொய்ப்பிக்கவோ உண்மைப்படுத்தவோ மாட்டோம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘வேதம் கொடுக்கப்பட்டவர்கள் உங்களுக்கு கூறுபவற்றை நீங்கள் உண்மைப்படுத்தவோ பொய்ப்படுத்தவோ வேண்டாம். நாம் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் விசுவாசிக்கின்றோம் என்று கூறிவிடுங்கள். அது பொய்யாக இருந்தால் நீங்கள் உண்மைப்படுத்தவும் இல்லை. அது உண்மையாக இருந்தால் நீங்கள் பொய்ப்பிக்கவும் இல்லை’

5. அவற்றின் சட்டங்களில் நீக்கப்படாதவற்றை நடைமுறைப்படுத்துதல். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَكَفَىٰ بِٱللَّهِ وَكِيلًا ١٣٢ إِن يَشَأۡ يُذۡهِبۡكُمۡ أَيُّهَا ٱلنَّاسُ وَيَأۡتِ بِـَٔاخَرِينَۚ وَكَانَ ٱللَّهُ عَلَىٰ ذَٰلِكَ ﴾ [النساء: ٢٦]

“அல்லாஹ் (தன்னுடைய சட்டங்களை) உங்களுக்குத் தெளிவாக விளக்கவும், உங்களுக்கு முன் இருந்த (நல்ல)வர்கள் சென்ற (நேரான) வழிகளில் உங்களைச் செலுத்தவும், உங்களுக்கு பாவமன்னிப்பு அருளவுமே விரும்புகிறான்.” (அல்குர்ஆன் : 4:26)

﴿ أَيُّهَا ٱلنَّاسُ وَيَأۡتِ بِـَٔاخَرِينَۚ وَكَانَ ٱللَّهُ عَلَىٰ ﴾ [الأنعام: ٩٠]

“இவர்கள் யாவரையும் அல்லாஹ் நேர்வழியில் செலுத்தினான் ஆதலால், இவர்களுடைய நேர்வழியையே நீரும் பின்பற்றுவீராக” (அல்குர்ஆன் : 6:90)

நீக்கப்படாத சட்டங்களுக்கு ஒரு உதாரணம் பழிவாங்கல் சட்டங்கள் ஆகும். தவ்ராத்தைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ فَإِنَّ لِلَّهِ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِۚ وَكَانَ ٱللَّهُ غَنِيًّا حَمِيدٗا ١٣١ وَلِلَّهِ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِۚ وَكَفَىٰ بِٱللَّهِ وَكِيلًا ١٣٢ إِن يَشَأۡ يُذۡهِبۡكُمۡ أَيُّهَا ٱلنَّاسُ وَيَأۡتِ بِـَٔاخَرِينَۚ ﴾ [المائدة: ٤٥]

“அவர்களுக்கு நாம் அதில், “உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண், மூக்குக்கு மூக்கு, காதுக்கு காது, பல்லுக்குப் பல் ஆகவும் காயங்களுக்கு(ச் சமமான காயங்களாகவும்) நிச்சயமாக பழி வாங்கப்படும் என்று விதித்திருந்தோம்” (அல்குர்ஆன் : 5:45)

இந்த சட்டம் எமது மார்க்கத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஏனெனில் எமது மார்க்கம் அதற்கு மாற்றமான ஒரு சட்டத்தை கொண்டு வந்து அதை நீக்கிவிடவில்லை.

6. அவை அனைத்தும் ஒரே கொள்கையை நோக்கி அழைப்பதாக ஈமான் கொள்ளல். அதாவது, தவ்ஹீத் அர்ருபூபியா, அல் உளூஹிய்யா, அல் அஸ்மா வஸ்ஸிபாத் ஆகிய மூன்றையும் உள்ளடக்கும் தவ்ஹீதே அதுவாகும்.
7. அல்குர்ஆன் தான் முந்திய அனைத்து வேதங்களுக்கும் தீர்ப்பாகும், அவற்றை மிகைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்கும் என ஈமான் கொள்ளல். பொதுவாக அல்குர்ஆனைக் கொண்டு அவை அனைத்தும் செல்லுபடியற்றதாக மாறிவிடுகின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَتَذَرُوهَا كَٱلۡمُعَلَّقَةِۚ وَإِن تُصۡلِحُواْ وَتَتَّقُواْ فَإِنَّ ٱللَّهَ كَانَ غَفُورٗا رَّحِيمٗا ١٢٩ وَإِن ﴾ [المائدة: ٤٨]

“மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது.” (அல்குர்ஆன் : 5:48)

நீக்குதல் அல்லது மாற்றுதல் என்பது, வணக்கங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியுள்ள ஷரீஆவில் வரும். கொள்கைகளில் இந்த ‘நஸ்ஹ்’ வரமாட்டாது. கொள்கைகள் எல்லா மார்க்கங்களிலும் நிலையானது. அதுதான், அல்லாஹ்வையும், மலக்குகளையும், வேதங்களையும், தூதர்களையும், மறுமையையும், விதியின் நன்மை, தீமைகளையும் விசுவாசம் கொள்ளல்.

இப்னு தைமியா கூறுகின்றார்கள்: “அல்குர்ஆனும் இவ்வாறு தான், முன் சென்ற வேதங்களில் உள்ள அல்லாஹ்வையும் மறுமையையும் பற்றிய செய்திகளை அது உறுதிப்படுத்தியுள்ளதோடு, அவற்றை மேலும் விளக்கி ஆதாரங்கள் கொண்டு தெளிவுபடுத்தி உள்ளது. அனைத்து நபிமார்களின் நபித்துவத்தையும், ரசூல்மார்களின் தூதுத்துவத்தையும் அது உறுதிப்படுத்தி உள்ளதோடு, அனைத்து தூதர்களுக்கும் கொடுக்கப்பட்ட அடிப்படை சட்டங்களையும் உறுதிப்படுத்தியுள்ளது. வேதங்களையும், தூதர்களையும் பொய்ப்பித்தவர்களுடன் தர்கித்து அவர்களுக்குரிய தண்டனைகளையும் தெளிவுபடுத்தி உள்ளதோடு, வேதங்களை பின்பற்றுவர்களுக்கு உதவுவதாகவும் வாக்களிப்பட்டுள்ளது. அவற்றில் திரிபுபடுத்தப்பட்டு மாற்றப்பட்டவைகளையும், முன்சென்ற வேதங்களில் வேதக்காரர்கள் செய்த மாற்றங்களையும், அல்லாஹ் தெளிவுபடுத்துமாறு கூறியும் அவர்கள் மறைத்தவற்றையும் அவன் தெளிவுபடுத்தி உள்ளான். நபித்துவங்கள் கொண்டு வந்த அழகிய மார்க்கங்கள், வாழ்க்கை வழிமுறைகள் அனைத்தையும் அல்குர்ஆன் கொண்டுள்ளது. எனவே பல்வேறு விதங்களில் ஏனைய வேதங்களை விட இந்த குர்ஆனே ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக உள்ளது. அந்த வேதங்கள் உண்மையானவை என்றும், அவற்றில் திரிபுபடுத்தப்பட்டவை பொய்யானது என்பதற்கும் இந்த வேதம் சாட்சியாக உள்ளது. அல்லாஹ் நீக்கியதை நீக்கியும், நீக்காமல் வைத்தவற்றை அப்படியே வைத்தும் தீர்ப்பளிக்கக் கூடியது குர்ஆன். செய்திகளில் சாட்சியாகவும், கட்டளைகளில் தீர்ப்பளிக்கக் கூடியதாகவும் குர்ஆன் உள்ளது.

மேலும் கூறுகின்றார்: அல்குர்ஆன் தன்னிறைவானது, அதனுடையவர்களுக்கு வேறு வேதங்கள் அவசியம் இல்லை. மாறாக, வேதங்களில் உள்ள நல்ல அம்சங்களை இது உள்ளடக்கி இருப்பதோடு, தனக்கு முன்னுள்ள வேதங்களை

அது உண்மைப்படுத்தி, அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தி, அவற்றில் உள்ள உண்மைகளை ஏற்றுக்கொண்டு, திரிபுபடுத்தப்பட்டவற்றை இல்லாமல் ஆக்கி, அல்லாஹ் நீக்கியவற்றை நீக்கி, மார்க்கத்தை நிலைநாட்டி உள்ளது. பெரும்பாலானவை இவ்வாறு உள்ளன. வேதங்களில் இல்லாத மாற்றப்பட்ட மார்க்கத்தையும், நீக்கப்பட்ட சிலவற்றையும் அது இல்லாமலாக்குகின்றது. நீக்கப்படாதவற்றுடன் ஒப்பிடும்போது நீக்கப்பட்டவை குறைவானதே!

முஸ்லிம்களே! இறைவனால் அருளப்பட்ட அனைத்து வேதங்களும் ஆறு அம்சங்களில் ஒன்றுபட்டுள்ளன:

1. அவை அனைத்துமே ஒரே விடயத்தை நோக்கியே அழைத்தன. அதுவே அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதும், ஏனைய வணக்கங்களை விட்டுவிடுவதும் ஆகும். அவ்வாறு வணங்கப்படுபவை சிலைகளாகவோ, மனிதர்களாகவோ, நபிமார்களாகவோ, கற்களாகவோ அல்லது வேறு எதுவாகவோ இருக்கலாம், இந்த கோணத்தில் (அல்லாஹ்வை மாத்திரம் வணங்குதல்) எல்லா நபிமார்களது மார்க்கமும் ஒன்றாகும்.

2. நம்பிக்கைக் கோட்பாட்டின் பிரதான அம்சங்கள், அதாவது அல்லாஹ்வையும், வானவர்களையும், வேதங்களையும், தூதர்களையும் மறுமை நாளையும், விதியின் நலவு, கெடுதிகளையும் ஈமான் கொள்வது.

3. தொழுகை ஜக்காத் நோன்பு ஹஜ் போன்ற குறிப்பிட்ட சில வணக்கங்கள் மூலம் அல்லாஹ்வை வணங்குவது கடமையாக இருத்தல். எனினும் இந்த வணக்கங்கள் நிறைவேற்றப்படும் விதம், குறித்த நபி அனுப்பப்பட்டுள்ள மக்கள் சமுதாயத்திற்கு ஏற்ப வேறுபடும். உதாரணமாக தவ்ராத், இன்ஜீல், குர்ஆன் ஆகிய மூன்றுமே தொழுகையை ஏவியிருந்தாலும், நிறைவேற்றும் விதமும், நேரமும் இவற்றுக்கிடையில் வேறுபட்டு இருக்கும். ஆனாலும் இவை அனைத்தும் அந்தந்த மார்க்கங்கள் தெளிவுபடுத்திய விதத்தில் செய்யப்பட வேண்டிய, அல்லாஹ்வுக்கான வணக்கம் என்பதில் ஒன்றுபடும்.

4. மார்க்கம், பகுத்தறிவு, சொத்து, மானம், உயிர் ஆகிய ஐந்து அடிப்படை அம்சங்களைப் பாதுகாக்குமாறு ஏவியுள்ளமை.

5. நீதம் செலுத்துமாறு ஏவப்பட்டுள்ளமை.

﴿ وَإِنِ ٱمۡرَأَةٌ خَافَتۡ مِنۢ بَعۡلِهَا نُشُوزًا أَوۡ إِعۡرَاضًا فَلَا جُنَاحَ عَلَيۡهِمَآ أَن ﴾ [الحديد: ٢٥]

“நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம் அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக, அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கினோம்” (அல்குர்ஆன் : 57:25)

6. நற்குணங்கள் ஏவப்பட்டுள்ளமை, கெட்ட குணங்கள் தடுக்கப்பட்டுள்ளமை. உதாரணமாக, பெற்றோருக்கு உபகாரம் புரிதல், உறவுகளைச் சேர்ந்து நடத்தல், விருந்தாளிகளை கண்ணியப்படுத்தல், ஏழைகளுக்கும் வறியோர்களுக்கும் இரக்கம் காட்டல், நல்ல வார்த்தைகள் பேசுதல்.

அதேபோன்று அநீதி, அத்துமீறல், பெற்றோருக்கு நோவினை செய்தல், மானங்களை கீறிக் கிழித்தல், புறம் பேசுதல், பொய் கூறல், திருடல் போன்ற கெட்ட குணங்களையும் தடுத்துள்ளது.

இது வேதங்களை ஈமான் கொள்வது பற்றிய பயனுள்ள ஓர் அறிமுகமாக இருக்கும். அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் அவனது திருமறையில், அல்குர்ஆனும் தவ்ராத்தும் மிக முக்கியமான இரு வேதங்கள் எனக் கூறியுள்ளான். அல்குர்ஆனில் இவ்விருண்டும் பல இடங்களில் இணைத்துக் கூறப்பட்டுள்ளன. அதற்கான காரணம் இவ்விரண்டும் மிகச் சிறந்த வேதங்களாகவும், அவற்றின் சட்டங்கள் முழுமையானதாகவும் இருப்பதாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! எல்லா வேதங்களையும் விட மிக மகத்தானது சந்தேகத்துக்கிடமின்றி அல்குர்ஆன் ஆகும். இதனாலேயே ஏனைய வேதங்களை விட மிகைத்ததாக இதனை அல்லாஹ் ஆக்கியுள்ளான். ஏனைய வேதங்களில் இல்லாத அற்புதம், அறிவு, தெளிவு என்பவை இதில் உள்ளன.

விசுவாசிகளே! அல்குர்ஆன் அல்லாஹ் எதார்த்தமாக பேசிய பேச்சாகும். பின்பு, ஜிப்ரீல் (அலை) அவர்கள் அதனை நபியவர்களுககு எத்திவைக்க, நபி அவர்கள் அதனை நபித்தோழர்களுக்கு எத்தி வைத்தார்கள். பின்பு அது உள்ளங்களில் பாதுகாக்கப்பட்டது. பின்பு ஏடுகளிலும் இலைகளிலும் பாதுகாக்கப்பட்டது. பின்பு

உஸ்மான் (ரலி) அவர்களது ஆட்சி காலத்தில் அது ஒரு நூலாக்கப்பட்டது. அந்தப் பிரதியிலிருந்து இன்று வரை பிரதி செய்யப்படுகின்றது.

முஸ்லிம்களே! இறுதி வேதமாகிய இந்த குர்ஆன் இறக்கப்படுவதற்கான பல்வேறு காரணங்களை அல்லாஹ் தெளிவுபடுத்தி உள்ளான்.

உதாரணமாக,

1. அதன் வசனங்களை ஆராய்ந்து, புத்தி உள்ளவர்கள் படிப்பினை பெற்று, பின்பு இறையச்சம் அடைதல்.

﴿ وَلَن تَسۡتَطِيعُوٓاْ أَن تَعۡدِلُواْ بَيۡنَ ٱلنِّسَآءِ وَلَوۡ حَرَصۡتُمۡۖ فَلَا ﴾ [ص: ٢٩]

(நபியே!) பாக்கியம் பெற்ற இவ்வேதத்தை உம்மீது அருளியுள்ளோம் - அவர்கள் இதன் வசனங்களைக் கவனித்து ஆய்வதற்காகவும், அறிவுடையோர் நல்லுணர்வு பெறுவதற்காகவும். (ஸாத் : 29)

﴿ وَكَذَٰلِكَ أَنزَلۡنَٰهُ قُرۡءَانًا عَرَبِيّٗا وَصَرَّفۡنَا فِيهِ مِنَ ٱلۡوَعِيدِ لَعَلَّهُمۡ يَتَّقُونَ أَوۡ يُحۡدِثُ لَهُمۡ ذِكۡرٗا ١١٣ ﴾ [طه: ١١٣]

மேலும், இவ்விதமாகவே இந்த குர்ஆனை அரபி மொழியில் நாம் இறக்கி வைத்தோம் அவர்கள் பயபக்தியுடையவர்களாக ஆகும் பொருட்டு, அல்லது நல்லுபதேசத்தை அவர்களுக்கு நினைவூட்டும் பொருட்டு, இதில் அவர்களுக்கு எச்சரிக்கையை விவரித்திருக்கின்றோம். (தாஹா : 113)

2. பயபக்தி உடையோருக்கு நற்கூலி இருப்பதாகவும் நற்செய்தி கூறுவதுடன் புறக்கணிப் போருக்கு தண்டனை இருப்பதாக எச்சரித்தல்

﴿ فَإِنَّمَا يَسَّرۡنَٰهُ بِلِسَانِكَ لِتُبَشِّرَ بِهِ ٱلۡمُتَّقِينَ وَتُنذِرَ بِهِۦ قَوۡمٗا لُّدّٗا ٩٧ ﴾ [مريم: ٩٧]

(நபியே!) நாம் இ(வ் வேதத்)தை உம்முடைய மொழியில் (அருளி) எளிதாக்கியதெல்லாம், இதைக் கொண்டு நீர் - பயபக்தியுடையவர்களுக்கு நன்மாராயங் கூறவும், முரண்டாக வாதம் செய்யும் மக்களுக்கு இதைக் கொண்டு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்குமேயாகும். (மர்யம் : 97)

3. மக்களுக்கு மார்க்க சட்டங்களை தெளிவுபடுத்தல்.

﴿ بِٱلۡبَيِّنَٰتِ وَٱلزُّبُرِۗ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلذِّكۡرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيۡهِمۡ وَلَعَلَّهُمۡ يَتَفَكَّرُونَ ٤٤ ﴾ [النحل: ٤٤]

நபியே!) மனிதர்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் சிந்திப்பதற்காகவும் உமக்கு இவ்வேதத்தை நாம் அருளினோம். (நஹ்ல் : 44)

﴿ وَمَآ أَنزَلۡنَا عَلَيۡكَ ٱلۡكِتَٰبَ إِلَّا لِتُبَيِّنَ لَهُمُ ٱلَّذِي ٱخۡتَلَفُواْ فِيهِ ﴾ [النحل: ٦٤]

(நபியே!) அன்றியும், அவர்கள் எ(வ் விஷயத்)தில் தர்க்கித்துக் கொண்டிருந்தார்களோ அதை நீர் தெளிவாக்குவதற்காகவே உம் மீது இவ்வேதத்தை இறக்கினோம் (நஹ்ல் : 46)

4. விசுவாசிகளை ஈமான், நேர்வழி என்பவற்றில் உறுதிப்படுத்தல் மக

﴿ قُلۡ نَزَّلَهُۥ رُوحُ ٱلۡقُدُسِ مِن رَّبِّكَ بِٱلۡحَقِّ لِيُثَبِّتَ ٱلَّذِينَ ءَامَنُواْ وَهُدٗى وَبُشۡرَىٰ لِلۡمُسۡلِمِينَ ١٠٢ ﴾ [النحل: ١٠٢]

(நபியே!) "ஈமான் கொண்டோரை உறுதிப்படுத்துவதற்காகவும், (இறைவனுக்கு முற்றிலும் வழிப்பட்டோராகிய) முஸ்லிம்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நன்மாராயமாகவும் உம்முடைய இறைவனிடமிருந்து உண்மையைக் கொண்டு ரூஹுல் குதுஸ் (என்னும் ஜிப்ரீல்) இதை இறக்கி வைத்தார்" என்று (அவர்களிடம்) நீர் கூறுவீராக. (நஹ்ல் : 102)

5. மக்களுக்கு மத்தியில் இதனை அல்குர்ஆனை கொண்டு தீர்ப்பளித்தல்

﴿ إِنَّآ أَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ لِتَحۡكُمَ بَيۡنَ ٱلنَّاسِ بِمَآ أَرَىٰكَ ٱللَّهُۚ ﴾ [النساء: ١٠٥]

(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம் (நிஸா : 105)

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾ [الأحزاب: ٥٦]

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக! யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக! யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக !அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! எங்களுக்கும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் யாரெல்லாம் தீங்கு செய்ய நினைக்கின்றார்களோ, அவர்களுக்குள் பிரச்சனையை ஏற்படுத்தி விடுவாயாக! அவர்களது சதியை அவர்களுக்கே திருப்பி விடுவாயாக! யா அல்லாஹ்! விலை உயர்வு, தொற்றுநோய், வட்டி, விபச்சாரம், பூகம்பங்கள், சோதனைகள், வெளிப்படையான மற்றும் மறைமுகமான கெட்ட குழப்பங்கள் அனைத்தையும் விட்டும் பொதுவாக அனைத்து முஸ்லீம் நாடுகளையும், குறிப்பாக எமது இந்த நாட்டையும் பாதுகாப்பாயாக! யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

தூதர்களை விசுவாசம் கொள்ளல் - I

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்துள்ள அருட்கொடைகளில் ஒன்று என்னவென்றால், அவர்களிடம் தூதர்களை அனுப்பி, அவர்களது உலக மற்றும் மார்க்க விவகாரங்களில் அவர்களுக்கு தேவையான அம்சங்களை எத்தி வைக்கவும், உலக சுபீட்சம் மற்றும் மறுமை வெற்றி ஆகியவற்றிற்கான வழிகளை காட்டவும் செய்ததாகும். ஏனெனில் மனிதர்களுக்கு எவ்வளவுதான் அறிவு, விவேகம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களது பகுத்தறிவு தனியாக நின்று அவர்களது நலன்களை அழகிய விதத்தில், சீராக செயல்படுத்திக் கொடுக்கும்,

ஒருமைப்படுத்தப்பட்ட பொதுவான சட்டங்களை உருவாக்கிட முடியாது. மனித பகுத்தறிவு குறையுள்ளதாக இருப்பதே இதன் காரணம். ஆனால், அல்லாஹ்வைப் பொறுத்தவரை ஞானமும் நுட்பமும் மிக்கவன். தன் படைப்பின் நலன்களை அறிந்தவன்.

﴿ أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ ٱللَّطِيفُ ٱلْخَبِيرُ ﴿١٤﴾ ﴾ [الملك: ١٤]

"(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன் யாவற்றையும் நன்கு தெரிந்தவன்." (அல் முல்க் : 14)

எனவே தூதர்கள் என்போர் அல்லாஹ்வுக்கும் மக்களுக்கும் இடை நடுவில் இருந்து கொண்டு அவனது மார்க்கத்தை அவர்களுக்கு எத்தி வைப்பவர்கள்.

﴿ يَخْسِفَ بِكُمُ ٱلْأَرْضَ فَإِذَا هِىَ تَمُورُ ﴿١٦﴾ أَمْ أَمِنتُم مَّن ﴾ ﴿١٧﴾المائدةفَٱمْشُوا۟ لَكُمُ جَعَلَ كَيْفَ

"தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்" (அல் மாஇதா : 67)

1. தூதுவர்களுக்கு இப்படியான முக்கிய ஒரு பங்களிப்பு இருப்பதால், அவர்களை ஈமான் கொள்வது எல்லா மார்க்கங்களிலும் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக இருந்தது. இஸ்லாமும் தூதர்களை ஈமான் கொள்வது ஈமானின் ஓர் அடிப்படை எனவும், ஒரு அடியானின் ஈமான் அது இல்லாமல் சரியாக மாட்டாது எனவும் உறுதிப்படக் கூறி உள்ளது.

﴿ أَوَلَمْ يَرَوْا۟ إِلَى ٱلطَّيْرِ فَوْقَهُمْ صَٰٓفَّٰتٍ وَيَقْبِضْنَ ۚ مَا يُمْسِكُهُنَّ إِلَّا ٱلرَّحْمَٰنُ ۚ إِنَّهُۥ بِكُلِّ شَىْءٍۭ بَصِيرٌ ﴿١٩﴾ أَمَّنْ هَٰذَا

ٱلَّذِى هُوَ ﴾ ﴿١٧﴾البقرةفَٱمْشُوا۟ ٱلَّذِى ٱلْأَرْضَ ٱلْخَبِيرُ كَيْفَ

"(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார் (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர் இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: "நாம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை" (அல் பகரா : 285)

2. தூதர்களை ஈமான் கொள்வதில் உள்ளடங்கும் அம்சங்களில் ஒன்று, நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தான் முதலாவது தூதர் என ஈமான் கொள்வதாகும்.

﴿ وَأَسِرُّواْ قَوۡلَكُمۡ أَوِ ٱجۡهَرُواْ بِهِۦٓۖ إِنَّهُۥ عَلِيمُۢ بِذَاتِ ٱلصُّدُورِ ١٣ أَلَا ﴾ ١٧النساء فَٱمۡشُواْ ١٤ جَعَلَ ٱللَّطِيفُ كَيۡفَ

"(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம்." (அந் நிஸா : 163)

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் "ஷபாஆ" தொடர்பான நபிமொழியில், மக்கள் ஆதம் (அலை) அவர்களிடம் சென்று, அவர்களுக்காகப் பரிந்துரை செய்யுமாறு வேண்டுவார்கள் எனவும், அப்போது ஆதம் (அலை) அவர்கள் பின்வாங்கி விட்டு, "நூஹிடம் செல்லுங்கள். அவர் அல்லாஹ் பூமியில் உள்ளவர்களுக்கு அனுப்பிய முதல் தூதர்" [19] என்று கூறுவார்கள் எனவும் வந்துள்ளது.

3. நபிமார்கள் மற்றும் தூதர்கள் அனைவருக்கும் இறுதியானவர், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்றும் ஈமான் கொள்வதும் ரஸூல்மார்களை ஈமான் கொள்வதில் உள்ளடங்கும் ஒரு அம்சமாகும்.

﴿ وَنُفُورٍ ٢١ أَفَمَن يَمۡشِي مُكِبًّا عَلَىٰ وَجۡهِهِۦٓ أَهۡدَىٰٓ أَمَّن يَمۡشِي سَوِيًّا عَلَىٰ صِرَٰطٖ مُّسۡتَقِيمٖ ٢٢ قُلۡ هُوَ ٱلَّذِيٓ
أَنشَأَكُمۡ ﴾ ١٧الأحزاب فَٱمۡشُواْ وَهُوَ هُوَ كَيۡفَ

"முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார் மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்." (அல் அஹ்ஸாப் : 40)

4. ரஸூல்மார்களை ஈமான் கொள்வதில் உள்ளடங்கும் இன்னும் ஒரு அம்சம் என்னவென்றால், எந்த சமுதாயமாக இருந்தாலும் அவர்களிடம் தனியான ஒரு சரீஆவைக் கொண்டு ஒரு ரஸூலையோ, அல்லது முன்வந்த ஒரு சரீஆவைப்

[19] புகாரி: 4476, முஸ்லிம் : 193

புதுப்பிக்கும் விதத்தில் வஹி அறிவிக்கப்படும் ஒரு நபியையோ அல்லாஹ் அனுப்பியுள்ளான் என ஈமான் கொள்வதாகும்.

﴿ وَلَقَدْ بَعَثْنَا فِي كُلِّ أُمَّةٍ رَّسُولًا أَنِ ٱعْبُدُوا۟ ٱللَّهَ وَٱجْتَنِبُوا۟ ٱلطَّٰغُوتَ ﴾

“மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், “அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள் ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்” என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்” (அந்நஹ்ல் : 36)

﴿ إِنَّآ أَرْسَلْنَٰكَ بِٱلْحَقِّ بَشِيرًا وَنَذِيرًا ۚ وَإِن مِّنْ أُمَّةٍ إِلَّا خَلَا فِيهَا نَذِيرٌ ﴿٢٤﴾ ﴾

“அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எந்த சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை.” (பாதிர் : 24)

5. அல்லாஹ்வின் அடியார்களே! இதன் இன்னுமொரு உள்ளடக்கம், அனைத்து தூதர்களின் அழைப்பும் ஒன்று என்பதுவாகும். அதுவே தவ்ஹீதுல் உலூஹிய்யாவை நோக்கிய அழைப்பாகும். சரீஆக்கள் வேறுபட்டிருந்தன. பின்வரும் வசனம் அதற்கான ஆதாரம் ஆகும்:

﴿ وَأَسِرُّوا۟ قَوْلَكُمْ أَوِ ٱجْهَرُوا۟ بِهِۦٓ ۖ إِنَّهُۥ عَلِيمٌۢ بِذَاتِ ٱلصُّدُورِ ﴿١٣﴾ أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ ﴾

الأنبياء﴿١٧﴾ فَٱمْشُوا۟ ٱلَّذِى ٱلْخَبِيرُ كَيْفَ

“(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: “நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்” என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.” (அல் அன்பியா : 25)

சட்டங்கள் வேறுபடுவது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

﴿ لِكُلٍّ جَعَلْنَا مِنكُمْ شِرْعَةً وَمِنْهَاجًا ﴾

“உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்” (அல் மாஇதா : 48)

6. தூதுவர்கள் - குறிப்பாக மன உறுதி கொண்ட தூதர்கள் - என்பவர்கள் தூதை சுமப்பதற்காக அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுமைகளை சுமப்பதற்கான சக்தியும், சிரமங்களைத் தாங்கும் பொறுமையும் வழங்கப்பட்டவர்கள் என்று ஈமான் கொள்வதும் இதன் உள்ளடக்கங்களில் ஒன்றாகும்.

﴿ ٱللَّهُ يَصۡطَفِي مِنَ ٱلۡمَلَٰٓئِكَةِ رُسُلٗا وَمِنَ ٱلنَّاسِۚ إِنَّ ٱللَّهَ سَمِيعُۢ بَصِيرٞ ﴾

"அல்லாஹ் மலக்குகளிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் தூதர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்!" (அல் ஹஜ் : 75)

7. அவர்கள் படைக்கப்பட்ட மனிதர்கள். ருபூபிய்யா மற்றும் உளூஹிய்யா பண்புகள் எந்த ஒன்றும் அவர்களுக்கு இல்லை. தூதர்களின் தலைவராகவும், அல்லாஹ்விடம் மகத்தான அந்தஸ்து உடையவராகவும் உள்ள நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

﴿ قُل لَّآ أَمۡلِكُ لِنَفۡسِي نَفۡعٗا وَلَا ضَرًّا إِلَّا مَا شَآءَ ٱللَّهُۚ وَلَوۡ كُنتُ أَعۡلَمُ ٱلۡغَيۡبَ لَٱسۡتَكۡثَرۡتُ مِنَ ٱلۡخَيۡرِ وَمَا مَسَّنِيَ ٱلسُّوٓءُۚ إِنۡ أَنَا۠ إِلَّا نَذِيرٞ وَبَشِيرٞ لِّقَوۡمٖ يُؤۡمِنُونَ ١٨٨ ﴾ [الأعراف: ١٨٨]

"(நபியே!) நீர் கூறும்: "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்து கொள்ள சக்தியில்லாதவன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக்கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது - நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை." (அல் அஃராப் : 188)

8. நோய், மரணம், உணவு மற்றும் பானம் ஆகியவற்றின் தேவை போன்ற மனித பண்புகள் அவர்களிடமும் உள்ளன. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது ரப்பை வர்ணித்து கூறியதை அல்லாஹ் இவ்வாறு கூறிக் காட்டுகின்றான்:

﴿ وَٱلَّذِي هُوَ يُطۡعِمُنِي وَيَسۡقِينِ ٧٩ وَإِذَا مَرِضۡتُ فَهُوَ يَشۡفِينِ ٨٠ وَٱلَّذِي يُمِيتُنِي ثُمَّ يُحۡيِينِ ٨١ ﴾ [الشعراء: ٧٩-٨١]

"அவனே எனக்கு உணவளிக்கின்றான் அவனே எனக்குக் குடிப்பாட்டுகிறான். நான் நோயுற்ற காலத்தில், அவனே என்னைக் குணப்படுத்துகிறான். மேலும்

அவனே என்னை மரணிக்கச் செய்கிறான் பிறகு அவனே என்னை உயிர்ப்பிப்பான்." (அஷ்ஷுஅரா : 79-81)

நபி அவர்கள் கூறினார்கள்: "நான் உங்களைப் போன்ற மனிதனே நீங்களும் மறப்பது போன்றே நானும் மறப்பேன் நான் மறந்தால் நினைவூட்டுங்கள்"[20]

9. தூதர்கள் அல்லாஹ்வின் அடிமைகளாகும். அல்லாஹ் தனது விசேட தூதர்களை புகழும் போது கூட அவர்கள் 'அடிமைகள்' என்பதை கூறியுள்ளான். நூஹ் நபியைப் பற்றி,

﴿ إِنَّهُۥ كَانَ عَبۡدٗا شَكُورٗا ٣ ﴾ [الإسراء: ٣]

"நிச்சயமாக அவர் நன்றி செலுத்தும் அடியாராக இருந்தார்" (அல் இஸ்ரா : 03) என்றும்,

இப்ராஹிம், இஸ்ஹாக் நபிகள் பற்றி,

﴿ وَٱذۡكُرۡ عِبَٰدَنَآ إِبۡرَٰهِيمَ وَإِسۡحَٰقَ وَيَعۡقُوبَ أُوْلِي ٱلۡأَيۡدِي وَٱلۡأَبۡصَٰرِ ٤٥ ﴾ [ص: ٤٥]

"(நபியே! ஆத்மீக) ஆற்றலும், அகப்பார்வையும் உடையவர்களாயிருந்த நம் அடியார்களான இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகியோரையும் நினைவு கூர்வீராக!" (ஸாத் : 45) என்றும்,

ஈஸா (அலை) பற்றி,

﴿ إِنۡ هُوَ إِلَّا عَبۡدٌ أَنۡعَمۡنَا عَلَيۡهِ وَجَعَلۡنَٰهُ مَثَلٗا لِّبَنِيٓ إِسۡرَٰٓءِيلَ ٥٩ ﴾ [الزخرف: ٥٩]

"அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை அவருக்கு நாம் அருட்கொடையைச் சொரிந்து இஸ்ராயீலின் சந்ததியாருக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம்." (அஸ் ஸுக்ருப் : 59) என்றும்,

முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றி,

﴿ تَبَارَكَ ٱلَّذِي نَزَّلَ ٱلۡفُرۡقَانَ عَلَىٰ عَبۡدِهِۦ لِيَكُونَ لِلۡعَٰلَمِينَ نَذِيرًا ١ ﴾ [الفرقان: ١]

"உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும்

[20] புகாரி: 401, முஸ்லிம் : 572

இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்." (அல் புர்கான் : 01) என்றும் அவன் கூறியுள்ளான்.

எனவே, தூதர்கள் அல்லாஹ்வின் அடிமைகள் ஆகும். துஆ, அறுத்துப் பழியிடல், நேர்ச்சை, சிரம் பணிதல் போன்ற எந்த வணக்கங்களையும் அவர்களுக்காக செய்வது கூடாது. அவை அனைத்திற்கும் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே! இது இறைவனால் அருளப்பெற்ற அனைத்து மார்க்கங்களிலும் ஏகோபித்து ஏற்கப்பட்ட கருத்து ஆகும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

10. அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! - அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும் - தூதர்களை ஈமான் கொள்வதன் இன்னும் ஒரு உள்ளடக்கம் என்னவென்றால், அல்லாஹ் சில நபிமார்களை வேறு சிலரை விடச் சிறப்பித்துள்ளான் என ஈமான் கொள்வதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَلَقَدْ فَضَّلْنَا بَعْضَ ٱلنَّبِيِّـۧنَ عَلَىٰ بَعْضٍ ﴾ [الإسراء : ٥٥]

"நபிமார்களில் சிலரை வேறு சிலரைவிடத் திட்டமாக நாம் மேன்மையாக்கியிருக்கிறோம்" (அல் இஸ்ரா : 55)

தூதர்களிலேயே மிகச்சிறந்தவர்கள் أولوا العزم எனப்படும் நபிமார்களான, நூஹ், இப்ராஹீம், மூஸா, ஈஸா (அலை) மற்றும் முஹம்மத் (ஸல்) ஆகியோர் ஆகும். அல்குர்ஆனில் சூரா அல் அஹ்ஸாப், அஷ்ஷூரா ஆகிய இரண்டு சூராக்களிலும் அல்லாஹ் அவர்களைக் கூறியுள்ளான்:

﴿ وَإِذْ أَخَذْنَا مِنَ ٱلنَّبِيِّـۧنَ مِيثَٰقَهُمْ وَمِنكَ وَمِن نُّوحٍ وَإِبْرَٰهِيمَ وَمُوسَىٰ وَعِيسَى ٱبْنِ مَرْيَمَ ۖ وَأَخَذْنَا مِنْهُم مِّيثَٰقًا غَلِيظًا ۝٧ ﴾ [الأحزاب: ٧]

"(நபியே! நம் கட்டளைகளை எடுத்துக் கூறுமாறு) நபிமார்(கள் அனைவர்)களிடமும், (சிறப்பாக) உம்மிடமும் நூஹ்ஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய குமாரர் ஈஸா ஆகியோரிடமும் வாக்குறுதி வாங்கிய போது, மிக்க உறுதியான வாக்குறுதியையே அவர்களிடம் நாம் வாங்கினோம்." (அல் அஹ்ஸாப் : 7)

﴿ ۞ شَرَعَ لَكُم مِّنَ ٱلدِّينِ مَا وَصَّىٰ بِهِۦ نُوحًا وَٱلَّذِىٓ أَوْحَيْنَآ إِلَيْكَ وَمَا وَصَّيْنَا بِهِۦٓ إِبْرَٰهِيمَ وَمُوسَىٰ وَعِيسَىٰٓ ۖ أَنْ أَقِيمُوا۟ ٱلدِّينَ وَلَا تَتَفَرَّقُوا۟ فِيهِ ۚ ﴾ [الشورى: ١٣]

"நூஹ்ஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான் ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்ராஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்" என்பதே" (அஷ்ஷூரா : 13)

விசுவாசிகளே! இந்த பத்து அம்சங்களும் ரசூல்மார்களை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்கள் ஆகும். ஒரு முஃமின் இவற்றை உறுதியாக அறிந்து, அவற்றில் ஆழமான நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போதுதான், அவனது பாதம் ஈமான் என்னும் பாதையில் உறுதியாக இருக்கும். குத்பாக்கள் சுருக்கமாக இருப்பது சுன்னா எனும் அடிப்படையில், எஞ்சி உள்ள பத்து உள்ளடக்கங்களையும் அடுத்த குத்பாவில் பார்ப்போம்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِىِّ ۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴿٥٦﴾ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம்

செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

தூதர்களை விசுவாசம் கொள்ளல் - 2

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப் படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அவன் பார்க்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வுக்கு கட்டுப்படுங்கள்! அவனுக்கு மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்துள்ள அருட்கொடைகளில் ஒன்று என்னவென்றால், அவர்களிடம் தூதர்களை அனுப்பி, அவர்களது உலக மற்றும் மார்க்க விவகாரங்களில் அவர்களுக்கு தேவையான அம்சங்களை எத்தி வைக்கவும்,

உலக சுபீட்சம் மற்றும் மறுமை வெற்றி ஆகியவற்றிற்கான வழிகளை காட்டவும் செய்ததாகும். ஏனெனில் மனிதர்களுக்கு எவ்வளவுதான் அறிவு, விவேகம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களது பகுத்தறிவு தனியாக நின்று அவர்களது நலன்களை அழகிய விதத்தில், சீராக செயல்படுத்திக் கொடுக்கும், ஒருமைப்படுத்தப்பட்ட பொதுவான சட்டங்களை உருவாக்கிட முடியாது. மனித பகுத்தறிவு குறையுள்ளதாக இருப்பதே இதன் காரணம். ஆனால், அல்லாஹ்வைப் பொறுத்தவரை ஞானமும் நுட்பமும் மிக்கவன். தன் படைப்பின் நலன்களை அறிந்தவன்.

﴿ أَلَا يَعۡلَمُ مَنۡ خَلَقَ وَهُوَ ٱللَّطِيفُ ٱلۡخَبِيرُ ١٤ ﴾ [الملك: ١٤]

"(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன் யாவற்றையும் நன்கு தெரிந்தவன்." (அல் முல்க் : 14)

எனவே தூதர்கள் என்போர் அல்லாஹ்வுக்கும் மக்களுக்கும் இடை நடுவில் இருந்து கொண்டு அவனது மார்க்கத்தை அவர்களுக்கு எத்தி வைப்பவர்கள்.

﴿ ۞ يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَۖ ﴾ [المائدة: ٦٧]

"தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்" (அல் மாஇதா : 67)

தூதுவர்களுக்கு இப்படியான முக்கிய ஒரு பங்களிப்பு இருப்பதால், அவர்களை ஈமான் கொள்வது எல்லா மார்க்கங்களிலும் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக இருந்தது. இஸ்லாமும் தூதர்களை ஈமான் கொள்வது ஈமானின் ஓர் அடிப்படை எனவும், ஒரு அடியானின் ஈமான் அது இல்லாமல் சரியாக மாட்டாது எனவும் உறுதிப்படக் கூறி உள்ளது.

﴿ ءَامَنَ ٱلرَّسُولُ بِمَآ أُنزِلَ إِلَيۡهِ مِن رَّبِّهِۦ وَٱلۡمُؤۡمِنُونَۚ كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ مِّن رُّسُلِهِۦۚ ﴾ [البقرة: ٢٨٥]

"(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார் (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர் இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: "நாம் இறை

தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை" (அல் பகரா : 285)

முஸ்லிம்களே! கடந்த உரையில் தூதர்களை விசுவாசம் கொள்வதன் 10 உள்ளடக்கங்கள் விளக்கப்பட்டன. இந்த உரையில் எஞ்சியுள்ள 10 உள்ளடக்கங்களைப் பற்றியும் பார்ப்போம்.

1. விசுவாசிகளே! தூதர்களை விசுவாசிப்பதன் இன்னுமொரு உள்ளடக்கம் என்னவென்றால், அனைத்துத் தூதர்களிலும் சிறந்தவர்கள், இறைவனின் இரு உற்ற தோழர்களாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இப்ராஹீம் (அலை) அவர்களும் ஆகும் என ஈமான் கொள்வதாகும். இருவரையும் மாத்திரமே அல்லாஹ் தனது உற்ற தோழர்களாக எடுத்துக் கொண்டுள்ளான். குல்லா (الخلة) எனப்படும் உற்ற தோழமையே, அன்பின் படித்தரங்களில் மிக உயர்ந்ததாகும். நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் தனது உற்றதோழனாக எடுத்துக் கொண்டதற்கான ஆதாரம்:

﴿ وَٱتَّخَذَ ٱللَّهُ إِبۡرَٰهِيمَ خَلِيلٗا ١٢٥ ﴾ [النساء: ١٢٥]

'அல்லாஹ் இப்ராஹீமை தனது உற்ற தோழனாக எடுத்துக் கொண்டான்' (அந் நிஸா : 125)

என்ற வசனமாகும்.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹ் தனது உற்ற தோழனாக எடுத்துக் கொண்டதற்கான ஆதாரம், நபியவர்களின் பின்வரும் கூற்றாகும் : "நிச்சயமாக அல்லாஹ் உங்கள் தோழரை (அதாவது நபியவர்கள் தம்மைக் குறிக்கின்றார்கள்) தனக்கு உற்ற தோழனாக எடுத்துக் கொண்டு விட்டான்"[21]

2. இறைத் தூதர்களை ஈமான் கொள்வதன் இன்னுமொரு உள்ளடக்கம் என்னவென்றால், இரு உற்ற தோழர்களிலும் சிறந்தவர் முஹம்மத் (ஸல்) அவர்களே என ஈமான் கொள்வதாகும். அவர்களை அல்லாஹ் நபிமார்கள் உட்பட ஆரம்பமாகவும், இறுதியாகவும் வந்த எல்லாப் படைப்புக்களையும் விட சிறப்பித்துள்ளான். எனவே படைப்பினங்களுக்குத் தலைவராகவும்,

[21] முஸ்லிம் : 2383

இமாமாகவும் நபியவர்கள் உள்ளார்கள். நபி அவர்கள் கூறினார்கள் : “நானே மறுமையில் ஆதமுடைய பிள்ளைகளின் தலைவராகும்”[22]

அதேபோன்று அல்லாஹ் ஏனைய நபிமார்களுக்கு வழங்கியதை விட பல்வேறு அத்தாட்சிகளை நபியவர்களுக்கு விஷேடமாக வழங்கியுள்ளான். அவற்றின் ஊடாக அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவற்றில் மிக முக்கியமானது அல்குர்ஆன் ஆகும். பொதுவாக நபிமார்களின் அத்தாட்சிகள் அவர்களது மரணத்தோடு நின்றுவிடும் என்பது நாம் அறிந்தது. ஆனால் அல்குர்ஆனோ ஒரு நிரந்தர அத்தாட்சியாகும்.

ஏனைய நபிமார்களை விட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளமைக்கான இன்னும் ஒரு ஆதாரம், நபிமார்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்த சிறப்பம்சங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஒருசேரக் கொடுக்கப்பட்டமையாகும். உற்ற தோழமை, அல்லாஹ் பேசியமை, நபித்துவம், தூதுத்துவம் என்பவையே அவை. அன்பின் உயர்ந்த படித்தரமாகிய குல்லா (الخلة) எனப்படும் உற்ற தோழமையினால் நபியவர்கள் அல்லாஹ்வின் உற்ற தோழனாகவும் அல்லாஹ் அவர்களது உற்ற தோழனாகவும் உள்ளனர். நபி (ஸல்) அவர்கள் இச்சிறப்பம்சத்தில் நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இணைகின்றார்கள்.

பேச்சைப் பொருத்தவரை, நபியவர்கள் வானத்திற்கு அழைக்கப்பட்டு ஐவேளைத் தொழுகைகள் கடமையாக்கப்பட்ட தினம் அல்லாஹ் அவர்களுடன் பேசினான். இச்சிறப்பில் நபியவர்கள் மூஸா (அலை) அவர்களுடன் இணைகின்றார்கள்.

நபியவர்களுக்கு நபித்துவம், தூதுத்துவம் ஆகிய வர்ணனைகள் இருப்பது பல்வேறு வசனங்களின் ஊடாக அறியப்படுகின்றது.

﴿ ۞ يَـٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَ ﴾ [المائدة: ٦٧]

“தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்” (அல் மாஇதா : 67)

﴿وَأَرۡسَلۡنَـٰكَ لِلنَّاسِ رَسُولٗاۚ وَكَفَىٰ بِٱللَّهِ شَهِيدٗا ٧٩﴾ [النساء: ٧٩]

[22] முஸ்லிம் : 2287

“நாம் உங்களை மனிதர்களுக்குத் தூதர்களாக அனுப்பியுள்ளோம்.” (அந் நிஸா : 79)

இந்த நான்கு பண்புகளும் (உற்ற தோழமை, அல்லாஹ் பேசியமை, நபித்துவம், தூதுத்துவம்) எமது நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் ஒருசேரக் கிடைக்கவில்லை. இதுவும் ஏனைய நபிமார்களை விட நபியவர்கள் சிறப்பிக்கப்பட்டமைக்கான ஒரு ஆதாரமாகும்.

நபிமார்கள் மத்தியில் சிறப்புக்கள் வேறுபடுவது தொடர்பாக கூற முடியுமான அம்சங்களில் ஒன்று என்னவென்றால், அல்லாஹ் அல்குர்ஆனில் எந்த நபிமார்களின் சரித்திரத்தைக் கூறியுள்ளானோ அவர்கள், அவ்வாறு சரித்திரம் கூறப்படாத நபிமார்களை விட சிறந்தவர்கள். அதற்கான காரணம் அல்குர்ஆனின் மகத்துவமாகும். அல்லாஹ் யாரைப் பற்றி அல்குர்ஆனில் கூறியுள்ளானோ அவர்கள், அவ்வாறு அல்குர்ஆனில் கூறப்படாதவர்களை விடச் சிறந்தவர்கள்.

3. தூதர்களை ஈமான் கொள்வதன் இன்னுமொரு உள்ளடக்கம், அவர்களுக்கு மத்தியில் வேறுபாடு காட்டாமல் அனைவரையும் ஈமான் கொள்வதாகும். இது அவர்களில் சிலரை ஏற்று, வேறு சிலரை (ஒருவராக இருப்பினும்) மறுப்பதற்கு எதிரானது. அனைத்து நபிமார்களையும் ஈமான் கொள்வது அவசியம் என்பது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ قُولُوٓاْ ءَامَنَّا بِٱللَّهِ وَمَآ أُنزِلَ إِلَيۡنَا وَمَآ أُنزِلَ إِلَىٰٓ إِبۡرَٰهِـۧمَ وَإِسۡمَٰعِيلَ وَإِسۡحَٰقَ وَيَعۡقُوبَ وَٱلۡأَسۡبَاطِ وَمَآ أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ وَمَآ أُوتِيَ ٱلنَّبِيُّونَ مِن رَّبِّهِمۡ لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ مِّنۡهُمۡ وَنَحۡنُ لَهُۥ مُسۡلِمُونَ ١٣٦ ﴾ [البقرة: ١٣٦]

“(முஃமின்களே!)“நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம் அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம் இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்” என்று கூறுவீர்களாக.” (அல்குர்ஆன் : 2:136)

“அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்” என்ற வசனத்தை விளக்கும் போது இமாம் இப்னு ஜரீர் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : “யஹூதிகள், ஈஸா மற்றும் முஹம்மத் (ஸல்) ஆகியோரை மறுத்து, ஏனைய நபிமார்களை ஏற்றார்கள். கிறிஸ்தவர்கள் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மறுத்து ஏனைய நபிமார்களை ஏற்றார்கள். ஆனால் நாமோ அவர்கள் அனைவருமே அல்லாஹ்வுடைய தூதர்களாகவும், நபிமார்களாகவும் இருந்துள்ளார்கள் எனவும், சத்தியம் மற்றும் நேர்வழி என்பவற்றைக் கொண்டு அவர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றும் சாட்சியம் சொல்வோம்.

4. அல்குர்ஆனின் ஊடாக அல்லது ஆதாரப்பூர்வமான ஸுன்னாவின் ஊடாக யாரது பெயர்கள் வந்துள்ளனவோ, அவற்றை நாம் ஈமான் கொள்வதும் தூதர்களை ஈமான் கொள்வதன் ஓர் உள்ளடக்கம் ஆகும். அல்குர்ஆனில் 26 நபிமார்களின் பெயர்கள் வந்துள்ளன. ஆதம், நூஹ், இப்ராஹிம், இஸ்ஹாக், யஃகூப், இஸ்மாயில், தாவூத், ஸுலைமான், அய்யூப், இல்யாஸ், யூனுஸ், அல்யஸஉ, லூத், இத்ரீஸ், ஹூத், சுஐப், ஸாலிஹ், துல் கிப்ல், யூஸுப், மூஸா, ஹாருன், அல்கிழ்ர், ஸகரிய்யா, யஹ்யா, ஈஸா மற்றும் முஹம்மத் (ஸல்) ஆகியோரே அவர்களாகும்.

அல்குர்ஆனில் கூறப்படாத ஒரு நபியின் பெயர் ஸுன்னாவில் வந்துள்ளது. அவர்தான் யூஷஉ இப்னு நூன் இப்னு இப்ராஹீம் இப்னு யூஸுப் இப்னு யஃகூப் அவர்களாகும். இவர் பனூ இஸ்ரவேலர்களின் நபிமார்களில் ஒருவர். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது மரணத்தின் பின்னர் பனூ இஸ்ரவேலர்களுக்கு பொறுப்பாக இருந்தார்கள்.

எனவே சுருக்கமாக அல்குர்ஆன் சுன்னாவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபிமார்களின் எண்ணிக்கை 26 ஆகும்.

நபிமார்களில் யாருடைய பெயரை நாம் அறியமாட்டோமோ, அவர்களைப் பொதுவாக நாம் ஈமான் கொள்வோம். இதை இவ்வாறு அல்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது:

﴿ وَلَقَدۡ أَرۡسَلۡنَا رُسُلٗا مِّن قَبۡلِكَ مِنۡهُم مَّن قَصَصۡنَا عَلَيۡكَ وَمِنۡهُم مَّن لَّمۡ نَقۡصُصۡ عَلَيۡكَۗ ﴾ [غافر: ٧٨]

“திட்டமாக நாம் உமக்கு முன்னர் தூதர்களை அனுப்பியிருக்கின்றோம் அவர்களில் சிலருடைய வரலாற்றை உமக்குக் கூறியுள்ளோம் இன்னும்

எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லையோ (அவர்களும்) அத்தூதர்களில் இருக்கின்றனர்" (காபிர் : 78)

5. அல்லாஹ்வின் அடியார்களே! தூதர்களை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களில் இன்னும் ஒன்று அவர்களது எண்ணிக்கை 315 என ஈமான் கொள்வதாகும். அவர்களில் சிலரது பெயர்கள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தெளிவாக கூறப்பட்டுள்ளன. ஏனையவர்களை நாம் அறிய மாட்டோம். குறித்த எண்ணிக்கைக்கான ஆதாரம் பின்வரும் அபூ உமாமா (ரலி) அவர்களது ஹதீஸ் ஆகும் :

"ஒரு மனிதர் நபியவர்களிடம், 'ஆதம் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்தாரா?' எனக்கேட்க "ஆம் அவர் (இறைவனால்) பேசப்பட்டவர், கற்றுக் கொடுக்கப்பட்டவர்" என்று கூறினார்கள் நபியவர்கள். மீண்டும் அம்மனிதர் 'அவருக்கும் நூஹ் (அலை) அவர்களுக்கும் இடையில் எவ்வளவு காலம் இருந்தது?' எனக் கேட்க, "பத்து நூற்றாண்டுகள்" என்றார்கள். மீண்டும் அவர் 'நூஹ் (அலை) மற்றும் இப்ராஹிம் (அலை) ஆகியோருக்கு இடையில் எவ்வளவு காலங்கள் இருந்தன?' எனக் கேட்க "பத்து நூற்றாண்டுகள்" என்றார்கள். இறுதியாக அவர், 'அல்லாஹ்வின் தூதரே! இறைத்தூதர்கள் எத்தனை பேர் இருந்தனர்?' எனக் கேட்க, "315 பேர் கொண்ட பெரியதொரு தொகையினராக இருந்தனர்" என்றார்கள் நபியவர்கள்.[23]

6. இறைத்தூதர்களை விசுவாசிப்பதன் இன்னும் ஒரு உள்ளடக்கம், அவர்களது செய்திகளில் ஆதாரப்பூர்வமானதை உண்மைப்படுத்துவதாகும். அதாவது, சங்கை மிகு அல்குர்ஆனிலும், தூய்மையான சுன்னாவிலும் வந்துள்ள செய்திகளும், வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ள ஆதாரப்பூர்வமான அறிவிப்புக்களுமே அவையாகும். இவை அவர்களுடைய சம்பவங்களையும் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி இருக்கும்.

ஆனால் வேதம் கொடுக்கப்பட்டவர்களின் நூல்களில் உள்ள சம்பவங்களை பொருத்தவரை, முஸ்லிம்களின் நூல்களில் கூறப்பட்டுள்ள ஆதாரப்பூர்வமான செய்திகள் அவற்றை உறுதிப்படுத்தவில்லை என்றால், ஒரு முஸ்லிம் அவற்றை உண்மைப்படுத்தவோ பொய்ப்படுத்தவோ அவசியம் கிடையாது. ஆனால் முஸ்லிம்களிடம் உள்ள ஆதாரப்பூர்வமான நூல்களில் உள்ளவற்றுக்கு அவை முரண்பட்டால், அப்போது அவற்றை பொய்ப்பிப்பது கட்டாயமாகும். அதற்கு

[23] ஹாகிம்

நபியவர்களின் பின்வரும் கூற்று ஆதாரமாகும்: வேதக்காரர்களை பொய்ப்படுத்தவோ, உண்மைப்படுத்தவோ வேண்டாம்! 'அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்டவற்றையும், உங்களுக்கு இறக்கப்பட்டவற்றையும் ஈமான் கொள்கின்றோம்' என்று கூறிவிடுங்கள். [24] அவர்களுக்கு இறக்கப்பட்டவை என்பதன் மூலம் நாடப்படுவது, மூஸா மற்றும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது அல்லாஹ் இறக்கிய அசலான தவ்ராத்தும் இன்ஜீலுமே தவிர, இன்று யூத கிறிஸ்தவர்களிடம் உள்ள திரிபுபடுத்தப்பட்ட தவ்ராத்தும் இன்ஜீலும் அல்ல.

7. அவர்களுக்கு வழங்கப்பட்ட தூதை அல்லாஹ் ஏவிய பிரகாரம் அவர்கள் எத்தி வைத்தார்கள் எனவும், அவர்களது சமுதாயத்தில் அதை அறியாதவர்கள் யாருமே எஞ்சாத அளவு அத்தூதை அவர்கள் மிகத் தெளிவாக எத்தி வைத்தார்கள் எனவும் ஈமான் கொள்வதும் இதன் உள்ளடக்கங்களில் ஒன்றாகும்.

﴿ فَهَلۡ عَلَى ٱلرُّسُلِ إِلَّا ٱلۡبَلَٰغُ ٱلۡمُبِينُ ﴾ [النحل: ٣٥]

"தெளிவாக எத்திவைப்பதைத் தவிர தூதர்கள் மீது வேறு கடமைகள் உண்டா?" (அல் நஹ்ல் : 35)

இவ்வாறான எத்தி வைப்பின் மூலமாகவே தூதர்கள் அல்லாஹ்விற்கு சாதகமான, மனிதர்களுக்கு எதிரான ஆதாரங்கள் என்பது உறுதியாகின்றது.

﴿ رُّسُلٗا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى ٱللَّهِ حُجَّةُۢ بَعۡدَ ٱلرُّسُلِۚ وَكَانَ ٱللَّهُ عَزِيزًا حَكِيمٗا ١٦٥ ﴾ [النساء: ١٦٥]

"தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்)" (அந்நிஸா : 165)

8. அத்தாட்சிகளைக் கொண்டு அல்லாஹ் அவர்களைப் பலப்படுத்தினான் என ஈமான் கொள்வதும் இதன் உள்ளடக்கங்களில் ஒன்றாகும். இவை 'புர்ஹான், தலீல்' என்ற பல பெயர்கள் கொண்டு அழைக்கப்படும். அவர்களது

[24] புகாரி : 7362

நபித்துவத்தை உறுதிப்படுத்தவும், அவர்களது விடயம் மக்களுக்குக் குழப்பமாக இருக்காமல் இருக்கவும் அவர்களது கைகளாலே அல்லாஹ் வெளிப்படுத்தும், வழமைக்கு மாற்றமான அற்புதங்களே அவை. ஏனெனில், மக்கள் தமது தூதர்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்கள் ஊடாக பலப்படுத்தப்பட்டுள்ளதாகக் காணும் போது, அவர்கள் அல்லாஹ்விடம் இருந்து அனுப்பப்பட்டவர்களே என உறுதியாக அறிந்து கொள்வர். விளைவாக, அவர்களது தூதை உறுதியாக நம்பி விசுவாசம் கொண்டு, அதனூடாக அவர்களது உள்ளங்கள் மார்க்கத்தில் உறுதியாக நிலை பெற்று விடும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

9. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! - அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும் - தூதர்களை விசுவாசிப்பதன் இன்னும் ஒரு உள்ளடக்கம் அவர்களுக்குக் கட்டுப்படுவதாகும். அல்லாஹ் தூதர்களுக்கு மார்க்கங்களைக் கொடுத்து அனுப்பியுள்ளான். ஒவ்வொரு இறைத்தூதருக்கும் தனியான மார்க்கம் வழங்கப்பட்டு, அதற்கு அடிபணிந்து அவர்களைப் பின்பற்றுமாறு அவர்களுக்கு ஏவப்பட்டுள்ளது. ஒவ்வொரு மார்க்கத்திலும் உள்ள போதனைகள் மக்களுடைய நம்பிக்கைகள், வணக்கங்கள் மற்றும் நடத்தைகளை சீர் செய்பவையாக இருக்கும். அவர்களில் இறுதியானவராகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 'இஸ்லாம்' என்னும் மிக அழகான, முழுமையான ஒரு சரீஆவைக் கொடுத்து அனுப்பினான். அவர்களுக்குக் கட்டுப்படுமாறு மக்களுக்கு ஏவியதுடன், அவருக்குக் கட்டுப்படுவதும் தனக்குக் கட்டுப்படுவதாகும் என்றும் கூறியுள்ளான்.

﴿ مَّن يُطِعِ ٱلرَّسُولَ فَقَدۡ أَطَاعَ ٱللَّهَۖ ﴾ [النساء: ٨٠]

"யார் தூதருக்குக் கட்டுப்படுகின்றாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டுவிட்டார்" (அந்நிஸா : 80)

﴿ وَإِن تُطِيعُوهُ تَهْتَدُوا ﴾ [النور: ٥٤]

"நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டுவிட்டால், நேர்வழியை அடைவீர்கள்." (அந்நூர் : 54)

10. இறைத்தூதர்களை விசுவாசிப்பதன் இன்னுமொரு உள்ளடக்கம், இறைத்தூதர்கள் தான் எப்போதும் வெற்றி பெறுபவர்கள் என ஈமான் கொள்வதாகும்.

﴿ كَتَبَ ٱللَّهُ لَأَغۡلِبَنَّ أَنَا۠ وَرُسُلِيٓۚ إِنَّ ٱللَّهَ قَوِيٌّ عَزِيزٞ ﴿٢١﴾ ﴾ [المجادلة: ٢١]

"நானும் என்னுடைய தூதர்களும் நிச்சயமாக மிகைத்து விடுவோம்" என்று அல்லாஹ் விதித்துள்ளான் நிச்சயமாக அல்லாஹ் மிக்க சக்தியுடையவன் யாவரையும் மிகைத்தவன் (அல்முஜாதிலா : 21)

﴿ إِنَّا لَنَنصُرُ رُسُلَنَا وَٱلَّذِينَ ءَامَنُواْ فِي ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا وَيَوۡمَ يَقُومُ ٱلۡأَشۡهَٰدُ ﴿٥١﴾ ﴾ [غافر: ٥١]

"நிச்சயமாக, நாம் நம்முடைய ரஸூல்(தூதர்)களுக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும், இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் நிலைபெறும் நாளிலும் உதவி செய்வோம்" (காபிர் : 51)

இந்த இறை வசனத்தை விளக்கும்போது சன்கீதீ (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: 'இறைத்தூதர்கள் எப்போதுமே தம்மோடு மோதுபவர்களை வெற்றி கொள்வார்கள் என இவ்வசனம் அறிவிக்கின்றது. வெற்றி இரு வகைப்படும்: 1. ஆதாரத்தின் ஊடாக வெற்றி பெறல். இது எல்லாத் தூதர்களுக்கும் உள்ளது. 2. வாளின் (ஆயுதத்தின்) ஊடாக வெற்றி பெறல். இது யுத்தம் செய்யுமாறு ஏவப்பட்ட தூதர்களுக்கு மாத்திரம் உள்ளது.

இப்னு தைமிய்யா அவர்கள், நபிமார்கள் தம்மோடு முரண்படுபவர்களை அறிவு மற்றும் ஆதாரம் கொண்டு மிகைப்பது எதிரியை தோற்கடிக்கும் போராளியை ஒத்தது எனவும், அவ்வாறு தன்னோடு முரண்படுபவர்களை வாளால் வெற்றி கொள்வது எதிரியைக் கொலை செய்த போராளிக்கு ஒத்தது எனவும் கூறியுள்ளார்கள். மேலும் ஒரு இடத்தில், எந்தவொரு நபிய்யும் ஜிஹாதில் கொல்லப்பட்டதாக அறியப்படவில்லை என்றும் கூறியுள்ளார்கள்.

விசுவாசிகளே! இந்த பத்து அம்சங்களும் ரசூல்மார்களை ஈமான் கொள்வதன் எஞ்சிய உள்ளடக்கங்கள் ஆகும். ஒரு முஃமின் இவற்றை உறுதியாக அறிந்து,

அவற்றில் ஆழமான நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போதுதான், அவனது பாதம் ஈமான் என்னும் பாதையில் உறுதியாக இருக்கும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக! யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுபவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 01

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்க முடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبۡتُمۡ أَنَّمَا خَلَقۡنَٰكُمۡ عَبَثٗا وَأَنَّكُمۡ إِلَيۡنَا لَا تُرۡجَعُونَ ١١٥ ﴾ [المؤمنون: ١١٥]

“நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (என்றும் இறைவன் கேட்பான்.)” (ஸூரா அல் முஃமினூன் : 115)

மேலும், அந்த நாள், ‘இறுதி நாள்’ என அழைக்கப்படும். அதாவது அதற்குப் பின்னர் இன்னும் ஒரு நாள் கிடையாது. சுவனவாதிகள் அவர்களது இடங்களிலும், நரகவாதிகள் அவர்களது இடங்களிலும் நிலைபெற்று விடுவார்கள். இது கியாமத் நாள் (எழுந்து நிற்கும் நாள்) என்றும் அழைக்கப்படும். அதாவது, மக்கள் இந்த நாளில் அல்லாஹ்வின் முன்னிலையில் எழுந்து நிற்பார்கள்.

﴿ يَوۡمَ يَقُومُ ٱلنَّاسُ لِرَبِّ ٱلۡعَٰلَمِينَ ٦ ﴾ [المطففين: ٦]

“அகிலத்தாரின் இறைவன் முன் மனிதர்கள் நிற்கும் நாள்” (அல் முதப்பிபீன் : 06)

விசுவாசிகளே! இறுதி நாளை ஈமான் கொள்வது ஆறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. 1. ஸூர் ஊதப்படல். 2. மறுமை நாளின் பயங்கர நிகழ்வுகள். 3. படைப்புகள் எழுப்பப்படல் 4. மஹ்ஷர் பூமியில் மக்கள் ஒன்று திரட்டப்படல். 5. விசாரணையும் கூலியும். 6. சுவனம் அல்லது நரகில் நுழைதல்.

அல்லாஹ்வின் அடியார்களே! ஸூர் ஊதப்படல் என்பது மறுமைக்கான அறிவிப்பாகும். ஸூர் என்பது ஒரு ஊதுகுழல் ஆகும். அதற்குப் பொறுப்பான மலக்கு, இஸ்ராபீல் அவர்கள் அதில் இரு தடவைகள் ஊதுவார்கள். முதல் ஊதலில் (அது நப்கதுல் பதஃ, நப்கதுஸ் ஸஃக் என அழைக்கப்படும்) எல்லாப் படைப்புக்களும் மூர்ச்சித்து, மரணித்து விடுவார்கள். அது வெகு நீண்ட ஊதலாகும். உலகின் கிழக்கு, மேற்கு என அனைத்து திசையிலும் உள்ள அனைத்து மனிதர்களும் மரணிக்கும் வரை அதை நீட்டி ஊதிக்கொண்டே இருப்பார், பின்வரும் வசனம் அதற்கான ஆதாரமாகும்:

﴿ وَمَا يَنظُرُ هَٰٓؤُلَآءِ إِلَّا صَيۡحَةٗ وَٰحِدَةٗ مَّا لَهَا مِن فَوَاقٖ ١٥ ﴾ [ص: ١٥]

“இன்னும் இவர்களும் ஒரே ஒரு பேரொளியைத் தவிர (வேறெதனையும்) எதிர் பார்க்கவில்லை. அதில் தாமதமும் இராது.” (ஸாத் : 15)

அதாவது இவ்வுலகுக்கு திரும்பி வர முடியாது. பின்பு, இரண்டாவது ஊதப்பட, அனைவரும் கப்ருகளில் இருந்து எழும்புவார்கள்.

﴿ فَإِنَّمَا هِيَ زَجْرَةٌ وَاحِدَةٌ فَإِذَا هُمْ يَنظُرُونَ ۝١٩ ﴾ [الصافات: ١٩]

“ஒரே சப்தம் தான்! உடனே அவர்கள் (திடுக்கிட்டு எழுந்து) பார்ப்பார்கள்.” (அஸ்ஸாப்பாத் : 19)

முதல் ஊதலால் உயிருள்ளவர்கள் மரணிப்பார்கள். இரண்டாவது ஊதலால், மரணித்தவர்கள் உயிர் பெறுவார்கள். அல்குர்ஆனில் ஸுர் என்பது நாகூர் என்றும் கூறப்பட்டுள்ளது :

﴿ فَإِذَا نُقِرَ فِي النَّاقُورِ ۝٨ ﴾ [المدثر: ٨]

“மேலும், எக்காளத்தில் ஊதப்படும்போது” (அல் முத்தஸ்ஸிர் : 08)

2. மறுமையை ஈமான் கொள்வதில் நுழையும் இன்னும் ஓர் அம்சம் ஸுர் ஊதப்பட்ட பின்னர் நிகழும், மறுமையின் பயங்கர நிகழ்வுகளை ஈமான் கொள்வதாகும். பூமி குழுக்கப்படுவது அவற்றில் ஒன்றாகும்:

﴿ إِذَا زُلْزِلَتِ الْأَرْضُ زِلْزَالَهَا ۝١ ﴾ [الزلزلة: ١]

“பூமி பெரும் அதிர்ச்சியாக - அதிர்ச்சி அடையும் போது” (அத்தில்தால் : 01)

வானம் வெடித்துப் போவதும் மறுமையின் பயங்கர நிகழ்வுகளில் ஒன்றாகும்.

﴿ فَإِذَا انشَقَّتِ السَّمَاءُ فَكَانَتْ وَرْدَةً كَالدِّهَانِ ۝٣٧ ﴾ [الرحمن: ٣٧]

“எனவே, (கியாமத் வரும் நேரம்) அப்பொழுது வானம் பிளந்து, ரோஜாவின் (நிறம் போலாகி) எண்ணெய் போலாகிவிடும்.” (அர் ரஹ்மான் : 37)

ஏனெனில், ரோஜாப் பூ சிவந்ததாகும். தோலும் அவ்வாறுதான்.

இன்னுமொரு வசனத்தில் அல்லாஹ் அந்நாளின் வானத்தை ‘முஹ்ல்’ எனப்படும், ‘உருக்கப்பட்ட செம்பு’ என்பதற்கு ஒப்பாக்கியுள்ளான்.

﴿ يَوۡمَ تَكُونُ ٱلسَّمَآءُ كَٱلۡمُهۡلِ ۝٨ ﴾ [المعارج: ٨]

“வானம் உருக்கப்பட்ட செம்பைப் போல் ஆகிவிடும் நாளில்” (அல் மஆரிஜ் : 08)

அதாவது, கரைந்து போன ஒன்றாக இருக்கும்.

அந்த நாளில் மலைகள் தூளாக்கப்பட்டு, உதிர்த்தப்பட்ட பஞ்சு போலவோ, சரிந்து போன மலைகளைப் போன்றோ ஆகிவிடும். இரு வர்ணனைகளும் ஒன்று போன்றது தான். மலைகள் இடிக்கப்படுவது,

﴿ وَبُسَّتِ ٱلۡجِبَالُ بَسّٗا ۝٥ ﴾ [الواقعة: ٥]

“இன்னும் மலைகள் தூள் தூளாக ஆக்கப்படும் போது,” (அல் வாகிஆ : 05)

என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அது துகள்களாக மாறிவிடுவது,

﴿ وَتَكُونُ ٱلۡجِبَالُ كَٱلۡعِهۡنِ ٱلۡمَنفُوشِ ۝٥ ﴾ [القارعة: ٥]

“மேலும், மலைகள் கொட்டப்பட்ட பஞ்சைப் போன்று ஆகிவிடும்.” (அல் காரிஆ : 05)

﴿ يَوۡمَ تَرۡجُفُ ٱلۡأَرۡضُ وَٱلۡجِبَالُ وَكَانَتِ ٱلۡجِبَالُ كَثِيبٗا مَّهِيلًا ۝١٤ ﴾ [المزمل: ١٤]

“அந்நாளில் பூமியும், மலைகளும் அதிர்ந்து, மலைகள் சிதறி மணல் குவியல்ககளாகிவிடும்.” (அல் முஸ்ஸம்மில் : 14)

என்ற வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

அந்த நாளில் மலைகள் தமது இடங்களில் இருந்து இடம்பெயர்க்கப்பட்டு, கானல் நீர் போன்று காணப்படும்.

﴿ وَسُيِّرَتِ ٱلۡجِبَالُ فَكَانَتۡ سَرَابًا ۝٢٠ ﴾ [النبأ: ٢٠]

“மலைகள் பெயர்க்கப்பட்டு கானல் நீராகிவிடும்.” (அந்நபஉ : 20)

﴿ وَتَرَى ٱلۡجِبَالَ تَحۡسَبُهَا جَامِدَةٗ وَهِيَ تَمُرُّ مَرَّ ٱلسَّحَابِۚ صُنۡعَ ٱللَّهِ ٱلَّذِيٓ أَتۡقَنَ كُلَّ شَيۡءٍۚ إِنَّهُۥ خَبِيرُۢ بِمَا تَفۡعَلُونَ ۝٨٨ ﴾ [النمل: ٨٨]

“இன்னும் நீர் மலைகளைப் பார்த்து அவை மிகவும் உறுதியாக இருப்பதாக எண்ணுகிறீர் (எனினும் அந்நாளில்) அவை மேகங்களைப் போல் பறந்தோடும்” (அந்நம்ல் : 88)

மறுமையின் பயங்கர நிகழ்வுகளில் ஒன்று, சூரியன் சுருட்டப்படுவதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِذَا ٱلشَّمۡسُ كُوِّرَتۡ ۝١ ﴾ [التكوير: ١]

“சூரியன் (ஒளியில்லாததாகச்) சுருட்டப்படும் போது” (அத் தக்வீர் : 01)

இங்கு ‘குவ்விரத்’ என்பது ‘ஒரு தலைப்பாகை போன்று அது சுருட்டப்பட்டு எறியப்படுவதாகும்’ அப்போது அதன் ஒளி சென்றுவிடும்.

மறுமையின் இன்னுமொரு பயங்கர நிகழ்வு, வானத்தில் உயரே இருந்த நட்சத்திரங்கள் எல்லாம் உதிர்ந்து விழுவதாகும்.

﴿ وَإِذَا ٱلنُّجُومُ ٱنكَدَرَتۡ ۝٢ ﴾ [التكوير: ٢]

“நட்சத்திரங்கள் (ஒளியிழந்து) உதிர்ந்து விழும்போது” (அத் தக்வீர் : 02)

மறுமையின் இன்னுமொரு பயங்கர நிகழ்வு, கடல்கள் எரியூட்டப்பட்டு, நெருப்பாக மாறுவதாகும்.

﴿ وَإِذَا ٱلۡبِحَارُ سُجِّرَتۡ ۝٦ ﴾ [التكوير: ٦]

“கடல்கள் தீ மூட்டப்படும்போது” (அத் தக்வீர் : 06)

தனது பிரபஞ்சம் சார்ந்த கட்டளைகள் ஊடாக, இயற்கை விதிகளையே நேர் எதிராக மாற்றும் வல்லமை கொண்ட அல்லாஹ் எவ்வளவு தூய்மையானவன்.

﴿ إِنَّمَا قَوۡلُنَا لِشَيۡءٍ إِذَآ أَرَدۡنَٰهُ أَن نَّقُولَ لَهُۥ كُن فَيَكُونُ ۝٤٠ ﴾ [النحل: ٤٠]

“நாம் ஏதேனும் ஒரு பொருளை (உண்டு பண்ண) நாடினால் நாம் அதற்காகக் கூறுவது, “உண்டாகுக!” என்பது தான். உடனே அது உண்டாகிவிடும்.” (அந் நஹ்ல் : 40)

அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையை ஈமான் கொள்வதன் இன்னுமொரு உள்ளடக்கம், ‘பஃஸ்’ எனப்படும் எழுப்பப்படலை ஈமான் கொள்வதாகும்.

அதாவது இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும், மரணித்திருந்தவர்கள் அனைவரும் எழுப்பப்படுவார்கள். இவ்வாறு எழுப்பப்படுவது என்பது அல்குர்ஆன், ஸுன்னா மற்றும் முஸ்லிம்களின் இஜ்மா ஆகியவற்றின் ஊடாக உறுதியாக நிறுவப்பட்டுள்ளது.

﴿ ثُمَّ إِنَّكُم بَعْدَ ذَٰلِكَ لَمَيِّتُونَ ۝١٥ ثُمَّ إِنَّكُمْ يَوْمَ ٱلْقِيَٰمَةِ تُبْعَثُونَ ۝١٦ ﴾ [المؤمنون: ١٥-١٦]

"பிறகு, நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கிறீர்கள். பிறகு, கியாம நாளன்று, நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள்" (அல் முஃமினூன் : 15,16)

அந்நாளில் மக்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் பாதனிகள் அற்றவர்களாகவும், ஆடைகள் அணியாதவர்களாகவும், விருத்தசேதனம் செய்யப்படாதவர்களாகவும், இவ்வுலகில் ஏற்படும் பார்வையின்மை, நொண்டுதல் போன்ற குறைகள் எதுவும் அற்றவர்களாகவும் எழுந்து நிற்பார்கள்.

﴿كَمَا بَدَأْنَآ أَوَّلَ خَلْقٍ نُّعِيدُهُۥ ﴾ [الأنبياء: ١٠٤]

"முதலில் படைப்புகளைப் படைத்தது போன்றே, (அந்நாளில்) அதனை மீட்டுவோம்" (அல் அன்பியா : 104)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! மறுமையை ஈமான் கொள்வதன் இன்னும் ஓர் உள்ளடக்கம், படைப்புக்கள் மண்ணறையில் இருந்து எழுப்பப்பட்டதன் பின்னனர் மஹ்ஷர் உடைய பூமிக்கு ஒன்று திரட்டப்படுவார்கள் என ஈமான் கொள்வதாகும்.

﴿ وَهُوَ ٱلَّذِى ذَرَأَكُمْ فِى ٱلْأَرْضِ وَإِلَيْهِ تُحْشَرُونَ ﴿٧٩﴾ ﴾ [المؤمنون: ٧٩]

“மேலும், அவன்தான் உங்களை இப்பூமியில் பல்கிப் பெருகச் செய்தான் இன்னும், அவனிடத்திலேயே நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்.” (அல் முஃமினூன் : 79)

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் எமக்கு முன்னால் எழுந்து உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்கள்: மக்களே! நீங்கள் அல்லாஹ்விடம் பாதணிகள் மற்றும் ஆடைகள் அற்றவர்களாகவும், விருத்தசேதனம் செய்யப்படாதவர்களாகவும் ஒன்று திரட்டப்படுவீர்கள்.

மக்கள் மறுமையில் சாதாரண வெண்மையான ஒரு பூமியில் ஒன்று திரட்டப்படுவார்கள். அங்கு யாருக்கும் எந்த அடையாளமும் இருக்காது. யாராவது அழைத்தால் அனைவருக்கும் அது கேட்கும். பார்த்தால் அனைவரையுமே பார்க்க முடியுமாக இருக்கும். இந்த விடயங்கள் அபூ ஹுரைரா (ரலி) அவர்களைத் தொட்டும் புகாரியில் வந்துள்ள ஹதீஸில் வந்துள்ளன.

அந்நாளில் மனிதர்கள், ஜின்கள், மலக்குகள், விலங்கினங்கள் என அனைவருமே ஒன்று திரட்டப்படுவர். மனிதர்களும் ஜின்களும் ஒன்று திரட்டப்படுவது முந்திய வசனங்களின் பரந்த கருத்தின் ஊடாக புரியப்படுகின்றது. விலங்குகள் ஒன்று திரட்டப்படுவதற்கு பின்வரும் வசனங்கள் ஆதாரம் ஆகும்.

﴿ وَمَا مِن دَآبَّةٍ فِى ٱلْأَرْضِ وَلَا طَٰٓئِرٍ يَطِيرُ بِجَنَاحَيْهِ إِلَّآ أُمَمٌ أَمْثَالُكُم ۚ مَّا فَرَّطْنَا فِى ٱلْكِتَٰبِ مِن شَىْءٍ ۚ ثُمَّ إِلَىٰ رَبِّهِمْ يُحْشَرُونَ ﴿٣٨﴾ ﴾ [الأنعام: ٣٨]

“பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை (இவற்றில்) எதையும் (நம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை இன்னும் அவை யாவும் அவற்றின் இறைவனிடம் ஒன்றுசேர்க்கப்படும்” (அல் அன்ஆம் : 38)

﴿ وَإِذَا ٱلْوُحُوشُ حُشِرَتْ ﴿٥﴾ ﴾ [التكوير: ٥]

“காட்டு மிருகங்கள் (மனிதர்களுடனும், இதர பிராணிகளுடனும்) ஒன்று சேர்க்கப்படும்போது” (அத் தக்வீர் : 05)

மலக்குகள் ஒன்று திரட்டப்படுவதற்கு ஆதாரமாக இந்த வசனம் உள்ளது:

﴿ وَجَآءَ رَبُّكَ وَٱلۡمَلَكُ صَفّٗا صَفّٗا ٢٢ ﴾ [الفجر: ٢٢]

“இன்னும், வானவர்கள் அணியணியாக நிற்க, உமது இறைவன் வந்துவிட்டால்” (அல் பஜ்ர் : 22)

மலக்குகள் மறுமையில் அல்லாஹ்வின் முன்னிலையில் வரிசையாக ஒன்று திரட்டப்படுவார்கள். ஆனாலும் அவர்கள் விசாரிக்கப்பட மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் இயல்பிலேயே அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றி, அவனுக்கு மாறு செய்யாமல் இருப்பவர்கள். அவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ لَّا يَعۡصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمۡ وَيَفۡعَلُونَ مَا يُؤۡمَرُونَ ٦ ﴾ [التحريم: ٦]

“அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்” (அத் தஹ்ரீம் : 06)

அல்லாஹ்வின் அடியார்களே! மறுமை நாளை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களில் இவை நான்கு உள்ளடக்கங்கள் ஆகும். பொதுவாக இவற்றை ஈமான் கொள்ளாதவன் மறுமையை ஈமான் கொண்டவனாகமாட்டான். வருகின்ற குத்பாவில் ஐந்தாம், ஆறாம் உள்ளடக்கங்கள் பற்றிப் பார்ப்போம்

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம்

செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 02

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبۡتُمۡ أَنَّمَا خَلَقۡنَٰكُمۡ عَبَثٗا وَأَنَّكُمۡ إِلَيۡنَا لَا تُرۡجَعُونَ ١١٥ ﴾ [المؤمنون: ١١٥]

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த குத்பாவில் மறுமை நாளை ஈமான் கொள்வதில் உள்ளடங்கும், ஸூறு ஊதப்படல், மறுமையின் பயங்கர நிகழ்வுகள், படைப்புகள் எழுப்பப்படல், மஹ்சரில் மக்கள் ஒன்று திரட்டப்படல் என்பன விளக்கப்பட்டன. இன்றைய தினம், மஹ்சரில் நடப்பவை பற்றி சற்று விரிவாகப் பேசுவோம்.

அல்லாஹ்வின் அடியார்களே! பின்வரும் நான்கு அம்சங்கள் மஹ்சரில் நடைபெறும் ஒரு சில நிகழ்வுகளாகும்.

1. மக்கள் திடுக்கமடைதல். சூரா அல் ஹஜ்ஜின் ஆரம்பத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱتَّقُواْ رَبَّكُمۡۚ إِنَّ زَلۡزَلَةَ ٱلسَّاعَةِ شَيۡءٌ عَظِيمٞ ١ يَوۡمَ تَرَوۡنَهَا تَذۡهَلُ كُلُّ مُرۡضِعَةٍ عَمَّآ أَرۡضَعَتۡ وَتَضَعُ كُلُّ ذَاتِ حَمۡلٍ حَمۡلَهَا وَتَرَى ٱلنَّاسَ سُكَٰرَىٰ وَمَا هُم بِسُكَٰرَىٰ وَلَٰكِنَّ عَذَابَ ٱللَّهِ شَدِيدٞ ٢ ﴾

"மனிதர்களே! நீங்கள் உங்களுடைய இறைவனைப் பயந்து கொள்ளுங்கள். நிச்சயமாக (கியாமத்து நாளாகிய) அவ்வேளையின் அதிர்ச்சி, மகத்தான பெரும் நிகழ்ச்சியாகும். அந்நாளில், பாலூட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு தாயும் தான் ஊட்டும் குழந்தையை மறந்து விடுவதையும், ஒவ்வொரு கர்ப்பிணியும் தன் சுமையை ஈன்று விடுவதையும் நீங்கள் காண்பீர்கள் மேலும், மனிதர்களை மதி மயங்கியவர்களாக இருக்க காண்பீர் எனினும் (அது மதுவினால் ஏற்பட்ட) மதி மயக்கமல்ல் ஆனால் அல்லாஹ்வின் வேதனை மிகக் கடுமையானதாகும்." (ஸூரா அல் ஹஜ் : 1,2)

அந்த நாளின் கடுமையின் காரணமாகவும், அதன் தாங்க முடியாத துன்பங்களினாலும், மனித பகுத்தறிவு, தான் உலகில் வாழ்ந்த காலங்களைக் கூட சரியாகக் கூற முடியாமல் தடுமாற்றம் அடையும். சிலர்,

﴿ يَتَخَٰفَتُونَ بَيۡنَهُمۡ إِن لَّبِثۡتُمۡ إِلَّا عَشۡرٗا ١٠٣ ﴾ [طه: ١٠٣]

“நீங்கள் பத்து (நாட்களு)க்கு மேல் (பூமியில்) தங்கியதில்லை” (ஸூரா தாஹா : 103) என்றும், வேறுசிலா்,

﴿ قَالُواْ لَبِثۡنَا يَوۡمًا أَوۡ بَعۡضَ يَوۡمٖ فَسۡـَٔلِ ٱلۡعَآدِّينَ ١١٣ ﴾ [المؤمنون: ١١٣]

“ஒரு நாள் அல்லது ஒரு நாளின் சிறிது பாகம் நாங்கள் தங்கியிருந்திருப்போம். (இதைப்பற்றிக்) கணிப்பவர்களிடம் நீ கேட்பாயாக!” என்றும் கூறுவார்கள். (ஸூரா அல்முஃமினூன் : 113)

வேறு சிலரைப் பற்றி,

﴿ وَيَوۡمَ تَقُومُ ٱلسَّاعَةُ يُقۡسِمُ ٱلۡمُجۡرِمُونَ مَا لَبِثُواْ غَيۡرَ سَاعَةٖۚ كَذَٰلِكَ ﴾ [الروم: ٥٥]

“அன்றியும், (நியாயத் தீர்ப்புக்குரிய) நாழிகை வரும் அந்நாளில் குற்றவாளிகள் தாங்கள் (இவ்வுலகில்) ஒரு நாழிகையே அன்றி (அதிக நேரம்) தங்கி இருக்க வில்லை என்று பிரமாணம் செய்வார்கள்” (ஸூரா அர்ரூம் : 55) என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

அந்நாளின் பயங்கரம் மற்றும் அகோரத்தின் காரணமாக, மனிதர்களில் ஒருவர் இன்னொருவரை மறந்து விடுவர்.

﴿ يَوۡمَ يَفِرُّ ٱلۡمَرۡءُ مِنۡ أَخِيهِ ٣٤ وَأُمِّهِۦ وَأَبِيهِ ٣٥ وَصَٰحِبَتِهِۦ وَبَنِيهِ ٣٦ لِكُلِّ ٱمۡرِيٕٖ مِّنۡهُمۡ يَوۡمَئِذٖ شَأۡنٞ يُغۡنِيهِ ٣٧ ﴾ [عبس: ٣٤-٣٧]

“அந்த நாளில் மனிதன் தன் சகோதரனை விட்டும், தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும், தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும் விரண்டு ஓடுவான். அன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் (அவல) நிலையே போதுமானதாயிருக்கும்.” (அபஸ : 34-37)

அல்லாஹ்வின் அடியார்களே! மறுமை நாளின் இந்த திடுக்கம் ஏற்படுவது, பாவிகளான இணைவைப்பாளர்கள், மார்க்கத்தில் புதியவற்றை உருவாக்கியவர்கள் மற்றும் முஃமின்களில் பாவங்களை செய்தவர்கள் ஆகியோருக்கு மாத்திரமே! முழுமையான முஃமின்கள் அவ்வாறு இருக்க மாட்டார்கள். அவர்கள் அல்லாஹ்வை வழிபட்டு, அவன் தடுத்துவற்றை தவிர்ந்தவர்கள். இவ்வுலகில் யார் அல்லாஹ்வை பயப்படுகின்றாரோ, அவர்களுக்கு அல்லாஹ் மறுமையில் பாதுகாப்பளிப்பான். யார் இவ்வுலகில்

அல்லாஹ்வை அஞ்சாமல் வாழ்கின்றார்களோ, மறுமையில் அவர்களை பயப்படச் செய்வான். இது அல்லாஹ்வின் நீதியாகும். அதாவது தன்னுடைய அடியானுக்கு இரு நிலைகளிலுமே அச்சத்தைக் கொடுக்க மாட்டான் என்பது போல, இரு நிலைகளிலுமே அச்சமின்மையையும் கொடுக்க மாட்டான். உண்மையான முஃமின்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ لَا يَحْزُنُهُمُ ٱلْفَزَعُ ٱلْأَكْبَرُ وَتَتَلَقَّىٰهُمُ ٱلْمَلَٰٓئِكَةُ هَٰذَا يَوْمُكُمُ ٱلَّذِى كُنتُمْ تُوعَدُونَ ﴿١٠٣﴾ [الأنبياء: ١٠٣]

“(அந்நாளில் ஏற்படும்) பெரும் திகில் அவர்களை வருத்தாது, மலக்குகள் அவர்களைச் சந்தித்து: “உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாள் இதுதான்” (என்று கூறுவார்கள்).” (அல் அன்பியா : 103)

﴿ وَهُم مِّن فَزَعٍ يَوْمَئِذٍ ءَامِنُونَ ﴿٨٩﴾ ﴾ [النمل: ٨٩]

“மேலும் அவர்கள் அந்நாளின் திடுக்கத்தை விட்டும் அச்சந் தீர்ந்து இருப்பார்கள்.” (அந்நம்ல் : 89)

﴿أَفَمَن يُلْقَىٰ فِى ٱلنَّارِ خَيْرٌ أَم مَّن يَأْتِىٓ ءَامِنًا يَوْمَ ٱلْقِيَٰمَةِ ﴾ [فصلت: ٤٠]

“ஆகவே, நரகத்தில் எறியப்படுபவன் நல்லவனா? அல்லது கியாம நாளன்று அச்சம் தீர்ந்து வருப(வன் நல்ல)வனா?” (புஸ்ஸிலத் : 40)

2. மஹ்சரில் நடக்கும் இன்னும் ஒரு நிகழ்வு, சூரியன் ஒரு மைல் அளவு, படைப்புக்களுக்கு நெருக்கமாக்கிக் கொண்டு வந்து வைக்கப்படுவதாகும். (இதற்காக ஹதீஸில் பயன்படுத்தப்பட்டுள்ள) மீல் (الميل) என்பது சுர்மா குப்பியில் வைக்கப்படும் குச்சி என்றும், தூர அளவைகளில் ஒன்றான மைல்” என்றும் இரு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. எதுவாக இருப்பினும் சூரியன், தலைகளுக்கு மிகச் சமீபமாக இருக்கும்.

யாராவது சூரியனின் உஷ்ணத்தில் இருந்து தப்புவார்களா? எனக் கேட்டால், ‘ஆம்’ என்று கூறலாம். சில மக்கள் தரப்பினரை அந்நாளின் சூரிய உஷ்ணத்தில் இருந்து அல்லாஹ் பாதுகாப்பான். அல்லாஹ் - தனது நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளில் - தனது அந்த நிழலைக் கொடுக்கும் ஏழு தரப்பினர்கள் அவர்களில் வருவார்கள். அது அல்லாஹ் படைத்துள்ள, அவனது அரசின் நிழல் ஆகும். அப்படியான மக்கள் அதனூடாக அந்நாளின் சூரிய உஷ்ணத்தை

விட்டும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். - அல்லாஹ் எங்களையும் அவர்களில் ஆக்கி வைப்பானாக - பின்வருபவர்களே அவர்களாகும்:

நீதம் செலுத்தும் ஆட்சியாளர், அல்லாஹ்வை வழிபடுவதிலேயே வளர்ந்த வாலிபன், அல்லாஹ்வுக்காக நேசித்து, அவனுக்காகவே ஒன்று சேர்ந்து, அவனுக்காகவே பிரிந்து சென்ற இருவர், பள்ளிவாசலில் இருந்து வெளியேறினால் அதில் மீண்டும் நுழையும் வரை உள்ளதால் அதனோடு பிணைப்பாக இருக்கக்கூடியவன், அல்லாஹ்வை தனிமையில் நினைத்து கண்ணீர் விட்ட மனிதன், அழகும், மதிப்பும் கொண்ட பெண் பாவத்திற்கு அழைத்த போது 'நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன்' எனக் கூறிய மனிதன், தர்மம் செய்யும்போது தனது வலக்கரம் கொடுப்பதை இடக்கரம் அறியாத அளவு மறைத்து கொடுத்தவன்.

3. மஹ்ஷர் பூமியில் நிகழும் இன்னும் ஒரு நிகழ்வு, மஹ்ஷர் பூமியில் இருக்கும், நபி (ஸல்) அவர்களின் நீர்த்தடாகத்தில் மக்கள் நீர் பருக வருவதாகும். மார்க்கத்தில் உறுதியாக இருந்த விசுவாசிகள் அதிலிருந்து நீர் பருகுவார்கள். இருதரப்பினர் அதிலிருந்து விரட்டப்படுவார்கள் : ஒன்று இஸ்லாத்தை விட்டு வெளியேறியோர். உதாரணமாக, நபி (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் வெளியேறியார். அதுபோன்று தான் அவர்களுக்குப் பின்னர் மறுமை நாள் வரை இஸ்லாத்தை விட்டு வெளியேறும் அனைவரும் விரட்டப்படுவார்கள்.

இரண்டாவது : பித்அத்வாதிகள். — அது சொல் சார்ந்த பித்அத் ஆகவோ, செயல் சார்ந்த பித்அத் ஆகவோ இருக்கலாம் - வேற்று ஒட்டகங்கள் விரட்டப்படுவது போன்று, இவர்கள் விரட்டப்படுவார்கள்.

இந்த நீர் தடாகத்திற்கு சுவனத்தில் உள்ள கௌசர் எனும் நதியிலிருந்து இரு வடிகுழாய்கள் ஊடாக நீர் வரும். கவ்ஸர் என்பதன் அர்த்தம் அதிக நலவுகள் ஆகும். அதன் நீளம், ஒரு மாத கால பயண தூரம் ஆகும். வானத்தில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையை ஒத்த அளவு அதில் குவளைகள் இருக்கும். அதன் நீர் பாலை விட வெண்மையானது. அதன் மனம் கஸ்தூரியை விட நறுமணமானது. அதன் சுவை தேனை விட இனிமையானது. அதிலிருந்து ஒரு தடவை அருந்துபவர், அதற்குப் பின்னர் தாகிக்கவே மாட்டார். சுவனத்தில் இருந்து இரு வடிகுழாய்கள் அதற்கு நீரைக் கொண்டு வரும். ஒன்று தங்கத்தினால் ஆனது. மற்றது வெள்ளியினால் ஆனது. அதன் அகலம், அதன் நீளமாகிய சன்ஆவுக்கும், மதீனாவுக்கும் இடைப்பட்ட தூரத்தைப் போன்றது.

அல்லாஹ்வின் அடியார்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நீர் தடாகம் தற்போதும் உள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தற்போது எனது ஹவ்ழைப் பார்க்கின்றேன்"[25]

ஒவ்வொரு நபிக்கும் ஒரு ஹவ்ழ் இருக்கும் என்பதும் இது தொடர்பான ஹதீஸ்களில் வந்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக ஒவ்வொரு நபிக்கும் ஒரு ஹவ்ழ் உண்டு. யாருடைய ஹவ்ழில் அதிகமானோர் நீர் பருகுகின்றார்கள் என அவர்கள் பெருமை பேசுவார்கள். நிச்சயமாக எனது ஹவ்ழுக்கே அதிகமான பேர் வரவேண்டும் என நான் ஆசைப்படுகின்றேன்"[26] அல்லாஹ் தன்னுடைய அறிவு ஞானம் மற்றும் அடியார்கள் மீது கொண்ட கிருபை ஆகியவற்றின் காரணமாக முந்தைய நபிமார்களை பின்பற்றிய முஃமினான அடியார்களுக்கும், பொறுத்தமான கூலியை வழங்கும் அடிப்படையில், அவர்களது நபிமார்களின் ஹவ்ழுகளில் இருந்து நீர் குடிக்கச் செய்கின்றான்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

4. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! - மறுமை நாளின் மஹ்ஷர் உடைய நிகழ்வுகளில் இன்னும் ஒன்று மிகப்பெரும் சபாஅத்தாகும். அதாவது, மறுமை நாளில் முஃமினான, காஃபிரான அனைத்து மனிதர்களும் அவ்விடத்தில் நீண்ட நேரம் நின்று கொண்டே இருப்பார்கள். அப்போது அவர்கள் நபிமார்களிடம் சென்று, சுவர்க்கம் என்றோ நரகம் என்றோ ஒரு முடிவைக் காணும் பொருட்டு, விசாரணையை ஆரம்பிக்கப் பரிந்துரை

[25] Gfhhp> K];ypk;
[26] jph;kpjp

செய்யுமாறு கேட்டுக் கொள்வார்கள். ஆனாலும் ஆதம், நூஹ், இப்ராஹீம், மூஸா, ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் ஆகிய ஐந்து நபிமார்களுமே பின்வாங்கி விடுவார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் செல்லுமாறு மக்களுக்கு அறிவுறுத்துவார்கள். மக்கள் நபியவர்களிடம் வந்ததும், நபி (ஸல்) அவர்கள், "அதற்காக நான் இருக்கின்றேன்" என கூறிவிட்டு, அர்சுக்குக் கீழால் அல்லாஹ் நாடும் அளவு நீண்ட நேரம் ஸுஜூதில் இருப்பார்கள். பின்பு நபியவர்களுக்கு அல்லாஹ்வே, தன்னைப் புகழ்வதற்கான, இதுவரை யாருக்கும் கற்றுக் கொடுக்காத பல்வேறு வசனங்களைக் கற்றுக் கொடுக்க, நபியவர்களும் அவ்வாறே புகழ்வார்கள். பின்பு நபி அவர்களிடம், "முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள். சொல்லுங்கள், செவி சாய்க்கப்படும். பரிந்துரை செய்யுங்கள், அது ஏற்கப்படும். கேளுங்கள், கொடுக்கப்படும்" என்று கூறப்படும். அப்போது அவர்கள் விசாரணையை ஆரம்பிக்குமாறு அங்கிருப்பவர்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்வார்கள். அல்லாஹ் அவர்களின் பரிந்துரையை ஏற்று, விசாரணையை ஆரம்பித்து, ஆதம் அலைஹிஸ்ஸலாம் தொடக்கம் மறுமை வரை வந்த முஃமினான, காஃபிரான அனைத்து அடியார்களுக்கும் மத்தியில் தீர்ப்பளிப்பான்.

இந்த சிபாரிசு தான் அல்குர்ஆனில்,

﴿ وَمِنَ ٱلَّيۡلِ فَتَهَجَّدۡ بِهِۦ نَافِلَةٗ لَّكَ عَسَىٰٓ أَن يَبۡعَثَكَ رَبُّكَ مَقَامٗا مَّحۡمُودٗا ٧٩ ﴾ [الإسراء : ٧٩]

"உம்முடைய இறைவன், "மகாமன் மஹ்முதா" என்ற (புகழ் பெற்ற) தலத்தில் உம்மை எழுப்பப் போதும்." (அல் இஸ்ரா : 79)

என்று கூறப்பட்டுள்ள, ஆரம்பமாகவும் இறுதியாகவும் வந்தள அனைவருமே நபியவர்களைப் புகழவும், ஆசைப்படவும் செய்யும் அந்தஸ்தாகும். முஃமினான, காஃபிரான மனிதர்கள், ஜின்கள் அனைவரது விசாரணையும் ஆரம்பிக்கப்பட நபி (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்ததை மூலம், அனைத்து படைப்புக்களுக்கும் உபகாரம் புரிந்துள்ளார்கள்.

மகத்துவம் பொருந்தியதாக இந்த சபாஅத் உள்ளதால் الشفاعة العظمى (மகத்ததுவம்மிக்க சபாஆ) என இதை அறிஞர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அல்லாஹ்வின் அடியார்களே! இவை மறுமையில் மஹ்சரில் நடக்கும் நான்கு அம்சங்களாகும். ஒரு முஸ்லிம் எப்போதும் இவற்றை மனக்கண் முன் வைத்து

அல்லாஹ்வைப் பற்றி அச்சத்தோடு இருந்து, நல்லமல்களில் ஆர்வமாகச் செயற்பட்டு, பாவங்களைத் தவிர்க்கவேண்டும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 03

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبۡتُمۡ أَنَّمَا خَلَقۡنَٰكُمۡ عَبَثٗا وَأَنَّكُمۡ إِلَيۡنَا لَا تُرۡجَعُونَ ١١٥ ﴾ [المؤمنون: ١١٥]

“நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (என்றும் இறைவன் கேட்பான்.)” (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த இரு குத்பாக்களில் மறுமையை ஈமான் கொள்வதன் சில உள்ளடக்கங்களான, ஸூர் ஊதப்படல், மறுமையின் பயங்கர நிகழ்வுகள், படைப்புகள் மீள் எழுப்பப்படல், மக்கள் மஹ்ஷருடைய பூமியில் ஒன்று திரட்டப்படல் ஆகியவை பற்றிப் பேசப்பட்டன. இன்று நாம், விசாரணை மற்றும் கூலி வழங்கல் பற்றிப் பேச உள்ளோம்.

1. அல்லாஹ்வின் அடியார்களே! விசாரணை, கூலி வழங்கல் என்பன அல்குர்ஆன் ஸுன்னா மற்றும் இஜ்மா ஆகிய மூலாதாரங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّ إِلَيۡنَآ إِيَابَهُمۡ ٢٥ ثُمَّ إِنَّ عَلَيۡنَا حِسَابَهُم ٢٦ ﴾ [الغاشية: ٢٥-٢٦]

“நிச்சயமாக, நம்மிடமே அவர்களுடைய மீளுதல் இருக்கிறது. பின்னர், நிச்சயமாக நம்மிடமே அவர்களைக் கேள்வி கணக்கு கேட்பதும் இருக்கிறது.” (அல் காசியா : 25, 26)

﴿ مَن جَآءَ بِٱلۡحَسَنَةِ فَلَهُۥ عَشۡرُ أَمۡثَالِهَاۖ وَمَن جَآءَ بِٱلسَّيِّئَةِ فَلَا يُجۡزَىٰٓ إِلَّا مِثۡلَهَا وَهُمۡ لَا يُظۡلَمُونَ ١٦٠ ﴾ [الأنعام: ١٦٠]

“எவர் ஒருவர் (ஒரு) நன்மையைச் செய்கிறாரோ அவருக்கு அதுபோல் பத்துப் பங்கு (நன்மை) உண்டு. எவர் ஒருவர் (ஒரு) தீமையைச் செய்கிறாரோ அதைப்போன்ற அளவுடைய கூலியே கொடுக்கப்படுவார் - அவர்கள் அநியாயம் செய்யப்படவும் மாட்டார்கள்.” (அல் அன்ஆம் : 160)

﴿ وَنَضَعُ ٱلۡمَوَٰزِينَ ٱلۡقِسۡطَ لِيَوۡمِ ٱلۡقِيَٰمَةِ فَلَا تُظۡلَمُ نَفۡسٞ شَيۡـٔٗاۖ وَإِن كَانَ مِثۡقَالَ حَبَّةٖ مِّنۡ خَرۡدَلٍ أَتَيۡنَا بِهَاۗ وَكَفَىٰ بِنَا حَٰسِبِينَ ٤٧ ﴾ [الأنبياء: ٤٧]

“இன்னும், கியாம நாளில் மிகத் துல்லியமான தராசுகளையே நாம் வைப்போம். எனவே எந்த ஓர் ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டாது. மேலும் (நன்மை, தீமையில்) ஒரு கடுகு அளவு எடையிருப்பினும், அதனையும்

நாம் (கணக்கில்) கொண்டு வருவோம். அவ்வாறே கணக்கெடுக்க நாமே போதும்." (அல் அன்பியா : 47)

2. அல்லாஹ்வின் அடியார்களே! விசாரணையும், கூலி வழங்குதலும் இறைஞானத்தின் தேட்டங்களாகும். ஏனெனில் அல்லாஹ் வேதங்களை இறக்கினான், ரஸூல்மார்களை அனுப்பினான். பின்னர், அவர்கள் கொண்டுவந்தவற்றை ஏற்றுக்கொள்ளுமாறும், நடைமுறைப்படுத்துவது கட்டாயமாக உள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்துமாறும் அடியார்கள் மீது அல்லாஹ் விதித்தான். அதை எதிர்ப்பவர்களோடு போராடுமாறு கூறியதோடு, அவர்களது உயிர்களையும் பிள்ளைகளையும் பெண்களையும் சொத்துக்களையும் ஹலால் ஆக்கினான். எனவே, விசாரணையோ, கூலி வழங்கலோ இல்லை என்றிருந்தால், இந்த சட்டங்கள் அனைத்துமே அர்த்தமற்றவையாகிவிடும். ஞானமிக்க ரப்பு அவ்வாறான அர்த்தமற்ற விடயங்களை செய்வதை விட்டும் தூய்மையானவன்.
3. அல்லாஹ்வின் அடியார்களே! விசாரணை இரண்டு வகைப்படும்: 1. எடுத்துக்காட்டல் விசாரணை 2. கேள்வி மற்றும் தண்டனைக்காண விசாரணை. இதற்கு பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்:
நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'மறுமையில் யாராவது விசாரிக்கப்பட்டால், அவருக்கு அழிவு நிச்சயம்' என்று கூறிய போது, ஆயிஷா (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்,

﴿ فَأَمَّا مَنْ أُوتِيَ كِتَٰبَهُۥ بِيَمِينِهِۦ ۝٧ فَسَوْفَ يُحَاسَبُ حِسَابًا يَسِيرًا ۝٨ ﴾ [الإنشقاق: ٧-٨]

"யாருடைய ஏடு வலக்கரத்தில் கொடுக்கப்படுகின்றதோ, அவர் இலகுவாக விசாரிக்கப்படுவார்" (அல் இன்சிகாக் : 7,8) என்று கூறியுள்ளானே?' என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், "அது எடுத்துக்காட்டல் மாத்திரமே! யாராவது கடுமையாக தீர விசாரிக்கப்பட்டால் நிச்சயம் அவர் தண்டிக்கப்படுவார்" என்று கூறினார்கள்.[27]

அல்லாஹ்வின் அடியார்களே! முதல் தரப்பினரது பாவங்களை அவர்களிடம் எடுத்துக்காட்டி, அவற்றை உலகில் தான் மறைத்திருந்ததாக அல்லாஹ் கூறிவிட்டு, மறுமையில் அவற்றை மன்னித்து விடுவான். இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் இறைநம்பிக்கையாளரை தன் பக்கம் நெருங்கச்செய்து, அவர்மீது

[27] புகாரி : 6537, முஸ்லிம் : 2876

தன் திரையைப் போட்டு அவரை மறைத்துவிடுவான். பிறகு அவரை நோக்கி, “நீ செய்த இன்ன பாவம் உனக்கு நினைவிருக்கிறதா? நீ செய்த இன்ன பாவம் உனக்கு நினைவிருக்கிறதா?” என்று கேட்பான். அதற்கு அவர், ஆம், என் இறைவா! என்று கூறுவார். (இப்படி ஒவ்வொரு பாவமாக எடுத்துக்கூறி) அவர் (தாம் செய்த) எல்லாப் பாவங்களையும் ஒப்புக் கொள்ளச் செய்வான். அந்த இறைநம்பிக்கையாளர் ‘நாம் இத்தோடு ஒழிந்தோம்’ என்று தம்மைப் பற்றிக் கருதிக்கொண்டிருக்கும்போது இறைவன், ‘இவற்றையெல்லாம் உலகில் நான் பிறருக்குத் தெரியாமல் மறைத்துவைத்திருந்தேன். இன்று உனக்கு அவற்றை மன்னித்துவிடுகிறேன்’ என்று கூறுவான். அப்போது அவரது நற்செயல்களின் பதிவேடு அவரிடம் கொடுக்கப்படும். இறைமறுப்பாளர்களையும் நயவஞ்சகர்களையும் நோக்கி சாட்சியாளர்கள், “இவர்கள்தான், தம் இறைவன்மீது பொய்யைப் புனைந்துரைத்தவர்கள். இதோ! இத்தகைய அக்கிரமக்காரர்கள்மீது இறைவனின் சாபம் உண்டாகும்” என்று கூறுவார்கள்.”[28]

4. அல்லாஹ்வின் அடியார்களே! அந்த நாளில் மக்களின் செயல்கள் சில தராசுகள் மூலம் அளக்கப்பட்டு, அவர்கள் விடயத்தில் அல்லாஹ்வின் நீதி வெளிக்காட்டப்படும்.

﴿ وَنَضَعُ ٱلْمَوَٰزِينَ ٱلْقِسْطَ لِيَوْمِ ٱلْقِيَٰمَةِ فَلَا تُظْلَمُ نَفْسٌ شَيْـًٔا ۖ وَإِن كَانَ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ أَتَيْنَا بِهَا ۗ وَكَفَىٰ بِنَا حَٰسِبِينَ ﴿٤٧﴾ ﴾ [الأنبياء: ٤٧]

“இன்னும், கியாம நாளில் மிகத் துல்லியமான தராசுகளையே நாம் வைப்போம். எனவே எந்த ஓர் ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயம் செய்யப்படமாட்டாது. மேலும் (நன்மை, தீமையில்) ஒரு கடுகு அளவு எடையிருப்பினும், அதனையும் நாம் (கணக்கில்) கொண்டு வருவோம். அவ்வாறே கணக்கெடுக்க நாமே போதும்.” (அல் அன்பியா : 47)

கேள்வி: நன்மை, தீமைகள் தொட்டுணர முடியாத அம்சங்களாக இருக்கும்போது அவை எவ்வாறு நிறுக்கப்படலாம்?

பதில் : அல்லாஹ்வின் வல்லமையால் அமல்கள் தொட்டுணர முடியுமான பொருட்களாக மாறிவிடும். அமல்கள் அல்லாதவையும் இவ்வாறு தான். உதாரணமாக, ‘மரணம்’ தொட்டுணர முடியாத ஒரு உள்ளார்ந்த அம்சம்.

[28] புகாரி : 2441, முஸ்லிம் : 2768

ஆனால், மறுமையில் அது ஒரு செம்மறி ஆட்டின் தோற்றத்தில் கொண்டுவரப்பட்டு நரகத்திற்கும் சொர்க்கத்துக்கும் மத்தியில் அறுக்கப்படும். பின்பு, "சுவனவாதிகளே! இனி மரணம் இல்லாத நிரந்தர வாழ்க்கை தான். நரகவாதிகளே! இனி மரணம் இல்லாத நிரந்தர வாழ்க்கை தான்."[29] என்று அறிவிக்கப்படும்.

கேள்வி: விசுவாசிகள், நிராகரிப்பாளர்கள் அனைவரது செயல்களும் நிறுக்கப்படுமா? அல்லது நிறுக்கப்படுவது விசுவாசிகளின் அமல்கள் மாத்திரமா?

பதில்: மறுமையில் நிறுக்கப்படுவது விசுவாசிகளின் செயல்கள் மாத்திரமே! ஒரு விசுவாசியிடம் எந்தப் பாவங்களும் இல்லை என்று இருந்தால், அவன் அவ்வாறே சுவனம் நுழைந்து விடுவான். அவனிடம் ஏதாவது பாவங்கள் இருந்தால் அதற்காக தண்டிக்கப்பட்டு, பின் அல்லாஹ் அவனை சுவனத்தில் நுழைய வைப்பான். அல்லது அல்லாஹ் அவனை மன்னித்து விட, அவன் வேதனைகள் இன்றி சுவனம் நுழைவான். அல்லது பரிந்துரை செய்பவர்களின் பரிந்துரையால், அல்லது அல்லாஹ் அவன் மீது செய்யும் உபகாரத்தினால் அவன் சுவனம் நுழைவான். நிராகரிப்பாளர்களின் செயல்கள் நிறுக்கப்படமாட்டாது. ஏனெனில், அல்லாஹ் அவற்றுக்குப் பதிலாக இவ்வுலகிலேயே ஆரோக்கியம், விசாலமான வாழ்வாதாரம் என்பவற்றை வழங்கி விடுவான். எனவே அவன் மறுமையில் அல்லாஹ்வை சந்தித்தால் நரகைத் தவிர வேறு எதுவும் அவனுக்கு இருக்கமாட்டாது. அவன் எவ்வளவு வணக்கங்கள் செய்தாலும் சரியே! நிராகரிப்பாளர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ أُولَٰٓئِكَ ٱلَّذِينَ لَيۡسَ لَهُمۡ فِي ٱلۡأٓخِرَةِ إِلَّا ٱلنَّارُۖ وَحَبِطَ مَا صَنَعُواْ فِيهَا وَبَٰطِلٞ مَّا كَانُواْ يَعۡمَلُونَ ١٦ ﴾ [هود: ١٦]

"இத்தகையோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறெதுவுமில்லை. இதில் (உலக வாழ்வில்) இவர்கள் செய்த யாவும் அழிந்து விட்டன. அவர்கள் செய்துகொண்டிருப்பவையும் வீணானவையே!" (ஹூத் : 16)

﴿ وَقَدِمۡنَآ إِلَىٰ مَا عَمِلُواْ مِنۡ عَمَلٖ فَجَعَلۡنَٰهُ هَبَآءٗ مَّنثُورًا ٢٣ ﴾ [الفرقان: ٢٣]

[29] புகாரி : 4730, முஸ்லிம் : 2849

“இன்னும், நாம் அவர்கள் (இம்மையில்) செய்த செயல்களின் பக்கம் முன்னோக்கி அவற்றை (நன்மை எதுவும் இல்லாது) பரத்தப்பட்ட புழுதியாக ஆக்கிவிடுவோம்” (அல் புர்கான் : 23)

﴿ مَّثَلُ ٱلَّذِينَ كَفَرُواْ بِرَبِّهِمۡۖ أَعۡمَٰلُهُمۡ كَرَمَادٍ ٱشۡتَدَّتۡ بِهِ ٱلرِّيحُ فِي يَوۡمٍ عَاصِفٖۖ لَّا يَقۡدِرُونَ مِمَّا كَسَبُواْ عَلَىٰ شَيۡءٖۚ ذَٰلِكَ هُوَ ٱلضَّلَٰلُ ٱلۡبَعِيدُ ١٨ ﴾ [إبراهيم: ١٨]

“தங்களுடைய இறைவனை நிராகரித்தவர்களுக்கு உதாரணமாவது: அவர்களுடைய செயல்கள் சாம்பல் போன்றவை கடும் புயல்காற்று வீசும் நாளில் அச்சாம்பலைக் காற்று அடித்துக் கொண்டுபோய்விட்டது (அவ்வாறே,) தாங்கள் சம்பாதித்ததிலிருந்து எதன்மீதும் அவர்கள் சக்தி பெறமாட்டார்கள்: இதுவே வெகுதூரமான வழிகேடாகும்.” (இப்ராஹீம் : 18)

﴿ وَٱلَّذِينَ كَفَرُوٓاْ أَعۡمَٰلُهُمۡ كَسَرَابِۭ بِقِيعَةٖ يَحۡسَبُهُ ٱلظَّمۡـَٔانُ مَآءً حَتَّىٰٓ إِذَا جَآءَهُۥ لَمۡ يَجِدۡهُ شَيۡـٔٗا وَوَجَدَ ٱللَّهَ عِندَهُۥ فَوَفَّىٰهُ حِسَابَهُۥۗ وَٱللَّهُ سَرِيعُ ٱلۡحِسَابِ ٣٩ ﴾ [النور: ٣٩]

“அன்றியும், எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களுடைய செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல்நீரைப் போலாகும் தாகித்தவன் அதைத் தண்ணீரென்றே எண்ணுகிறான் இறுதியில், அதற்கு (அருகில்) அவன் வரும்பொழுது, அதனை எந்தப் பொருளாகவும் காணமாட்டான் (மறுமையில் இது ஓரிறை நிராகரிப்போரின் நிலையாகும் அங்கு) அதனிடத்தில் அவன் அல்லாஹ் (அவனுக்கு விதித்திருக்கும் முடி)வை(யே) காண்கின்றான் (அதன்படி அல்லாஹ்) அவன் கணக்கைத் தீர்க்கிறான் மேலும், அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் துரிதமானவன்.” (அந்நூர் : 39)

எனவே சுருக்கமாக, நயவஞ்சகர்கள் மற்றும் நிராகரிப்பாளர்கள், நன்மை தீமைகளுக்கு மத்தியில் ஒப்பிட்டுப் பார்க்கும் அமைப்பில் விசாரிக்கப்படமாட்டார்கள். மாறாக நிரூபித்துக், கண்டிக்கும் அமைப்பிலேயே விசாரிக்கப்படுவார்கள். முன்னர் வந்த இப்னு உமர் ரலியல்லாஹு அவர்கள் ஹதீஸும் அதையே உணர்த்துகின்றது “அவை அவர்களிடம் காட்டப்பட்டு அவர்கள் ஏற்றுக் கொள்ள செய்யப்படுவார்கள். அவர்கள் மறுத்தால் அவர்களது உறுப்புகள் அவர்களுக்கு எதிராக சாட்சியமளிக்கும். பின்பு எல்லா படைப்புகள் முன்னிலையிலும் அவர்கள் அழைக்கப்பட்டு,

﴿ هَٰٓؤُلَآءِ ٱلَّذِينَ كَذَبُواْ عَلَىٰ رَبِّهِمۡۚ أَلَا لَعۡنَةُ ٱللَّهِ عَلَى ٱلظَّٰلِمِينَ ۝١٨ ﴾ [هود: ١٨]

“இவர்கள்தாம் தங்கள் இறைவன் மீது பொய் கூறியவர்கள்! இத்தகைய அநியாயக்காரர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்” (ஹூத் : 18) என்று கூறப்படும். பின்பு அவர்கள் நரில் தள்ளப்படுவார்கள்.

இது அல்லாஹ் ஒரு முஃமினின் பாவங்களை மறைப்பான் என்பதையும், காபிர்களை மானபங்கப்படுத்துவான் என்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

5. விசுவாசிகளே! விசாரணைக் காட்சிகளில் இன்னுமொன்று என்னவென்றால், மக்கள் விசாரணைக்காக அழைக்கப்படும் போது, அவர்கள் தமக்கேற்படும் கவலை காரணமாக முழந்தாளிட்டு விடுவார்கள்.
அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَتَرَىٰ كُلَّ أُمَّةٖ جَاثِيَةٗۚ كُلُّ أُمَّةٖ تُدۡعَىٰٓ إِلَىٰ كِتَٰبِهَا ٱلۡيَوۡمَ تُجۡزَوۡنَ مَا كُنتُمۡ تَعۡمَلُونَ ۝٢٨ هَٰذَا كِتَٰبُنَا يَنطِقُ عَلَيۡكُم بِٱلۡحَقِّۚ إِنَّا كُنَّا نَسۡتَنسِخُ مَا كُنتُمۡ تَعۡمَلُونَ ۝٢٩ ﴾ [الجاثية: ٢٨-٢٩]

“(அன்று) ஒவ்வொரு சமுதாயத்தையும் முழந்தாளிட்டிருக்க (நபியே!) நீர் காண்பீர் ஒவ்வொரு சமுதாயமும் அதனதன் (பதிவுப்) புத்தகத்தின் பக்கம் அழைக்கப்படும். ‘இன்று, நீங்கள் (உலகில்) செய்திருந்ததற்குரிய கூலி கொடுக்கப்படுவீர்கள்.’ ‘இது, உங்களைப் பற்றிய உண்மையைக் கூறும் நம்முடைய புத்தகம் நிச்சயமாக நாம் நீங்கள் செய்துவந்ததைப் பதிவு செய்துகொண்டிருந்தோம்” (என்று). (அல் ஜாஸியா : 28,29)

6. விசுவாசிகளே! அல்லாஹ்வுடன் தொடர்பான கடமைகளில் ஓர் அடியானிடம் முதன் முதலாக விசாரிக்கப்படுவது தொழுகை பற்றியே! அது சீராகி விட்டால், அவனது ஏனைய அமல்கள் சீராகிவிடும். அது சீர்கெட்டு விட்டால் ஏனைய அமல்கள் சீர்கெட்டு விடும்.[30]
7. மனிதர்களுக்குரிய கடமைகள் தொடர்பாக ஒரு அடியானின் ஒரு அடியான் முதன்முதலாக விசாரிக்கப்படுவது உயிர்கள் (இரத்தங்கள்) பற்றியே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “மறுமை நாளில் மனிதர்கள் மத்தியில் முதன்முதலாக தீர்ப்பளிக்கப்படுவது உயிர்கள் (இரத்தங்கள்) தொடர்பானவை ஆகும்”[31]

[30] தபரானி, அல்முஃஜமுல் அவ்ஸத் : 1880
[31] புகாரி : 6533, முஸ்லிம் : 1678

8. அந்நாளில் மனிதன் தான் செய்த பாவங்களை மறுத்தால், அவனது செவி, பார்வை, தோல் போன்ற உறுப்புக்கள் அவனுக்கு எதிராக சாட்சியம் அளிக்கும்.

﴿ وَيَوْمَ يُحْشَرُ أَعْدَآءُ ٱللَّهِ إِلَى ٱلنَّارِ فَهُمْ يُوزَعُونَ ۝١٩ حَتَّىٰٓ إِذَا مَا جَآءُوهَا شَهِدَ عَلَيْهِمْ سَمْعُهُمْ وَأَبْصَٰرُهُمْ وَجُلُودُهُم بِمَا كَانُوا۟ يَعْمَلُونَ ۝٢٠ وَقَالُوا۟ لِجُلُودِهِمْ لِمَ شَهِدتُّمْ عَلَيْنَا ۖ قَالُوٓا۟ أَنطَقَنَا ٱللَّهُ ٱلَّذِىٓ أَنطَقَ كُلَّ شَىْءٍ وَهُوَ خَلَقَكُمْ أَوَّلَ مَرَّةٍ وَإِلَيْهِ تُرْجَعُونَ ۝٢١ ﴾ [فصلت: ١٩-٢١]

“மேலும், அல்லாஹ்வின் பகைவர்கள் (நரகத்) தீயின்பால் ஒன்று திரட்டப்படும் நாளில், (ஆரம்பம் முதல் கடைசி வரையில் உள்ளோரை வரிசைப்படுத்தி, ஒருவரையொருவர் முந்திவிடாது வானவர்களால்) அவர்கள் தடுத்து நிறுத்தப்படுவார்கள்.

இறுதியில், அவர்கள் அதை (அத்தீயை) அடையும்போது, அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவர்கள் செய்து கொண்டிருந்தவை பற்றிச் சாட்சி கூறும்.

அவர்கள் தம் தோல்களை நோக்கி, ”எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?” என்று கேட்பார்கள் அதற்கு அவை: ‘எல்லாப் பொருட்களையும் பேசும்படிச் செய்யும் அல்லாஹ்வே, எங்களைப் பேசும்படிச் செய்தான் அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான் பின்னரும், நீங்கள் அவனிடமே கொண்டுவரப்படுகிறீர்கள்’ என்று கூறும்.” (ஹாமீம் அஸ் ஸஜ்தா : 19-21)

﴿ ٱقْرَأْ كِتَٰبَكَ كَفَىٰ بِنَفْسِكَ ٱلْيَوْمَ عَلَيْكَ حَسِيبًا ۝١٤ ﴾ [الإسراء: ١٤]

“நீ உன் புத்தகத்தைப் படித்துப் பார்! இன்றைய தினம் உனக்கு நீயே கணக்குப் பார்ப்பவனாக இருக்கப் போகிறாய் (என்று அப்போது நாம் கூறுவோம்).” (அல் இஸ்ரா : 14)

என்ற வசனத்தை விளக்கும்போது ஹஸன் அல் பஸரி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘ஆதம் உடைய மகனே! உன்னைப் படைத்தவன் உனக்கு நீதமே செலுத்தினான்! உன்னை விசாரிப்பவனாக உன்னையே வைத்து விட்டான்.’ மேற்படி வசனத்தை விளக்கும்போது கதாதா (ரஹ்) அவர்கள், ‘இவ்வுலகில் வாசிக்காதவர்கள் எல்லாம் மறுமையில் வாசிப்பார்கள்’

என்று கூறியதாக, இப்னு ஜரீர் அத்தபரீ அவர்கள் தமது அல்குர்ஆன் விரிவுரை நூலில் அறிவித்துள்ளார்கள்.

9. முஸ்லிம்களே! அந்த நாளில் 70 ஆயிரம் பேர் விசாரணைகளில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்படுவார்கள். அவர்களுக்கு விசாரணையோ, தண்டனையோ கிடையாது. அவர்கள் தாம் - அல்லாஹ் எங்களையும் அவர்களில் ஆக்கி அருள்வானாக - அல்லாஹ் கடமையாக்கிய வணக்கங்களை செய்துகொண்டும், நன்மைகளுக்காக விரைந்து செயல்பட்டுக் கொண்டும், தடுக்கப்பட்டவற்றையும் வெறுக்கப்பட்டவற்றையும் விலகியும் இருந்த பரிபூரண விசுவாசிகள். அபூ உமாமா (ரலி) அவர்களது ஹதீஸ், இச்சிறப்பில் மேற்கூறிய எண்ணிக்கையை விட அதிகமானோர் உள்வாங்கப்படுவர் என்பதை உணர்த்தி நிற்கின்றது. நபியவர்கள் கூறியதாக அவர்கள் அறிவிக்கின்றார்கள் "அல்லாஹ் எனது சமுதாயத்தில் 70000ம் பேரையும், அதில் ஒவ்வொரு ஆயிரம் பேரோடும் மேலும் 70000 பேர்களையும், மேலும், அவன் மூன்று அள்ளுகள் மூலமாக இன்னும் பலரையும் விசாரணையோ, தண்டனையோ இன்றி சுவனம் நுழைவிப்பதாக அல்லாஹ் எனக்கு வாக்களித்துள்ளான்.[32]

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

10. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அறிந்து கொள்ளுங்கள்! விசாரணை என்பது மனித, ஜின்கள் அனைவருக்கும் பொதுவானது. ஏனெனில் ஜின்களும் இந்த் தூதில் உள்நுழைப்பவர்கள் என்பது அறியப்பட்ட ஒன்றே! அவர்களும் கடமைகள் விதிக்கப்பட்டவர்களே! எனவே, மனிதர்கள் சுவனம் நுழைவது போன்று, ஜின்களும் சுவனம் நுழைவர்கள் என்பதை இவ்வசனம் அறிவிக்கின்றது.

[32] திர்மிதி : 2437

﴿ قَالَ ٱدۡخُلُواْ فِيٓ أُمَمٖ قَدۡ خَلَتۡ مِن قَبۡلِكُم مِّنَ ٱلۡجِنِّ وَٱلۡإِنسِ فِي ٱلنَّارِۖ ﴾ [الأعراف: ٣٨]

"(அல்லாஹ்) கூறுவான்: ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் உங்களுக்குமுன் சென்றுவிட்ட கூட்டத்தார்களுடன் நீங்களும் (நரக) நெருப்பில் நுழையுங்கள்" (அல் அஃராப் : 38)

﴿ لَمۡ يَطۡمِثۡهُنَّ إِنسٞ قَبۡلَهُمۡ وَلَا جَآنّٞ ٧٤ ﴾ [الرحمن: ٧٤]

"அவர்களை (அந்த சுவனப் பெண்களை) இவர்களுக்கு முன்னர் எந்த மனிதனும், எந்த ஜின்னும் தீண்டியதில்லை." (அர் ரஹ்மான் : 74)

11. அல்லாஹ்வின் அடியார்களே! அந்த நாளில் ஒரு மிருகத்திற்காக இன்னொன்றிடமிருந்து அல்லாஹ் பழிவாங்கிக் கொடுப்பான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நிச்சயமாக நீங்கள் உரிமைகளை உரியவர்களுக்கு (மறுமையில்) நிறைவேற்றுவீர்கள். எந்தளவுக்கென்றால், கொம்புகளற்ற ஆடுகளுக்காக, கொம்புகளால் குத்திய ஆடுகளிடமிருந்து அல்லாஹ் பழிவாங்குவான்."[33] தனது நீதத்தாலும், அறிவு ஞானத்தினாலும் மனித பகுத்தறிவை திகைப்படையச் செய்யும் அல்லாஹ் எவ்வளவு தூய்மையானவன்!

அல்லாஹ்வின் அடியார்களே! இவை மறுமை விசாரணை மற்றும் கூலி வழங்கலுடன் தொடர்பான பத்து விடயங்கள் ஆகும். அல்லாஹ் எம்மையும், உங்களையும், ஏட்டை வலக்கரத்தால் பெற்றுக்கொள்ளும், இலகுவாக விசாரிக்கப்படும் மக்களில் ஆக்கிவைப்பானாக!

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக!

---

[33] முஸ்லிம் : 2582

அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஊன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள்,

அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين و الحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 04

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில்

தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَٰكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ﴿١١٥﴾ ﴾ [المؤمنون: ١١٥]

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" (ஸூரா அல் முஃமினூன் : 115)

1. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையை ஈமான் கொள்வதன் இன்னுமொரு உள்ளடக்கம், சுவர்க்கம் மற்றும் நரகம் ஆகியவற்றையும், அவை தான் படைப்புகளின் நிரந்தர வாழ்விடம் என்பதையும் ஈமான் கொள்வதாகும். சுவனம் என்பது பயபக்தியுடையோருக்காக அல்லாஹ்வினால் தயார்படுத்தப்பட்டுள்ள இன்ப இடமாகும். அவர்கள், விசுவாசம் கொள்ளுமாறு அல்லாஹ் கட்டாயப்படுத்தியுள்ள அம்சங்களை ஈமான் கொண்டு, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் அடிபணிந்தவர்கள். அதில் கண்கள் காணாத, செவிகள் கேள்விப்படாத, எந்த மனிதனுடைய உள்ளத்திலும் தோன்றாத பல்வேறு இன்பங்கள் உள்ளன.
அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ أُوْلَٰٓئِكَ هُمْ خَيْرُ ٱلْبَرِيَّةِ ﴿٧﴾ جَزَآؤُهُمْ عِندَ رَبِّهِمْ جَنَّٰتُ عَدْنٍ تَجْرِي مِن تَحْتِهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًا رَّضِيَ ٱللَّهُ عَنْهُمْ وَرَضُواْ عَنْهُ ذَٰلِكَ لِمَنْ خَشِيَ رَبَّهُۥ ﴿٨﴾ ﴾ [البينة: ٧-٨]

நிச்சயமாக எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்களைச் செய்தார்களோ, அவர்கள்தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள். அவர்களுடைய (நற்)கூலி அவர்களுடைய இறைவனிடத்திலுள்ள நிலையான சுவர்க்கச் சோலைகளாகும் அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் அவற்றில் அவர்கள் என்றென்றும் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள் அல்லாஹ்வும் அவர்களைப் பற்றித் திருப்தி அடைந்தான் அவர்களும் அவனைப் பற்றித் திருப்தி அடைவார்கள் அது, எவர் தம் இறைவனுக்குப் பயப்படுகிறாரோ அவருக்கு உரியதாகும். (அல் பய்யினா : 7,8)

﴿ فَلَا تَعْلَمُ نَفْسٌ مَّآ أُخْفِيَ لَهُم مِّن قُرَّةِ أَعْيُنٍ جَزَآءَۢ بِمَا كَانُواْ يَعْمَلُونَ ﴿١٧﴾ ﴾ [السجدة: ١٧]

அவர்கள் செய்துகொண்டிருந்தவற்றிற்குக் கூலியாக, அவர்களுக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண்களின் குளிர்ச்சியை (மறுமையின் பேரின்பத்தை) எந்த ஓர் ஆன்மாவும் அறிந்துகொள்ள முடியாது. (அஸ் ஸஜ்தா : 17)

2. விசுவாசிகளே! சுவனம் 100 படித்தரங்களைக் கொண்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக, உபாதத் பின் ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "சுவர்க்கம் நூறு படித்தரங்களைக் கொண்டது. ஒவ்வொரு படித்தரங்களுக்கும் இடையில் நூறு வருடங்கள் பயணிக்கும் தூரம் இருக்கும். (அப்பான் என்பவர், வானத்திலிருந்து பூமி வரைக்கும் உள்ள தூரம் என்று கூறினார்.) 'பிர்தவ்ஸ்' என்பதே அவற்றில் உயர்ந்த படித்தரமாகும். நான்கு நதிகளும் அங்கிருந்துதான் ஊற்றெடுக்கின்றன. அர்ஷ் அதற்கு மேல் உள்ளது. நீங்கள் அல்லாஹ்விடம் கேட்டால், பிர்தவ்ஸையே கேளுங்கள்!"[34]
3. முஸ்லிம்களே! சுவனம் என்பது பல பூஞ்சோலைகள் ஆகும். அது ஒரு பூஞ்சோலை அல்ல. அந்தப் பல்வேறுபட்ட பூஞ்சோலைகள் இன்பங்களில் சமமானவை அல்ல. அவை வேறுபட்டவை. சுவனவாதிகள் தமது நற்கருமங்களுக்கு ஏற்ப வெவ்வேறான இன்பங்களில் இருப்பார்கள். இரு பூஞ்சோலைகளில் உள்ள அனைத்தும் தங்கம் ஆகும். மேலும் இரு பூஞ்சோலைகளில் உள்ள அனைத்தும் வெள்ளியாகும். முதல் இரு பூஞ்சோலைகளையும் பற்றி அல்லாஹ்,

﴿ وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهِۦ جَنَّتَانِ ﴿٤٦﴾ ﴾ [الرحمن: ٤٦]

"தன் இறைவனின் முன் (விசாரணைக்காக மறுமையில்) நிற்க வேண்டும் என்பதைப் பயந்தவனுக்கு இரு சுவர்க்கச் சோலைகள் இருக்கின்றன." (அர் ரஹ்மான் : 46) என்றும், அவற்றை விட இன்பத்தில் குறைந்த இரு சுவனச் சோலைகள் பற்றி,

﴿ وَمِن دُونِهِمَا جَنَّتَانِ ﴿٦٢﴾ ﴾ [الرحمن: ٦٢]

"மேலும், அவ்விரண்டு (சோலைகளும்) அல்லாமல், வேறு இரு சுவர்க்கச் சோலைகளும் இருக்கின்றன." (அர் ரஹ்மான் : 62) என்றும் கூறுகின்றான்.

இமாம் இப்னு ஜரீர் அவர்கள் மேற்படி வசனத்தின் விளக்கத்தில், நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா (ரலி) அவர்களைத் தொட்டும் இவ்வாறு

[34] ஆதாரம் : அஹ்மத்

அறிவிக்கின்றார்கள் : “தங்கத்தினால் ஆன இரு பூஞ்சோலைகள் நெருக்கமாக்கப்பட்டவர்களுக்கும், வெள்ளியினால் ஆன இரு பூஞ்சோலைகள் வலப்புறத்தாருக்கும் உண்டு”

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் கைஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், “இரு பூஞ்சோலைகளில் உள்ள பாத்திரங்கள் மற்றும் ஏனைய அனைத்தும் வெள்ளியினாலும், மேலும் இரு பூஞ்சோலைகளில் உள்ள பாத்திரங்கள் மற்றும் ஏனைய அனைத்தும் தங்கத்தினாலும் இருக்கும்”[35]

அல்லாஹ்வின் அடியார்களே! இங்கு நாம், முகர்ரபீன்கள் ‘நெருக்கமாக்கப்பட்டவர்கள்’ (முகர்ரபூன்) மற்றும் ‘வலதுபுறத்தார்’ (அஸ்ஹாபுல் யமீன்) ஆகியோருக்கு இடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வது நல்லது. முபர்ரபூன்கள் அல்லது ஸாபிகூன்கள் (நெருக்கமாக்கப்பட்டவர்கள், முந்திக்கொண்டவர்கள்) என்பவர்கள் கடமைகளையும் உபரியானவற்றையும் நிறைவேற்றியதுடன் பாவங்களையும் வெறுக்கப்பட்டவற்றையும் தவிர்த்து நடந்தவர்கள். அஸ்ஹாபுல் யமீன் அல்லது அப்ரார் (வலப்புறத்தார், நன்மக்கள்) கடமைகளை நிறைவேற்றி இருப்பார்கள். பாவங்களைத் தவிர்த்து இருப்பார்கள். ஆனால் உபரியானவற்றில் முழுமையாக கவனம் செலுத்தி இருக்கமாட்டார்கள். சிலவேளை வெறுக்கப்பட்ட சிலவற்றை செய்திருப்பார்கள். சிறிய, பெரிய பாவங்கள் அனைத்தையும் இருதரப்பினருமே தவிர்த்து இருப்பார்கள். அவர்கள் உடனே தவ்பா செய்தும் விடுவார்கள். தவ்பாவுக்கு முன்னர் இருந்த நிலையை விட பின்னரான நிலை சிறந்ததாக இருக்கும். ஆனால் இவர்களை விட ‘ஸாபிகூன்கள்’ (முந்தியவர்கள்) பாவங்களை முற்றுமுழுதாகத் தவிர்ந்திருப்பார்கள்.

அல்லாஹ்வின் அடியார்களே! ‘அப்ரார்கள்’ ஆன நன்மக்களை விட ‘ஸாபிகூன்கள்’ ஆன முந்திக்கொண்டவர்கள் சிறப்பிக்கப்படுவதற்கான காரணம் தெளிவானது. முந்திக்கொண்டவர்கள் தொழுகை, நோன்பு, உம்ரா, ஹஜ் போன்ற வணக்கங்களில் கடமையான, உபரியான அனைத்தையும் நிறைவேற்றி, தங்களால் இயன்றவரை அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, அவனுக்கு மாறு செய்வதில் எச்சரிக்கையாக இருந்தார்கள். அதே நேரம் ஏனைய மனிதர்களுக்கும் பயனளிக்கும் விதத்தில் நன்மையை நோக்கி அழைப்பு விடுக்கவும், நற்கருமங்களை ஏவி, தீமையைத் தடுக்கவும், ஜிஹாத்,

[35] புகாரி : 7444, முஸ்லிம் : 180

தர்மம், பிரிந்துள்ளவர்களை ஒற்றுமைப்படுத்துதல், பள்ளிவாசல் மற்றும் கிணறுகள் கட்டுதல் போன்ற நற்கருமங்களிலும் ஈடுபடவும் செய்திருப்பார்கள்.

‘அப்ரார்’ எனப்படும் நன்மக்கள் மேற்கூறியவற்றில் ஸாபிகூன்களை விடக் குறைவாகவே இருப்பார்கள். தம்மையும் ஏனையோரையும் சீர்திருத்தல் ஆகிய இரு வழிகளிலும் மிகப்பெரிய அளவு தம்மை அர்ப்பணித்திருக்க மாட்டார்கள். எனவே ஸாபிகூன்களை விடக் குறைவான கூலியே இவர்களுக்குண்டு.

‘அப்ரார்’ களை விட ‘ஸாபிகூன்’கள் சிறப்பிக்கப்பட்டுள்ளமைக்கான இன்னும் ஒரு ஆதாரம், அல்லாஹ் ஸாபிகூன்களை பற்றி,

﴿ يُحَلَّوْنَ فِيهَا مِنْ أَسَاوِرَ مِن ذَهَبٍ ﴾ [فاطر: ٣٣]

“அங்கே அவர்கள் பொன்னாலான கடகங்கள் அணிவிக்கப்படுவார்கள்” (பாதிர் : 33)

என்றும், ‘அப்ரார்’கள் பற்றி,

﴿ وَحُلُّوٓاْ أَسَاوِرَ مِن فِضَّةٍ ﴾ [الإنسان: ٢١]

“அவர்கள் வெள்ளியாலாகிய கடகங்கள் அணிவிக்கப்பட்டிருப்பர்” (அல் இன்ஸான் : 21) என்றும் கூறி இருப்பதாகும்.

நெருக்கமாக்கப்பட்ட முந்திக்கொண்டவர்கள் மற்றும் நன்மக்களான வலப்புறத்தார் ஆகியோருக்கு மத்தியில் உள்ள வேறுபாட்டைப் பற்றி ஸூரா அல் வாகிஆவின் ஆரம்பத்திலும் இறுதியிலும் அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளான்.

4. அல்லாஹ்வின் அடியார்களே! ஒரே வர்ணனையைக் கொண்ட சுவனவாதிகளுக்கு இடையில் கூட வேறுபாடுகள் இருக்கும். நெருக்கமாக்கப்பட்ட முந்திக்கொண்டவர்கள் தமது அமல்களுக்கு ஏற்ப, இன்பங்களில் வேறுபட்டிருப்பர். நன்மக்களான வலப்புறத்தாரும் அவ்வாறுதான். அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள், “சொர்க்கவாசிகள் தங்களுக்கு மேலேயுள்ள (சிறப்பு) அறைகளில் வசிப்பவர்களை, அடிவானில் கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ பயணிக்கின்ற ஒளிரும் நட்சத்திரத்தைப் பார்ப்பதைப் போன்று (ஆர்வத்துடன்) பார்ப்பார்கள். (தகுதியில்) தமக்கும் அவர்களுக்குமிடையேயுள்ள ஏற்றத் தாழ்வைக் கண்டு (ஏக்கம் கொண்டுதான்) அப்படிப் பார்ப்பார்கள்” என்று கூறினார்கள்.

(இதைக் கேட்ட) நபித்தோழர்கள், “அல்லாஹ்வின் தூதரே! அவை நபிமார்கள் தங்குமிடங்கள்தானே? அவற்றை மற்றவர்கள் அடைய முடியாதல்லவா?” என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள், “இல்லை. என் உயிர் யார் கையில் உள்ளதோ அவன்மீது ஆணையாக! அ(ங்கே தங்குப)வர்கள் அல்லாஹ்வின் மீது (உறுதியான) நம்பிக்கை கொண்டு இறைத் தூதர்களை உண்மையாளர்கள் என ஏற்றுக்கொண்டவர்களே ஆவர்” எனப் பதிலளித்தார்கள்[36]

5. அல்லாஹ்வின் அடியார்களே! சுவனத்தின் மிக முக்கிய இன்பங்களில் ஒன்று, அதில் உள்ள பெண்களாகும். சுவனத்தில் ஒரு முஃமினுக்கு தனது இவ்வுலக மனைவியரோடு, இரு ‘ஹூருல ஈன்’ பெண்கள் வழங்கப்படும் எனவும், அவரது அமல்களுக்கு ஏற்ப, அல்லாஹ் தான் நாடிய அளவு அவருக்கு அதிகப்படுத்திக் கொடுப்பான் எனவும் அல்குர்ஆன், ஸுன்னா அறிவிக்கின்றது. இப்படியான பெண்கள் வழங்கப்படுவது தொடர்பாக பல்வேறு அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் வந்துள்ளன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَحُورٌ عِينٌ ۝٢٢ كَأَمْثَٰلِ ٱللُّؤْلُوِ ٱلْمَكْنُونِ ۝٢٣ ﴾ [الواقعة: ٢٢-٢٣]

“(அங்கு இவர்களுக்கு) “ஹூருல் ஈன்“ (என்னும் நெடிய கண்களையுடைய கன்னியர்)களும் இருப்பர். மறைக்கப்பட்ட முத்துக்களைப் போல் அவர்கள் இருப்பார்கள்.” (அல் வாகிஆ : 22,23) ஸிஃதி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: “ஹௌரா எனப்படுவது, சுர்மா உடைய அழகான கண்களை உடையவள் ஆகும். ஈன் எனப்படுவது அகன்ற அழகான கண்களை உடையவளாகும். ஒரு பெண்ணின் கண் அழகாக இருப்பது அவள் அழகானவள் என்பதற்கான மிகத் தெளிவான ஆதாரமாகும். “மறைக்கப்பட்ட முத்துக்களைப் போல் அவர்கள் இருப்பார்கள்.” என்பதன் அர்த்தம், அழகான, தூய்மையான, மிருதுவான, வெள்ளை நிற முத்துக்களைப் போன்றவர்கள் என்பதாகும். ‘மறைக்கப்பட்ட’ என்றால், ஏனைய கண்கள், காற்று, மற்றும் சூரியனை விட்டும் மறைக்கப்பட்டவர்கள் என்பதாகும். அதன் நிறம் மிக அழகிய நிறமாக இருக்கும். அதில் எந்தக் குறைகளும் இருக்க மாட்டாது. ஹூருல் ஈன்களும் அவ்வாறுதான். அவர்களிடம் எவ்விதக் குறைகளும் இருக்க மாட்டாது. மாறாக அழகிய வர்ணனைகளையும், பரிபூரணத் தன்மைகளையும் கொண்டவர்கள். அவர்களிடம் நீர் எதை கூர்ந்து நோக்கினாலும் உள்ளத்தை மகிழ்விக்கும், பார்வையைக் கவரும் தன்மைகளையே காண்பீர்கள்.

[36] புகாரி : 3256, முஸ்லிம் : 2831

இன்னுமொரு வசனத்தில் அவர்கள்,

﴿ كَأَنَّهُنَّ ٱلْيَاقُوتُ وَٱلْمَرْجَانُ ۝٥٨ ﴾ [الرحمن: ٥٨]

"அவர்கள் வெண் முத்தைப் போன்றும், பவளத்தைப் போன்றும் இருப்பார்கள்." (ஸூரா அர் ரஹ்மான் : 58) என்று வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது அவர்கள் தெளிந்த நிலையில் முத்தைப் போன்றும், வெண்மையில் பவளத்தைப் போன்றும் இருப்பார்கள். சுவனப் பெண்களின் வர்ணனைகளைப் பற்றி சூரா அல் வாகிஆவில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ إِنَّآ أَنشَأْنَٰهُنَّ إِنشَآءً ۝٣٥ فَجَعَلْنَٰهُنَّ أَبْكَارًا ۝٣٦ عُرُبًا أَتْرَابًا ۝٣٧ ﴾ [الواقعة: ٣٥-٣٧]

"நிச்சயமாக (ஹூருல் ஈன் என்னும் பெண்களாகிய) அவர்களை பிரத்யேகமாக நாம் உண்டாக்கினோம். பின்னர், நாம் அவர்களைக் கன்னிகளாகவும் பாசமுடையோராகவும், சமவயதினராகவும் ஆக்கியுள்ளோம்." (அல் வாகிஆ : 35-37)

"உருபன்" என்றால் தமது கணவர்களுடன் அன்பாக இருப்பவர்கள் என்று அர்த்தமாகும். "அத்ராபன்" என்றால் சம வயதை உடையவர்கள், அதாவது 33 வயதில் இருப்பார்கள் என்று அர்த்தமாகும். அவர்கள் தூய்மையானவர்கள் என்றும் அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَلَهُمْ فِيهَآ أَزْوَٰجٌ مُّطَهَّرَةٌ ۖ وَهُمْ فِيهَا خَٰلِدُونَ ۝٢٥ ﴾ [البقرة: ٢٥]

"இன்னும், அவர்களுக்கு அங்கு தூய துணைவியரும் உண்டு மேலும், அவர்கள் அங்கே நிரந்தரமாக இருப்பார்கள்." (அல் பகரா : 25)

இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: மாதவிடாய், மலம், சலம் போன்ற, உலக பெண்களிடம் உள்ள அனைத்து குறைகளையும் விட்டு அவர்கள் தூய்மையாக இருப்பார்கள். ரோஷம் கொள்ளல், கணவர்களுக்கு நோவினை செய்தல், அநீதி இழைத்தல், இன்னொருவரை விரும்புதல் போன்ற அனைத்தையும் விட்டு அவர்களது உள்ளம் சுத்தமாக இருக்கும்.

அதேபோன்று, தமது பார்வையை கணவர்களோடு மாத்திரம் சுருக்கிக்கொள்பவர்கள் என்றும் அல்லாஹ் அவர்களை வர்ணித்துள்ளான்.

﴿ حُورٌ مَّقْصُورَٰتٌ فِى ٱلْخِيَامِ ۝٧٢ ﴾ [الرحمن: ٧٢]

“ஹூர் (என்னும் அக்கன்னியர் அழகிய) கூடாரங்களில் மறைக்கப்பட்டிருப்பர்.” (அர்ரஹ்மான் : 72)

﴿ فِيهِنَّ قَٰصِرَٰتُ ٱلطَّرۡفِ ﴾ [الرحمن: ٥٦]

“அவற்றில் அடக்கமான பார்வையுடைய கன்னியர் இருக்கின்றனர்” (அர்ரஹ்மான் : 56)

இப்னுல் கைய்யிம் அவர்கள் கூறுகின்றார்கள் : அல்லாஹ் அவர்களை ‘கூடாரங்களில் மறைக்கப்பட்டிருப்பர்’ என்று வர்ணித்து இருப்பதன் அர்த்தம், அவர்கள் தமது கணவர்களைத் தவிர வேறு யாருக்காகவும் அலங்காரப்படுத்திக் கொள்வது தடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். அதாவது, அவர்கள் தமது கணவர்களுக்காகவென்றே வைக்கப்பட்டவர்கள். அவர்களது வீடுகளில் இருந்து வெளியேற மாட்டார்கள். வேறு யாரையும் விரும்ப மாட்டார்கள். அவர்கள் ‘அடக்கமான பார்வையுடைய கன்னியர்’ என்றும் அல்லாஹ் வர்ணித்துள்ளான். முதல் வர்ணனையை விட இது முழுமையானது. பெண்கள் தமது கணவர் மீது உள்ள அன்பினாலும், அவர்களைப் பொருந்திக் கொண்டமையினாலும் அவர்களை மாத்திரமே பார்ப்பார்கள். அவர்களைத் தாண்டி அவர்களது பார்வை வேறு யாரையும் நோக்கிச் செல்ல மாட்டாது.
ஸுன்னாவிலும் அவர்களது அழகும் வனப்பும் வியப்பூட்டும் விதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது:
நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “சொர்க்கத்தில் நுழைகின்ற முதல் அணியினர் பௌர்ணமி இரவின் (ஒளிரும்) சந்திரனைப் போன்று தோற்றமளிப்பார்கள். அவர்களுக்குப் பின்னே வருபவர்கள் பேரொளி வீசும் நட்சத்திரத்தைப் போன்றிருப்பார்கள். அவர்களின் உள்ளங்கள் ஒரே மனிதனின் உள்ளத்தைப் போன்றிருக்கும். அவர்களுக்கிடையே எந்த மனவேறுபாடும் இருக்காது. எந்தவிதக் குரோதமும் இருக்காது.
அவர்களில் ஒவ்வொருவருக்கும் இரு துணைவியர் இருப்பார்கள். அவ்விருவரில் ஒவ்வொருவரின் காலின் எலும்பு மஜ்ஜைகூட (கால்) சதைக்கு அப்பாலிருந்து (பேரழகின் காரணத்தால்) வெளியே தெரியும்.
அவர்கள் காலையும் மாலையும் அல்லாஹ்வைத் துதித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் நோயுறமாட்டார்கள். அவர்கள் மூக்குச் சிந்தமாட்டார்கள் சளி உமிழமாட்டார்கள் அவர்களுடைய பாத்தி ரங்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும்

ஆனவை. அவர்களின் சீப்புகள் தங்கத்தால் ஆனவை. அவர்களின் தூப கலசங்களின் எரிபொருள் அகிலாக இருக்கும். அவர்களது வியர்வையில் கஸ்தூரி மணம் கமழும்."[37]

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் அவர்கள் கூறுகின்றார்கள்: "அவர்களது எலும்பின் உள்ளே இருக்கும் மஜ்ஜை கூறப்பட காரணம், அந்தளவு பளபளப்பாக இருப்பார்கள் என்பதைக் காட்டுவாகும். அதாவது எலும்பின் உள்ளே இருப்பவை, எலும்பு, தோல் என்பவற்றினால் மறைய மாட்டாது"

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "சொர்க்கவாசிகளில் (ஹூருல் ஈன் களில்) ஒரு பெண் உலகத்தாரிடையே தோன்றினால், வானத்திற்கும் பூமிக்கு மிடையே உள்ள அனைத்தையும் அவள் ஒளிறச்செய்துவிடுவாள் பூமியை நறுமணத்தால் நிரப்பிவிடுவாள். அவளது தலையிலுள்ள முக்காடு உலகத்தையும் அதிலுள்ளவற்றையும்விடச் சிறந்ததாகும்."[38]

குறிப்பு : ஹூருல் ஈன் பெண்களுக்கு சொல்லப்பட்ட வர்ணனைகள் இவ்வுலக பெண்களுக்கும் உண்டா? என அஷ்ஷெய்க். முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உஸைமீன் அவர்களிடம் கேட்கப்பட்ட போது, "வெளிப்படையான வர்ணனைகள் உட்பட அனைத்திலும் ஹூருல் ஈன்களை விட இவ்வுலக பெண்கள் சிறந்தவர்களாக இருப்பார்கள் என்று தான் எனக்குத் தோன்றுகின்றது" என்று பதில் அளித்தார்கள்

6. முஸ்லிம்களே! சுவனத்தின் இன்பங்களில் ஒன்று அதன் பானங்களாகும். அது நான்கு வகைப்படும்: நீர், பால், மது மற்றும் தேன் என்பவையே அவை ஆகும். அவை அனைத்தும் சுவனபதியில் ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கும். விசுவாசிகள் அவற்றிலிருந்து பருகுவார்கள். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ مَّثَلُ ٱلْجَنَّةِ ٱلَّتِي وُعِدَ ٱلْمُتَّقُونَ ۖ فِيهَآ أَنْهَٰرٌ مِّن مَّآءٍ غَيْرِ ءَاسِنٍ وَأَنْهَٰرٌ مِّن لَّبَنٍ لَّمْ يَتَغَيَّرْ طَعْمُهُۥ وَأَنْهَٰرٌ مِّنْ خَمْرٍ لَّذَّةٍ لِّلشَّٰرِبِينَ وَأَنْهَٰرٌ مِّنْ عَسَلٍ مُّصَفًّى ۖ ﴾ [محمد: ١٥]

"இறையச்சமுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது : அதில் மாறுபடாத (தெளிந்த) நீரைக்கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மதுரச ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன" (முஹம்மத் : 15)

---

[37] புகாரி : 3246, முஸ்லிம் : 2834

[38] புகாரி : 2796

“மாறுபடாத” என்றால் நீண்ட காலம் இருந்ததால் மாற்றம் அடையாதது என்பதாகும். “சுவை மாறாத பாலாறுகளும்,” அதாவது புளிப்பு தன்மை போன்ற மாற்றங்கள் அதில் ஏற்பட்ட ஏற்பட்டிருக்க மாட்டாது. ஏனெனில் அவ்வாறு அது மாற்றமடைய அது கால்நடைகளிடமிருந்து கறக்கப்பட்டவை அல்ல. மாறாக, அவற்றை அல்லாஹ் ஆறுகளாகவே படைத்தான்.

“அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மதுரச ஆறுகளும்” என்ற அல்லாஹ்வின் வசனம், அது உலக மதுவைப்போல கசப்பானதாக இருக்க மாட்டாது என்பதையும், மாறாக மதுரமாக இருக்கும் என்பதையும் உணர்த்துகின்றது. இன்னும் ஒரு வசனத்தில் “அதில் கெடுதியும் இராது” எனவும் வந்துள்ளது. அதாவது அந்த மது வயிற்று வலியை ஏற்படுத்த மாட்டாது. அதே வசனத்தில் “அதனால் அவர்கள் மதிமயக்கப்படவும் மாட்டார்கள்” என்றும் வந்துள்ளது. அதாவது, அந்த மதுவின் காரணமாக அவர்களுடைய புத்தி பேதலிக்க மாட்டாது. “தெளிவான தேன் ஆறுகளும்” என்ற வசனம், பொதுவாக தேனில் இருக்கும் அழுக்குகள், கலவைகள் அனைத்தையும் விட்டுத் தூய்மைப்படுத்தப்பட்டிருக்கும் என்பதை உணர்த்துகின்றது.

7. சுவனவாதிகளின் இன்பங்களில் ஒன்று, அங்குள்ள அங்குள்ள உணவும் பழங்களும் ஆகும். சுவனவாதிகள் அங்கு நுழைந்தவுடன் முதல் விருந்தாக மீனின் ஈரலில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு துண்டு வழங்கப்படும். ஏனெனில் அது மிகுந்த சுவையுடையது.
ஸவ்பான் (ரலி) அவர்களது ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது, “அந்த யூதர், அவர்கள் சொர்க்கத்துக்குள் நுழையும்போது அவர்களுக்கு வழங்கப்படும் வெகுமதி என்ன? என்று கேட்டார். அதற்கு, “மீனின் ஈரலில் ஒட்டிக்கொண்டிருக்கும் தனித்துண்டு” என்று நபியவர்கள் பதிலளித்தார்கள். அதற்கடுத்து அவர்களுக்கு வழங்கப்படும் உணவு என்ன? என்று அவர் கேட்க, “சொர்க்கத்தின் ஓரங்களில் மேய்ந்துகொண்டிருக்கும் காளைமாடு அவர்களுக்காக அறு(க்கப்பட்டு விருந்தளி)க்கப்படும்” என்று பதிலளித்தார்கள். அதற்குப் பின் அவர்கள் எதை அருந்துவார்கள்? என்று அவர் கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “அங்குள்ள ஸல்ஸபீல் என்றழைக்கப்படும் நீரூற்றிலிருந்து (அருந்துவார்கள்)” என்று பதிலளித்தார்கள்.[39]

[39] முஸ்லிம் : 315

சுவனவாதிகளின் உணவு மற்றும் கனிகள் தொடர்பாக நிறைய ஆதாரங்கள் உள்ளன. இவ்விடத்தில் அவற்றை கூற இயலாது. சுருக்கமாக,

﴿ وَأَمْدَدْنَٰهُم بِفَٰكِهَةٍ وَلَحْمٍ مِّمَّا يَشْتَهُونَ ﴿٢٢﴾ ﴾ [الطور: ٢٢]

"இன்னும், அவர்கள் விரும்பும் கனிவகைகளையும் இறைச்சியையும், நாம் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்போம்." (அத்தூர் : 22)

என்ற வசனம் அவற்றையெல்லாம் உள்ளடக்கியுள்ளது.

8. விசுவாசிகளே சுவனவாதிகளின் மிகப்பெரிய இன்பம், மறுமையில் அல்லாஹ்வின் திருமுகத்தைப் பார்ப்பதே!
ஸுஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "சொர்க்கவாசிகள் சொர்க்கத்தில் நுழைந்துவிடும்போது (அவர்களிடம்) அல்லாஹ், "உங்களுக்கு நான் இன்னும் கூடுதலாக ஏதேனும் வழங்க வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா?" என்று கேட்பான். அதற்கு அவர்கள் "(இறைவா!) நீ எங்கள் முகங்களை வெண்மையாக்க வில்லையா? எங்களை நரகத்திலிருந்து காப்பாற்றி சொர்க்கத்திற்குள் பிரவேசிக்கச் செய்யவில்லையா (இதைவிடக் கூடுதலாக எங்களுக்கு வேறென்ன வேண்டும்)?" என்று கேட்பார்கள். அப்போது அல்லாஹ், (தன்னைச் சுற்றிலும் இருக்கும்) திரையை விலக்கி (அவர்களுக்கு தரிசனம் தந்தி)டுவான். அப்போது தம் இறைவனைக் (காணும் அவர்களுக்கு அவனைக்) காண்பதைவிட மிகவும் விருப்பமானது வேறெதுவும் வழங்கப்பட்டிராது."[40]
9. முஸ்லிம்களே! சுவனவாதிகளின் இன்பங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் அவை தீர்ந்து விடமாட்டாது.
அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "சொர்க்கத்தில் (மக்கள் ஒன்றுகூடும்) சந்தை ஒன்று உண்டு. அங்கு ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சொர்க்கவாசிகள் வருவார்கள். அப்போது வட பருவக் காற்று வீசி அவர்களுடைய முகங்களிலும் ஆடையிலும் (கஸ்தூரி மண்ணை) வாரிப்போடும். உடனே அவர்கள் மேன்மேலும் அழகும் பொலிவும் பெறுவார்கள். பிறகு அழகும் பொலிவும் அதிகமாகப் பெற்ற நிலையில் அவர்கள் தங்கள் துணைவியரிடம் திரும்பிச் செல்வார்கள். அப்போது அவர்களிடம் அவர்களுடைய துணைவியர், "எங்களிடமிருந்து சென்ற பின்னர் கூடுதலான அழகும் பொலிவும்

[40] முஸ்லிம் : 181

பெற்றுவிட்டீர்களே!” என்று கூறுவர். அதற்கு அவர்கள், ”அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் சென்ற பிறகு நீங்களும்தான் கூடுதலான அழகும் பொலிவும் பெற்றிருக்கிறீர்கள்” என்று கூறுவர்.”[41]

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அறிந்து கொள்ளுங்கள்! சுவன இன்பங்கள் ஆளுக்காள் பிரம்மாண்டமாக வேறுபட்டிருக்கும். அதற்குப் பின்வரும் ஹதீஸ் போதுமான ஆதாரமாகும்:

முஃகீரா பின் ஷ/ஃபா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக (பின்வருமாறு) மக்களுக்கு அறிவித்தார்கள்: “மூசா (அலை) அவர்கள் இறைவனிடம், “சொர்க்கவாசிகளில் மிகக் குறைந்த தரம் உடையவர் யார்?” என்று கேட்டார்கள். அதற்கு இறைவன் கூறினான்: சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்குள் நுழைந்த பிறகு ஒரு மனிதர் வருவார். அவரிடம் “நீ (சென்று) சொர்க்கத்திற்குள் நுழைந்துகொள்!” என்று கூறப்படும். அதற்கு அவர், “இறைவா! எப்படி (நான் நுழைவேன்)? மக்கள் அனைவரும் அவரவர் இருப்பிடங்களைப் பிடித்துக்கொண்டு தமக்குக் கிடைத்ததை எடுத்துக்கொண்டுவிட்டார்களே?” என்று கூறுவார். அவரிடம், “உலக அரசர்களில் ஒருவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியைப் போன்று உனக்குக் கிடைத்தால் திருப்திதானே?” என்று கேட்கப்படும். அதற்கு அவர் “திருப்தியடைவேன், இறைவா!” என்பார். அப்போது இறைவன், “இதுவும் உனக்குக் கிடைக்கும் இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும், இதைப் போன்று இன்னொரு மடங்கும் உனக்குக் கிடைக்கும்” என்று (நான்கு

[41] முஸ்லிம் : 2833

மடங்கைக்) குறிப்பிடுவான். ஐந்தாம் மடங்கு பற்றிக் கூறும்போது, அவர், “திருப்தியடைந்துவிட்டேன், இறைவா!” என்பார்.

உடனே இறைவன், “இதுவும் உனக்குக் கிடைக்கும் இதைப் போன்று பத்து மடங்கும் உனக்குக் கிடைக்கும். உன் மனம் விரும்புகின்ற, உன் பார்வை ரசிக்கின்ற அனைத்தும் உனக்குக் கிடைக்கும்” என்பான். அப்போது அவர், “திருப்தியடைந்தேன், இறைவா!” என்று கூறுவார்.

பின்னர் மூசா (அலை) அவர்கள், “இறைவா! சொர்க்கத்தில் மிக உயர்ந்த தரமுடையவர் யார்?” என்று கேட்டார்கள். அதற்கு இறைவன், “அவர்களை நானே தேர்ந்தெடுத்தேன். அவர்களுக்குரிய தரங்களையும் நானே நேரடியாகத் தீர்மானித்தேன். அவற்றின் மீது நான் முத்திரையும் வைத்துவிட்டேன். எனவே, (அவர்களின் தரத்தை) எந்தக் கண்ணும் பார்த்திராது எந்தக் காதும் கேட்டிராது. எந்த மனிதனின் உள்ளத்திலும் தோன்றியிராது” என்றான்.”[42]

அல்லாஹ்வின் அடியார்களே! சுவனம் மற்றும் அதன் இன்பங்கள் பற்றிய பேச்சு நின்று கொண்டே செல்லும். சுவனம், அதன் வர்ணனைகள் மற்றும் சுவனவாதிகள் பற்றி விரிவாக அறிய விரும்பினால், அவா், இப்னுல் கய்யிம் அவா்களின், “ஹாதில் அா்வாஹ் இலா பிலாதில் அப்ராஹ்” எனும் நூலை வாசிக்கட்டும்.

10. இறை விசுவாசிகளே! சுவனமும் நரகமும் படைக்கப்பட்டுள்ளன. தற்போதும் அவை உள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ ۞ وَسَارِعُوٓاْ إِلَىٰ مَغْفِرَةٍ مِّن رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا ٱلسَّمَٰوَٰتُ وَٱلْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ ١٣٣ ﴾ [آل عمران: ١٣٣]

“இன்னும், நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவர்க்கத்தின் பக்கமும் விரைந்து செல்லுங்கள் அதன் (சுவர்க்கத்தின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது. அது இறையச்சமுடையோருக்காகவே தயார் செய்யப்பட்டுள்ளது.” (ஆலு இம்ரான் : 133)

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒரு நாள்) அதிகாலைத் தொழுகையின்போது நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம், “பிலாலே! இஸ்லாத்தில் இணைந்தபின் நீங்கள் ஈடுபாட்டுடன் செய்த ஒரு நற்செயல் குறித்து எனக்குச் சொல்வீராக! ஏனெனில், சொர்க்கத்தில் எனக்கு முன்பாக,

[42] முஸ்லிம் : 189

(நீங்கள் நடந்து செல்லும்) காலணி ஓசையை நான் செவியுற்றேன்" என்று கூறினார்கள்[43]

சுவனம் தற்போது படைக்கப்பட்டுள்ளது என்பதற்கான இன்னும் ஒரு ஆதாரம், "நான் சுவனத்தில் நுழைந்தேன். அப்போது அங்கே முத்தாலான கூடாரங்களைக் கண்டேன். அதன் மண் (நறுமணம் வீசும்) கஸ்தூரியாக இருந்தது." என்று நபியவர்கள் கூறிய ஹதீஸாகும். [44] நரகம் தற்போது படைக்கப்பட்டது என்பதற்கான என்பதற்கு,

﴿ وَٱتَّقُواْ ٱلنَّارَ ٱلَّتِيٓ أُعِدَّتۡ لِلۡكَٰفِرِينَ ١٣١ ﴾ [آل عمران: ١٣١]

"நிராகரிப்பாளர்களுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ள நரகை அஞ்சிக்கொள்ளுங்கள்" (ஆலு இம்ரான் : 131)

நபி (ஸல்) அவர்கள், அம்ர் பின் லுஹய் நரகில் தன்னுடைய குடல்களை இழுத்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவன் தான் முதன் முதலாக நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தை மாற்றி, சிலைகளை அரேபியத் தீபகற்பத்திற்குக் கொண்டுவந்தவன்.[45]

தனது பூனைக்குச் சாப்பிடவும் கொடுக்காமல், அதுவாகப் பூச்சி புழுக்களை சாப்பிடவும் விடாமல் கட்டி வைத்து கொடுமைகொடுத்த ஒரு பெண்ணைநபி (ஸல்) அவர்கள் நரகில் கண்டார்கள்.[46]

11. அல்லாஹ்வின் அடியார்களே! சுவனம், நரகம் ஆகியன அழியாமல் நிரந்தரமாக நிலைத்து நிற்கும். அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் வெளிப்படையான ஆதாரங்கள் அவற்றை உறுதிப்படுத்துகின்றன. அல்குர்ஆனில் பல இடங்களில் காபிர்கள் நரகிலும், முஃமின்கள் சுவனத்திலும் நிரந்தரமாக இருப்பர் என உறுதிபட கூறப்பட்டுள்ளது. அவை அழிந்து போகும் என்று யாராவது கூறினால், அது ஏற்றுக்கொள்ள முடியாத பலவீனமான கருத்தாகும். ஏனெனில், வெளிப்படையான ஆதாரங்களுக்கு அது மாற்றமாக உள்ளது. அல்லாஹ் மனிதர்களோடு புரிந்து கொள்ள முடியுமான விதத்திலேயே பேசி உள்ளான்.

[43] புகாரி : 1149
[44] முஸ்லிம் : 163
[45] புகாரி : 3521, முஸ்லிம் : 2856
[46] Gfhhp : 2365> K];ypk; : 2242

எனவே, அவ்வாதாரங்களை வந்துள்ளது போல், திரிபுபடுத்தாமலோ, வலிந்து விளக்கம் கொடுக்காமலோ ஏற்றுக்கொள்வது கட்டாயம் ஆகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை சுவனத்தை ஈமான் கொள்வது தொடர்பான 10 அம்சங்கள் ஆகும். ஒவ்வொரு முஃமினும் இவற்றை அறிந்து சுவனம் பற்றி நினைவுடன் இருக்க வேண்டும். அதனூடாக உற்சாகத்துடன் அமல் செய்யவும் சோம்பல் மற்றும் கவனயீனத்தை விட்டும் எச்சரிக்கையாக இருக்கவும் முடியும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம். யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 05

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள்

வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ۝١١٥ ﴾ [المؤمنون: ١١٥]

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த சில குத்பாக்களில், மறுமையை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களான, ஸூர் ஊதப்படல், மறுமையின் பயங்கரங்கள், படைப்புக்கள் எழுப்பப்படல், மக்கள் மஹ்சரில் ஒன்று திரட்டப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனத்தின் இன்பங்கள் ஆகியன பற்றிப் பேசப்பட்டது. இன்று நரகின் தன்மைகள் பற்றிப் பேசப்பட்டது. அல்லாஹ் எங்களை அதனை விட்டும் பாதுகாப்பானாக!

1. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையை ஈமான் கொள்வதில் நுழையும் இன்னும் ஓர் அம்சம், சுவர்க்கம் மற்றும் நரகத்தையும், அவை தான் படைப்புக்களின் நிறைந்தத் தங்குமிடம் என்பதையும் ஈமான் கொள்வதாகும். சுவனம் என்பது பயபக்தி உடைய விசுவாசிகளுக்காக அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்துள்ள இன்ப இடமாகும். நரகம் என்பது இரு மக்கள் தரப்பினருக்காக அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்துள்ள வேதனைக்குரிய இடமாகும். அவர்கள் தான், நிராகரிப்பாளர்களும், விசுவாசிகளில் பெரும் பாவம் செய்பவர்களும் ஆகும்.

2. விசுவாசிகளே! விசுவாசிகளான நரகவாதிகளை அல்லாஹ் தண்டிப்பதற்கான நோக்கம், அவர்களைப் பாவங்களை விட்டும் தூய்மைப்படுத்துவதாகும். பின்பு அல்லாஹ் அவர் களை தனது சுவனத்தில் வாழவைப்பான். ஏனெனில், சுவனம் தூய்மையானது. தூய்மையான ஆத்மாக்களைத் தவிர வேறு யாரும் அதில் நுழைய முடியாது. பாவங்கள் அசுத்தமானவை. எனவே, அவற்றை விட்டும் தூய்மைப்படுத்துவது கட்டாயமாகும். இது இறைவனின் அறிவு ஞானத்தின் ஒரு வெளிப்பாடாகும். சிலவேளை அல்லாஹ் விசுவாசிகளில் பெரும்பாவம் செய்தவர்களை எந்த ஒரு தண்டனையும் இல்லாமல் மன்னித்தும் விடுவான்.

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِۦ وَيَغْفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ﴾ [النساء: ١١٦]

“நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை கற்பிக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான் இது அல்லாத (பாவ)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்” (அந்நிஸா : 116)

அல்லாஹ் யாரையாவது மன்னித்துவிட்டால். அது அவனது பேருபகாரமாகும். அவன் யாரையாவது தண்டித்து விட்டால், அது அவனது நீதமாகும். ஒரு நிராகரிப்பாளனை அல்லாஹ் தண்டிப்பதன் நோக்கம், அவனை இழிவுபடுத்தி, சிறுமைப்படுத்துவதாகும். தண்டனையின் விளைவாக அவன் சுத்தப்படுத்தப்படுவோ தூய்மைப்படுத்தப்படவோ மாட்டான். ஏனெனில் அவனுள் அசுத்தம் ஆழமாகப் பதிந்துள்ளது. நெருப்பினால் அது நீங்கி விடமாட்டாது. எனவே நிரந்தரமாக அவன் நரகிலேயே இருப்பான்! அல்லாஹ் பாதுகாப்பானாக

3. கற்பனையில் தோன்றாத பல்வேறுபட்ட தண்டனைகளும், வேதனைகளும் நரகில் உண்டு.

﴿إِنَّآ أَعۡتَدۡنَا لِلظَّٰلِمِينَ نَارًا أَحَاطَ بِهِمۡ سُرَادِقُهَاۚ وَإِن يَسۡتَغِيثُواْ يُغَاثُواْ بِمَآءٖ كَٱلۡمُهۡلِ يَشۡوِي ٱلۡوُجُوهَۚ بِئۡسَ ٱلشَّرَابُ وَسَآءَتۡ مُرۡتَفَقًا ٢٩﴾ [الكهف: ٢٩]

“அநியாயக்காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம் அதனுடைய சுவர்கள் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள் (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக்கருக்கிவிடும் மிகக்கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக்கெட்டதாகும்.” (அல் கஹ்ப் : 29)

﴿إِنَّ ٱللَّهَ لَعَنَ ٱلۡكَٰفِرِينَ وَأَعَدَّ لَهُمۡ سَعِيرًا ٦٤ خَٰلِدِينَ فِيهَآ أَبَدٗاۖ لَّا يَجِدُونَ وَلِيّٗا وَلَا نَصِيرٗا ٦٥ يَوۡمَ تُقَلَّبُ وُجُوهُهُمۡ فِي ٱلنَّارِ يَقُولُونَ يَٰلَيۡتَنَآ أَطَعۡنَا ٱللَّهَ وَأَطَعۡنَا ٱلرَّسُولَا۠ ٦٦﴾ [الأحزاب: ٦٤-٦٦]

“நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களைச் சபித்து, அவர்களுக்காகக் கொழுந்துவிட்டெரியும் (நரக) நெருப்பைச் சித்தம் செய்திருக்கிறான். அதில் அவர்கள் நிரந்தரமாகத் தங்குபவர்கள், தங்களைக் காப்பவரையோ, உதவி செய்பவரையோ அவர்கள் காணமாட்டார்கள். நெருப்பில் அவர்களுடைய முகங்கள் புரட்டப்படும் அந்நாளில், ”ஆ, கைசேதமே! அல்லாஹ்வுக்கு நாங்கள்

வழிப்பட்டிருக்க வேண்டுமே! இத்தூதருக்கும் நாங்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டுமே!" என்று கூறுவார்கள்." (அல் அஹ்ஸாப் : 64-66)

4. நிராகரிப்பாளர்கள் நரகில் நிரந்தரமாக் தங்கி இருப்பார்கள். பாவம் செய்த விசுவாசிகளைப் பொறுத்தவரை, - அல்லாஹ் மன்னிக்காவிட்டால் - குறிப்பிட்ட காலம் வரை அங்கு வேதனை செய்யப்படுவார்கள். நாவின் பாவங்கள், அபத்தின் பாவங்கள், உறவுகளைத் துண்டித்து நடத்தல், ஹராமான செவிமடுப்புக்கள், ஹராமான பார்வைகள், ஹராமான பணத்தை சாப்பிடல் போன்று அவர்கள் செய்த பாவங்களுக்கு ஏற்ப, அவர்கள் அங்கு தண்டிக்கப்படுவார்கள். எனினும் நரக நெருப்பு ஸுஜூதின் உறுப்புக்களைத் தீண்ட மாட்டாது. இது தொழுகை எனும் வணக்கத்திற்கான ஒரு சிறப்பாகும். அவர்களில் சிலரை நரகம் கரண்டைக்கால் வரை தீண்டும். சிலரை முழங்கால் வரையும், மேலும் சிலரை (வேட்டியை இறுகக் கட்டும் இடமான) இடுப்பு வரையிலும், சிலரைக் கழுத்து எலும்பு வரையிலும் நரகம் தீண்டும். பலவீனமான மற்றும் கடுமையான வெவ்வேறாத தண்டனைகள் உள்ளன என்பதற்கு இது ஆதாரமாகும். அவர்கள் நரகில் உரியளவு தண்டிக்கப்பட்டு விட்டால், அங்கமெல்லாம் கரிந்துவிட்ட நிலையில் நரகத்திலிருந்து வெளியேறுவார்கள். அப்போது அவர்கள் மீது ஜீவ நீர் (மாஉல் ஹயாத்) ஊற்றப் படும். உடனே அவர்கள் சேற்று வெள்ளத்தில் விதைப்பயிர் முளைப்பதைப் போன்று (புதுப் பொலிவுடன்) நிறம் மாறிவிடுவார்கள். பாவம் செய்த விசுவாசிகள் தமது பாவங்களில் இருந்து சுத்தப்படுத்தப்பட்டால், சுவர்க்கத்திற்கு அனுப்பப்படுவார்கள்.[47]

5. அல்லாஹ்வின் அடியார்களே! நரகம் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது, பார்க்கப் பயங்கரமானது, கடும் சூடானது. அது பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது என்பதற்கு, இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "அந்த நாளில் நரகம் கொண்டுவரப்படும். அதற்கு 70 ஆயிரம் கடிவாளங்கள் இருக்கும். ஒவ்வொரு கடிவாளத்திலும் 70 ஆயிரம் மலக்குகள் அதை இழுத்துக் கொண்டு வருவார்கள்"[48]

6. அதன் பயங்கரக் காட்சி

---

[47] புகாரி : 7437, 7439, முஸ்லிம் : 182

[48] முஸ்லிம் : 2842

﴿ إِنَّهَا تَرۡمِى بِشَرَرٖ كَٱلۡقَصۡرِ ﴿٣٢﴾ ﴾ [المرسلات: ٣٢]

“(எனினும்) நிச்சயமாக அது(பெரிய) மரத் தண்டுகளைப் போன்ற நெருப்புப் பொறிகளை அது வீசி எறியும்” (அல் முர்ஸலாத் : 32)

என்ற வசனத்தின் ஊடாக அறியப்படுகின்றது. “அல் கஸ்ர்” என்பது, மரத் தண்டுகளாகும். [49] நரகின் தீச்சுவாலைகள், அவற்றின் பருமனில், மரத்தின் தண்டுகளை ஒத்திருக்கும். எகிறிவரும் நரகத் தீச்சுவாலைகள் மரத்தின் வேரைப் போன்றிருக்கும். - அல்லாஹ் பாதுகாப்பானாக –

7. அதன் கடுமையான சூடு, பின்வரும் ஹதீஸ் மூலம் அறியப்படுகிறது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களது நெருப்பு நரக நெருப்பின் 70இல் ஒன்றாகும்.” அப்போது நபித்தோழர்கள், ‘இந்த நெருப்பே போதுமானதே!’ எனக் கூறிய போது, “இதனை விட நரக நெருப்பு 69 மடங்கு கடுமையானது. அவற்றில் ஒவ்வொன்றும் இந்த நெருப்பின் சூட்டைப் போன்றது” என்று கூறினார்கள்[50]

8. முஸ்லிம்களே! நரகத்திற்கு ஏழு வாயில்கள் உண்டு. ஒவ்வொரு வாயிலாலும் சரியாகப் பங்கு வைக்கப்பட்டு, அறியப்பட்ட மக்கள் தொகையினர் நுழைவார்கள்.

﴿ وَإِنَّ جَهَنَّمَ لَمَوۡعِدُهُمۡ أَجۡمَعِينَ ﴿٤٣﴾ لَهَا سَبۡعَةُ أَبۡوَٰبٖ لِّكُلِّ بَابٖ مِّنۡهُمۡ جُزۡءٞ مَّقۡسُومٌ ﴿٤٤﴾ ﴾ [الحجر: ٤٣-٤٤]

“நிச்சயமாக (உன்னைப் பின்பற்றும்) அனைவருக்கும் நரகம் வாக்களிக்கப்பட்ட இடமாகும். அதற்கு ஏழு வாசல்கள் உண்டு. ஒவ்வொரு வாசலுக்கும் அவர்களிலிருந்து பங்கிடப்பட்ட ஒரு தொகையினர் உள்ளனர்” (அல் ஹிஜ்ர் : 43,44)

9. நரவாதிகளின் உணவு ஆளுக்காள் வேறுபடும். ஏனெனில், நரவாதிகளின் பாவங்களுக்கு ஏற்ப அவர்களது தண்டனையின் அளவும், விதமும் வேறுபடும். சில நரகவாதிகளின் உணவு “கிஸ்லீன்” எனப்படும், காயங்களில் இருந்து வழிந்தோடும் சீழ் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

---

[49] அல் கஸ்ர் என்பது மாளிகை என்ற அர்த்தத்தையே இங்கு குறிக்கும் என்பதுவே ஏற்றமான கருத்தாகும்.

[50] புகாரி : 3265, முஸ்லிம் : 2843

﴿ وَلَا طَعَامٌ إِلَّا مِنۡ غِسۡلِينٖ ۝٣٦ ﴾ [الحاقة: ٣٦]

“சீழைத் தவிர, அவனுக்கு வேறு எந்த உணவுமில்லை.” (அல் ஹாக்கா : 36)

சிலரின் உணவு ‘ழரீஃ’ ஆகும். ழரீஃ எனப்படுவது, ‘சிப்ரக்’ எனப்படும் ஒரு காய்ந்த முட்செடியாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ لَّيۡسَ لَهُمۡ طَعَامٌ إِلَّا مِن ضَرِيعٖ ۝٦ ﴾ [الغاشية: ٦]

“(அதில்) அவர்களுக்கு (கசப்பான) முட்செடிகளிலிருந்தே தவிர (வேறொன்றும்) உணவுமில்லை.” (அல் காசியா : 06)

சிலரது உணவு கள்ளி மரம் ஆகும்.

﴿ إِنَّ شَجَرَتَ ٱلزَّقُّومِ ۝٤٣ طَعَامُ ٱلۡأَثِيمِ ۝٤٤ كَٱلۡمُهۡلِ يَغۡلِي فِي ٱلۡبُطُونِ ۝٤٥ كَغَلۡيِ ٱلۡحَمِيمِ ۝٤٦ ﴾ [الدخان: ٤٣-٤٦]

“நிச்சயமாக கள்ளி மரம் (அதுவே). பாவிகளுக்குரிய உணவு. அது உருக்கப்பட்ட செம்பு போல் இருக்கும் வயிறுகளில் அது கொதிக்கும். வெந்நீர் கொதிப்பதைப் போல்.” (அத் துகான் : 43-46)

இது நரகின் அடி ஆழத்தில் முளைக்கும் மரமாகும். பார்க்கவும், சாப்பிடவும் அருவருப்பானது.

﴿ أَذَٰلِكَ خَيۡرٞ نُّزُلًا أَمۡ شَجَرَةُ ٱلزَّقُّومِ ۝٦٢ إِنَّا جَعَلۡنَٰهَا فِتۡنَةٗ لِّلظَّٰلِمِينَ ۝٦٣ إِنَّهَا شَجَرَةٞ تَخۡرُجُ فِيٓ أَصۡلِ ٱلۡجَحِيمِ ۝٦٤ طَلۡعُهَا كَأَنَّهُۥ رُءُوسُ ٱلشَّيَٰطِينِ ۝٦٥ فَإِنَّهُمۡ لَأٓكِلُونَ مِنۡهَا فَمَالِـُٔونَ مِنۡهَا ٱلۡبُطُونَ ۝٦٦ ﴾ [الصافات: ٦٢-٦٦]

“அது விருந்தினால் சிறந்ததா? அல்லது (நரகத்திலிருக்கும்) கள்ளி மரமா? நிச்சயமாக நாம் அதை அநியாயக்காரர்களுக்கு ஒரு சோதனையாகவே செய்திருக்கிறோம். மெய்யாகவே, அது நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்படும் மரமாகும். அதன் பழங்கள் ஷைத்தான்களின்ற தலைகளைப் போலிருக்கும். நிச்சயமாக அவர்கள் அதிலிருந்தே புசிப்பார்கள் அதைக் கொண்டு தங்களுடைய வயிறுகளை நிரப்பிக்கொள்வார்கள்.” (அஸ் ஸாப்பாத் : 62-66)

10. நரகவாதிகளின் குடிபானத்தைப் பொறுத்தவரை ‘ஹமீம்’ எனப்படும் கொதிநீர் அவர்களுக்கு ஊட்டப்படும். அது அவர்களது தலைக்கு மேலால் இருந்து ஊற்றப்படும். அதன் ஊடாக, அவர்களது உடம்பின் உட்பகுதியும் வாயின் உள்புறமும் வேதனை செய்யப்படும். அவர்களது தோல்களும் உருகிப் போகும். இரைப்பைகளும் துண்டாகும்.

﴿ فَٱلَّذِينَ كَفَرُواْ قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِّن نَّارٍ يُصَبُّ مِن فَوْقِ رُءُوسِهِمُ ٱلْحَمِيمُ ۝١٩ يُصْهَرُ بِهِۦ مَا فِي بُطُونِهِمْ وَٱلْجُلُودُ ۝٢٠ ﴾ [الحج: ١٩-٢٠]

“எவர்கள் (அல்லாஹ்வை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கொதிக்கும் நீர் அவர்களுடைய தலைகளின் மேல் ஊற்றப்படும். அதைக் கொண்டு அவர்களுடைய வயிறுகளில் உள்ளவையும், தோல்களும் உருக்கப்படும்.” (அல் ஹஜ்: 19,20)

﴿وَسُقُواْ مَآءً حَمِيمًا فَقَطَّعَ أَمْعَآءَهُمْ ۝١٥ ﴾ [محمد: ١٥]

“அவர்கள் கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) அவர்களுடைய குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடும்” (முஹம்மத் : 15)

நரகவாதிகளுக்குக் கொடுக்கப்படும் வேறு வகையான பானங்களும் உண்டு. பின்வரும் வசனம் அதனைச் சுட்டிக்காட்டுகின்றது:

﴿ هَٰذَا فَلْيَذُوقُوهُ حَمِيمٌ وَغَسَّاقٌ ۝٥٧ وَءَاخَرُ مِن شَكْلِهِۦٓ أَزْوَٰجٌ ۝٥٨ ﴾ [ص: ٥٧-٥٨]

“இது (தீயோர்களுக்காக) ஆகவே, அவர்கள் அதனைச் சுவைத்துப் பார்க்கட்டும் கொதிக்கும் நீரும், சீழும் ஆகும். இன்னும், (இதைத் தவிர) இதுபோன்ற பலவகை வேதனைகளும் உண்டு.” (ஸாத் : 57,58)

‘கஸ்ஸாக்’ எனப்படுவது, நரகவாதிகளின் தோல்களில் இருந்து சொட்டக் கூடியதாகும்.

11. அல்லாஹ்வின் அடியார்களே! நரகவாதிகளில் குறைவான தண்டனை ஒரு மனிதருக்கு வழங்கப்படும். அவரது பாதங்களில் நெருப்புத் துண்டுகள் வைக்கப்படும். அதனால் அவரது மூளை கொதிக்கும்.

12. மறுமையில் மிகக் கடுமையாக வேதனை செய்யப்படுபவர்கள் மூன்று தரப்பினராகும். 1. பிர்அவ்னின் தரப்பினர். அதாவது, பிர்அவ்னும் அவனை

பின்பற்றியோரும். 2. ஈஸா (அலை) அவர்களின் உணவுத் தட்டுவது தொடர்பாக நிராகரித்தவர்கள். 3. நயவஞ்சகர்கள். இதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும்:

﴿ وَيَوۡمَ تَقُومُ ٱلسَّاعَةُ أَدۡخِلُوٓاْ ءَالَ فِرۡعَوۡنَ أَشَدَّ ٱلۡعَذَابِ ٤٦ ﴾ [غافر: ٤٦]

"மேலும், (நியாயத்) தீர்ப்புக் காலம் நிலைபெற்றிருக்கும் நாளில் "ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்" (என்று கூறப்படும்)." (காபிர் :46)

﴿فَمَن يَكۡفُرۡ بَعۡدُ مِنكُمۡ فَإِنِّيٓ أُعَذِّبُهُۥ عَذَابٗا لَّآ أُعَذِّبُهُۥٓ أَحَدٗا مِّنَ ٱلۡعَٰلَمِينَ ١١٥ ﴾ [المائدة: ١١٥]

"அதன்பின் உங்களில் எவரேனும் ஒருவர் நிராகரித்தால், அகிலத்தாரில் எந்த ஒருவருக்கும் செய்திராத வேதனையைக் கொண்டு அவரை வேதனைப்படுத்துவேன்" என்று அல்லாஹ் கூறினான். (அல் மாஇதா : 115)

﴿ إِنَّ ٱلۡمُنَٰفِقِينَ فِي ٱلدَّرۡكِ ٱلۡأَسۡفَلِ مِنَ ٱلنَّارِ ﴾ [النساء: ١٤٥]

"நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தளத்தில்தான் இருப்பார்கள்" (அந் நிஸா : 145)

13. விசுவாசிகள், நயவஞ்சகர்கள் ஆகிய இரு தரப்பினரும் நரகைக் கடந்துசெல்வார்கள்.

﴿ وَإِن مِّنكُمۡ إِلَّا وَارِدُهَاۚ كَانَ عَلَىٰ رَبِّكَ حَتۡمٗا مَّقۡضِيّٗا ٧١ ﴾ [مريم: ٧١]

"மேலும், அதனைக் கடக்காமல் உங்களில் யாரும் இருக்க முடியாது இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும்." (மர்யம் : 71)

எனினும் விசுவாசிகளில் யாராவது தப்ப வேண்டும் என அல்லாஹ் நாடினால், நரகம் அவரைத் தீண்டாது. மாறாக அதற்கு மேலால், 'ஸிராத்' பாலத்தின் மீது அவர் சென்றுவிடுவார். அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படமாட்டாது. நயவஞ்சகர்கள் மற்றும் பாவிகளான விசுவாசிகளில் யாரை அல்லாஹ் தண்டிக்க நாடுகின்றானோ, ஸிராத்தில் கொளுகி வைக்கப்பட்டுள்ள கொக்கைகள் அவர்களை இழுத்து நரகில் போட்டுவிடும். விசுவாசிகளைப் பொறுத்தவரை தமது பாவங்களுக்கு ஏற்ப வேதனை செய்யப்பட்டு விட்டு,

சுவனத்திற்கு அனுப்பப்படுவார்கள். நயவஞ்சகர்கள் அதில் நிரந்தரமாகத் தங்கி இருப்பார்கள். முன்கூறிய வசனத்தின் அடுத்த வசனமாகிய,

﴿ وَّنَذَرُ ٱلظَّٰلِمِينَ فِيهَا جِثِيًّا ﴿٧٢﴾ ﴾ [مريم: ٧٢]

"அநியாயம் செய்தவர்களை அ(ந் நரகத்)தில் முழந்தாளிட்டவர்களாக விட்டுவிடுவோம்" (மர்யம் : 72) என்ற வசனத்தின் அர்த்தமும் இதுவாகும். இவ்வசனத்தில் 'முழந்தாளிடுதல்' என்பது மோசமான அமர்வாகும். ஒரு மனிதன் முழந்தாளிடுவது, அவனுக்கு ஏதாவது துன்பங்கள் ஏற்பட்டாலே!

14. நிராகரிப்பாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் நரகத்தைக் கடக்கமாட்டார்கள். மாறாக, இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள்.

﴿ وَسِيقَ ٱلَّذِينَ كَفَرُوٓاْ إِلَىٰ جَهَنَّمَ زُمَرًاۖ ﴾ [الزمر: ٧١]

"(அந்நாளில்) நிராகரித்தவர்கள் கூட்டம் கூட்டமாக நரகத்திற்கு இழுத்துக்கொண்டு வரப்படுவார்கள்" (அஸ்ஸுமர் : 71)

15. நரகவாதிகள் நரகை நோக்கித் தாகித்தவர்களாக கொண்டுவரப்படுவார்கள்.

﴿ وَنَسُوقُ ٱلْمُجْرِمِينَ إِلَىٰ جَهَنَّمَ وِرْدًا ﴿٨٦﴾ ﴾ [مريم: ٨٦]

"குற்றவாளிகளை (அவர்கள்) தாகித்தவர்களாக நரகை நோக்கி நாம் விரட்டுவோம்." (மர்யம் : 86)

'விர்த்' என்பது அடிப்படையில், நீர் இருக்கும் இடத்திற்கு வருவதாகும். நீர் நிலைக்குச் செல்வது தாகித்தால் தான் என்பதால், விர்த் என்பது தாகத்துடன் இருப்பவர்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

16. அந்த நாளில் நரகவாதிகளுக்கு சில அடையாளங்கள் இருக்கும். அவற்றின் ஊடாக, நரகத்திற்குப் பொறுப்பான மலக்குகள் அவர்களை அடையாளம் கண்டு கொள்வார்கள். அவர்களை அடையாளம் கண்டவுடன், அவர்களது முன்னெற்றி ரோமங்களாலும், பாதங்களாலும் அவர்களைப் பிடித்துக் கொள்வார்கள். பின்பு பலவந்தமாக அவர்களை நரகில் எறிவார்கள்.

﴿ يُعْرَفُ ٱلْمُجْرِمُونَ بِسِيمَٰهُمْ فَيُؤْخَذُ بِٱلنَّوَٰصِى وَٱلْأَقْدَامِ ﴿٤١﴾ ﴾ [الرحمن: ٤١]

"குற்றவாளிகள், அவர்களுடைய (முகக்குறி) அடையாளங்களைக் கொண்டே அறியப்படுவார்கள் அப்போது (அவர்களுடைய) முன் நெற்றி உரோமங்களும், கால்களும் கொண்டு பிடிக்கப்படுவார்கள்." (அர்ரஹ்மான் : 41)

﴿ يَوْمَ يُدَعُّونَ إِلَىٰ نَارِ جَهَنَّمَ دَعًّا ﴿١٣﴾ ﴾ [الطور: ١٣]

"அந்நாளில் அவர்கள் நரக நெருப்பின் பால் ஒரேயடியாகத் தள்ளப்படுவர்." (அத்தூர் : 13)

17. அல்லாஹ்வின் அடியார்களே! நரகவாதிகள் முகம்குப்புற இழுத்துச் செல்லப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள்.

﴿ يَوْمَ يُسْحَبُونَ فِي ٱلنَّارِ عَلَىٰ وُجُوهِهِمْ ذُوقُواْ مَسَّ سَقَرَ ﴿٤٨﴾ ﴾ [القمر: ٤٨]

அவர்களுடைய முகங்களின் மீது அவர்கள் நரகத்திற்கு இழுத்துச் செல்லப்படும் நாளில், "நரக நெருப்புத் தீண்டுவதைச் சுவைத்துப் பாருங்கள்" (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (அல் கமர் : 48)

நெருப்பினால் ஆன ஆடைகள் அணிவிக்கப்பட்டும் நரகவாதிகள் தண்டிக்கப்படுவார்கள்.

﴿ فَٱلَّذِينَ كَفَرُواْ قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِّن نَّارٍ ﴾ [الحج: ١٩-٢٠]

"எவர்கள் (அல்லாஹ்வை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன." (அல் ஹஜ்: 19)

நெருப்பினால் எரியூட்டப்பட்ட, தாரினால் ஆன ஆடைகளும் அவர்களுக்கு அணிவிக்கப்படும்.

﴿ سَرَابِيلُهُم مِّن قَطِرَانٍ وَتَغْشَىٰ وُجُوهَهُمُ ٱلنَّارُ ﴿٥٠﴾ ﴾ [إبراهيم: ٥٠]

"அவர்களுடைய ஆடைகள் தாரால் (செய்யப்பட்டு) இருக்கும் இன்னும், அவர்களுடைய முகங்களை நெருப்பு மூடி இருக்கும்" (இப்ராஹீம் : 50)

நரகவாதிகள் இரும்பினால் ஆன சுத்தியல்கள் கொண்டு அடிக்கப்படும் தண்டிக்கப்படுவார்கள்.

﴿ وَلَهُم مَّقَٰمِعُ مِنْ حَدِيدٍ ﴿٢١﴾ ﴾ [الحج: ٢١]

இன்னும், அவர்களுக்காக இரும்பினாலான சம்மட்டிகளும் உண்டு. (அல் ஹஜ் : 21)

இங்கு மகாமிஃ என்பது யானையின் தலையில் அடிக்கப்படும், கூரான, வலைந்த தடி போன்ற ஒன்றாகும். இங்கு அதன் அர்த்தம், நரகத்திற்குப் பொறுப்பான வானவர்கள் நரகவாதிகளுக்கு அடிப்பதற்காகப் பயன்படுத்தும் சுத்தியல் போன்றதாகும்.

18. நரக நெருப்பு பார்க்கும், கொந்தளிக்கும். எரிச்சலுறும், அறுவறுப்பான சப்தமிடும். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ إِذَا رَأَتْهُم مِّن مَّكَانٍ بَعِيدٍ سَمِعُوا۟ لَهَا تَغَيُّظًا وَزَفِيرًا ﴿١٢﴾ ﴾ [الفرقان: ١٢]

“அது (அந்நரகம்) இவர்களை வெகு தொலைவில் காணும்போதே, அதற்கே உரித்தான கொந்தளிப்பையும் பேரிரைச்சலையும் அவர்கள் கேட்பார்கள்.” (அல்புர்கான் : 12)

﴿ إِذَآ أُلْقُوا۟ فِيهَا سَمِعُوا۟ لَهَا شَهِيقًا وَهِىَ تَفُورُ ﴿٧﴾ تَكَادُ تَمَيَّزُ مِنَ ٱلْغَيْظِ ﴾ [الملك: ٧-٨]

“அதில் அவர்கள் போடப்படுவார்களாயின், அது கொதிக்கும் நிலையில் (கழுதையின் பெருங் குரலைப்போல்) அருவருப்பான சப்தம் அதற்கு இருப்பதை அவர்கள் கேட்பார்கள். அது கோபத்தால் வெடித்துவிடவும் நெருங்குகிறது;” (அல் முல்க் : 7,8)

அதாவது, மஹ்சரில் நிராகரிப்பாளர்களை நரகம் காணும் போது, அதன் கொந்தளிப்பையும், எரிச்சலுறும் சப்தத்தையும், (கழுதை சப்தம்போன்ற) அறுறவறுப்பான சப்தத்தையும் அவர்கள் கேட்பார்கள். இது எவ்வாறு நடக்கும் என்பதை அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

19. நரகம் கடுமையாகப் பற்றியெரியும். பின்பு சற்று அணையும்.

﴿ كُلَّمَا خَبَتْ زِدْنَٰهُمْ سَعِيرًا ﴿٩٧﴾ ﴾ [الإسراء: ٩٧]

“அது (நரக நெருப்பு) அணையும் போதெல்லாம் நாம் அவர்களுக்கு நெருப்பை அதிகமாக்குவோம்” (அல் இஸ்ரா : 97)

20. நரகம் நிரப்பப்படும் என வாக்களிக்கப்பட்டுள்ளது.

﴿ وَلَٰكِنۡ حَقَّ ٱلۡقَوۡلُ مِنِّي لَأَمۡلَأَنَّ جَهَنَّمَ مِنَ ٱلۡجِنَّةِ وَٱلنَّاسِ أَجۡمَعِينَ ١٣ ﴾ [السجدة: ١٣]

“ஆனால், நான் நிச்சயமாக நரகத்தை - ஜின்களையும், (தீய) மனிதர்களையும் - ஆகிய யாவரையும் கொண்டு நிரப்புவேன்” என்று என்னிடமிருந்து (முன்னரே) வாக்கு வந்துள்ளது.” (அஸ்ஸஜ்தா : 13)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை, நரகின் வர்ணனை தொடர்பான படிப்பினை மிக்க ஒரு முன்னுரையாகும். ஒவ்வொரு முஸ்லிமும் இவற்றை அறிந்து, எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அல்லாஹ் எங்களை நரகை விட்டும் பாதுகாப்பானாக!

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

21. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!இறை விசுவாசிகளே! நரகம் படைக்கப்பட்டுள்ளது. தற்போதும் அது உள்ளது.

நரகம் தற்போது படைக்கப்பட்டது என்பதற்கான என்பதற்கு,

﴿ وَٱتَّقُواْ ٱلنَّارَ ٱلَّتِيٓ أُعِدَّتۡ لِلۡكَٰفِرِينَ ١٣١ ﴾ [آل عمران: ١٣١]

“நிராகரிப்பாளர்களுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ள நரகை அஞ்சிக்கொள்ளுங்கள்” (ஆலு இம்ரான் : 131)

நபி (ஸல்) அவர்கள், அம்ர் பின் லுஹய் நரகில் தன்னுடைய குடல்களை இழுத்துக்கொண்டு சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவன் தான் முதன்

முதலாக நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தை மாற்றி, சிலைகளை அரேபியத் தீபகற்பத்திற்குக் கொண்டுவந்தவன்.[51]

தனது பூனைக்குச் சாப்பிடவும் கொடுக்காமல், அதுவாகப் பூச்சி புழுக்களை சாப்பிடவும் விடாமல் கட்டி வைத்து கொடுமைகொடுத்த ஒரு பெண்ணைநபி (ஸல்) அவர்கள் நரகில் கண்டார்கள்.[52]

அல்லாஹ்வின் அடியார்களே! இவை நரகம் மற்றும் அவற்றில் நுழைபவர்கள் பற்றி ஈமான் கொள்வது தொடர்பான 20 அம்சங்கள் ஆகும். ஒவ்வொரு முஃமினும் இவற்றை அறிந்து சுவனம் பற்றி நினைவுடன் இருக்க வேண்டும். அதனூடாக உற்சாகத்துடன் அமல் செய்யவும் சோம்பல் மற்றும் கவனயீனத்தை விட்டும் எச்சரிக்கையாக இருக்கவும் முடியும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

---

[51] புகாரி : 3521, முஸ்லிம் : 2856

[52] புகாரி : 2365, முஸ்லிம் : 2242

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 06

(சில மறுமைக் காட்சிகள்)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர

வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ۝١١٥ ﴾ [المؤمنون: ١١٥]

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த சில குத்பாக்களில், மறுமையை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களான, ஸூர் ஊதப்படல், மறுமையின் பயங்கரங்கள், படைப்புக்கள் எழுப்பப்படல், மக்கள் மஹ்சரில் ஒன்று திரட்டப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனத்தின் இன்பங்கள், நரக வர்ணனைகள் ஆகியன பற்றிப் பேசப்பட்டது. இன்று நாம் அல்லாஹ்வின் உதவியுடன் மறுமையின் சில காட்சிகள் பற்றிப் பார்ப்போம்.

1. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையை ஈமான் கொள்வதில் நுழையும் இன்னும் ஓர் அம்சம், சில மறுமை நிகழ்வுகளை ஈமான் கொள்வதாகும். ஏடுகள் (அதாவது செயற்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏடுகள்) பகிரப்படுவதும் அவற்றில் ஒன்றாகும். மக்கள் அவற்றை எடுப்பார்கள். சிலர், வலக்கரத்தால் எடுப்பார்கள். அவர்கள் தாம், மார்க்கத்தில் உறுதியாக இருந்தவர்கள். சுவர்க்கம் நுழையத் தகுதியானவர்கள். இன்னும் சிலர் இடக்கரத்தால் எடுப்பார்கள். அவர்கள் நிராகரிப்பாளர்கள். இறை விசுவாசி தனது ஏட்டை மகிழ்ச்சியுடன் எடுப்பான். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ فَأَمَّا مَنْ أُوتِيَ كِتَٰبَهُۥ بِيَمِينِهِۦ فَيَقُولُ هَآؤُمُ ٱقْرَءُواْ كِتَٰبِيَهْ ۝١٩ إِنِّي ظَنَنتُ أَنِّي مُلَٰقٍ حِسَابِيَهْ ۝٢٠ فَهُوَ فِي عِيشَةٍ رَّاضِيَةٍ ۝٢١ فِي جَنَّةٍ عَالِيَةٍ ۝٢٢ قُطُوفُهَا دَانِيَةٌ ۝٢٣ كُلُواْ وَٱشْرَبُواْ هَنِيٓـَٔۢا بِمَآ أَسْلَفْتُمْ فِي ٱلْأَيَّامِ ٱلْخَالِيَةِ ۝٢٤ ﴾ [الحاقة: ١٩-٢٤]

ஆகவே, எவர் தம்முடைய பட்டோலை அவருடைய வலக்கையில் கொடுக்கப்படுமோ அவர் (மகிழ்வுடன் மற்றவர்களிடம்), "வாருங்கள், என் பட்டோலையைப் படியுங்கள்" எனக் கூறுவார். "நிச்சயமாக நான் என்னுடைய கேள்விக்கணக்கை, திட்டமாகச் சந்திப்பேன் என்று எண்ணியே இருந்தேன்." ஆகவே, அவர் திருப்தியான வாழ்க்கையில் - உயர்ந்த சுவர்க்கத்தில் இருப்பார். அதன் கனி (வகை)கள் (கைக்கு எட்டியதாக) சமீபத்தில் இருக்கும். "சென்றுபோன நாட்களில் நீங்கள் முற்படுத்தியதின் காரணத்தால், நீங்கள் இப்போது மகிழ்வோடு புசியுங்கள் இன்னும் பருகுங்கள்" (என்று அவர்களுக்குக் கூறப்படும்). (ஸூரா அல் ஹாக்கா : 19 -24)

ஆனால், இறைநிராகரிப்பாளன் தனது ஏட்டை முதுகுக்குப் பின்னால் இருந்து இடக்கரத்தால் எடுப்பான். எவ்வாறு அவன் இவ்வுலகில் அல்லாஹ்வின் வேதத்தைத் தனது முதுகுக்கப் பின்னால் வைத்துவிட்டானோ, அதற்குப் பொறுத்தமான கூலியாக மறுமையில் அவனது ஏடு அவனது முதுகுக்குப் பின்னால் வழங்கப்படும். எனவே, கவலையுடனும், கைசேதத்துடனும் அவன் அதை எடுப்பான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَأَمَّا مَنْ أُوتِيَ كِتَٰبَهُۥ بِشِمَالِهِۦ فَيَقُولُ يَٰلَيْتَنِي لَمْ أُوتَ كِتَٰبِيَهْ ۝٢٥ وَلَمْ أَدْرِ مَا حِسَابِيَهْ ۝٢٦ يَٰلَيْتَهَا كَانَتِ ٱلْقَاضِيَةَ ۝٢٧ مَآ أَغْنَىٰ عَنِّي مَالِيَهْ ۜ ۝٢٨ هَلَكَ عَنِّي سُلْطَٰنِيَهْ ۝٢٩ ﴾ [الحاقة: ٢٥-٢٩]

"ஆனால், எவன் தன்னுடைய பட்டோலை தன் இடக்கையில் கொடுக்கப்பட்டானோ அவன் கூறுவான்: "என்னுடைய பட்டோலை எனக்குக் கொடுக்கப்படாமல் இருந்திருக்க வேண்டுமே!" "அன்றியும், என் கேள்வி கணக்கு என்ன என்பதை நான் அறியவில்லையே." "(நான் இறந்த போதே) இது முற்றிலும் முடிந்திருக்கக் கூடாதா?" "என் செல்வம் எனக்குப் பயனளிக்கவில்லையே!" "என் அதிகாரமும் என்னை விட்டு அழிந்து விட்டதே!" (என்று அரற்றுவான்). (அல்ஹாக்கா : 25 -29)

﴿ وَأَمَّا مَنْ أُوتِيَ كِتَٰبَهُۥ وَرَآءَ ظَهْرِهِۦ ﴿١٠﴾ فَسَوْفَ يَدْعُوا۟ ثُبُورًا ﴿١١﴾ وَيَصْلَىٰ سَعِيرًا ﴿١٢﴾ إِنَّهُۥ كَانَ فِىٓ أَهْلِهِۦ
مَسْرُورًا ﴿١٣﴾ إِنَّهُۥ ظَنَّ أَن لَّن يَحُورَ ﴿١٤﴾ بَلَىٰٓ إِنَّ رَبَّهُۥ كَانَ بِهِۦ بَصِيرًا ﴿١٥﴾ ﴾ [الإنشقاق: ١٠-١٥]

"இன்னும், எவன் அவனுடைய பட்டோலை அவனுடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுகின்றானோ - அவன் அழிவை அழைப்பான். இன்னும் நரகத்தில் புகுவான். நிச்சயமாக அவன் (இம்மையில்) தன் குடும்பத்தாருடன் மகிழ்வோடு இருந்தான். நிச்சயமாக, அவன் (இறைவன் பால்) மீளவே மாட்டான் என்று எண்ணியிருந்தான். அப்படியல்ல. நிச்சயமாக அவனுடைய இறைவன் அவனை நோக்குகிறவனாகவே இருந்தான்" (அல் இன்சிகாக் : 10 – 15)

2. இறைவிசுவாசிகளே! மறுமையின் காட்சிகளில் ஒன்று, நரகத்தின் மேலால் ஸிராத் எனும் பாலம் வைக்கப்படுவதாகும். அது (கால்கள்) வழுக்குமிடம் சறுக்குமிடம் அதன்மீது இரும்புக் கொக்கிகளும் அகன்ற நீண்ட முட்களும் இருக்கும். அந்த முட்கள் வளைந்திருக்கும். 'நஜ்த்' பகுதியில் முளைக்கும் அவை 'கருவேலமர முட்கள்' எனப்படும்.

பின்பு மக்கள் அதனைத் தாண்டிச் செல்வார்கள். நபி (ஸல்) அவர்களது சமுதாயம் தான் முதலில் அதைக் கடப்பார்கள். இந்த ஸிராத்தைத் தாண்டிச் செல்லும் தரப்பினர் மூன்று வகைப்படுவர். எந்தக் காயமுமின்றி தப்பிவிடுவோரும் உண்டு. காயத்துடன் தப்புவோரும் உண்டு. மூர்ச்சையாகி நரக நெருப்பில் விழுவோரும் உண்டு. நீண்ட கொக்கிகள், முட்களால் காயப்படுத்தப்பட்டு, நிறுத்தப்படாமல் சில மனிதர்கள் தப்புவார்கள். அவர்கள் தான் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு, பாவங்களைத் தவிர்ந்திருந்த பரிபூரண விசுவாசிகள். அவர்கள் முதல் தரப்பினர்.

இரண்டாம் தரப்பினர் : அவர்களை கொக்கிள் காயப்படுத்தும். ஆனால் அவற்றால் தடுத்து நிறுத்தப்படாமல் தப்பித்துக்கொண்டு, பாலத்தைக் கடந்துசென்றுவிடுவார்கள். இவர்கள் தான் நரகில் நுழைவதைக் கட்டாயப்படுத்தாத அளவு பாவங்கள் செய்த விசுவாசிகள். இந்தக் காயப்படுத்தல் மாத்திரம் தான் அவர்களுக்கு மறுமையில் உள்ள தண்டனை. பின்பு அவர்கள் தப்பித்துவிடுவார்கள்.

மூன்றாம் தரப்பினர் : கொக்கிளால் இழுக்கப்பட்டுப் பலவந்தமாக நரகில் வீழ்த்தப்படுபவர்கள். இவர்கள் தாம் செய்த சிறிய, பெரிய பாவங்களால் நரகம்

நுழையத் தகுதியான விசுவாசிகள். தமது பாவங்களுக்கு ஏற்ப அங்கு தண்டிக்கப்பட்டு, பின்பு வெளியேற்றப்படுவார்கள்.

இவ்வாறு தான் நயவஞ்சகர்களும் ஸிராத்தைக் கடந்து செல்லும் போது, கொக்கிளால் இழுக்கப்பட்டு நரகில் வீழ்த்தப்படுவார்கள். — அல்லாஹ் எம்மைப் பாதுகாப்பானாக — அவர்கள் நரகில் அடித்தட்டில் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள்.

நிராகரிப்பாளர்கள் இந்த பாலத்தின் நடந்துசெல்லவே மாட்டார்கள். நரகில் மேலால் இப்பாலம் வைக்கப்படுவதற்கு முன்னரோ அவர்கள் நரகிற்கு இழுத்துச் செல்லப்படுவார்கள்.

﴿ وَسِيقَ ٱلَّذِينَ كَفَرُوٓاْ إِلَىٰ جَهَنَّمَ زُمَرًاۖ ﴾ [الزمر: ٧١]

"(அந்நாளில்) நிராகரித்தவர்கள் கூட்டம் கூட்டமாக நரகத்திற்கு இழுத்துக்கொண்டு வரப்படுவார்கள்" (அஸ்ஸுமர் : 71)

அல்லாஹ் தஆலா பிர்அவ்னைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்,

﴿ يَقْدُمُ قَوْمَهُۥ يَوْمَ ٱلْقِيَٰمَةِ فَأَوْرَدَهُمُ ٱلنَّارَۖ وَبِئْسَ ٱلْوِرْدُ ٱلْمَوْرُودُ ﴿٩٨﴾ ﴾ [هود: ٩٨]

"அவன் (ஃபிர்அவ்ன்) மறுமை நாளில் தன் சமூகத்தாருக்கு முன் சென்று, அவர்களை நரகத்தில் சேர்ப்பான் (அவர்களைக்) கொண்டு போய் சேர்க்கும் இடம் மிகவும் கெட்டது." (ஹூத் : 98)

நிராகரிப்பாளர்களில் ஒவ்வொரு தரப்பினரும் தாம் வணங்கிக்கொண்டிருந்த சிலைகள், சூரியன், சந்திரன் போன்றவற்றின் பின்னால் செல்வார்கள். அவையும் தம்மை வணங்கியவர்களோடு நரகிற்கு வரும். அவை அவர்களுக்குக் கானல் நீர் போன்று தோன்றும். நரகம் தன்னைத் தானே தகர்த்துக்கொண்டிருக்கும். அவர்கள் அனைவரும் அதில் விழுவார்கள். — அல்லாஹ் எங்களை அதை விட்டும் காப்பானாக — பின்பு நரகின் மீது ஸிராத் பாலம் வைக்கப்படும். ஏற்கனவே கூறிய பிரகாரம் முஃமின்களும், நயவஞ்சகர்களும் அதன் மீது நடந்துசெல்வார்கள். بِئْسَ ٱلْمَرْفُودُ

[53] பார்க்க : புகாரி : 7437, முஸ்லிம் 182 (அபூ ஹுரைரா (ரலி), புகாரி : 4581, முஸ்லிம் : 183 (அபூ ஸஈத் அல் குத்ரீ (ரலி)

அல்லாஹ்வின் அடியார்களே! மக்கள் ஸிராத்தைக் கடந்து செல்லும் வேகம் அவர்களது சுயவிருப்பத்தின் படியோ, அல்லது அவர்களது உடல்பலத்தைக்கொண்டோ அல்ல. மாறாக, அவர்களது அமல்களைப் பொருத்தாகும். ஹதீஸ்களில் 'அவர்களது அமல்கள் தான் அவர்களை அழைத்துச் செல்லும்' [54] என்று வந்துள்ளது. யாரது அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நல் அமல்களைாக இருக்கின்றனவோ, அவர்கள் வேகமாகச் செல்வார்கள். அவர்களில் சிலர் கண்சிமிட்டும் வேகத்திலும், வேறு சிலர் மின்னல் வேகத்திலும், வேறு சிலர் பறவையின் வேகத்திலும், வேறு சிலர் வேகமாக ஓடும் குதிரை மற்றும் ஒட்டகத்தின் வேகத்திலும் வேறு சிலர் மனிதர்கள் சாதாரணமாக ஓடுவது போன்றும் செல்வர். இறுதியாக அவர்களில் சிலர் இழுத்தும் எடுக்கப்படுவர். பாவம் செய்துள்ளவர்கள் மிக தாமதாகவே நடந்துசெல்வார்கள். சிலவேளை அவர்களை – நரகத்திற்குத் தகுதியானவர்களாக இருந்தால் - கொக்கிகள் இழுத்துக்கொள்ளும்.

3. விசுவாசிகளே! மறுமைக் காட்சிகளில் ஒன்று, விசுவாசம் கொண்ட சில மனிதர்கள் சுவர்க்கம் மற்றும் நரகத்துக்கு மத்தியில் ஒரு பாலத்தில் நின்றுகொண்டிருப்பதாகும். அதாவது, அந்த நாளில், நரகில் வேதனை செய்யப்பட்ட விசுவாசிகள், அதிலிருந்து வெளியேறியதும், சுவர்க்கம் மற்றும் நரகத்திற்கு மத்தியில் உள்ள ஒரு பாலத்தின் மீது நின்று, அவர்களது உள்ளத்தில் ஒட்டடியிருக்கும் குரோதம், பொறாமை, விரோதம் போன்றவற்றை விட்டும் சுத்தப்படுத்தப்படுவார்கள்.

﴿ وَنَزَعْنَا مَا فِي صُدُورِهِم مِّنْ غِلٍّ ﴾ [الأعراف: ٤٣]

"மேலும், (உலகில் அவர்களுக்கு மத்தியில்) அவர்களுடைய நெஞ்சங்களிலிருந்த குரோதத்தையும் நாம் நீக்கிவிடுவோம்" (அல் அஃராப் : 43)

என்ற வசனத்தின் விளக்கத்தில் இமாம் புகாரி அவர்கள், அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்களைத் தொட்டும் பின்வரும் ஹதீஸை அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "இறைநம்பிக்கையாளர்கள் நரகத்தி(ன் பாலத்தி)லிருந்து தப்பி வரும்போது சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையிலுள்ள ஒரு பாலத்தில் தடுத்து நிறுத்தப்படுவார்கள். அங்கு உலகில் (வாழ்ந்தபோது) அவர்களுக்கிடையே

[54] முஸ்லிம் : 195

நடந்த அநீதிகளுக்காகச் சிலரிடமிருந்து சிலர் கணக்குத் தீர்த்துக்கொள்வார்கள். இறுதியில் அவர்கள் (மாசு) நீங்கித் தூய்மையாகிவிடும்போது சொர்க்கத்தில் நுழைய அவர்களுக்கு அனுமதி வழங் கப்படும். முஹம்மதின் உயிர் யார் கையிலுள்ளதோ அவன்மீதாணையாக! அவர்கள் சொர்க்கத்தில் உள்ள தமது வசிப்பிடத்தை, உலகத்திலிருந்த அவர் களின் இல்லத்தைவிட எளிதாக அடையாளம் கண்டுகொள்வார்கள்." [55] இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "கெட்ட ஆத்மாக்கள், எந்தவொரு அழுக்குமற்ற தூய்மையான சுவனத்தில் இருக்கத் தகுதியற்றவர்கள். எனவே அவ்வாத்மாக்களில் அழுக்கு இருந்தால், சுத்தப்படுத்தப்பட்டு, சுவனத்தில் வாழப் பொறுத்தமானவையாக அவை மாற்றப்படும்."[56]

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

4. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதா் முஹம்மத் (ஸல்) அவா்கள் மீதும், அவா்களது குடும்பத்தினா், தோழா்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்! மறுமைக் காட்சிகளில் இன்னுமொன்று, மறுமையில் நபி (ஸல்) அவா்களுக்குரிய சபாஅத் (பரிந்துரை)கள் ஆகும். முன்பொரு உரையில் கூறப்பட்ட 'பெரிய சபாஆ' (அஷ்ஷபாஅதுல் உழ்மா) தவிர்ந்த நான்கு சபாஅத்கள் அவா்களுக்கு உள்ளன. அவற்றில் முதல் விசுவாசிகள் சுவனம் நுழைவதற்காக நபி (ஸல்) அவா்கள் செய்யும் பரிந்துரையாகும். ஏனெனில் விசுவாசிகள் சுவனபதிக்கு வந்தால், அதன் வாயில்கள் மூடப்பட்டிருக்கும். அப்போது நபி (ஸல்) அவா்கள் சுவனத்தின் வாயிலைத் தட்டுவாா்கள். சுவனத்திற்குப்

[55] புகாரி : 6535

[56] பதாவா இப்னு தைமிய்யா

பொறுப்பான வானவர்[57], 'நீங்கள் யார்?' எனக் கேட்டதும், நபியவர்கள் 'முஹம்மத்' என்பார்கள். அப்போது அவ்வானவர், 'உங்களுக்குத் திறக்குமாறே நான் ஏவப்பட்டுள்ளேன். உங்களுக்கு முன்னர் யாருக்காகவும் நான் திறக்கமாட்டேன்.' என்று கூறித் திறப்பார்.[58]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "சுவனத்தின் விடயத்தில் முதல் பரிந்துரை செய்வது நானே! நபிமார்களில் எனக்கே அதிகாகப் பின்பற்றுபவர்கள் உள்ளனர்".[59]

நபி (ஸல்) அவர்கள் தான் முதன் முதலில் சுவர்க்கம் நுழைவார்கள். அவர்களுக்கு முன்னர் யாரும் நுழையமாட்டார்கள். இங்கு நபி (ஸல்) அவர்களதும், அவர்களது சமுதாயத்தினதும் சிறப்பு உணர்த்தப்படுகின்றது. ஏனெனில், நபிமார்களில் அவர்கள் தான் முதலில் சுவனம் நுழைகின்றார்கள். சமுதாயங்களில் அவர்களது சமுதாயம் தான் முதலில் சுவனம் நுழைகின்றது.

நபி (ஸல்) அவர்களின் இரண்டாவது ஷபாஅத், மறுமையில் விசாரணை அற்றவர்கள் சுவர்க்கம் நுழைவதற்காக செய்யும் பரிந்துரையாகும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கும் சபாஅத் தொடர்பான நீண்ட ஹதீஸ் அதற்கு ஆதாரமாகும். அதில் இவ்வாறு வருகின்றது, "முஹம்மதே! உமது சமுதாயத்தில் விசாரணை அற்றவர்களை சுவன வாயில்களில் வலப்பக்கமாக உள்ள வாயில்களால் சுவனத்திற்கு நுழையச் செய்யுங்கள்"**[60]**

நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் உரிய மூன்றாவது சபாஅத்து, விசுவாசம் கொண்ட பாவிகளில், தமது பாவங்களினால் நரகம் நுழைந்தவர்கள் அதிலிருந்து வெளியேறுவதற்காக செய்யும் பரிந்துரையாகும். பின்வரும் ஹதீஸின் மூலம் நபியவர்கள் அதைத் தான் நாடுகின்றார்கள்: "ஒவ்வொரு நபிக்கும் கேட்டால் பதிலளிக்கப்படும் ஒரு துஆ இருந்தது. நான் என்னுடைய துஆவை மறுமையில் என்னுடைய சமுதாயத்திற்காகப் பரிந்துரை செய்வதற்காக வைத்துள்ளேன்."**[61]** இன்னுமொரு சந்தர்ப்பத்தில், "என்னுடைய

[57] 'ரிழ்வான்' என்ற பெயர் இவருக்க இருப்பதாகப் பரவலாக் கூறப்படுவது ஆதாரப் பூர்மற்றதாகும். 'சுவர்க்கத்திற்குப் பொறுப்பானர் என்று கூறுவதே சரியாகும்.

[58] முஸ்லிம் : 197

[59] முஸ்லிம் : 196

[60] புகாரி : 4712

[61] புகாரி : 6304, முஸ்லிம் : 198

பரிந்துரை எனது சமுதாயத்தில் பெருமபாவம் செய்தவர்களுக்கும் உண்டு.” என்றும் கூறினார்கள்.[62]

நான்காவது சபாஅத், நபி (ஸல்) அவர்கள் தமது சிறியதந்தை அபூதாலிப் அவர்களின் வேதனையைக் குறைக்குமாறு பரிந்துரை செய்வதாகும். ஏனெனில், அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்தார்கள். அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்கள் கூறியதாவது: நான் (ஒருமுறை) நபி (ஸல்) அவர்களிடம், “உங்கள் தந்தையின் சகோதரருக்கு (அபூதாலிபுக்கு, அவர் செய்த உதவிகளுக் குக் கைமாறாக) நீங்கள் என்ன பயனை அளித்தீர்கள்? ஏனெனில், அல்லாஹ்வின் மீதாணையாக, அவர் உங்களை (எதிரி களின் தாக்குதலிலிருந்து) பாதுகாப்ப வராகவும், உங்களுக்காக (உங்கள் எதிரிகளிடம்) கோபப்படுபவராகவும் இருந்தாரே!” என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “அவர் இப்போது (கணுக்கால்வரை தீண்டும்) சிறிதளவு நரக நெருப்பில்தான் இருக்கிறார். நான் மட்டும் இல்லையென்றால் அவர் நரகத்தின் அடித்தட்டில் இருந்திருப்பார்” என்று பதிலளித்தார்கள்.[63]

அல்லாஹ்வின் அடியார்களே! இவை நான்கு மறுமைக் காட்சிகளாகும். ஏடுகள் பகிர்ந்தளிக்கப்படல், நரகின் மேலால் ஸிராத் பாலம் வைக்கப்படல், சில இறைவிசுவாசிகள் சுவர்க்கம் மற்றும் நரகத்திற்கு மத்தியில் நின்றுகொண்டிருத்தல், நபி (ஸல்) அவர்களுக்கு மறுமையில் உள்ள ஐந்து சபாஅத்கள் ஆகியவையே அவையாகும்.

யா அல்லாஹ்! எங்களுக்கு மறுமையில் எமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபாஅத்தைப் பெற்றுத் தருவாயாக!

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

---

[62] திர்மிதி : 2435, அபூ தாவூத் : 4739, அஹ்மத்

[63] புகாரி : 3883, முஸ்லிம் : 209

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 07

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ,

அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَٰكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ﴿١١٥﴾ ﴾ [المؤمنون: ١١٥]

“நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (என்றும் இறைவன் கேட்பான்.)” (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த சில குத்பாக்களில், மறுமையை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களான, ஸூர் ஊதப்படல், மறுமையின் பயங்கரங்கள், படைப்புக்கள் எழுப்பப்படல், மக்கள் மஹ்சரில் ஒன்று திரட்டப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனத்தின் இன்பங்கள், நரக வர்ணனைகள் மற்றும் சில இறுதிநாள் காட்சிகள் பற்றிப் பேசப்பட்டது. இன்று நாம் அல்லாஹ்வின் உதவியுடன் மறுமையில் உள்ள பரிந்துரைகளின் வகைகள் பற்றிப் பார்ப்போம்.

அல்லாஹ்வின் அடியார்களே! மறுமை நிகழ்வுகளில் ஒன்று, பரிந்துரை செய்பவர்கள் அதற்குத் தகுதியானவர்களுக்குப் பரிந்துரை செய்வதாகும். அவ்வாறு பரிந்துரை செய்பவர்கள் ஆறு தரப்பினர் உள்ளனர் : தூதர்கள், (இதில் நபி (ஸல்) அவர்களது ஐந்து விதமான பரிந்துரைகள் பற்றி ஏற்கனவே பேசப்பட்டது) அதேபோன்று, இறை விசுவாசிகள், ஷஹீதுகள், பெற்றார் உயிருடன் இருக்கும் நிலையில் மரணித்த சிறுவர்கள், வானவர்கள் மற்றும் குர்ஆன் ஆகியவையே அவையாகும்.

1. தூதுவர்கள், தம்மை பின்பற்றிய விசுவாசிகளுக்கு பரிந்துரை செய்வதென்பது, அவர்களில் தமது பாவங்கள் காரணமாக நரகில் நுழைந்தவர்கள், அதிலிருந்து வெளியேறுவதற்காகும். அதற்கு பின்வரும் நபிமொழி ஆதாரமாகும். நபி (ஸல்)

அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “சுவன வாதிகளும் நரகவாதிகளும் வேறுபிரிக்கப்பட்டு, சுவனவாதிகள் சுவனத்திற்கும், நரகவாதிகள் நரகத்திற்கும் நுழைந்துவிட்டால், தூதர்கள் எழுந்து, பரிந்துரை செய்வார்கள். அப்போது அல்லாஹ், ‘நீங்கள் சென்று, உங்களுக்கு அறிமுகமானவர்களை வெளியேற்றுங்கள்’ என்று கூறுவான். அவர்கள் சென்று வெளியேற்றும் போது அம்மக்களது எலும்புக்கள் தென்படும் அளவு தோல்கள் எரிந்திருக்கும். பின்பு அவர்களை ‘ஹயா (வாழ்க்கை)’ எனும் ஒரு நதிக்கு அனுப்புவார்கள். அப்போது அந்த நதியின் ஓரத்தில் அவர்களது உடம்பின் எரிந்த பகுதிகள் அனைத்தும் விழுந்துவிடும். தர்ப்பூசனித் தாவரம் போன்று அவர்கள் வெண்மையானவர்களாக வெளியேறுவார்கள். பின்பு, மீண்டும் தூதர்கள் பரிந்துரை செய்வார்கள். அதற்கு அல்லாஹ், ‘நீங்கள் சென்று, யாரது உள்ளத்தில் ஒரு கீராத் அளவு ஈமான் இருக்கக் காண்கின்றீர்களோ அவர்களையும் வெளியேற்றுங்கள்’ என்று கூறுவான். அவர்கள் மேலும் சில மனிதர்களை வெளியேற்றுவிட்டு, மீண்டும் பரிந்துரை செய்வார்கள். மீண்டும் அல்லாஹ், ‘நீங்கள் சென்று, யாரது உள்ளத்தில் ஒரு கடுகளவு ஈமான் இருக்கக் காண்கின்றீர்களோ அவர்களையும் வெளியேற்றுங்கள்’ என்று கூறுவான்.....”**[64]**

தூதர்கள் நரகில் உள்ள விசுவாசிகளுக்குப் பரிந்துரை செய்வார்கள் என்பதற்கு நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸும் ஆதாரமாகும், “மறுமையில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். “என்னுடைய ரப்பே!” என்று அழைப்பார்கள். அப்போது அல்லாஹ், “இதோ உமக்கு பதிலளித்து விட்டேன்” என்று கூறுவான். அப்போது இப்ராஹீம் (அலை) அவர்கள், “ரப்பே என்னுடைய பிள்ளைகளை நீ எரித்துவிட்டாய்” என்று கூறுவார்கள். அப்போது அல்லாஹ், “யாரது உள்ளத்தில் ஓர் அணுவளவு அல்லது ஒரு வாற்கோதுமை அளவு ஈமான் உள்ளதோ அவர்கள் அனைவரையும் நரகத்தை விட்டும் வெளியேற்றுங்கள்” என்று கூறுவான்.[65]

2. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையில் உள்ள பரிந்துரைகளில் இரண்டாவது வகை என்னவென்றால், சுவனத்தில் உள்ள விசுவாசிகள், நரகத்தில் உள்ள தமது சகோதர விசுவாசிகள் அதிலிருந்து வெளியேறுவதற்காக

[64] முஸ்னத் அஹ்மத் : (3ஃ325)

[65] இபடனு ஹிப்பான் : 7378

பரிந்துரை செய்வதாகும். இதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்: "இறுதியில் இறைநம்பிக்கையாளர்கள் (அந்தப் பாலத்தைக் கடந்து) நரக நெருப்பிலிருந்து தப்பிவிடுவார்கள். என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! மறுமை நாளில் நரகத்தில் கிடக்கும் தம் சகோதரர்களின் நன்மையை வலியுறுத்தி இறைவனிடம் மிகவும் மன்றாடி வேண்டுபவர்கள் இறை நம்பிக்கையாளர்களைவிட வேறெவருமில்லை. அவர்கள் (பின்வருமாறு) கூறுவார்கள்: எங்கள் இறைவா! இவர்கள் எங்களுடன்தான் நோன்பு நோற்றார்கள் தொழுதார்கள் ஹஜ் செய்தார்கள் (எனவே இவர்களை நீ நரகத்திலிருந்து விடுதலை செய்வாயாக!). அப்போது அவர்களிடம், "நீங்கள் (சென்று) உங்களுக்குத் தெரிந்தவர்களை (நரகத்திலிருந்து) வெளியேற்றுங்கள்" என்று கூறப்படும். மேலும், (நரகத்திலுள்ள அவர்களை இவர்கள் அடையாளம் காண்பதற்கு வசதியாக) அவர்களது உடலைத் தீண்டக் கூடாதென நரகத்திற்குத் தடை விதிக்கப்படும். உடனே அவர்கள் (நரகத்திற்குச் சென்று) ஏராளமான மக்களை வெளியே கொண்டுவருவார்கள். அப்போது (நரகத்தில் இருந்த) அவர்களில் சிலருடைய கணைக்கால்களில் பாதிவரையும், (இன்னும் சிலருடைய) முழங்கால்கள்வரையும் நரக நெருப்பு தீண்டியிருக்கும். பிறகு, "எங்கள் இறைவா! நீ யாரை வெளியேற்றுமாறு கூறினாயோ அவர்களில் ஒருவர்கூட நரகத்தில் எஞ்சவில்லை (எல்லாரையும் நாங்கள் வெளியேற்றிவிட்டோம்)" என்று கூறுவார்கள்.

அப்போது இறைவன் "நீங்கள் திரும்பிச் சென்று எவரது உள்ளத்தில் ஒரு பொற்காசு அளவு நன்மை இருக்கிறதோ அவரை வெளியேற்றுங்கள்" என்று கூறுவான். அவ்வாறே அவர்களும் (இன்னும்) ஏராளமான மக்களை வெளியேற்றிவிட்டு (வந்து), "எங்கள் இறைவா! நீ உத்தரவிட்ட யாரையும் அதில் நாங்கள் விட்டு வைக்கவில்லை (எல்லாரையும் வெளியேற்றி விட்டோம்)" என்று கூறுவார்கள். பிறகு இறைவன், "நீங்கள் திரும்பிச்சென்று எவரது உள்ளத்தில் அரைப் பொற்காசு அளவு நன்மை இருக்கிறதோ அவரையும் (நரகத்திலிருந்து) வெளியேற்றிவிடுங்கள்" என்பான். அவர்களும் ஏராளமான மக்களை வெளியே கொண்டு வருவார்கள். பின்னர் "எங்கள் இறைவா, நீ கட்டளையிட்ட ஒருவரையும் நாங்கள் விட்டு வைக்கவில்லை" என்று கூறுவார்கள். பின்பும் இறைவன் "நீங்கள் திரும்பிச்சென்று எவரது உள்ளத்தில் அணுவளவு நன்மை இருக்கிறதோ அவரை வெளியேற்றுங்கள்" என்பான்.

அவ்வாறே அவர்கள் (சென்று) அதிகமான மக்களை வெளியேற்றிவிட்டு (வந்து), "எங்கள் இறைவா! நரகத்தில் எந்த நன்மையையும் நாங்கள் விட்டுவைக்கவில்லை" என்று கூறுவார்கள்.

-அறிவிப்பாளர் அபூசயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் கூறும் இந்த ஹதீஸை நீங்கள் நம்பாவிட்டால், "திண்ணமாக அல்லாஹ் (எவருக்கும்) அணுவளவும் அநீதி இழைக்கமாட்டான். அணுவளவு நன்மை இருந்தாலும் அதை அவன் பன்மடங்காக்கி (வழங்குவதுடன்) தன்னிடமிருந்து மாபெரும் சன்மானத்தையும் வழங்குவான்" எனும் (4:40ஆவது) இறைவசனத்தை நீங்கள் விரும்பினால் ஓதிக்கொள்ளுங்கள்.-[66]

3. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையில் உள்ள பரிந்துரைகளில் மூன்றாவது, மலக்குமார்கள், பாவம் செய்த விசுவாசிகள் நரகத்திலிருந்து வெளியேறுவதற்காகச் செய்யும் பரிந்துரை ஆகும். பின்பு அல்லாஹ்த் தஆலா, யாருடைய பரிந்துரைகளும் இன்றித் தனது பேருபகரத்தினால் சில கூட்டத்தினரை வெளியேற்றுவான். அபூ ஸஈத் (ரலி) அவர்களது மேற்கூறிய ஹதீஸின் தொடரில் இவ்வாறு வருகின்றது: "பிறகு வலிவும் மாண்புமிக்க அல்லாஹ், "வானவர்கள் பரிந்துரைத்துவிட்டார்கள் இறைத்தூதர்களும் பரிந்துரைத்துவிட்டார்கள் இறைநம்பிக்கையாளர்களும் பரிந்துரைத்து விட்டார்கள். இப்போது கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளன் மட்டுமே எஞ்சியிருக்கிறான்" என்று கூறிவிட்டு, நரகத்திலிருந்து ஒரு கைப்பிடி அளவிலான மக்களை அள்ளியெடுத்து, அறவே எந்த நன்மையும் செய்திராத ஒரு கூட்டத்தை நரகத்திலிருந்து வெளியேற்றுவான். அவர்கள் கரிக்கட்டை போன்று மாறியிருப்பார்கள். எனவே, அவர்களைச் சொர்க்கத்தின் நுழைவாயில்களில் உள்ள ஒரு நதியில் போடுவான். -அதற்கு "ஜீவநதி" (நஹ்ருல் ஹயாத்) என்று பெயர்.- உடனே அவர்கள் சேற்று வெள்ளத்தில் விதைப் பயிர் முளைப்பதைப் போன்று (புதுப் பொலிவுடன்) வெளியேறுவார்கள்."[67]

ஜாபிர் (ரலி) அவர்களது ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது : "அல்லாஹ் கூறுவான் : தற்போது நான் என்னுடைய அறிவாலும் அருளாலும் வெளியேற்றுகின்றேன். அப்போது அவன், அவர்கள் வெளியேற்றியவர்களை விட பல மடங்கு மக்களை வெளியேற்றுவான். அவர்களது பிடரிகளில் 'அல்லாஹ்வினால் விடுதலை

[66] புகாரி : 7439, முஸ்லிம் : 183

[67] புகாரி : 7439, முஸ்லிம் : 183

செய்யப்பட்டவர்கள்' என எழுதப்பட்டிருக்கும். பின்பு அவர்கள் சுவனம் நுழைவார்கள். அங்கு அவர்களுக்கு 'ஜகன்னமிகள்' எனப்படும்.[68]

4. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையில் உள்ள பரிந்துரைகளில் நான்காவது, அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்தவர்கள், தமது சகோதர முஃமின்களுக்காக செய்யும் பரிந்துரையாகும். மிக்தாம் பின் மஃதீ கரிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "(ஷஹீது எனும்) ஒரு உயிர்த்தியாகிக்கு அல்லாஹ்விடத்தில் ஆறு பரிசுகள் கிடைக்கும்.

1 . அவரின் ஒரு சொட்டு இரத்தம் சிந்தும் போதே அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, சொர்க்கத்தில் தனது இருப்பிடத்தைக் காண்பார்.

2 . கப்ருடையை வேதனையை விட்டு காப்பாற்றப்படுவார்.

3 . மிகப்பெரிய திடுக்கத்தை விட்டு பாதுகாப்பு பெறுவார்.

4 . அவரின் தலைக்கு மதிப்புமிக்க கிரீடம் அணிவிக்கப்படும். அதில் உள்ள ஒரு மாணிக்கக்கல் இந்த உலகத்தையும், இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் விடவும் சிறந்ததாக இருக்கும்.

5 . அவருக்கு 72 சொர்க்கத்து கண்ணழகிகளை திருமணம் செய்து கொடுக்கப்படும்.

6 . அவரின் உறவினர்களில் எழுபது பேருக்கு அவர் செய்யும் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும்."[69]

5. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையில் உள்ள பரிந்துரைகளில் ஐந்தாவது, 'அப்ராத்கள்' எனப்படும், பருவ வயதை அடைய முன்னர் மரணித்த சிறுவர்கள் தமது பெற்றோர்களுக்கு செய்யும் பரிந்துரையாகும். அதற்குப் பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரல) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "முஸ்லிம் பெற்றார்களின் முன்னிலையில், பருவ வயதை அடையாத அவர்களது மூன்று பிள்ளைகள் மரணித்தால், அல்லாஹ் தனது பேருபகாரத்தினால் அவர்களை சுவனத்தில் நுழையச் செய்வான். அவர்களிடம் 'சுவனத்தில் நுழையுங்கள்' எனக் கூறப்படும். அப்போது அவர்கள், 'எமது

[68] அஹ்மத் : (3ஃ325)

[69] திர்மிதி : 1663, இப்னு மாஜஹ் : 2799

பெற்றோர் நுழையும் வரை (நாம் நுழைய மாட்டோம்)’ என்று கூறுவார்கள். அப்போது அவர்களிடம், ‘நீங்களும் உங்கள் பெற்றோர்களும் சுவனம் நுழையுங்கள்’ எனக் கூறப்படும்[70]

6. அல்லாஹ்வின் அடியார்களே! மறுமையில் உள்ள பரிந்துரைகளில் ஆறாவது பரிந்துரை, இறைவிசுவாசிகளுக்கு அல்குர்ஆன் செய்யும் பரிந்துரையாகும். அபூ உமாமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “குர்ஆனை ஓதிவாருங்கள். ஏனெனில், குர்ஆன் ஓதிவருபவர்களுக்கு அது மறுமையில் வந்து (இறைவனிடம்) பரிந்துரை செய்யும். இரு ஒளிச்சுடர்களான “அல்பகரா” மற்றும் “ஆலு இம்ரான்” ஆகிய இரு அத்தியாயங்களையும் ஓதிவாருங்கள். ஏனெனில், அவை மறுமை நாளில் நிழல்தரும் மேகங்களைப் போன்றோ அல்லது அணி அணியாகப் பறக்கும் பறவைக் கூட்டங்களைப் போன்றோ வந்து தம்மோடு தொடர்புள்ளவர்களுக்காக (இறைவனிடம்) வாதாடும்.[71]

அல்லாவின் அடியார்களே! இவைதான் மறுமையில் உள்ள ஆறு வகையான பரிந்துரைகள் ஆகும். இவற்றின் மூலம், நரகில் நுழைந்துள்ள விசுவாசிகள் அதிலிருந்து வெளியேறவும், நரகம் நுழையாத விசுவாசிகள் சுவனம் நுழையவும் பயன்பெற்றுக் கொள்வார்கள்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்!

---

[70] நஸாஈ : 1875
[71] முஸ்லிம் : 804

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடியாது. மாறாக, பரிந்துரைக்குரிய இரு நிபந்தனைகளும் யாரிடம் பரிபூரணமாக உள்ளதோ, அவருக்காகச் செய்யப்படும் பரிந்துரையையே அல்லாஹ் ஏற்றுக்கொள்வான். அவ்வாறு இல்லாவிட்டால் அல்லாஹ் ஏற்க மாட்டான். இதற்குத்தான், 'அஷ்ஷபாஅதுல் முஸ்பதா' (உறுதியாக நிகழும் பரிந்துரை) எனப்படும். அந்த இரு நிபந்தனைகளில் முதலாவது, சிபாரிசு செய்பவருக்கு அல்லாஹ் சிபாரிசு செய்ய அனுமதி வழங்குவதாகும். இதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும்:

﴿ مَن ذَا ٱلَّذِى يَشۡفَعُ عِندَهُۥٓ إِلَّا ﴾ [البقرة: ٢٥٥]

"அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்?" (அல் பகரா : 255)

﴿ وَلَا تَنفَعُ ٱلشَّفَٰعَةُ عِندَهُۥٓ إِلَّا لِمَنۡ أَذِنَ لَهُۥۚ ﴾ [سبأ: ٢٣]

"அன்றியும், அவன் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவருக்குத் தவிர, அவனிடத்தில் எந்தப் பரிந்துரையும் பயனளிக்காது." (ஸபஉ : 23)

இரண்டாவது நிபந்தனை: யாருக்காகப் பரிந்துரை செய்யப்படுகின்றதோ, அவரை அல்லாஹ் பொருந்திக் கொள்வதாகும். அதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும் :

﴿ وَلَا يَشۡفَعُونَ إِلَّا لِمَنِ ٱرۡتَضَىٰ ﴾ [الأنبياء: ٢٨]

"இன்னும், எவரை அவன் பொருந்திக்கொள்கிறானோ அ(த்தகைய)வருக்கன்றி, (வேறு எவருக்கும்) அவர்கள் பரிந்து பேசமாட்டார்கள்" (அல் அன்பியா : 28)

﴿ يَوۡمَئِذٖ لَّا تَنفَعُ ٱلشَّفَٰعَةُ إِلَّا مَنۡ أَذِنَ لَهُ ٱلرَّحۡمَٰنُ وَرَضِيَ لَهُۥ قَوۡلٗا ١٠٩ ﴾ [طه: ١٠٩]

"அந்நாளில் அளவற்ற அருளாளன் எவரை அனுமதித்து, அவருடைய பேச்சைப் பொருந்திக் கொள்கிறானோ, அவரைத் தவிர வேறு எவருடைய பரிந்துரையும் பலனளிக்காது." (தாஹா : 109)

அல்லாஹ் இவ்விரு நிபந்தனைகளையும் பின்வரும் வசனத்தில் ஒருசேரக் கூறியுள்ளான்:

﴿ ۞ وَكَم مِّن مَّلَكٖ فِي ٱلسَّمَٰوَٰتِ لَا تُغۡنِي شَفَٰعَتُهُمۡ شَيۡـًٔا إِلَّا مِنۢ بَعۡدِ أَن يَأۡذَنَ ٱللَّهُ لِمَن يَشَآءُ وَيَرۡضَىٰٓ ٢٦ ﴾ [النجم: ٢٦]

"அன்றியும், வானங்களில் எத்தனை வானவர்கள் இருக்கின்றனர்? எனினும், அல்லாஹ் விரும்பி, எவரைப் பற்றித் திருப்தியடைந்து, அவன் அனுமதி கொடுக்கிறானோ அவரைத் தவிர வேறெவரின் பரிந்துரையும் எந்தப் பயனும் அளிக்காது." (அந்நஜ்ம் : 26)

யாருக்காக பரிந்துரை செய்யப்படுகின்றதோ, அவரை அல்லாஹ் பொருந்திக்கொள்ளாவிட்டால் பரிந்துரை நிகழ மாட்டாது என்பதற்கான இன்னும் ஒரு ஆதாரம், நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது தந்தை 'ஆஸருக்குப்' பரிந்துரை செய்யும் போது, அவர் ஓர் இணைவைப்பாளர் என்பதால் - பரிந்துரை செய்பவர் அல்லாஹ்வின் உற்ற தோழராகிய இப்ராஹீம் (அலை) ஆக இருந்தும் - அல்லாஹ் அவரது பரிந்துரையை ஏற்க மாட்டான் என்பதாகும்.

விசுவாசிகளே! அல்லாஹ் அடியானைப் பொருந்திக்கொள்வது என்பது, தவ்ஹீதை சரிவர நடைமுறைப்படுத்துவதால் மாத்திரமே! என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதாவது, தொழுகை, துஆ, அறுத்துப் பலியிடல், நேர்ச்சை போன்ற வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்ய வேண்டும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நபியவர்களிடம், 'உங்களது பரிந்துரையால் யார் அதிகம் பாக்கியமடைவார்?' எனக் கேட்டபோது, 'யார் உளத்தூய்மையுடன் 'லா இலாஹ இல்லல்லாஹ்' (வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை) எனக் கூறுகின்றாரோ அவர் தான்' என்று கூறினார்கள்.[72]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக, அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "எனக்குரிய துஆவை மறுமையில் என்னுடைய உம்மத்திற்கான பரிந்துரையாக மறைத்து வைத்துள்ளேன். அல்லாஹ் நாடினால் என்னுடைய உம்மத்தில் அல்லாஹ்வுக்கு எந்த ஒரு இணையும் கற்பிக்காத நிலையில் யாரெல்லாம் மரணிக்கின்றார்களோ அவர்களுக்கு அது கிடைக்கும்"[73]

[72] புகாரி : 99

[73] திர்மிதி : 3602

மறுமையில், பரிந்துரை செய்பவர்களின் பரிந்துரைகளைப் பெரும் பாக்கியம் பெற்றவர்களாக இருக்க விரும்புவார்கள், துஆ போன்ற அனைத்து வணக்கங்களையும், அல்லாஹ்வுக்காக உளத்தூய்மையுடன் செய்திருக்கவேண்டும் என்பது ஒரு நிபந்தனை என்பதையே இது போன்ற ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. யாராவது, படைப்புகளிடம் துஆக் கேட்டல், அல்லது அவர்களுக்காக அறுத்துப் பலியிடல் அல்லது நேர்ச்சை வைத்தல் போன்றவற்றின் மூலம் இணைவைப்பில் விழுந்துவிட்டால், - அவர் என்ன செய்தாலும் - அவருக்கு யாருமே பரிந்துரை செய்யமாட்டார்கள். ஒருவேளை யாராவது அவருக்குப் பரிந்துரை செய்தாலும், அந்தப் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பரிந்துரை செய்பவர் நபி (ஸல்) அவர்களாக இருப்பினும் சரியே! ஏனென்றால் இணைவைப்பு என்பது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படத் தடையாக இருக்கும் ஒரு காரணமாகும்.

யா அல்லாஹ்! எங்களுக்கு மறுமையில் பரிந்துரை செய்பவர்களின் பரிந்துரைகளைப் பெற்றுத் தருவாயாக!

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

மறுமை நாளை விசுவாசம் கொள்ளல் - 08

(மண்ணறை சோதனைகள், இன்பங்கள், மற்றும் வேதனைகளை ஈமான் கொள்ளல்)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின்

தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அவனைப் பயந்துகொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் தனது சட்டமியற்றுவதில், கூலி வழங்குவதில், விதிகளை நிர்ணயிப்பதில் தீர்க்கமானவன். அவனின் அறிவு ஞானத்தின் காரணமாக, தனது தூதர்கள் வாயிலாக தனது படைப்புக்களுக்கு கட்டாயப்படுத்திய அம்சங்களுக்காக கூலி வழங்கும் நோக்கில் ஒரு மீள் வாழ்க்கையை அமைத்துள்ளான்.

﴿ أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ ﴿١١٥﴾ ﴾ [المؤمنون: ١١٥]

"நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.)" (ஸூரா அல் முஃமினூன் : 115)

விசுவாசிகளே! கடந்த சில குத்பாக்களில், மறுமையை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்களான, ஸூர் ஊதப்படல், மறுமையின் பயங்கரங்கள், படைப்புக்கள் எழுப்பப்படல், மக்கள் மஹ்சரில் ஒன்று திரட்டப்படல், விசாரணை, கூலி வழங்கல், சுவனத்தின் இன்பங்கள், நரக வர்ணனைகள், சில இறுதிநாள் காட்சிகள் மற்றும் பரிந்துரைகளின் வகைகள் பற்றிப் பேசப்பட்டது. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன் மறுமையை ஈமான் கொள்வதுடன் தொடர்பான, மன்னறை சோதனை, அதன் வேதனை மற்றும் இன்பங்கள் ஆகியவற்றை ஈமான் கொள்வது பற்றிப் பேசவுள்ளோம்.

- அல்லாஹ்வின் அடியார்களே! சோதனை என்றால், கேள்வி கேட்டுப் பரிசோதிப்பதாகும். கப்ருடைய சோதனை என்றால், மரணித்த ஒருவர் அடக்கம் செய்யப்பட்ட பின்னர், அவரது இரட்சகன், அவரது மார்க்கம், மற்றும் அவரது நபியைப் பற்றி விசாரிக்கப்படுவதாகும். அந்த ஜனாஸா ஸாலிஹானதாக இருந்தால், கேள்வியின் போது அதனை அல்லாஹ் பலப்படுத்துவான். சரியான பதிலை அளிக்கும் பாக்கியத்தை அதற்கு வழங்குவான். கெட்ட ஜனாஸாவாக

இருந்தால், சரியான பதிலை வழங்கும் பாக்கியம் அதற்குக் கிடைக்கமாட்டாது. எனவே அது வேதனை செய்யப்படும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

மரணித்தவரிடம் மண்ணறையில் கேள்வி கேட்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதமாக மூன்று ஹதீஸ்கள் வந்துள்ளன :

- முதலாவது: நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “ஓர் அடியார் மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்டு அவருடைய தோழர்கள் திரும்பிச் செல்லும்போது, அந்த அடியார் அவர்களின் காலணிகள் எழுப்பும் ஓசையைச் செவியுறுவார். அப்போது அவரிடம் இரு வானவர்கள் வந்து அவரை எழுப்பி உட்காரவைத்து, “இந்த மனிதரைப் பற்றி என்ன கருதிக் கொண்டிருந்தாய்?” என்று முஹம்மத் (ஸல்) குறித்துக் கேட்பர். இறைநம்பிக்கையாளர், “இவர் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார் என நான் உறுதிகூறுகிறேன்” என்பார். அவரிடம் “(நீர் கெட்டவராய் இருந்திருந் தால் உமக்குக் கிடைக்கவிருந்த) நரகத்தில் உள்ள உமது இருப்பிடத்தைப் பார்ப்பீராக! (நீர் நல்லவராக இருப்பதால்) அல்லாஹ் இதை மாற்றி உமக்குச் சொர்க்கத்தில் இருப்பிடத்தை ஏற்படுத்தியுள்ளான்” எனக் கூறப்படும். இரண்டை யும் அவர் ஒரே நேரத்தில் பார்ப்பார். நயவஞ்சகர் மற்றும் இறைமறுப்பாளரிடம், “இந்த மனிதர் விஷயத்தில் நீர் என்ன கருதிக்கொண்டிருந்தீர்?” என்று கேட்கப்படும். அதற்கு “எனக்கொன்றும் தெரியாது. மக்கள் சொல்லிக்கொண்டிருந்ததையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்” என அவர் விடையளிப்பார். உடனே “நீர் அறிந்திருக்கவு மில்லை. (குர்ஆனை) ஓதி (விளங்கி)யதுமில்லை” என்று கூறப்படும். மேலும் இரும்பு சுத்திகளால் அவர் கடுமையாக அடிக்கப்படுவார். அப்போது அவரை அடுத்திருக்கும் மனிதர்களையும் ஜின்களையும் தவிர மற்ற அனைத்துமே செவியுறும் அளவுக்கு அவர் அலறுவார்.”[74]
- இரண்டாவது: பராஅ இப்னு ஆசிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : நபியவர்கள் கையில் ஒரு குச்சியிருந்தது. அதைக் கொண்டு மண்ணைக் கிளறியவர்களாகச் சொன்னார்கள். கப்ருடைய வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள் என்று மூன்று தடவை கூறினார்கள். பிறகு, ‘இந்த மய்யித்து தன்னை அடக்க வந்தவர்கள் திரும்பும் வேளையில் அவர்களுடைய செருப்பின் ஓசையைக் கேட்கும். அதற்குப் பிறகு, இன்னானே உன்னுடைய இறைவன் யார் உன்னுடைய மார்க்கம் என்ன உன்னுடைய நபி யார் என்று கேட்கப்படும்’ என்றார்கள். அப்போது இரண்டு மலக்குமார்கள் வந்து

[74] புகாரி : 1374

அவனை உட்கார வைப்பார்கள். அந்த இரண்டு மலக்குமார்கள் ‘உன்னுடைய இறைவன் யார்?’ என்பார்கள். அவர், ‘என்னுடைய இறைவன் அல்லாஹ் ஆவான்’ என்பார். ‘உன்னுடைய மார்க்கம் என்ன-?’ என்று அவர்கள் கேட்பார்கள். அதற்கு அவர், ‘என்னுடைய மார்க்கம் இஸ்லாம்’ என்பார். ‘உங்களிடத்தில் அனுப்பப்பட்டாரே அப்படிப்பட்ட இந்த மனிதரைப் பற்றி என்ன கருதுகிறீர்?’ என்பார்கள். அதற்கு அவர், ‘அவர் அல்லாஹ்வின் தூதர் ஆவார்’ என்பார். ‘இது உனக்கு எப்படித் தெரியும்?’ என்பார்கள். அதற்கு அவர், ‘நான் அல்லாஹ்வின் வேதத்தைப் படித்தேன். அதை நான் நம்பிக்கை கொண்டேன். மேலும் நான் உண்மைப்படுத்தினேன்’ என்பார். அப்போது வானத்தில் இருந்து ஓர் அழைப்பாளி, ‘என்னுடைய அடியான் உண்மை கூறிவிட்டான். அவனுக்கு சுவனத்தில் இருந்து ஒரு விரிப்பைக் கொடுங்கள். சுவனத்தில் இருந்து ஆடையும் வழங்குங்கள். சுவனத்திற்கான ஒரு வாயிலையும் திறந்துகொடுங்கள்’ என்று கூறுவான். அப்போது சுவனத்தின் மணமும், அமைதியும் அவனிடம் வரும். அவரது மண்ணறை பார்வையெட்டும் தூரம் வரை விசாலமாக்கிக் கொடுக்கப்படும். அவரிடம் அழகான முகத்துடன், அழகிய ஆடைகளுடனும், நறுமணத்துடனும் ஒரு மனிதர் வந்து, ‘உம்மை மகிழ்விக்கும் நன்மாராயங்கள் உண்டு. இதுதான் உமக்கு வாக்களிக்கப்பட்ட நாள்.’ என்று கூறுவார். அதற்கு இவர், ‘நீங்கள் யார்? உங்களது முகம் நன்மைகளைக் கொண்டுவரும் முகமாக உள்ளதே?’ என்று கேட்பார். அதற்கு அவர், ‘நான் தான் உனது நற்கருமங்கள்’ எனக் கூறுவார். அப்போது அம்மனிதர், ‘ரப்பே! மறுமையை ஏற்படுத்துவாயாக! நான் எனது குடும்பம் மற்றும் செல்வத்தை நோக்கிப் போகவேண்டும்.’ என்று கூறுவார்.

பின்பு, காபிரின் விடயத்தில் இவ்வாறு கூறினார்கள் : அவனிடம் இரு மலக்குகள் வந்து, அவனை உட்காரச் செய்து, ‘உமது ரப்பு யார்?’ எனக் கேட்பார்கள். அதற்கவன், ‘ஆ.... ஆ.. எனக்குத் தெரியாது’ என்று கூறுவான். பின்னர் ‘உமது மார்க்கம் எது?’ எனக் கேட்டாலும், ‘ஆ.... ஆ.. எனக்குத் தெரியாது’ என்றே கூறுவான். பின்னர், உங்களிடம் அனுப்பப்பட்ட இம்மனிதர் யார்?’ எனக் கேட்டாலும், ‘ஆ.... ஆ.. எனக்குத் தெரியாது’ என்றே கூறுவான். பின்னர் அப்போது வானத்தில் இருந்து ஓர் அழைப்பாளி, ‘அவன் பொய் கூறிவிட்டான். அவனுக்கு நரகத்தில் இருந்து ஒரு விரிப்பைக் கொடுங்கள். நரகத்திற்கான ஒரு வாயிலையும் திறந்துகொடுங்கள்’ என்று கூறுவான். அதன் வெப்பமும், சூடான காற்றும் அவனை வந்தடையும். அவனிடம் அசிங்கமான முகத்துடன், அறுவறுப்பான ஆடைகளுடனும், துர்நாற்றத்துடனும் ஒரு மனிதர் வந்து, ‘உன்னை கவலைப்படுத்தும் நன்மாராயங்கள் உண்டு. இதுதான் உனக்கு

வாக்களிக்கப்பட்ட நாள்.' என்று கூறுவார். அதற்கு இவன், 'நீ யார்? உனது முகம் கெடுதிகளைக் கொண்டுவரும் முகமாக உள்ளதே?' என்று கேட்பான். அதற்கு அவர், 'நான் தான் உனது கெட்ட செயல்கள்' எனக் கூறுவார். அப்போது அந்தப் பாவி, 'ரப்பே! மறுமையை ஏற்படுத்திவிடாதே' என்று கூறுவான்."[75]

- மூன்றாவது ஆதாரம் : நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நீங்கள் (உங்கள் அடக்கக் குழிகளில்) மகாக் குழப்பவாதியான தஜ்ஜா-ன் 'குழப்பத்தைப் போன்ற' அல்லது 'அதற்கு நிகரான' குழப்பத்துக்கு உள்ளாக்கப்படுவீர்கள் என எனக்கு 'வஹீ' (இறைச்செய்தி) அறிவிக்கப்பட்டது. (நீங்கள் அடக்கக் குழிகளில் இருக்கும் போது) உங்களில் ஒருவரிடம் (என்னைக் காட்டி) "இம்மனிதரைப் பற்றி நீ என்ன அறிந்துள்ளாய்?" என்று வினவப்படும். அதற்கு 'இறைநம்பிக்கையாளரோ' அல்லது '(இறைத்தூதின் மீது) உறுதி கொண்டிருந்தவரோ' -(இந்த இரண்டில் அஸ்மா (ரலி) அவர்கள் எதைச் சொன் னார்கள் என அறிவிப்பாளர் ஃபாத்திமா பின்த் அல்முன்திர் ஐயம் தெரிவிக்கிறார்.)- "இவர் அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் எங்களிடம் சான்றுகளையும் நல்வழியை யும் கொண்டு வந்தார்கள். நாங்கள் (அவர்களின்) அழைப்பை ஏற்றோம் (அவர்களை) நம்பினோம் பின்பற்றினோம்" என்று பதிலளிப்பார். அப்போது அவரிடம், "நலமுடன் உறங்குவீராக! நீர் (உலகில் வாழ்ந்தபோதும் அவரை) நம்பிக்கைகொண்டிருந்தீர் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம்" என்று கூறப்படும். 'நயவஞ்சகனோ' அல்லது '(என்னைப் பற்றி) சந்தேகத்துடன் இருந்தவனோ' -(இவ்விரண்டில் அஸ்மா (ரலி) அவர்கள் எதைச் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை என்று, இதை அறிவிக்கும் ஹிஷாம் பின் உர்வா கூறுகின்றார்கள்.)- (அந்த வினாவிற்கு) "(அவரை) எனக்குத் தெரியாது மக்கள் ஒன்றைச் சொல்லக் கேட்டேன். நானும் அதையே சொன்னேன்" என்று பதிலளிப்பான்.[76]

மரணித்தவரிடம் மண்ணறையில் கேள்விகள் கேட்கப்படும் என்பதையே இம்மூன்று ஹதீஸ்களும் அறிவிக்கின்றன. கேள்வி கேட்கப்படும்போது விசுவாசிகளை அல்லாஹ் பலப்படுத்துவான், சரியான பதில்கள் அளிக்கும் பாக்கியத்தை கொடுப்பான். அல்லாஹ் கூறுகின்றான்:

[75] அபூ தாவூத் 4753
[76] புகாரி : 1053

﴿ يُثَبِّتُ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ بِٱلۡقَوۡلِ ٱلثَّابِتِ فِي ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا وَفِي ٱلۡأٓخِرَةِۖ ﴾ [إبراهيم: ٢٧]

“எவர்கள் நம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதிப்படுத்துகின்றான்” (ஸூரா இப்ராஹீம் : 27)

நிராகரிப்பாளனும், நயவஞ்சகனும் பதிலளிக்க மாட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்குத் தகுதியான விதத்தில் அவர்களை நடத்துவான்.

- விசுவாசிகளே! மறுமையுடன் தொடர்பான விடயங்களில் இரண்டாவது, மண்ணறையின் இன்பங்களும் வேதனைகளும் ஆகும். ஸைத் பின் ஸாபித் (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் பனுந் நஜ்ஜார் குலத்தாருக்குச் சொந்தமான தோட்டமொன்றில் தமது கோவேறு கழுதையின் மீதிருந்தார்கள். அப்போது அவர்களுடன் நாங்களும் இருந்தோம். அப்போது அவர்களது கோவேறு கழுதை அவர்களைத் தூக்கியெறியும் அளவுக்கு வெருண்டோடியது. அங்கு ஆறு அல்லது ஐந்து அல்லது நான்கு மண்ணறைகள் இருந்தன. (இவ்வாறுதான் சயீத் அல்ஜுரைரீ (ரஹ்) அவர்கள் அறிவித்துவந்ததாக இப்னு உலய்யா (ரஹ்) அவர்கள் தெரிவித்தார்கள்.) அப்போது நபி (ஸல்) அவர்கள், “இந்த மண்ணறைகளில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களைப் பற்றி யார் அறிவார்?” என்று கேட்டார்கள். ஒரு மனிதர், “நான் (அறிவேன்)” என்றார். நபி (ஸல்) அவர்கள், “இவர்கள் எப்போது இறந்தார்கள்?” என்று கேட்டார்கள். அவர், “இணைவைப்பு (கோலோச்சியிருந்த அறியாமை)க் காலத்தில் இறந்தனர்” என்று பதிலளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், “இந்தச் சமுதாயம் மண்ணறைகளில் சோதிக்கப்படுகின்றது. நீங்கள் (இறந்தவர்களைப்) புதைக்காமல் விட்டுவிடுவீர்கள் என்ற அச்சம் மட்டும் எனக்கில்லையாயின், நான் செவியுறும் மண்ணறையின் வேதனையை உங்களுக்கும் கேட்கச் செய்யும்படி அல்லாஹ்விடம் பிரார்த்தித்து இருப்பேன்” என்று கூறினார்கள். பிறகு எங்களை நோக்கித் தமது முகத்தைத் திருப்பி, “நரக நெருப்பின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்” என்றார்கள். மக்கள், “நரக நெருப்பின் வேதனையிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்” என்று கூறினர். பிறகு “மண்ணறையின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்” என்றார்கள். மக்கள், “மண்ணறையின் வேதனையிலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்” என்று கூறினர். நபி (ஸல்)

அவர்கள், “குழப்பங்களில் வெளிப்படையானவை மறைமுகமானவை அனைத்திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்” என்று கூறினார்கள். மக்கள், “குழப்பங்களில் வெளிப்படையானவை மறைமுகமானவை அனைத்திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்” என்று கூறினர். நபி (ஸல்) அவர்கள், “தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருங்கள்” என்றார்கள். மக்கள், “தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருகிறோம்” என்று கூறினர்.[77]

அபுஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “இறைவா! நான் அடக்கத் தலத்தின் வேதனை, நரக வேதனை, வாழ்வின் சோதனை, மரணத்தின் சோதனை, மஸீ/ஹத் தஜ்ஜாலின் சோதனை ஆகிய வற்றிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்” எனப் பிரார்த்திப்பவர் களாக இருந்தார்கள்.[78]

- அல்லாஹ்வின் அடியார்களே! மண்ணறை வேதனை மனிதர்களில் இரு தரப்பினருக்கு வந்துள்ளது : பாவிகளான விசுவாசிகள், நிராகரிப்பாளர்கள். முதலாவதற்குப் பின்வரும் ஹதீஸ் ஆதாரம் ஆகும்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: இரு மண்ணறைகளைக் கடந்து நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். அப்போது “இவ்விருவரும் வேதனை செய்யப்படுகிறார்கள் ஆனால், ஒரு பெரிய பாவத்திற்காக வேதனை செய்யப்பட வில்லை. ஒருவர் கோள்சொல்லித் திரிந்தவர் மற்றொருவர் சிறுநீர் கழிக்கும்போது மறைத்துக்கொள்ளாதவர்” என்று கூறினார்கள்.[79] கோள் கூறித் திரிவது ஒரு பெரும் பாவமாகும். சிறுநீர் கழிக்கும் மறைவெடுக்காமல் இருப்பதும் அவ்வாறுதான். இப்பாவத்தை செய்பவர்கள் அதிலிருந்து தூய்மைப்படுத்தப்படும் நோக்கில், அவர்களுக்குப் பொருத்தமான தண்டனைக்குத் தகுதி ஆகிவிட்டனர். இவ்விரண்டும் அல்லாத ஏனைய பாவங்களும் இவ்வாறுதான். அதற்கேற்ற அளவு கப்ரில் வேதனை செய்யப்படுவார்கள். ஏனெனில் கப்ரும் கூலி வழங்கப்படும் ஓர் இடமே.
- நிராகரிப்பாளர்களுக்கு மண்ணறை வேதனை உண்டு என்பதற்குப் பின்வரும் வசனம் ஆதாரமாகும்:

[77] முஸ்லிம் : 2867
[78] புகாரி : 1377, முஸ்லிம் : 588
[79] புகாரி : 216, முஸ்லிம் : 292

﴿ وَلَوۡ تَرَىٰٓ إِذِ ٱلظَّٰلِمُونَ فِي غَمَرَٰتِ ٱلۡمَوۡتِ وَٱلۡمَلَٰٓئِكَةُ بَاسِطُوٓاْ أَيۡدِيهِمۡ أَخۡرِجُوٓاْ أَنفُسَكُمُۖ ٱلۡيَوۡمَ تُجۡزَوۡنَ عَذَابَ ٱلۡهُونِ بِمَا كُنتُمۡ تَقُولُونَ عَلَى ٱللَّهِ غَيۡرَ ٱلۡحَقِّ وَكُنتُمۡ عَنۡ ءَايَٰتِهِۦ تَسۡتَكۡبِرُونَ ٩٣ ﴾ [الأنعام: ٩٣]

“இந்த அநியாயக்காரர்கள் மரண வேதனைகளில் இருக்கும்போது நீங்கள் அவர்களைப் பார்த்தால் வானவர்கள் தம் கைகளை விரித்தவர்களாக (இவர்களிடம்), “உங்களுடைய உயிர்களை வெளியேற்றுங்கள்: உண்மையல்லாததை அல்லாஹ்வின் மீது (பொய்யாக) கூறிக்கொண்டிருந்ததின் காரணமாக இன்றையதினம் நீங்கள் இழிவுதரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள் இன்னும், அவனுடைய வசனங்களை (நம்பாது நிராகரித்துப்) பெருமையடித்துக் கொண்டிருந்தீர்கள்” (என்று கூறுவதை நீர் காண்பீர்).” (அல் அன்ஆம் : 93)

“இன்றையதினம் நீங்கள் இழிவுதரும் வேதனையைக் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள்” என்ற வசனம் அவர்களுக்கு உடனடியாக தண்டனை வழுங்கப்படும் என்பதை அறிவிக்கின்றது.

பிர்அவ்னின் கூட்டத்தினர் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

﴿ ٱلنَّارُ يُعۡرَضُونَ عَلَيۡهَا غُدُوّٗا وَعَشِيّٗاۚ وَيَوۡمَ تَقُومُ ٱلسَّاعَةُ أَدۡخِلُوٓاْ ءَالَ فِرۡعَوۡنَ أَشَدَّ ٱلۡعَذَابِ ٤٦ ﴾ [غافر: ٤٦]

“காலையிலும், மாலையிலும் அவர்கள் நரக நெருப்பின் முன் காட்டப்படுவார்கள் மேலும், (நியாயத்) தீர்ப்புக் காலம் நிலைப்பெற்றிருக்கும் நாளில் “ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்” (என்று கூறப்படும்).” (ஸூரா அல் முஃமின் : 46)

காலையிலும், மாலையிலும் என்பதன் அர்த்தம் மறுமை நிகழ முன்னர் என்பதாகும். ஏனெனில் அதற்குப் பின்னர் அல்லாஹ், *மேலும், (நியாயத்) தீர்ப்புக் காலம் நிலைப்பெற்றிருக்கும் நாளில் “ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்”* என்று கூறியுள்ளார். எனவே மறுமை ஏற்படும் முன்னால் கொடுக்கப்படும் வேதனை மற்றும் மறுமையில் கொடுக்கப்படும் வேதனை என அல்லாஹ் பிரித்துக் கூறியுள்ளான்.

- அல்லாஹ்வின் அடியார்களே! மண்ணறை இன்பம் என்பது உண்மையான இறை விசுவாசிகளுக்கு உரியதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱلَّذِينَ قَالُواْ رَبُّنَا ٱللَّهُ ثُمَّ ٱسۡتَقَٰمُواْ تَتَنَزَّلُ عَلَيۡهِمُ ٱلۡمَلَٰٓئِكَةُ أَلَّا تَخَافُواْ وَلَا تَحۡزَنُواْ وَأَبۡشِرُواْ بِٱلۡجَنَّةِ ٱلَّتِي كُنتُمۡ تُوعَدُونَ ٣٠ ﴾ [فصلت: ٣٠]

“நிச்சயமாக எவர்கள்: “எங்கள் இறைவன் அல்லாஹ்தான்” என்று கூறி, (அதன் மீது) உறுதியாக (நிலைத்து) நின்றார்களோ, அவர்கள் மீது வானவர்கள் இறங்கி “நீங்கள் பயப்படாதீர்கள் கவலையும் படாதீர்கள்: நீங்கள் வாக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்த சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்” (எனக் கூறுவார்கள்).” (ஸூரா புஸ்ஸிலத் : 30)

இந்த வசனத்தில் மலக்குமார்களைத் தொட்டும் அல்லாஹ் கூறும், *சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்* என்ற வார்த்தையே ஆதாரமாகும். இது மரணிக்க செய்யப்பட்டு, உயிர் பிரியும் தருவாயில் நிகழக்கூடியதாகும். மரணிக்கச் செய்யப்பட்டு, உயிர் பிரியும் தருவாயில் சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் சொல்லப்படுவது ஒரு இன்பமே. அதுவே இக்கருத்துக்கு ஆதாரம் ஆகும்.

- மண்ணறை இன்பத்தை உணர்த்தும் அல்குர்ஆனிய ஆதாரங்களில் பின்வரும் வசனமும் ஒன்றாகும் :

﴿ فَلَوۡلَآ إِذَا بَلَغَتِ ٱلۡحُلۡقُومَ ٨٣ وَأَنتُمۡ حِينَئِذٖ تَنظُرُونَ ٨٤ وَنَحۡنُ أَقۡرَبُ إِلَيۡهِ مِنكُمۡ وَلَٰكِن لَّا تُبۡصِرُونَ ٨٥ فَلَوۡلَآ إِن كُنتُمۡ غَيۡرَ مَدِينِينَ ٨٦ تَرۡجِعُونَهَآ إِن كُنتُمۡ صَٰدِقِينَ ٨٧ فَأَمَّآ إِن كَانَ مِنَ ٱلۡمُقَرَّبِينَ ٨٨ فَرَوۡحٞ وَرَيۡحَانٞ وَجَنَّتُ نَعِيمٖ ٨٩ ﴾ [الواقعة: ٨٣-٨٩]

"மரணத் தருவாயில் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது (83) அந்நேரம் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்.(84) ஆயினும், நாமோ அவனுக்கு உங்களைவிட சமீபமாக இருக்கிறோம் எனினும், நீங்கள் (நம்மைப்) பார்ப்பதில்லை.(85) ஆகவே நீங்கள் (யாருடைய) அதிகாரத்திற்கு(ம்) கட்டுப்படாதவர்களாக இருந்தால்-(86) (அதில்) நீங்கள் உண்மையாளர்களாக இருப்பின், (அவ்வுயிரை) மீள வைத்திருக்கலாமே!(87) (இறந்தவர்

இறைவனுக்கு) நெருக்கமானவர்களில் ஒருவராக இருப்பாராயின்,(88) அவருக்குச் சுகமும், நல்லுணவும், இன்னும் பாக்கியமுள்ள சுவர்க்கமும் உண்டு.(89) (ஸூரா அல் வாகிஆ)

சுகம், நல்லுணவு, பாக்கியமுள்ள சுவர்க்கம் ஆகிய இன்பங்களைக் கொண்டு நன்மாராயம் கூறப்படுவது, உயிர் தொண்டைக் குழியை அடையும்போது என்பதை இவ்வசனம் உணர்த்துகின்றது. எனவே மனிதன் அனுபவிக்கப் போகும் இன்பங்களின் ஆரம்பம் அவனது மரணத்தின் போது ஆகும் என்பதற்கு இது ஆதாரமாகும். மண்ணறையின் முதலாவது இன்பம் இதுவாகும்

- பின்வரும் வசனமும் மண்ணறை இன்பங்களுக்கு ஒரு ஆதாரமாகும்:

﴿ كَذَٰلِكَ يَجۡزِي ٱللَّهُ ٱلۡمُتَّقِينَ ٣١ ٱلَّذِينَ تَتَوَفَّىٰهُمُ ٱلۡمَلَٰٓئِكَةُ طَيِّبِينَ يَقُولُونَ سَلَٰمٌ عَلَيۡكُمُ ٱدۡخُلُواْ ٱلۡجَنَّةَ بِمَا كُنتُمۡ تَعۡمَلُونَ ٣٢ ﴾ [النحل: ٣١-٣٢]

“இவ்வாறே (தன்னை) அஞ்சுவோருக்கு அல்லாஹ் (நற்)கூலியளிக்கின்றான்.(நிராகரிப்பை விட்டும்) தூயவர்களாக இருக்கும் நிலையில் வானவர்கள் அவர்(களுடைய உயிர்)களைக் கைப்பற்றுவார்கள் அவர்களிடம்: “ஸலாமுன் அலைக்கும் (உங்கள் மீது சாந்தி உண்டாவதாக!) நீங்கள் செய்துகொண்டிருந்த (நற்) செயல்களுக்காக சுவனபதியில் நுழையுங்கள்” என்று அவர்கள் (அம்மலக்குகள்) சொல்வார்கள்.” (ஸூரா அந்நஹ்ல் : 31-32)

விசுவாசிகளின் உயிர்களைக் கைப்பற்றும்போது மலக்குமார்கள், *நீங்கள் செய்துகொண்டிருந்த (நற்) செயல்களுக்காக சுவனபதியில் நுழையுங்கள்* என்று கூறுவார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளதே இங்கு ஆதாரமாகும்.

- இறை விசுவாசியின் உயிர் பிரிவதற்கு சற்று முன்னர், அவனுக்கு இன்பங்கள் இருப்பதாக நற்செய்தி கூறப்படும் என்பதற்குப் பின்வரும் வசனமும் ஆதாரமாகும்:

﴿ يَٰٓأَيَّتُهَا ٱلنَّفۡسُ ٱلۡمُطۡمَئِنَّةُ ٢٧ ٱرۡجِعِيٓ إِلَىٰ رَبِّكِ رَاضِيَةٗ مَّرۡضِيَّةٗ ٢٨ فَٱدۡخُلِي فِي عِبَٰدِي ٢٩ وَٱدۡخُلِي جَنَّتِي ٣٠ ﴾ [الفجر: ٢٧-٣٠]

“(அந்நாளில் நல்லடியார்களிடம்) "சாந்தியடைந்த ஆத்மாவே!” நீ உன்னுடைய இறைவன்பால் திருப்தி அடைந்த நிலையிலும், (அவனால்) திருப்தி கொள்ளப்பட்ட நிலையிலும் மீளுவாயாக! நீ என் அடியார்களில் சேர்ந்துகொள்வாயாக! மேலும், “நீ என் சுவர்க்கத்தில் பிரவேசிப்பாயாக!” (என்று இறைவன் கூறுவான்). (ஸூரா அல்பஜ்ர் : 27-30

- அல்லாஹ்வின் அடியார்களே! இறை விசுவாசியின் உயிர் கைப்பற்றப்படுவதற்கு சற்று முன்னர் அவனுக்கு இன்பங்கள் இருப்பதாக நற்செய்தி கூறப்படும் என்பதை ஸுன்னாவும் அறிவிக்கின்றது. அதற்கு, முன்கூறப்பட்ட பரா இப்னு ஆதிப் (ரலி) அவர்களது ஹதீஸும் ஆதாரமாகும். அதில், விசுவாசியிடம் இரு மலக்குகள் கேட்கும் கேள்விகளுக்கு, அவர் பதில் அளித்த பின்னர் அவர்கள் இருவரும் இவ்வாறு கூறுவார்கள் என வந்துள்ளது : “தூய்மையான ஆத்மாவே! அல்லாஹ்வின் மன்னிப்பையும், திருப்பொருத்தத்தையும் நோக்கிச் செல்வாயாக!” அப்போது அவ்வுயிர் மகிழ்ச்சியடைந்து, இலகுவாக வெளியேறிவிடும். அப்போது வானத்தில் இருந்து ஓர் அழைப்பாளி, ‘என்னுடைய அடியான் உண்மை கூறிவிட்டான். அவனுக்கு சுவனத்தில் இருந்து ஒரு விரிப்பைக் கொடுங்கள். சுவனத்தில் இருந்து ஆடையும் வழங்குங்கள். சுவனத்திற்கான ஒரு வாயிலையும் திறந்துகொடுங்கள்’ என்று கூறுவான். அப்போது சுவனத்தின் மணமும், அமைதியும் அவனிடம் வரும். அவரது மண்ணறை பார்வையெட்டும் தூரம் வரை விசாலமாக்கிக் கொடுக்கப்படும். அவரிடம் அழகான முகத்துடன், அழகிய ஆடைகளுடனும், நறுமணத்துடனும் ஒரு மனிதர் வந்து, ‘உம்மை மகிழ்விக்கும் நன்மாராயங்கள் உண்டு. இதுதான் உமக்கு வாக்களிக்கப்பட்ட நாள்.’ என்று கூறுவார். அதற்கு இவர், ‘நீங்கள் யார்? உங்களது முகம் நன்மைகளைக் கொண்டுவரும் முகமாக உள்ளதே?’ என்று கேட்பார். அதற்கு அவர், ‘நான் தான் உனது நற்கருமங்கள்’ எனக் கூறுவார். அப்போது அம்மனிதர், ‘ரப்பே! மறுமையை ஏற்படுத்துவாயாக! நான் எனது குடும்பம் மற்றும் செல்வத்தை நோக்கிப் போகவேண்டும்.’ என்று கூறுவார்.
- அல்லாஹ்வின் அடியார்களே! இவை மண்ணறை சோதனை, வேதனை மற்றும் இன்பங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும், குர்ஆன் சுன்னாவின் உறுதியான ஆதாரங்களாகும். வழிகெட்டவனைத் தவிர வேறு யாரும் இதில் முரண்பட மாட்டார்கள்.
- அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம்

பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக! அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள்! மறுமையை ஈமான் கொள்வதில் பல்வேறு பலன்கள் உள்ளன:

1. அந்நாளின் நற்கூலிகளை எதிர்பார்த்து வணக்கங்களில் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் ஈடுபடல்.

2. அந்நாளின் தண்டனையை அஞ்சி, பாவம் செய்ய பயப்படல்.

3. ஒரு முஃமின் மறுமையில் எதிர்பார்க்கும் இன்பங்களும், நற்கூலிகளும் இவ்வுலகில் அவனுக்கு தப்பிச்செல்லும் இன்பங்களுக்கு ஆறுதலாக அமையும்.

4. அல்லாஹ்வின் நீதத்தை அறிந்து கொள்ளல். அதாவது நன்மைக்கு நன்மை, தீமைக்கு தீமை என அடியார்களது செயற்கள் அனைத்திற்கும் அவன் கூலி வழங்குவான்

5. அல்லாஹ்வின் அறிவு ஞானத்தை அறிந்து கொள்ளல். அதாவது அவன் அடியார்களை வீணாகப் படைக்கவில்லை. மாறாக நன்மைகளை செய்து, பாவங்களைத் தவிர்த்து அவனை வணங்க வேண்டும் என்ற ஆழமான ஒரு நோக்கத்திற்காகவே படைத்துள்ளான். பின்பு அதற்காக அவன் மறுமையில் விசாரிக்கவும் செய்வான்

“இறைவா! நாம் அடக்கத் தலத்தின் வேதனை, நரக வேதனை, வாழ்வின் சோதனை, மரணத்தின் சோதனை, மஸீ/ஹத் தஜ்ஜாலின் சோதனை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறோம்”

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவா்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவா்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவா்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக்

காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

விதியை விசுவாசம் கொள்ளல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

உயர்வான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அவனே படைத்து, செம்மைப்படுத்தினான், நிர்ணயித்து வழிகாட்டினான். அவனைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவர்கள் யாருமில்லை எனவும், அவன் தனித்தவன், இணையற்றவன் எனவும் சாட்சி பகருகின்றேன். முதலிலும், இறுதியிலும் புகழனைத்தும் அவனுக்கே உரியது. முஹம்மத் (ஸல்) அவர்கள்

அல்லாஹ்வின் அடியாரும், தூதருமாவார் என்றும் நான் சாட்சியம் கூறுகின்றேன். அவர்கள் தூதை எத்திவைத்தார்கள். அமானிதத்தை நிறைவேற்றினார்கள். இச்சமுதாயத்திற்கு நலவையே நாடினார்கள். அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றிய அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் அதிகமதிகம் உண்டாவதாக!

அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அவனை மகத்துவப்படுத்துங்கள்! அவனுக்கு அடிபணியுங்கள்! மாறுசெய்துவிடாதீர்கள்! பொறுமையைக் கடைப்பிடித்து, வணக்கங்களை நிறைவேற்றுங்கள்!

அறிந்துகொள்ளுங்கள்! விதியை ஈமான் கொள்வதென்பது, ஈமான் நிறைவேறுவதற்கு மிக அவசியமான ஓர் அடிப்படையாகும். விதி (கத்ர்) என்பது, அல்லாஹ் தனது அறிவில் உள்ள பிரகாரம், தனது இறைநுட்பத்தின் அடிப்படையில், படைப்புக்களுக்காக நிர்ணயித்துள்ள விடயங்களாகும்.

1. அல்லாஹ்வின் அடியார்களே! விதியை ஈமான் கொள்வது நான்கு அடிப்படைகளில் அமைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் அறிந்துவைத்துள்ளமை, அவன் எழுதியுள்ளமை, அவனது நாட்டம் மற்றும் அவன் படைத்தமை ஆகியவையே அவையாகும். அறிவு என்பதன் அர்த்தம், அல்லாஹ் தஆலா, ஆரம்பம் தொடக்கம், நிரந்தரமாக எக்காலமும், அனைத்தையும் முழுமையாகவும், விலாவாரியாகவும் அறிந்துவைத்துள்ளான் என ஈமான் கொள்வதாகும். அது, உயிர்ப்பித்தல், மரணிக்கச் செய்தல், மழைபொழியச் செய்தல் போன்ற, அவனுடன் தொடர்பான செயற்களாகவோ, அல்லது அவனது அடியார்களுடன் தொடர்பான சொல், செயற்களாகவோ இருக்கலாம். அவையனைத்தையுமே அல்லாஹ் அறிந்துள்ளான். இதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும்:

﴿ وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَيۡءٍ عَلِيمٗا ﴾ [الأحزاب: ٤٠]

“அல்லாஹ் எல்லாப் பொருட்கள் பற்றியும் நன்கறிந்தவன்.”
(அல் அஹ்ஸாப் : 40)

﴿ ۞وَعِندَهُۥ مَفَاتِحُ ٱلۡغَيۡبِ لَا يَعۡلَمُهَآ إِلَّا هُوَۚ وَيَعۡلَمُ مَا فِي ٱلۡبَرِّ وَٱلۡبَحۡرِۚ وَمَا تَسۡقُطُ مِن وَرَقَةٍ إِلَّا يَعۡلَمُهَا وَلَا حَبَّةٖ فِي ظُلُمَٰتِ ٱلۡأَرۡضِ وَلَا رَطۡبٖ وَلَا يَابِسٍ إِلَّا فِي كِتَٰبٖ مُّبِينٖ ٥٩ ﴾ [الأنعام: ٥٩]

“அவனிடமே மறைவானவற்றின் திறவுகோல்கள் இருக்கின்றன் அவற்றை அவனன்றி எவரும் அறியார் மேலும், கரையிலும் கடலிலும் உள்ளவற்றையெல்லாம் அவன் அறிவான் அவன் அறியாமல் ஓர் இலையும் உதிர்வதில்லை பூமியின் (ஆழத்தில் அடர்ந்த) இருள்களில் கிடக்கும் சிறு வித்தும், பசுமையானதும், உலர்ந்ததும் (எந்தப் பொருளும்) தெளிவான (அவனுடைய) பதிவேட்டில் இல்லாமலில்லை.” (அல் அன்ஆம் : 59)

2. விசுவாசிகளே! விதியை ஈமான் கொள்வதன் இரண்டாவது அடிப்படை, அது எழுதப்பட்டுள்ளதாக ஈமான் கொள்வதாகும். அதாவது மறுமை வரையுமுள்ள அனைத்து அம்சங்களின் விதிகளையும், ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னரே அல்லாஹ் தனது ‘லவ்ஹுல் மஹ்பூழ்’ இல் (பாதுகாக்கப்பட்ட ஏட்டில்) எழுதி வைத்துள்ளான் என ஈமான் கொள்வதாகும். இதற்குப் பின்வரும் வசனங்கள் ஆதாரமாகும்:

﴿ قُل لَّن يُصِيبَنَآ إِلَّا مَا كَتَبَ ٱللَّهُ لَنَا ﴾ [التوبة: ٥١]

“ஒருபோதும், அல்லாஹ் எங்களுக்கு எழுதியதைத் தவிர (வேறு ஒன்றும்) எங்களை அணுகாது.” என்று நீர் கூறுவீராக!” (அத் தவ்பா : 51)

﴿ مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ فِي ٱلْأَرْضِ وَلَا فِيٓ أَنفُسِكُمْ إِلَّا فِي كِتَٰبٍ مِّن قَبْلِ أَن نَّبْرَأَهَآ ۚ إِنَّ ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٌ ﴿٢٢﴾ ﴾ [الحديد: ٢٢]

“பூமியிலோ, அல்லது உங்களிலோ எந்தத் துன்பம் ஏற்பட்டாலும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்.” (அல் ஹதீத் : 22)

நபி (ஸல்) அவர்கள் கூறத் தான் கேட்டதாக அப்துல்லாஹ் பின் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ‘அல்லாஹுத் தஆலா வானங்கள் மற்றும் பூமியைப் படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னர் படைப்புக்களின் விதிகளை எழுதி விட்டான்’[80]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, உபாதத் இப்னு ஸாமித் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : ‘அல்லாஹ் முதலில் படைத்தது எழுதுகோலையாகும். பின்பு அதனிடம் ‘எழுதுவாயாக’ எனக் கூறினான். அது, ‘என்னுடைய ரப்பே! நான்

[80] முஸ்லிம் : 2653

எதை எழுத வேண்டும்?' எனக் கேட்க, 'மறுமை வரை வரும் அனைத்து அம்சங்களினதும் விதியை எழுதிவிடு' என்று அல்லாஹ் கூறினான். பின்பு உபாதா (ரழி) அவர்கள் கூறினார்கள் : 'அருமை மகனே! இதுவல்லாத, வேறு கொள்கையில் யார் மரணிக்கின்றாரோ, அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல!'[81]

3. முஸ்லிம்களே! விதியை ஈமான் கொள்வதன் மூன்றாவது அடிப்படை, இறை நாட்டமாகும். அதாவது இப்பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்துமே அல்லாஹ்வின் நாட்டப்படியே (அதாவது அவனது பிரபஞ்ச அனுமதிப்படியே) நடக்கின்றன என விசுவாசம் கொள்வதாகவும். அது, உயிர்ப்பித்தல், மரணிக்கச் செய்தல் மற்றும் பிரபஞ்ச விடயங்களை நிர்வகித்தல் போன்ற இறைவனுடன் தொடர்பான செயற்களாகவும் இருக்கலாம், அல்லது போதல், வருதல், வழிபடல், மாறு செய்தல் போன்ற, மட்டிட முடியாத படைப்புகளின் செயற்களாகவும் இருக்கலாம். தனது செயற்கள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَرَبُّكَ يَخۡلُقُ مَا يَشَآءُ وَيَخۡتَارُۗ ﴾ [القصص: ٦٨]

"மேலும், உம்முடைய இறைவன், தான் நாடியதைப் படைக்கிறான் (தூதராக, தான் நாடியோரைத்) தேர்ந்தெடுத்துக்கொள்கிறான்" (அல் கஸஸ் : 68)

﴿ وَيَفۡعَلُ ٱللَّهُ مَا يَشَآءُ ﴾ [إبراهيم: ٢٧]

*"மேலும், அல்லாஹ், தான் நாடியதைச் செய்கின்றான்" (ஸ°*ரா இப்ராஹீம் : 27)

படைப்புக்களின் செயற்கள் தொடர்பாக அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

﴿ وَلَوۡ شَآءَ ٱللَّهُ لَسَلَّطَهُمۡ عَلَيۡكُمۡ فَلَقَٰتَلُوكُمۡۚ ﴾ [النساء: ٩٠]

"இன்னும், அல்லாஹ் நாடியிருந்தால் அவர்களை உங்கள் மீது சாட்டியிருப்பான் அப்பொழுது அவர்கள் உங்களை எதிர்த்தே போர்புரிந்திருப்பார்கள்" (அந் நிஸா : 90)

'யுத்தம் செய்தல்' எனும் அடியானின் செயல் அல்லாஹ்வின் நாட்டத்தை (பிரபஞ்சம் சார்ந்த அனுமதியை)க் கொண்டே தவிர நிகழமாட்டாது.

[81] அபூதாவூத் : 4700, திர்மிதி : 3319

﴿ وَكَذَٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِيٍّ عَدُوًّا شَيَٰطِينَ ٱلْإِنسِ وَٱلْجِنِّ يُوحِى بَعْضُهُمْ إِلَىٰ بَعْضٍ زُخْرُفَ ٱلْقَوْلِ غُرُورًا ۚ وَلَوْ شَآءَ رَبُّكَ مَا فَعَلُوهُ ۖ فَذَرْهُمْ وَمَا يَفْتَرُونَ ﴿١١٢﴾ ﴾ [الأنعام: ١١٢]

“இவ்வாறே, ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும் ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதிகளாக நாம் ஆக்கியிருந்தோம் அவர்களில் சிலர் ஏமாற்றும் பொருட்டு அலங்காரமான வார்த்தைகளை மற்ற சிலரிடம் இரகசியமாக அறிவிக்கின்றார்கள் (நபியே!) உம்முடைய இறைவன் நாடியிருந்தால் அதனை அவர்கள் செய்திருக்கமாட்டார்கள் எனவே, அவர்களையும் அவர்கள் இட்டுக்கட்டுபவற்றையும் விட்டு விடுவீராக!” (அல் அன்ஆம் : 112)

இந்தப் பிரபஞ்சத்தில் எதுவுமே அவனது நாட்டம் மற்றும் பிரபஞ்சம் சார்ந்த அனுமதியின் ஊடாகவே அன்றி நிகழ மாட்டாது. அது அவனது செயற்கள் தொடர்புபட்டதாகவோ அல்லது அவனது அடியார்களுடைய செயற்களுடன் தொடர்புபட்டதாகவோ இருக்கலாம். ஏனெனில் இந்த பிரபஞ்சம் அல்லாஹ்வின் ஆளுகைக்கு உட்பட்டதாகும். எனவே அது அவனது ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும் போது, அவன் நாடிய, அனுமதித்த ஒன்றைத் தவிர வேறு எதுவும் நடந்துவிடாது. அது, அல்லாஹ் விரும்பும் வணக்கங்கள் போன்றவையாக இருக்கலாம், அல்லது அவன் விரும்பாத பாவங்கள் போன்றவையாகவும் இருக்கலாம். அவனது அதிகாரத்துக்குட்பட்டு இருப்பவைகளில் அவனது அனுமதியின்றி எதுவுமே நடக்க மாட்டாது. அவ்வாறு அவனது அனுமதியின்றி ஏதாவது நடக்குமாக இருந்தால், அவனது அதிகாரத்தில் குறையுள்ளது என்று ஆகிவிடும். அவ்வாறு நடப்பதை விட்டும் அல்லாஹ் உயர்வானவன்!

4, விதிய ஈமான் கொள்வது உள்ளடக்கியுள்ள அடிப்படைகளில் நான்காவது அடிப்படை, படைத்தல் என்பதாகும். அதாவது எல்லா படைப்புக்களையும் அவற்றின் தன்மைகள் மற்றும் செயற்களுடன், இல்லாமையிலிருந்து அவனே உண்டாக்கினான் என ஈமான் கொள்வதாகும்.

﴿ خَٰلِقُ كُلِّ شَىْءٍ ﴾ [الأنعام: ١٠٢]

“அவனே எல்லாப் பொருட்களின் படைப்பாளன் ஆவான்” (அல் அன்ஆம் : 102)

﴿ وَخَلَقَ كُلَّ شَىْءٍ فَقَدَّرَهُۥ تَقْدِيرًا ﴾ [الفرقان: ٢]

“அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து அவற்றை அதனதன் அளவுப்படி அமைத்தான்.” (அல் புர்கான் : 02)

﴿ إِنَّا كُلَّ شَيۡءٍ خَلَقۡنَٰهُ بِقَدَرٖ ﴿٤٩﴾ ﴾ [القمر: ٤٩]

“நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம்.” (அல் கமர் : 49)

அல்லாஹ்வின் அடியார்களே! இந்த நான்கு அம்சங்களும் தான் விதியை ஈமான் கொள்வதன் அடிப்படைகள் ஆகும். யார் இவற்றைப் புரிந்து, ஏற்றுக் கொள்கின்றாரோ அவர் சரியாக விதியை ஈமான் கொண்டு விட்டார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் ஏற்பாடு மூன்று வகைப்படும்

1. முதல் நிர்ணயம்: இது வானங்கள் மற்றும் பூமியைப் படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னராகும். அதாவது, அல்லாஹ் எழுதுகோலை படைத்தபோது அதனிடம், ‘மறுமை வரை வரும் அனைத்துப் படைப்பினங்களின் விதிகளையும் எழுதிவிடு’ என்று கூறினான்.

2. வாழ்நாள் நிர்ணயம்: இது விந்து கருவறையில் கருக்கட்டும் போது நடக்கும். அப்போது, இக்குழந்தை ஆணா? அல்லது பெண்ணா? என்பதும், வாழ்நாள், செயல்கள், வாழ்வாதாரம், வாழ்க்கையில் அது சாதிக் சந்திக்க கூடியவை என்பவற்றுடன், நல்லவனா? அல்லது கெட்டவனா? என அனைத்துமே

எழுதப்படும். அதில் அதிகரிக்கப்படவோ குறைக்கப்படவோ மாட்டாது. இதற்குப் பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்:

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது : உண்மையே பேசியவரும் உண்மையே அறிவிக்கப்பட்டவருமான அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் கூறினார்கள்:

உங்களில் ஒருவர் தம் தாயின் வயிற்றில் நாற்பது நாட்கள் (கருவாக) சேமிக்கப்படுகிறார்.பிறகு அதைப் போன்றே (நாற்பது நாட்கள்) அந்தக் கரு (அட்டைபோல் கருப்பையின் சுவரைப் பற்றிப் பிடித்துக் தொங்கும்) ஒரு கருக்கட்டியாக மாறுகிறது. பிறகு அதே போன்ற காலத்தில் (மெல்லப்பட்ட சக்கை போன்ற) சதைப்பிண்டமாக மாறுகிறது. பிறகு அல்லாஹ் ஒரு வானவரை (அதனிடம்) அனுப்புகிறான். அந்த வான வருக்கு நான்கு கட்டளைகள் பிறப்பிக் கப்படுகின்றன. (அவை:) அதன் செயல்பாடு, வாழ்வாதாரம், வாழ்நாள், நற்பேறற்றவனா அல்லது நற்பேறு பெற்றவனா என்று எழுதுமாறு அந்த வானவருக்குச் சொல்லப்படுகிறது.

பிறகு அதனுள் உயிர் ஊதப்படும். இதனால்தான், உங்களில் ஒருவர் (நற்)செயல் புரிந்துகொண்டே செல்வார். எந்த அளவுக்கென்றால் அவருக்கும் சொர்க்கத்திற்கு மிடையே ஒரு முழம் (தொலைவு)தான் இருக்கும். அதற்குள் அவரது விதி அவரை முந்திக்கொண்டுவிடும். அவர் நரகவாசிகளின் செயலைச் செய்துவிடுவார். (அதன் விளைவாக, நரகம் புகுந்துவிடுவார்.) ஒருவர் (தீய) செயல் புரிந்துகொண்டே செல்வார். எந்த அளவுக்கென்றால் அவருக்கும் நரகத்திற்குமிடையே ஒரே யொரு முழம் (தொலைவு)தான் இருக்கும். அதற்குள் விதி அவரை முந்திக்கொண்டு விடும். அதனால் அவர் சொர்க்கவாசி களின் செயலைச் செய்வார். (அதன் காரணத்தால் சொர்க்கம் புகுவார்.)[82]

3. வருடாந்த நிர்ணயம் : ஒவ்வொரு வருடமும் ரமழான் மாதத்தின் இறுதிப் பத்து தினங்களில் ஒன்றில் வரும் லைலத்துல் கத்ர் இரவில் இது நடைபெறும். அடுத்து வரும் ஒரு வருடத்தில் நடைபெறும் அனைத்தும் அத்தினத்தில் நிர்ணயிக்கப்படும்.

[82] புகாரி : 3208, முஸ்லிம் : 2643

﴿ إِنَّآ أَنزَلۡنَٰهُ فِي لَيۡلَةٖ مُّبَٰرَكَةٍۚ إِنَّا كُنَّا مُنذِرِينَ ۝٣ فِيهَا يُفۡرَقُ كُلُّ أَمۡرٍ حَكِيمٍ ۝٤ أَمۡرٗا مِّنۡ عِندِنَآۚ إِنَّا كُنَّا مُرۡسِلِينَ ۝٥ ﴾ [الدخان: ٣-٥]

"நிச்சயமாக, நாம் அதனை பாக்கியமுள்ள இரவிலே இறக்கினோம் நிச்சயமாக (அதன் மூலம்) அச்சமூட்டி எச்சரித்துக் கொண்டே இருக்கின்றோம். அதில் உறுதிசெய்யப்பட்ட ஒவ்வொரு விஷயமும் பிரிக்கப்படும். அக்கட்டளை நம்மிடமிருந்து வந்ததாகும் நாம் நிச்சயமாக (தூதர்களை) அனுப்புபவர்களாக இருந்தோம்" (அத்துகான் : 3-5)

இந்த வசனத்தை விளக்கும்போது ஸிஃதி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "அதாவது விரிவாகவும் தனித்தனியாகவும் அல்லாஹ்வினால் தீர்மானிக்கப்பட்ட, அவனது பிரபஞ்ச, மார்க்கக் கட்டளைகள் எழுதப்படும். லைலத்துல் கதர் இரவில் நிகழும் இந்த வேறுபிரித்தலும், எழுதுதலும் விசேடமாக எழுதி வேறுபிரிக்கப்படும் பதிவுகளில் ஒன்றாகும் அல்லாஹ் ஏற்கனவே படைப்புக்களின் விதிகளையும் வாழும் காலங்களையும் வாழ்வாதாரங்களையும் அமல்களையும் நிலைமைகளையும் எழுதி வைத்துள்ள முதல் ஏட்டிற்கு இது நேர்பட்டதாக இருக்கும்"

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ் உங்களுக்கு அருள் புரியட்டும்! அறிந்து கொள்ளுங்கள்! விதியை ஈமான் கொள்வது என்பது, ஓர் அடியான் நன்மையான அல்லது கெட்ட செயல்களை செய்யப் பலவந்தப்படுத்துள்ளான் என அர்த்தம் தரமாட்டாது. ஏனெனில் அடியானுக்கு அல்லாஹ் நாட்டத்தையும், சக்தியையும் வழங்கி உள்ளதோடு, அசத்தியத்திலிருந்து சத்தியத்தைப் பிரித்து அறிந்து கொள்வதற்கான, அழிவின் பாதையைவிட்டு, வெற்றிப் பாதையை தேர்ந்தெடுப்பத பகுத்தறிவையும் வழங்கி உள்ளான். நீதம் செலுத்துதல், உபகாரம் புரிதல், உறவினர்களுக்கு தர்மம் செய்தல் போன்றவற்றை ஏவியுள்ளதுடன், சிறிய, பெரிய பாவங்கள் மற்றும் அநீதி என்பவற்றை தடுத்துமுள்ளான். எனவே இவ்விடயம் அல்லாஹ்வின் அடியானுடைய பொறுப்பிலேயே உள்ளது. அவன் நாடினால், நன்றி செலுத்தலாம். நாடினால், நன்றி மறந்து வாழலாம். அவன் நாடினால், வழிதவறிப் போகலாம். நாடினால், உறுதியாக இருக்கலாம். நாடினால், வழிபடலாம். நாடினால், மாறு செய்யலாம். பின்பு, அம்மனிதன் தனது சுயவிருப்பத்தின் பேரில் செய்த அந்த செயல்கள் பற்றி அல்லாஹ் விசாரிப்பான். நன்மைக்கு நன்மை எனவும், தீமைக்கு தீமை

எனவும் அவனுக்கு கூலி வழங்கப்படும். அடியானுக்கும் சுயநாட்டம் உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் விதமாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ فَمَن شَآءَ ٱتَّخَذَ إِلَىٰ رَبِّهِۦ مَـَٔابًا ﴾ [النبأ: ٣٩]

"ஆகவே, எவர் விரும்புகிறாரோ, அவர் தம் இறைவனிடம் மீளுமிடத்தை ஏற்படுத்திக் கொள்வாராக!" (அந்நபஉ : 39)

﴿ فَمَن شَآءَ فَلْيُؤْمِن ﴾ [الكهف: ٢٩]

*"ஆகவே, விரும்புபவர் (அதனை) நம்பிக்கைகொள்ளட்டும்" (*அல் கஹ்ப் : 29)

﴿ فَأْتُوا۟ حَرْثَكُمْ أَنَّىٰ شِئْتُمْ ﴾ [البقرة: ٢٢٣]

"எனவே, உங்கள் விளைநிலங்களுக்கு நீங்கள் விரும்பியவாறு வாருங்கள்" (அல் பகரா : 223)

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَـٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِىِّ ۚ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ۝٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஊன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழுங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

முஹம்மத் (ஸல்) அவர்கள் தூதரென சாட்சியமளிப்பது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளும், அவற்றை முறிப்பவையும்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சி, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சியம் அளிப்பது, எட்டு நிபந்தனைகள் சரியாக நிறைவேறாமல் எப்பயனுமே அளிக்க மாட்டாது:

1. அதன் அர்த்தத்தை அறிந்து கொள்ளல். அதாவது, அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ்விடமிருந்து வந்த ஒரு தூதர் என்பதை உறுதியாக நம்புதல் என்பது அதன் அர்த்தமாகும்.

2. உள்ளம் அதனை உறுதியாக ஏற்றுக்கொள்ளல். இதற்கு எதிரானது, சந்தேகத்தில் இருத்தல் ஆகும். இதற்குப் பின்வரும் வசனம் ஆதாரமாகும்:

﴿ إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ ءَامَنُوا۟ بِٱللَّهِ وَرَسُولِهِۦ ثُمَّ لَمْ يَرْتَابُوا۟ وَجَٰهَدُوا۟ بِأَمْوَٰلِهِمْ وَأَنفُسِهِمْ فِى سَبِيلِ ٱللَّهِ ۚ أُو۟لَٰٓئِكَ هُمُ ٱلصَّٰدِقُونَ ﴿١٥﴾ ﴾ [الحجرات: ١٥]

“நிச்சயமாக (உண்மையான) நம்பிக்கையாளர்கள் யார் என்றால், அவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டு, பின்னர்

(அது பற்றி அவர்கள் எத்தகைய) சந்தேகமும் கொள்ளாது, தம் செல்வங்களைக் கொண்டும், தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வார்கள் இத்தகையவர்கள்தாம் உண்மையாளர்கள்." (ஸூரா அல்ஹுஜுராத் : 15)

3. வெளிப்படையாகவும், உள்ளத்தாலும் அதற்குக் கட்டுப்படல். அதாவது, நபியவர்களுக்கு முழுமையாக கட்டுப்படுவதாகும். இதற்குப் பின்வரும் வசனம் ஆதாரமாகும் :

﴿ ۞ وَمَن يُسْلِمْ وَجْهَهُۥٓ إِلَى ٱللَّهِ وَهُوَ مُحْسِنٌ فَقَدِ ٱسْتَمْسَكَ بِٱلْعُرْوَةِ ٱلْوُثْقَىٰ ۗ وَإِلَى ٱللَّهِ عَٰقِبَةُ ٱلْأُمُورِ ﴿٢٢﴾ ﴾ [لقمان: ٢٢]

"எவர் அவர் நன்மை செய்பவராயிருக்கும் நிலையில் தன் முகத்தை முற்றிலும் அல்லாஹ்வின் பக்கமே திருப்பிக்கொள்கிறாரோ, அவர் நிச்சயமாக உறுதியான கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொண்டார் இன்னும், காரியங்களின் முடிவெல்லாம் அல்லாஹ்விடமேயுள்ளது." (ஸூரா லுக்மான் : 22)

4. அதை ஒப்புக்கொள்ளல். அந்த சாட்சியத்தின் உள்ளடக்கங்களில் ஏதேனும் ஒன்றை யாராவது மறுத்தால் அவர் அந்த சாட்சியத்தை முறித்துவிட்டார்.

5. அதில் உளத்தூய்மையாக இருத்தல். அதாவது அவ்வாறு சாட்சியம் கூறுபவர், அல்லாஹ்வை மாத்திரம் திருப்திப்படுத்தும் நோக்கோடு இருக்க வேண்டும். இதற்கு எதிரானது, அதில் இணை வைப்பதாகும். அதாவது நயவஞ்சகர்கள் செய்வது போன்று, உலக இலாபங்களுக்காக சாட்சியம் அளிப்பதாகும்.

6. அதில் உண்மையாக இருத்தல். இதற்கு நேர் எதிரானது பொய்யாக இருத்தலாகும். இதற்குப் பின்வரும் வசனமும் ஹதீஸும் ஆதாரமாகும்:

﴿ وَلَقَدْ فَتَنَّا ٱلَّذِينَ مِن قَبْلِهِمْ ۖ فَلَيَعْلَمَنَّ ٱللَّهُ ٱلَّذِينَ صَدَقُوا۟ وَلَيَعْلَمَنَّ ٱلْكَٰذِبِينَ ﴿٣﴾ ﴾ [العنكبوت: ٣]

"நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம் ஆகவே, உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான் இன்னும், பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்." (ஸூரா அல்அன்கபூத் : 03)

நபியவர்கள் கூறியதாக முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்றும், முஹம்மத் (ஸல்)

அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் உளப்பூர்வமாக உறுதிகூறும் எவருக்கும் அல்லாஹ் நரகத்தைத் தடை செய்யாமல் இருப்பதில்லை”[83]

7. அச்சாட்சியத்தையும் அதை ஏற்றுவர்களையும் நேசித்தல், அதை வெறுப்புவர்களை விரோதித்தல்.

8. அதை முறிப்பவற்றை நிராகரித்தல். முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் எனும் சாட்சியத்தை முறிப்பவைகள் ஐந்தாகும். - அவற்றில் வீழ்ந்துவிடாமல் அல்லாஹ் எங்களைப் பாதுகாப்பானாக –

விசுவாசிகளே! நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என சாட்சியமளிப்பதை முறிக்கும் காரணிகள் ஐந்து உள்ளன:

1. ஏற்கனவே கூறப்பட்ட எட்டு நிபந்தனைகளில், ஒன்றோ அதிகமானவையோ முறிவடைதல்

2. மார்க்கத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அறியப்பட்டுள்ள ஒன்றை மறுத்தல். உதாரணமாக, நபியவர்களின் நபித்துவத்தையோ, அல்லது அவர்கள் மனிதர்கள் என்பதையோ, அல்லது அவர்களுக்காக அவரது சமுதாயம் செய்ய வேண்டிய கடமைகளையோ மறுத்தல். அல்லது அவர்தான் இறுதி நபி என்பதையோ, அவரது தூது முன் சென்ற எல்லா மார்க்கங்களையும் செல்லுபடியற்றதாக்கிவிடும் என்பதையோ, நபியவர்கள் மார்க்கத்தை முழுமையாக எத்திவைத்தார்கள் என்பதையோ, அல்லது அவர்களது தூது மனித, ஜின் அனைவருக்கும் பொதுவானது என்பதையோ, இஸ்லாத்தின் அடிப்படைகளில் ஒரு அடிப்படையையோ, அல்லது மது, விபச்சாரம், வட்டி போன்ற சந்தேகத்துக்கு இடமின்றி ஹராம் என அறியப்பட்ட ஒன்றையோ மறுப்பதாகும்.

3. நபியவர்களை நோவினை செய்வது. அது அவர்கள் உயிருடன் உள்ளபோதும் இருக்கலாம். அல்லது அவர்கள் வபாத்தாகிய பின்னர், அவர்களது ஆளுமையிலோ, நேர்மையிலோ, பகுத்தறிவிலோ, பத்தினித்தனத்திலோ குறை கூறுவதாகவும் இருக்கலாம். இவை அனைத்துமே முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என்ற சாட்சியத்தை நிராகரிக்கும் அம்சங்களில் உள்ளவையாகும். ஏனெனில் இவை, அல்லாஹ் நபியவர்களைத் தூயவராகத் தேர்ந்தெடுத்து இருப்பதாக அல்குர்ஆனில்

[83] ஆதாரம் : புகாரி : 128

தெளிவாக கூறியுள்ளதை ஈமான் கொள்வதுடன் முரண்படுகின்றது. நபி அவர்களுக்கு நோவினை செய்பவன் காபிராகிவிட்டான் என்பதற்குப் பின்வரும் வசனம் ஆதாரமாகும்:

﴿ إِنَّ ٱلَّذِينَ يُؤۡذُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ لَعَنَهُمُ ٱللَّهُ فِي ٱلدُّنۡيَا وَٱلۡأٓخِرَةِ وَأَعَدَّ لَهُمۡ عَذَابٗا مُّهِينٗا ٥٧ ﴾ [الأحزاب: ٥٧]

எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோவினை செய்கிறார்களோ, அவர்களை நிச்சயமாக அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சபிக்கின்றான் மேலும், அவர்களுக்கு இழிவுதரும் வேதனையைச் சித்தப்படுத்தி இருக்கின்றான். (ஸூரா அல்அஹ்ஜாப் : 57)

இங்கு சாபம் என்பது. அல்லாஹ்வின் அருளிலிருந்து விரட்டப்படுவதாகும். யாரை அல்லாஹ் ஈருலகிலும் தனது அருளை விட்டும் விரட்டிவிடுகின்றானோ, அவன் காஃபிராகவே தவிர இருக்க முடியாது.

விசுவாசிகளே! வேண்டும் என்றோ, விளையாட்டாகவோ நபியவர்களை பரிகாசிப்பதும் அவர்களை நோவினை செய்வதாகும். அவ்வாறு பரிகாசிப்பவர்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதற்கு, ஸூரா அத்தவ்பாவின் பின்வரும் வசனம் ஆதாரமாகும் :

﴿ وَلَئِن سَأَلۡتَهُمۡ لَيَقُولُنَّ إِنَّمَا كُنَّا نَخُوضُ وَنَلۡعَبُۚ قُلۡ أَبِٱللَّهِ وَءَايَٰتِهِۦ وَرَسُولِهِۦ كُنتُمۡ تَسۡتَهۡزِءُونَ ٦٥ لَا تَعۡتَذِرُواْ قَدۡ كَفَرۡتُم بَعۡدَ إِيمَٰنِكُمۡ ﴾ [التوبة: ٦٥-٦٦]

“(இதைப் பற்றி) நீர் அவர்களைக் கேட்டால் அவர்கள், “நாங்கள் வீண்பேச்சில் மூழ்கியும், விளையாடிக் கொண்டும்தான் இருந்தோம்” என்று நிச்சயமாகக் கூறுவார்கள் “அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனுடைய தூதரையுமா நீங்கள் பரிகசித்துக்கொண்டு இருந்தீர்கள்?” என்று (நபியே!) நீர் கேட்பீராக! புகல் கூற வேண்டாம் நீங்கள் நம்பிக்கை கொண்டபின் நிச்சயமாக நிராகரித்து விட்டீர்கள்” (ஸூரா அத்தவ்பா : 65-66)

மேற்கூறிய வசனத்தை விளக்கும் போது அப்துர் ரஹ்மான் இப்னு ஸிஃதி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பரிகாசிப்பது மார்க்கத்தை விட்டு வெளியேற்றிவிடக்கூடிய நிராகரிப்பாகும். ஏனெனில் மார்க்கத்தின் அடிப்படையே, அல்லாஹ்வையும் அவனது

மார்க்கத்தையும் தூதரையும் மகத்துவப்படுத்துவதில் தான் நிறுவப்பட்டுள்ளது. எனவே, பரிகாசம் செய்வது இந்த அடிப்படையுடன் கடுமையாக முரண்படுகின்றது.'

4. இஸ்லாத்தை முறிக்கும் அம்சங்களில் ஏதாவதொன்றை செய்தல். உதாரணமாக, அல்லாஹ்வை வணங்குவதில் இணை கற்பித்தல், அல்லது நபி அவர்களது வழிகாட்டலை விட வேறொரு வழிகாட்டல் முழுமையானது என நம்புதல். அல்லது, நபியவர்கள் தீர்ப்பை விட அநியாயக்கார ஆட்சியாளரின் தீர்ப்பையோ அல்லது இஸ்லாமிய ஆட்சியை விட ஜனநாயக, சமவுடமைவாத ஆட்சிகளையோ சிறப்பாக கருதுவதன் மூலம், நபியவர்களின் தீர்ப்பை விட அவைதான் சிறப்பானவை என நம்புதல். இவ்வாறு நம்புபவர்கள் காபிர்களாகும்.

நபியவர்கள் கொண்டு வந்த ஏதாவதொன்றை வெறுத்தல், அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஏதாவது ஒரு நன்மையையோ அல்லது அவனது நற்கூலியையோ தண்டனைகளையோ ஏளனப்படுத்தல், சூனியம் செய்தல், அல்லாஹ்வின் மார்க்கத்தை கற்காமல், நடைமுறைப்படுத்தாமல் புறக்கணித்தல் போன்றவையும் இதில் நுழையும்.

5. விசுவாசிகளே! நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனச் சாட்சியம் அளிப்பதை முறிக்கும் காரணிகளில் ஐந்தாவது, அவர்களை மகத்துவப்படுத்துவதில் எல்லை மீறிச் செல்வதாகவும். நபி (ஸல்) அவர்கள் தனது வாழ்விலும், மரண கட்டத்திலும் தனது விடயத்தில் எல்லை மீறிச் செல்வதை மிகக் கடுமையாக எச்சரித்துக் கொண்டே இருந்தார்கள். - தனது சமூகத்திற்கு எவ்வளவு நன்மையை நாடியுள்ளார்கள் என்பதைப் பாருங்கள்! - நபி அவர்களைத் தொட்டும் அது தொடர்பாக பத்து ஹதீஸ்கள் வந்துள்ளன.

நபியவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "கிறித்தவர்கள் மர்யமின் மைந்தர் ஈசா (அலை) அவர் களை (அளவுக்கு மீறிப் புகழ்ந்து கடவுள் நிலைக்கு) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்திவிடாதீர்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடியான்தான். (அப்படி ஏதாவது என்னைப் பற்றிச் சொல்வதாயிருந்தால்) 'அல்லாஹ்வின் அடியார்' என்றும் 'அல்லாஹ்வின் தூதர்' என்றும் சொல்லுங்கள்"[84]

[84] புகாரி : 3445

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!இறை விசுவாசிகளே! தெரிந்து கொள்ளுங்கள் நபியவர்கள் விடயத்தில் எல்லை மீறிச் செல்வது இரு வகைப்படும்:

ஒன்று: இஸ்லாத்தை விட்டு வெளியேற்றக் கூடியது. மற்றையது : அதைவிட தரம் குறைந்தது.

இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றும் எல்லை மீறல் என்பது, துஆ போன்ற வணக்கங்களை நபியவர்களுக்குச் செய்தல், அல்லது இறைவனின் தனித்துவங்களாகிய, மழை பொழியச் செய்தல், வாழ்வாதாரத்தைத் திட்டமிடல், மறைவான அறிவு போன்றவற்றில் ஏதாவதொன்றை நபியவர்களுக்கு இணைத்தல் போன்றனவாகும். இவை அனைத்தும் அசத்தியமும் நிராகரிப்புமாக இருப்பதோடு, எல்லை மீறலின் மிகப் பாரதூரமான வடிவங்களாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ قُل لَّآ أَمۡلِكُ لِنَفۡسِي نَفۡعٗا وَلَا ضَرًّا إِلَّا مَا شَآءَ ٱللَّهُۚ وَلَوۡ كُنتُ أَعۡلَمُ ٱلۡغَيۡبَ لَٱسۡتَكۡثَرۡتُ مِنَ ٱلۡخَيۡرِ وَمَا مَسَّنِيَ ٱلسُّوٓءُۚ إِنۡ أَنَا۠ إِلَّا نَذِيرٞ وَبَشِيرٞ لِّقَوۡمٖ يُؤۡمِنُونَ ١٨٨ ﴾ [الأعراف: ١٨٨]

(நபியே!) நீர் கூறும்: "அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்துகொள்ள சக்திபெறமாட்டேன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது நம்பிக்கை கொள்ளும் கூட்டத்தினருக்கு நான் அச்சமூட்டி

எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை" (ஸூரா அல் அஃராப் : 188)

மார்க்கத்தை விட்டு வெளியேற்றாத. நிராகரிப்பை ஏற்படுத்தாத. ஆனால் முதல் வகைக்கு வழிவகுக்கும் பித்அத்தாகப் பார்க்கப்படும் எல்லை மீறல் என்பது, நபியவர்களின் மகத்துவத்தைக் கொண்டு சத்தியம் செய்தல், அவர்களைக் கொண்டு வஸீலா தேடுதல், அவர்களது பிறந்த தினத்தைக் கொண்டாடுதல், அவர்களை அல்லாஹ் ஒளியினால் படைத்தான் என்றோ, இவ்வுலகத்தையே அல்லாஹ் அவர்களுக்காகத்தான் படைத்தான் என்று நம்புதல், அவர்களது மண்ணறையைத் தரிசிக்கும் நோக்கில் பயணம் போதல் போன்றவையாகும்.

இவ்வாறு, நபியவர்களது மண்ணறையைத் தரிசிக்கும் நோக்கில் பயணம் போவதைப் பலபேர் செய்கின்றார்கள். அதை நன்மை என நினைக்கின்றார்கள். ஆனால் அது பித்அத் ஆகும். ஏனனில், இது மார்க்கம் ஏவாத ஒரு செயலைக் கொண்டு அல்லாஹ்வை நெருங்க முயற்சிப்பதாகும். உண்மையில் மார்க்கம் இதை தடுத்தே உள்ளது.

நபியவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "(அதிக நன்மையைப் பெற நாடி) மஸ்ஜிதுல் ஹராம் (மக்கா), பைத்துல் முகத்தஸ் (ஜெருசலேம்), எனது இந்த (மஸ்ஜிதுந் நபவீ) பள்ளிவாசல் ஆகிய மூன்று பள்ளிவாசல்களுக்குத் தவிர வேறெங்கும் (புனிதப்) பயணம் மேற்கொள்ளக் கூடாது."[85]

இந்த ஹதீஸில் நபியவர்கள், உள்ளத்தின் நோக்கம் மஸ்ஜித் நபவிக்காக பயணம் போவதாக இருக்க வேண்டுமே தவிர, நபியவர்களுக்கு கப்ருக்காக அல்ல என்பதை உணர்த்துகின்றார்கள். எனவே யாராவது தனது உள்ளத்தில் நபியவர்களது கபரைத் தரிசிப்பதற்காக பயணிப்பதாக நியத்து வைத்தால், அவர் மார்க்கம் காட்டித்தராத ஒரு செயலையே செய்கின்றார். அது தட்டப்பட்டுவிடும். ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நபியவர்கள் கூறினார்கள்: "எமது கட்டளைக்கு உட்படாத ஒரு செயலை யாராவது செய்தால் அது தட்டப்படும்" எனவே ஒரு முஸ்லிம் மஸ்ஜிதுந் நபவியல் நுழைந்து தொழுதுவிட்டார் என்றால் அவருடைய நோக்கம் நிறைவேறிவிட்டது. அதற்குப் பின்னர் அவருக்கு நபியவர்களது கப்ரைத் தரிசித்து அவர்கள் மீதும் அவர்களது இரு தோழர்கள் மீதும் ஸலவாத்து கூற முடியும். அவருக்கு குபாவுக்கு போய், இரண்டு ரக்அத்கள் தொழவும்

[85] புகாரி : 1995, முஸ்லிம் : 827)

முடியும். நபியவர்கள் அவ்வாறு செய்துள்ளார்கள். அல்லது பொதுவாகக் கப்களுக்குச் சென்ற, அடக்கம் செய்யப்பட்டுள்ளவர்களுக்கு, ஸலாம் கூறி, படிப்பினை பெறுவது போன்று, பகீஃ மையவாடிக்கோ, உஹத் சுஹதாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள மையவாடிக்கோ சென்று, அங்கு அடக்கப்பட்டு இருப்பவர்களுக்கு சலாம் சொல்லவும் முடியும்.

முஸ்லிம்களே! நபியவர்களை மகத்துவப்படுத்துவதில் முஸ்லிம்கள் மூன்று தரப்பினராகப் பிரிந்துள்ளனர்.

1. வெறுப்பவர்கள் இவர்கள் நபியவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகிய, நேசித்தல், ஆதரவளித்தல், கட்டுப்படல், கண்ணியப்படுத்தல் போன்றவற்றை நிறைவேற்றாமல் உதாசீதனம் செய்பவர்கள். இவர்கள் இருதரப்பினர்:

1) பாவங்களிலும், பராமுகத்திலும் இருந்துகொண்டு அவர்களுக்குக் கட்டுப்படாமல் இருப்பவர்கள்.

2) பாத்தினிய ஸூபிய்யாக்களில் உள்ள, எல்லை மீறிய பித்அத்வாதிகள். இவர்கள் வலிமார்களையும், குத்துபுகளையும் நபியவர்களை விடச் சிறப்பிப்பவர்கள்.

2. எல்லை மீறிச் செல்பவர்கள். இவர்கள் முதல் தரப்பினருக்கு நேர் எதிரானவர்கள். இவர்கள் நபி அவர்களை, அல்லாஹ் வழங்கியுள்ள அந்தஸ்தை விட உயர்த்துபவர்கள். அடியார்களது செயற்களில், அல்லாஹ்வுக்கு மாத்திரம் உள்ள உரிமைகளாகிய, துஆ, நேர்ச்சை, அறுத்துப் பலியிடல் போன்றவற்றை நபியவர்களுக்கு வழங்குபவர்கள். அல்லது மறைவானவற்றை அறிதல் போன்ற அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரிய பண்புகளை நபி அவர்களுக்கு வழங்குபவர்கள். கப்ருகளை வணங்குபவர்களிடம் இது மிகைத்துக் காணப்படும்.

3. சத்தியவாதிகள். இவர்கள்தான் நடுநிலையான பாதையில் இருப்பவர்கள். இவர்கள் நபியவர்களை நேசிப்பார்கள், அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள், அவர்களுக்குரிய மார்க்க ரீதியான கடமைகளை நிறைவேற்றுவார்கள். ஆனால், எல்லை மீறிச் செல்வதை விட்டும் விலகி இருப்பார்கள்.

அல்லாஹ் எங்களையும் அவர்களில் உள்ளவர்களாக ஆக்கி, அவர்களது பாதையில் உறுதியாக இருக்கச் செய்வானாக!

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அவன் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஊன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

முஹம்மத் (ஸல்) அவர்களை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்கள்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே

பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சி, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த அருட்கொடையின் காரணமாக, தனது வேத வசனங்களை அவர்களுக்கு ஓதி காட்டவும், அவர்களைத் தூய்மைப்படுத்தவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கவும் அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பினான். அதற்கு முன்னர் அவர்கள் தெளிவான வழிகேட்டிலேயே இருந்தனர். நபி (ஸல்) அவர்களை ஈமான் கொள்வது 15 விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. அவர்களது பெயரையும் வம்சத்தையும் அறிந்து கொள்வது. அதாவது, முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அப்துல் முத்தலிப் இப்னு ஹாஷிம் இப்னு அப்து மனாப் இப்னு குஸய் இப்னு கிலாப் இப்னு முர்ரத் இப்னு கஃப் இப்னு லுஅய் இப்னு காலிப் இப்னு பிஹ்ர் இப்னு மாலிக் இப்னு நழ்ர் இப்னு கினானா இப்னு குஸைமா இப்னு முத்ரிகா இப்னு இல்யாஸ் இப்னு முழர் இப்னு நிஸார் இப்னு மஃத் இப்னு அத்னான். அத்னான் அவர்கள் இஸ்மாஈல் (அலை) அவர்களது வம்சத்தில் வந்தவர்கள். இஸ்மாஈல் (அலை) அவர்கள் நபி இப்ராஹீம் (அலை)அவர்களின் மகனாகும். இதில், அவர்களது பெயராகிய, முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் என்பதையும், அவர்கள் குறைசிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிந்து கொள்வது போதுமானது.
2. அவர்கள் கொண்டுவந்த நபித்துவ அத்தாட்சிகளை விசுவாசம் கொள்ளல். அவை அதிகமாக உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது, அல்குர்ஆன் இறக்கப்பட்டதாகும். சந்திரன் அவர்களுக்காகப் பிளந்தது, மரக்குற்றி அவர்களைப் பார்த்து ஏங்கியது, அவர்களது முன்னிலையில் உணவு தஸ்பீஹ் செய்தது, அவர்களுடைய விரலுக்கு இடையில் நீர் ஊற்றெடுத்து பீரிட்டு வந்தது, குறைவான உணவை அதிகப்படுத்தியது, எதிர்கால மறைவான பல

அம்சங்களை நபியவர்கள் கூறியமை என்பவையும் அவற்றில் உள்ளவையாகும்.

3. நபியவர்களின் நபித்துவத்தையும் தூதுத்துவத்தையும் ஈமான் கொள்வது. அதாவது, அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என ஈமான் கொள்ளல்.
4. அவர்கள் நபிமார்களுக்கு முத்திரை என்றும் அவர்களது தூது தான் எல்லாத் தூதுகளுக்கும் இறுதியானது என்றும் ஈமான் கொள்வது.

﴿ مَّا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ ٱللَّهِ وَخَاتَمَ ٱلنَّبِيِّـۧنَ وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَىْءٍ عَلِيمًا ﴿٤٠﴾ ﴾ [الأحزاب: ٤٠]

"முஹம்மது உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால், அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை) யாகவும் இருக்கின்றார் மேலும், அல்லாஹ் எல்லாப் பொருட்கள் பற்றியும் நன்கறிந்தவன்." (ஸூரா அல்அஹ்ஸாப் : 40)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸவ்பான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "எனது சமுதாயத்தில் 30 பொய்யர்கள் தோன்றுவார்கள். அவர்கள் அனைவரும், தம்மை நபி எனக் கூறிக் கொள்வார்கள். நானே நபிமார்களுக்கு இறுதியானவன். எனக்கு பின்னர் வேறு நபி கிடையாது."[86]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : "எனது நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களின் நிலையும் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவுக்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒரு மனிதரின் நிலை போன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து, "இந்தச் செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?" என்று கேட்கலானார்கள். நான்தான் அந்தச் செங்கல். மேலும், நான் தான் இறைத் தூதர்களில் இறுதியானவன்."[87]

5. நபி அவர்களது ஷரீஆ, அதற்கு முன்னர் இருந்த ஷரீஆக்களாகிய, நபி மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) போன்றவர்களின் ஷரீஆக்களை

[86] அபூ தாவூத் : 4252, அஹ்மத் 5-278
[87] புகாரி : 3535, முஸ்லிம் : 2286

செல்லுபடியற்றதாக்கி, அவற்றைப் பாதுகாக்கும் ஒன்றாக இருக்கும் என ஈமான் கொள்வது.

﴿ وَأَنزَلْنَآ إِلَيْكَ ٱلْكِتَٰبَ بِٱلْحَقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ ٱلْكِتَٰبِ وَمُهَيْمِنًا عَلَيْهِ ﴾ [المائدة: ٤٨]

"மேலும், (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம் இது, தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தை(யும்) மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது" (ஸூரா அல்மாஇதா : 48)

எனவே இஸ்லாம் அல்லாத வேறு எதையும் கொண்டு அல்லாஹ்வை வணங்க முடியாது.

6. நபியவர்களது நபித்துவத்துக்குப் பின்னர், இஸ்லாமிய மார்க்கத்தைத் தவிர, அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு மார்க்கங்கள் எதுவும் கிடையாது என்னை ஈமான் கொள்வது.

﴿ وَمَن يَبْتَغِ غَيْرَ ٱلْإِسْلَٰمِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِى ٱلْءَاخِرَةِ مِنَ ٱلْخَٰسِرِينَ ﴿٨٥﴾ ﴾ [آل عمران: ٨٥]

"இன்னும், இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக்கொள்ளப்படமாட்டாது மேலும், அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார்." (ஸூரா ஆலு இம்ரான் : 85)

நபியவர்கள் கூறினார்கள் : "முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ, அவன் மீது சத்தியமாக! இந்த உம்மத்தில் உள்ள யூத கிறிஸ்தவர்கள் உட்பட யாராவது என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, பின்னர் எனக்கு வழங்கப்பட்ட தூதை ஈமான் கொள்ளாமல் மரணித்தால், அவர் நரகவாதியாகவே இருப்பார்."[88]

7. நபி (ஸல்) அவர்கள் தமது தூதை முழுமையாக எத்திவைத்தார்கள் எனவும், தனது சமுதாயத்தை வெண்மையான பாதையிலேயே விட்டுச் சென்றார்கள் எனவும் ஈமான் கொள்வது.

[88] முஸ்லிம் : 153

﴿ ٱلۡيَوۡمَ أَكۡمَلۡتُ لَكُمۡ دِينَكُمۡ وَأَتۡمَمۡتُ عَلَيۡكُمۡ نِعۡمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلۡإِسۡلَٰمَ دِينٗاۚ ﴾ [المائدة: ٣]

"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கிவிட்டேன் மேலும், உங்கள்மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன் இன்னும், உங்களுக்காக நான் இஸ்லாமை மார்க்கமாகப் பொருந்திக்கொண்டேன்" (ஸூரா அல்மாஇதா : 03)

மஸ்ரூக் அவர்கள் கூறுகின்றார்கள் : நான் ஆயிஷா (ரலி) அவர்களது முன்னிலையில் சாய்ந்து அமர்ந்துகொண்டிருந்தேன். அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மூன்று விஷயங்கள் (பற்றிய உண்மைகள்) உங்களுக்கு எப்படித் தெரியாமல் போயின? அவற்றை உங்களிடம் யார் தெரிவிக்கிறாரோ அவர் பொய்யுரைத்துவிட்டார்...... ..... மேலும், "எவர் உங்களிடம் முஹம்மத் (ஸல்) அவர்கள் (மக்களுக்கு எடுத்துரைத்து விடுமாறு பணிக்கப்பட்ட ஒன்றை) மறைத்துவிட்டார்கள்" என்று சொன்னாரோ, அவரும் பொய்யே சொன்னார் என்று கூறிவிட்டு, பிறகு (தமது கருத்திற்குச் சான்றாக,) "தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உம்மீது இறக்கி வைக்கப்பட்டவற்றை (மக்களுக்கு) எடுத்துரைத்துவிடுவீராக!..." எனும் (5:67ஆவது) வசனத்தை ஓதினார்கள்.[89]

அபூதர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி அவர்கள் எங்களை விட்டு பிரிந்து செல்ல முன்னர், வானத்தில் ஒரு பறவை தனது இறக்கைய அசைத்தாலும், அது பற்றி ஒரு அறிவைக் கூட கூறி இருந்தார்கள்[90]

இறுதி ஹஜ்ஜின் போது கிட்டத்தட்ட 40,000 பேராக இருந்த நபித்தோழர்கள் அனைவரும், நபியவர்கள் மார்க்கத்தை ஏத்தி வைத்ததாகச் சாட்சியம் அளித்தார்கள்.

நபியவர்கள் அவர்களைப் பார்த்து, 'நான் உங்களிடம் அல்லாஹ்வுடைய வேதத்தை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அதைப் பற்றிப் பிடிக்கும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். உங்களிடம் என்னைப் பற்றிக் கேட்கப்படும். அப்போது நீங்கள் என்ன கூறுவீர்கள்?' எனக் கேட்டபோது, 'நீங்கள் எத்திவைத்து விட்டீர்கள். நிறைவேற்றிவிட்டீர்கள். நன்மையையே

[89] புகாரி : 4855, முஸ்லிம் : 287, 177)
[90] அஹ்மத் : 5-153

நாடினீர்கள் என்று நாம் சாட்சியளிப்போம்' என்று கூறினார்கள். உடனே நபியவர்கள் தமது ஆற்காட்டி விரலை வானத்தை நோக்கி உயர்த்தி விட்டு, பின்பு, மக்களை நோக்கிச் சுட்டிக்காட்டி, "யா அல்லாஹ்! நீயே சாட்சியாக இருந்துக்கொள்" என்று மூன்று தடவை கூறினார்கள்.[91]

8. நபி அவர்களுடைய தூது மனித ஜின்கள் அனைவருக்கும் பொதுவானது என ஈமான் கொள்வது.

﴿ قُلۡ يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّي رَسُولُ ٱللَّهِ إِلَيۡكُمۡ جَمِيعًا ﴾ [الأعراف: ١٥٨]

"(நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்" (ஸூரா அல்அஃராப் : 158)

﴿ وَمَآ أَرۡسَلۡنَٰكَ إِلَّا رَحۡمَةً لِّلۡعَٰلَمِينَ ١٠٧ ﴾ [الأنبياء: ١٠٧]

"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை." (ஸூரா அல்அன்பியா : 107)

நபியவர்கள் ஜின்களை இஸ்லாத்தை நோக்கி அழைத்தமை சூரத்துல் ஜின்னில் கூறப்பட்டுள்ளது. பின்னர் சில ஜின்கள் நபியவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்று, உறுதிமொழி அளித்தார்கள். அது பற்றி ஸூரா அல்அஹ்காபில் சில வசனங்கள் இறங்கின:

﴿ وَإِذۡ صَرَفۡنَآ إِلَيۡكَ نَفَرًا مِّنَ ٱلۡجِنِّ يَسۡتَمِعُونَ ٱلۡقُرۡءَانَ فَلَمَّا حَضَرُوهُ قَالُوٓاْ أَنصِتُواْۖ فَلَمَّا قُضِيَ وَلَّوۡاْ إِلَىٰ قَوۡمِهِم مُّنذِرِينَ ٢٩ قَالُواْ يَٰقَوۡمَنَآ إِنَّا سَمِعۡنَا كِتَٰبًا أُنزِلَ مِنۢ بَعۡدِ مُوسَىٰ مُصَدِّقًا لِّمَا بَيۡنَ يَدَيۡهِ يَهۡدِيٓ إِلَى ٱلۡحَقِّ وَإِلَىٰ طَرِيقٖ مُّسۡتَقِيمٖ ٣٠ يَٰقَوۡمَنَآ أَجِيبُواْ دَاعِيَ ٱللَّهِ وَءَامِنُواْ بِهِۦ يَغۡفِرۡ لَكُم مِّن ذُنُوبِكُمۡ وَيُجِرۡكُم مِّنۡ عَذَابٍ أَلِيمٖ ٣١ ﴾ [الأحقاف: ٢٩-٣١]

"மேலும், (நபியே!) நாம் உம்மிடம் இந்தக் குர்ஆனைச் செவியுறும் பொருட்டு ஜின்களில் சிலரைத் திருப்பியதும், அவர்கள் அங்கு வந்தபோது, "மௌனமாக

[91] முஸ்லிம் : 1218

இருங்கள்" என்று (மற்றவர்களுக்குச்) சொன்னார்கள் பிறகு, அது (ஓதி) முடிக்கப்பட்டபோது அச்சமூட்டி எச்சரிப்போராய்த் தம் இனத்தாரிடம் திரும்பிச் சென்றனர். (ஜின்கள்) கூறினார்கள்: "எங்களுடைய சமூகத்தார்களே! நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தைச் செவிமடுத்தோம், அது மூஸாவுக்குப் பின்னர் இறக்கப்பட்டிருக்கின்றது அது தனக்கு முன்னுள்ள வேதங்களை உண்மைப்படுத்துகிறது. அது, உண்மையின் பக்கமும் நேரான மார்க்கத்தின்பாலும் (யாவருக்கும்) வழி காட்டுகின்றது." எங்கள் சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளித்து, (அவர் கூறுவதை ஏற்று) அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்: (அதனால்) அவன் உங்கள் பாவங்களை விட்டும் உங்களை மன்னிப்பான் நோவினைதரும் வேதனையிலிருந்தும் உங்களைப் பாதுகாப்பான்" (ஸூரா அல்அஹ்காப் : 29-31)

நபி (ஸல்) அவர்கள் தமது ரப்பு ஏவிய பிரகாரம், மக்கள் அனைவரிடமும் அழைப்புப் பணியை மேற்கொண்டார்கள். முதலில் தமது நெருங்கிய உறவினர்களை அழைத்தார்கள். பின்பு அரேபிய, பாரசீக, ரோம் மன்னர்களுக்கு கடிதம் மூலம் எழுதி அனுப்பினார்கள். எத்தியோப்பிய மன்னராக இருந்த 'நஜ்ஜாசி'க்கும் எழுதி அனுப்பினார்கள். ஜின்களையும் இஸ்லாத்தை நோக்கி அழைத்தார்கள். அழைப்புப் பணிக்கான பாதையை இலகுபடுத்துவதற்காக யுத்தங்களிலும் ஈடுபட்டார்கள். பின்பு அவர்களது தோழர்களும் அதே வழிமுறையில் சென்று, அல்லாஹ்வை நோக்கி அழைத்து, அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் பாதுகாத்தனர். இஸ்லாத்தை விட்டு வெளியேறியவர்களுடனும், நபித்துவத்தை வாதிட்டவர்களுடனும் யுத்தம் செய்தனர் ஷாம், எகிப்து, மொரோக்கோ என நாற்திசைகளிலும் வெற்றி கண்டனர். குறாஸானையும் வெற்றி கொண்டனர். எல்லா இடங்களிலும் தவ்ஹீதைப் பரப்பினர். சிலைகளை உடைத்தனர். வரலாற்று மட்டும் ஹதீஸ் நூல்களில் தொகுக்கப்பட்டு இருப்பது போன்று, இஸ்லாத்திற்கு உதவும் நோக்கில் இவ்வாறான பல விடயங்களைச் செய்தனர். அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிந்து நற்கூலிகளையும் வழங்குவானாக! அவர்களும் அவர்களுக்குப் பின்னர் வந்த சமுதாயங்களும் மேற்கொண்ட பணிகளை அவர்களது நன்மைத் தட்டுகளில் வைப்பானாக!

9. நபியவர்களது வழிகாட்டில் தான் முழுமையான வழிகாட்டல் என்றும், அவர்களது வழிமுறைதான் அழகான வழிமுறை என்றும் ஈமான் கொள்வது. ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் தமது குத்பாக்களில் இவ்வாறு கூறுவார்கள் : "பேச்சுக்களில் மிகச்சிறந்தது அல்லாஹ்வுடைய

பேச்சாகிய அல்குர்ஆன் ஆகும். வழிகாட்டல்களில் மிகச்சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிகக் கெட்டது, அவற்றில் புதிதாக உண்டாக்கப்படுபவையே! அனைத்து நூதனங்களும் வழிகேடுகள் ஆகும்”[92]

10. நபி (ஸல்) அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றல். அவற்றில் மிக முக்கியமானது, அவர்களை உண்மைப்படுத்தி அவர்கள் ஏவியவற்றை ஏற்றும், தடுத்தவற்றை தவிர்ந்தும், அவர்களது சரிஆவுக்குக் கட்டுப்படுதல்.
11. அவர்கள் ஒரு மனிதர் என்றும், அவர் அல்லாஹ்வின் அடியாரே தவிர, அவரை வணங்க முடியாது என்றும், அவர்கள் பொய்ப்பிக்கப்படக்கூடாத ஒரு தூதர் என்றும் ஈமான் கொள்ளல். இந்த விடயம் பல வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

﴿ سُبۡحَٰنَ ٱلَّذِيٓ أَسۡرَىٰ بِعَبۡدِهِۦ لَيۡلٗا مِّنَ ٱلۡمَسۡجِدِ ٱلۡحَرَامِ إِلَى ٱلۡمَسۡجِدِ ٱلۡأَقۡصَا ﴾ [الإسراء: ١]

“தன்னுடைய அடியாரை ஓரிரவில் (கஃபாவாகிய) மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா வரை இரவுப் பயணம் செய்வித்த ஒருவன் (அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்” (ஸூரா அல்இஸ்ரா : 01)

நபியவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ‘கிறித்தவர்கள் மர்யமின் மைந்தர் ஈசா (அலை) அவர் களை (அளவுக்கு மீறிப் புகழ்ந்து கடவுள் நிலைக்கு) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்திவிடாதீர்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடியான்தான். (அப்படி ஏதாவது என்னைப் பற்றிச் சொல்வதாயிருந்தால்) ‘அல்லாஹ்வின் அடியார்’ என்றும் ‘அல்லாஹ்வின் தூதர்’ என்றும் சொல்லுங் கள்’[93]

﴿ قُلۡ إِنَّمَآ أَنَا۠ بَشَرٞ مِّثۡلُكُمۡ يُوحَىٰٓ إِلَيَّ أَنَّمَآ إِلَٰهُكُمۡ إِلَٰهٞ وَٰحِدٞۖ ﴾ [الكهف: ١١٠]

“(நபியே!) நீர் சொல்வீராக: “நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது” (ஸூரா அல்கஹ்ப் : 110)

[92] முஸ்லிம் : 867
[93] புகாரி : 3445

அவர் மனிதர் என ஈமான் கொள்வது என்பது, அவருக்கு இறைமை மற்றும் வணக்கம் சார்ந்த இறைத் தனித்துவங்கள் எதுவும் இல்லை என ஈமான் கொள்வதையும் உள்ளடக்கும். ஏனைய நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்களும் இவ்வாறு தான். தனது நபியிடம் இவ்வாறு கூறுமாறு அல்லாஹ் ஏவுகின்றான்:

﴿ قُل لَّآ أَمۡلِكُ لِنَفۡسِي نَفۡعٗا وَلَا ضَرًّا إِلَّا مَا شَآءَ ٱللَّهُۚ وَلَوۡ كُنتُ أَعۡلَمُ ٱلۡغَيۡبَ لَٱسۡتَكۡثَرۡتُ مِنَ ٱلۡخَيۡرِ وَمَا مَسَّنِيَ ٱلسُّوٓءُۚ إِنۡ أَنَا۠ إِلَّا نَذِيرٞ وَبَشِيرٞ لِّقَوۡمٖ يُؤۡمِنُونَ ١٨٨ ﴾ [الأعراف: ١٨٨]

“(நபியே!) நீர் கூறும்: “அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்துகொள்ள சக்திபெறமாட்டேன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது நம்பிக்கை கொள்ளும் கூட்டத்தினருக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை”. (ஸூரா அல்அஃராப் : 188)

இதுபோன்ற வசனங்கள் நபியவர்களும் ஒரு மனிதர் தான் என்பதையும் இறைமை மற்றும் வணங்கப்படுதல் சார்ந்த இறைத் தனித்துவங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. எனவே அவர்கள் மறைவானவற்றை அறிய மாட்டார்கள், பிரபஞ்சத்தை நிர்வகிக்கமாட்டார்கள். துஆவுக்கு பதிலளிக்கமாட்டார்கள். மாறாக, அவர்கள் எங்களைப் போன்ற அல்லாஹ்வின் ஓர் அடியார் தான். அல்லாஹ் அவர்களுக்கு, ஏனைய நபிமார்களுக்கு வழங்கியது போன்று, நபித்துவத்தை விசேடமாக வழங்கியுள்ளான்.

12. அவர்களது பரக்கத் பொருந்திய வாழ்க்கை, புகழுக்குரிய குணங்கள், அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் போர் செய்தமை, சத்தியத்தைப் போதிப்பதில் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொண்டமை ஆகியவற்றைப் பறைசாற்றும், அவர்களது வாழ்க்கை வரலாற்றோடு தொடர்பான ஆதாரப்பூர்வமான செய்திகளை ஈமான் கொள்ளல்
13. அவர்களது குணம் மற்றும் உடலமைப்பு சார்ந்த பண்புகளை ஈமான் கொள்ளல். உதாரணமாக, அவர்களது உயரம், உடலமைப்பு, நடை, கண்ணியமான முகத்தின் தன்மைகள், அழகான தோற்றம் போன்றவற்றையும், நபியவர்களைத் தவிர வேறு யாருமே ஒரு சேர பெற்றுக்

கொள்ளாத, வாய்மை பேணல், இரக்கம், உறவுகளைச் சேர்ந்து நடத்தல், மன்னிக்கும் மனப்பான்மை போன்ற அல்லாஹ்வால் வழங்கப்பட்ட உயர்குணங்கள், அவர்களது இவ்வாறான குணம் மற்றும் உடலமைப்பு சார்ந்த பண்புகள் பற்றி அறிஞர்கள் நிறைய நூற்களைத் தொகுத்துள்ளனர்.

14. நபியவர்களுக்கென்று உள்ள, அவர்களது உடல் ரீதியான, மார்க்க ரீதியான தனித்துவங்களை ஈமான் கொள்ளல். உடல் ரீதியான சில தனித்துவங்களாவன: இறுதி நபித்துவ அடையாளம், (அது நபி அவர்களுடைய இடது சந்தில், ஒரு புறா முட்டையின் அளவில், முடியுடன் காணப்பட்ட ஒரு சதைத் துண்டாகும். அவர்களது உள்ளம் உறங்காமல் கண்கள் மாத்திரம் உறங்குவது, அவர்களது உடலில் இருந்து வெளியேறும் வியர்வை, உமிழ்நீர் போன்றவை பரக்கத்தானவையாக இருப்பது. மார்க்கரீதியான தனித்துவங்களாவன: அவர்களை சொத்துக்கள் யாருக்கும் அனந்தரமாக செல்ல மாட்டாது, ஜகாத் பெறுவது அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தின் மீதும் தடுக்கப்பட்டுள்ளமை, இரு நோன்புகளை இணைத்து ஒன்றாகப் பிடிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளமை, நான்கை விட அதிகமான பெண்களைத் திருமணம் செய்ய அல்லாஹ் அனுமதி அளித்துள்ளமை, தன்னை நபிவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் வழங்க வரும் பெண்ணை திருமணம் செய்து செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளமை, அவர்கள் வபாத்தாகும் இடத்திலேயே அடக்கப்படுதல்.

15. நபியவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக ஈமான் கொள்வது. நபியவர்கள் 5 விடயங்களை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள்.

1) எத்தி வைப்பதில் தவறோ, மறதியோ, மறைத்தலோ நிகழ்வதை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். பின்வரும் வசனம் அதற்கு ஆதாரமாகும்:

﴿ وَمَا يَنطِقُ عَنِ ٱلۡهَوَىٰٓ ۝٣ إِنۡ هُوَ إِلَّا وَحۡيٞ يُوحَىٰ ۝٤ ﴾ [النجم: ٣-٤]

“அவர் (தம்) இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது (அவருக்கு) அறிவிக்கப்படும் (வஹீ) அறிவிப்பே தவிர வேறில்லை.” (ஸூரா அந்நஜ்ம் : 3,4)

﴿ ۞يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَۖ وَإِن لَّمۡ تَفۡعَلۡ فَمَا بَلَّغۡتَ رِسَالَتَهُۥۚ ﴾ [المائدة: ٦٧]

“தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும் (இவ்வாறு) நீர் செய்யாவிட்டால் அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர்” (ஸூரா அல்மாஇதா : 67)

2) இணைவைப்பில் விழுந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளமை. நபித்துவம் கிடைப்பதற்கு முன்பிருந்தே நபியவர்கள் இணைவைப்பில் வீழ்வதை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். நபியவர்கள் தமது கூட்டத்தார் செய்து கொண்டிருந்த, சிலைகளுக்கு சிரம் பணிதல், தொடுதல் போன்ற எந்த இணைவைப்புச் செயலையும் செய்யவில்லை என்பதை உறுதியான ஆதாரங்கள் அறிவிக்கின்றன. அவர்கள் தமது இயல்பினாலேயே அல்லாஹ்வை அறிந்திருந்தார்கள். ஹிராக்குகையில் பல வருடங்கள் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி வணங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறான அவர்களது ஓரிறைக்கொள்கை ஆச்சரியமானது அல்ல. சிறுபராயத்திலும் பெரியவரானதன் பின்னரும் இருதடவைகள் அவர்களுக்கு நிகழ்ந்த, 'நெஞ்சைப் பிளத்தல்' சம்பவம் ஊடாக, அவர்களது உள்ளத்தில் இருந்த ஷைத்தானின் பங்கை அல்லாஹ் வெளியேற்றி விட்டான்.
3) பெரும்பாவங்களில் விழுந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளமை. அவர்களது வாழ்க்கை வரலாறு இதற்கு சாட்சியாகும். நுபுவத்துக்கு முன்னரும், பின்னரும் அவ்வாறுதான் இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் மது அருந்தியதில்லை, அவர்களது கை இன்னொரு பெண்ணின் கையைத் தொட்டதில்லை, ஒருபோதும் அவர்கள் பொய் பேசியதில்லை. தனது தோழர்களைப் பார்த்து, "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானே உங்களில் அல்லாஹ்வை அதிகம் அஞ்சிப் பயப்படுபவன்" என்று கூறிய அவர்களிடமிருந்து எவ்வாறு பெரும்பாவங்கள் நிகழும்? குர்துபீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: 'பெரும்பாவங்கள் மற்றும் கீழ்த்தரமான சிறிய பாவங்கள் ஆகியவை ஆகிய அனைத்தையும் விட்டு நபிமார்கள் - ஏகோபித்த கருத்தின் பிரகாரம் - பாதுகாக்கப்பட்டுள்ளனர்.'
4) அவர்களது வம்சம் விபச்சாரத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளமை. அல்லாஹ் நபியவர்களின் மூதாதையரை ஜாஹிலியாக் கால ிபச்சாரத்தை விட்டும் பாதுகாத்தான். அவர்களது வம்சத்தில் அவ்வாறான எந்த ஒன்றும் கலக்கவில்லை. அது நபியவர்களின் தாயின் வம்சமாகவும் இருக்கலாம், தந்தையின் வம்சமாகவும் இருக்கலாம். அவர்கள் இஸ்லாமியத் திருமணம் போன்ற ஒரு திருமணத்தின் மூலமே பிறந்தார்கள். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் நபியவர்களைத் தொட்டும் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் அதற்கு ஆதாரமாகும் : "எனது பெற்றோர் தகாத உறவில் ஒன்றிணையவில்லை. அல்லாஹ் என்னை தூய்மையான விந்திலிருந்து, சுத்தமான,

தூய்மைப்படுத்தப்பட்ட, ஒழுக்கமூட்டப்பட்ட கருவுக்கு மாற்றினான். இரு கிளைகள் பிரிந்து விட்டால், அதில் நல்ல கிளையிலேயே நான் இருப்பேன்”[94]

5) கீழ்த்தரமான குணங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளமை. நபியவர்களது நற்குணங்கள் பற்றி விரிவாக பேச வேண்டி இருக்கும். சுருக்கமாகக் கூறுவதாயின், புகழுக்குரிய எந்த நற்குணமாக இருப்பினும், நபி அவர்களிடம் அது இருக்கும். எந்த மோசமான குணமாக இருப்பினும், அதை விட்டு நபியவர்கள் தூய்மைப்படுத்தப்பட்டு இருப்பார்கள். இந்த தலைப்பில், அல்லாஹ் தனது நபியைப் பார்த்துக் கூறிய பின்வரும் வசனமே போதுமானதாகும்:

﴿ وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ۝٤ ﴾ [القلم: ٤]

“மேலும், (நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான (நற்)குணத்தின் மீது இருக்கின்றீர்.” (ஸூரா அல்கலம் : 4)

இவை தான் நபி (ஸல்) அவர்களை ஈமான் கொள்வது உள்ளடக்கியுள்ள 15 அம்சங்களாகும். அவற்றை ஈமான் கொண்டு நடைமுறைப்படுத்த அல்லாஹ் எமக்கு உதவுவானாக! நபியவர்களை ஈமான் கொண்டு, அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளித்து, அவர்களுடன் இறக்கப்பட்டுள்ள ஒளியையும் பின்பற்றிய கூட்டத்தில் அல்லாஹ் எம்மை ஆக்குவானாக! அவர்கள் தான் வெற்றி பெறுபவர்கள்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

இறை விசுவாசிகளே! அறிந்து கொள்ளுங்கள்! இந்த அம்சங்களை ஈமான் கொண்டு நடைமுறைப்படுத்துவது என்பது, நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர்

[94] அபூ நுஐம்

என சாட்சியம் கூறுவதை நடைமுறைப்படுத்துவதாகவே கொள்ளப்படும். ஈமான் என்பது வெறுமனே கற்பனைகளோ வெளி அலங்காரமோ அல்ல! மாறாக உள்ளத்தில் அது ஆழமாகப் பதிய வேண்டும். அதனை செயல்கள் உண்மைப்படுத்த வேண்டும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)
நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத’ சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

முஹம்மத் (ஸல்) அவர்களை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்கள்.

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத்

தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சி, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்! அவனுக்கு வழிப்படுங்கள்! மாறுசெய்து விடாதீர்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்த அருட்கொடையின் காரணமாக, தனது வேத வசனங்களை அவர்களுக்கு ஓதி காட்டவும், அவர்களைத் தூய்மைப்படுத்தவும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கவும் அவர்களிடம் ஒரு தூதரை அனுப்பினான். அதற்கு முன்னர் அவர்கள் தெளிவான வழிகேட்டிலேயே இருந்தனர். நபி (ஸல்) அவர்களை ஈமான் கொள்வது 15 விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

1. அவர்களது பெயரையும் வம்சத்தையும் அறிந்து கொள்வது. அதாவது, முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் இப்னு அப்துல் முத்தலிப் இப்னு ஹாஷிம் இப்னு அப்து மனாப் இப்னு குஸய் இப்னு கிலாப் இப்னு முர்ரத் இப்னு கஃப் இப்னு லுஅய் இப்னு காலிப் இப்னு பிஹ்ர் இப்னு மாலிக் இப்னு நழ்ர் இப்னு கினானா இப்னு குஸைமா இப்னு முத்ரிகா இப்னு இல்யாஸ் இப்னு முழர் இப்னு நிஸார் இப்னு மஃத் இப்னு அத்னான். அத்னான் அவர்கள் இஸ்மாஈல் (அலை) அவர்களது வம்சத்தில் வந்தவர்கள். இஸ்மாஈல் (அலை) அவர்கள் நபி இப்ராஹீம் (அலை)அவர்களின் மகனாகும். இதில், அவர்களது பெயராகிய, முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் என்பதையும், அவர்கள் குறைசிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிந்து கொள்வது போதுமானது.
2. அவர்கள் கொண்டுவந்த நபித்துவ அத்தாட்சிகளை விசுவாசம் கொள்ளல். அவை அதிகமாக உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது, அல்குர்ஆன் இறக்கப்பட்டதாகும். சந்திரன் அவர்களுக்காகப் பிளந்தது, மரக்குற்றி அவர்களைப் பார்த்து ஏங்கியது, அவர்களது முன்னிலையில் உணவு தஸ்பீஹ் செய்தது, அவர்களுடைய விரலுக்கு இடையில் நீர் ஊற்றெடுத்து பீரிட்டு வந்தது, குறைவான உணவை அதிகப்படுத்தியது, எதிர்கால மறைவான பல அம்சங்களை நபியவர்கள் கூறியமை என்பவையும் அவற்றில் உள்ளவையாகும்.

3. நபியவர்களின் நபித்துவத்தையும் தூதுத்துவத்தையும் ஈமான் கொள்வது. அதாவது, அவர்கள் உண்மையிலேயே அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என ஈமான் கொள்ளல்.
4. அவர்கள் நபிமார்களுக்கு முத்திரை என்றும் அவர்களது தூது தான் எல்லாத் தூதுகளுக்கும் இறுதியானது என்றும் ஈமான் கொள்வது.

﴿ مَّا كَانَ مُحَمَّدٌ أَبَآ أَحَدٍ مِّن رِّجَالِكُمْ وَلَٰكِن رَّسُولَ ٱللَّهِ وَخَاتَمَ ٱلنَّبِيِّـۧنَ ۗ وَكَانَ ٱللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا ﴿٤٠﴾ ﴾ [الأحزاب: ٤٠]

“முஹம்மது உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை ஆனால், அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை) யாகவும் இருக்கின்றார் மேலும், அல்லாஹ் எல்லாப் பொருட்கள் பற்றியும் நன்கறிந்தவன்.” (ஸூரா அல்அஹ்ஸாப் : 40)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஸவ்பான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “எனது சமுதாயத்தில் 30 பொய்யர்கள் தோன்றுவார்கள். அவர்கள் அனைவரும், தம்மை நபி எனக் கூறிக் கொள்வார்கள். நானே நபிமார்களுக்கு இறுதியானவன். எனக்கு பின்னர் வேறு நபி கிடையாது.”[95]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : “எனது நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களின் நிலையும் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங் கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவுக்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒரு மனிதரின் நிலை போன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து, “இந்தச் செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?” என்று கேட்கலானார்கள். நான்தான் அந்தச் செங்கல். மேலும், நான் தான் இறைத் தூதர்களில் இறுதியானவன்.”[96]

5. நபி அவர்களது ஷரீஆ, அதற்கு முன்னர் இருந்த ஷரீஆக்களாகிய, நபி மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) போன்றவர்களின் ஷரீஆக்களை

[95] அபூ தாவூத் : 4252, அஹ்மத் 5-278
[96] புகாரி : 3535. முஸ்லிம் : 2286

செல்லுபடியற்றதாக்கி, அவற்றைப் பாதுகாக்கும் ஒன்றாக இருக்கும் என ஈமான் கொள்வது.

﴿ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ مُصَدِّقٗا لِّمَا بَيۡنَ يَدَيۡهِ مِنَ ٱلۡكِتَٰبِ وَمُهَيۡمِنًا عَلَيۡهِۖ ﴾ [المائدة: ٤٨]

“மேலும், (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம் இது, தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தை(யும்) மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது” (ஸூரா அல்மாஇதா : 48)

எனவே இஸ்லாம் அல்லாத வேறு எதையும் கொண்டு அல்லாஹ்வை வணங்க முடியாது.

6. நபியவர்களது நபித்துவத்துக்குப் பின்னர், இஸ்லாமிய மார்க்கத்தைத் தவிர, அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு மார்க்கங்கள் எதுவும் கிடையாது என்னை ஈமான் கொள்வது.

﴿ وَمَن يَبۡتَغِ غَيۡرَ ٱلۡإِسۡلَٰمِ دِينٗا فَلَن يُقۡبَلَ مِنۡهُ وَهُوَ فِي ٱلۡأٓخِرَةِ مِنَ ٱلۡخَٰسِرِينَ ٨٥ ﴾ [آل عمران: ٨٥]

“இன்னும், இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக்கொள்ளப்படமாட்டாது மேலும், அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார்.” (ஸூரா ஆலு இம்ரான் : 85)

நபியவர்கள் கூறினார்கள் : “முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ, அவன் மீது சத்தியமாக! இந்த உம்மத்தில் உள்ள யூத கிறிஸ்தவர்கள் உட்பட யாராவது என்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, பின்னர் எனக்கு வழங்கப்பட்ட தூதை ஈமான் கொள்ளாமல் மரணித்தால், அவர் நரகவாதியாகவே இருப்பார்.”[97]

7. நபி (ஸல்) அவர்கள் தமது தூதை முழுமையாக எத்திவைத்தார்கள் எனவும், தனது சமுதாயத்தை வெண்மையான பாதையிலேயே விட்டுச் சென்றார்கள் எனவும் ஈமான் கொள்வது.

[97] முஸ்லிம் : 153

﴿ ٱلۡيَوۡمَ أَكۡمَلۡتُ لَكُمۡ دِينَكُمۡ وَأَتۡمَمۡتُ عَلَيۡكُمۡ نِعۡمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلۡإِسۡلَٰمَ دِينٗاۚ ﴾ [المائدة: ٣]

“இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கிவிட்டேன் மேலும், உங்கள்மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன் இன்னும், உங்களுக்காக நான் இஸ்லாமை மார்க்கமாகப் பொருந்திக்கொண்டேன்” (ஸூரா அல்மாஇதா : 03)

மஸ்ரூக் அவர்கள் கூறுகின்றார்கள் : நான் ஆயிஷா (ரலி) அவர்களது முன்னிலையில் சாய்ந்து அமர்ந்துகொண்டிருந்தேன். அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மூன்று விஷயங்கள் (பற்றிய உண்மைகள்) உங்களுக்கு எப்படித் தெரியாமல் போயின? அவற்றை உங்களிடம் யார் தெரிவிக்கிறாரோ அவர் பொய்யுரைத்துவிட்டார்...... ..... மேலும், “எவர் உங்களிடம் முஹம்மத் (ஸல்) அவர்கள் (மக்களுக்கு எடுத்துரைத்து விடுமாறு பணிக்கப்பட்ட ஒன்றை) மறைத்துவிட்டார்கள்” என்று சொன்னாரோ, அவரும் பொய்யே சொன்னார் என்று கூறிவிட்டு, பிறகு (தமது கருத்திற்குச் சான்றாக,) “தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உம்மீது இறக்கி வைக்கப்பட்டவற்றை (மக்களுக்கு) எடுத்துரைத்துவிடுவீராக!...” எனும் (5:67ஆவது) வசனத்தை ஓதினார்கள்.[98]

அபூதர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி அவர்கள் எங்களை விட்டு பிரிந்து செல்ல முன்னர், வானத்தில் ஒரு பறவை தனது இறக்கைய அசைத்தாலும், அது பற்றி ஒரு அறிவைக் கூட கூறி இருந்தார்கள்[99]

இறுதி ஹஜ்ஜின் போது கிட்டத்தட்ட 40,000 பேராக இருந்த நபித்தோழர்கள் அனைவரும், நபியவர்கள் மார்க்கத்தை ஏத்தி வைத்ததாகச் சாட்சியம் அளித்தார்கள்.

நபியவர்கள் அவர்களைப் பார்த்து, ‘நான் உங்களிடம் அல்லாஹ்வுடைய வேதத்தை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அதைப் பற்றிப் பிடிக்கும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். உங்களிடம் என்னைப் பற்றிக் கேட்கப்படும். அப்போது நீங்கள் என்ன கூறுவீர்கள்?’ எனக் கேட்டபோது, ‘நீங்கள் எத்திவைத்து விட்டீர்கள். நிறைவேற்றிவிட்டீர்கள். நன்மையையே நாடினீர்கள்

---

98 புகாரி : 4855, முஸ்லிம் : 287, 177)

99 அஹ்மத் : 5-153

என்று நாம் சாட்சியளிப்போம்' என்று கூறினார்கள். உடனே நபியவர்கள் தமது ஆற்காட்டி விரலை வானத்தை நோக்கி உயர்த்தி விட்டு, பின்பு, மக்களை நோக்கிச் சுட்டிக்காட்டி, "யா அல்லாஹ்! நீயே சாட்சியாக இருந்துக்கொள்" என்று மூன்று தடவை கூறினார்கள்.[100]

8. நபி அவர்களுடைய தூது மனித ஜின்கள் அனைவருக்கும் பொதுவானது என ஈமான் கொள்வது.

﴿ قُلْ يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّى رَسُولُ ٱللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا ﴾ [الأعراف: ١٥٨]

"(நபியே!) நீர் கூறுவீராக: "மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்" (ஸூரா அல்அஃராப் : 158)

﴿ وَمَآ أَرْسَلْنَٰكَ إِلَّا رَحْمَةً لِّلْعَٰلَمِينَ ﴿١٠٧﴾ ﴾ [الأنبياء: ١٠٧]

"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை." (ஸூரா அல்அன்பியா : 107)

நபியவர்கள் ஜின்களை இஸ்லாத்தை நோக்கி அழைத்தமை சூரத்துல் ஜின்னில் கூறப்பட்டுள்ளது. பின்னர் சில ஜின்கள் நபியவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்று, உறுதிமொழி அளித்தார்கள். அது பற்றி ஸூரா அல்அஹ்காபில் சில வசனங்கள் இறங்கின:

﴿ وَإِذْ صَرَفْنَآ إِلَيْكَ نَفَرًا مِّنَ ٱلْجِنِّ يَسْتَمِعُونَ ٱلْقُرْءَانَ فَلَمَّا حَضَرُوهُ قَالُوٓا۟ أَنصِتُوا۟ فَلَمَّا قُضِىَ وَلَّوْا۟ إِلَىٰ قَوْمِهِم مُّنذِرِينَ ﴿٢٩﴾ قَالُوا۟ يَٰقَوْمَنَآ إِنَّا سَمِعْنَا كِتَٰبًا أُنزِلَ مِنۢ بَعْدِ مُوسَىٰ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ يَهْدِىٓ إِلَى ٱلْحَقِّ وَإِلَىٰ طَرِيقٍ مُّسْتَقِيمٍ ﴿٣٠﴾ يَٰقَوْمَنَآ أَجِيبُوا۟ دَاعِىَ ٱللَّهِ وَءَامِنُوا۟ بِهِۦ يَغْفِرْ لَكُم مِّن ذُنُوبِكُمْ وَيُجِرْكُم مِّنْ عَذَابٍ أَلِيمٍ ﴿٣١﴾ ﴾ [الأحقاف: ٢٩-٣١]

"மேலும், (நபியே!) நாம் உம்மிடம் இந்தக் குர்ஆனைச் செவியுறும் பொருட்டு ஜின்களில் சிலரைத் திருப்பியதும், அவர்கள் அங்கு வந்தபோது, "மௌனமாக

[100] முஸ்லிம் : 1218

இருங்கள்" என்று (மற்றவர்களுக்குச்) சொன்னார்கள் பிறகு, அது (ஓதி) முடிக்கப்பட்டபோது அச்சமூட்டி எச்சரிப்போராய்த் தம் இனத்தாரிடம் திரும்பிச் சென்றனர். (ஜின்கள்) கூறினார்கள்: "எங்களுடைய சமூகத்தார்களே! நிச்சயமாக நாங்கள் ஒரு வேதத்தைச் செவிமடுத்தோம், அது மூஸாவுக்குப் பின்னர் இறக்கப்பட்டிருக்கின்றது; அது தனக்கு முன்னுள்ள வேதங்களை உண்மைப்படுத்துகிறது. அது, உண்மையின் பக்கமும் நேரான மார்க்கத்தின்பாலும் (யாவருக்கும்) வழி காட்டுகின்றது." எங்கள் சமூகத்தாரே! அல்லாஹ்வின் அழைப்பாளருக்கு பதிலளித்து, (அவர் கூறுவதை ஏற்று) அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்: (அதனால்) அவன் உங்கள் பாவங்களை விட்டும் உங்களை மன்னிப்பான் நோவினைதரும் வேதனையிலிருந்தும் உங்களைப் பாதுகாப்பான்" (ஸூரா அல்அஹ்காப் : 29-31)

நபி (ஸல்) அவர்கள் தமது ரப்பு ஏவிய பிரகாரம், மக்கள் அனைவரிடமும் அழைப்புப் பணியை மேற்கொண்டார்கள். முதலில் தமது நெருங்கிய உறவினர்களை அழைத்தார்கள். பின்பு அரேபிய, பாரசீக, ரோம் மன்னர்களுக்கு கடிதம் மூலம் எழுதி அனுப்பினார்கள். எத்தியோப்பிய மன்னராக இருந்த 'நஜ்ஜாசி'க்கும் எழுதி அனுப்பினார்கள். ஜின்களையும் இஸ்லாத்தை நோக்கி அழைத்தார்கள். அழைப்புப் பணிக்கான பாதையை இலகுபடுத்துவதற்காக யுத்தங்களிலும் ஈடுபட்டார்கள். பின்பு அவர்களது தோழர்களும் அதே வழிமுறையில் சென்று, அல்லாஹ்வை நோக்கி அழைத்து, அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் பாதுகாத்தனர். இஸ்லாத்தை விட்டு வெளியேறியவர்களுடனும், நபித்துவத்தை வாதிட்டவர்களுடனும் யுத்தம் செய்தனர் ஷாம், எகிப்து, மொரோக்கோ என நாற்திசைகளிலும் வெற்றி கண்டனர். குறாஸானையும் வெற்றி கொண்டனர். எல்லா இடங்களிலும் தவ்ஹீதைப் பரப்பினர். சிலைகளை உடைத்தனர். வரலாற்று மட்டும் ஹதீஸ் நூல்களில் தொகுக்கப்பட்டு இருப்பது போன்று, இஸ்லாத்திற்கு உதவும் நோக்கில் இவ்வாறான பல விடயங்களைச் செய்தனர். அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிந்து நற்கூலிகளையும் வழங்குவானாக! அவர்களும் அவர்களுக்குப் பின்னர் வந்த சமுதாயங்களும் மேற்கொண்ட பணிகளை அவர்களது நன்மைத் தட்டுகளில் வைப்பானாக!

9. நபியவர்களது வழிகாட்டில் தான் முழுமையான வழிகாட்டல் என்றும், அவர்களது வழிமுறைதான் அழகான வழிமுறை என்றும் ஈமான் கொள்வது. ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் தமது குத்பாக்களில் இவ்வாறு கூறுவார்கள் : "பேச்சுக்களில் மிகச்சிறந்தது அல்லாஹ்வுடைய

பேச்சாகிய அல்குர்ஆன் ஆகும். வழிகாட்டல்களில் மிகச்சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிகக் கெட்டது, அவற்றில் புதிதாக உண்டாக்கப்படுபவையே! அனைத்து நூதனங்களும் வழிகேடுகள் ஆகும்"[101]

10. நபி (ஸல்) அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றல். அவற்றில் மிக முக்கியமானது, அவர்களை உண்மைப்படுத்தி அவர்கள் ஏவியவற்றை ஏற்றும், தடுத்தவற்றை தவிர்ந்தும், அவர்களது சரிஆவுக்குக் கட்டுப்படுதல்.
11. அவர்கள் ஒரு மனிதர் என்றும், அவர் அல்லாஹ்வின் அடியாரே தவிர, அவரை வணங்க முடியாது என்றும், அவர்கள் பொய்ப்பிக்கப்படக்கூடாத ஒரு தூதர் என்றும் ஈமான் கொள்ளல். இந்த விடயம் பல வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது:

﴿ سُبۡحَٰنَ ٱلَّذِيٓ أَسۡرَىٰ بِعَبۡدِهِۦ لَيۡلٗا مِّنَ ٱلۡمَسۡجِدِ ٱلۡحَرَامِ إِلَى ٱلۡمَسۡجِدِ ٱلۡأَقۡصَا ﴾ [الإسراء: ١]

"தன்னுடைய அடியாரை ஓரிரவில் (கஃபாவாகிய) மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா வரை இரவுப் பயணம் செய்வித்த ஒருவன் (அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்" (ஸூரா அல்இஸ்ரா : 01)

நபியவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : 'கிறித்தவர்கள் மர்யமின் மைந்தர் ஈசா (அலை) அவர் களை (அளவுக்கு மீறிப் புகழ்ந்து கடவுள் நிலைக்கு) உயர்த்திவிட்டதைப் போல் நீங்கள் என்னை உயர்த்திவிடாதீர்கள். ஏனெனில், நான் அல்லாஹ்வின் அடியான்தான். (அப்படி ஏதாவது என்னைப் பற்றிச் சொல்வதாயிருந்தால்) 'அல்லாஹ்வின் அடியார்' என்றும் 'அல்லாஹ்வின் தூதர்' என்றும் சொல்லுங் கள்'[102]

﴿ قُلۡ إِنَّمَآ أَنَا۠ بَشَرٞ مِّثۡلُكُمۡ يُوحَىٰٓ إِلَيَّ أَنَّمَآ إِلَٰهُكُمۡ إِلَٰهٞ وَٰحِدٞۖ ﴾ [الكهف: ١١٠]

"(நபியே!) நீர் சொல்வீராக: "நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது" (ஸூரா அல்கஹ்ப் : 110)

---

101 முஸ்லிம் : 867

102 புகாரி : 3445

அவர் மனிதர் என ஈமான் கொள்வது என்பது, அவருக்கு இறைமை மற்றும் வணக்கம் சார்ந்த இறைத் தனித்துவங்கள் எதுவும் இல்லை என ஈமான் கொள்வதையும் உள்ளடக்கும். ஏனைய நபிமார்கள் மற்றும் ரஸுல்மார்களும் இவ்வாறு தான். தனது நபியிடம் இவ்வாறு கூறுமாறு அல்லாஹ் ஏவுகின்றான்:

﴿ قُل لَّآ أَمۡلِكُ لِنَفۡسِي نَفۡعٗا وَلَا ضَرًّا إِلَّا مَا شَآءَ ٱللَّهُۚ وَلَوۡ كُنتُ أَعۡلَمُ ٱلۡغَيۡبَ لَٱسۡتَكۡثَرۡتُ مِنَ ٱلۡخَيۡرِ وَمَا مَسَّنِيَ ٱلسُّوٓءُۚ إِنۡ أَنَا۠ إِلَّا نَذِيرٞ وَبَشِيرٞ لِّقَوۡمٖ يُؤۡمِنُونَ ١٨٨ ﴾ [الأعراف: ١٨٨]

“(நபியே!) நீர் கூறும்: “அல்லாஹ் நாடினாலன்றி நான் எனக்கே யாதொரு நன்மையோ அல்லது தீமையோ செய்துகொள்ள சக்திபெறமாட்டேன் மறைந்திருப்பவற்றை நான் அறிபவனாக இருந்தால் நன்மைகளை அதிகமாகத் தேடிக் கொண்டிருப்பேன் (அந்நிலையில் எவ்விதமான) தீங்கும் என்னைத் தீண்டியிராது நம்பிக்கை கொள்ளும் கூட்டத்தினருக்கு நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனும், நன்மாராயம் கூறுபவனுமேயன்றி வேறில்லை”.
(ஸுரா அல்அஃராப் : 188)

இதுபோன்ற வசனங்கள் நபியவர்களும் ஒரு மனிதர் தான் என்பதையும் இறைமை மற்றும் வணங்கப்படுதல் சார்ந்த இறைத் தனித்துவங்கள் எதுவும் அவர்களுக்கு இல்லை என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. எனவே அவர்கள் மறைவானவற்றை அறிய மாட்டார்கள், பிரபஞ்சத்தை நிர்வகிக்கமாட்டார்கள். துஆவுக்கு பதிலளிக்கமாட்டார்கள். மாறாக, அவர்கள் எங்களைப் போன்ற அல்லாஹ்வின் ஓர் அடியார் தான். அல்லாஹ் அவர்களுக்கு, ஏனைய நபிமார்களுக்கு வழங்கியது போன்று, நபித்துவத்தை விசேடமாக வழங்கியுள்ளான்.

12. அவர்களது பரக்கத் பொருந்திய வாழ்க்கை, புகழுக்குரிய குணங்கள், அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் போர் செய்தமை, சத்தியத்தைப் போதிப்பதில் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொண்டமை ஆகியவற்றைப் பறைசாற்றும், அவர்களது வாழ்க்கை வரலாற்றோடு தொடர்பான ஆதாரப்பூர்வமான செய்திகளை ஈமான் கொள்ளல்
13. அவர்களது குணம் மற்றும் உடலமைப்பு சார்ந்த பண்புகளை ஈமான் கொள்ளல். உதாரணமாக, அவர்களது உயரம், உடலமைப்பு, நடை, கண்ணியமான முகத்தின் தன்மைகள், அழகான தோற்றம் போன்றவற்றையும், நபியவர்களைத் தவிர வேறு யாருமே ஒரு சேர பெற்றுக் கொள்ளாத, வாய்மை பேணல், இரக்கம்,

உறவுகளைச் சேர்ந்து நடத்தல், மன்னிக்கும் மனப்பான்மை போன்ற அல்லாஹ்வால் வழங்கப்பட்ட உயர்குணங்கள், அவர்களது இவ்வாறான குணம் மற்றும் உடலமைப்பு சார்ந்த பண்புகள் பற்றி அறிஞர்கள் நிறைய நூற்களைத் தொகுத்துள்ளனர்.

14. நபியவர்களுக்கென்று உள்ள, அவர்களது உடல் ரீதியான, மார்க்க ரீதியான தனித்துவங்களை ஈமான் கொள்ளல். உடல் ரீதியான சில தனித்துவங்களாவன: இறுதி நபித்துவ அடையாளம், (அது நபி அவர்களுடைய இடது சந்தில், ஒரு புறா முட்டையின் அளவில், முடியுடன் காணப்பட்ட ஒரு சதைத் துண்டாகும். அவர்களது உள்ளம் உறங்காமல் கண்கள் மாத்திரம் உறங்குவது, அவர்களது உடலில் இருந்து வெளியேறும் வியர்வை, உமிழ்நீர் போன்றவை பரக்கத்தானவையாக இருப்பது. மார்க்கரீதியான தனித்துவங்களாவன: அவர்களை சொத்துக்கள் யாருக்கும் அனந்தரமாக செல்ல மாட்டாது, ஜகாத் பெறுவது அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தின் மீதும் தடுக்கப்பட்டுள்ளமை, இரு நோன்புகளை இணைத்து ஒன்றாகப் பிடிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளமை, நான்கை விட அதிகமான பெண்களைத் திருமணம் செய்ய அல்லாஹ் அனுமதி அளித்துள்ளமை, தன்னை நபிவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் வழங்க வரும் பெண்ணை திருமணம் செய்து செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளமை, அவர்கள் வபாத்தாகும் இடத்திலேயே அடக்கப்படுதல்.

15. நபியவர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக ஈமான் கொள்வது. நபியவர்கள் 5 விடயங்களை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள்.

1) எத்தி வைப்பதில் தவறோ, மறதியோ, மறைத்தலோ நிகழ்வதை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். பின்வரும் வசனம் அதற்கு ஆதாரமாகும்:

﴿ وَمَا يَنطِقُ عَنِ ٱلۡهَوَىٰٓ ٣ إِنۡ هُوَ إِلَّا وَحۡيٞ يُوحَىٰ ٤ ﴾ [النجم: ٣-٤]

"அவர் (தும்) இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை. அது (அவருக்கு) அறிவிக்கப்படும் (வஹீ) அறிவிப்பே தவிர வேறில்லை." (ஸூரா அந்நஜ்ம் : 3,4)

﴿ ۞ يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَۖ وَإِن لَّمۡ تَفۡعَلۡ فَمَا بَلَّغۡتَ رِسَالَتَهُۥۚ ﴾ [المائدة: ٦٧]

"தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும் (இவ்வாறு) நீர் செய்யாவிட்டால் அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர்" (ஸூரா அல்மாஇதா : 67)

2) இணைவைப்பில் விழுந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளமை. நபித்துவம் கிடைப்பதற்கு முன்பிருந்தே நபியவர்கள் இணைவைப்பில் வீழ்வதை விட்டும்

பாதுகாக்கப்பட்டுள்ளார்கள். நபியவர்கள் தமது கூட்டத்தார் செய்து கொண்டிருந்த, சிலைகளுக்கு சிரம் பணிதல், தொடுதல் போன்ற எந்த இணைவைப்புச் செயலையும் செய்யவில்லை என்பதை உறுதியான ஆதாரங்கள் அறிவிக்கின்றன. அவர்கள் தமது இயல்பினாலேயே அல்லாஹ்வை அறிந்திருந்தார்கள். ஹிராக்குகையில் பல வருடங்கள் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி வணங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறான அவர்களது ஓரிறைக்கொள்கை ஆச்சரியமானது அல்ல. சிறுபராயத்திலும் பெரியவரானதன் பின்னரும் இருதடவைகள் அவர்களுக்கு நிகழ்ந்த, 'நெஞ்சைப் பிளத்தல்' சம்பவம் ஊடாக, அவர்களது உள்ளத்தில் இருந்த ஷைத்தானின் பங்கை அல்லாஹ் வெளியேற்றி விட்டான்.

3) பெரும்பாவங்களில் விழுந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளமை. அவர்களது வாழ்க்கை வரலாறு இதற்கு சாட்சியாகும். நுபுவத்துக்கு முன்னரும், பின்னரும் அவ்வாறுதான் இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் மது அருந்தியதில்லை, அவர்களது கை இன்னொரு பெண்ணின் கையைத் தொட்டதில்லை, ஒருபோதும் அவர்கள் பொய் பேசியதில்லை. தனது தோழர்களைப் பார்த்து, "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நானே உங்களில் அல்லாஹ்வை அதிகம் அஞ்சிப் பயப்படுபவன்" என்று கூறிய அவர்களிடமிருந்து எவ்வாறு பெரும்பாவங்கள் நிகழும்? குர்துபீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: 'பெரும்பாவங்கள் மற்றும் கீழ்த்தரமான சிறிய பாவங்கள் ஆகியவை ஆகிய அனைத்தையும் விட்டு நபிமார்கள் - ஏகோபித்த கருத்தின் பிரகாரம் - பாதுகாக்கப்பட்டுள்ளனர்.'

4) அவர்களது வம்சம் விபச்சாரத்தை விட்டும் பாதுகாக்கப்பட்டுள்ளமை. அல்லாஹ் நபியவர்களின் மூதாதையரை ஜாஹிலியாக் கால 'பச்சாரத்தை விட்டும் பாதுகாத்தான். அவர்களது வம்சத்தில் அவ்வாறான எந்த ஒன்றும் கலக்கவில்லை. அது நபியவர்களின் தாயின் வம்சமாகவும் இருக்கலாம், தந்தையின் வம்சமாகவும் இருக்கலாம். அவர்கள் இஸ்லாமியத் திருமணம் போன்ற ஒரு திருமணத்தின் மூலமே பிறந்தார்கள். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் நபியவர்களைத் தொட்டும் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் அதற்கு ஆதாரமாகும் : "எனது பெற்றோர் தகாத உறவில் ஒன்றிணையவில்லை. அல்லாஹ் என்னை தூய்மையான விந்திலிருந்து, சுத்தமான, தூய்மைப்படுத்தப்பட்ட, ஒழுக்கமூட்டப்பட்ட கருவுக்கு மாற்றினான். இரு கிளைகள் பிரிந்து விட்டால், அதில் நல்ல கிளையிலேயே நான் இருப்பேன்"[103]

[103] அபூ நுஜம்

5) கீழ்த்தரமான குணங்களில் இருந்து பாதுகாக்கப்பட்டுள்ளமை. நபியவர்களது நற்குணங்கள் பற்றி விரிவாக பேச வேண்டி இருக்கும். சுருக்கமாகக் கூறுவதாயின், புகழுக்குரிய எந்த நற்குணமாக இருப்பினும், நபி அவர்களிடம் அது இருக்கும். எந்த மோசமான குணமாக இருப்பினும், அதை விட்டு நபியவர்கள் தூய்மைப்படுத்தப்பட்டு இருப்பார்கள். இந்த தலைப்பில், அல்லாஹ் தனது நபியைப் பார்த்துக் கூறிய பின்வரும் வசனமே போதுமானதாகும்:

﴿ وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ۝٤ ﴾ [القلم: ٤]

"மேலும், (நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான (நற்)குணத்தின் மீது இருக்கின்றீர்." (ஸூரா அல்கலம் : 4)

இவை தான் நபி (ஸல்) அவர்களை ஈமான் கொள்வது உள்ளடக்கியுள்ள 15 அம்சங்களாகும். அவற்றை ஈமான் கொண்டு நடைமுறைப்படுத்த அல்லாஹ் எமக்கு உதவுவானாக! நபியவர்களை ஈமான் கொண்டு, அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளித்து, அவர்களுடன் இறக்கப்பட்டுள்ள ஒளியையும் பின்பற்றிய கூட்டத்தில் அல்லாஹ் எம்மை ஆக்குவானாக! அவர்கள் தான் வெற்றி பெறுபவர்கள்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

இறை விசுவாசிகளே! அறிந்து கொள்ளுங்கள்! இந்த அம்சங்களை ஈமான் கொண்டு நடைமுறைப்படுத்துவது என்பது, நபியவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சியம் கூறுவதை நடைமுறைப்படுத்துவதாகவே கொள்ளப்படும். ஈமான் என்பது வெறுமனே கற்பனைகளோ வெளி அலங்காரமோ அல்ல! மாறாக உள்ளத்தில் அது ஆழமாகப் பதிய வேண்டும். அதனை செயல்கள் உண்மைப்படுத்த வேண்டும்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத’ சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாகிய, 'அவர்களுக்குக் கட்டுப்படுதல்'

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹுத்தஆலா இந்த உம்மத்தை சிறப்பிக்கும் விதமாக, தனது படைப்புகளிலேயே மிகச்சிறந்தவராகிய, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவர்களுக்கு நபியாகவும் ரஸுலாகவும் தேர்ந்தெடுத்துள்ளான். உண்மையில் அவர்கள் நற்குணத்தாலும், அறிவாலும், செயற்பாடுகளினாலும் மனிதர்களிலேயே சிறந்தவராக இருந்தார்கள். அவருக்கு நன்மையை நாடுமாறு அல்லாஹ் ஏவியுள்ளான்.

தமீம் அத்தாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள், “இந்த மார்க்கம் என்பது நன்மையை நாடுவது தான்” என்று கூறினார்கள். அப்போது நாம், 'யாருக்கு?' எனக் கேட்க, “அல்லாஹ்வுக்கும், அவனது வேதத்திற்கும், அவனது தூதருக்கும், முஸ்லிம்களின் தலைவர்களுக்கும், மற்றும் முஸ்லிம் பொதுமக்களுக்கும்” என்று கூறினார்கள்.[104]

[104] முஸ்லிம் : 55

இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் 'நபியவர்களுக்கு நலவை நாடுதல்' என்பதன் அர்த்தம் தொடர்பாக அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கி இவ்வாறு கூறுகின்றார்கள்:

'நபி அவர்களுக்கு நலவு நாடுவது என்பது அவர்களது தூதை உண்மைப்படுத்துவதும், அவர்கள் முன்வைத்த அனைத்தையும் ஈமான் கொள்வதும், அவர்களுக்கு ஏவல், விலக்கல்களுக்குக் கட்டுப்படுவதும், அவர்கள் உயிரோடு இருக்கும்போதும், மரணித்த பின்னரும் உதவுவதும், அவர்களை விரோதித்தவர்களை விரோதிப்பதும், அவர்களை நேசித்தவர்களை நேசிப்பதும், அவர்களை கண்ணியப்படுத்தி மதிப்பதும், அவர்களது வழிகாட்டல்கள் மட்டும் வழிமுறைகளை உயிர்ப்பிப்பதும், அவர்களது அழைப்பையும் சரிஆவையும் பரப்புவதும், அது தொடர்பான குற்றச்சாட்டுகளை மறுப்பதும், அதில் உள்ள அறிவை ஆராய்ந்து எடுப்பதும், அதன் அர்த்தங்களைப் புரிந்து கொள்வதும், அதனை நோக்கி அழைப்பதும், நிதானமான முறையில் அதைக் கற்பதும், கற்பிப்பதும், அதை கண்ணியப்படுத்தி மகத்துவப்படுத்துவதும், அதனை வாசிக்கும் போது ஒழுக்கத்தைப் பேணுவதும், அது பற்றி அறிவின்றி பேசாமல் இருப்பதும், அதனைப் பின்பற்றுபவர்களை மதிப்பதும், நபியவர்களின் குணங்களையும் ஒழுக்கங்களையும் எடுத்துநடப்பதும், அவர்களது குடும்பத்தினர் மற்றும் தோழர்களை நேசிப்பதும், நபி (ஸல்) அவர்களின் வழிமுறையில் ஏதும் புதியவற்றை உற்புகுத்தியவர்கள் மற்றும் நபித்தோழர்களில் குறை கூறியவர்கள் போன்றோரை விட்டு விலகி இருப்பதும் ஆகும்.

முஸ்லிம்களே! முன்னர் கூறப்பட்ட, அறிஞர்களின் கருத்துக்களில் உள்ளது போன்று, நபியவர்களுக்கு நாடப்படும் மிக முக்கியமான நன்மை, அவர்களுக்குக் கட்டுப்படுவதாகும். அல்லாஹ் தனக்குக் கட்டுப்படுவதை, நபிக்குக் கட்டுப்படுவதுடன் இணைத்து,

﴿ مَّن يُطِعِ ٱلرَّسُولَ فَقَدۡ أَطَاعَ ٱللَّهَۖ وَمَن تَوَلَّىٰ فَمَآ أَرۡسَلۡنَٰكَ عَلَيۡهِمۡ حَفِيظٗا ٨٠ ﴾ [النساء: ٨٠]

"எவர் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்ப்படிகிறாரோ, அவர் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிகிறார் எவர் (இவ்வாறு கீழ்ப்படிவதை) புறக்கணித்தால் (அதற்காக நீர் வருந்த வேண்டியதில்லை ஏனெனில்,) உம்மை அவர்களின் மீது கண்காணிப்பவராக நாம் அனுப்பவில்லை." (ஸூரா அந்நிஸா : 80)

“யார் தூதருக்குக் கட்டுப்படுகின்றாரோ, அவர் எனக்கு கட்டுப்பட்டு விட்டதாக என்று மனிதர்களுக்கு அறிவித்திருக்கும் நிலையில் அவ்வாறு இல்லாமல் இருக்கமுடியுமா? அதற்கான காரணமாவது, நபியவர்கள் இந்த மார்க்கத்தை அல்லாஹ்விடமிருந்தே கொண்டுவந்தார்கள். எனவே, அவர்கள் அல்லாஹ் கூறியதை எத்திவைப்பவரே அன்றி, தானாக எதையும் கொண்டு வரவில்லை. அல்லாஹ் தனது நபியைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான்:

﴿ قُلْ إِنَّمَآ أَنَا۠ بَشَرٌ مِّثْلُكُمْ يُوحَىٰٓ إِلَىَّ أَنَّمَآ إِلَٰهُكُمْ إِلَٰهٌ وَٰحِدٌ ﴾ [الكهف: ١١٠]

“(நபியே!) நீர் சொல்வீராக: “நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்படுகிறது” (ஸூரா அல்கஹ்ப் : 110)

அல்லாஹ் அல்குர்ஆனில் 33 இடங்களில் தனது தூதருக்குக் கட்டுப்படுமாறு ஏவியுள்ளான். பின்வருவன அவற்றுள் சில இடங்களாகும்:

﴿ وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمْ عَنْهُ فَٱنتَهُوا۟ ﴾ [الحشر: ٧]

“மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை எடுத்துக்கொள்ளுங்கள் இன்னும், எதை விட்டும் உங்களை விலக்கினாரோ (அதை விட்டும்) விலகிக்கொள்ளுங்கள்” (ஸூரா அல்ஹஷ்ர் : 7)

﴿ قُلْ أَطِيعُوا۟ ٱللَّهَ وَٱلرَّسُولَ ۖ فَإِن تَوَلَّوْا۟ فَإِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ ٱلْكَٰفِرِينَ ﴿٣٢﴾ ﴾ [آل عمران: ٣٢]

“(நபியே! இன்னும்) நீர் கூறும்: “அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்” ஆனால், அவர்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்களை நேசிப்பதில்லை.” (ஸூரா ஆலு இம்ரான் : 32)

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَطِيعُوا۟ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَلَا تَوَلَّوْا۟ عَنْهُ وَأَنتُمْ تَسْمَعُونَ ﴿٢٠﴾ ﴾ [الأنفال: ٢٠]

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கும் நிலையிலேயே அவரைப் புறக்கணிக்காதீர்கள்” (ஸூரா அல்அன்பால் : 20)

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ ﴾ [النساء: ٥٩]

“நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள் இன்னும், (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேரிய) அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப்படுங்கள்” (ஸூரா அந்நிஸா : 59)

அதேபோன்று பல நபிமொழிகள் அவர்களைப் பின்பற்றுமாறும், அவர்களது வழிகாட்டலை எடுத்து நடக்குமாறும், அவர்களது வழிமுறையை நடைமுறைப்படுத்துமாறும், அவர்களது ஏவல், விலக்கல்களை மதிக்குமாறும் ஏவுகின்றன. பின்வருவன அதற்கு சில உதாரணங்கள் ஆகும்:

அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறியதாவது: (ஒருமுறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள் ஏற்க மறுத்தவரைத் தவிர” என்று கூறினார்கள். மக்கள், “அல்லாஹ்வின் தூதரே! ஏற்க மறுத்தவர் யார்?” என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், “எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார் எனக்கு மாறு செய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவர் ஆவார்” என்று பதிலளித்தார்கள்.[105]

நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “எனக்குக் கீழ்ப்படிந்தவர் அல்லாஹ் வுக்குக் கீழ்ப்படிந்தவராவார். எனக்கு மாறு செய்தவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவர் ஆவார்.”[106]

நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ஒன்றைச் செய்ய வேண்டாமென உங்களுக்கு நான் தடை விதித்தால் அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். ஒன்றைச் செய்யுமாறு உங்களுக்கு நான் கட்டளையிட்டால் அதை உங்களால் முடிந்த அளவுக்குச் செய்யுங்கள்.”**[107]**

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும்

[105] புகாரி : 7280

[106] புகாரி : 7137, முஸ்லிம் : 1835

[107] புகாரி : 7288, முஸ்லிம் : 1337

பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அறிந்து கொள்ளுங்கள்! நபியவர்களுக்குக் கட்டுப்படுவதில் நுழையும் மிக முக்கியமான ஓர் அம்சம் பிணக்குகளின் போது அவர்களை நாடிச் செல்வதாகவும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ أَطِيعُواْ ٱللَّهَ وَأَطِيعُواْ ٱلرَّسُولَ وَأُوْلِي ٱلۡأَمۡرِ مِنكُمۡۖ فَإِن تَنَٰزَعۡتُمۡ فِي شَيۡءٖ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمۡ تُؤۡمِنُونَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِۚ ذَٰلِكَ خَيۡرٞ وَأَحۡسَنُ تَأۡوِيلًا ٥٩ ﴾ [النساء: ٥٩]

“நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள் இன்னும், (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேரிய) அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப்படுங்கள் ஏதாவது ஒரு விஷயத்தில் நீங்கள் பிணங்கிக்கொண்டால் - (மெய்யாகவே) அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நீங்கள் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும் (அவன்) தூதரிடமும் திருப்பி விடுங்கள் - இதுதான் (உங்களுக்கு) மிகச் சிறந்ததாகவும், அழகான முடிவாகவும் இருக்கும்” (ஸூரா அந்நிஸா : 59)

இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்விடம் திருப்பி விடுவதென்பது, அவனது வேதத்திடம் திருப்பி விடுவது தான் என்றும், தூதரிடம் திருப்பிவிடுவது என்பது, அவர்கள் உயிரோடு இருக்கும்போது நேரடியாக அவர்களிடமும், அவர்கள் வபாத்தான பின் அவர்களது ஸுன்னாவிடமும் செல்வதுதான் என்றும் மக்கள் ஏகோபித்து ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

பின்பு, புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.”[108]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

[108] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம். யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

நபி (ஸல்) அவர்களுக்கு மாறுசெய்வதை அஞ்சுதல்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபியவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று, அவர்களுக்கு மாறுசெய்யாது எச்சரிக்கையாக இருப்பதாகும். பின்வரும் வசனங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மாறு செய்வதை எச்சரித்து வந்துள்ளன:

﴿ وَمَن يَعْصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَيَتَعَدَّ حُدُودَهُۥ يُدْخِلْهُ نَارًا خَٰلِدًا فِيهَا وَلَهُۥ عَذَابٌ مُّهِينٌ ﴿١٤﴾ ﴾ [النساء: ١٤]

“எவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறு செய்கின்றாரோ - இன்னும், அவன் (விதித்துள்ள) வரம்புகளை மீறுகின்றாரோ அவரை அவன் நரகில் புகுத்துவான் அவர் அதில் நிரந்தரமாக இருப்பார் அவருக்கு இழிவான வேதனையுண்டு.” (ஸூரா அந்நிஸா : 14)

﴿وَمَن يَعۡصِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدۡ ضَلَّ ضَلَٰلٗا مُّبِينٗا ٣٦﴾ [الأحزاب: ٣٦]

“அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் மாறுசெய்கிறாரோ, நிச்சயமாக அவர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்” (ஸூரா அல்அஹ்ஸாப் : 36)

﴿وَيَوۡمَ يَعَضُّ ٱلظَّالِمُ عَلَىٰ يَدَيۡهِ يَقُولُ يَٰلَيۡتَنِي ٱتَّخَذۡتُ مَعَ ٱلرَّسُولِ سَبِيلٗا ٢٧ يَٰوَيۡلَتَىٰ لَيۡتَنِي لَمۡ أَتَّخِذۡ فُلَانًا خَلِيلٗا ٢٨ لَّقَدۡ أَضَلَّنِي عَنِ ٱلذِّكۡرِ بَعۡدَ إِذۡ جَآءَنِيۗ وَكَانَ ٱلشَّيۡطَٰنُ لِلۡإِنسَٰنِ خَذُولٗا ٢٩﴾ [الفرقان: ٢٧-٢٩]

“அந்நாளில் அநியாயக்காரன் தன் இரு கைகளையும் கடித்துக்கொண்டு: “அத்தூதருடன் நானும் (நேரான) வழியை எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமே!” எனக் கூறுவான் “எனக்கு வந்த கேடே! (என்னை வழிகெடுத்த) இன்னவனை நான் நண்பனாக ஆக்கிக் கொள்ளாது இருந்திருக்க வேண்டுமே! நிச்சயமாக என்னிடம் உபதேசம் வந்த பின்னரும், அதிலிருந்து அவன் என்னை வழிகெடுத்துவிட்டான் மேலும், ஷைத்தான் மனிதனுக்கு மிகவும் சதி செய்பவனாக இருந்தான்!” (என்று புலம்புவான்.) (ஸூரா அல்புர்கான் : 27-29)

﴿وَمَن يُشَاقِقِ ٱلرَّسُولَ مِنۢ بَعۡدِ مَا تَبَيَّنَ لَهُ ٱلۡهُدَىٰ وَيَتَّبِعۡ غَيۡرَ سَبِيلِ ٱلۡمُؤۡمِنِينَ نُوَلِّهِۦ مَا تَوَلَّىٰ وَنُصۡلِهِۦ جَهَنَّمَۖ وَسَآءَتۡ مَصِيرًا ١١٥﴾ [النساء: ١١٥]

“எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதருக்கு மாறுசெய்து நம்பிக்கையாளர்களின் வழியல்லாத (வேறுவழியான)தைப் பின்பற்றுகின்றானோ அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே விட்டுவிடுவோம் மேலும், நரகத்திலும் அவனை நுழையச்செய்வோம் அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும்” (ஸூரா அந்நிஸா : 115)

﴿فَلۡيَحۡذَرِ ٱلَّذِينَ يُخَالِفُونَ عَنۡ أَمۡرِهِۦٓ أَن تُصِيبَهُمۡ فِتۡنَةٌ أَوۡ يُصِيبَهُمۡ عَذَابٌ أَلِيمٌ ٦٣﴾ [النور: ٦٣]

“எவர்கள் அவருடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களோ அவர்கள் தங்களைச் சோதனை பிடித்துக்கொள்வதையோ, அல்லது தங்களை நோவினைதரும் வேதனை பிடித்துக்கொள்வதையோ அஞ்சிக்கொள்ளட்டும்” (ஸூரா அந்நூர் : 63)

“எவர்கள் அவருடைய கட்டளைக்கு மாறுசெய்கிறார்களோ” என்ற வசனத்தை விளக்கும்போது இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ‘அதாவது ரஸூல் (ஸல்) அவர்களது கட்டளை என்பது, அவர்களது வழிகாட்டல், வழிமுறை வாழ்க்கைமுறை மற்றும் சரிஆ ஆகியவையாகும் எனவே எல்லா வார்த்தைகளும் செயற்களும், நபி (ஸல்) அவர்களின் சொற்கள் மற்றும் செயற்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். அவற்றுக்கு நேர்பட்டவை ஏற்றுக்கொள்ளப்படுபவை. அவற்றிற்கு முரண்படுபவை, யாருடைய கூற்றாகவும் செயலாகவும் இருந்தாலும் அவரிடமே திருப்பப்படும். ஏனெனில் புகாரி முஸ்லிம் போன்ற ஆதாரப்பூர்வமான கிரந்தங்களின் அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“எனது கட்டளையில் இல்லாத ஒரு விடயத்தை யாராவது செய்தால் அது தட்டப்படும்” அதாவது நபியவர்களின் சரீஆவுக்கு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ யாரெல்லாம் முரண்படுகிறார்களோ அவர்களுக்கு சோதனை ஏற்படுவதை, (அதாவது அவர்களது உள்ளத்திற்கு நிராகரிப்பு, நயவஞ்சகத்தனம், பித்அத் போன்ற குழப்பங்கள் ஏற்படுவதை) அல்லது அவர்களுக்குக் கடுமையான வேதனை ஏநப்படுவதை பயந்து எச்சரிக்கையாக இருக்கட்டும் (அதாவது இவ்வுலகில் கொலை, தண்டனை, தடுத்து வைத்தல் போன்ற வேதனைகள்)

முஸ்லிம்களே! நபி (ஸல்) அவர்களது ஸூன்னாவும் அவர்களுக்கு மாறு செய்வதை எச்சரித்து வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நான் எதையாவது உங்களுக்குத் தடுத்தால் அதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நான் ஏதாவது ஒன்றை உங்களுக்கு ஏவினால் அதனை இயன்றளவு எடுத்து நடந்து கொள்ளுங்கள்”[109]

அவர்களுக்கு மாறு செய்வது, மறுமைக்கு முன்னர், இவ்வுலகிலும் தண்டனை கிடைக்கக் காரணமாக இருக்கும்.

[109] புகாரி : 7288, முஸ்லிம் : 1337

ஸலமா இப்னுல் அக்வஃ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் நபி அவர்களது முன்னிலையில் இடக்கரத்தால் சாப்பிட்டார்கள். அப்போது நபியவர்கள், “வலக்கரத்தால் சாப்பிடுங்கள்” என்றார்கள். அதற்கு அவர், ‘என்னால் முடியாது’ என்று கூறிவிட்டார். அப்போது நபியவர்கள், “உன்னால் முடியாமல் போகட்டும். பெருமைதான் அவரைத் தடுத்தது தான்” என்று கூறினார்கள், அதற்குப் பின்னர் அவரது வாய்க்கு அவரது கையை உயர்த்த முடியாமல் போனது.[110]

சயீத் பின் அல்முசய்யப் (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: முசய்யப் பின் ஹஸ்ன் (ரலி) அவர்கள் கூறியதாவது: என் தந்தை (ஹஸ்ன் பின் அபீவஹ்ப்-ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், “உங்கள் பெயரென்ன?” என்று கேட்டார்கள். அவர்கள், “ஹஸ்ன்” (முரடு) என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள், “(இல்லை) நீங்கள் (இனிமேல்) ‘சஹ்ல்’ (மென்மை)” என்று சொன்னார்கள். அவர், “என் தந்தை சூட்டிய பெயரை நான் மாற்றிக்கொள்ளமாட்டேன்” என்றார். அதற்குப் பின்னர் எங்கள் குடும்பத்தாரிடையே (அவர்களுடைய குணநலன்களில்) முரட்டுத்தனம் நீடித்தது.[111]

அதாவது அவர்களது நபியவர்களது ஆலோசனையை எதிர்த்ததால் அவர்களது, எல்லா விடயங்களும் இலகுவாக நடைபெறாமல் சற்று சிரமம் காணப்பட்டது

அபூ ஹுமைத் அஸ்ஸாஇதீ (ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் தபூக் போருக்குச் சென்றோம். நாங்கள் தபூக்கை அடைந்தபோது “இன்றிரவு கடும் காற்று வீசும் எனவே, யாரும் எழுந்திருக்க வேண்டாம். ஒட்டகம் வைத்திருப்பவர் அதை நன்கு கட்டிவைக்கட்டும்” என நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். நாங்களும் ஒட்டகங்களைக் கட்டிப்போட்டோம். கடும் காற்று வீசத் தொடங்கிற்று. (நபி (ஸல்) அவர்களின் கட்டளையை மீறியவராக) ஒரு மனிதர் எழுந்து வந்தார். உடனே காற்று அவரை ‘தய்யி’ என்ற மலையில் கொண்டுபோய் போட்டது.”[112]

---

110 முஸ்லிம் : 2021

111 புகாரி : 6190

112 புகாரி : 1482, முஸ்லிம் : 1392

முஸ்லிம்களே! நபியவர்களுக்கு மாறுசெய்வது நான்கு வகைப்படும்: சிறியபாவம், பெரும்பாவம், பித்அத், இறைநிராகரிப்பு ஆகியவையே அவையாகும்.

பெரும்பாவம் என்பது, எந்த பாவங்களையெல்லாம் செய்பவர்களுக்கு சாபமோ, இறை கோபமோ, நரகைக் கொண்டு எச்சரிக்கையோ, இவ்வுலக தண்டனையோ குறிப்பிடப்பட்டுள்ளதோ அவ்வாறான பாவங்கள் ஆகும். பெரும் பாவம் செய்பவர் அல்லாஹ்வின் நாட்டத்தின் கீழ் உள்ளார். அல்லாஹ் நாடினால் அவரை தண்டிப்பான் நாடினால் மன்னிப்பான் எனவே பெரும் பாவங்களில் ஈடுபடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

﴿ إِن تَجۡتَنِبُواْ كَبَآئِرَ مَا تُنۡهَوۡنَ عَنۡهُ نُكَفِّرۡ عَنكُمۡ سَيِّـَٔاتِكُمۡ وَنُدۡخِلۡكُم مُّدۡخَلٗا كَرِيمٗا ٣١ ﴾ [النساء: ٣١]

"நீங்கள் தடுக்கப்பட்டுள்ளவற்றில் பெரும் பாவங்களைவிட்டும் விலகிக்கொண்டால், உங்களுடைய (மற்ற சிறு) பாவங்களை உங்களை விட்டும் நாம் போக்கிவிடுவோம் உங்களை நாம் மதிப்புமிக்க இடத்தில் புகுத்துவோம்." (ஸூரா அந்நிஸா : 31)

திருடுதல், மது அருந்துதல், வட்டி சாப்பிடல், விபச்சாரம், உறவுகளை துண்டித்து நடத்தல், பெண்கள் அலங்காரங்களைக் காட்டிக் கொண்டு வெளிச்செல்லல் போன்றவை பெரும் பாவங்களின் சில வகைகளாகும். இவை அனைத்திற்கும் இவ்வுலக தண்டனையோ, மறுமை வேதனையோ அல்லது இரண்டு தண்டனைகளுமோ கூறப்பட்டிருக்கும்.

அல்லாஹ்வுடைய அடியார்களே! சிரிய பாவங்கள் என்பவை, உலகில் குறித்த தண்டனையோ, மறுமையில் விசேடமான எச்சரிக்கையோ வராத பாவங்கள் ஆகும்.

எனினும் ஒரு சிறிய பாவத்தை ஒரு மனிதன் தொடர்ந்து செய்து கொண்டு, தவ்பா செய்யாமல் இருந்தால், அது பெரும் பாவமாகிவிடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அற்பமாகக் கருதப்படும் பாவங்களை நான் உங்களுக்கு எச்சரிக்கின்றேன். அவை ஒரு அடியான் மீது ஒன்று சேர்ந்து அவனை அழித்தே

விடுகின்றன. நபி (ஸல்) அவர்கள் அவற்றுக்கு பின்வருமாறு ஒரு உதாரணம் கூறினார்கள்: ஒரு கூட்டத்தார் ஒரு வெற்றுப் பூமியில் தரிக்கின்றார்கள். அப்போது அவர்கள் உணவு சமைக்கும் நேரம் வந்தது. ஒவ்வொரு மனிதர்களாகச் சென்று குச்சிகளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அவ்வாறு அவர்கள் பெரியளவு குச்சிகளை ஒன்று சேர்த்து, நெருப்பை மூட்டி, தாம் இட்ட உணவுகளை சமைத்துக் கொண்டார்கள்.[113]

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: சிறிய பாவத்தைத் தொடர்ந்து செய்ய முடியாது. இஸ்திக்பார் செய்துகொண்டே பெரும்பாவத்தை செய்ய முடியாது" (ஆதாரம் : இப்னு ஜரீர்)

அல்லாஹ்வின் அடியார்களே! நிராகரிப்பது என்பது, இஸ்லாத்தை முறிக்கும் ஏதாவது ஒன்றைச் செய்வதாகும். உதாரணமாக, அல்லாஹ் அல்லாத நபிமார்களையோ, நன்மக்களையோ வணங்குதல் அல்லது அவர்களது கப்ருகளை வணங்குதல் அல்லது அல்லாஹ்வையோ, அவனது தூதரையோ, மார்க்கத்தையோ ஏசுதல் அல்லது ஏளனம் செய்தல், அல்லது மார்க்கத்தில் உறுதியாக அறியப்பட்டவைகளாகிய, அல்லாஹ்வை ஈமான் கொள்ளல் போன்றவற்றை மறுத்தல், அல்லது மது போன்றவை ஹராம் என்பதை மறுத்தல் அல்லது நபியவர்களது வழிகாட்டல் அல்லாத வேறு வழிகாட்டல்கள் சிறந்தது என்று நினைத்தல் அல்லது சூனியம் வைத்தல் அல்லது நிராகரிப்பாளர்களின் மார்க்கத்தை விரும்பி, முஸ்லிம்களுக்கு எதிராக அவர்களுக்கு உதவி செய்தல்.

நிராகரிப்பை ஏற்படுத்தும் காரணிகள் அதிகமாக உள்ளன சட்ட அறிஞர்கள் அவற்றை சட்ட நூல்களில், இஸ்லாத்தை வெட்டும் வெளியேறியவர் தொடர்பான பாடத்தில் கூறியுள்ளனர். இவை சில உதாரணங்களே.

அல்லாஹ்வின் அடியார்களே! பித்அத் என்பது மொழியில், 'புதிதாக உருவாக்குதல்' என்ற அர்த்தத்தைத் தரும். இஸ்லாமிய பரிபாஷையில் பித்அத் என்பது, மார்க்கத்தில் கூறப்படாத வணக்கங்களையோ, நம்பிக்கைகளையோ புதிதாக உருவாக்குவதாகும்.

தொழுகைக்குப் பின்னால் கூட்டாக தஸ்பீஹ் செய்தல், ஜும்மா தொழுகையின் பின்னர் ழுஹர் தொழுதல், நபிகளார் பிறந்த தினத்தை கொண்டாடுதல், இஸ்ரா, மிஃராஜ் தினத்தைக் கொண்டாடுதல் போன்றவை வணக்கம் சார்ந்த

[113] அஹ்மத் : 1-402,403

பித்அத்களுக்க சில உதாரணங்களாகும். சில மனிதர்கள் இவற்றை அல்லாஹ்விடம் நெருக்கமாகும் நோக்கில் செய்கின்றார்கள். ஆனால் அவை அவனை விட்டும் தூரமாக்கவே செய்யும். எனெனில் இவற்றை அல்லாஹ் மார்க்கமாக்கவில்லை. "எல்லா பித்அத்துக்களும் வழிகேடுதான்" [114] என்ற வார்த்தையினூடாக நபியவர்கள், இவற்றை வழிகேடுகள் என்று அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

எனவே அல்குர்ஆனையும் ஹதீஸையும் பற்றிப் பிடிப்பதும், அல்லாஹ்வை அவன் வழிகாட்டிய அமைப்பில் மாத்திரம் வணங்குவதும், எந்த வகையிலும் எக்காரணத்திற்காகவும் நபியவவர்களுக்கு மாறு செய்யாமல் இருப்பதும் கடமையாகும். யார் குர்ஆனையும், ஸுன்னாவையும் பற்றிப் பிடித்துக் கொள்கின்றாரோ, அவர் தப்பிவிடுவார். யார் அவ்விரண்டையும் விட்டு விலகிச் சென்றுவிடுகின்றாரோ, அவர் அழிந்து விடுவார், நபியவர்கள் கூறினார்கள்: "நான் உங்களிடம் அல்லாஹ்வின் வேதம் மற்றும் எனது ஸுன்னா ஆகிய இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். இவ்விரண்டுக்கும் பின்னர் நீங்கள் வழி தவறவே மாட்டீர்கள்"[115]

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை

[114] முஸ்லிம் : 867
[115] ஸஹீஹுல் ஜாமிஃ : 3232

இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.”[116]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

[116] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம். யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

நபி (ஸல்) அவர்களை நேசித்தல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள் மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்” (அல்குர்ஆன் : 3:102)

“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான் ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள் மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்” (அல்குர்ஆன் : 4:1)

“ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். (அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான் உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான் அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார். (அல்குர்ஆன் : 33:70)

பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டலில் மிகச்சிறந்தது, நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். விடயங்களில் மிக மோசமானது, அவற்றில் புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும். புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொன்றும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும், ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே செல்லும்.

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபியவர்களை நேசிப்பதும், மகத்துவப்படுத்துவதும் ஈமானின் நிபந்தனைகளில் ஒன்றாகவும், மார்க்கத்தின் அடிப்படைகளில் ஒன்றாகவும் உள்ளது. நபி (ஸல்) அவர்களை நேசிப்பது கட்டாயம் என்பதற்கான ஆதாரங்கள் அதிகமாக உள்ளன.

﴿ قُلۡ إِن كَانَ ءَابَآؤُكُمۡ وَأَبۡنَآؤُكُمۡ وَإِخۡوَٰنُكُمۡ وَأَزۡوَٰجُكُمۡ وَعَشِيرَتُكُمۡ وَأَمۡوَٰلٌ ٱقۡتَرَفۡتُمُوهَا وَتِجَٰرَةٞ تَخۡشَوۡنَ كَسَادَهَا وَمَسَٰكِنُ تَرۡضَوۡنَهَآ أَحَبَّ إِلَيۡكُم مِّنَ ٱللَّهِ وَرَسُولِهِۦ وَجِهَادٖ فِي سَبِيلِهِۦ فَتَرَبَّصُواْ حَتَّىٰ يَأۡتِيَ ٱللَّهُ بِأَمۡرِهِۦۗ وَٱللَّهُ لَا يَهۡدِي ٱلۡقَوۡمَ ٱلۡفَٰسِقِينَ ٢٤ ﴾ [التوبة: ٢٤]

(நபியே!) நீர் கூறும்: “உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும் - அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் போர்புரிவதையும் விட உங்களுக்குப் பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டுவரும் வரை,

நீங்கள் எதிர்பார்த்து இருங்கள் அல்லாஹ் பாவிகளான கூட்டத்தினரை நேர்வழியில் செலுத்துவதில்லை." (ஸூரா அத்தவ்பா : 24)

நபி (ஸல்) அவர்களை நேசிப்பது கட்டாயம் என்பதற்கும், அவர்கள் அவ்வாறான அன்பிற்குத் தகுதியானவர் என்பதற்கும் ஆதாரமாகவும், தூண்டக் கூடியதாகவும் இந்த ஒரு வசனம் மாத்திரமே போதுமானதாகும். ஏனெனில், யார் தமது சொத்து, குடும்பம், பிள்ளைகள் ஆகியவற்றை அல்லாஹ்வையும் தூதரையும் விட நேசிக்கின்றார்களோ, அவர்களை அல்லாஹ், *"அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டுவரும் வரை, நீங்கள் எதிர்பார்த்து இருங்கள்"* என்ற வார்த்தை மூலம் எச்சரித்துவிட்டுப் பின்பு, அவ்வசனத்தின் இறுதியில், அவர்கள் பாவிகள் என்றும், அவர்களை அல்லாஹ் நேர்வழிப்படுத்தாமல் வழிகெடுத்துவிடுவான் என்றும் அறியத் தருகின்றான்.

விசுவாசிகளே! நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பு முழுமை பெறுவது, உயிர் சொத்து, குடும்பம் என அனைத்தையும் விட அவர்களது நேசத்தை முற்படுத்துவது கொண்டே உண்டாகும். அவ்வாறில்லாமல், அது குறையுள்ள அன்பாகவே கொள்ளப்படும். இதற்கு அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் ஆதாரம் உள்ளது

﴿ ٱلنَّبِيُّ أَوۡلَىٰ بِٱلۡمُؤۡمِنِينَ مِنۡ أَنفُسِهِمۡۖ ﴾ [الأحزاب: ٦]

"இந்த நபி நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார்" (ஸூரா அல்அஹ்ஸாப் : 6)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இறைநம்பிக்கையாளர் எவராயினும் அவருக்கு இந்த உலகிலும் மறுவுலகிலும் நானே மிக நெருக்கமான (உரிமையுடைய) வன் ஆவேன். நீங்கள் விரும்பினால், 'திண்ணமாக, நம்பிக்கையாளர்களுக்கு, அவர்களின் உயிர்களைவிட நபிதான் நெருக்கமான (உரிமையுடைய)வர் ஆவார்' (33:6) எனும் இறைவசனத்தை ஓதிக் கொள்ளுங்கள்."[117]

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நான் ஒவ்வொரு முஃமினுக்கும் அவனது ஆத்மாவை விட நெருக்கமானவன்"[118]

[117] புகாரி : 2399, முஸ்லிம் : 1619

[118] முஸ்லிம் : 867

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களில் ஒருவருக்கு, அவருடைய தந்தை, அவருடைய பிள்ளை, ஏனைய மக்கள் அனைவரையும்விட நான் நேசத்திற்குரியவனாக ஆகாத வரை அவர் (உண்மையான) இறைநம்பிக்கை கொண்டவர் ஆகமாட்டார்.”[119]

அப்துல்லாஹ் பின் ஹிஷாம் (ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்துகொண்டிருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதரே! என்னைத் தவிரவுள்ள எல்லாவற்றையும்விட நீங்களே எனக்கு மிகவும் பிரியமானவர்கள்” என்று சொன்னார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “இல்லை! என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! உம்மைவிடவும் நானே உமக்கு மிகவும் பிரியமானவனாக ஆகாத வரை (நீர் உண்மையான இறைநம்பிக்கையாளர் ஆக முடியாது)” என்று கூறினார்கள். உடனே நபி (ஸல்) அவர்களை நோக்கி உமர் (ரலி) அவர்கள், “இப்போது அல்லாஹ்வின் மீதாணையாக! என்னைவிடவும் தாங்களே எனக்கு மிகவும் பிரியமானவர்கள்” என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “இப்போதுதான் உமரே! (சரியாகச் சொன்னீர்கள்)” என்று கூறினார்கள்.[120]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யாரிடம் மூன்று தன்மைகள் அமைந்துவிட்டனவோ அவர் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்துகொள்வார். (அவை:) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் அவருக்கு மற்றெதையும்விட அதிக நேசத்திற்குரியோர் ஆவது. அல்லாஹ்வுக்காகவே ஒருவரை அவர் நேசிப்பது. நெருப்பில் வீசப்படுவதை வெறுப் பதைப் போன்று இறைமறுப்புக்குத் திரும்புவதை அவர் வெறுப்பது”[121]

விசுவாசிகளே! நபி அவர்களை நேசிப்பதென்பது, அல்குர்ஆன், ஸுன்னாவின் பல்வேறு ஆதாரங்களில், அல்லாஹ்வை நேசிப்பதுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே, நபி (ஸல்) அவர்களை நேசிப்பது எந்தளவுக்கு முக்கியமானது என்பதை அது அறிவிக்கின்றது. உதாரணமாக, (ஏற்கனவே கூறப்பட்ட வசனத்தில்) அல்லாஹ் கூறுகின்றான் :

---

119 புகாரி : 15, முஸ்லிம் : 44

120 புகாரி : 6632

121 புகாரி : 16, முஸ்லிம் : 43

﴿ أَحَبَّ إِلَيْكُم مِّنَ ٱللَّهِ وَرَسُولِهِۦ ﴾ [التوبة: ٢٤]

"அல்லாஹ்வையும் அவன் தூதரையும் விட உங்களுக்குப் பிரியமானவையாக இருக்குமானால்" (ஸூரா அத்தவ்பா : 24)

இவ்வாறு இணைத்துக் கூறப்பட்டுள்ளமை, நபியவர்களை நேசிப்பதற்கும் அல்லாஹ்வை நேசிப்பதற்கும் மத்தியில் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்த்தி நிற்கின்றது.

முஸ்லிம்களே! நபி (ஸல்) அவர்களை நேசிப்பதன் சிறப்புக்கள் அதிகமாக உள்ளன. உதாரணமாக, நபி (ஸல்) அவர்களை நேசிப்பவர்கள் மறுமையில் நபியவர்களுடன் இருப்பார்கள்.

அனஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் மறுமை நாளைப் பற்றி, "மறுமை நாள் எப்போது வரும்?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "அதற்காக நீ என்ன (நற்செயல்களைத்) தயார் செய்து வைத்திருக்கிறாய்?" என்று (திருப்பிக்) கேட்டார்கள். அம்மனிதர், "எதுவுமில்லை நான் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நேசிக்கிறேன் என்பதைத் தவிர" என்று பதிலளித்தார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "நீ நேசித்தவர்களுடன்தான் (மறுமையில்) நீ இருப்பாய்" என்று சொன்னார்கள். நபி (ஸல்) அவர்கள், "நீ நேசித்தவர்களுடன் நீ இருப்பாய்" என்று சொன்னதைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்ததைப் போன்று வேறு எதனாலும் நாங்கள் மகிழ்ச்சியடைந்ததில்லை. நான் நபி (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (ரலி) அவர்களையும் உமர் (ரலி) அவர்களையும் நேசிக்கிறேன். மேலும், அவர்களை நேசித்த காரணத்தால் (மறுமையில்) அவர்களுடன்தான் இருப்பேன் என்று நான் நம்புகிறேன் அவர்களுடைய நற்செயல்களைப் போன்று நான் நற்செயல் புரியாவிட்டாலும் சரியே![122]

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

[122] புகாரி : 3688, முஸ்லிம் : 2639

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள் : நபி (ஸல்) அவர்களை நேசிப்பதற்கு வழிவகுக்கும் காரணிகள் பல உள்ளன அவற்றில் மிக முக்கியமானவை நான்காகும் :

முதலாவது : நபியவர்கள் தமது சமுதாயத்திற்காக செய்த அர்ப்பணிப்புக்களை நினைத்துப் பார்த்தல். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை பரப்புவதற்காகவேண்டி நிறைய நோவினைகளைச் சந்தித்துள்ளார்கள்.

இரண்டாவது : நபி அவர்கள் மீதான அன்பைப் பலப்படுத்தும் இன்னும் ஒரு காரணி, தனது சமுதாயத்துக்கு மறுமையில் அழிவு வந்து விடக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் பயந்து கொண்டிருந்தமையை நினைவுப்படுத்திப் பார்ப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ لَقَدْ جَآءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم بِٱلْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ ﴿١٢٨﴾ ﴾ [التوبة: ١٢٨]

"(நம்பிக்கையாளர்களே) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார்: நீங்கள் துன்பத்திற்குள்ளாவது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கும் அன்றி, உங்கள் மீது அதிக அக்கறை உள்ளவர் நம்பிக்கையாளர்கள் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவராக இருக்கின்றார்." (ஸூரா அத்தவ்பா : 128)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எனது நிலையும் மக்களின் நிலையும் ஒரு மனிதரின் நிலைக்கு ஒத்திருக்கிறது. அவர் தீ மூட்டினார். அவரைச் சுற்றிலும் அது ஒளிவீசியபோது விட்டில் பூச்சிகளும் நெருப்பில் விழும் இதரப் பூச்சிகளும் அந்தத் தீயில் விழலாயின. அந்த மனிதரோ அவற்றை (தீயில் விழாமல்)

தடுத்துக்கொண்டிருந்தார். (ஆனால்,) அவை அவரையும் மீறி தீயில் விழுகின்றன. (இவ்வாறுதான்) நரகத்(தில் விழுவ)திலிருந்து (உங்களைத்) தடுக்க உங்கள் இடுப்புகளை நான் பிடித்துக்கொண்டிருக்கிறேன். (ஆனால்,) நீங்களோ (என்னையும் மீறி) நரகத்தில் நுழைந்துகொண்டிருக்கிறீர்கள்"[123]

மூன்றாவது : நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பைப் பலப்படுத்தும் இன்னும் ஒரு காரணி, அவர்களது புகழுக்குரிய பண்புகளையும் தூய்மையான நற்குணங்களையும் அறிந்து கொள்வதாகும். உதாரணமாக நபி (ஸல்) அவர்கள் மன்னிக்கும் குணம் கொண்டவராக இருந்துள்ளார்கள். நபியவர்களைப் பார்த்து மக்காவாசிகள், 'சூனியக்காரரர்கள், கவிஞர், பைத்தியக்காரர், மதம் மாறியவர்,' என்றெல்லாம் கூறினார்கள். அவர்களுக்கு அடித்தார்கள். ஒட்டகத்தின் குடல்களால் அவர்களது கழுத்து நெறிக்கப்பட்டது. அவர்கள் அவர்களது கடைவாய்ப்பல் உடைக்கப்பட்டது, அவர்களது கண்ணியமான முகம் காயப்படுத்தப்பட்டது. இவ்வாறெல்லாம் மக்காவாசிகள் செய்த பின்பும், மக்காவாசிகளை அல்லாஹ் நபியவர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொடுத்த போது, அவர்கள் மக்காவாசிகளைப் பார்த்து, "நான் உங்களை என்ன செய்யப் போகின்றேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'நல்லதையே செய்வீர்கள் என்று தான் நாம் நினைக்கின்றோம். நீங்கள் கண்ணியமான ஒரு சகோதரர். கண்ணியமான ஒரு சகோதரனின் மகன்' என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் எழுந்து செல்லுங்கள். விடுதலை செய்யப்பட்டு விட்டீர்கள்" என்று கூறினார்கள். அல்லாஹ் அவர்களை நபியவர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து கொடுத்தான். நபி (ஸல்) அவர்களுக்கு அது ஒரு வாய்ப்பாக இருந்தது. ஆனாலும் நபியவர்கள் மன்னிததேவிட்டார்கள். அதனால் தான், மக்காவாசிகள் பின்னர், "துலகா" (விடுதலை செய்யப்பட்டோர்) என அழைக்கப்பட்டார்கள்.[124]

நான்காவது : நபி அவர்கள் மீதுதான் அன்பே அதிகரிக்கும் இன்னும் ஒரு காரணி, நபிவரலாற்று நூல்களை அதிகம் பிரட்டி வாசிப்பதும், அவர்களது நிலைகள், அமல்கள், அவர்களது அறப்போர், இஸ்லாமிய சமுதாயத்தை அவர்கள் உருவாக்கியமை போன்றவற்றை நினைவில் கொள்வதுமாகும்.

[123] புகாரி : 6483, முஸ்லிம் : 2284

[124] தபரானீ, அக்பாரு மக்கா

முஸ்லிம்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதிலும், தமது உயிர், சொத்து, குடும்பம் என அனைத்தையும் விட அவர்களை முற்படுத்துவதிலும் ஸலபுகள் மிகச்சிறந்த உதாரணங்களாகத் திகழ்ந்துள்ளார்கள். ஸைத் பின் தஸினா அவர்களைக் கொலை செய்வதற்காக வேண்டி, இணைவைப்பாளர்கள் அவரை மக்காவின் ஹரம் எல்லைக்கு வெளியே அழைத்துச் சென்றபோது அவரிடம், அப்போது இணைவைப்பாளராக இருந்த அபூஸுஃப்யான் ‘அல்லாஹ்விற்காக உன்னிடம் கேட்கின்றேன். நீ உனது குடும்பத்துடன் நிம்மதியாக இருக்க, நீ இப்போது இருக்கும் இந்த இடத்தில் முஹம்மது இருப்பதை நீ விரும்புவாயா? என்று கேட்டார். அதற்கு அவர்கள், ‘அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது குடும்பத்தோடு அமர்ந்திருக்கும், நிலையில் நபி (ஸல்) அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களை ஒரு முள் தைத்து நோவினை செய்வதைக் கூட நான் விரும்பமாட்டேன்’ என்று பதில் அளித்தார்கள். அப்போது அபூ ஸுஃப்யான் ‘முஹம்மதுடைய தோழர்கள் முஹம்மதை நேசிப்பது போன்று, மனிதர்களில் யாரும் யாரையும் நேசிப்பதை நான் காணவே இல்லை’ என்று கூறினார்.

விசுவாசிகளே! சில அறிவிலிகள் மற்றும் மனோஇச்சையை பின்பற்றுபவர்களை ஷைத்தான் குழப்பிவிட்டு, நபியவர்களோ அவர்களது தோழர்களோ, சிறப்பிக்கப்பட்ட மூன்று நூற்றாண்டைச் சேர்ந்தவர்களோ செய்யாத, மார்க்கத்தில் இல்லாத சில விடயங்களைச் செய்வதை அவர்களுக்கு அழகுபடுத்திக் காட்டியுள்ளான். அது பரிபூரமான அன்பின் வெளிப்பாடு என அவர்கள் நினைத்துக் கொள்கின்றார்கள். உண்மையில் இது பாரதூரமான ஒரு அறியாமையே! அன்பு என்றால், நேசிக்கப்படுபவருக்குக் கட்டுப்பட்டு, அவரது ஏவல், விலக்கல்களை ஏற்று, அவரது மார்க்கத்தில் கூட்டல், குறைத்தல் செய்யாமல் மிகக் கவனமாக இருக்க வேண்டும். “மௌலீது நபவி” எனப்படுவது அவற்றில் ஒன்றாகும். இது நபியவர்களோ, நபித்தோழர்களோ, தாபிஈன்களோ செய்யாத ஒரு நூதன வணக்கமாகும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “எமது மார்க்கத்தில் இல்லாத ஒரு விடயத்தை யாராவது புதிதாக உருவாக்கினால் அது தட்டப்படும்.” [125] அதாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது அவருக்கே திருப்பப்பட்டுவிடும்.

புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத்

[125] புகாரி : 2697, முஸ்லிம் : 1718

துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.”[126]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

[126] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

நபித்தோழர்களைக் கண்ணியப்படுத்துவது அஹ்லுஸ் ஸூன்னா வல்ஜமாஆவின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும்

(நபித் தோழர்களின் சிறப்பம்சங்கள்)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபி (ஸல்) அவர்களது தோழர்களை கண்ணியப்படுத்துவது, அவர்களுக்கு உபகாரம் புரிவது, அவர்களது உரிமைகளை அறிந்து கொள்வது, அவர்களைப் பின்பற்றுவது, அவர்களைப் பற்றி நல்லவிதமாகப் பேசுவது, அவர்களுக்காகப் பிழை பொறுக்க வேண்டுவது, அவர்கள் மத்தியில் நடந்த பிரச்சனைகள் பற்றிப் பேசாமல் இருப்பது, அவர்களை விரோதித்தவர்களை விரோதிப்பது என்பன

அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அடிப்படைக் கோட்பாடுகளில் உள்ளவை ஆகும். அதேபோன்று, சில வரலாற்று ஆசிரியர்கள், அறிவற்ற அறிவிப்பாளர்கள், வழிதவறிய சீஆக்கள் மற்றும் பித்அத்வாதிகள் அறிவித்துள்ள, நபித்தோழர்களில் குறை கூறும் விதமான செய்திகளைப் புறக்கணிப்பதும் அவற்றில் உள்ளவையாகும். ஏனனில் தவறாகப் பேசப்படக்கூடாத, குறைப்படக்கூடாத ஒரு சமுதாயமாக அவர்கள் உள்ளனர். பதிலாக அவர்களது நலவுகளும், சிறப்புகளும், அழகான வாழ்க்கைமுறையுமே பேசப்பட வேண்டும். ஏனையவை பற்றி மௌனமாகவே இருக்க வேண்டும்.

இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவின் அடிப்படை நம்பிக்கை கோட்பாடுகளில் ஒன்று, நபித்தோழர்கள் விடயத்தில் தமது உள்ளங்களையும், நாவுகளையும் இடேற்றமாக வைத்துக் கொள்வதாகும். அல்லாஹ் அவர்களை இவ்வாறு வர்ணித்துள்ளான்:

﴿وَالَّذِينَ جَاءُو مِنۢ بَعۡدِهِمۡ يَقُولُونَ رَبَّنَا ٱغۡفِرۡ لَنَا وَلِإِخۡوَٰنِنَا ٱلَّذِينَ سَبَقُونَا بِٱلۡإِيمَٰنِ وَلَا تَجۡعَلۡ فِي قُلُوبِنَا غِلّٗا لِّلَّذِينَ ءَامَنُواْ رَبَّنَآ إِنَّكَ رَءُوفٞ رَّحِيمٌ ١٠﴾ [الحشر: ١٠]

"அவர்களுக்குப் பின் குடியேறியவர்களுக்கும் (இதில் பங்குண்டு) அவர்கள், "எங்கள் இறைவனே! எங்களுக்கும், நம்பிக்கை கொள்வதில் எங்களுக்கு முந்தியவர்களான எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்பு அருள்வாயாக! அன்றியும், நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன் கிருபை மிக்கவன்" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவர்."
(ஸூரா அல்ஹஷ்ர் : 10)

நபித்தோழர்களின் 14 சிறப்பம்சங்கள்

1. விசுவாசிகளே! நபித்தோழர்களுக்கு ஏனைய மனிதர்களை விட மகத்தான சிறப்புக்கள் இருப்பதற்கான ஓர் ஆதாரம், தன்னுடைய நபியைத் தோழமை கொள்ள, ஏனைய மனிதர்களை விட்டு, அவர்களைத் தேர்ந்தெடுத்து, இவ்வுலக வாழ்க்கையிலேயே நபி (ஸல்) அவர்களைப் பார்க்கவும், அவர்களது கண்ணியமான வாயிலிருந்து ஹதீஸ்களை செவிமடுக்கவும், அவர்களிடமிருந்தே சரீஆவையும் மார்க்க விடயங்களையும் கற்றுக் கொள்ளவும், அவர்களது கரங்களாலே பண்படுத்தப்படவும், அவர்களுக்கு

வழங்கப்பட்ட ஒளியையும் நேர்வழியையும் சம்பூர்ணமாக எத்தி வைக்கவும் செய்துள்ளமையாகும்.

2. நபித்தோழர்களுக்கு மகத்தான சிறப்பு இருப்பதற்கான இன்னும் ஓர் ஆதாரம், நபி (ஸல்) அவர்கள், அவர்களை நேசித்துள்ளமையாகும்.
3. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், இஸ்லாத்தைப் பரப்பி, அதனை நோக்கி மக்களை அழைப்பதற்காக நபியவர்களுடன் இணைந்து அவர்கள் அறப்போரில் ஈடுபட்டமையாகும். எனவே, அவர்களுக்குப் பின்னர் வருவோருக்கு கிடைப்பது போன்ற கூலி அவர்களுக்கும் கிடைக்கவே செய்யும். ஏனெனில், யார் நேர்வழியை நோக்கி அழைக்கின்றாரோ, அவருக்கு, அவரைப் பின்பற்றியவர்களது கூலிகளைப் போன்ற கூலிகளும் கிடைக்கப்பெறும். எனினும் அவ்வாறு கிடைக்கப்பெறுவது, இவர்களது கூலியில் குறைவை ஏற்படுத்த மாட்டாது என்பதும் நாம் அறிந்த விடயமே.
4. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அவர்கள் அல்குர்ஆனையும், ஸுன்னாவையும் பாதுகாத்து மக்களுக்கு அவற்றை ஏத்தி வைத்தமையும், அவர்கள் காரணமாகவே உலகின் நாளாபுறமும், மறுமை வரை இஸ்லாம் பரவிக் கொண்டிருப்பதும் ஆகும்.
5. முஸ்லிம்களே! நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அல்லாஹ் அவர்களை மிக அழகாகப் புகழ்ந்து, தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் அவர்களைப் பற்றி உயர்வாகப் பேசியுள்ளதோடு, அவர்களுக்கு பாவமன்னிப்பும் மகத்தான கூலியும் இருப்பதாக வாக்களித்துள்ளமையாகும்.

﴿ مُّحَمَّدٌ رَّسُولُ ٱللَّهِۚ وَٱلَّذِينَ مَعَهُۥٓ أَشِدَّآءُ عَلَى ٱلۡكُفَّارِ رُحَمَآءُ بَيۡنَهُمۡۖ تَرَىٰهُمۡ رُكَّعٗا سُجَّدٗا يَبۡتَغُونَ فَضۡلٗا مِّنَ ٱللَّهِ وَرِضۡوَٰنٗاۖ سِيمَاهُمۡ فِي وُجُوهِهِم مِّنۡ أَثَرِ ٱلسُّجُودِۚ ذَٰلِكَ مَثَلُهُمۡ فِي ٱلتَّوۡرَىٰةِۚ وَمَثَلُهُمۡ فِي ٱلۡإِنجِيلِ كَزَرۡعٍ أَخۡرَجَ شَطۡـَٔهُۥ فَـَٔازَرَهُۥ فَٱسۡتَغۡلَظَ فَٱسۡتَوَىٰ عَلَىٰ سُوقِهِۦ يُعۡجِبُ ٱلزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ ٱلۡكُفَّارَۗ وَعَدَ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ مِنۡهُم مَّغۡفِرَةٗ وَأَجۡرًا عَظِيمَۢا ٢٩ ﴾ [الفتح: ٢٩]

"முஹம்மது, அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றார் அவருடன் இருப்பவர்கள், நிராகரிப்பாளர்கள் மீது கண்டிப்பானவர்கள் தங்களுக்கிடையே இரக்கமிக்கவர்கள் ருகூஉ செய்பவர்களாகவும், ஸுஜூது செய்பவர்களாகவும்,

அல்லாஹ்விடமிருந்து (அவன்) அருளையும் (அவனுடைய) திருப்பொருத்தத்தையும் விரும்பி வேண்டுபவர்களாகவும் அவர்களை நீர் காண்பீர் அவர்களுடைய அடையாளமாவது, அவர்களுடைய முகங்களில் (நெற்றியில்) ஸுஜூதுடைய அடையாளமிருக்கும் இதுவே, தவ்ராத்திலுள்ள அவர்களின் உதாரணமாகும், இன்ஜீலிலுள்ள அவர்களுக்குரிய உதாரணமாவது: ஒரு பயிரைப் போன்றது. அது தன் முளையைக் கிளப்பி(ய பின்) அதை பலப்படுத்துகிறது. பின்னர், அது பருத்துக் கனமாகி, பிறகு விவசாயிகளை மகிழ்வடையச் செய்யும் விதத்தில், அது தன் அடித்தண்டின் மீது நிமிர்ந்து நிற்கிறது. இவற்றைக்கொண்டு நிராகரிப்பவர்களை அவன் கோபமூட்டுகிறான் ஆனால், அவர்களில் எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்தார்களோ அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் வாக்களித்திருக்கின்றான்." (ஸூரா அல்பத்ஹ் : 29)

இந்த வசனத்தை விளக்கும்போது குர்துபி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் : 'இது அல்லாஹ் நபித்தோழர்களுக்குக் கூறியுள்ள ஓர் உதாரணமாகும். அதாவது அவர்கள், சொற்பமானவர்களாக இருந்து, பிறகு பல்கிப் பெருகுவார்கள். நபியவர்கள் தமது மார்க்கத்தை நோக்கிய அழைப்பை ஆரம்பித்தபோது, அது பலவீனமாக இருந்தது. பின்னர் ஒருவர் பின் ஒருவராக ஏற்றுக் கொள்ள, அது பலம் பெற்றது. இது, விதைத்தவுடன் பலவீனமாக இருக்கும் பயிரைப் போல. காலம் செல்லச் செல்ல, அதன் தண்டுகளும், கிளைகளும் கனமடைந்து செல்கின்றன. இது மிகச்சரியான உதாரணமாகவும், தெளிவான விளக்கமாகவும் உள்ளது.'

6. அல்லாஹ்வுடைய அடியார்களே! நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அல்லாஹ் அவர்களை இறையச்சத்திற்காக வாக்கியத்தில் நிலைபெறச் செய்தமையாகும். மேலும், ஏனையவர்களை விட அவர்களே அதற்குத் தகுதியானவர்களாகவும், அதற்குரியவர்களாகவும் இருந்துள்ளார்கள். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَأَلْزَمَهُمْ كَلِمَةَ ٱلتَّقْوَىٰ وَكَانُوٓا۟ أَحَقَّ بِهَا وَأَهْلَهَا ﴾ [الفتح: ٢٦]

"(இறை) அச்சத்திற்கான வாக்கியத்தின் மீது அவர்களை அவன் நிலைபெறச் செய்தான். அவர்களே அதற்கு மிகவும் தகுதியுடையவர்களாகவும் அதற்குரியவர்களாகவும் இருந்தார்கள்." (ஸூரா அல் பத்ஹ் : 26)

அல்லாஹ் இங்கு, இறையச்சத்திற்காக வாக்கியமாகிய, ‘லா இலாஹ இல்லல்லாஹ்’ என்பதில் நிலைபெறச் செய்ததாகக் கூறுகின்றான். அதாவது, அவன் அதன் கடமைகளையும் அவற்றைச் செயல்படுத்துவதையும் அவர்களுக்குக் கட்டாயப்படுத்தியதும் அவர்கள் அதனைக் கடைப்பிடித்து நிறைவேற்றிக் கொண்டனர். பின்பு, அவர்கள்தான் ஏனையோரை விட அதற்குத் தகுதியானவர்கள் என்றும், அவர்கள் அதற்கே உரியவர்கள் என்றும் கூறுகின்றான். அதாவது அவர்களது உள்ளத்தில் உள்ள நன்மைகளை அல்லாஹ் அறிந்துள்ளமையினால், அவர்கள், தக்வா உடையவர்கள் என்று வர்ணிக்கப்படுவதற்கு தம்மைத் தகுதியாக்கிக் கொண்டு விட்டார்கள்.

7. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், மனிதர்கள், நபியவர்களும், நபித்தோழர்களும் ஈமான் கொண்டுள்ளது போன்று ஈமான் கொண்டு விட்டால், அவர்கள் நேர்வழி பெற்றுவிடுவார்கள் என்று அல்லாஹ் அறிவித்துள்ளையாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ فَإِنْ ءَامَنُوا۟ بِمِثْلِ مَآ ءَامَنتُم بِهِۦ فَقَدِ ٱهْتَدَوا۟ ﴾ [البقرة: ١٣٧]

“ஆகவே, நீங்கள் நம்பிக்கை கொண்டதைப் போல் அவர்களும் நம்பிக்கை கொண்டால், நிச்சயமாக அவர்கள் நேர்வழியைப் பெற்று விடுவார்கள்” (ஸூரா அல்பகரா : 137)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “நிச்சயமாக பனு இஸ்ரவேலர்கள் 72 பிரிவுகளாகப் பிரிந்தார்கள். என்னுடைய சமுதாயம் 73 பிரிவுகளாகப் பிரியும். அவ்வனைத்துமே நரகத்திற்கே செல்லும். ஒரு பிரிவைத் தவிர” அப்போது நபித்தோழர்கள், ‘அப்பிரிவு யார்?’ எனக் கேட்க, “நானும், எனது நபித்தோழர்களும் இருக்கும் வழிமுறை” என்று கூறினார்கள்.[127]

இந்த ஹதீஸில் நபியவர்கள், தங்களது சமுதாயம் பல கூட்டங்களாகப் பிரியும் என்று கூறுகின்றார்கள். அவற்றை ‘மில்லாக்கள்’ (பிரிவுகள்) என்று அடையாளப்படுத்துகின்றார்கள். அவற்றின் எண்ணிக்கை 73 ஆகும். அவற்றில், அகீதாவிலும் சரீஆவிலும் நபியவர்களதும், அவர்களது கண்ணியமான தோழர்களதும் வழிமுறையில் செல்லும் பிரிவினரைத் தவிர வேறு யாரும் தப்பிக்கமாட்டார்கள் என்றும் கூறுகின்றார்கள். - அல்லாஹ் எங்களையும் அவர்களில் ஆக்கிவைப்பானாக- இது நபித்தோழர்கள் சரியான நேர்வழியில் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

[127] திர்மிதி : 2832

8. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அவர்கள் தான் உண்மையான விசுவாசிகள் என அல்லாஹ்வே சாட்சியம் அளித்துள்ளமையாகும். அல்லாஹ்வை விட வேறு சாட்சியாளர்கள் தேவையா? அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَٱلَّذِينَ ءَامَنُواْ وَهَاجَرُواْ وَجَٰهَدُواْ فِي سَبِيلِ ٱللَّهِ وَٱلَّذِينَ ءَاوَواْ وَّنَصَرُوٓاْ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلْمُؤْمِنُونَ حَقًّاۚ لَّهُم مَّغْفِرَةٌ وَرِزْقٌ كَرِيمٌ ۝٧٤ ﴾ [الأنفال: ٧٤]

“எவர்கள் நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து, அல்லாஹ்வின் பாதையில் போர்புரிகின்றார்களோ அ(த்தகைய)வர்களும், எவர்கள் அ(த்தகைய)வர்களுக்குப் புகலிடம் கொடுத்து, உதவி செய்கின்றார்களோ அவர்களும்தான் உண்மையான நம்பிக்கையாளர்கள் ஆவார்கள் அவர்களுக்கு மன்னிப்பும், கண்ணியமான உணவும் உண்டு.” (ஸூரா அல்அன்பால் : 74)

9. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அல்லாஹ் அல்குர்ஆனில் இரு இடங்களில், தான் அவர்களைப் பொருந்திக் கொண்டு விட்டதாக கூறியுள்ளமையாகும்.

﴿ وَٱلسَّٰبِقُونَ ٱلْأَوَّلُونَ مِنَ ٱلْمُهَٰجِرِينَ وَٱلْأَنصَارِ وَٱلَّذِينَ ٱتَّبَعُوهُم بِإِحْسَٰنٍ رَّضِيَ ٱللَّهُ عَنْهُمْ وَرَضُواْ عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّٰتٍ تَجْرِي تَحْتَهَا ٱلْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَآ أَبَدًاۚ ذَٰلِكَ ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ۝١٠٠ ﴾ [التوبة: ١٠٠]

“இன்னும், முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும், முதலாவதாக (நம்பிக்கை கொள்வதில்) முந்திக் கொண்டவர்களும், அவர்களை நற்செயலில் பின்தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே - அவர்களை, அல்லாஹ் பொருந்திக்கொண்டான் அவர்களும் அவனைப் பொருந்திக்கொண்டனர் அன்றியும், அவர்களுக்காக சுவனபதிகளைச் சித்தப்படுத்தியிருக்கின்றான் அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் அவர்கள் அதில் என்றென்றும் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள் இதுவே, மகத்தான வெற்றியாகும்.” (ஸூரா அத்தவ்பா : 100)

﴿ ۞ لَّقَدۡ رَضِيَ ٱللَّهُ عَنِ ٱلۡمُؤۡمِنِينَ إِذۡ يُبَايِعُونَكَ تَحۡتَ ٱلشَّجَرَةِ فَعَلِمَ مَا فِي قُلُوبِهِمۡ فَأَنزَلَ ٱلسَّكِينَةَ عَلَيۡهِمۡ وَأَثَٰبَهُمۡ فَتۡحٗا قَرِيبٗا ١٨ ﴾ [الفتح: ١٨]

"நம்பிக்கையாளர்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் வாக்குறுதி செய்தபோது, மெய்யாகவே அல்லாஹ் அவர்களைப் பொருந்தி (ஏற்று)க் கொண்டான் அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அவன் அறிந்து, அவர்கள் மீது (சாந்தியையும்) அமைதியை(யும்) இறக்கி அவர்களுக்கு அண்மையிலான வெற்றியையும் அளித்தான்." (ஸூரா அல்பத்ஹ் : 18)

10. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், இச்சமுதாயத்திலேயே அதன் மார்க்கத்தை நன்கு புரிந்தவர்களாக அவர்கள் இருப்பதும், அவர்கள் ஏகோபித்த விடயங்களில் வேறு யாருக்கும் மாற்றுக் கருத்து எடுக்க முடியாமல் இருப்பது ஆகும். ஏனெனில், அவர்கள் நபியவர்களது கண் முன்னால் வளர்ந்தவர்கள். அல்குர்ஆன் இறங்கியதை நேரடியாகக் கண்டவர்கள். அவர்களில் முன்னுரிமைக்குரிய நான்கு பேராகிய, நேர்வழி நடந்த கலீபாக்களுக்கும், பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் உண்டு எனவும், அவர்களுக்குப் பின் வருபவர்கள் அதனைப் பின்பற்ற வேண்டும் எனவும் நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுமாறும், உறுப்புகள் வெட்டப்பட்ட ஒரு அபிசீனிய அடிமைதான் ஆட்சிக்கு வந்தாலும், செவிதாழ்த்திக் கட்டுப்படுமாறும் நான் உங்களுக்கு உபதேசிக்கின்றேன். உங்களில் யார் நீண்ட காலம் வாழ்கின்றாரோ, அவர் பல கருத்துவேறுபாடுகளைக் காண்பார். அப்போது, எனது வழிமுறையையும், நேர்வழி காட்டப்பட்ட, நல்வழி நடந்த கலீபாக்களின் வழிமுறையையும் பின்பற்றிக் கொள்ளுங்கள். அவற்றை கடைவாய்ப் பற்களால் கடித்து, இறுகப்பற்றிக் கொள்ளுங்கள். புதிதாக உருவாக்கப்படும் விடயங்களை நான் உங்களுக்கு எச்சரிக்கின்றேன். புதிதாக உருவாக்கப்படும் அனைத்தும் பித்அத் ஆகும். எல்லா பித்அத்தும் வழிகேடாகும்."[128]

11. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அல்லாஹ் தனது நபிக்கு அவர்களிடம் ஆலோசனை கேட்குமாறு ஏவியுள்ளமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

---

[128] அபூ தாவூத் : 4607, திர்மிதி : 2676, இப்னு மாஜஹ் : 42

﴿ وَشَاوِرْهُمْ فِي ٱلْأَمْرِ ۖ فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ يُحِبُّ ٱلْمُتَوَكِّلِينَ ﴿١٥٩﴾ ﴾ [آل عمران: ١٥٩]

"மேலும், சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்வீராக! பின்னர், (அவை பற்றி) நீர் உறுதியான முடிவு செய்துவிட்டால் அல்லாஹ்வையே சார்ந்திருப்பீராக!" (ஸூரா ஆலு இம்ரான் : 159)

12. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்குமாறும், தமது உள்ளங்களில் அவர்களைப் பற்றிப் குரோதங்களை வைத்துக்கொள்ள வேண்டாம் என்றும், அவர்களுக்கு பின்னால் வருபவர்களுக்கு அல்லாஹ் ஏவியுள்ளமையாகும்.

﴿ وَٱلَّذِينَ جَآءُو مِنۢ بَعْدِهِمْ يَقُولُونَ رَبَّنَا ٱغْفِرْ لَنَا وَلِإِخْوَٰنِنَا ٱلَّذِينَ سَبَقُونَا بِٱلْإِيمَٰنِ وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِّلَّذِينَ ءَامَنُوا۟ رَبَّنَآ إِنَّكَ رَءُوفٌ رَّحِيمٌ ﴿١٠﴾ ﴾ [الحشر: ١٠]

"அவர்களுக்குப் பின் குடியேறியவர்களுக்கும் (இதில் பங்குண்டு) அவர்கள், "எங்கள் இறைவனே! எங்களுக்கும், நம்பிக்கை கொள்வதில் எங்களுக்கு முந்தியவர்களான எங்கள் சகோதரர்களுக்கும் மன்னிப்பு அருள்வாயாக! அன்றியும், நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய இதயங்களில் வெறுப்பை ஆக்காதிருப்பாயாக! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க இரக்கமுடையவன் கிருபை மிக்கவன்" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுவர்." (ஸூரா அல்ஹஷ்ர் : 10)

13. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டை, 'சிறந்த நூற்றாண்டு' என நபியவர்கள் குறிப்பாகக் கூறியுள்ளமையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மனிதர்களில் சிறந்தவர்கள், என்னுடைய நூற்றாண்டில் உள்ளவர்களாகும். பின்னர் அதற்கு அடுத்து வருபவர்கள், பின்னர் அதற்கும் அடுத்து வருபவர்களாகும்" [129] முஸ்லிமுடைய அறிவிப்பில், "எனது உம்மத்தில் சிறந்தவர்கள், நான் யாரிடம் நபியாக அனுப்பப்பட்டேனோ அவர்களது நூற்றாண்டாகும்" என்று கூறினார்கள்.

[129] புகாரி : 2652, முஸ்லிம் : 2533

14. நபித்தோழர்களுடைய மகத்தான சிறப்பிற்கான இன்னுமோர் ஆதாரம், அவர்களது கூலி, பின்னர் வருவோரது கூலிகளை விடப் பன்மடங்காகும் என நபியவர்கள் அறிவித்துள்ளமையாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுத் மலையளவு தங்கத்தைச் செலவு செய்தாலும் (என் தோழர்களான) அவர்கள் (இறை வழியில்) செலவு செய்த இரு கைக்குவியல், அல்லது அதில் பாதியளவைக்கூட (அவரது) அந்தத் தர்மம் எட்ட முடியாது"[130]

அதாவது நபித்தோழர்களுடைய தர்மம் இரு கைக்குவியல் அளவாக இருந்தாலும், அதற்குப் பின்னர் வருபவர்கள் உஹுது மலை அளவு தர்மம் செய்வதை விட மகத்தான கூலி உடையதாக இருக்கும்.

இவ்விரு தர்மங்களுக்கும் மத்தியில் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதற்கான காரணம், நபித்தோழர்களின் தர்மத்தில் உள்ள, மேலதிகமான உளத்தூய்மையும், உண்மையான எண்ணமுமாகும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபித்தோழர்கள், அந்தஸ்துக்களிலும், சிறப்புக்களிலும் தமக்கிடையில் வித்தியாசப்பட்டவர்கள். இந்த உம்மத்தில் அதன் நபிக்குப் பின்னரும் மிகச் சிறந்தவர் அபூபக்கர் (ரலி) என்றும், பின்னர் உமர் (ரலி)

[130] புகாரி : 3673, முஸ்லிம் : 2541

என்றும், பின்னர் உஸ்மான் (ரலி) என்றும், பின்னர் அலி (ரலி) என்றும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் ஈமான்கொள்வார்கள். மேலும், அன்ஸாரிகளை விட முஹாஜிர்கள் முதன்மைப்படுத்தப்படுவார்கள். ஏனெனில், முஹாஜிர்களே முதலில் இஸ்லாத்தை ஏற்றவர்கள். பின்பு அன்ஸாரிகள் வந்து, நபி (ஸல்) அவர்களுக்கும் முஹாஜிர்களான நபித்தோழர்களுக்கும் புகழிடம் கொடுத்து உதவினார்கள். மேலும் மக்கா வெற்றிக்கு பின்னர் யுத்தம் செய்தவர்களையும் தர்மம் கொடுத்தவர்களையும் விட, அதற்கு முன்னால் யுத்தம் செய்தவர்களையும் தர்மம் செய்தவர்களையும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் சிறப்பாகக் கருதுவார்கள். மேலும் அல்லாஹ் பத்ரில் கலந்து கொண்டவர்களைப் பார்த்து, - அவர்கள் முன்னூற்றிப் பத்தை அண்மித்த தொகையினராக இருந்தனர் - “நீங்கள் நாடியதை செய்து கொள்ளுங்கள்! நான் உங்களை மன்னித்து விட்டேன்” என்று கூறியதாகவும், ஹுதைபிய்யாவில், ‘ஷஜரதுர் ரிழ்வான்’ மரத்தின் கீழ் உறுதிமொழித்து அளித்தவர்கள் - 1400க்கும் அதிகமானோர் - யாரும் நரகம் நுழையமாட்டார்கள் என்றும் ஈமான் கொள்வதோடு, நபியவர்களால் சுவர்க்கத்தைக்கும் நன்மாராயம் கூறப்பட்ட குறிப்பான 10 நபித்தோழர்கள் உட்பட, அவர்கள் அல்லாது நன்மாராயம் கூறப்பட்ட அனைவருக்கும் சுவனம் இருப்பதாகவும் சாட்சியம் அளிப்பார்கள்.

இந்த சமுதாயம் நபித்தோழர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி ஒரு சுருக்கம்

1. அவர்களை நேசிப்பது மற்றும், அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்ளவேண்டும் எனப் பிரார்த்திப்பது. (ரழியல்லாஹு அன்ஹும் என்று கூறுவது)

2. மனிதர்களில், நபியவர்களுக்குப் பின்னர் அவர்கள் தான் சிறந்தவர்கள் என ஈமான் கொள்வது.

3, அவர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சனைகள் பற்றிப் பேசாமல் இருப்பது.

4. ராபிழாக்கள் மற்றும் அவர்களை அடியொட்டி நடக்கும் ஏனைய பித்அத்வாதிகள், அவர்களைப் பற்றி கூறுவதை மறுத்து, அவர்களுக்காகப் பேசுவது.

புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத்

துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : "வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது."[131]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

[131] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

நபியவர்களின் மனைவியரைக் கண்ணியப்படுத்துவது, அஹ்லுஸ் ஸூன்னா வல்ஜமாஆவின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மனைவியர்களை கண்ணியப்படுத்துவது அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும். ஏனெனில், அல்லாஹ் அவர்களை உயர்ந்த ஓர் அந்தஸ்தில் வைத்துள்ளான். அவர்களை அல்லாஹ், அனைத்து முஃமின்களுக்குமான தாயார்களின் அந்தஸ்தில் வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ ٱلنَّبِيُّ أَوۡلَىٰ بِٱلۡمُؤۡمِنِينَ مِنۡ أَنفُسِهِمۡۖ وَأَزۡوَٰجُهُۥٓ أُمَّهَٰتُهُمۡۗ ﴾ [الأحزاب: ٦]

“இந்த நபி நம்பிக்கையாளர்களுக்கு அவர்களுடைய உயிர்களைவிட மேலானவராக இருக்கின்றார் இன்னும், அவருடைய மனைவியர் அவர்களுடைய தாய்மார்களாக இருக்கின்றனர்” (ஸூரா அல்அஹ்ஸாப் : 06)

இந்த சிறப்பும், கண்ணியமும், மகத்துவமும் காரணமாக, ஒவ்வொரு முஸ்லிமும் அவர்களுக்குள்ள இந்த கடமைகளைப் பேணி மார்க்கம் எதிர்பார்க்கும் விதத்தில் அவற்றை நிறைவேற்றுவது கட்டாயமாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! நபியவர்களது மனைவியரைக் கண்ணியப்படுத்த வேண்டும் என்பதற்கான இன்னும் ஒரு காரணி, நபியவர்கள் தமது வீட்டில் பேணிய நடைமுறைகளைப் பாதுகாத்து இச்சமுதாயத்திற்கு அவர்கள் அவற்றை அறிவித்துக் கொடுத்தமையாகும். அதிலும் குறிப்பாக, ஆயிஷா (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் நிறைய ஹதீஸ்களை அறிவித்த ஒரு பெண்மணியாக உள்ளார்கள்.

கதீஜா (ரலி) அவர்கள் தாம், நபியவர்களின் முதலாவது மனைவியாக இருந்துள்ளார்கள். நபியவர்கள் இருக்கும் கொள்கைதான் சத்தியமானது என்றும், அல்லாஹ் அவர்களை ஒருபோதும் கைவிடமாட்டான் என்றும் கதீஜா அவர்கள் தான் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதலளித்து, அமைதிப்படுத்தினார்கள். அது அனைவரும் அறிந்த சம்பவமே. அதாவது, ஜிப்ரீல் (அலை) அவர்கள் முதல் தடவையாக வஹியைக் கொண்டு வந்த போது, நபி (ஸல்) அவர்கள் பயந்த நிலையில் கதீஜாவிடம் சென்றார்கள். அப்போது அவர்கள் நபியவர்களை அமைதிப்படுத்திவிட்டு, தமது சிறிய தந்தையின் மகனாகிய “வரகா இப்னு நவ்பல்” இடம் நபியவர்களை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் ஜாஹிலியாக் காலத்தில் கிறிஸ்தவராக மதம் மாறி இருந்தார். அவர் நபி (ஸல்) அவர்களை மேலும் அமைதிப்படுத்தி, அவருக்கு அல்லாஹ்விடமிருந்து வஹிதான் இறங்கியுள்ளது எனத் தெளிவுபடுத்தினார்கள்.[132]

இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: *அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று, விசுவாசிகளின் தாய்மார்கள் ஆகிய, நபி அவர்களின் மனைவியரை நேசிப்பதாகும். அவர்கள் மறுமையிலும் நபியவர்களின் மனைவியாக இருப்பார்கள் என்றும் அவர்கள் நம்புவார்கள். குறிப்பாக, நபி அவர்களின் பெரும்பாலான பிள்ளைகளுக்குத் தாயாக இருந்த,*

[132] இச்சம்பவத்தை புகாரியிலும் (3), முஸ்லிமிலும் (160) பார்க்கலாம்.

நபி அவர்களை முதலில் ஏற்றுக்கொண்ட, அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து அவர்களை உயர்ந்த அந்தஸ்தில் மதித்த, கதீஜா (ரலி) அவர்கள் மிக முக்கியமானவர்கள். அபூபக்கர் அஸ்ஸித்தீக் (ரஹ்) அவர்களின் மகளாகிய, ஸித்தீக்கா ஆயிஷா (ரலி) அவர்களும் அவ்வாறுதான். அவர்களைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"(உலகின் மற்ற) பெண்களைவிட ஆயிஷாவுக்கு இருக்கும் சிறப்பு, (மற்ற) எல்லா உணவுகளைக் காட்டிலும் "ஸரீத்" என்னும் உணவுக்கு இருக்கும் சிறப்பைப் போன்றதாகும்."[133]

அல்லாஹ்வின் அடியார்களே! விசுவாசிகளின் தாய்மார்களுக்குரிய கடமைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தும் இன்னும் ஓர் ஆதாரம், தொழுகையின் அத்தஹிய்யாத்தில் அவர்கள் மீது குறிப்பாக ஸலவாத்து கூறுமாறு ஏவப்பட்டுள்ளமையாகும். அவர்கள் மீது ஸலவாத் கூறுதல் என்பதன் அர்த்தம் அல்லாஹ் அவர்களை புகழ வேண்டும் எனவும் அவர்களது அந்தஸ்தை உயர்த்த வேண்டும் எனவும் துஆக் கேட்பதாகும்.

அபூஹுமைத் அஸ்ஸாஇதீ(ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! தங்கள்மீது நாங்கள் எப்படி 'ஸலவாத்' சொல்ல வேண்டும்?" என்று கேட்டோம். நபி (ஸல்) அவர்கள்,

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَأَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَأَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ، كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

"அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரிய்யத்திஹி கமா ஸல்லைத்த அலா ஆலி இப்ராஹீம, வ பாரிக் அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரிய்யத்திஹி கமா பாரக்த்த அலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்" என்று கூறுங்கள் என்றார்கள்.[134]

(பொருள்: இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்கள் குடும்பத்தாருக்கு நீ அருள் புரிந்ததைப் போன்று முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய துணைவியருக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் அருள் புரிந்திடுவாயாக! மேலும், இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ வளம் வழங்கியதைப் போன்று முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய

[133] புகாரி : 3769, முஸ்லிம் : 2446 அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள்.

[134] புகாரி : 6360, முஸ்லிம் : 407

துணைவியருக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் நீ வளம் வழங்கிடுவாயாக! நிச்சயமாக நீயே புகழ் மிக்கோனும் கண்ணியமிக்கோனும் ஆவாய்.)

அல்லாஹ்வின் அடியார்களே! உம்மஹாத்துல் முஃமின்களுக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளில் ஒன்று, அவர்களுக்காக இஸ்திஃபார் செய்வதும், அவர்களின் சிறப்புக்கள் மற்றும் புகழ்களைக் கூறி, அவர்களைப் புகழ்வதுமாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்களிடம் அவர்களுக்கு அதிக அந்தஸ்த்து இருக்கின்றது. மேலும் இந்த உம்மத்தின் ஏனைய பெண்களை விட, இவர்களுக்கு அதிகமான சிறப்பு உண்டு.

விசுவாசிகளே! “ரிஜ்ஸ்” இன்னும் அசுத்தத்தை விட்டும் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார் சுத்தமாக இருப்பதாக அல்குர்ஆனில் அல்லாஹ் குறிப்பாகக் கூறியுள்ளான்.

﴿ إِنَّمَا يُرِيدُ ٱللَّهُ لِيُذۡهِبَ عَنكُمُ ٱلرِّجۡسَ أَهۡلَ ٱلۡبَيۡتِ وَيُطَهِّرَكُمۡ تَطۡهِيرٗا ٣٣ ﴾ [الأحزاب: ٣٣]

(நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தத்தை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான் (ஸூரா அஹ்ஸாப் : 33)

இப்னு ஜரீர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: “முஹம்மது (ஸல்) அவர்களின் மனைவிகளே! அல்லாஹ் உங்களை விட்டும் தீமைகளையும் பாவங்களையும் நீக்கி, அல்லாஹ்வுக்கு மாறுசெய்பவர்களிடம் உள்ள அழுக்குகளை விட்டும் உங்களை சுத்தப்படுத்தவே அவன் விரும்புகின்றான்.”

எனவே நபி (ஸல்) அவர்களின் மனைவிமார் பற்றி மோசமாகப் பேசுவதும், அவர்களை பொய்யாக சந்தேகம் கொள்வதும் நபி (ஸல்) அவர்களை நோவினைப்படுத்தும் பாரதூரமான செயற்களாகும். நபி (ஸல்) அவர்களை நோவினைப்படுத்துவதை அல்லாஹ் தடுத்துள்ளான்.

﴿ إِنَّ ٱلَّذِينَ يُؤۡذُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥ لَعَنَهُمُ ٱللَّهُ فِي ٱلدُّنۡيَا وَٱلۡأٓخِرَةِ وَأَعَدَّ لَهُمۡ عَذَابٗا مُّهِينٗا ٥٧ ﴾ [الأحزاب: ٥٧]

“எவர்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் நோவினை செய்கிறார்களோ, அவர்களை நிச்சயமாக அல்லாஹ் இம்மையிலும்

மறுமையிலும் சபிக்கின்றான் மேலும், அவர்களுக்கு இழிவுதரும் வேதனையைச் சித்தப்படுத்தி இருக்கின்றான்.” (ஸூரா அல்அஹ்ஸாப் : 57)

முஸ்லிம்களே! நபி (ஸல்) அவர்களது மனைவியரை கண்ணியப்படுத்துவதற்கு எதிராக ராபிழாக்களின் (ஷீஆக்களின்) கொள்கை உள்ளது. அவர்கள் நயவஞ்சகர்களைப் பின்பற்றி ஆயிஷா (ரழி) அவர்கள் மீது விபச்சாரக் குற்றம் சுமத்துகின்றார்கள். இந்த பொய்யான நம்பிக்கையை மார்க்கமாகப் பார்க்கின்றார்கள் இது நிராகரிப்பாகும். - அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் - ஏனெனில் ஆயிஷா (ரலி) அவர்களை விபச்சாரத்தைக் கொண்டு சந்தேகம் கொள்பவன், அல்குர்ஆனின் சூரா அந்நூரின் ஆரம்பத்தில், அவர்கள் தூய்மையானவர்கள் என்று வந்துள்ளதை மறுக்கின்றான். இந்த சூராவில் அல்லா/ஹத்தஆலா, அவ்வாறு அவர்களை விபச்சாரத்தைக் கொண்டு சந்தேகிப்பதை இட்டுக்கட்டப்பட்ட பொய் என்று கூறியுள்ளான்.

﴿ إِنَّ ٱلَّذِينَ جَآءُو بِٱلۡإِفۡكِ عُصۡبَةٞ مِّنكُمۡۚ لَا تَحۡسَبُوهُ شَرّٗا لَّكُمۖ بَلۡ هُوَ خَيۡرٞ لَّكُمۡۚ لِكُلِّ ٱمۡرِيٕٖ مِّنۡهُم
مَّا ٱكۡتَسَبَ مِنَ ٱلۡإِثۡمِۚ وَٱلَّذِي تَوَلَّىٰ كِبۡرَهُۥ مِنۡهُمۡ لَهُۥ عَذَابٌ عَظِيمٞ ١١ لَّوۡلَآ إِذۡ سَمِعۡتُمُوهُ ظَنَّ ٱلۡمُؤۡمِنُونَ
وَٱلۡمُؤۡمِنَٰتُ بِأَنفُسِهِمۡ خَيۡرٗا وَقَالُواْ هَٰذَآ إِفۡكٞ مُّبِينٞ ١٢ لَّوۡلَا جَآءُو عَلَيۡهِ بِأَرۡبَعَةِ شُهَدَآءَۚ فَإِذۡ لَمۡ
يَأۡتُواْ بِٱلشُّهَدَآءِ فَأُوْلَٰٓئِكَ عِندَ ٱللَّهِ هُمُ ٱلۡكَٰذِبُونَ ١٣ وَلَوۡلَا فَضۡلُ ٱللَّهِ عَلَيۡكُمۡ وَرَحۡمَتُهُۥ فِي ٱلدُّنۡيَا
وَٱلۡأٓخِرَةِ لَمَسَّكُمۡ فِي مَآ أَفَضۡتُمۡ فِيهِ عَذَابٌ عَظِيمٌ ١٤ إِذۡ تَلَقَّوۡنَهُۥ بِأَلۡسِنَتِكُمۡ وَتَقُولُونَ بِأَفۡوَاهِكُم مَّا
لَيۡسَ لَكُم بِهِۦ عِلۡمٞ وَتَحۡسَبُونَهُۥ هَيِّنٗا وَهُوَ عِندَ ٱللَّهِ عَظِيمٞ ١٥ وَلَوۡلَآ إِذۡ سَمِعۡتُمُوهُ قُلۡتُم مَّا يَكُونُ
لَنَآ أَن نَّتَكَلَّمَ بِهَٰذَا سُبۡحَٰنَكَ هَٰذَا بُهۡتَٰنٌ عَظِيمٞ ١٦ يَعِظُكُمُ ٱللَّهُ أَن تَعُودُواْ لِمِثۡلِهِۦٓ أَبَدًا إِن كُنتُم
مُّؤۡمِنِينَ ١٧ ﴾ [النور: ١١-١٧]

நிச்சயமாக (அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் பற்றிப் பொய்யாக) அவதூறு கொண்டுவந்தார்களே அவர்கள் உங்களில் ஒரு கூட்டத்தினரே! அது உங்களுக்குத் தீங்கு என்று நீங்கள் எண்ண வேண்டாம் மாறாக, அது உங்களுக்கு நன்மையாகும் (பழி சுமத்திய) அவர்களிலிருந்து ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் சம்பாதித்த பாவத்திலிருந்து (தண்டனை) இருக்கிறது.

மேலும், அ(ப்பழி சுமத்திய)வர்களில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவனுக்குக் கடினமான வேதனையுண்டு. (11) இதனை நீங்கள் கேள்விப்பட்டபொழுது நம்பிக்கையாளர்களான ஆண்களும், நம்பிக்கையாளர்களான பெண்களும் தங்களைப் (போன்ற நம்பிக்கையாளர்களைப் பற்றி) நல்லதையே எண்ணி, "இது பகிரங்கமான அவதூறு" என்று கூறியிருக்கவேண்டாமா? (12) அ(ப்பழி சுமத்திய)வர்கள் அதற்கு நான்கு சாட்சிகளைக் கொண்டுவர வேண்டாமா? எனவே, அவர்கள் சாட்சிகளைக் கொண்டுவரவில்லையெனில், அவர்கள்தாம் அல்லாஹ்விடத்தில் பொய்யர்களாக இருக்கிறார்கள். (13) இன்னும், உங்கள் மீது இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் அருளும் அவனுடைய கிருபையும் இல்லாதிருந்தால், நீங்கள் எதில் மூழ்கியிருந்தீர்களோ அந்த ஒன்றில் கடினமான வேதனை நிச்சயமாக உங்களைத் தீண்டியிருக்கும். (14) இதனை நீங்கள் (ஒருவரிடமிருந்து ஒருவராக) உங்கள் நாவுகளால் எடுத்து(ச் சொல்லி)க் கொண்டு, உங்களுக்கு (திட்டமாக) அறிவில்லாத ஒன்றைப் பற்றி உங்கள் வாய்களால் சொல்(லித் திரி)கின்றீர்கள் இன்னும், இதை நீங்கள் இலேசானதாகவும் எண்ணி விட்டீர்கள் ஆனால், அது அல்லாஹ்விடத்தில் மிகப்பெரிய(பாவமான)தாக இருக்கும். (15) இன்னும், இதை நீங்கள் செவியேற்றபோது "இதைப்பற்றி நாம் பேசுவது நமக்குத் தகுதி) இல்லை (இறைவனே!) நீயே தூயவன் இது பெரும் அவதூறாகும்" என்று நீங்கள் கூறியிருக்கலாகாதா? (16) நீங்கள் (திடமாக) நம்பிக்கையாளர்களாக இருப்பின், நீங்கள் இதுபோன்ற (பழி சுமத்துவ)தின் பால் ஒருபோதும் மீளலாகாது என்று அல்லாஹ் உங்களுக்குப் போதிக்கின்றான். (17) (ஸூரா அந்நூர்)

இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்குப் பின்னரும் யாரெல்லாம் அவர்களுக்கு ஏசுகின்றார்களோ, மேலும், இந்த ஆயத்துக்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ள பின்னரும், யாரெல்லாம் இப்படியான அதே குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றார்களோ, அவர்கள் நிராகரிப்பாளர்களே! ஏனெனில், அவர்கள் அல்குர்ஆனுக்கு முரண்படுகின்றார்கள்.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை நபியவர்களது மனைவியரைக் கண்ணியப்படுத்துவது மற்றும் அதற்கு முரணான அம்சங்கள் தொடர்பான சிறு குறிப்புகள் ஆகும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும்

பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபியவர்களது மனைவிமார் என்போர், நபியவர்கள் திருமணம் முடித்து உறவுகொண்டவர்கள் ஆகும். அவர்கள் பதினோரு பேராகும்.

1. கதீஜா பின்து குவைலித் (ரலி)
2. ஆயிஷா பின்த் அபீ பக்ர் அஸ்ஸித்தீக் (ரலி)
3. ஸவ்தா பின்த் ஸமிஆ (ரலி)
4. ஹப்ஸா பின்து உமர் (ரலி)
5. உம்மு ஹபீபா, ரம்லா பின்து அபீ ஸுப்யான் (ரலி)
6. உம்மு ஸலமா, ஹின்து பின்து அபீ உமய்யா (ரலி)
7. ஸைனப் பின்து ஜஹ்ஷ் (ரலி)
8. ஸைனப் பின்து குஸைமா (ரலி)
9. ஜுவைரிய்யா பின்துல் ஹாரிஸ் (ரலி)
10. ஸபிய்யா பின்து ஹுயைய் (ரலி)
11. மைமூனா பின்துல் ஹாரிஸ் (ரலி)

புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே

தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது."[135]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை,

135 நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

நபியவர்களின் குடும்பத்தைக் கண்ணியப்படுத்துவது நபியவர்களுக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளில் ஒன்றாகும்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபி அவர்களது குடும்பத்தைக் கண்ணியப்படுத்துவதும், அவர்களை அன்பு வைப்பதும், அவர்களை நேசர்களாக எடுத்துக் கொள்வதும், அவர்களது விடயத்தில் நபியவர்கள் கூறிய உபதேசத்தைப் பேணிப் பாதுகாப்பதும் நபியவர்களுக்கு செய்ய வேண்டிய சில கடமைகளாகவும், அஹ்ஸ்ஸுன்ன வல்ஜமாஆவின் சில அடிப்படை கோட்பாடுகளாகவும் உள்ளன.

அல்லாஹ்வின் அடியார்களே! இந்த அடிப்படைக்கான ஆதாரங்கள் பல உள்ளன.

ஸைத் இப்னு அர்கம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்காவுக்கும் மதீனாவுக்கும்

இடையிலுள்ள ”கும்மு” எனும் நீர்நிலையருகே எங்களிடையே நின்று உரையாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்கள் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து, (இறைவனையும் இறுதி நாளையும்) நினைவூட்டி அறிவுரை கூறினார்கள். பிறகு, “இறைவாழ்த்துக்குப்பின்! மக்களே! கவனியுங்கள். நானும் ஒரு மனிதனே. (என் உயிரைக் கைப்பற்றும்) என் இறைவனின் தூதர் வரும் காலம் நெருங்கிவிட்டது. அவரது அழைப்பை நான் ஏற்றுக்கொள்வேன். நான் உங்களிடையே கனமான இரண்டு பொருட்களை விட்டுச்செல்கிறேன். அவற்றில் ஒன்று அல்லாஹ்வின் வேதமாகும். அதில் நல்வழியும் பேரொளியும் உள்ளது. ஆகவே, அல்லாஹ்வின் வேதத்தை ஏற்று அதைப் பலமாக பற்றிக்கொள்ளுங்கள்” என்று கூறி, அல்லாஹ்வின் வேதத்தின்படி வாழுமாறு தூண்டினார்கள் அதில் ஆர்வமும் ஊட்டினார்கள்.

பிறகு, “(மற்றொன்று) என் குடும்பத்தார் ஆவர். என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன்.என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன். என் குடும்பத்தார் விஷயத்தில் (அவர்களுடைய உரிமைகளையும் கண்ணியத்தையும் பேணுமாறு) உங்களுக்கு நான் அல்லாஹ்வின் பெயரால் நினைவூட்டுகிறேன்” என்று (மூன்று முறை) கூறினார்கள்.

அப்போது ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்களிடம் /ஹுஸைன் பின் சப்ரா (ரஹ்) அவர்கள், “ஸைதே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தார் யார்? நபியவர்களின் துணைவியர் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா?” என்று கேட்டார்கள்.

அதற்கு ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள், “நபியவர்களின் துணைவியரும் அவர்களின் குடும்பத்தாரில் அடங்குவர். ஆயினும், நபியவர்களுக்குப்பின் யாருக்குத் தர்மம் கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளதோ அவர்களே அவர்களுடைய குடும்பத்தார் ஆவர்” என்று கூறினார்கள்.[136]

[136] முஸ்லிம் : 2408

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அஹ்லுல் பைத்தின் விடயத்தில் அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்"

நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தின் சிறப்புகள் பற்றிய ஹதீஸ்கள் ஏராளம் உள்ளன. அவை பல்வேறு ஹதீஸ் நூற்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "ஏனையோருக்கு இல்லாத, நபி அவர்களின் குடும்பத்திற்கு மாத்திரம் உள்ள சில உரிமைகள் இந்த உம்மத்துக்கு உண்டு என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஏனைய குறைஷிக் குடும்பங்களுக்கு இல்லாத, அதிக அன்புக்கும் நேசத்துக்கும் அவர்கள் தகுதியானவர்கள். அவ்வாறே குறைஷிகள் அல்லாத ஏனைய கோத்திரங்களை விட, குறைஷிக் கோத்திரம் அதிகமான அன்புக்கும் நேசத்திற்கும் தகுதியானவர்கள். அதேபோன்று அரபிகள் அல்லாத ஏனைய மனிதர்களை விட அரபிகள் அதிக அன்புக்கும் நேசத்திற்கும் தகுதியானவர்கள். பெரும்பாலான அறிஞர்கள் இவ்வாறுதான், அரபிகள் ஏனையேரை விடச் சிறந்தவர்கள் என்றும், குறைஷிகள் ஏனைய அரபிகளை விடச் சிறந்தவர்கள் என்றும், குறைஷிகளில் ஏனையோரை விட, பனூஹாசிம் குடும்பத்தினர் சிறந்தவர்கள் என்றும் கருதுகின்றனர். அஹமத் (ரஹ்) போன்ற பல அறிஞர்களைத் தொட்டும் இககருத்துக் கூறப்பட்டுள்ளது.

பின்பு, மேற்படிச் சிறப்பை உணர்த்தும், வாஸிலா இப்னுல் அஸ்கஃ அவர்களது ஹதீஸைக் கொண்டு வருகின்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதைத் தான் கேட்டதாக, அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

"இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிள்ளைகளில் அல்லாஹ் கினானாவைத் தேர்ந்தெடுத்தான். கினானாவின் பிள்ளைகளில் குறைஷிகளைத் தேர்ந்தெடுத்தான். குறைஷிகளில் பனூ ஹாஷிம் குடும்பத்தை தேர்ந்தெடுத்தான். பனூ ஹாஷிமில் என்னைத் தேர்ந்தெடுத்தான்"[137]

விசுவாசிகளே! நபி அவர்களின் மனைவியரும் - அல்குர்ஆன் கூறியுள்ள பிரகாரம் - அஹ்லுல் பைதில் நுழைவார்கள்.

[137] முஸ்லிம் : 2276

﴿ إِنَّمَا يُرِيدُ ٱللَّهُ لِيُذۡهِبَ عَنكُمُ ٱلرِّجۡسَ أَهۡلَ ٱلۡبَيۡتِ وَيُطَهِّرَكُمۡ تَطۡهِيرٗا ٣٣ ﴾ [الأحزاب: ٣٣]

(நபியின்) வீட்டையுடையவர்களே! உங்களை விட்டும் அசுத்தத்தை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கிவிடவே அல்லாஹ் நாடுகிறான் (ஸூரா அஹ்ஸாப் : 33)

இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இங்கு அஹ்லுல் பைத் குறிப்பிடப்பட்டுள்ளில் நபி (ஸல்) அவர்களின் மனைவியரும் நுழைவர் என்பதை இவ்வசனம் தெளிவாகக் கூறுகின்றது. ஏனெனில் அவர்களே இந்த வசனம் இறங்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள்.

முஸ்லிம்களே! நபி (ஸல்) அவர்களின் குடும்பத்திற்கு ஸகாத் கொடுப்பது ஹராம் ஆகும். அவர்களை மகத்துவப்படுத்தும் விதமாக அதனை அல்லாஹ் அவர்களுக்கு ஹராமாக்கியுள்ளான். ஏனெனில், ஸகாத் என்பது மக்கள் அப்புறப்படுத்தும் அழுக்குகளாகும். நபியவர்கள் கூறினார்கள்: “நிச்சயமாக இந்த ஸக்காத்தை முஹம்மதின் (ஸல்) குடும்பத்திற்குக் கொடுக்க முடியாது. அவை மக்கள் அப்புறப்படுத்தும் அழுக்குகளே”[138]

ஸகாத் தடை செய்யப்பட்டுள்ள நபியவர்களின் குடும்பம் இருதரப்பினராகும் : ஒன்று, பனூ ஹாஷிம் இப்னு அப்தி மனாப். இரண்டாவ, பனூ முத்தலிப் இப்னு அப்தி மனாப்

விசுவாசிகளே! அஹ்லுல் பைத்தை கண்ணியப்படுத்துவதற்கான ஒரு ஆதாரமாக, நபி (ஸல்) அவர்கள் தமது உம்மத்தினருக்கு அத்தஹிய்யாத்தில் இவ்வாறு கூறுமாறு கட்டளையிட்டுள்ளார்கள்:

اللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَأَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ، كَمَا صَلَّيْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَأَزْوَاجِهِ وَذُرِّيَّتِهِ، كَمَا بَارَكْتَ عَلَى آلِ إِبْرَاهِيمَ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரிய்யத்திஹி கமா ஸல்லைத்த அலா ஆலி இப்ராஹீம, வ பாரிக் அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரிய்யத்திஹி கமா பாரக்த்த அலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்” என்று கூறுங்கள் என்றார்கள்.[139]

[138] முஸ்லிம் : 1072

[139] புகாரி : 6360, முஸ்லிம் : 407

(பொருள்: இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்கள் குடும்பத்தாருக்கு நீ அருள் புரிந்ததைப் போன்று முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய துணைவியருக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் அருள் புரிந்திடுவாயாக! மேலும், இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தாருக்கு நீ வளம் வழங்கியதைப் போன்று முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களுடைய துணைவியருக்கும் அவர்களுடைய சந்ததியினருக்கும் நீ வளம் வழங்கிடுவாயாக! நிச்சயமாக நீயே புகழ் மிக்கோனும் கண்ணியமிக்கோனும் ஆவாய்.)

ஐவேளைத் தொழுகைகளிலும் அவர்களுக்காக துஆக் கேட்பதைவிட வேறு என்ன சிறப்பு வேண்டும்?

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! ஸலபுஸ் ஸாலிஹீன்கள் தான் நபி (ஸல்) அவர்களின் அஹ்லுல் பைத்தைக் கண்ணியப்படுத்துவதில் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்துள்ளார்கள். அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: “அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனது குடும்பத்தைச் சேர்ந்த நடப்பதை விட நபி (ஸல்) அவர்களது குடும்பத்தை சேர்ந்து நடப்பது எனக்கு விருப்பமானது”

ராபிழாக்கள், தாம் மாத்திரம் தான் அஹ்லுல் பைத்தை நேசிப்பதாகவும், ஏனையோர் அஹ்லுல் பைதுக்கு அநியாயம் செய்துவிட்டதாகவும் கூறுவது போல் இன்றி, உண்மையில் அஹ்லுஸ் ஸுன்னாக்கள் தான் அஹ்லுல் பைத்தை நேசிக்கவும், நெருக்கம் பாராட்டவும் செய்கின்றார்கள். உண்மை என்னவென்றால், இந்த ராபிழாக்கள் தான் அஹ்லுல் பைதுக்கு யாருமே செய்யாத அளவு அநியாயம் செய்துள்ளார்கள். இவர்கள் அவர்களை ஏமாற்றி

உதவி செய்யாமல் கைவிட்டார்கள். இவர்கள் பரவலாக அஹ்லுல் பைத் மீது பொய்யான செய்திகளை இட்டுக்கட்டியதனாலேயே அஹ்லுல் பைத்தினரின் பல அறிவிப்புகளைத் தட்டவேண்டி ஏற்பட்டது. மேலும் ராபிழாக்கள் அஹ்லுல் பைத்தில் ஒரு குறிப்பிட்ட சிலரையே நேசிக்கின்றனர். ஆனால் ஸுன்னாவைப் பற்றி பிடித்துள்ள அஹ்லுஸ் ஸுன்னாக்கள், எல்லா அஹ்லுல் பைத்களையும் நேசித்து நெருக்கம் பாராட்டுவார்கள். மேலும் ராபிழாக்கள் நேசிக்கும் அஹ்லுல் பைத்களை விட வெறுக்கும் அஹ்லுல் பைத்களே அதிகமாக உள்ளனர்.

புரிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ﴿٥٦﴾ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

நபியவர்கள் கூறினார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்றாகும். அதில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதே தினத்தில் தான் வபாத்தாக்கப்பட்டார்கள். ஸூர் ஊதப்படல், மறுமை ஏற்படல் என்பவையுத் அந்நாளில் தான் உள்ளன. எனவே, அந்நாளில் என்மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்களது ஸலவாத் என்மீது எடுத்துக்காட்டப்படுகின்றது.”[140]

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக! யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய,

[140] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085

மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு

கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா

நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவது அவர்களுக்கு நிறைவேற்றவேண்டிய கடமைகளில் ஒன்றாகும்.

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுதல், அவர்களுக்கு வஸீலாவும் சிறப்பும் கிடைக்கவேண்டுமெனவும், அல்லாஹ் வாக்களித்துள்ள “மகாமுன் மஹ்மூத்” க்கு அவர்களை அனுப்ப வேண்டும் எனவும் பிரார்த்தித்தல் என்பன அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய சில கடமைகளாகும்.

●நபி (ஸல்) அவர்களுக்கு ஸலவாத் கூறுதல் என்பதன் அர்த்தம், அவர்களுக்கு அருளும், கண்ணியமான அந்தஸ்தும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதாகும். ஸலாத் என்பது அரபு மொழியில் “துஆ” வுடைய அர்த்தத்திலும் வரும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ خُذۡ مِنۡ أَمۡوَٰلِهِمۡ صَدَقَةٗ تُطَهِّرُهُمۡ وَتُزَكِّيهِم بِهَا وَصَلِّ عَلَيۡهِمۡۖ إِنَّ صَلَوٰتَكَ سَكَنٞ لَّهُمۡۗ وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ ١٠٣ ﴾ [التوبة: ١٠٣]

(நபியே!) அவர்களுடைய செல்வத்திலிருந்து தர்மத்தை (ஜகாத்தை) எடுத்துக்கொண்டு, அதைக் கொண்டு அவர்களைத் தூய்மையாக்கி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவீராக! இன்னும், அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! நிச்சயமாக உம்முடைய பிரார்த்தனை அவர்களுக்கு நிம்மதி அளிக்கும் அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், அறிபவனாகவும் இருக்கின்றான் (ஸூரா அத்தவ்பா : 103)

அல்லாஹ் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுகின்றான் என்பதன் அர்த்தம், அவர்கள் மீது அருள்புரிந்து, மேலான கூட்டத்தினர் ஆகிய, மலக்குகளிடம் அவர்களைப் புகழ்ந்து பேசுவதாகும்.
மலக்குகள் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலவாத்துக் கூறுதல் என்பதன் அர்த்தம், அவர்களுக்கு அருள் புரியுமாறு பிரார்த்திப்பதும், அவர்களைப் புகழ்வதும் ஆகும்.
சுருக்கமாக, அல்லாஹ் தனது நபிக்கு ஸலவாத் கூறுவது என்பதன் அர்த்தம், அவர்களை கண்ணியப்படுத்தி, சிறப்பித்து, அவர்கள் மீது அன்பு கொண்டு, அவர்களைப் புகழ்வதாகும். மலக்குகளும் மனிதர்களும் ஸலவாத்துக் கூறுவதன் அர்த்தம் என்பது, அல்லாஹ்விடம் அவரைப் புகழுமாறும், அவர்களது சிறப்பை உயர்த்துமாறும், மேலும் அவர்களுக்கு சிறப்பையும் கண்ணியத்தையும் அதிகப்படுத்துமாறும் கேட்பதாகும்.
விசுவாசிகளே! நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறுவதென்பது, அவர்களை எல்லா ஆபத்துகளில் இருந்தும் பாதுகாக்குமாறு கேட்பதாகும். அதனுள், அவர்களது மானம், நற்பெயர் என்பவற்றில் யாரும் குறை கூறாது பாதுகாக்குமாறு கேட்பதும் உள்ளடங்கும்.
இதன்படி நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவது எல்லா நலவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾ [الأحزاب: ٥٦]

நிச்சயமாக இந்த நபியின் மீது அல்லாஹ் அருள்புரிகிறான் வானவர்களும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர் நம்பிக்கை கொண்டோரே! நீங்களும் அவர் மீது ஸலவாத்துச் சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள் (ஸூரா அல் அஹ்ஸாப் : 56)

என்ற வசனத்தை விளக்கும் போது இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த ஆயத்தின் நோக்கம் என்னவென்றால், அல்லாஹு தஆலா தன்னுடைய அடியாராகிய நபிக்கு தன்னிடத்திலும், மேலான கூட்டத்தாரிடத்திலும் உள்ள சிறப்பை அடியார்களுக்கு விளக்கும் விதமாக, நெருக்கத்தை உடைய மலக்குமார்கள் இடத்தில் அவர்களைப் புகழ்வதாகவும், மலக்குகளும் அவர்கள் மீது ஸலவாத்து கூறுவதாகவும் அறிவிக்கின்றான். பின்பு கீழ் உலகில் உள்ளவர்களும் நபியவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூற வேண்டும் எனவும் அல்லாஹ் ஏவுகின்றான். அதன் மூலம் மேல், கீழ் ஆகிய இரு உலகிலும் உள்ளவர்களின் புகழ் நபியவர்களுக்கு ஒரு சேரக்கிடைக்கின்றது.

அல்லாஹ்வுடைய அடியார்களே! ஓர் அடியான் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறும் போது. ஸலாத்தையும் ஸலாமையும் இணைத்துக் கூறட்டும். "அவர்கள் மீது அல்லாஹ் ஸலவாத் கூறுவானாக" என்று மாத்திரமோ, அல்லது "அவர்கள் மீது சலாம் உண்டாகட்டும்" என்று மாத்திரமோ கூற வேண்டாம். இது இந்த வசனத்தின் ஊடாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. இக்கருத்தை இமாம் நவவீ, இப்னு கஸீர் போன்றோர் கூறியுள்ளனர்.

முஸ்லிம்களே! நபியவர்களின் பெயர் கூறப்பட்டால் அவர்கள் மீது ஸலவாத்து கூறுவது வாஜிபாகும். அதற்கான ஆதாரமாக, இரு ஹதீஸ்களில் அவ்வாறு கூறாமல் இருப்பது எச்சரிக்கப்பட்டு வந்துள்ளது.

1. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யாரிடம் எனது பெயர் கூறப்பட்டும், என் மீது ஸலவாத்து கூறவில்லையோ அவர்தான் உண்மையான கஞ்சன் ஆகும்"[141]
2. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யாரிடம் எனது பெயர் கூறப்படும் அவர் என் மீது ஸலவாத்து கூறவில்லையோ அவன் நாசமாட்டும்."[142]

[141] திர்மிதி : 3546, நஸாஈ : 9800
[142] திர்மிதி : 3545

●அல்லாஹ்வின் அடியார்களே! நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுவது எல்லா சந்தர்ப்பங்களிலும் விரும்பத்தக்கதாகும். எனினும் 10 இடங்களில் அது குறிப்பாக வலியுறுத்தப்படும். அவை பின்வருமாறு:

1. தொழுகையின் இறுதி அத்தஹியாத்தில்
2. ஜனாஸா தொழுகையின் இரண்டாம் தக்பீருக்குப் பின்னால்
3. குத்துபாக்களில். உதாரணமாக, ஜும்ஆ குத்பா, இரு பெருநாள் குத்பாக்கள், மழை வேண்டித் தொழும் தொழுகையின் குத்பா போன்றவை. இப்னுல் கையும் (ரஹ்) அவர்களுக்கு கூறுகின்றார்கள்: குத்பாக்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுவது என்பது ஸஹாபாக்களிடத்தில் பிரபல்யமாக அறியப்பட்ட ஒரு விடயமாக காணப்பட்டது
4. வெள்ளிக்கிழமை தினம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "வெள்ளிக்கிழமை தினம் உங்களது நாட்களில் மிகச்சிறந்த ஒரு நாளாகும். அதிலேயே ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அத்தினத்திலேயே மரணிக்கச் செய்யப்பட்டார்கள். அத்தினத்திலேயே ஸூர் ஊதப்படும். அத்தினத்திலேயே உலகம் அழிக்கப்படும். எனவே என் மீது அதிகம் ஸலவாத் கூறுங்கள். உங்களது சலவாத் எனக்கு எடுத்துக்காட்டப்படுகிறது"[143]
5. முஅத்தீனுக்கு பதில் அளித்த பின்னர். நபியவர்கள் கூறத் தான் கேட்டதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பாங்கு சொல்பவர் பாங்கு சொல்வதை நீங்கள் கேட்டால், அவர் கூறுவது போன்றே கூறிவிட்டு என் மீது ஸலவாத்துக் கூறுங்கள். ஏனெனில் யார் என் மீது ஒரு தடவை ஸலவாத்துக் கூறுகின்றாரோ அவர் மீது அல்லாஹ் 10 தடவைகள் ஸலவாத்து கூறுவான்."[144]
6. துஆ கேட்கும் போது அதற்கு புழாலா இப்னு உபைத் (ரலி) அவர்களது பின்வரும் ஹதீஸ் ஆதாரமாகும்: ஒரு மனிதர் தனது தொழுகையில் அல்லாஹ்வை (புகழ்ந்து) கண்ணியப்படுத்தாமலும், நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்லாமலும் பிரார்த்தனை செய்ததை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செவியுற்று, தொழுகையாளியே! நீ அவசரப்பட்டு விட்டாய் என்று கூறி அம்மனிதருக்கு அல்லாஹ்வை புகழ்வது பற்றியும், நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்வது பற்றியும் கற்றுக் கொடுத்தார்கள்.

[143] நஸாஈ : 1373, அபூ தாவூத் : 1047, இப்னு மாஜஹ் : 1085
[144] முஸ்லிம் : 384

பின்பு அந்த மனிதர் தொழுகையில் அல்லாஹ்வை புகழ்ந்து, நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொன்னபோது, (இப்போது) பிரார்த்தனை செய்! பதிலளிக்கப்படும். கேள்! கொடுக்கப்படும்” என்று அவருக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[145]

உமர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்: “நிச்சயமாக துஆ வானத்திற்கும் பூமிக்கும் மத்தியில் இடைநிறுத்தப்பட்டிருக்கும். நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறும் வரை அதில் எந்த ஒன்றும் மேலே செல்லமாட்டாது”[146]

7,8. பள்ளிவாசலின் நுழையும்போது அதிலிருந்து வெளியேறும் போதும்.

நபிகள் நாயகம் அவர்கள் பள்ளிவாசலில் நுழையும்போது அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறிவிட்டு,

اللَّهُمَّ اغْفِرْ لِي ذُنُوبِي، وَافْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

(யா அல்லாஹ்! எனது பாவங்களை மன்னித்து, உனது ரஹ்மத்தின் வாயில்களை எனக்குத் திறந்து தருவாயாக) என்று கூறுவார்கள். வெளியேறும் போது. அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறிவிட்டு,

اللَّهُمَّ اغْفِرْ لِي ذُنُوبِي، وَافْتَحْ لِي أَبْوَابَ فَضْلِكَ

(யா அல்லாஹ்! எனது பாவங்களை மன்னித்து, உனது பேருபகாரத்தின் வாயில்களை எனக்குத் திறந்து தருவாயாக) என்று கூறுவார்கள்[147]

9. ஸபா மற்றும் மர்வாவுக்கு இடையில் ஸஈ செய்யும் போது.

வஹ்ப் இப்னுல் அஜ்தஃ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் மக்காவில் மக்களுக்கு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன் :

உங்களில் யாராவது ஹஜ் செய்வதற்கு வந்தால், அவர் கஃபாவை ஏழு தடவை தவாப் செய்யட்டும். பின்பு மகாமிடத்தில் இரு ரக்அத்துகள் தொழட்டும். பின்பு ஸபாவைக் கொண்டு ஆரம்பிக்கட்டும். அங்கு கிப்லாவை முன்னோக்கி ஏடு தக்பீர்கள் கூறட்டும். ஒவ்வொரு தக்பீருக்கும் இடையில் அல்லாஹ்வை அதிகம்

[145] அபூ தாவூத் 1481, திர்மிதி : 3477, நஸாஈ : 1284

[146] திர்மிதி : 486

[147] திர்மிதி : 314, இப்னு மாஜஹ் : 771

புகழ்ந்து, நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறி தனக்காகவும் துஆ கேட்கட்டும். மர்வாவிலும் அவ்வாறே செய்யட்டும்.[148]

10. மக்கள் ஒன்று கூடிப் பிரிந்து செல்வதற்கு முன்னர். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபுஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யாராவது ஒரு கூட்டத்தினர் ஒரு சபையில் அமர்ந்து, அல்லாஹ்வை நினைவு கூறாமலும் நபியவர்கள் மீது ஸலவாத்தும் கூறாமலும் இருக்கின்றார்களோ அவர்களது அந்த சபை மறுமையில் அவர்களுக்கு ஒரு குறையாகவே இருக்கும். அவன் நாடினால் அவர்களை மன்னிப்பான். நாடினால் தண்டிப்பான்."[149]

இவை நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுவது விஷேடமாக வலியுறுத்தப்படும் 10 இடங்களாகும். அதேநேரம், நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுவதென்பது எல்லா நிலைமைகளிலும் விரும்பத்தக்கது என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள் :

அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும்

148 பைஹகீ :9343, இப்னு அபீ ஷைபா : 14501

149 திர்மிதி : 3380, அஹ்மத் : 2-484

மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّ ۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴿٥٦﴾ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக!

நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுவதன் பயன்கள்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுவதில் 10 பயன்கள் உள்ளன:

1. நபி அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுமாறு அல்லாஹ் ஏவியுள்ளமையை நடைமுறைப்படுத்துதல். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾ [الأحزاب: ٥٦]

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஸாப் : 56)

2. ஓர் அடியான் நபி அவர்கள் மீது ஸலவாத் கூறுவது ஒரு துஆவாகும். துஆ என்பது தனியான ஒரு வணக்கமாகும். அல்லாஹ் அதை ஏவியுள்ளான். அதற்கு நிறைய கூலிகளையும் வைத்துள்ளான்.
3. நபி அவர்கள் மீது ஒரு தடவை ஸலவாத் கூறுபவர் மீது அல்லாஹ் பத்து தடவைகள் ஸலவாத் கூறுவான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “யார் என் மீது ஒரு ஸலவாத் கூறுகின்றாரோ, அல்லாஹ் அவர் மீது பத்து தடவைகள் ஸலவாத்து கூறுவான்”[150]

   செயல்களைப் போன்றே கூலிகளும் அமையும். எனவே, யார் அல்லாஹ்வுடைய தூதரைப் புகழ்கின்றாரோ, அவரது அந்த செயலுக்கு ஒத்த கூலியாக, அல்லாஹ் அவரைப் புகழ்ந்து, அவரை மேலும் கண்ணியப்படுத்தி சிறப்பிப்பான்.

4. யார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஒரு தடவை ஸலவாத்து சொல்கின்றாரோ, அவர் 10 படித்தரங்கள் உயர்த்தப்படுகின்றார். அவருக்கு 10 நன்மைகள் எழுதப்படும். 10 பாவங்கள் அவரை விட்டு மன்னிக்கப்படும்.

   நபியவர்கள் கூறியதாக, அப்துல்லா இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “யார் என் மீது ஒரு தடவை ஸலவாத் கூறுகின்றாரோ,

[150] முஸ்லிம் : 384

அல்லாஹ் அவரின் மீது 10 தடவைகள் ஸலவாத் கூறுகின்றான். அவரது 10 தவறுகள் மன்னிக்கப்படும். அவர் 10 அந்தஸ்த்துக்கள் உயர்த்தப்படுவார்."[151]

5. பாவங்கள் மன்னிக்கப்படவும், அடியானை கவலைப்படுத்தும் அம்சங்களில் இருந்து பாதுகாக்கப்படவும் அது காரணமாக அமைகின்றது.

உபய் இப்னு கஃப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இரவின் மூன்றில் இரு பகுதி கடந்துவிட்டால், நபியவர்கள் எழுந்து இவ்வாறு கூறுவார்கள்: "மனிதர்களே! அல்லாஹ்வை நினைவுகூறுங்கள்! அல்லாஹ்வை நினைவுகூறுங்கள்! மறுமை நெருங்கிவிட்டது, இரண்டாவது ஸுர் ஊதலும் நெருங்கிவிட்டது. மரணம் அதன் அனைத்துத் துன்பங்களுடனும் வந்துவிட்டது. மரணம் அதன் அனைத்துத் துன்பங்களுடனும் வந்துவிட்டது." உபய் (ரலி) அவர்ககள் கூறுகின்றார்கள்: அப்போது நான், "அல்லாஹ்வுடைய தூதரே! நான் உங்கள் மீது அதிகம் ஸலவாத் கூறுகின்றேன். எனது துஆவில் எந்த அளவு நான் உங்களுக்காக வைக்கவேண்டும்? என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள், "நீ நாடிய அளவு" என்று கூறினார்கள். அதற்கு நான், "நான்கில் ஒன்று?" எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், "நீ நாடிய அளவு. மேலும் அதிகப்படுத்தினால் அது உங்களுக்கு சிறந்தது" என்று கூறினார்கள். அப்போது நான், "அரைவாசி?" என்று கேட்க, "நீ நாடிய அளவு. மேலும் அதிகப்படுத்தினால் அது உங்களுக்கு சிறந்தது" என்றே கூறினார்கள். அப்போது மீண்டும் நான், "மூன்றில் இரு பகுதி?" எனக் கேட்க, அப்போதும், "நீ நாடிய அளவு. மேலும் அதிகப்படுத்தினால் அது உங்களுக்கு சிறந்தது" என்றே கூறினார்கள். அப்போது நான், "எனது தொழுகை துஆ முழுவதையும் உங்களுக்காகவே வைக்கவா?" எனக் கேட்டபோது, அப்படியானால், "உங்களது கவலை நீக்கப்படும். உங்களது பாவங்கள் மன்னிக்கப்படும்." என்று கூறினார்கள்.[152]

இப்னு தைமியா அவர்கள் கூறுகின்றார்கள்: "இவர்களிடம் - உபை இப்னு கஃபிடம் - வழமையாக ஓதிவரும் ஒரு துஆ இருந்தது. அவர்கள் அந்த துஆவுக்குப் பதிலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூறுவார்கள் என்றால், அவர்களைக் கவலைக்குட்படுத்தும் உலக, மறுமை பிரச்சனைகளை விட்டும் அல்லாஹ் பாதுகாப்பான். ஏனெனில் யார் நபியவர்கள் மீது ஒரு தடவை ஸலவாத்து கூறுகின்றாரோ, அல்லாஹ் அவர் மீது

---

[151] நஸாஈ, அல்குப்ரா : 1221

[152] திர்மிதி : 2457

பத்து தடவைகள் ஸலவாத்து கூறுவான். அதே அவா், முஃமின்களில் ஒருவருக்காக பிரார்த்தித்தால், மலக்குமார்கள், "அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படட்டும். உனக்கும் அவ்வாறே கிடைக்கட்டும்" என்று கூறுவார்கள். அப்படியாயின், நபியவர்களுக்காக துஆ கேட்பது அச்சிறப்புக்கு மிகத் தகுதியானது."

6. துஆ கேட்பவர் ஸலவாத்துடன் இணைந்து, நபியவர்களுக்காக வஸீலாவையும் கேட்கும் போது, அது நபியவர்களின் பரிந்துரையை அடைவதற்கான காரணமாக அமைந்து விடுகின்றது.

   நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ா (ரலி) அவா்கள் அறிவிக்கின்றார்கள் : "முஅத்தின் பாங்கு கூறுவதைக் கேட்டால், அவா் கூறுவது போன்றே நீங்களும் கூறுங்கள். பின்பு, எனக்காக ஸலவாத் கூறுங்கள். ஏனெனில், எனக்காக ஒரு தடவை ஸலவாத் கூறுபவா் மீது அல்லாஹ் பத்துத் தடவைகள் ஸலவாத் கூறுகின்றான். பின்பு எனக்காக "வஸீலா"வைக் கேளுங்கள். அது சுவனத்தில் உள்ள ஒரு அந்தஸ்தாகும். அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவருக்கு மாத்திரமே அது வழங்கப்படும். அது நானாக இருக்க விரும்புகின்றேன். யாா் எனக்காக வஸீலாவைக் கேட்கின்றாரோ, அவருக்கு ஷபாஅத் கிடைக்கும்."[153]

7. துஆக் கேட்பவர், துஆவின் ஆரம்பத்தில் நபியவர்கள் மீது ஸலவாத் கூறினால், அவரது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அது துவாவை அகிலத்தாரின் இரட்சகனை நோக்கி உயரக் கொண்டு செல்கின்றது. உமா் இப்னுல் கத்தாப் (ரலி) அவா்கள் அறிவிக்கின்றாா்கள் : "நிச்சயமாக துஆ வானத்திற்கும் பூமிக்கும் மத்தியில் நிறுத்தப்பட்டிருக்கும். உமது நபியின் மீது ஸலவாத் கூறும் வரையில் அதில் எந்தவொன்றும் மேலே செல்லமாட்டாது."[154]

8. ஸலவாத் கூறுபவரின் ஸலவாத், நபியவர்களுக்கு எடுத்துக்காட்டப்பட அது காரணமாக அமைகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களது ஸலவாத் நிச்சயமாக என்மீது எடுத்துக் காட்டப்படுகின்றது."[155] ஒரு

[153] முஸ்லிம் : 384
[154] திர்மிதி : 486
[155] அஹ்மத் : 16162

அடியானுக்கு, அவனது ஸலவாத் நபியவர்களிடம் எடுத்துக்காட்டப்படுதல் என்ற சிறப்பை விட வேறு என்ன வேண்டும்?

9. ஒரு சபை தூய்மையானதாகவும் பரிசுத்தமானதாகவும் இருக்க அது காரணமாக அமைகின்றது. இதற்கு மாறாக நபியவர்கள் மீது ஸலவாத் கூறாத சபைகள் மறுமையில் அந்த சபையினருக்கு கைசேதமாகவே அமையும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "ஒரு கூட்டத்தினர் ஒரு சபையில் அமர்ந்து, அல்லாஹ்வை நினைவுகூறாத நிலையிலும், அவனது நபியின் மீது ஸலவாத் கூறாத நிலையிலும் கலைந்துசெல்கின்றார்களோ, அது மறுமையில் அவர்களுக்கு ஒரு குறையாகவே இருக்கும். அவன் நாடினால், அவர்களை மன்னிப்பான். நாடினால், தண்டிப்பான்"[156]

10. நபியவர்களின் நிரந்தர அன்பு கிடைக்கவும், அவ்வன்பு அதிகரிக்கப்படவும் அது காரணமாக அமைந்து விடுகின்றது. இது ஈமான் முழுமை பெறுவதற்கு அத்தியாவசியமான ஓர் உடன்படிக்கையாகும். ஏனெனில் ஓர் அடியான் தனது நேசத்திற்குரியவரை அதிகமாக நினைவு கூர்ந்து, அவரது சிறப்புகளையும் அவ்வண்பை அதிகப்படுத்தும் பெருமானங்களையும் அதிகமாக மனதில் கொண்டு வந்து வைத்திருக்கும் போதெல்லாம், அவர் மீதான அன்பு பன்மடங்காகும். அவரை நோக்கிய எதிர்பார்ப்பு அதிகரிக்கும். அவரது முழு உள்ளத்தையும் அவரே ஆக்கிரமித்துக் கொள்வார். அவ்வடியான் அவரை நினைவு கூறுவதையும், அவரது சிறப்புக்களை மனக்கண் முன் கொண்டு வருவதையும் புறக்கணித்தால், அவனது உள்ளத்தில் அவரது அன்பு குறைந்துவிடும். அன்பு கொண்டுள்ள அடியானின் கண்ணை, தன் நேசனை காண்பதை விட வேறு எதுவும் குளிரச்செய்ய மாட்டாது.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை, இப்னுல் கையிம் (ரஹ்) அவர்களின், "ஜலாஉல் அஃப்ஹாம்" என்ற நூலில் இருந்து சுருக்கி எடுக்கப்பட்ட, நபி அவர்கள் மீது ஸலவாத்து சொல்வதில் உள்ள பத்து பயன்களாகும்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும்

[156] அஹ்மத் : 10277

பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள் : நபி அவர்கள் மீது ஸலவாத்து கூறுவதில் இணையும் ஒன்றுதான், நபியவர்களுக்கு வஸீலாவும் சிறப்பும் கிடைக்க வேண்டும் எனவும், அல்லாஹ் அவர்களுக்கு வாக்களித்துள்ள புகழுக்குரிய அந்தஸ்துக்கு அவர்களை அனுப்ப வேண்டும் எனவும் துஆ கேட்பதாகும். ஏனெனில் இது நபியவர்கள் மீது ஸலவாத் கூறுவது உள்ளடக்கும் அர்த்தங்களில் என்றாகிய, அவர்களைப் புகழுமாறும், அவர்களை சிறப்பிக்குமாறு கேட்கும் துஆவாகும். இதற்கான ஆதாரம் நபி அவர்களை தொட்டும். ஜாபிர் அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஆகும்.

“யார் தொழுகை அறிவிப்பைக் கேட்(டு முடிக்)கும்போது, “அல்லா/ஹும்ம ரப்ப ஹாதிஹித் தஅவதித் தாம்மத்தி, வஸ்ஸ லாத்தில் காயிமத்தி, ஆத்தி முஹம்மதனில் வசீலத்த, வல்ஃபளீலா. வப்அஸ்/ஹ மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தா (இறைவா! இந்த முழுமையான அழைப்பிற்கும் நிலையான தொழுகைக்கும் உரியவனே! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு (சொர்க்கத்தில்) உயர் பதவியையும் தனிச் சிறப்பையும் வழங்குவாயாக! அவர்களுக்கு நீ வாக்களித்துள்ள உன்னத இடத்திற்கு அவர்களை நீ அனுப்புவாயாக)” என்று பிரார்த்திக்கிறாரோ, அவருக்கு மறுமை நாளில் என் பரிந்துரை கிடைக்கும்”[157]

நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “முஅத்தின் பாங்கு கூறுவதைக் கேட்டால், அவர் கூறுவது போன்றே நீங்களும் கூறுங்கள். பின்பு, எனக்காக ஸலவாத் கூறுங்கள். ஏனெனில், எனக்காக ஒரு தடவை ஸலவாத் கூறுபவர் மீது அல்லாஹ் பத்துத் தடவைகள் ஸலவாத் கூறுகின்றான். பின்பு எனக்காக “வஸீலா”வைக் கேளுங்கள். அது சுவனத்தில் உள்ள ஒரு அந்தஸ்தாகும். அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவருக்கு மாத்திரமே அது வழங்கப்படும். அது

[157] புகாரி : 614

நானாக இருக்க விரும்புகின்றேன். யார் எனக்காக வஸீலாவைக் கேட்கின்றாரோ, அவருக்கு ஷபாஅத் கிடைக்கும்."[158]

வஸீலா என்பது சுவனத்தில் உள்ள ஓர் உயர்ந்த அந்தஸ்தாகும். பழீலா என்பது பொதுவாக அனைத்து சிறப்பு, அபிவிருத்தி மற்றும் நன்மைகளை உள்ளடக்கிக் கொள்ளும். புகழுக்குரிய அந்தஸ்து என்பதன் அர்த்தம், அந்த அந்தஸ்த்தில் இருப்பவர் புகழப்படுபவர் என்பவராகம். மஹ்சரில் இருப்பவர்களுக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு செய்யப்படும் பெரிய சபாஅத்தையே அது குறிக்கின்றது. அதை மேற்கொள்பவர் நபி (ஸல்) அவர்களாகும். அதற்கான ஆதாரமாக, நபியவர்களைத் தொட்டும் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "புகழுக்குரிய அந்தஸ்த்து என்பது ஷபாஅத் ஆகும்." ஹதீஸ் ஆகும்.

ஹதீஸின் இறுதியில், "ஷபாஅத் அவருக்குக் கிடைக்கும்" என நபியவர்கள் கூறியிருப்பது, செயலை ஒத்த கூலியாகும். ஏனெனில் அவர் நபி அவர்களுக்கு புகழுக்குரிய அந்தஸ்தை கொடுக்குமாறு பிரார்த்தித்துமையினால், பாவங்கள் மன்னிக்கப்படவும், அந்தஸ்துக்கள் உயர்த்தப்படவும் நபியவர்களின் பரிந்துரை பெற்றுக் கொள்ள அவர் தகுதி அடைந்து விடுகிறார். யா அல்லாஹ் எம்மையும் நபியவர்களின் சபாத்தை பெற்றவர்களில் ஆக்கி வைப்பாயாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக!

[158] முஸ்லிம் : 384

அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள்,

அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

ஹிஜ்ரத் கற்றுத் தரும் பதினாறு பாடங்கள்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத்

தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

முஸ்லிம்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை, ரஸூல்மார்கள் யாரும் வராமல் இருந்த காலத்தில், சிறந்த பூமியாகிய மக்கா உட்பட முழு உலகிலும் சிலைவணக்கம் மேலோங்கி இருந்தபோது அனுப்பி வைத்தான். நபியவர்கள் தமது நெருங்கி உறவினர்களை முதலில் அழைத்தார்கள். அவர்களில் சிலரே அவர்களுடைய அழைப்பை ஏற்றனர். அநேகமானோர் மறுத்தனர். அழைப்புப் பணி தொடர்ந்து மறைமுகமாக இருந்தது. குறைஷிக் காபிர்களும் அதனை அலட்டிக் கொள்ளவில்லை. நபியவர்கள் அதனைப் பகிரங்கப்படுத்தி, அவர்களது கடவுள்களை குறைபேசி இகழ்ந்த போது, இணைவைப்பாளர்கள் தமது கடவுள்கள் மீதுள்ள பிடிவாதத்தின் காரணமாக, அவற்றைப் பாதுகாக்க வேறு வழியைப் பயன்படுத்தினார்கள். அதாவது, நபியவர்களை மிகப் பெரும் பணக்காரர் ஆக்குவதாகக் கூறி, பணத்தைக் காட்டி ஏமாற்ற முனைந்தார்கள். அவர்களிலே உள்ள அழகான பெண்களை திருமணம் செய்து தருவதாக கூறினார்கள். அவர்களைத் தமது தலைவராக நியமிப்பதாகக் கூறினார்கள். அவர்களது கடவுள்களை நபியவர்கள் ஒரு வருடமும், அவர்கள் ஒரு வருடவும் வணங்குவதாக ஒரு கோரிக்கையை முன்வைத்தார்கள். "(சன்மார்க்க போதனையை) நீர் தளர்த்தினால், தாங்களும் தளர்ந்து போகலாம் என்று அவர்கள் விரும்புகின்றனர்." இவை எதனைலும் நபியவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே நபியவர்களை பின்பற்றுபவர்களில் குடும்ப பலமோ, செல்வாக்கோ இல்லாதவர்களில், தம்மால் கொடுமைப்படுத்த முடியுமானவர்களைக் கொடுமைப்படுத்தினர். அவர்களை பலபந்தமாக இணைவைப்பிற்கு மீள் எடுக்கவும், இஸ்லாத்தில் நுழைய நினைத்துக் கொண்டிருக்கும் ஏனையோரை அச்சுறுத்துவம் அவர்களைக் கடுமையாக வேதனைக்கு உட்படுத்தினார்கள். தமது தோழர்கள் அனுபவிக்கும் வேதனையை நபி (ஸல்) அவர்கள் கண்டபோது, அந்த நேரத்தில் அவர்களைப்

பாதுகாப்பதற்கான சக்தி நபியவர்களுக்கு இல்லாமல் இருந்த காரணத்தினால், ஹபசாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதித்தார்கள். எனவே நபித்தோழர்கள், நுபுவ்வத் ஐந்தாம் வருடம், மற்றும் பத்தாம் வருடம் என இரு கட்டங்களாக அங்கு ஹிஜ்ரத் சென்றனர். பின்பு மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். பின்பு நபியவர்களும் இஸ்லாத்தைப் பரப்புதல், அமைதியாகவும், பாதுகாப்பாகவும் அல்லாஹ்வை வணங்குதல் ஆகிய நலன்களைக் கருத்திற் கொண்டு அவர்களுக்குப் பின்னர் மதீனா சென்றடைந்தார்கள்.

முஸ்லிம்களே! நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தை கூர்ந்து கவனிப்பவர், அற்புதமான நுட்பங்களை அதில் காண்பார். மேலும், முக்கியமான பல பாடங்களைக் கற்றுக் கொள்வார். அவ்வாறான சில பாடங்களாவன:

1. அல்லாஹ்வின் பாதையில், சொத்து, நாடு, குடும்பம் என அனைத்தையும் அர்ப்பணித்தல். நபியவர்கள் மக்காவை விட்டு வெளியேறிய போது, அதை முன்னோக்கி நின்று இவ்வாறு கூறினார்கள் : “அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீ தான் அல்லாஹ்வின் பூமியிலேயே மிகச்சிறந்த பிரதேசம். அல்லாஹ்வின் பூமியில் அவனுக்கு மிக விருப்பமான இடமும் நீயே! நான் இதிலிருந்து வெளியேற்றப்பட்டு இருக்காவிட்டால், வெளியேறி எடுக்க மாட்டேன்”[159]
2. யாருக்காவது ஏதாவது ஒரு இடத்தில் தவாஃவிற்கான வாய்ப்புகள் அனைத்தும் அடைக்கப்பட்டு விட்டால், அவர் அல்லாஹ்வை நோக்கி அழைப்பதற்கான வேறு ஒரு இடத்தை நோக்கிச் செல்வது கட்டாயமாகும். ஏனெனில் குறைஷிகள் நேர்வழி பெறுவார்கள் என்பதில் நபி (ஸல்) அவர்கள் நிராசையடைந்த போது மதினா நோக்கிச் சென்று, அங்கு அல்லாஹ்வை நோக்கி அழைத்தார்கள்.
3. சோதனை எனும் இறைநியதி வெளிப்படல். சுவனம் விலைமதிக்க முடியாதது. ஓய்வாக இருந்து கொண்டு அதை அடைய முடியாது. மாறாக, இறைவழிபாட்டில் போராடுவதுகொண்டும், அதில் பொறுமையுடனும் இருப்பது கொண்டுமே அது அடையப்படுகின்றது.

﴿ أَمْ حَسِبْتُمْ أَن تَدْخُلُوا۟ ٱلْجَنَّةَ وَلَمَّا يَعْلَمِ ٱللَّهُ ٱلَّذِينَ جَٰهَدُوا۟ مِنكُمْ وَيَعْلَمَ ٱلصَّٰبِرِينَ ﴿١٤٢﴾ ﴾

[آل عمران: ١٤٢]

[159] திர்மிதி : 3925

“உங்களில் (அல்லாஹ்வின் பாதையில் உறுதியாகப்) போர் புரிபவர்கள் யார் என்றும், (அக்காலை) பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் யார் என்றும் அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனபதியில் நுழைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றீர்களா?” (ஸூரா ஆலு இம்ரான் : 142)

நோவினைகளை விட்டும் நபியவர்களைப் பாதுகாத்து, இஸ்ராவுடைய இரவில் ஒரு நொடிப்பொழுதில் மக்காவில் இருந்து பைத்தில் மக்திஸ் நோக்கி புராக் வாகனத்தில் அவர்களை அழைத்துச் சென்றது போன்று, மக்காவில் இருந்து மதீனாவுக்கு அனுப்புவதும் அல்லாஹ்வுக்கு இலகுவான விடயமாகத்தான் இருந்தது. ஆனாலும் அல்லாஹ் அவர்களை சோதிக்க நாடியது, அவர்கள் தமது கூட்டத்தினருக்கும் பின்வருவோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், கொள்கைப்பற்று தெளிவாக வெளிப்படவும், உண்மை புலப்படவும், அல்லாஹ்விடத்தில் கூலி அதிகம் கிடைக்கவும், அழைப்பாளிகள் அழைப்புப் பணியின் பாதையில் முகம் கொடுக்கும் நோவினைகளில் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொள்ளவும் தான்.

4. பௌதிகக் காரணிகளை நடைமுறைப்படுத்தல். இது, நபியவர்கள் முழுமையாக பௌதிக காரணிகளை நடைமுறைப்படுத்தி தயாரானதன் மூலம் தெளிவாக விளங்குகின்றது. அல்லாஹ் அவர்களுக்கு அனுமதி அளிக்கும் வரை அவர்கள் ஹிஜ்ரத் செல்லாமல் இருந்தது, மேலும் நம்பிக்கையான ஒரு தோழரை - அதாவது அபூபக்ர் அவர்களை - தம்முடன் அழைத்துக் கொண்டமை, குறைஷிகளின் செய்திகளைப் பெற்றுக்கொள்ள அப்துல்லாஹ் இப்னு அபூபக்ர் அவர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டமை, உணவாக பாலைப் பெற்றுக் கொள்ள, அபூ பக்ர் (ரலி) அவர்களின் ஆடுகளை மேய்ப்பவராக இருந்த, ஆமிர் இப்னு புஹைறாவின் உதவியை பெற்றுக் கொண்டமை, பாதை வழிகாட்ட, இணைவைப்பாளராக இருந்தாலும் நம்பிக்கையானவராகவும், பாதைகள் பற்றி நன்கு அறிந்தவராகவும் இருந்த அப்துல்லா இப்னு உரைகீத் அவர்களின் உதவியைப் பெற்றுக்கொண்டமை அவ்வாறான சில பௌதிகக் காரணிகளாகும்.

அதேபோன்று இணைவைப்பாளர்கள் கண்டுபிடிக்காமல் இருக்க, வழமைக்கு மாறான ஒரு பாதையைத் தெரிவு செய்தமை, மக்காவின் தெற்கில் உள்ள ஸவ்ர் மலையின் ஒரு குகைகியில் மூன்று நாட்கள் தங்கி இருந்தமை ஆகியவையும் நபியவர்கள் மேற்கொண்ட சில பௌதிகக்காரணிகளாகும். அதேபோன்று நபியவர்கள் குகையில் இருந்து மதீனாவுக்கு புறப்பட்டதும் இணைவைப்பாளர்கள் அவர்களைத் தேடுவது நின்ற பிறகுதான்.

அதேபோன்று, ஏற்கனவே குறிப்பிடப்பட்டவர்கள் போன்று, நெருங்கிய தேவையுடையவர்களைத் தவிர, ஏனையோரை விட்டும் தமது பயண இரகசியத்தை மறைத்து வைத்திருந்துவையும் அவ்வாறான ஒரு நடவடிக்கையாகும்.

இந்தப் பத்து விடயங்கள் மூலமாக, நபியவர்களின் ஸீறாவில் உள்ள. திட்டமிடல் மற்றும் காரணிகளை செயல்படுத்தல் ஆகியவற்றைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் தெளிவாகின்றது.

5. நபி (ஸல்) அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட பௌதீகக்காரணிகளில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. மாறாக, அவர்களது உள்ளம் அல்லாஹ்வையே நம்பியிருந்தது. உதாரணமாக, இணைவைப்பாளர்கள் அந்தக் குகையை அண்மித்த போது அபூ பக்ர் (ரலி) அவர்கள் நபியவர்களைப் பார்த்து, “அல்லாஹ்வுடைய தூதரே! அவர்களில் ஒருவர் தமது பாதத்திற்குக் கீழால் பார்த்தால், அதனூடாக எம்மைக் கண்டுவிடுவார்.” என்று கூறியபோது, “அபூ பக்ரே! அல்லாஹ் துணைக்கு இருக்கும் இருவரைப் பற்றி நீ என்ன நினைக்கின்றீர்?” எனக் கேட்டார்கள் அமைதியதாக. [160] அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِلَّا تَنصُرُوهُ فَقَدْ نَصَرَهُ ٱللَّهُ إِذْ أَخْرَجَهُ ٱلَّذِينَ كَفَرُوا۟ ثَانِىَ ٱثْنَيْنِ إِذْ هُمَا فِى ٱلْغَارِ إِذْ يَقُولُ لِصَٰحِبِهِۦ لَا تَحْزَنْ إِنَّ ٱللَّهَ مَعَنَا ۖ فَأَنزَلَ ٱللَّهُ سَكِينَتَهُۥ عَلَيْهِ وَأَيَّدَهُۥ بِجُنُودٍ لَّمْ تَرَوْهَا وَجَعَلَ كَلِمَةَ ٱلَّذِينَ كَفَرُوا۟ ٱلسُّفْلَىٰ ۗ وَكَلِمَةُ ٱللَّهِ هِىَ ٱلْعُلْيَا ۗ وَٱللَّهُ عَزِيزٌ حَكِيمٌ ۝٤٠ ﴾ [التوبة: ٤٠]

“(நம் தூதராகிய) அவருக்கு நீங்கள் உதவி செய்யா விட்டால், (அவருக்கு யாதொரு இழப்புமில்லை) நிராகரிப்பவர்கள் அவரை ஊரை விட்டு வெளியேற்றியபோது நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு உதவி செய்தே இருக்கின்றான் குகையில் இருவரில் ஒருவராக இருந்த போது, (நம் தூதர்) தம் தோழரிடம், “கவலைப்படாதீர்கள் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்” என்று கூறினார். அப்போது அவர் மீது அல்லாஹ் தன் சாந்தியை இறக்கி வைத்தான் மேலும் நீங்கள் பார்க்க முடியாப் படைகளைக்

[160] புகாரி : 3653, முஸ்லிம் : 2381. இது முஸ்லிமுடைய அறிவிப்பாகும்.

கொண்டு அவரைப் பலப்படுத்தினான் நிராகரிப்போரின் வாக்கைக் கீழாக்கினான் ஏனெனில் அல்லாஹ்வின் வாக்குத்தான் (எப்போதும்) மேலோங்கும் - அல்லாஹ் மிகைத்தவன், ஞானமிக்கவன்." (ஸூரா அத்தவ்பா : 40)

ஹிஜ்ரத் சென்றுகொண்டிருக்கும் போது ஸுராகா இப்னு மாலிக் தனது ஒரு குதிரையில் அவர்களைப் பிடிக்கவந்தான். அப்போது அபூ பக்ர் அவர்கள், "இதோ எம்மைத் தேடி வந்துவிட்டார்கள்" எனக் கூற, "கவலைப்படாதீர்கள். அல்லாஹ் எம்முடன் உள்ளான்" என்று கூறினார்கள் நபியவர்கள்.[161]

6. அழைப்பு பணியை பரவச் செய்யும் வழியில் பொறுமையும் மன உறுதியும் அவசியம். நபியவர்கள் இந்த ஹிஜ்ரத் ஊடாக சமுதாயத்திற்கு, அசத்தியம் சற்று ஆதிக்கம் செலுத்தினாலும் உறுதியுடன் நிற்க, கற்றுக் கொடுக்கின்றார்கள். அசத்தியத்தின் கை சிலபோது மேலோங்கும். அதன் ஆதரவாளர்கள் அதிகம் செலுத்துவார்கள். இது விசுவாசிகளுக்கு ஒரு சோதனையாகவும், நிராகரிப்பாளர்களுக்கு ஒரு குழப்பமாகவும் இருக்கும். இன்னும் இறுதி முடிவு, உறுதியாகவே விசுவாசம் கொண்டுவர்களுக்கு சார்பாகவே இருக்கும்.
7. நல்ல முடிவு என்பது, இறையச்சம் கொண்டவர்களுக்கே என்ற உறுதியான நம்புதல். ஹிஜ்ரத்தின் ஆரம்ப நிலையைப் பார்ப்பவர், அழைப்புப் பணியின் முடிவு என்பது அழிந்தும், தூர்ந்தும் போவதே என்றுதான் நினைப்பார். ஏனெனில், பௌதிக பலம், சத்தியவாதிகளுக்கும் அசத்தியவாதிகளுக்கும் இடையில் பெரும்பாலும் ஏற்றத்தாழ்வுடன் காணப்பட்டன. ஆனாலும், யாருடன் அல்லாஹ் இருக்கின்றானோ, அவனே உண்மையில் பலசாலி. எனவே ஹிஜ்ரத்திலிருந்து எட்டு வருடங்களின் பின்னர், மக்கா இஸ்லாத்தின் அரவணைப்பில் நுழைந்து, பின்பு பூகோலத்தின் நாலாத் திசைகளிலும் இஸ்லாம் பரவிய பின்னர் ஹிஜ்ரத்தின் முடிவைப் பார்ப்பவர், இங்கு தாக்கம் செலுத்தியது, மனிதப் பௌதிக சக்தி இல்லாமல், இறைசக்தியே என உறுதியாக அறிந்து கொள்வார். அல்லாஹ்வின் மார்க்கம் சந்தேகமே இன்றி வெற்றி பெறும். ஏனெனில் மார்க்கத்தின் பலம் என்பது அல்லாஹ்வின் பலத்தின் ஊடாக வரும் ஒன்று. அல்லாஹ்வை மிகைப்பவன் யாரும் இல்லை.

161 161 புகாரி : 3653

﴿ إِن يَنصُرۡكُمُ ٱللَّهُ فَلَا غَالِبَ لَكُمۡۖ وَإِن يَخۡذُلۡكُمۡ فَمَن ذَا ٱلَّذِي يَنصُرُكُم مِّنۢ بَعۡدِهِۦۗ وَعَلَى ٱللَّهِ فَلۡيَتَوَكَّلِ ٱلۡمُؤۡمِنُونَ ١٦٠ ﴾ [آل عمران: ١٦٠]

“(முஃமின்களே!) அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானானால், உங்களை வெல்பவர் எவரும் இல்லை” (ஸூரா ஆலு இம்ரான் : 160)

8. யார் அல்லாஹ்வுக்காக ஒன்றை விட்டுக் கொடுக்கின்றாரோ, அவருக்கு அதற்கு பதிலாக அதைவிட சிறந்த ஒன்றை வழங்குவான் என அறிந்து கொள்ளுதல். முஹாஜிர்கள் தமது உள்ளத்திற்கு விருப்பமான அம்சங்களான, தமது வீடுகளையும் குடும்பங்களையும், சொத்துக்களையும் விட்டுச் சென்ற போது, அல்லாஹ் அவர்களுக்கு அவற்றை விட சிறந்ததை பதிலாக வழங்கினான். அதாவது அல்லாஹ் அவர்களுக்கு உலகத்தைத் திறந்து கொடுத்து, கிழக்கையும் மேற்கையும் ஆளச் செய்தான். ரோம், பாரசீகம் எகிப்து என அனைத்தும் அவர்களது ஆணைக்குள் வந்தது. பின்பு ஸஹாபாக்கள் காலம் முடிந்த பின்னர், முஸ்லிம்கள் வட ஆபிரிக்கா நோக்கிச் சென்று, ஸ்பைனை வெற்றிகொண்டார்கள்.
9. யார் அல்லாஹ்வைப் பாதுகாக்கின்றாரோ, அல்லாஹ் அவரைப் பாதுகாப்பான். யார் அல்லாஹ்வை அஞ்சுகிறாரோ, அவரை அல்லாஹ் பாதுகாப்பான். அவனுக்கு விடிவை வழங்குவான். ஏனெனில் குறைஷித் தலைவர்கள் நபியவர்களைக் கைது செய்யவும், கொலை செய்யவும், நாடு கடத்தவும் முயற்சித்த போது, அல்லாஹ் அவர்களை விட்டு நபி (ஸல்) அவர்களை பாதுகாத்தான். அவர்களது சதித்திட்டத்தை விட்டும் அல்லாஹ் அவர்களைக் காத்தான். மேலும் அவர்களை மக்காவில் இருந்து வெளியேற்றி பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் எந்த தீங்கும் ஏற்படாமலும் மதீனாவில் கொண்டு போய்ச் சேர்த்தான்.
10. அபூபக்கர் அவர்களது சிறப்பினை உணர்த்துதல். அதாவது நபியவர்கள் ஹிஜ்ரத்தில் அவர்களுடன் இணைந்து கொள்வதற்கு அவரையே தேர்ந்தெடுத்தார்கள். உண்மையில் அவர் அதற்குத் தகுதியானவரே! நபியவர்கள் தம்முடன் கூட வருமாறு அவர்களிடம் கேட்டார்கள். அந்த தோழமையைப் பெற்ற சந்தோஷத்தில் அவர்கள் அழுதுவிட்டார்கள். நபியவர்களுக்காக அவரே ஒரு வாகனத்தை தயார் செய்தார்கள். நபி அவர்களின் முன்னால் யாரும் வந்து கண்டுபிடித்து விடுவார்களோ எனப் பயம் வரும்போது அவர்கள் முன்னால் நடந்து வந்தார்கள். பின்னால் யாரும் தேடிக்

கொண்டு வந்து விடுவார்களோ என்று பயம் வரும்போது அவர்களுக்குப் பின்னால் நடப்பார்கள். தமது முழுக் குடும்பத்தையும் அல்லாஹ்வின் பாதையில் பயன்படுத்தினார்கள். செய்திகளை கொண்டு வருவதற்கு அவரது மகன் அப்துல்லாஹ்வைப் பயன்படுத்தினார்கள். தமது அடிமை ஆமிர் இப்னு புஹைரா (ரலி) அவர்களையும். பயன்படுத்தினார்கள். அவர் அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆடுகளை மேய்ப்பவராக இருந்தார். மாலை நேரம் ஆனதும் தனது ஆட்டு மந்தையை அவர்களிடம் கொண்டு போய்விடுவார். அவர்கள் அதிலிருந்து பால் கறந்து கொள்வார்கள். அப்துல்லாஹ் இப்னு அபீபக்கர் அவர்கள் அவர்களை விட்டுத் திரும்பிச் செல்லும் போது அப்பாதையை தனது ஆட்டு மந்தைகளுடன் பின்தொடர்ந்து அவரது காலடிச்சுவடுகளை அழித்துவிடுவார்கள். சுருக்கமாக அபூபக்கர் ஸித்தீக் அவர்கள் தம்மையும், தனது குடும்பத்தையும், சொத்துக்களையும் இஸ்லாத்துக்கு உதவுவதற்காக ஈடுபடுத்தியுள்ளார்கள். அல்லாஹ் அவரைப் பொறுந்திக் கொள்ளட்டும்.

11. பெண்ணின் முக்கிய பங்களிப்பை உணர்த்துதல். இது அஸ்மா பின்து அபீ பக்ர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட பங்களிப்பின் ஊடாக தெளிவாகப் புலப்படுகின்றது. அதாவது தனது இடுப்பில் கட்டும் ஒருவிதப் பிடவையை அவர் எடுத்து, அதனை இரண்டாக கிழித்து ஒன்றில் நபியவர்கள் மற்றும் அபூபக்கர் (ரலி) அவர்களின் உணவைக் கட்டி ஒட்டகத்தின் மீது கட்டினார்கள். மற்றதன் மூலம் அவர்களது நீர்ப்பையைக் கட்டினார்கள். எனவேதான் அவர்களுக்கு "தாதுந் நிதாகைன்" எனப்படுகின்றது.[162]

அவர்களது இன்னும் ஒரு சம்பவமாவது, அவர்களது தந்தையான அபூபக்கர் அவர்கள் நபி அவர்களுடன் மதீனாவுக்குப் புறப்பட்டபோது தன்னுடன் தனது முழு பணத்தையும் எடுத்துச் சென்றிருந்தார்கள். அது அந்த நேரத்தில் ஆறாயிரம் ஐயாயிரம் திர்ஹம்களாக இருந்தது. அவர்கள் கூறுகின்றார்கள்: அவர் பணத்தைக் கொண்டு சென்றுவிட்டார். பின்னர் எமது பாட்டனார் அபூ குஹாபா அவர்கள் வந்தார்கள். அவரது கண் பார்வை போயிருந்தது. அவர், "அபூபக்கர் தனது பணத்தை எல்லாம் தன்னுடன் எடுத்துச் சென்று உங்களை சிரமத்தில் ஆழ்த்திவிட்டார் போலும்" என்று கூறினார். அப்போது நான், "இல்லை பாட்டனாரே! அவர் எமக்கு நிறைய பணத்தை விட்டுச் சென்றுள்ளார்" என்று பதிலளித்துவிட்டு, பின்பு சில கற்களை எடுத்து அவற்றை எமது தந்தை வழமையாக பணத்தை வைக்கும், வீட்டின் ஓர் இடத்தில் வைத்துவிட்டு,

[162] புகாரி : 3905

அவற்றை ஒரு ஆடையால் மூடினேன். பின்பு அவரது கையைக் பிடித்து, “பாட்டினாரே! இந்த பணத்தின் மேல் உங்கள் கையை வைத்துப் பாருங்கள்” என்று கூறினேன். அவரும் கையை வைத்துப் பார்த்துவிட்டு, “நல்லது இதை உங்களுக்கு வைத்து விட்டு சென்றுள்ளார் என்றால், அவர் நல்ல முறையிலே நடந்து கொண்டுள்ளார். இதை வைத்து உங்களால் வாழ்ந்து கொள்ளமுடியும்” என்று கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! தந்தை எதையும் விட்டுச் சென்று இருக்கவில்லை. மாறாக,இந்த வயோதிபரை அமைதிப்படுத்தவே நான் முயற்சித்தேன்.”[163]

12. மதீனா மற்றும் மதீனாவாசிகளான அவ்ஸ், கத்ரஜ் கோத்தினரின் சிறப்பை உணர்த்துதல். இஸ்லாத்துக்கு முன்னால், ஏனைய ஊர்களை விட, மதீனாவுக்கு வேறு சிறப்புக்கள் இருப்பதாக அறியப்பட்டிருக்கவில்லை. நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் அங்கு ஹிஜ்ரத் செய்தமை, மதீனவாசிகள் அவர்களுக்கு உதவியுமை ஆகியவற்றைக் கொண்டே அது சிறப்பைப் பெற்றுக் கொண்டது. இவ்வாறு தான் மதினாவின் சிறப்பு வெளிப்பட்டது.
13. முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரபல்யத்தையும், பணத்தையும், ஆட்சியையும் எதிர்பார்த்தார்கள் என நினைக்கும் இறைமறுப்பாளர்களுக்கு மறுப்பளித்தல். அவர்கள் முன் பணம் எடுத்துக் காட்டப்பட்டது. அரசியல், பொருளாதார பதவிகள் காட்டப்பட்டன. அவை அனைத்தையும் ஏற்க மறுத்தார்கள். அவை தான் நோக்கமாக இருந்திருந்தால், அவற்றை ஏற்றுக்கொண்டு தமது இடத்திலேயே மன்னராக இருந்திருப்பார்கள். சிரமப்பட்டு உயிரைப் பணயம் வைத்து, வீடு, நாடு, குடும்பம் என அனைத்தையும் விட்டு மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றிருக்கமாட்டார்கள். மாறாக அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது, ஓரிறைக் கொள்கையும், மக்களை இருளில் இருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதும் தான்.
14. ஒரு முஸ்லிம் குப்ருடைய நாட்டில் இருந்து, பகிரங்கமாக இஸ்லாமிய அடையாளங்களை நடைமுறைப்படுத்தமுடியுமான இஸ்லாமிய நாட்டிற்கு ஹஜ்ரத் செய்வது அவசியம். யாருக்காவது ஓரிடத்தில் இஸ்லாத்தின் அடையாளச் சின்னங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்தால், அவர் மார்க்கத்தை நிலைநாட்ட முடியுமான ஓர் இடத்திற்கு ஹிஜ்ரத் செய்வது மார்க்கக் கடமை ஆகும். அவ்வாறு செய்யாவிட்டால் அவர் பாவி ஆகிவிடுவார்.

[163] அஹ்மத் : 26967

15. நபி அவர்களின் நபித்துவம் மற்றும் தூதின் உண்மைத் தன்மையை பறைசாற்றும் சில அத்தாட்சிகள் நிகழ்ந்தமை. உதாரணமாக, ஸுராகா இப்னு மாலிக் என்பவர் நபி அவர்களை கண்டதும், அவர்களைப் பிடித்துத் தருபவருக்கு குறைசிகள் அறிவித்துள்ள சன்மானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அவர்களைப் பிடிக்க முற்பட்டபோது அவரது குதிரையின் கால்கள் அதன் முன்னங்கால் வரை நிலத்தினுள் சென்றது. பின்பு நபியவர்கள் அவரைப் பார்த்து, கிஸ்ராவின் இரு காப்புகள் அவருக்கு போர்ச்செல்வமாகக் கிடைக்கும் என்பதை உணர்த்தும் விதமாக, “ஸுராக்காவே! நீ கிஸ்ராவின் இரு காப்புகளை அணிந்து கொண்டிருப்பதை நான் காண்பது போல் உள்ளது” என்று கூறினார்கள்.[164] உண்மையில் உமர் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவ்வாறு நடைபெற்றது.
16. அனைத்து வாய்ப்புகளையும் அல்லாஹ்வை நோக்கி அழைப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்வது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் போகும் வழியில், “குராஉல் கமீம்” எனும் பள்ளத்தாக்கின் அருகாமையில் நடந்து செல்லும் போது, புரைதா இப்னுல் ஹுஸைய்யிப் எனும் மனிதரைக் கடந்து சென்றார்கள். அவர் தனது குடும்பத்தினர் 80 பேருடன் இருந்தார். அவர்களை இஸ்லாத்தை நோக்கி அழைத்த போது, அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு இஷாத் தொழுகையை நடத்திவிட்டு, அந்த இரவு ஸுரா மர்யமின் ஆரம்பத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்.[165] சகோதரர்களே! இதை நபி அவர்கள் செய்தது, இணைவைப்பாளர்கள் அவர்களைப் பிடித்துவிடுவார்களோ என்ற பயத்தில் இருந்தார்கள். ஆனாலும் சத்தியத்தை தெளிவாக சொல்ல வேண்டுமென்ற ஆர்வம், அல்லாஹ்வின் மீதுள்ள உண்மையான நம்பிக்கை ஆகியவை, தனது சுயபாதுகாப்பை விட தஃவாவை முக்கியமானதாக மாற்றிவிட்டன.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை அனைத்தும் நபியவர்களின் ஹிஜ்ரத்தில் உள்ள பயன்களாகும். நபியவர்களினதும், ஏனைய நபிமார்களின் வாழ்க்கை வரலாற்றிலும் நிறைய படிப்பினைகளும் பாடங்களும் உள்ளன. அவற்றிலிருந்து படிப்பினை பெற்று நடைமுறைப்படுத்துவார்களாக எம்மை ஆக்கி வைப்பானாக!

[164] தலாஇலுந் நுபுவ்வா (6-325)
[165] அல்பிதாயா வந்நிஹாயா (11-611)

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஸலவாத்தும் ஸலாமும் அவனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மற்றும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள்! அறிந்துகொள்ளுங்கள் : ஹிஜ்ரத் நிகழ்வை முன்னிட்டு கொண்டாட்டங்களை மேற்கொள்வது, அதனை கண்ணியப்படுத்துவதாக அமையமாட்டாது. அவற்றில் ஹிஜ்ரத்தின் சில படிப்பினைகள் பற்றிப் பேசப்பட்டாலும் சரியே! மாறாக, பொதுவாக நபி அவர்களின் ஸீராவையும், குறிப்பாக ஹிஜ்ரத்தையும் மகத்துவப்படுத்துவதென்பது, நபியவர்களைப் பின்பற்றுவது கொண்டும், அவற்றில் இணைந்துள்ள நூதனங்களை நீக்குவதுகொண்டுமே நிறைவேறும்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம்

செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள்

அல்லாஹ்வுக்கு இணைவைத்தல் (ஷிர்க்)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவ மன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழுபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

<u>அனைத்து ஷரியத் சட்டங்களும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதில் ஒருமித்த கருத்து கொண்டுள்ளது</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமல் இருங்கள்.

வானிலிருந்து இறக்கி அருளப்பட்ட எல்லா ஷரியத் சட்டங்களும் வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதையே வலியுறுத்துகிறது.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَاۤ اَرۡسَلۡنَا مِنۡ قَبۡلِكَ مِنۡ رَّسُوۡلٍ اِلَّا نُوۡحِىۡۤ اِلَيۡهِ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّاۤ اَنَا فَاعۡبُدُوۡنِ﴾

(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை. (அல்குர்ஆன் 21:25)

மேலும் கூறுகிறான் :

﴿فَاعْبُدِ اللّٰهَ مُخْلِصًا لَّهُ الدِّيْنَ﴾

ஆகவே, மார்க்கத்திற்கு அந்தரங்க சுத்தியுடையவராக நீர் அல்லாஹ்வை வணங்குவீராக. (அல்குர்ஆன் 39:2)

ஷேக் அப்துர் ரஹ்மான் அஸ்ஸஃதி ﷲ رحمه அவர்கள் மேலுள்ள இறைவசனத்திற்கு விளக்கம் சொல்லும்பொழுது கூறுகிறார்கள் : உங்கள் மார்க்க காரியங்கள் அனைத்தையும், அது இரகசியமாக அல்லது பகிரங்கமாக இருப்பினும் அதை

அல்லாஹ்வுக்காக ஆக்கிக் கொள்ளுங்கள். இஸ்லாம், ஈமான் மற்றும் இஹ்ஸான் இவை அனைத்திலும் அல்லாஹ்வையே ஒருமைப்படுத்தி அவன் திருமுகத்தையே நாடி வேறெந்த நோக்கமும் இல்லாமல் இருந்து கொள்ளுங்கள்.

﴿اَلَا لِلّٰهِ الدِّيْنُ الْخَالِصُ﴾

அறிந்து கொள்வீராக! களங்கமற்ற மார்க்க (வழிபாடு யாவு)ம் அல்லாஹ்வுக்கே உரியது; (அல்குர்ஆன் 39:3)

இந்த வசனம் இஃக்லாஸை வலியுறுத்துகிறது. மிக உயர்ந்தோனாகிய பரிபூரனமான அல்லாஹ்வுக்கு அவன் தன் அடியார்களின் மீது எல்லா வகையிலும் சிறப்பை கொண்டிருக்கிறான். அதே போல எந்த கலப்படமோ குறையோ இல்லாத பரிபூரனமான தூய்மையான மார்க்கம் அவனுக்கே உரியது. அதுவே அவன் தனக்கும் தன் சிறந்த படைப்பாகிய மனிதர்களுக்கும் பொருந்திக்கொண்ட மார்க்கமாகும். அதை பின்பற்றுவதையே அவர்களுக்கு கட்டளையாக கூறுகிறான். ஏனெனில் இந்த மார்க்கமே அல்லாஹ்வை இறைவனாக அவனை வணங்குவதில் அவனை நேசிப்பதில் அவனை அஞ்சுவதில் அவனிடமே எதிர்பார்த்து அவனையே சார்ந்து இருக்கும் எல்லா அம்சத்தையும் உள்ளடக்கியுள்ளது. அவனிடமே திரும்பி அவனையே சார்ந்து இருத்தல் அடியார்களின் தேவைகளை நிறைவேற்றும். அதுவே உள்ளங்களை சீர்செய்து அதை இணைவைப்பு இல்லாமல் தூய்மைபடுத்தி பரிசுத்தமாக்கும். இணைவைப்பிலிருந்து அல்லாஹ் தூரமானவன் அதில் அவனுக்கு எந்த பங்கும் இல்லை. அவன்

அனைத்து இணைவைப்பையும் விட்டு தேவையற்றவன். அது உள்ளத்தையும் ஆன்மாவையும் இவ்வுலகிலும் மறுமையிலும் பாழாக்கி ஆறாத ரணத்தை ஏற்படுத்தும்.

அனைத்து ஷரியத் சட்டங்களும் இணைவைப்பை ஒழிப்பதில் ஒருமித்த கருத்து கொண்டுள்ளது

அல்லாஹ்வின் நல்லடியார்களே! எல்லா ஷரியத் சட்டங்களும் இணைவைப்பிலிருந்து மக்களை எச்சரித்துள்ளது.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَلَقَدْ أُوْحِىَ اِلَيْكَ وَاِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ ۚ لَئِنْ اَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ   بَلِ اللّٰهَ فَاعْبُدْ وَكُنْ مِّنَ الشّٰكِرِيْنَ﴾

அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், "நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்" (என்பதுவேயாகும்). ஆகவே, நீர் அல்லாஹ்வையே வணங்குவீராக! மேலும், அவனுக்கு நன்றி செலுத்துபவர்களில் நின்றும் இருப்பீராக! (அல்குர்ஆன் 39:65,66)

<u>ஷிர்க் என்பதன் (இணைவைப்பு) வரைவிலக்கணம்</u>

மொழி அடிப்படையில் ஷிர்க் என்றால் ஒருமையாக இருக்கும் ஒன்றை மற்றவைகளோடு இணையாக்குவது. அதில் இரண்டு அல்லது அதற்கு மேலானவைகளோடு பங்கிடுவது. உதாரணம் : 'இரண்டு நபர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள்' என சொல்வது போல. அதே போலத்தான் 'இவன் அல்லாஹ்வுக்கு இணைவைத்து விட்டான்' என நாம் சொல்வது, அதாவது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தானவைகளில் அவனுக்கு இணையாக ஒன்றை ஆக்குதல். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படாது. அந்த தனி சிறப்புகள் அவன் பெயரிலோ பண்பிலோ அவனது செயல் அல்லது அவனுக்கே செய்யப்படும் வணக்கங்கள் என எதுவானதாகவும் இருக்கலாம்.

அப்படி இணைவைக்கப்படுவது ஒரு மனிதராகவோ அல்லது ஜின்னாகவோ அல்லது பொருளாகவோ அல்லது கல்லறையாகவோ அல்லது வேறு எதுவாகவும் கூட இருக்க கூடாது.

(ஆரம்ப காலத்தில்) மக்கள் தவ்ஹீதில் தான் இருந்தனர், பின்னர் நூஹ் (அலை) சமூகத்தினர் நல்லோர்களை அளவுக்கு மீறி அவர்களை தெய்வங்களாக ஆக்க அல்லாஹ் நூஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே!

மக்கள் ஆதம் (அலை) நபி காலத்திலிருந்து பத்து நூற்றாண்டுகளாக தவ்ஹீதில் தான் இருந்தார்கள். பின் இணைவைப்பு தோன்றியது. பின்னர் நூஹ் நபியை அல்லாஹ் அனுப்பினார்.

﴿كَانَ النَّاسُ أُمَّةً وَّاحِدَةً فَبَعَثَ اللّٰهُ النَّبِيّٖنَ مُبَشِّرِيْنَ وَمُنْذِرِيْنَ﴾

இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள் : நூஹ் மற்றும் ஆதம் நபிக்கும் இடையில் பத்து நூற்றாண்டுகள் இடைவேளை. அந்த காலகட்டத்தில் அனைவரும் சத்தியத்தில் தான் இருந்தார்கள் பின்னர் அதிலிருந்து விலகியதன் காரணத்தால் (அவர்களை சீர்படுத்த) நன்மைகளைக் கொண்டு சுபச்செய்தி சொல்லி பாவத்தின் விளைவுகளை பற்றி எச்சரிக்கை செய்ய அல்லாஹ் நபிமார்களை அனுப்பினான்.[166]

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَا كَانَ النَّاسُ اِلَّاۤ اُمَّةً وَّاحِدَةً فَاخْتَلَفُوْا﴾

மனிதர்கள் யாவரும் (ஆதியில்) ஒரே இனத்தவராகவே அன்றி வேறில்லை; பின்னர் அவர்கள் மாறுபட்டுக் கொண்டனர். (அல்குர்ஆன் 10:19)

[166] இப்னு ஜரீர் அறிவிக்கிறார் ஸூரா பகரா விளக்கவுரையில் : 213

அதாவது, அவர்கள் இருந்த சத்திய மார்க்கத்திலிருந்து விலகி இணைவைப்பில் விழுந்துவிட்டார்கள்.

மக்கள் இணைவைப்பில் விழுந்தபின் முதல் தூதராக தவ்ஹீதில் பால் மக்களை அழைக்க அல்லாஹ் அனுப்பிய தூதரே நூஹ் (அலை).

அல்லாஹ் கூறுகிறான் :

﴿إِنَّآ أَوۡحَيۡنَآ إِلَيۡكَ كَمَآ أَوۡحَيۡنَآ إِلَىٰ نُوحٖ وَٱلنَّبِيِّـۧنَ مِنۢ بَعۡدِهِۦ﴾

(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம். (அல்குர்ஆன் 4:163)

இப்னு கஸீர் (ரஹ்) கூறினார்கள் : சிலை வணக்கம் வரும் முன்னர் மக்கள் ஆதம் நபியின் கொள்கையில் தான் இருந்தார்கள். பின்னர் (வழிகேடு வந்தபின்) அல்லாஹ் நூஹ் நபியை முதல் தூதராக இந்த உலகத்திற்கு அனுப்பினான்.

நூஹ் நபியில் காலத்தின் ஷிர்க் என்பது நல்லோர்களை அளவுக்கு மீறி புகழ்வதிலிருந்து தொடங்கியது.

﴿وَقَالُواْ لَا تَذَرُنَّ ءَالِهَتَكُمۡ وَلَا تَذَرُنَّ وَدّٗا وَلَا سُوَاعٗا وَلَا يَغُوثَ وَيَعُوقَ وَنَسۡرٗا﴾

மேலும் அவர்கள்: "உங்கள் தெய்வங்களை விட்டுவிடாதீர்கள்; இன்னும் வத்து, ஸுவாஉ, யகூஸு, யஊக், நஸ்ரு ஆகியவற்றை நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள்" என்றும் சொல்கின்றனர். (அல்குர்ஆன் 71:23)

ஸஹீஹ் புகாரியில் இப்னு அப்பாஸ் (ரலி) இந்த வசனத்திற்கு விளக்கமாக கூறும்போது : (வத்து, ஸுவாஉ, யகூஸு, யஊக், நஸ்ரு) இவை அனைத்தும் நல்லடியார்களின் பெயர்கள். அவர்கள் மரணித்தபின் ஷைத்தான் அந்த சமூக மக்கள் உள்ளத்தில் (அவர்களின் கவலையை தணிக்கும் வண்ணம்) அவர்களின் உறுவங்களை சிலைகளாக வடிக்க தூண்டினான். அவர்களும் அப்படியே செய்தனர் ஆனால் அச்சிலைகளை

வணங்கவில்லை. காலம் செல்லச்செல்ல அடுத்த தலைமுறையினர் அச்சிலைகளை வணங்க ஆரம்பித்துடிட்டனர்.[167]

<u>தவ்ஹீதின் மூன்று வகைகளில் இணைவைப்பு நிகழ வாய்ப்புண்டு</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஸ்லாத்தை முறிக்கும் காரியமான ஷிர்கை குறித்து அறிவது இஸ்லாமிய மார்க்கத்தில் மிக முக்க அம்சம். யார் அந்த ஷிர்கில் ஈடுபடுவாரோ அவர் இஸ்லாமிய வட்டத்திலிருந்து வெளியேறி இறை மறுப்பாளராகிவிடுவார் அவர் எவ்வளவுதான் தொழுது நோன்பு வைத்து தன்னை முஸ்லிம் என சொல்லிக் கொண்டாலும் சரி. அல்குர்ஆன் முழுவதும் ஷிர்கின் மோசமான நிலையையும் அதன் விளைவையும் பற்றிய செய்திகளை பார்க்கலாம். அல்லாஹ் அதிலிருந்து நம்மை பாதுகாப்பானாக.

ஈமான் கொண்டோர்களே! ஷிர்க் தவ்ஹீதுர் ருபூபிய்யா (அல்லாஹ்வின் இறைமைகளில் இணைவைப்பு). தவ்ஹீதுல் உலூஹிய்யா (வணக்க வழிபாடுகளில் இணைவைப்பு) மற்றும் தவ்ஹீதுல் அஸ்மா வஸ் ஸிஃபாத் (பெயர் மற்றும் பண்புகளில் இணைவைப்பு ஆகிய தவ்ஹீதின் வகைகளில் நிகழக்கூடும்.

தவ்ஹீதுர் ருபூபிய்யாவில் இணைவைப்புக்கான உதாரணம் இந்த பிரபஞ்சத்திற்கு அல்லாஹ்வுடன் இன்னொரு இரட்சகன் இருக்கிறான் என நம்புவது. மேலும் நமக்கு உணவளிப்பது படைத்தல் உயிர்கொடுத்தல் மரணிக்கச்செய்தல் ஆகியவைகளில் அல்லாஹ்வோடு மற்றவர்களும் பங்குகொள்கின்றனர் என நம்பினால் அவன் முஷ்ரிக் (இணைவைப்பாளன்) ஆகிவிடுகிறான். மேல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் மற்றும் இன்னும் பல்வேறு செயல்களில் அல்லாஹ்வை மட்டுமே ஒருமைப்படுத்துவது கடமையாகும். அதில் எது ஒன்றையும் அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் இணை கற்பிக்காமல் இருக்க வேண்டும்.

அஸ்மா - அல்லாஹ்வின் பெயர்களில் இணைவைப்புக்கான உதாரணம் : நபியின் காலத்தில் வாழ்ந்த முஸைலமா இப்னு கத்தாப் தன்னை தானே

[167] ஸஹீஹுல் புகாரி (4920)

‘ரஹ்மானுல் யமாமா’ (யமாமாவில் அருளாளன்) என அழைத்துக்கொண்டான். தனக்கு நபித்துவம் இருப்பதாகவும் பொய் சொன்னான். தனக்கு அல்லாஹ்வுக்கு பிரத்யேகமான இருக்கும் பெயரான ‘அர்ரஹ்மான்’ என்ற பெயரை தனக்கு சூட்டிக்கொண்டான்.

அல்லாஹ்வின் பண்புகளில் இணைவைப்புக்கான உதாரணம் : அல்லாஹ் மட்டுமே அறிந்த மறைவான ஞானம் மற்றவர்களுக்கு இருக்கு என நம்புவது. உதாரணமாக ஜோதிடம் மற்றும் குறிசொல்பர்களுக்கு எதிர்காலம் பற்றிய ஞானம் உண்டு என நம்பினால் அது இணைவைப்பு. இதே நம்பிக்கை நபியின் மீது இருந்தாலும் அது இணைவைப்பு தான். யார் இவைகளை நம்புவாரோ அவர் முஷ்ரிக் (இணைவைப்பாளர்). ஆக அல்லாஹ் தன்னிடமுள்ள மறைவான ஞானம் பற்றி சொல்வது போல ஈமான் கொண்டு அவனை மற்ற பண்புகளிலும் ஒன்றுபடுத்துவது நம்மீது கடமையாகும்.

﴿قُلْ لَّا يَعْلَمُ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ الْغَيْبَ اِلَّا اللّٰهُ﴾

(இன்னும்) நீர் கூறுவீராக: “அல்லாஹ்வைத் தவிர்த்து, வானங்களிலும், பூமியிலும் இருப்பவர் எவரும் மறைவாயிருப்பதை அறிய மாட்டார்; (அல்குர்ஆன் 27:65)

வணக்க வழிபாடுகளில் இணைவைப்பு என்வது அடியார்களின் செயல்களோடு தொடர்புடையது. அது வணக்கங்களை அல்லாஹ்வுக்காக மட்டும் இல்லாமல் அவனோடு மற்றவைகளை இணையாக்குவது. துஆ, ஸஜ்தா, அறுத்து பலியிடுதல், நேர்ச்சை, ஆவல், எதிர்பார்ப்பு, ஆதரவு வைத்தல் என எந்த வணக்கமாக இருந்தாலும் அதை அல்லாஹ்வுக்காக மட்டுமல்லாமல் மற்றவைகளிடம் இதனை திருப்பினால் அவன் நிச்சயம் மேலான அல்லாஹ்வுக்கு இணை வைத்துவிட்டான்.

அல்லாஹ் தன் நபியிடம் கூறுகிறான் :

﴿وَلَـقَدْ اُوْحِىَ اِلَيْكَ وَاِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ‌ۚ لَـئِنْ اَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ بَلِ اللّٰهَ فَاعْبُدْ وَكُنْ مِّنَ الشّٰكِرِيْنَ﴾

அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், “நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்” (என்பதுவேயாகும்). ஆகவே, நீர் அல்லாஹ்வையே வணங்குவீராக! மேலும், அவனுக்கு நன்றி செலுத்துபவர்களில் நின்றும் இருப்பீராக! (அல்குர்ஆன் 39:65,66)

அல்லாஹ் தன்னிடமே பிரார்த்திக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

﴿فَادْعُوا اللهَ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ﴾

நீங்கள் முற்றிலும் அவனுக்கே வழிபட்டு மார்க்கத்தில் பரிசுத்தத்துடன் அல்லாஹ் ஒருவனையே (பிரார்த்தித்து) அழையுங்கள். (அல்குர்ஆன் 40:14)

மேலும் அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள் :

الدُّعَاءُ هُوَ الْعِبَادَةُ

பிரார்த்தனையே வணக்கமாகும்.[168]

பிரார்த்தனை யாவும் அல்லாஹ்விடம் மட்டுமே இருக்க வேண்டும் என சுமார் என்பது இடங்களில் குர்ஆனில் அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

அல்லாஹ்விடம் நெருக்கத்தை பெற்றுத்தரும் அறுத்து பலியிடுதல் பொறுத்தவரை அதுவும் அல்லாஹ்வுக்காக மட்டுமே இருக்கவேண்டும் என கட்டளையிடுகிறான்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿ فَصَلِّ لِرَبِّكَ وَانْحَرْ ﴾

எனவே, உம் இறைவனுக்கு நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக. (அல்குர்ஆன் 108:2)

[168] அபூதாவூத் (1479), அத்திர்மிதி (2969), மேலும் மற்ற ஹதீஸ் தொகுப்பு இமாம்கள் நுஃமான் பின் பஷீர் வாயிலாக அறிவிக்கிறார்கள். தரம் : ஸஹீஹ் (அல்அல்பானி)

﴿قُلْ اِنَّ صَلَاتِيْ وَنُسُكِيْ وَ مَحْيَایَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ لَا شَرِيْكَ لَهٗ وَبِذٰلِكَ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ﴾

நீர் கூறும்: "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்.

"அவனுக்கே யாதோர் இணையுமில்லை - இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் - (அவனுக்கு) வழிப்பட்டவர்களில் - முஸ்லிம்களில் - நான் முதன்மையானவன் (என்றும் கூறும்). (அல்குர்ஆன் 6:162,163)

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள் :

﴿لَعَنَ اللَّهُ مَنْ ذَبَحَ لِغَيْرِ اللَّهِ﴾

அல்லாஹ்வுக்காக அல்லாமல் மற்றவைகளுக்கு அறுத்து பலியிடுபவர்களை அல்லாஹ் சபிக்கிறான்.[169]

இச்செய்திகள் நமக்கு சொல்லும் கருத்தெல்லாம், யார் அல்லாஹ்வுக்கு மட்டும் செலுத்தவேண்டிய வணக்கங்களை மற்றவைகளுக்கு செய்வானோ அவன் இணை வைத்துவிட்டான். அவன் வணங்கியது கல்லறை, கப்ர், சூனியக்காரன், ஜின் அல்லது வேறெதுவாக இருந்தாலும் சரி. அவன் இணையாக வைப்பவைகள் அல்லாஹ்விடம் நெருக்கத்தை ஏற்படுத்தும், பரிந்துரை செய்யும் அல்லது இடயாக இருக்கும் என எப்படி நம்பினாலும் அது ஷிர்க் தான். இதுவே வழிதவறிய இணை வைப்பாளர்களின் வாதமாக இருந்தது.

அல்லாஹ் இணைவைப்பாளர்கள் பற்றி கூறுகிறான் :

﴿وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُوْلُوْنَ هٰٓؤُلَاۤءِ شُفَعَآؤُنَا عِنْدَ اللّٰهِ﴾

தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள்; இன்னும் அவர்கள்,

[169] ஸஹீஹ் முஸ்லிம் 1978 அறிவிப்பாளர் : அலி (ரலி)

“இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை” என்றும் கூறுகிறார்கள்; (அல்குர்ஆன் கo:18)

﴿وَالَّذِيْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِهِ اَوْلِيَآءَ ۘ مَا نَعْبُدُهُمْ اِلَّا لِيُقَرِّبُوْنَا اِلَى اللّٰهِ زُلْفٰى﴾

இன்னும், அவனையன்றிப் பாதுகாப்பாளர்களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள், “அவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவேயன்றி நாங்கள் அவர்களை வணங்கவில்லை” (என்கின்றனர்) (அல்குர்ஆன் ௩௯:3)

﴿اَمِ اتَّخَذُوْا مِنْ دُوْنِ اللّٰهِ شُفَعَآءَ ؕ قُلْ اَوَلَوْ كَانُوْا لَا يَمْلِكُوْنَ شَيْـــٴًــا وَّلَا يَعْقِلُوْنَ﴾

அவர்கள் அல்லாஹ் அல்லாதவற்றை(த் தங்களுக்குப்) பரிந்து பேசுபவர்களாக எடுத்துக் கொண்டார்களா? (நபியே!) கூறுவீராக! “அவை எந்த சக்தியையும், அறிவையும் பெறாமல் இருந்த போதிலுமா?” (என்று.) (அல்குர்ஆன் ௩௯:43)

ஆக இடைத்தரகர்கள், மன்றாடுபவர்கள் என்ற அடிப்படையில் மற்றவைகளுக்கு இணைவைப்பது குர்ஆனின் ஆதாரங்கள் படி மறுக்கத்தக்கதாகும். யார் இதுபோன்ற காரியங்கள் செய்து அதற்கு மற்ற புதிய பெயர்களை வைத்துக்கொண்டு அல்லாஹ்வையும் படைப்புகளையும் ஒன்றாக்கி இவ்வுலகின் தலைவர்களை நேரடியாக சந்திக்க முடியாது மாறாக இடைத்தரகர்கள், பரிந்துரையாளர்கள் மூலமே சந்திக்க முடியும் அதுபோன்று தான் அல்லாஹ்வை அடைய நெருங்கியவர்கள், பரிந்துரையாளர்கள், நபிமார்கள், நல்லோர்களின் கப்ருகள் ஆகியவை துணையாக இருக்கும் என கூறுவது அல்லாஹ்வுக்கு வைக்கும் பகிரங்கமாக இணைவைப்பாகும்.

சுருக்கமாக, ஷிர்க் தவ்ஹீதின் மூன்று வகைகளில் நிகழ வாய்ப்புள்ளது, அது தவ்ஹீதுர் ருபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா மற்றும் தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத், இதில் அதிகமாக தவ்ஹீதுல் உலூஹிய்யா

(வணக்கத்தில் அல்லாஹ்வை ஒறுமை படுத்தல்) என்ற இந்த வகையில் தான் அதிகாம ஷிர்க் நிகழ வாய்ப்புள்ளது.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஃலாஸ் மற்றும் ஷிர்க் பற்றி அறிய இது ஒரு சிறிய முன்னுரை தான். யார் அதனை புரிந்து கொள்வாரோ அவர் அல்லாஹ் மனிதர்களை படைத்த நோக்கத்தை அறிந்துகொள்ளும் பாக்கியம் கிட்டும்.

அல்லாஹ் அல்குர்ஆன் மூலம் எனக்கும் உங்களுக்கும் அருள் செய்வானாக! அதன் வசனங்கள் செய்திகள் மூலம் எனக்கும் உங்களுக்கும் பயனளிப்பானாக! மன்னித்தருளும் கருனையாளன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடி என் உரையை முடிக்கிறேன்.

<u>இரண்டாம் உரை</u>

<u>ஷிர்கின் மோசமான ஆறு அம்சங்கள்</u>

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே! இறுதித்தூதர் முஹம்மது அவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. அல்லாஹ்வின் நல்லடியார்களே நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். ஷிர்கின் மோசமான ஆறு அம்சங்ளை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.

<u>முதலாவது</u> : பாவங்களில் மிக மோசமானது ஷிர்க் ஆகும். ஏனெனில் அது அல்லாஹ்வுக்கு மனிதர்கள் செய்யும் கடமைகளாகிய வணக்கம், பணிவு, அடிபணிதல் ஆகிய அனைத்தையும் அழித்துவிடுகிறது. அது அல்லாஹ்வுடனான நெருக்கத்தை முறித்துவிடுகிறது மேலும் அல்லாஹ்வின் மீது தவறான எண்ணங்கள் வர காரணமாக அமைகிறது.

பெரும்பாவங்களில் மிகப்பெரும் பாவம் ஷிர்க்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدِ افْتَـرٰۤى اِثْمًا عَظِيْمًا﴾

யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும்

பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள். (அல்குர்ஆன் 4:48)

﴿إِنَّ الشِّرْكَ لَظُلْمٌ عَظِيمٌ﴾

நிச்சயமாக இணை வைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும் (அல்குர்ஆன் 31:13)

இப்னு மஸ்ஊது (ரலி) அறிவிக்கிறார்கள் : நான் அல்லாஹ்வின் தூதரிடம் கேட்டேன் 'அல்லாஹ்வின் தூதரே! பாவங்களில் மிக மோசமானது எது?' அதற்கு அவர் : 'உன்னை படைத்த அல்லாஹ்வுக்கு நீ இணை வைப்பது' என பதிலளித்தார்கள்.[170]

இரண்டாவது : ஷிர்க் எல்லா நல்லமல்களையும் அழித்துவிடும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَلَوْ أَشْرَكُوا لَحَبِطَ عَنْهُمْ مَا كَانُوا يَعْمَلُونَ﴾

(பின்னர்) அவர்கள் இணைவைப்பார்களானால், அவர்கள் செய்து வந்ததெல்லாம், அவர்களை விட்டு அழிந்துவிடும். (அல்குர்ஆன் 6:88)

மேலும் அல்லாஹ் தன் நபியை பார்த்து கூறுகிறான் :

﴿وَلَقَدْ أُوحِيَ إِلَيْكَ وَإِلَى الَّذِينَ مِنْ قَبْلِكَ لَئِنْ أَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ﴾

அன்றியும், உமக்கும், உமக்கு முன் இருந்தவர்களுக்கும், வஹீ மூலம் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது என்னவென்றால், "நீர் (இறைவனுக்கு) இணை வைத்தால், உம் நன்மைகள் (யாவும்) அழிந்து, நஷ்டமடைபவர்களாகி விடுவீர்கள்" (என்பதுவேயாகும்). (அல்குர்ஆன் 39:65)

மூன்றாவது : யார் இணைவைத்த நிலையில் மரணிப்பாரோ அவருக்கு அலலாஹ்வின் மன்னிப்பு கிடையாது. மேலும் அவர் நரகத்தில் நிரந்தரமாக தள்ளப்படுவார்.

[170] அல் புகாரி 6811

அல்லாஹ் கூறுகிறான் :

﴿اِنَّ اللّٰهَ لَا يَغْفِرُ اَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰ لِكَ لِمَنْ يَّشَآءُ وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ ضَلَّ ضَلٰلًاۢ بَعِيْدًا﴾

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்; இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்; எவன் ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றானோ, அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் ஆகிவிட்டான். (அல்குர்ஆன் 4:116)

﴿اِنَّهٗ مَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَقَدْ حَرَّمَ اللّٰهُ عَلَيْهِ الْجَـنَّةَ وَمَاْوٰهُ النَّارُ‌ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ﴾

எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனத்தை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை. (அல்குர்ஆன் 5:72)

நான்காவது : அல்லாஹ் ஷிர்கை குறித்து குர்ஆனில் கடுமையாக கூறி அதை எச்சரித்துள்ளான் மேலும் அதை செய்பவர்களை இழிவுபடுத்தியுள்ளான். மேலும் அவர்களின் மறுமையில் இறுதிநிலை இழிவானதாகவே இருக்கும் என கூறியுள்ளான். ஷிர்க் மற்றும் அது தொடர்பான வார்த்தைகளை நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் குர்ஆனில் அல்லாஹ் கூறியுள்ளான். அதே போல சுன்னாவிலும் நபி ﷺ அதை குறித்து பலமுறை எச்சரித்துள்ளார்கள். [171]

ஐந்தாவது : நபிமார்களும் அவர்களை பின்பற்றியவர்கள் அனைவரும் ஷிர்கை அஞ்சுபவர்களாக அதில் விழுந்துவிடக்கூடாது என பயம் கொண்டவர்களாகவே இருந்தனர்.

﴿وَّاجْنُبْنِىْ وَبَنِىَّ اَنْ نَّـعْبُدَ الْاَصْنَامَ﴾

[171] முஃஜமுல் முஃபஹ்ரஸ் லிஅல்ஃபாளில் குர்ஆன் அல்கரீம். தலைப்பு : ஷிர்க்

என்னையும், என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!" என்று இப்ராஹீம் கூறியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூறும்). (அல்குர்ஆன் 14:35)

ஆறாவது : இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவின்படி வணக்கங்களில் இணைவைப்பு என்பது இறைமறுப்பாகவும் மார்க்கத்தை விட்டும் வெளியேற்றுவதாகவும் இருக்கும் செயல் என கருதப்படுகிறது. இமாம் இப்னு தைமிய்யா رحمه الله கூறினார்கள் : யார் மலக்குமார்களையும் நபிமார்களையும் அல்லாஹ்வும் தனக்கும் இடையில் ஆக்கிக்கொண்டு அவர்களிடம் பிரார்த்தனை செய்து அவர்களை சார்ந்து இருந்து அவர்களிடம் நன்மையை நாடி தீமையை விட்டு பாதுகாப்பு கேட்பாரோ, உதாரணம் : அவர்களிடம் பாவமன்னிப்பு கேட்பது, உள்ளத்திற்கான நேர்வழியை கேட்பது, சிரமங்கள் நீங்க பிரார்த்தை மற்றும் வறுமையிலிருந்து பாதுகாப்பு இதுபோன்ற அனைத்தும் முஸ்லிம்களின் ஏகோபித்த கருத்தின்படி அவர் காஃபிர் (இறைமறுப்பாளர்) ஆவார்.[172]

முடிவுரை :

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இது தவ்ஹீத் மற்றும் அதன் நேரெதிராக இருக்கும் ஷிர்கின் ஆபத்துகள் மற்றும் அதிலிருந்து பாதுகாத்துக்கொள்வது குறித்து விளக்கும் ஒரு தொடக்க உரையே. மரணம் வரை தவ்ஹீதில் நிலைத்திருக்க அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்புரிவானாக! யார் ஷரீஅத்தின் அடிப்படியில் நிலைத்திருந்து தவ்ஹீதிலேயே மரணிப்பாரோ அவர் எந்த கேள்விகணக்கோ வேதனையோ இல்லாமல் சுவனம் நுழைவார்.

மேலும் அறிந்துகொள்ளுங்கள் அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு ஓர் மேனானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَٰٓأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا﴾

172 மஜ்மூஉல் ஃபதாவா இப்னு தைமிய்யா (1/124)

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.(அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி மீது அருள்புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக்கொள்வாயாக! மேலும் பியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் நீ பொருந்திக்கொள்வாயாக! யா அல்லாஹ், உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம். யா அல்லாஹ்! நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீது அருள்புரிவாயாக!

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 2

இணைவைப்பவர்களை காஃபிர்கள் என ஏற்றுக்கொள்ளாமை அல்லது அவர்களின் இறைமறுப்பை சந்தேகப்படுவது அல்லது அவர்கள் கொள்கையை சரிகாண்பது

إنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவ மன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழிபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُواْ اتَّقُواْ اللّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوتُنَّ إِلاَّ وَأَنتُم مُّسْلِمُونَ﴾.

நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள். (அல்குர்ஆன் 3:102)

﴿يَا أَيُّهَا النَّاسُ اتَّقُواْ رَبَّكُمُ الَّذِى خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالاً كَثِيراً وَنِسَاء وَاتَّقُواْ اللّهَ الَّذِى تَسَاءلُونَ بِهِ وَالأَرْحَامَ إِنَّ اللّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبا﴾.

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும்

(ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (அல்குர்ஆன் 4:1)

﴿يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلاً سَدِيداً * يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَن يُطِعْ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزاً عَظِيماً﴾

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். (அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்குச் சீராக்கி வைப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பான்; அன்றியும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ, அவர் மகத்தான வெற்றி கொண்டு விட்டார். (அல்குர்ஆன் 33:70,71)

வார்த்தைகளில் உண்மையானது அல்லாஹ்வின் வார்த்தைகளே ஆகும், வழிமுறைகளில் சிறந்தது முஹம்மது நபியின் வழியே ஆகும். காரியங்களில் கெட்டது மார்க்கத்தில் புதுமைகள், ஒவ்வொரு புதுமைகளும் பித்அத், ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடு, ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கு இட்டுச்செல்லும்.

அல்லாஹ்வை நம்புவது மற்றும் இதர தெய்வங்களை மறுப்பது கட்டாயம் ஆகும்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமல் இருங்கள்.

வானிலிருந்து இறக்கி அருளப்பட்ட எல்லா ஷரியத் சட்டங்களும் வணக்க வழிபாடுகளில் இரண்டு முக்கிய அடிப்படையின் கீழ் அல்லாஹ்வை ஒருமைப் படுத்துவதையே வலியுறுத்துகிறது.

முதலாவது : இதர தெய்வங்களாக வணங்கப்படும் அனைத்தையும் விட்டு விலகியிருப்பது. இரண்டாவது : அல்லாஹ்வுக்கு மட்டுமே வணக்கங்கள் யாவும் உரித்தானது என நம்புவது, அதுவே தவ்ஹீத். யார் இறைமறுப்பாளர்களின் மார்க்கத்தை விட்டு விலகவில்லையோ அவர் அந்த தெய்வங்களை விட்டும் விலகாதவராக அதனை மறுப்பவராக ஆக மாட்டார்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا﴾

ஆகையால், எவர் ஷைத்தானை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக்கொண்டார் (அல்குர்ஆன் 2:256)

யார் பிற தெய்வங்களை நிராகரிக்கவில்லையோ அவர் இஸ்லாம் எனும் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை பற்றிக்கொண்டவராக ஆகமாட்டார் என்பதையே இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது.

இப்ராஹீம் (அலை) தான் தன் சமுதாயத்தினரின் மார்க்கத்தை விட்டு விலகியவர் என கூறும்போது :

﴿اِنَّنِىْ بَرَآءٌ مِّمَّا تَعْبُدُوْنَۙ اِلَّا الَّذِىْ فَطَرَنِىْ فَاِنَّهٗ سَيَهْدِيْنِ وَ جَعَلَهَا كَلِمَةًۢ بَاقِيَةً فِىْ عَقِبِهٖ لَعَلَّهُمْ يَرْجِعُوْنَ﴾

"நிச்சயமாக நான், நீங்கள் வழிபடுபவற்றைவிட்டும் விலகிக்கொண்டேன்" என்று கூறியதையும் "என்னைப் படைத்தானே அவனைத் தவிர (வேறெவரையும் வணங்கமாட்டேன்); அவனே எனக்கு நிச்சயமாக நேர்வழி காண்பிப்பான்" (என்று கூறியதையும் நினைவுகூர்வீராக)! இன்னும், தம் சந்ததியினர் (அல்லாஹ்வின் பக்கம்) திரும்பிவரும் பொருட்டு (இப்ராஹீம் ஓரிறைக் கொள்கையை) அவர்களிடம் ஒரு நிலையான வாக்காக ஏற்படுத்தினார். (அல்குர்ஆன் 42:26,27,28)

وعن طارق بن أشيم الأشجعي رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم أنه قال: ﴿من قال لا إله إلا الله، وكفر بما يُعبد من دون الله؛ حَرُم ماله ودمه، وحسابه على الله﴾

தாரிக் பின் அஷீம் அல்அஷ்ஜயீ (ரலி) அறிவிக்கிறார்கள் நபி ﷺ கூறியதாக : யார் 'லா இலாஹ இல்லல்லாஹ்' (அல்லாஹ்வை தவிர வணங்க தகுதியானவன் வேறு யாரும் இல்லை) என கூறி அவனை தவிர வணங்கப்படும் மற்றவைகளை மறுப்பாரோ அவர் செல்வம் மற்றும் இரத்தம் பாதுகாப்பு அடைந்தது மேலும் அவரின் கேள்விகணக்கு அல்லாஹ்விடமே உண்டு. [173]

[173] ஸஹீஹ் முஸ்லிம் (23)

இந்த ஹதீஸ் நமக்கு தெரிவிப்பது என்னவெனில், யார் அல்லாஹ்வை தவிர வணங்கப்படும் மற்ற தெய்வங்களை மறுக்கவில்லையோ அவரது செல்வம் மற்றும் இரத்தம் பாதுகாப்பு பெறாது என்பதோடு இது காஃபிரின் நிலையை போன்றதாகும்.

இணைவைப்பாளர்களை இறைமறுப்பாளர்கள் என ஏற்றுக்கொள்ளாமை இஸ்லாத்தை விட்டு வெளியேற்றும் செயல் - அதன் விளக்கம் பின்வருமாறு

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மேற்குறிப்பிட்ட குர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகள் அடிப்படையில் பார்த்தால், யார் இணைவைப்பவர்களை இறைமறுப்பாளர்கள் என ஏற்காமல் அல்லது அவரின் இணைவைப்பில் சந்தேகம் கொண்டாலோ அல்லது அவரின் கொள்கையை சரிகண்டால் அவரும் இறைமறுப்பாளர் ஆகிவிடுகிறார் அதோடு இஸ்லாத்தை விட்டு வெறியேற்றும் காரியத்தில் ஈடுபட்டுவிட்டார்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! வழிகெட்ட கொள்கைகளை பின்பற்றுபவர்களை யார் இறைநிராகரிப்பாளர்கள் என கருதவில்லையோ அவரும் இறைமறுப்பாளராகவே கருதப்படுவார் மேலும் அவர் முஸ்லிம் அல்ல ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும் யாரை இறைமறுப்பாளர்கள் என கூறினார்களோ அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் குர்ஆனின் செய்திகளையும் நபியின் கட்டளைகளையும் ஏற்கவில்லை. யார் அல்லாஹ் மற்றும் அவன் தூதரின் செய்திகளை ஏற்று நம்பவில்லையோ அவர் இறைமறுப்பாளர் ஆவார், அந்நிலையிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

பின்னர் யார் இணைவைப்பாளர்களை காஃபிர்கள் என கருதவில்லையோ அவரின் ஈமானும் குஃப்ரும் ஒரே தரத்தில் தான் காணப்படும். இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இருக்காது.[174]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! யார் காஃபிர்களை உண்மையில் இறைமறுப்பாளர்களாக கருதவில்லையோ அவர் அடிப்படையில் இஸ்லாத்திற்கும் குஃப்ருக்கும் இடையிலான வேறுபாட்டை அறியாதவராவார். இது மார்க்கத்தில் கட்டாயம் அறிந்திருக்கவேண்டிய காரியங்களில் ஒன்று. குஃப்ருக்கு எதிரான எச்சரிக்கை மற்றும் இம்மை மறுமையில் காஃபிர்களின் தண்டனைகளைகளையும் குர்ஆன் முழுக்க நாம் நிறைந்து காணமுடிகிறது. இந்நிலையில் யார் காஃபிர்களை

[174] ஷேக். ஸாலிஹ் அல்ஃபவ்ஸான் "ஷர்ஹ் நவாகிதுல் இஸ்லாம்" நூலிலிருந்து பக்கம் : 79

மறுக்காமல், இஸ்லாம் மற்றும் குஃப்ர் இவை இரண்டுக்கும் மத்தியில் உள்ள வேறுபாட்டை அறியாமல் உள்ளத்தாலும் நாவாலும் இறைமறுப்பை விட்டு விலகாமல் இருப்பாரோ அவர் தன்னை முஸ்லிம் என சொல்லிக் கொள்வதற்கு தகுதியானவர் அல்ல.
மேலும் யாரை அல்லாஹ்வும் அவன் தூதரும் காஃபிர் என அறிவித்த பின்னர் அதை ஏற்காமல் இருப்பாரோ அவர் அல்லாஹ் ஹராமாக்கிய இணைவைப்பை குஃப்ராக கருதாமல் அதை ஹலாலாக ஆக்கிக்கொண்டார். இது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமானது அவனை எதிர்ப்பது போன்றது.
அல்லாஹ் கூறுகிறான் :

﴿قُلْ تَعَالَوْا اَتْلُ مَا حَرَّمَ رَبُّكُمْ عَلَيْكُمْ اَلَّا تُشْرِكُوْا بِهٖ شَيْـــًٔـــا﴾

வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றை(யும், ஏவியிருப்பவற்றையும்) நான் ஓதிக்காண்பிக்கிறேன்: எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள்; (அல்குர்ஆன் 6:151)
இப்னு ஸஃதி (ரஹ்) கூறினார்கள் : மார்க்கம் எவையெல்லாம் குஃப்ர் என சொல்லுதோ அதை நாமும் குஃப்ர் என ஏற்க வேண்டும். யாரை அல்லாஹ்வும் அவன் தூதரும் காஃபிர் என அறிவித்த பின்னர் அதை ஏற்காமல் இருப்பாரோ அவர் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் மார்க்க ஆதாரங்கள் அடிப்படையில் பொய்ப்பித்துவிட்டார்.[175]
ஷேக். அப்துல் அஸீஸ் பின் பாஸ் (ரஹ்) கூறினார்கள் : தெளிவான ஆதாரங்கள் மற்றும் விளக்கங்களுக்கு பிறகும் யார் காஃபிர்களை இறைமறுப்பாளர்களாக கருதவில்லையோ அவரும் அவர்களை போன்றவர்கள் தான். யூதர்கள், கிருத்தவர்கள், கம்யூனிசவாதிகள் மற்றும் இன்னும் பல தெளிவான இறைமறுப்பாளர்களை காஃபிர்கள் என கருதாதவர்கள் போன்றவர்கள் இவர்கள்.[176]
ஷேக் ஸாலிஹ் பின் ஃபவ்ஸான் அல்ஃபவ்ஸான் கூறினார்கள் : யார் முஷ்ரிகுக்களை இறைமறுப்பாளர்களாக கருதவில்லையோ அவரும் அவர்களை போன்று காஃபிராக இஸ்லாத்தை விட்டு வெளியேறியவராகவே

[175] அல்ஃபதாவா அஸ்ஸயீதா பக்கம் : 98
[176] மஜ்மூஉ ஃபதாவா வமகாலாத் முதனவ்விஆ (7/418), தாருல் காஸிம் - ரியாத்
[2] “ஷர்ஹ் நவாகிதுல் இஸ்லாம்” நூலிலிருந்து பக்கம் : 79

கருதப்படுவார். ஏனெனில் ஈமானும் குஃப்ரும் ஒரே நிலையில் இருப்பதே அதன் காரணம். இரண்டுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. [177]

பிற தெய்வங்களை மறுப்பதன் அவசியம் :

அல்லாஹ்வின் நல்லடியார்களே! பிற தெய்வங்களை மறுப்பதன் முக்கியத்துவம் எந்தளவு இருக்கும் என்றால் அல்லாஹ் அவனை ஈமான் கொள்வதற்கு கட்டளையிடும் முன்னர் மற்ற தெய்வங்களை நிராகரிக்கும்படி கட்டளையிடுகிறான்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا﴾

எவர் ஷைத்தானை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக்கொண்டார்; (அல்குர்ஆன் உ:256)

இது தீயதை விட்டு முதலில் விலகி பின்னர் நன்மையை பின்பற்றும்படி சொல்லும் வழிமுறை.

பிற தெய்வங்களை மறுப்பதன் 5 நிலைகள் :

அல்லாஹ்வின் நல்லடியார்களே! வழிகெட்ட மதங்களை மறுத்தல் ஐந்து கரியங்களால் அமையப்பெறும். அவை, அதை வழிகேடு என நம்புவது, அதிலுள்ள வழிபாடுகளை விடுவது, அதை வெறுப்பது, அதை பின்பற்றுபவர்களை காஃபிர்கள் என நம்புவது மற்றும் அதை எதிர்ப்பது. இவை அனைத்தும் அல்லாஹ்வின் வார்த்தைகளில் இருந்து நாம் அறிய முடிகிறது. அல்லாஹ் கூறுகிறான் :

﴿قَدْ كَانَتْ لَـكُمْ اُسْوَةٌ حَسَنَةٌ فِىْۤ اِبْرٰهِيْمَ وَالَّذِيْنَ مَعَهٗ ۚ اِذْ قَالُوْا لِقَوْمِهِمْ اِنَّا بُرَءٰٓؤُا مِنْكُمْ وَمِمَّا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ كَفَرْنَا بِكُمْ وَبَدَا بَيْنَنَا وَبَيْنَكُمُ الْعَدَاوَةُ وَالْبَغْضَآءُ اَبَدًا حَتّٰى تُؤْمِنُوْا بِاللّٰهِ وَحْدَهٗۤ﴾

இப்ராஹீமிடமும் அவரோடு இருந்தவர்களிடமும், நிச்சயமாக உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது; தம் சமூகத்தாரிடம் அவர்கள், "உங்களைவிட்டும், இன்னும் அல்லாஹ்வையன்றி நீங்கள் வணங்குகிறவற்றை விட்டும், நாங்கள் நிச்சயமாக நீங்கிக்கொண்டோம்;

உங்களையும் நாங்கள் நிராகரித்துவிட்டோம்; அன்றியும், (ஏகனான) அல்லாஹ் ஒருவன் மீதே நீங்கள் நம்பிக்கைகொள்ளும் வரை, நமக்கும் உங்களுக்குமிடையில் பகைமையும், வெறுப்பும் நிரந்தரமாக ஏற்பட்டுவிட்டன" என்றார்கள்; (அல்குர்ஆன் 60:4)

இவ்வசனம் மூன்று அம்சங்களை வெளிப்படையாக நமக்கு அறிவிக்கிறது. காஃபிர்களிடமிருந்தும் அவர்கள் செயல்களிடமிருந்தும் விலகியிருப்பது, அதனை வெறுப்பது மற்றும் எதிர்ப்பது.

அதன் கொள்கையை வழிகேடு என நம்புவது இவ்வசனத்தின் கருப்பொருளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். வழிகேடு என்ற நம்பிக்கை இல்லாமல் மற்ற மூன்று காரியங்களும் நிறைவேறாதல்லவே.

மேலும் அக்கொள்கையின் வழிபாடுகளை விட்டு விலகுவது என்ற செய்தியை இப்ராஹீம் (அலை) அவர்களின் சொல்லிலிருந்து நாம் அறிய முடிகிறது.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَ اَعْتَزِلُـكُمْ وَمَا تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ وَاَدْعُوْا رَبِّي عَسٰٓى اَلَّآ اَكُوْنَ بِدُعَآءِ رَبِّيْ شَقِيًّا﴾

"நான் உங்களை விட்டும், அல்லாஹ்வை அன்றி நீங்கள் பிரார்த்திப்பவற்றை விட்டும் விலகிக் கொள்கிறேன்; மேலும், நான் என் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டே இருப்பேன்; என் இறைவனைப் பிரார்த்திப்பது கொண்டு நான் துர்பாக்கியவனாகாமல் இருக்கப் போதும்" (என்றார்). (அல்குர்ஆன் 19:48)

குஃப்ரை விட்டு விலகுவது என்பதை உறுப்புகள் அனைத்தாலும் உறுபடுத்த வேண்டும்.

மேலுள்ள இரண்டு வசனங்களில் பல படிப்பினைகள் உள்ளன. அது குஃப்ரை மறுத்தல் என்பது உள்ளத்தாலும் நாவாலும் செயல்களாலும் உறுபடுத்தப்பட வேண்டும். ﴿كَفَرْنَا بِكُمْ﴾ இதில் அவர்களின் இறைமறுப்பை உள்ளத்தாலும் நாவாலும் உறுபடுத்தி வெறுத்தது தெரிகிறது.

﴿وَ اَعْتَزِلُكُمْ وَمَا تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ﴾ இந்த வசனத்தில் உறுப்புகள் (செயல்கள்) மூலம் குஃப்ரை வெறுத்தது தெரிகிறது.

குஃப்ரை விட்டு விலகுவது என்பது வணக்கத்தில் இணைவைக்காமல் இருந்தால் போதாது மாறாக எல்லா நிலைகளிலும் அதைவிட்டு விலகவேண்டும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! குஃப்ரை விட்டு விலகுவது என்பது வணக்கத்தில் இணைவைக்காமல் இருந்தால் போதாது மாறாக எல்லா நிலைகளிலும் குஃப்ரை விட்டு விலகியிருக்க வேண்டும். அல்லாஹ்வின் பண்புகளில் மீது குறை காண்பது, மார்க்கத்தை கேலி செய்வது, ஸஹாபாக்களை மற்றும் நபியின் மனைவிமார்களை குறை சொல்வது, ஜிப்ரீல் (அலை) வஹியை மாற்றிவழங்கிவிட்டார் என பழி சொல்வது, யூதர்கள் கிருத்தவர்கள் புத்தர்கள் கொள்கைகளை சரிகாண்பது மற்றும் இது போன்ற மற்ற இறைமறுப்பு காரியங்களில் ஈடுபடுவதும் குஃப்ர் தான்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இது தவ்ஹீத் மற்றும் அதன் நேரெதிராக இருக்கும் ஷிர்கின் ஆபத்துகள் மற்றும் அதிலிருந்து பாதுகாத்துக்கொள்வது குறித்து விளக்கும் ஒரு உரையே. இது மூலம் உள்ளம் நேர்வழி பெறக்கூடும். ஒரு காரியத்தின் எதிரானதை அறிந்தால் மட்டுமே அதிலிருந்து நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள இயலும்.

எதிரானவையே எதிர்க்கப்படுவதன் அழகை வெளிகாட்டும்..
எதிரானவை காரியங்களை இன்னும் தெளிவுபடுத்தும்..

யார் ஷிர்க்கை அறியவில்லையோ அவர் தவ்ஹீதை அறியமாட்டார், யார் ஷிர்க்கை விட்டு விலகைல்லையோ அவர் தவ்ஹீதை உறுதிப்படுத்தவில்லை.

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا، وأستغفر الله لي ولكم فاستغفروه، إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

இணைவைப்பாளர்களின் குஃப்ரை சந்தேகப்படுபவர்களின் நிலை

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே! இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அறிந்துகொள்ளுங்கள், யார் இணைவைப்பாளர்களின் குஃப்ரை முழுமையாக குஃப்ர் என நம்பாமல் அதை சரியாக இருக்குமோ என சந்தேகப்படுவாரோ அவரும் அவர்களை

போன்றவர்களே. உதாரணமாக் யார் ‘யூதர்கள் காஃபிர்கள் தானா இல்லையா என எனக்கு சரியாக தெரியவில்லை’அல்லது ‘கிருஸ்தவர்கள் காஃபிர்கள் தானா இல்லையா என எனக்கு சரியாக தெரியவில்லை’அல்லது ‘அல்லாஹ்வை தவிர பிரார்த்தனையில் மற்றவர்களை அழைப்பவர்கள் முஸ்லிம்கள் தானா இல்லையா’ அல்லது ‘ ஃபிர்அவ்ன் காஃபிரா இல்லையா’ என இதுபோன்ற வார்த்தைகளை சொல்பவர்களும் காஃபிர்கள் தான். ஏனேனில் குஃப்ர் என்பது உண்மைதானா அல்லது இல்லையா என்பதிலேயே அவர் சரியான ஒரு நிலைபாட்டில் இல்லை. அவர் குஃப்ரை முழுமையாக எதிர்க்கவில்லை, பிற தெய்வங்களை அவர் மறுக்கவில்லை. அல்லாஹ் குர்ஆனில் இதுகுறித்து தெளிவுபடுத்திய பின்னர் குஃப்ர் என்பது வழிகேடு என சொன்ன பின்னும் எவர் அதை சந்தேகப்படுவாரோ அவர் அல்லாஹ்வின் முடிவுகளை நம்பாதவராக ஆகிவிடுகிறார்.

மேலும் இவ்வாறு சந்தேகம் கொள்பவர்கள் இஸ்லாத்தை முழுமையாக அறியாதவர் ஆவார். அப்படி அறிந்திருந்தால் குஃப்ர் என்றால் என்ன என்பது அவருக்கு நன்றாக தெரிந்திருக்கும். ஆக யாருக்கு இஸ்லாத்தை பற்றி தெரியவில்லையோ அவர் எப்படி தன்னை முஸ்லிம் என சொல்லிக் கொள்ள முடியும்?

ஷேக் ஸுலைமான் இப்னு அப்துல்லாஹ் பின் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) தன் ‘அவ்ஸகு உரல் ஈமான்’ என்ற நூலில் கூறுகிறார் : குஃப்ரை குறித்து சந்தேகமோ அல்லது அதைபற்றி அறியாமையிலோ இருப்பவருக்கு குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து குஃப்ருக்கு எதிரான தெளிவான ஆதாரங்கள் எடுத்து வைத்த பிறகும் அவர் அதே நிலையில் தொடர்வாரேயானால் அவர் அஹ்லுஸ் ஸுன்னா உலமாக்களின் ஏகோபித்த கருத்தின்படி காஃபிர் ஆவார்.[178]

காஃபிர்களின் வழிமுறை மற்றும் மதத்தை சரிகாண்பவர்களின் நிலை

[178] பக்கம் 135, இமாம் இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களின் கட்டுரைகளை மொத்தமாக தொகுத்த ஷேக். அல்வலீது இப்னு அர்ரஹ்மான் ஆல் ஃபர்யான் அவர்களின் தொகுப்பிலிருந்து.

அல்லாஹ்வின் அடியார்களே! காஃபிர்களின் மதத்தை சரிகாண்பவர் அவர்களை சந்தேகப்படுபவர்களை விட மிக மோசமான வழிகேட்டில் இருக்கிறார்கள். இவர்களின் குஃப்ர் இன்னும் மோசமானது. ஏனேனில் யதார்த்தத்தில் அவர் மற்ற மதத்தை வழிகேடு என சொன்ன இஸ்லாமிய மார்க்கத்தையே தவறாக காண்பதோடு காஃபிர்களுக்கும் அவர்களின் அழைப்புக்கும் அதன் விரிவாக்கத்துக்கும் வழிவகை செய்து துணையாக செயல்படுகிறார். இஸ்லாத்திற்கு எதிராக இருக்கும் யூத மதம், கிருஸ்தவம், பொது உடமை கோட்பாடு, மதச்சார்பின்மை மற்றும் இதுபோன்ற வழிகேடுகளை சரியான கொள்கை என பார்ப்பது, இப்ராஹீம் நபிவழி மார்க்கம் என்ற பிரச்சாரத்தின் மூலம் யூதர்கள் என்பவர்கள் மூஸா நபியை தான் பின்பற்றுகிறார்கள் ஆக யூத மதம், கிருத்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற இதுபோன்ற அழைப்புகள் யாவும் சத்தியத்தில் அசத்தியத்தை கலக்கும் ஒரு தீய முயற்சியே. அல்லாஹ் முஹம்மது நபியின் மூலம் இஸ்லாமிய மார்க்கத்தைக் கொண்டு முன்னிருந்த எல்லா மார்க்கத்தையும் மாற்றிவிட்டான். இறைத்தூதர்கள் மூஸா மற்றும் ஈஸா இப்போது உயிரோடு இருந்தாலும் அவர்கள்முஹம்மது நபியின் வழிமுறையைத் தான் பின்பற்றியிருப்பார்கள். இது அவர்கள் சரியான மார்க்கத்தில் இருக்கும்போது உள்ள நிலை என்றால் அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் பல கையாடல்கள் செய்யப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் எப்படி பின்பற்ற தகுந்ததாகும்? மூஸா நபியின் மரணத்திற்கு பின்னர் தவ்ராத் நூலில் மாற்றம் நடந்து உஸைர் என்பவரை அல்லாஹ்வின் குமாரன் என சொல்ல ஆரம்பித்தனர். ஈஸா நபி அல்லாஹ் வானத்திற்கு எழுப்பிய பின் சிலுவைகளை வணங்க தொடங்கிவிட்டனர். ஈஸா அல்லாஹ்வின் குமாரர் எனவும், திரித்துவம் ஆகிய இவை அனைத்தும் வந்த பின்னரும் யூதம் மற்றும் கிருத்தவம் சரியான கொள்கை தான் என எப்படி கூறமுடியும்? அல்லாஹ் கூறுகிறான் :

﴿يٰۤـاَهْلَ الْكِتٰبِ قَدْ جَآءَكُمْ رَسُوْلُـنَا يُبَيِّنُ لَـكُمْ كَثِيْرًا مِّمَّا كُنْتُمْ تُخْفُوْنَ مِنَ الْكِتٰبِ وَيَعْفُوْا عَنْ كَثِيْرٍ قَدْ جَآءَكُمْ مِّنَ اللّٰهِ نُوْرٌ وَّكِتٰبٌ مُّبِيْنٌ﴾

வேதமுடையவர்களே! மெய்யாகவே உங்களிடம் நம்முடைய தூதர் வந்திருக்கின்றார்; வேதத்திலிருந்து நீங்கள் மறைத்துக்கொண்டிருப்பவற்றில் பல விஷயங்களை அவர் உங்களுக்கு விளக்கிக்காட்டுவார்; இன்னும், (இப்பொழுது தேவையில்லாத) அநேகத்தை விட்டுவிடுவார்; நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து ஒளியும், தெளிவுமுள்ள (குர்ஆன் என்னும்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது. (அல்குர்ஆன் 5:15)

﴿يَـٰٓأَهْلَ الْـكِتَٰبِ قَدْ جَآءَكُمْ رَسُوْلُـنَا يُبَيِّنُ لَـكُمْ عَلٰى فَتْرَةٍ مِّنَ الرُّسُلِ اَنْ تَقُوْلُوْا مَا جَآءَنَا مِنْۢ بَشِيْرٍ وَّلَا نَذِيْرٍ ۖ فَقَدْ جَآءَكُمْ بَشِيْرٌ وَّنَذِيْرٌ وَاللّٰهُ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ﴾

வேதமுடையவர்களே! நிச்சயமாக (ஈஸாவுக்குப் பின் இதுவரையிலும்) தூதர்கள் வராது இடைப்பட்டிருந்த காலத்தில், "நன்மாராயம் கூறுபவரும், அச்சமூட்டி எச்சரிப்பவரும் ஆகிய எவரும் எங்களிடம் வரவேயில்லையே" என நீங்கள் கூறாதிருக்கும்பொருட்டு இப்பொழுது உங்களுக்கு (மார்க்கத்தைத்) தெளிவாக எடுத்துக் கூற, நம் தூதர் உங்களிடம் வந்துள்ளார்; எனவே, நன்மாராயம் கூறுபவரும், அச்சமூட்டி எச்சரிப்பவரும் உங்களிடம் நிச்சயமாக வந்துவிட்டார்; இன்னும், அல்லாஹ் எல்லாப் பொருட்கள் மீதும் வல்லமையுடையவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 5:19)

﴿وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ وَهُوَ فِى الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ﴾

இன்னும், இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக்கொள்ளப்படமாட்டாது; மேலும், அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில்தான் இருப்பார். (அல்குர்ஆன் 3:85)

ஆக யார் இறைமறுப்பாளர்களாகிய கிருத்தவர்கள் மற்றும் யூதர்களின் கொள்கையை சரிகாண்பாரோ அவரும் காஃபிர் தான் என்பதையே இச்செய்திகள் நமக்கு தெரிவிக்கிறது. அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக![179]

[179] பார்க்க : அல்இப்தால் லிநதரிய்யதில் ஃகல்த் பைன தீனில் இஸ்லாம் வ கைரிஹி மினல் அத்யான், ஆசிரியர் : ஷேக். பக்ர் அபூ ஸைது ,மற்றும் ஷர் நவாகிதுல் இஸ்லாம் பக்கம் : 81, ஆசிரியர் : ஷேக் ஸாலிஹ் அல்ஃபவ்ஸான்.

ராஃபிதாக்கள் (ஷியா) கொள்கையோடு இணைய வேண்டும் என அழைப்பதும் இணைவைப்பின் மார்க்கத்தை சரிகாண்பது போன்றே.!

அல்லாஹ்வின் நல்லடியார்களே! யார் ராஃபிதாக்களோடு (கொள்கை அளவில்) இணக்கமாக இருக்கவேண்டும் என்ற அழைப்பை விடுப்பாரோ அவர் அடிப்படையில் அவர்களை விட்டு முற்றிலும் விலகியவர் அல்ல மாறாக அதை சரிகாண்பது மூலமாக அவரும் அவர்களில் ஒருவர் போன்றவரே, அதை தன் கொள்கை என வெளிப்படுத்தாவிட்டாலும் சரியே. ஏனெனில் அவர்களில் கொள்கை என்பது அடிப்படையில் கப்ர் வணக்கம், நபியின் குடும்பத்தாரை வணங்குதல், நபியின் சுன்னாவை மறுத்தல், ஸஹாபாக்களை காஃபிர்கள் என சொல்லுதல், நபி ﷺ மற்றும் ஜிப்ரீல் மீது அபாண்ட சந்தேக குற்றச்சாட்டு வைத்தல், குர்ஆனை சந்தேகப்படுவது, நபியின் கண்ணியத்தில் சந்தேகப்படுவது ஆகியவற்றின் மீதே அமைந்துள்ளது. அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

<u>முடிவுரை :</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இது தவ்ஹீத் மற்றும் அதன் நேரெதிராக இருக்கும் ஷிர்கின் ஆபத்துகள் மற்றும் அதிலிருந்து பாதுகாத்துக்கொள்வது குறித்து விளக்கும் ஒரு உரையே. மேலும் காஃபிர்களை இறைமறுப்பாளர்கள் என ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதிலிருந்தும் அவர்கள் இறைமறுப்பில்தான் இருக்கிறார்களா என சந்தேகம் கொள்வதிலிருந்து அல்லது அவர்களின் கொள்கையை சரிகாண்பது போன்ற இஸ்லாத்தை முறிக்கும் காரியங்களில் இருந்து எச்சரிக்கும் ஒரு உபதேசம் தான் இது. ஆக அல்லாஹ்வும் அவன் தூதரும் யாரை காஃபிர் என சொல்லியிருக்கிறார்களோ அதனை அப்படியே எந்த சந்தேகமும் இல்லாமல் ஏற்றுக்கொள்வதே நம்மீதும் கடமையாகும்.

மரணம் வரை தவ்ஹீதில் நிலைத்திருக்க அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள்புரிவானாக! யார் ஷரீஅத்தின் அடிப்படையில் நிலைத்திருந்து தவ்ஹீதிலேயே மரணிப்பாரோ அவர் எந்த கேள்விகணக்கோ வேதனையோ இல்லாமல் சுவனம் நுழைவார்.

மேலும் அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு மேனானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி மீது அருள்புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக்கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் நீ பொருந்திக்கொள்வாயாக! யா அல்லாஹ், உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம். யா அல்லாஹ்! நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அருள்புரிவாயாக!

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 3

நபியின் நேர்வழியை விட மற்ற வழிமுறைகள் சிறந்தது என நம்புவது மற்றும் அல்லாஹ்வின் சட்டம் அல்லாமல் மற்ற சட்டங்கள் சிறந்தது என ஏற்பது இறைமறுப்பாகும். (இறைமறுப்பு கொள்கையின் சட்டங்கள் மற்றும் மனிதன் இயற்றிய சட்டங்களை முற்படுத்துவது)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவ மன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழிபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

முஹம்மது ﷺ நபியின் வழியே பரிபூரணமான சிறந்த வழிமுறையாகும்

- அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

அறிந்து கொள்ளுங்கள்! முஹம்மது நபி ﷺ தான் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி சொல்வதன் முக்கிய அம்சம் **அவரது வழிமுறைதான் சிறந்த வழிமுறை என ஏற்றுக் கொள்வதையும் உள்ளடக்கும்.**

மொழி ரீதியில் ‘ஹதி’ என்பதற்கு வழி, பாதை என அர்த்தமாகும். மார்க்க ரீதியாக கொள்கை, வணக்கம், பரிவர்த்தனைகள், நற்பண்புகள், தீர்ப்பு

வழங்குதல், அரசியல் மற்றும் எல்லா துறைகளில் நபி ﷺ பின்பற்றிய வழிமுறையே குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் 'ஹதி' எனப்படும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! நபி ﷺ காட்டித்தந்த வழிமுறையே சிறந்ததாகும். ஏனெனில் அது அல்லாஹ்விடமிருந்து வந்தது. அது இறைவணக்கம், குணம், அரசியல், குற்றவியல் சட்டம், சமூக கட்டமைப்பு, கற்ப்பித்தல், சீர்படுத்துதல் என மனித வாழ்வில் எல்லா துறைகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.

நபி ﷺ காட்டித்தந்த வழிமுறையே சிறந்தது என்பதற்கான ஆதாரமாக அல்லாஹ் கூறிகிறான்:

﴿لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللهِ أُسْوَةٌ حَسَنَةٌ﴾

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. (அல்குர்ஆன் 33:21)

மேலும், 'வார்த்தைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வார்த்தை மற்றும் நேர்வழிகளில் சிறந்தது அல்லாஹ்வின் தூதரின் நேர்வழியாகும்' என அல்லாஹ்வின் தூதர் தன் சொற்பொழிவுகளில் கூறுவார்.

கொள்கையில் நபியின் கொள்கை வழிகாட்டலே சிறந்ததாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! முஹம்மது நபியை ஆழமாக படித்தால் அவரது வழிமுறைதான் மிகச்சிறந்தது என அறியமுடியும். கொள்கை அடிப்படையில், நபி ﷺ பின்பற்றி மக்களுக்கு கற்றுக்கொடுத்த கொள்கையானது மனிதனுக்கு அடிப்படையில் தேவையான அல்லாஹ்வை நம்புதல், மலக்குமார்கள் இறைவேதங்கள் நபிமார்கள் மறுமை நாள் மற்றும் விதியை நம்புதல் என எல்லா கொள்கைகளையும் உள்ளடக்கி முந்தைய நபிமார்களின் கொள்கையை புதுப்பித்து புத்துயிர் கொடுத்து, சீரான சிந்தனை ஏற்க்கும் வகையில் நடுநிலையான பரிபூரணமான கொள்கையாக இருக்கிறது.

இறைவணக்கத்தில் நபியின் வழிகாட்டலே சிறந்ததாகும்.

வணக்க வழிபாடுகளில் நபி ﷺ வழிகாட்டலே முழுமைபெற்ற நடுநிலையான வழிகாட்டலாகும். அதில் வரம்பு மீறுதலோ அலட்சியமோ கிடையாது, அதில் துறவரமோ சோம்பேறித்தனமோ கிடையாது. நபி ﷺ கூறினார்கள் :

இந்த மார்க்கம் மிக எளிமையானது, அதை யார் கடிமனாக்குவாரோ அது அவரை மிஞ்சிவிடும், ஆக நடுநிலையை பின்பற்றி இயன்றவரை (நற்காரியங்களை) செய்து நற்செய்தி பெற்றுக் கொள்ளுங்கள்.

ஸஹீஹுல் புகாரி : 39, அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா (ரலி)

வணக்கத்திலேயே முழுமையாக ஈடுபட வேண்டும் என சொன்ன ஒரு நபித்தோழரிடம் ‘உன் மீது நீயே செய்ய வேண்டிய சில கடமைகள் உள்ளது’ என நபி ﷺ கூறினார்கள்.

மேலும் சிலர் நான் இறைச்சி உண்ண மாட்டேன் என்றும் திருமணம் செய்ய மாட்டேன் என்றும் தினமும் நோன்பு பிடிப்பேன் என்றும் இரவு முழுக்க தூங்காமல் வனங்குவேன் என்றும் சபதம் செய்தவர்களை அழைத்து ‘நான் இறைச்சி உண்பவன், பெண்களை திருமணம் செய்துள்ளேன், சில நாட்கள் நோன்பு பிடிப்பேன் சில நாட்கள் நோன்பை விடுவேன், இரவு தூங்கவும் செய்கிறேன் வணங்கவும் செய்கிறேன், யார் என் வழிமுறைக்கு மாறாக செயல்படுவாரோ அவர் என்னை சார்ந்தவர் அல்ல’ என நபி ﷺ கூறினார்கள். ஸஹீஹுல் புகாரி : 5063, முஸ்லிம் : 1401 அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரலி)

நற்பண்புகளில் நபியின் வழிகாட்டலே சிறந்ததாகும்.

நற்பண்புகள் பொருத்தவரையில் நபியின் பண்புகளே மிக உயர்ந்தது. இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை ஏனெனில் நபியை செம்மை செய்யும் பொறுப்பை அல்லாஹ்வே நேரடியாக எடுத்துக்கொண்டான். அவனே நபிக்கு சிறந்த பண்புடையவர் என சான்றளிக்கிறான்.

﴿ وَإِنَّكَ لَعَلَىٰ خُلُقٍ عَظِيمٍ ﴾

மேலும், (நபியே!) நிச்சயமாக நீர் மகத்தான (நற்)குணத்தின் மீது இருக்கின்றீர். (அல்குர்ஆன் 68:4)

நபி ﷺ தன் குடும்பத்தார்கள், தோழர்கள், அண்டைவீட்டார்களிடம் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என கவனித்தால் அவரது உயர்ந்த பண்பு நமக்கு புரியும்.எல்லோருடனும் சிரித்த முகத்துடன் பொறுமையாக சகித்துப்போகும் குணமே அவரிடம் இருந்தது. மரணத்திற்கு ஓர் காரணமாக இருந்த தன் உணவில் விஷம் கலந்த யூத பெண்ணை கூட மன்னித்து விட்டவர் முஹம்மது நபி ﷺ. மக்கள் அனைவருடனும் குறிப்பாக போரில் தன் எதிரிகளாக இருந்தவர்களிடமும் கருணையோடு நடந்துகொண்டார். போரில் கலந்து கொள்ளாதவர்களை (வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள்) கொலை செய்யக்கூடாது என தடுத்தார், வளங்களை சேதப்படுத்தகூடாது என கட்டளையிட்டார், போரில் வென்ற பொருட்களை பங்கு பிரிக்கும்முன் யாரும் அதை எடுக்கக்கூடாது என சொன்னார், மேலும் அப்பொருட்களை அல்லாஹ் காட்டித்தந்த வழிமுறையின்படியே பங்குவைத்தார். போரில் இறந்தவர்களின் உறுப்புக்களை சேதப்படுத்தக்கூடாது, ஏமாற்றுவேலைகளில் ஈடுபட கூடாது எனவும் தடுத்தார். போர் கைதிகள் சிலரை எந்த பகரமும் இல்லாமல் விடுவித்தார், சிலரை பகரமாக செல்வத்தை பெற்று விடுவித்தார், சிலரை முஸ்லிம் கைதிகளை விடுவிக்க பயன்படுத்தினார் இன்னும் சிலரை கொலை செய்தார் இவை யாவையும் பொதுநலன் கருதியே நபி ﷺ செய்தார்கள்.

- அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வின் சிறந்த படைப்பாகிய இறைத்தூதர் ﷺ அவர்களை பற்றி தவ்ராத் மற்றும் இஞ்சீல் வேதங்களிலும் குறிப்புகள் இருந்தன.
  அதா பின் யஸார் (ரலி) அறிவிக்கிறார்கள் : நான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவரை சந்தித்து தவ்ராத் வேதத்தில் நபியை பற்றி வந்துள்ள செய்தியை எனக்கு கூறுங்கள் என கேட்டேன். அவர் கூறினார் : ‘குர்ஆனில் அவர் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளாரோ அதே போலவே தவ்ராத் வேதத்திலும் சொல்லப்பட்டுள்ளார். ﴿ يَاأَيُّهَا النَّبِيُّ إِنَّا أَرْسَلْنَاكَ شَاهِدًا وَمُبَشِّرًا وَنَذِيرًا ﴾ **நபியே! நாம் நிச்சயமாக உம்மைச் சாட்சியாளராகவும், நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிப்பவராகவுமே அனுப்பியுள்ளோம்.** உம்மி கூட்டத்தினரின் பாதுகாவலராகவும்

அனுப்புவோம், நீயே எனது அடிமை மற்றும் தூதர், உம்மை பொறுப்பாளராக ஆக்கினேன், கடுமையானவராக சத்தத்தை உயர்த்தி பேசாதவராக உம்மை கடைவீதிகளில் நாம் ஆக்குவோம். தீமையை தீமையால் தடுக்காமல் மாறாக மறந்து மன்னிப்பவராக ஆக்குவோம். லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லி வழிதவறிய பாதையை உம்மை கொண்டு சீர்படுத்தும்வரை உம் உயிரை நாம் பரிக்க மாட்டோம். அதை கொண்டு பார்வைகள், செவிகள் மற்றும் உள்ளங்களை நேர்வழிபடுத்துவீர்கள்'.

பரிவர்த்தனைகளில் நபியின் வழிகாட்டல்

பொருள் வாங்குதல், விற்றல், வாடகை, கிரையம், கடன் போன்ற எல்லாவிதமான பரிவர்த்தனை நடவடிக்கைகளில் நபியின் வழிமுறையே அனைத்தையும் உள்ளடக்கியதாக சிறந்ததாக விளக்குகிறது. மேலும் பொருளாதாரத்தை பாழாக்கும் வட்டி, வியாபார மோசடி, லஞ்சம் போன்றவைகளை ஹராமாக்கினார். இமாம் இப்னுல் கைய்யூம் தனது ஜாதுல் மஆது நூலில் இது பற்றி எண்பது பக்கங்களுக்கு தெளிவாக விளக்கவுரை அளித்துள்ளார்.

அரசியலில் நபியின் வழிகாட்டல்

அரசியல் நகர்வுகள் மற்றும் திட்டங்களில் நபியி வழிகாட்டலே சிறந்தாக விளங்குகிறது. பத்ர், ஃகன்தக் போர்கள், ஹுதைபியா ன்உடன்படிக்கை போன்ற சமயங்களில் தேர்ச்சி பெற்ற தோழர்களிடம் உலகம் சார்ந்த காரியங்களில் ஆலோசனை பெறுவது இன்னும் சில சமயங்களில் மனைவிமார்களின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வது என்ற செயல்கள் மூலம் நபியின் அரசியல் முதிர்ச்சியை நாம் அறிய முடிகிறது. அவை அனைத்தும் யதார்த்தை அறியவும் வெற்றிக்கும் வழிவகுத்தது. காஃபிர்களோடு அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டார், அவர்களோடு நல்ல முறையில் நடந்துகொண்டார், அவர்களில் யாரேனும் அடைக்கலம் கேட்டால் அவர்களுக்கு அபயமளித்தார். அவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றினார். முழுமையாக மோசடி மற்றும் ஏமாற்றுவேலைகளை விட்டு தூர விலகியிருந்தார். போரில் காஃபிர்கள் ஏமாற்றி அநியாய வேலையில்

ஈடுபட்டவர்களை பெரும்பாலும் மன்னித்து விட்டார். மக்காவை வெற்றிகொண்ட பின் ஆட்சி அதிகாரம் தன் கையில் வந்தபோதிலும் அவரையும் தன் தோழர்களையும் துன்புறுத்தி அந்த ஊரிலிருந்து வெளியேற்றி அவருக்கு எதிராக போர் புரிந்த அந்த மக்களை பழிவாங்க வாய்ப்பு கிடைத்தபோதிலும் அவர்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கினார் முஹம்மது ﷺ.

குற்றவியல் சட்டத்தில் நபியின் வழிகாட்டலே சிறந்ததாகும்.

குற்றவியல் சட்டம் மற்றும் தண்டனைகளில் நபி ﷺ அவர்களின் வழிகாட்டுதலே நீதிமிக்கதாக பரிபூரணமான ஒன்றாக உள்ளது. இமாம் இப்னுல் கைய்யூம் தனது ஜாதுல் மஆது ஃபீ ஹத்யி ஃகைருல் இபாத் எனும் நூலில் இது பற்றி ஐநூறு பக்கங்களுக்கு தெளிவாக விளக்கவுரை அளித்துள்ளார்.

மருத்துவத்தில் நபியின் வழிகாட்டல்

மருத்துவத்திலும் நபியின் வழிகாட்டல் சிறந்ததாகவே அமைந்தது. இமாம் இப்னுல் கைய்யூம் தனது ஜாதுல் மஆது எனும் நூலில் உள்ளம் மற்றும் உடலின் மருத்துவம் பற்றி நானூறு பக்கங்களுக்கு தெளிவாக விளக்கவுரை அளித்துள்ளார்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! காஃபிராக இருந்த பல ஆராய்ச்சியாளர்கள் நபியின் மேலான அறிவுரைகள் மற்றும் சிறந்த வழிகாட்டலை அறிந்த பின் இப்படிப்பட்ட நேர்வழி இறைவனின் உதவி பெற்ற ஒரு நபிக்கு மட்டுமே கிடைக்கும் என உணர்ந்து இஸ்லாத்தை ஏற்றுள்ளனர்.

நபியின் வழிகாட்டலே சிறந்தது என்பதை தெளிவுபடுத்தும் செய்திகளின் முன்னுரையே இது, இது அவரின் மீதுள்ள நேசம் மற்றும் அவரை பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வம் அதிகரிக்க உதவியாக இருக்கும் என ஆதரவு வைக்கிறேன்.

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيم أقول قولى هذا وأستغفر الله لى ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

நபி ﷺ வழிமுறை எல்லா காலம் மற்றும் இடங்களுக்கும் ஏற்றது

الحمد لله وحده والصلاة والسلام على من لا نبى بعده أما بعد فاتقوا الله عباد الله

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, இறுதித்தூதர் முஹம்மது ﷺ மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக!

முஹம்மது நபியின் வழிகாட்டல் என்பது எல்லா காலம் மற்றும் இடத்திற்கு ஏற்றமானது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அது நிலையானது எந்த மாறுதலும் நிகழாதது ஏனெனில் அது அனைத்தையும் அறிந்த ஞானமிக்க கருணையான மக்களுக்கு நல்லதை விரும்பும் அல்லாஹ்விடமிருந்து வந்தது. அதையே இறைத்தூதர் மக்களுக்கு போதித்தார். அதுவே நேரான பாதையும் பலமான மார்க்கமும் ஆகும். அந்த மார்க்கத்தையே அல்லாஹ் தன் அடியார்களுக்காக பொருந்திக் கொண்டான்.

நபியின் நேர்வழியை விட மற்ற வழிமுறைகள் சிறந்தது என நம்புவது மற்றும் அல்லாஹ்வின் சட்டம் அல்லாமல் மற்ற சட்டங்கள் சிறந்தது என ஏற்பது இறைமறுப்பாகும். (இறைமறுப்பு கொள்கையின் சட்டங்கள் மற்றும் மனிதன் இயற்றிய சட்டங்களை முற்படுத்துவது)

முன் நாம் சொன்ன கருத்துக்கள் அடிப்படையில் யார் நபியின் பாதையை தவிர்த்து மற்ற பாதைகள் சிறந்தது என நம்புவாரோ அவர் காஃபிராகி விடுகிறார். ஏனெனில் அவர் அல்லாஹ்வின் ஞானம் மற்றும் அவனது சட்டத்தை குறைகாண்கிறார். மதச்சார்பின்மை, தாராளமயம், ஜனநாயகம் போன்ற சித்தாந்தங்கள் அல்லது மனிதன் இயற்றிய சட்டங்கள் சிறந்தது என கருதுவது குஃப்ர். இஸ்லாமிய சட்டமெல்லாம் இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு சரிவராது, அது முஸ்லிம்களின் பின்னடைவுக்கு காரணமாக அமைகிறது, அது வெரும் அல்லாஹ்வோடு உள்ள தொடர்பை மட்டுமே

கவனம் செலுத்தி வாழ்வின் யதார்த்தத்தை கற்றுத்தரவில்லை, திருடனின் கையை வெட்டுவது விபச்சாரம் செய்தவரை கொலை செய்ட்வது போன்ற சட்டங்கள் இக்காலகட்டத்திற்கு பொருந்தாது, கொடுக்கல் வாங்கல் குற்றவியல் மற்றும் மற்ற துறைகளில் இஸ்லாமிய வழிகாட்டலை பின்பற்றவேண்டிய அவசியமில்லை என இப்படியெல்லாம் நம்புபவர்கள் இறைமறுப்பாளர்கள் ஆகிவிடுகிறார்கள். ஏனெனில் அவர்கள் படைத்தவனின் சட்டத்தை புறந்தள்ளி மடமைமிக்க மற்ற தெய்வங்களின் சட்டத்தை ஏற்றுக்கொண்டு படைப்புகளின் சட்டத்தை முற்படுத்துகிறார்கள். அல்லாஹ் கூறியது போல மற்ற சட்டங்களை இவன் மறுக்கவில்லை.

﴿فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا﴾

எவர் ஷைத்தானை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ, அவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக்கொண்டார்; (அல்குர்ஆன் 2:256)

அப்படிப்பட்டவர்கள் அல்லாஹ் தடுத்தடை ஹலால் ஆக்கிவிட்டார்கள், அவர்கள் அல்லாஹ்வை எதிர்ப்பதோடு முஸ்லிம் உலமாக்களின் ஏகோபித்த கருத்தின்படி காஃபிர்கள் ஆவார்கள். [180]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இறைத்தூதருக்கு கட்டுப்படுவதை விட்டும் அவரின் சட்டத்தை விட்டும் யார் விலகுவாரோ அவர் நயவஞ்சகர் ஆவார்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَاِذَا دُعُوْۤا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ لِيَحْكُمَ بَيْنَهُمْ اِذَا فَرِيْقٌ مِّنْهُمْ مُّعْرِضُوْنَ﴾

மேலும், தம்மிடையே (விவகாரம் ஏற்பட்டு, அதுபற்றிய) தீர்ப்புப்பெற அல்லாஹ்விடமும், அவன் தூதரிடமும் (வரும்படி) அழைக்கப்பட்டால் அவர்களில் ஒரு பிரிவினர் (அவ்வழைப்பைப்) புறக்கணிக்கிறார்கள்.

(அல்குர்ஆன் 24:48)

இப்னு தைமிய்யா (ரஹ்) கூறுகிறார்கள் : இறைத்தூதருக்கு கட்டுப்படுவதை விட்டும் அவரின் சட்டத்தை விட்டும் யார் விலகுவாரோ அவர் முஃமின் அல்ல முனாஃபிக் என்று அல்லாஹ் தெளிவுபடுத்திவிட்டான். முஃமின்

[180] மஜ்முஉ ஃபதாவா வ மகாலாத் முதனவ்விஆ (1/132) - ஷேக். இப்னு பாஸ் (ரஹ்)

என்பவர் ‘கேட்டோம் கட்டுப்பட்டோம்’ என்றே கூறுவார். இறைத்தூதர் வழியை விட்டு விலகுவது ஈமானை விலக்கி நயவஞ்சகத்தை உள்ளத்தில் நிலைக்கச் செய்துவிடும்.[181]

முடிவுரை :

மேலும் அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு மேலானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يَٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக! யா அல்லாஹ், உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம். யா அல்லாஹ் ! நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அருள்புரிவாயாக!

---

181 அஸ்ஸாரிம் அல்மஸ்லூல் (ப.38). (விரிவுரை. முஹம்மது முஹ்யுத்தீன் அப்துல் ஹமீது)

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 4

இஸ்லாத்தின் சட்டங்களை வெறுப்பது

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவமன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழிபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

<u>**தீனை நேசிப்பது ஈமானின் முக்கிய அம்சம்**</u>

- அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

அல்லாஹ்வை நேசிப்பது, அவன் தூதரை நேசிப்பது, தீனை நேசிப்பது ஆகியவை ‘லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ என்ற ஷஹாதத்தின் முக்கிய அம்சமாகும். இது நாம் அந்த ஷஹாதத்தை உண்மைப்படுத்துகிறோம் என்பதற்காக அடையாளமாகும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِىْ يُحْبِبْكُمُ اللّٰهُ﴾

(நபியே!) நீர் கூறும்: "நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; (அல்குர்ஆன் 3:31)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! உண்மையான முஃமின்கள் மார்க்கத்தை நேசிப்பவர்களாக இருந்தால் அவர் மார்க்கம் சொன்ன பாடங்களை மறுக்காமல் அல்லாஹ்வும் அவன் தூதரும் எதை சொன்னார்களோ அதை அப்படியே பின்பற்றுவார்கள். அல்லாஹ் கூறுகிறான் :

﴿اِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِيْنَ اِذَا دُعُوْۤا اِلَى اللّٰهِ وَرَسُوْلِهٖ لِيَحْكُمَ بَيْنَهُمْ اَنْ يَّقُوْلُوْا سَمِعْنَا وَاَطَعْنَا وَاُولٰٓٮِٕكَ هُمُ الْمُفْلِحُوْنَ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَخْشَ اللّٰهَ وَيَتَّقْهِ فَاُولٰٓٮِٕكَ هُمُ الْفَآٮِٕزُوْنَ﴾

நம்பிக்கையாளர்களுடைய சொல்லாக இருப்பதெல்லாம், அவர்களுக்கிடையே (ஏற்படும் விவகாரங்களில்) தீர்ப்புக் கூறுவதற்காக அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் (வரும்படி) அழைக்கப்பட்டால், "நாங்கள் செவியேற்றோம்; (அதற்குக்) கீழ்ப்படிந்தோம்" என்று அவர்கள் கூறுவதுதான்; இ(த்தகைய)வர்கள்தாம் வெற்றியடைந்தவர்கள். இன்னும், எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து, அல்லாஹ்வை அஞ்சி அவனைப் பயந்தும் கொள்கிறாரோ, அத்தகையோர் - அவர்கள்தாம் வெற்றிபெற்றவர்கள். (அல்குர்ஆன் 24:51,52)

ஈமான் கொண்டவர்கள் அல்லாஹ்வின் விதியின் மீதும் அவன் கட்டளை மீதும் எந்த குறையையும் சிரமத்தையும் காணமாட்டார்கள்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُوْنَ حَتّٰى يُحَكِّمُوْكَ فِيْمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوْا فِىْۤ اَنْفُسِهِمْ حَرَجًا مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் தீர்ப்புச் செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது - (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாதவரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள். (அல்குர்ஆன் 4:65)

அல்லாஹ்வும் அவன் தூதரும் எதை சட்டமாக ஆக்கினார்களோ அதை உள்ளத்தால் ஏற்று உடலால் செயல் படுத்துபவர்களே உண்மையில் ஈமான் கொண்டவர்கள்.

وعن الْعَبَّاسِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ رضي الله عنه، أَنَّهُ سَمِعَ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يقول: ذاق طَعْمَ الْإِيمَانِ مَنْ رَضِيَ بِاللهِ رَبًّا، وَبِالْإِسْلَامِ دِينًا، وَبِمُحَمَّدٍ (صلى الله عليه وسلم) رَسُولا

அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (رضي الله عنه) ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்து கேட்டதாக அறிவிக்கிறார்கள்: யார் அல்லாஹ்வை இறைவனாக ஏற்றுக்கொண்டு, இஸ்லாமிய மார்க்கத்தை தன் மார்க்கமாக பொருந்திக்கொண்டு முஹம்மது ﷺ அவர்களை இறைத்தூதராக ஏற்றுக்கொள்கிறாரோ அவர் ஈமானிய சுவையை உணர்ந்துவிட்டார்.[182]

ஆக மனிதர்கள் தங்கள் உள்ளங்களை ஷரீஅத்தை ஏற்றுக்கொள்ள விரிவடையச் செய்து அதை பொருந்திக் கொண்டு நேசிக்க வேண்டும். ஏனேனில் அது படைப்புகளுக்கான நலன்களை முழுமையாக அறிந்த கருணைமிக்க அல்லாஹ்விடமிருந்து வந்தது.

﴿أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ اللَّطِيفُ الْخَبِيرُ﴾

(அனைத்தையும்) படைத்தவன் அறியமாட்டானா? அவன் நுணுக்கமாகக் கவனிப்பவன்; யாவற்றையும் நன்கு தெரிந்தவன். (அல்குர்ஆன் 67:14)

தீனை நேசத்தை அதிகரிக்கச் செய்யும் காரணிகள்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மனிதர்களுக்கு பொருந்தக்கூடிய அவர்களின் நிலையை முழுமையாக அறிந்த அவர்கள் மீது அதிகம் கருணை கொண்ட அல்லாஹ் தான் இந்த சட்டத்தை அமைத்தான் என்பதை அறிவதன் மூலம் இஸ்லாமிய மார்க்கம் மீது நம் நேசம் அதிகமாகும்.

- முன் சென்ற ஷரிஅத் சட்டங்களை விட நமக்கு வழங்கப்பட்டிருக்கும் ஷரிஅத்தின் சட்டத்தின் சிறப்பம்சங்களை அறிவதன் மூலம் அதன் மீதான நேசம் அதிகரிக்கும்.
- அதை பின்பற்றினால் வெற்றியும் மறுத்தால் அழிவும் உண்டு என அறிந்தால் அதை நாம் நேசிப்போம்.
- பல நிலைகள், நாடுகள் மற்றும் நிறங்களில் இருக்கும் மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் காட்சிகளை பார்க்கும்போது குறிப்பாக சமூக வலைதளங்கள் பரவிய பின்னர் இஸ்லாமிய மார்க்கமே அதிகம் பரவும் மார்க்கமாக ஆனது. இதையெல்லாம் குறித்து சிந்திக்கும் போது அதன் மீதுள்ள நேசம் அதிகரிக்கும்.

[182] முஸ்லிம் (34)

அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய மார்க்கம் அதன் கொள்கைகள் நன்மையின் பக்கமே மக்களை அழைக்கிறது. நமது இயல்பு மற்றும் சிந்தனை எதனை நன்மையாக ஏற்றுக்கொள்ளுமோ அதன் பக்கமே அழைக்கிறது மற்றும் எதை தீமையாக உள்ளதோ அதிலிருந்து தடுக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ حُكْمًا لِّـقَوْمٍ يُّوْقِنُوْنَ﴾

உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிடத் தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்? (அல்குர்ஆன் 5:50)

﴿اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآىِٕ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ‌ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ﴾

நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்குக் கொடுப்பதைக் கொண்டும் (உங்களை) ஏவுகிறான்; அன்றியும் மானக்கேடான காரியங்கள், தீமை, வரம்பு மீறுதல் ஆகியவற்றைவிட்டும் (உங்களைத்) தடுக்கின்றான்; நீங்கள் நினைவில் வைத்துக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு உபதேசம் செய்கின்றான். (அல்குர்ஆன் 16:90)

அப்துர் ரஹ்மான் பின் ஸஃதி (ரஹ்) கூறினார்கள் : மார்க்கம் அழகிய செயல்கள், நற்குணம் மற்றும் அடியார்களின் சீர்த்திருத்தை கொண்டே ஏவுகிறது. நேர்மை, சிறப்பு, கருணை மற்றும் நன்மையையே ஆர்வமூட்டுகிறது. அநியாயம், பகைமை மற்றும் கெட்ட குணங்களை விட்டு எச்சரிக்கிறது. நபிமார்கள் மற்றும் இறைத்தூதர்கள் எந்த ஒரு நல்ல காரியத்தை செய்தாலும் அதை அல்லாஹ் ஏற்றுக் கொண்டுள்ளான். ஷரிஅத் நம் மார்க்கத்திற்கும் உலக வாழ்வுக்கும் எது நன்மையாக அமைந்தாலும் அதை ஆர்வமூடாமல் இருந்ததே இல்லை. எது தீமையாக இருந்தாலும் அதை விட்டும் தடுக்காமல் இருந்ததில்லை.[183]

[183] அத்துர்ரா அல்முஃதாரா ஃபீ மஹாஸினித்தீன் அல்இஸ்லாமி பக்கம்.15

மார்க்க அம்சங்களை வெறுப்பது குஃப்ர் ஆகும்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மார்க்க அம்சங்களை வெறுப்பதென்பது நம்மை இஸ்லாத்தை விட்டு வெளியேற்றும் காரியங்களில் ஒன்று. அது அகீதா, வணக்கம், கொடுக்கல் வாங்கல், பண்புகள் என எந்த அம்சத்தில் இருந்தாலும் சரியே. ஏனெனில் மார்க்க அம்சம் ஏதேனும் ஒன்றை வெறுப்பதன் மூலம் அவன் அதை சட்டமாக்கிய அல்லாஹ்வை வெறுக்கிறான், அல்லது அதை பெற்றுக்கொண்ட இறைத்தூதரை வெறுக்கிறான் அல்லது அது சத்தியம் இல்லை என நினைக்கிறான். அதை பின்பற்றுவதில் நிம்மதியோ பயனோ இல்லை என நம்புகிறான். இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஞானத்தையும் அவன் சொல் மற்றும் செயல்களையும் குறை சொல்வது போலாகும்.

அல்லாஹ் ஒருவன் என்று ஏற்றுக்கொண்டு அவனுக்கு கட்டுப்பட்டு அவன் வகுத்த சட்டங்களை ஏற்று நடக்கும் இஸ்லாம் மற்றும் ஈமானின் எதார்த்தத்தை இந்த மார்க்கத்தை வெறுக்கும் குணம் உடைத்துவிடுகிறது.

இஸ்லாமிய மார்க்க அம்சங்களை வெறுப்பது காஃபிர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் பண்பு

﴿وَالَّذِيْنَ كَفَرُوْا فَتَعْسًا لَّهُمْ وَاَضَلَّ اَعْمَالَهُمْ ‏ ذٰلِكَ بِاَنَّهُمْ كَرِهُوْا مَاۤ اَنْزَلَ اللّٰهُ فَاَحْبَطَ اَعْمَالَهُمْ﴾

அன்றியும், எவர்கள் நிராகரிக்கின்றார்களோ, அவர்களுக்குக் கேடுதான்; அவர்களுடைய செயல்களை அவன் வீணாக்கிவிடுவான். இது ஏனெனில், அல்லாஹ் இறக்கிய (வேதத்)தை திட்டமாகவே அவர்கள் வெறுத்தார்கள்; ஆகவே, அவர்களுடைய செயல்களை அவன் அழித்துவிட்டான்.

(அல்குர்ஆன் 47:8,9)

நரகவாசிகள் பற்றி அல்லாஹ் கூறும்போது :

﴿وَنَادَوْا يٰمٰلِكُ لِيَقْضِ عَلَيْنَا رَبُّكَ‌ قَالَ اِنَّكُمْ مّٰكِثُوْنَ لَقَدْ جِئْنٰكُمْ بِالْحَـقِّ وَلٰـكِنَّ اَكْثَرَكُمْ لِلْحَقِّ كٰرِهُوْنَ﴾

மேலும், அவர்கள் (நரகத்தின் தலைமைக் காவலரை நோக்கி): "மாலிக்கே! உமது இறைவன் எங்களுக்கு (மரணத்தின் மூலமாவது) தீர்ப்பளிக்கட்டும்" என்று சப்தமிடுவார்கள். அதற்கு அவர் "நிச்சயமாக நீங்கள் (இங்கு மரணிக்காது) தங்கியிருக்க வேண்டியவர்களே" என்று கூறுவார். "நிச்சயமாக நாம் உங்களிடம் சத்தியத்தைக் கொண்டுவந்தோம்; ஆனால், உங்களில் பெரும்பாலோர் சத்தியத்தை வெறுக்கிறவர்களாக இருந்தீர்கள்" (என்றும் கூறப்படும்). (அல்குர்ஆன் 43:77,78)

அல்லாஹ்வின் அடியார்களே! ஷரிஅத்தை வெறுப்பது என்பது அதை முழுமையாகவோ அல்லது அதன் பெரும்பகுதியையோ அல்லது சிறு பகுதியை வெறுத்தாலே நிகழ்ந்துவிடும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மார்க்கத்தை நேசிப்பதன் முக்கியத்துவத்தை சொல்லும் ஒரு சிறிய உரையே இது. மார்க்கத்தை நேசிப்பது என்பது அதை அருளிய அல்லாஹ்வை நேசிப்பதன் ஒரு பகுதி. யார் இதை புரிந்து கொள்வாரோ அவருக்கு வழிபாடு மற்றும் நபியை பின்பற்றுவதில் ஒரு தெளிவு கிடைக்கும்.

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيم أقول قولى هذا وأستغفر الله لى ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

மார்க்கத்தை வெறுப்பதன் நடைமுறை உதாரணங்கள் மற்றும் வெறுப்பவர்கள் பற்றிய விளக்கம்

الحمد لله وحده والصلاة والسلام على من لا نبى بعده أما بعد

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, இறுதித்தூதர் முஹம்மது ﷺ மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! அல்லாஹ்வின் நல்லடியார்களே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், மார்க்கத்தை வெறுத்தல் என்பது நபியின் சுன்னாவை வெறுப்பது, ஸஹாபாக்கம் மற்றும் நபியின் மனைவிமார்களை வெறுப்பது, ஹிஜாபை வெறுத்தல், இஸ்லாத்தை உலக வாழ்விலிருந்து பிரிப்பது, இஸ்லாத்தை வெறும் தொழுகை நோன்பு, ஹஜ் போன்ற வணக்கம் மட்டும் சடங்காக மட்டும் பார்த்து கொடுக்கல் வாங்கல்

மற்றும் அரசியல் போன்ற பிரிவுகளில் இஸ்லாத்திற்கு சம்மந்தம் இல்லை என சொல்லும் எல்லா காரியங்களும் மார்க்கத்தை வெறுப்பதை போன்றாகும். அது நயவஞ்சகத்தனத்தின் மோசமான நிலை, அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வின் நல்லடியாளர்களே! மதசார்பற்றவர்கள் தாராளமய கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மார்க்கத்திற்கும் உலக நடைமுறை வாழ்விற்கும் சம்மந்தம் இல்லை, மதம் வெறும் வணக்கத்தில் மட்டும் தான் உள்ளது அதற்கு வியாபாரம் அரசியல் ஆகியவைகளுடம் தொடர்பு இல்லை என்ற பொய்யான அழைப்பை தொடர்ச்சியாக செய்து வருகிறார்கள். இது அவர்களின் வெறுப்பின் வெளிபாடு மற்றும் மார்க்கத்தின் மீது திருப்தி இல்லை என்பதையே தெளிபடுத்துகிறது. ஒரு வேளை அவர்கள் இஸ்லாத்தை நேசித்தால் இது போன்ற பிரிவு வாதத்தில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இதை வெளிப்படையாக செய்பர்களும் உண்டு மறைமுகமாக செய்பவர்களும் உண்டு, இப்படிப்பட்டவர்கள் ஈமானை வெளிக்கட்டிக்கொண்டு உள்ளத்தில் நயவஞ்சகத்தை ஒளித்து வைத்தவர்கள். அல்லாஹ் பாதுகாப்பானாக!

ஹிஜாபை எதிர்ப்பது, பெண்கள் தீர்ப்பு சொல்லும் நீதிபதிகளாக பெறும் பொறுப்பாளர்களாக வரக்கூடாது என சொல்பவர்களை எதிர்ப்பது, ஒன்றுக்கும் மேற்ப்பட்ட திருமணங்களை தடை செய்வது, அல்லாஹ் வேறுபடுத்தி காட்டிய ஆண் பெண் விவகாரத்தில் சமத்துவம் பேசுவது, நன்மையை ஏவி தீமையை தடுப்பவர்களை எதிர்ப்பது போன்றவைகள் அவர்களின் வழிகேடுகளின் சில உதாரணங்கள். அழகான உபதேசத்தை வெறுத்து மோசமான சிந்தனையை பின்பற்றுபவர்கள் இவர்கள்.

<u>தீனை வெறுப்பது உள்ளம் செய்யும் மறைவான பாவச்செயல்</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஸ்லாத்தை முறிக்கும் இந்த வகை உள்ளங்களில் மறைவாக இருக்கும் காரியம். ஆகவே மறுமை நாள் வரும் முன் நம் உள்ளத்தில் மார்க்கத்தை குறித்து ஏதேனும் வெறுப்பு அல்லது கோபம் இருந்தால் அதனை முழுமையாக களைய வேண்டும்.

முடிவுரை

மேலும் அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு மேலானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ ۚ يَٰٓأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களை நயவஞ்சகத்திலிருந்து தூய்மைப் படுத்துவாயாக! எங்கள் வணக்கங்களை முகஸ்துதியிலிருந்து காப்பாயாக! எங்கள் பார்வைகளை மோசடியிலிருந்து பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! நாங்கள் அறிந்த அறியாத எல்லா நன்மைகளையும் உன்னிடம் கேட்கிறோம், மேலும் நாங்கள் அறிந்த அறியாத எல்லா பாவங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! உன்னிடம் சுவனத்தையும் அதற்கு எங்களை கொண்டு செல்லும் சொல்லையும் செயலையும் கேட்கிறோம். மேலும் நரகத்தை விட்டும் அதற்கு இட்டுச்செல்லும் சொல் மற்றும் செயல்களை விட்டும் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு நிவாரணம் அளிப்பாயாக! இறந்தவர்களுக்கு கருணை புரிவாயாக! சோதனையில் உள்ளவர்களுக்கு நிம்மதி அளிப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் இம்மை மற்றும் மறுமையை சீராக்கி வைப்பாயாக! எங்கள் மரணத்தை எல்லா தீங்குகளை விட்டும் இலகுவானதாக ஆக்குவாயாக!

உன் அருள்வளங்கள் தடைபடுவதை விட்டு உன்னிடம் பாதுகாப்பு கேட்கிறோம், உன் அருள் தலைகீழாக மாறுவதை விட்டும் திடீர் சோதனைகளை விட்டும் பாதுகாப்பு கேட்கிறோம்.

எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும், (உன்னை) அஞ்சுவோருக்கு வழிகாட்டியாக எங்களை ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்ளிம்களையும் நீ கண்ணியப்படுத்துவாயாக! ஷிர்க் மற்றும் முஷ்ரிக்களை இழிவுபடுத்துவாயாக! உன் எதிரிகள் மற்றும் இந்த மார்க்கத்தின் எதிரிகளை நீ அழிப்பாயாக! உன்னயே வணங்கும் அடியார்களுக்கு உதவி செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் நாடுகளில் அமைதியை நிலயச்செய்வாயாக! இமாம்கள் மற்றும் ஆட்சியாளர்களை சீரான வழியில் செலுத்துவாயாக! அவர்கள் நேர்வழியில் அழைத்து செல்பவர்களாக ஆக்குவாயாக!

எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகிலும் நன்மையை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையை அளிப்பாயாக! இன்னும், எங்களை (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காப்பாயாக!

நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும்
அருள்புரிவாயாக!

سبحان ربنا رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 5

இஸ்லாத்தின் சட்டங்களை கேலி செய்தல்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவமன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழிபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

<u>மார்க்கத்தை கண்ணியப்படுத்துதல் ஈமானின் அம்சம்</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

அல்லாஹ்வை கண்ணியப்படுத்துதல், அவன் தூதரை கண்ணியப்படுத்துதல், தீனை கண்ணியப்படுத்துதல் ஆகியவை ‘லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ என்ற ஷஹாதத்தின் முக்கிய அம்சமாகும். கொள்கை, வணக்கம், கொடுக்கல் வாங்கல், பண்பு ஆகிய அனைத்து வகையிலும் தொடர்புடையதாக இருந்தாலும் அதன் மூலம் கண்ணியத்தை வெளிப்படுத்த வேண்டும். இது நாம் அந்த ஷஹாதத்தை மற்றும் ஈமானை உண்மைப் படுத்துகிறோம் என்பதற்கான அடையாளமாகும். அல்லாஹ் அவனை ஈமான் கொள்வதையும் அவனது தூதரை ஈமான் கொள்வதையும் அவனை மற்றும் தூதரை கண்ணியப்படுத்துவதோடு இணைத்தே கூறுகிறான்.

﴿لِّتُؤْمِنُوْا بِاللّٰهِ وَ رَسُوْلِهٖ وَتُعَزِّرُوْهُ وَتُوَقِّرُوْهُ ؕ وَتُسَبِّحُوْهُ بُكْرَةً وَّاَصِيْلًا﴾

(ஆகவே, நம்பிக்கையாளர்களே!) நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டு, (தூதராகிய) அவருக்கு (சன்மார்க்கத்தில்) உதவிபுரிந்தும், அவரைக் கண்ணியப்படுத்தியும், காலையிலும் மாலையிலும் (அல்லாஹ்வாகிய அவனைத் துதிசெய்து வருவதற்காக(வே தூதரை அனுப்பினோம்). (அல்குர்ஆன் 48:9)

மார்க்கத்தை கேலி செய்வது இஸ்லாத்தை முறிக்கும் காரியம்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! கண்ணியப்படுத்தலுக்கு நேர் எதிரானது மார்க்க அடையாளங்களை நபிமார்களை அதன் நற்கூலிகள் தண்டனைகளை கேலி கிண்டல் செய்வது. இதனை யார் செய்தாலும் அவர் இறைமறுப்பாளர் ஆகிவிடுவார். மார்க்க அம்சங்களை கேலி செய்வதென்பது அதனை படைத்த இறைவனை கேலி செய்வதை போன்றாகும் இது தெளிவான இறைமறுப்பு. நம்மீது உள்ள அல்லாஹ்வின் கடமைகளில் ஒன்று அவனை கண்ணியப்படுத்துவது மாறாக குறை காண்பது கிடையாது. அல்லாஹ்வையும் அவன் தூதரையும் தீனையும் கண்ணியப்படுத்துபவரிடமிருந்து கேலி செய்யும் செயல் வெளிப்படாது. அது நயவஞ்சகனின் பண்பு. அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! மார்க்க அம்சங்களை கேலி செய்வது எப்படி நயவங்சகமாக ஆகும்? இமாம் இப்னு ஸஃதி (ரஹ்) கூறுகிறார்கள் : அல்லாஹ்வையும் அவன் தூதரையும் கேலி செய்வது இறைமறுப்பு மேலும் அது ஒருவனை இஸ்லாத்தை விட்டு வெளியேற்றிவிடும். ஏனெனில் இந்த மார்க்கத்தின் அடிப்படையே அல்லாஹ் மற்றும் அவன் தூதரை கண்ணியப்படுத்துவதில் தான் அமைந்துள்ளது. அந்த அடிப்படையை தகர்க்கும் மோசமான காரியம் கேலி செய்வதாகும்.[184]

மார்க்க காரியங்களை கேலி செய்பவர் காஃபிர் என்பதற்கான ஆதாரங்கள்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மார்க்க அடையாளங்கள் ஏதனையும் கேலி செய்தால் அவர் காஃபிர் என்று குர்ஆன் கூறுகிறது :

[184] தய்ஸீருல் கரீம் அர்ரஹ்மான் ஃபீ தஃப்ஸீரி கலாமுல் மன்னான் : தஃப்ஸீர் சூரா தவ்பா வசனம் 65

﴿وَلَىِٕنْ سَاَلْتَهُمْ لَيَـقُوْلُنَّ اِنَّمَا كُنَّا نَخُوْضُ وَنَلْعَبُ‌ قُلْ اَبِاللّٰهِ وَاٰيٰتِهٖ وَرَسُوْلِهٖ كُنْتُمْ تَسْتَهْزِءُوْنَ﴾

(இதைப் பற்றி) நீர் அவர்களைக் கேட்டால் அவர்கள், "நாங்கள் வீண்பேச்சில் மூழ்கியும், விளையாடிக் கொண்டும்தான் இருந்தோம்" என்று நிச்சயமாகக் கூறுவார்கள்; "அல்லாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனுடைய தூதரையுமா நீங்கள் பரிகசித்துக்கொண்டு இருந்தீர்கள்?" என்று (நபியே!) நீர் கேட்பீராக! (அல்குர்ஆன் 9:65)

இந்த வசனம் மார்க்க அம்சம் எதை கேலி செய்து பரிகசித்தாலும் அது குஃப்ர் என்பதை தெளிவுபடுத்துகிறது. அது அல்லாஹ்வையோ அவன் வசனங்களையோ அவன் தூதரையோ விளையாட்டாகவோ அல்லது வேண்டுமென்றோ எவ்வாறு இருந்தாலும் அது குஃப்ர் தான்.

மேற்கண்ட வசனத்தின் விளக்கமாக அப்துல்லாஹ் இப்னு உமர் கூறினார்கள் : தபூக் போர் சமயத்தில் நாங்கள் அமர்ந்திருக்கும் வேளையில் ஒரு மனிதர் 'நம்மிடமுள்ள அறிஞர்களை போல வயிற்றை நிரப்பும், அதிகம் பொய் பேசும், சண்டையின்போது கோழையாக இருக்கும் மக்களை நான் பார்த்ததே இல்லை' என்று கூற மற்றவர் 'நீ பொய் சொல்கிறாய், நீ ஒரு நயவஞ்சகன், நான் இதை நிச்சயம் நபியிடம் தெரிவிப்பேன்' என்று நடந்தவற்றை நபியிடம் சொன்னார். அப்போது இந்த வசனம் இறங்கியது. அவர் ஒட்டகத்தின் கயிற்றை பிடித்த நிலையில் நபியிடம் வந்து பணிந்து 'நபியே! நாங்கள் வெறுமனே கேலி செய்து விளையாடிக் கொண்டிருந்தோம்' அதற்கு நபி 'அல்லாஹ்வும் அவன் வசனங்கள் மற்றும் அவன் தூதர் விஷயத்திலா கேலி செய்வீர்கள்?' என கேட்டார்கள்.[185]

மார்க்கத்தை கேலி செய்பவர் காஃபிர் என்பது இஸ்லாமிய அறிஞர்களின் ஒன்றுபட்ட கருத்து

நம்பிக்கையாளர்களே! மார்க்க காரியங்களை கேலி கிண்டல் செய்பவர்கள் காஃபிர்கள் என்பது இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் ஒன்றுபட்ட கருத்தாகும்.

[185] ஹதீஸ் ஹஸன் (ஷேக். முக்பில் அல்வாதியீ - அஸ்ஸஹீஹ் அல்முஸ்னத் மின் அஸ்பாபின் நுஸூல் ப.126)

ஷேக். ஸுலைமான் இப்னு அப்துல்லாஹ் இப்னு முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) கூறினார்கள் : அல்லாஹ் குர்ஆனில் சொன்ன செய்திகள் மற்றும் தூதரை பற்றி யார் நகைச்சுவை செய்வாரோ அவர் காஃபிர் ஆகிவிட்டார். இவ்வாறு மார்க்கத்தையும் இறை பண்புகளையும் தூதுச்செய்தியையும் சிறுமைப்படுத்துவது மூலம் அவர் இறைமறுப்பாளர் ஆகிறார். மேலும் அது தவ்ஹீதை தகர்க்கும் காரியாமாகும்.

யார் கெளிக்கை நோக்கம் இல்லாமல் அல்லாஹ்வையும் வேதத்தையும் நபியையும் மார்க்கத்தையும் கொண்டு நகைச்சுவை செய்வரோ அவர் இஸ்லாமிய அறிஞர்கள் ஒருமித்த கருத்தின்படி காஃபிர் ஆகிவிடுகிறார்.[186]

மார்க்கத்தை கேலி செய்வதை விட்டு எச்சரிக்கை

அல்லாஹ்வின் நல்லடியார்களே! நம் நாவுகள் பேசும் காரியங்கள் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதுதான் மக்கள் பெரும்பாலானோர் நரகம் செல்ல காரணமாக இருக்கிறது. முஆத் (ரலி) ஒருமுறை நபியிம் கேட்டார் : நாங்கள் பேசும் வார்த்தைகளுக்கும் குற்றம் பிடிக்கப்படுவோமா? அதற்கு நபியவர்கள் : ‘உன் தாய் உன்னை இழந்துவிட்டாள்[187] முஆதே! நாவு செய்த அறுவடைகளை விட வேறு எது மக்களை நரகத்தில் அவர்கள் முகம் அல்லது மூக்கு குப்புற விழச்செய்யும்?’ என பதிலளித்தார்கள்.[188]

மற்றுமொரு ஹதீஸில் : ஓர் அடியான் கவனக் குறைவாக பெரும் முக்கியத்துவம் கொடுக்காமல் ஒரு வார்த்தை பேச அது அல்லாஹ்வை கோபப்படுத்த அவன் நரகம் செல்வான் என நபி ﷺ கூறினார்கள்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَيۡلٞ لِّكُلِّ هُمَزَةٖ لُّمَزَةٍ ١﴾

குறைசொல்லிப் புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான்.

(அல்குர்ஆன் 104:1)

186 தய்ஸீருல் அஸீஸ் அல்ஹமீது ஃபீ ஷர்ஹி கிதாபுத் தவ்ஹீது.

187 பேச்சு வழக்கில் அரபுகள் பயன்படுத்தும் சொற்கள். அதன் நேரடி அர்த்தத்தோடு அது பயன்படுத்தப்படுவது கிடையாது

188 அறிவிப்பாளர் : அஹ்மது (5/231)

﴿مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ اِلَّا لَدَيْهِ رَقِيْبٌ عَتِيْدٌ﴾

அவனிடம் (அதை) எழுத எதிர்பார்த்துத் தயாராக இருக்கின்ற கண்காணிப்பாளர் இருந்தே தவிர, சொல்லால் எதையும் அவன் மொழிவதில்லை. (அல்குர்ஆன் 50:18)

இஸ்லாத்தை கேலிப்படுத்தல் - சில நடைமுறை உதாரணங்கள்

அல்லாஹ்வின் நல்லடியாளர்களே! உலமாக்களையும் நல்லோர்களையும் கேலி செய்வது மார்க்கத்தை கேலி செய்வது போன்றதாகும். உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள், அவர்களே இந்த மார்க்கத்தை சுமந்தவர்கள். யார் நன்மையை ஏவி தீமையை தடுக்கும் ஒரு ஆலிமை கேலி செய்வாரோ அவர் காஃபிர் ஆகிவிடுகிறார். ஆக ஆலிம்களை கண்ணியப்படுத்துவதும் மரியாதை செலுத்துவதும் கடமையாகும். ஏனெனில் அல்லாஹ் அவர்களின் அந்தஸ்த்தை உயர்த்தியுள்ளதாக குர்ஆனில் குறிப்பிடுகிறான். அல்லாஹ் கூறுகிறான் :

﴿يَرْفَعِ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ ۙ وَالَّذِيْنَ اُوْتُوا الْعِلْمَ دَرَجٰتٍ﴾

உங்களில் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் கல்வியறிவு அளிக்கப்பட்டவர்களுக்கும் அல்லாஹ் பதவிகளை உயர்த்துவான் (அல்குர்ஆன் 58:11)

நபி ﷺ கூறினார்கள் : “மார்க்கம் கற்ற ஓர் ஆலிமுக்கு வானம் மற்றும் பூமியில் இருப்பவர்கள் பாவமன்னிப்பு தேடுகின்றார்கள், கடலில் உள்ள மீனும் பாவமன்னிப்பு தேடும். ஒரு ஆலிமுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு சந்திரன் மற்றும் மற்ற நட்சத்திரங்கள் போலாகும். உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகளாவார்கள். அவர்கள் தீனார் அல்லது திர்ஹம்களை பெறவில்லை மாறாக அவர்கள் அறிவைத்தான் பெற்றார்கள். அந்த அறிவைப் பெற்றவர்கள்தான் நிறையப் பாக்கியம் பெற்றவர்களாவார்கள்.”

ஈமான் கொண்டோரே! நபியில் சுன்னத்களாக இருக்கும் தாடி வளர்த்தல், கரண்டைக்கு மேல் ஆடை அணிதல், மிஸ்வாக் பயன்படுத்துவது, ஹிஜாப், வணக்க வழிபாடுகள் போன்ற செயல்களை கேலி செய்வதும் குஃப்ர் ஆகும்.

மேலும் மறைவாக இருப்பவற்றை கேலி செய்வது மூலமும் காஃபிர் ஆகிவிடுவார். உதாரணமாக சொர்க்கம் நரகம் பற்றி கிண்டல் செய்வது போல.

மேலும், ஸஹாபாக்களின் நம்பகத்தன்மை, ஆயிஷா (ரலி) அவர்களின் தூய்மை, நபிமார்களின் மனைவிமார்கள் போன்ற அகீதா (கொள்கை) விஷயங்களில் கேலி கிண்டல் செய்வதும் குஃப்ர் ஆகும். ஏனெனில் இந்த விஷயங்கள் குர்ஆனில் நேரடியாக வந்துள்ளதால் இது குர்ஆனை பொய்ப்பிப்பது போலாகிவிடுகிறது. அல்லாஹ் தன் குர்ஆனில் ஸூரா அத்தவ்பா : 100, ஸூரா அல்ஃபத்ஹ் : 29, ஸூரா அல்ஹஷ்ர் : 8,9 ஆகிய வசனங்களில் ஸஹாபாக்களை புகழ்ந்து கூறியுள்ளான். மேலும் ஆயிஷா (ரலி) விவகாரத்தில் அவர்கள் தூய்மையானவர் என அல்லாஹ்வே சான்று கொடுத்த பின்னர் அவர்கள் பற்றி குறை சொல்ல யாருக்கு தகுதி உண்டு? இது அல்லாஹ் தன் தூதருக்கு தவறான தோழர்களை மனைவிமார்களையும் தேர்ந்தெடுத்து விட்டான் என குறை சொல்வது போன்றதாகும். அல்லாஹ் நம்மை இது போன்ற வழிகேட்டிலிருந்து பாதுகாப்பானாக!

கேலி செய்வதென்பது நேரடியாகவும் மறைமுகமாகவும் நிகழும். நேரடியாக என்பது வார்த்தைகள், செயல்கள், அல்லது எழுத்து மூலம் கேலி செய்தல் மற்றும் மறைமுகமாக என்பது கண் சாடை, கையால் சைகை செய்வது, நாவை வெளிநீட்டி காட்டுவது போன்றதாகும். கேலி செய்வதில் குறைந்த அல்லது கூடுதல் என எந்த அளவுகோளும் இல்லை. எல்லாமே ஒரே நிலை தான். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

இஸ்லாத்தை கேலி செய்பவர்கள் மீது முஸ்லிம்கள் மற்றும் ஆட்சியாளர்கள் மீதுள்ள கடமை

மனிதர்களே! அல்லாஹ்வை அவன் தூதரை அல்லது மார்க்கத்தை கேலி செய்பவருக்கான தண்டனை என்பது ஆட்சியாளர்களால் அவர் கொலை செய்யப்பட வேண்டும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! யாரொருவர் அல்லாஹ்வையோ அவன் தூதரையோ மார்க்கத்தையோ கேலி செய்யப்படுவதை கேட்டால் அவர் அதனை கேட்டு அமைதியாக இருக்காமல் அதற்கு மறுப்பு தெரிவித்து பதில் சொல்ல வேண்டும் அல்லது அந்த சபையிலிருந்து வெளியேற வேண்டும். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள் இறைமறுப்பாளர்கள் என்று அல்லாஹ் குர்ஆனில் கூறிவிட்டான். ஆகையால் அவர்கள் வேறு எதும் தலைப்பில் பேச்சை மாற்றாதவரை நீங்கள் அவர்களோடு அமரவேண்டாம் என அல்லாஹ் கூறுகிறான். அவ்வாறு அமர்ந்தால் நீங்களும் அவர்களுள் ஒருவராக ஆகிவிடுவீர்கள். காஃபிர்கள் மற்றும் நயவஞ்சகர்களை ஒன்றாக தண்டிப்பது போல அல்லாஹ் நம்மையும் தண்டிக்கக்கூடும், அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மார்க்கத்தை அதை உருவாக்கிய அல்லாஹ்வையும் அதை நமக்கு எடுத்துச்சொன்ன நபிமார்களையும் அதை நமக்கு கற்றுக்கொடுக்கும் உலமாக்கள் மற்றும் நல்லோர்களையும் கண்ணியப்படுத்தும் முக்கியத்துவத்தை சொல்லும் ஒரு சிறிய உரையே இது. இதற்கு மாற்று பாதையில் யார் செல்வாரோ அவர் மிகப்பெரும் ஆபத்தில் வீழ்ந்துவிடுவார்.

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيم

أقول قولى هذا وأستغفر الله لى ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

<u>மார்க்கத்தை கேலி செய்யும் பண்பு பொதுவாக காஃபிர்களிடத்திலும் குறிப்பாக யூதர்கள் மற்றும் முனாஃபிக்களிடமும் காணப்படுகிறது.</u>

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, இறுதித்தூதர் முஹம்மது ﷺ மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! அல்லாஹ்வின் நல்லடியார்களே நீங்கள் அல்லாஹ்வையே அஞ்சுங்கள், இஸ்லாத்தை கேலி செய்வது யூதர்களின் குணம் என்பதை அறிந்து கொள்ளுங்கள், அவர்கள் அல்லாஹ்வை கேலி செய்ததை அல்லாஹ் குறிப்பிடுகிறான் :

﴿وَقَالَتِ الْيَهُوْدُ يَدُ اللهِ مَغْلُوْلَةٌ﴾

"அல்லாஹ்வின் கை கட்டப்பட்டிருக்கிறது" என்று யூதர்கள் கூறுகிறார்கள் (அல்குர்ஆன் 5:64)

﴿اِنَّ اللّٰهَ فَقِيْرٌ وَّنَحْنُ اَغْنِيَآءُ﴾

"நிச்சயமாக அல்லாஹ் ஏழை; நாங்கள்தான் செல்வந்தர்கள்" (அல்குர்ஆன் 3:181)

அதேபோல் முஃமின்களை பரிகாசம் செய்வதும் காஃபிர்களின் பண்பு. அல்லாஹ் இந்த பண்பை குற்றம் என குர்ஆனில் கூறுகிறான் :

﴿اِنَّ الَّذِيْنَ اَجْرَمُوْا كَانُوْا مِنَ الَّذِيْنَ اٰمَنُوْا يَضْحَكُوْنَ وَاِذَا مَرُّوْا بِهِمْ يَتَغَامَزُوْنَ وَاِذَا انْقَلَبُوْۤا اِلٰٓى اَهْلِهِمُ انْقَلَبُوْا فَكِهِيْنَ وَاِذَا رَاَوْهُمْ قَالُوْۤا اِنَّ هٰٓؤُلَاۤءِ لَـضَآلُّوْنَ﴾

நிச்சயமாக, குற்றமிழைத்தவர்களே அவர்கள், நம்பிக்கை கொண்டவர்களைப் பார்த்து (உலகில்) சிரித்துக் கொண்டிருந்தார்கள். அன்றியும், அவர்கள் அண்மையில் சென்றால், (ஏளனமாக) ஒருவருக்கொருவர் கண்சாடை செய்துகொள்வார்கள். இன்னும், அவர்கள் தம் குடும்பத்தாரிடம் திரும்பிச் சென்றாலும், (தாங்கள் செய்தது பற்றி) மகிழ்வுடனேயே திரும்பிச் செல்வார்கள். மேலும், (நம்பிக்கையாளர்களாகிய) அவர்களை இவர்கள் பார்த்தால், "நிச்சயமாக இவர்களே வழி தவறியவர்கள்" என்றும் கூறுவார்கள். (அல்குர்ஆன் 83:29-32)

முஃமின்களை கேலியாக பரிகாசம் செய்வது என்பது உள்ளே அல்லாஹ்வின் தீனை வெறுத்து வெளியே ஈமானை காட்டும் நயவஞ்சகர்களின் பண்பாகும். இந்த பண்புகளை மதச்சார்பின்மை, தாராளமய கொள்கைகள் பேசும் மக்களிடம் காணலாம். நன்மையை ஏவி தீமை தடுப்பவர்களை இவர்கள் கேலி செய்வார்கள், மேலும் ஹிஜாப், ஒட்டக சிறுநீரிலிருந்து நிவாரணம் தேடும் நபிவழி ஆகியவற்றை கேலி செய்வார்கள். ஆனால் அல்லாஹ்வின் கிருபையால் இவர்களில் பொய் பிரச்சாரங்கள் நீண்ட காலம் நீடிக்காது. ஒட்டக சிறுநீரில் நிவாரணம் இருக்கிறது என்று நபி ﷺ சொன்னதை இன்று பல மேற்க்கத்திய ஆய்வாளர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

முடிவுரை

மேலும் அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு மேலானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللهَ وَمَلٰٓئِكَتَهُ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத் தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களை நயவஞ்சகத்திலிருந்து தூய்மைப் படுத்துவாயாக! எங்கள் வணக்கங்களை முகஸ்துதியிலிருந்து காப்பாயாக! எங்கள் பார்வைகளை மோசடியிலிருந்து பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம்.

ربنا آتنا فى الدنيا حسنة وفى الآخرة حسنة وقنا عذاب النار. اللهم صل وسلم على نبينا محمد وآله وصحبه.

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 6
சூனியம்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

இறைத்தூதர்கள் அனைவரின் அழைப்பும் அல்லாஹ்வை மட்டுமே வணங்கவேண்டும் என்பதே. அதற்கு மாறாக இருக்கும் அனைத்தை விட்டும் நாம் விலகியிருக்க வேண்டியது கட்டாயம். அல்லாஹ்வை தவிர மற்றவைகளை வணங்குவது, மற்றவைகளிடம் பிரார்த்தனை செய்வது அறுத்து பலியிடுவது நேர்ச்சை செய்வது, கப்ர்களை சுற்றி தவாஃப் செய்வது போன்ற ஷிர்க்கான காரியங்கள் அனைத்தும் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றிவிடும் அதே போல் தான் சூனியம் செய்வது, அதுவே இந்த கட்டுரையின் தலைப்பு.

சூனியம் என்றால் என்ன மற்றும் அதன் வகைகள் என்ன?

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியம் என்பது குறிப்பிட்ட சொற்கள், வார்த்தைகள், முடிச்சு, மருந்துபொருட்கள், புகை பொருட்கள் கொண்டு உடலிலோ அல்லது உள்ளத்திலோ அல்லது பார்வையிலோ தாக்கத்தை ஏற்படுத்தும் தீய செயலை குறிக்கும். அதன் தாக்கத்தால் நோய் அல்லது மரணம் கூட ஏற்படக்கூடும். சிந்தனையில் பாதிப்பு, கணவன் மனைவி, வியாபார பங்குதாரர்கள் போன்ற இருதரப்பினரிடையில் சண்டைக்கு காரணமாகவும் அமையும்.[189]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியம் இரு வகைப்படும், ஹகீகி மற்றும் தஃக்யீலி.

---

[189] நூல் : அல்முஃனி, கிதாபும் முர்தத், ஃபஸ்ல் ஃபிஸ் ஸிஹ்ர் (9/299)

ஹகீகி 3 வகைப்படும் : முதலாவது - உடலில் ஏற்படுத்தும் தாக்கம், இது நோய் அல்லது மரணத்தை ஏற்படுத்தும். இரண்டாவது, உள்ளத்தில் விருப்பு வெறுப்பு போன்றவைகளில் ஏற்படுத்தும் தாக்கம், இதன் மூலம் நேசிக்கக்கூடிய ஒருவரை வெறுக்கவைக்க முடியும் அல்லது வெறுக்கும் ஒருவரை நேசிக்க வைக்க முடியும். மூன்றாம் வகை, சிந்தனை மற்றும் யோசனைகளில் ஏற்படுத்தும் தாக்கம். இதனால் பாதிக்கப்பட்டவர் ஒரு காரியத்தை செய்திருக்கமாட்டார் ஆனால் அதை செய்துவிட்டதாக எண்ணுவார், இந்த வகை சூனியத்தை தான் லபீத் பின் அல்அஃஸம் என்ற யூதன் நபி ﷺ அவர்களுக்கு செய்தான். இதனால் நபி ﷺ தான் செய்யாத ஒரு செயலை செய்ததாக எண்ணிக்கொள்வார், இந்த சூனியத்தின் தாக்கம் அவரிடம் சில மாதங்கள் இருந்தது.

சூனியக்காரன் சூனியம் செய்ய ஷைத்தானின் உதவிகளை நாடுவான். அவன் சூனியம் செய்ய நாடினால் ஷைத்தான்களிடம் அசிங்கமான பாவமான காரியங்களை செய்து உதவி தேடுவான். பின்னர் எச்சிலுடன் ஒரு முடிச்சில் ஊதுவான் இதுவே ‘அந்நஃபஸ்’ எனப்படும். அல்லாஹ் குர்ஆனில் கூறியது போல :

﴿وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِۙ﴾

இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கிலிருந்தும்

(அல்குர்ஆன் 113:4)

முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்கள் என்பவர்கள் தீய ஷைத்தான்கள் மூலம் உதவி தேடி சில குறிப்பிட்ட முறையில் முடிச்சுக்களில் ஊதுபவர்கள். அதன் மூலம் சூனியம் செய்து பாதிக்கப்பட்டு அதனால் ஏற்படும் தீங்கை நாம் காணலாம். ஆனால் இவை அனைத்தும் அல்லாஹ் விதித்தால் மட்டுமே அதன் பாதிப்பு நிகழும்.

﴿وَمَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ﴾

எனினும், அல்லாஹ்வின் கட்டளையின்றி அவர்கள் எவருக்கும் எத்தகைய தீங்கும் இதன் மூலம் இழைக்கமுடியாது; (அல்குர்ஆன் 113:4)[190]

---

[190] பதாயிஉல் ஃபவாயித், பக்கம். 736,737 (அடிகுறிப்பு : அலி பின் முஹம்மது அல்உம்ரான்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இன்னும் சிலர் தன் குடும்பத்தை விட்டு பிரிந்து செல்வதற்கு முன் சூனியக்காரனிடம் சென்று தான் தன் குடும்பத்தை பற்றி நினைக்காமலிருக்கும் வண்ணம் சூனியம் செய்து பின்னர் திரும்ப வரும் சமயத்தில் அதனை நீக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

சூனியம் செய்பவர்கள் மக்களை ஏமாற்றும் குணம் கொண்டவர்கள். மக்கள் அவர்களிடம் வரும் சமயத்தில் குர்ஆனை ஓதி காண்பித்து அதன் மூலம் அவன் நல்லவன் என்ற பிம்பத்தை அவர்கள் மத்தியில் காட்டுவான். மக்களும் அவன் அல்லாஹ்வின் நேசர் என நம்புவார்கள். அவன் தன் மந்திரத்தை அமானுஷ்யமாக விவரிக்கிறான். ஆனால் உண்மையில் இவை அனைத்தும் சூனியமே. ஆகையால் அவன் என்ன சொன்னாலும் அதை செய்யாமல் அதை மறுத்து அவனை விட்டு விலகுவது நம்மீது கடமையாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! தஃக்யீலி வகை சூனியம் என்பது உடல் உள்ளம் அல்லது சிந்தனைகளில் பாதிப்பு ஏற்படுத்தாது மாறாக கண்கட்டி வித்தை போல செயல்படும், பார்ப்பது ஒன்றாக இருக்கும் ஆனால் உண்மையில் அது அப்படி கிடையாது. இந்த வகை சூனியத்தின் மூலம் தான் ஃபிர்அவ்னிடம் இருந்த சூனியக்கரர்கள் குச்சிகளை பாம்புகளாக காட்டினார்கள். இதுவும் ஷைத்தானின் செயல்களில் உள்ளவையாகும்.

இந்த வகை சூனியம் பார்க்கப்படும் பொருளை அதன் உண்மை நிலையிலிருந்து மாற்றாது மாறாக நம் பார்வையில் தான் அதை வேறொன்றாக காண்பிக்கும். ஏனெனில் ஒரு விஷயத்தின் யதார்த்தத்தை மாற்றும் ஆற்றல் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தானது.

தஃயீலி வகை சூனியத்தின் இக்கால உதாரணமாக சர்க்கஸ்களில் நாம் பார்ப்பவைகள். அதில் மக்களின் பார்வைகளை ஏமாற்றி வினோதமானவைகளை சூனியத்தின் மூலம் காண்பிப்பார்கள். இந்த செயல்களை இவர்கள் சூனியம் என கூற மாட்டார்கள் ஏனெனில் மக்கள் இதன் மூலம் விலகிச் சென்றுவிடக் கூடும் என்ற காரணத்தால். ஆனால் இவை அனைத்தும் ஒன்று தான், பெயர்கள் மாறலாம் ஆனால் அதன்

அடிப்படை மாறாது. வாகனத்தை முடியால் இழுப்பது, நெருப்பை வாயால் உண்பது, தன்னையே கத்தியால் குத்திக்கொள்வது, நாக்கை அறுத்துக் கொள்வது, விலங்குகள் போல உருமாறுவது, தன் ஆடையிலிருந்து பறவைகளை வெளிகொண்டுவருவது போன்ற காரியங்கள் அனைத்தும் மனித ஆற்றலுக்கு அப்பாற்ப்பட்டது. ஒன்று இவையனைத்தையும் ஷைத்தானின் உதவியோடு இவர்கள் செய்வார்கள் அல்லது அவன் உதவியோடு மக்களின் பார்வைகளை ஏமாற்றுவார்கள். இரண்டுமே ஷைத்தானின் உதவியால் தான் நடக்கிறது.

<u>சூனியம் செய்பவர்கள் காஃபிர்கள் மற்றும் சூனியத்தின் ஈடுபடுவது ஹராம் என்பதற்கான ஆதாரங்கள்</u>

அல்லாஹ்வின் நல்லாடியார்களே! சூனியக்காரர்களை தூற்றி அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான் :

﴿وَلَا يُفۡلِحُ ٱلسَّاحِرُ حَيۡثُ أَتَىٰ﴾

ஆகவே, சூனியக்காரன் எங்கு வந்தாலும் வெற்றி பெற மாட்டான் (அல்குர்ஆன் 20:69)

﴿وَلَا يُفۡلِحُ ٱلسَّٰحِرُونَ﴾

மேலும் சூனியக்காரர்கள் வெற்றிபெறவே மாட்டார்கள் (அல்குர்ஆன் 10:77)

இந்த இரு வசனங்கள் சூனியக்காரர்கள் எந்த வெற்றியும் இருக்காது என தெளிவுபடுத்துகிறது. இது இறைமறுப்பில் உள்ளவரின் நிலையில் நாம் காண முடியும்.

மேலும் மூஸா (அலை) சூனியம் செய்பவர்களை சிறுமை படுத்தியதை பற்றி அல்லாஹ் கூறுகிறான் :

﴿فَلَمَّآ أَلۡقَوۡاْ قَالَ مُوسَىٰ مَا جِئۡتُم بِهِ ٱلسِّحۡرُۖ إِنَّ ٱللَّهَ سَيُبۡطِلُهُۥٓ إِنَّ ٱللَّهَ لَا يُصۡلِحُ عَمَلَ ٱلۡمُفۡسِدِينَ﴾

அவ்வாறு அவர்கள் போட்டபோது, மூஸா: "நீங்கள் கொண்டுவந்தவை (அனைத்தும்) சூனியமே; நிச்சயமாக அல்லாஹ் விரைவிலேயே இவற்றை

அழித்துவிடுவான்; அல்லாஹ் குழப்பவாதிகளின் செயலை நிச்சயமாக சீர்படுத்தமாட்டான்" என்று கூறினார். (அல்குர்ஆன் 10:81)

இந்த வசனம் சூனியம் செய்பவர்கள் பூமியில் குழப்பம் விளைவிப்பவர்கள் என தெளிவுபடுத்துகிறது.

மேலுள்ள வசனங்கள் சூனியம் செய்பவன் காஃபிர் என்பதையும் அவர்களிடம் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ள கூடாது என்பதையும் அதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பையும் பற்றி கூறுகிறது. ஆகவே அது மறுமையில் ஒருவனை அழித்துவிடும் என நபி ﷺ கூறினார்கள்.

عن أبي هريرة رضي الله عنه، عن النبي ﷺ قال: اجتنِبوا السَّبعَ الموبقات. قالوا: يا رسولَ اللهِ، وما هُنَ؟ قال: الشِّركُ باللهِ، والسِّحرُ... حديث

அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள் நபி ﷺ கூறினார்கள் : ஏழு பெரும் பாவங்களை விட்டு விலகிக்கொள்ளுங்கள். ஸஹாபாக்கள் கேட்டார்கள், 'அவை யாவை யா ரஸூலல்லாஹ்?' 'அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல்...' என பதிலளித்தார்கள்.[191]

وعن عِمران بن حصين رضي الله عنه قال: قال رسول الله ﷺ : ليس منا من تَطيَّرَ أو تُطُيِّرَ له ، أو تَكهَّنَ أو تُكُهِّنَ له ، أو سَحَرَ أو سُحِرَ له ، ومن أتى كاهناً فصدَّقه بما يقول فقد كفر بما أُنزل على محمد ﷺ

இம்ரான் பின் ஹுஸைன் (ரலி) அறிவிக்கிறார்கள்: 'ஒருவர் சகுனம் பார்ப்பாரெனில் அல்லது அவருக்காக சகுனம் பார்க்கப்படுகிறதெனில், ஒருவர் ஜோசியம் பார்ப்பாரெனில் அல்லது அவருக்காக ஜோசியம் பார்க்கப்படுகிறதெனில், ஒருவர் சூனியம் செய்தாரெனில் அல்லது அவருக்காக சூனியம் செய்யப்படுகிறதெனில் இப்படிப்பட்டவர்கள் நம்மைச் சேர்ந்தோர் அல்லர் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'[192]

وروى البيهقي عن قَتادة أن كعبا قال: قال الله عز وجل: ليس من عبادي من سَحر أو سُحِر له، أو كَهَن أو كُهِن له، أو تَطَيَّرَ أو تُطِيِّر له، لكن من عبادي من آمن وتوكل علي

[191]அல்புகாரி (2766), முஸ்லிம் (89)

[192] பர்ராஸ் - கஷ்ஃபுல் அஸ்தார் (3044)

கஃப் (ரலி) கூறினார்கள் : அல்லாஹ் கூறுகிறான் : ஒருவர் சூனியம் செய்தாரெனில் அல்லது அவருக்காக சூனியம் செய்யப்படுகிறதெனில், ஒருவர் ஜோசியம் பார்ப்பாரெனில் அல்லது அவருக்காக ஜோசியம் பார்க்கப்படுகிறதெனில், ஒருவர் சகுனம் பார்ப்பாரெனில் அல்லது அவருக்காக சகுனம் பார்க்கப்படுகிறதெனில் அவன் என் அடியான் அல்ல, மாறாக என் அடியான் என்னை நம்பிக்கை கொண்டு என்னையே சார்ந்து இருப்பான்.[193]

ஈமான் கொண்டோரே! சூனியக்கரனிடம் சூனியம் செய்ய செல்வது குஃப்ர் ஆகும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அது ஏன் குஃப்ர் என்றால் அவன் அதை ஏற்றுக்கொண்டு அதன் தாக்கத்தை மக்களிடம் அல்லது தன்னிடமே பார்க்க முடிவெடுத்துள்ளான். இது மட்டுமல்லாமல், சூனியத்தின் காரியங்களில் ஈடுபடாவிட்டாலும் அதன் அம்சங்களை ஏற்றுக்கொண்டாலே அவன் காஃபிர் ஆகிவிடுகிறான். ஏனெனில் குஃப்ரை ஏற்றுக்கொண்டு பொருந்திக் கொள்பவன் காஃபிர் தானே. இது சிலைவணக்கம் மற்றும் சிலுவைக்கு ஸஜ்தா செய்வதை பொருந்திக்கொள்வது போல, சிலையை வணங்காவிட்டாலும் சிலுவைக்கு ஸஜ்தா செய்யாவிட்டாலும் அதை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதே இறைமறுப்பு (குஃப்ர்) ஆகும்.

'நான் சூனியம் செய்ய மாட்டேன், அதை எதிர்க்கவும் மாட்டேன், அதை கற்றுக்கொள்ளவும் மாட்டேன் ஆனால் அது என் வீட்டிலோ என் சமூகத்திலோ பாதிப்பு ஏற்படுத்துவதை என் உள்ளத்தால் எதிர்க்கமாட்டேன்' என ஒருவன் சொன்னால் அவர் காஃபிர் ஆகிவிடுகிறார். ஏனெனில் அவர் தன் உள்ளத்தால் குஃப்ரை எதிர்க்கவில்லை.

தவ்ஹீத் அர்ருபூபிய்யா மற்றும் இபாதா என இரு வகையிலும் சூனியம் மூலம் இணைவைப்பு நிகழ்கிறது

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியம் செய்பவர்கள் தங்களால் நடக்கவிருக்கும் எதார்த்தத்தை மாற்ற இயலும் என சொல்பவர்கள் நடக்கவிருக்கும் அனைத்தும் (அல்லாஹ்வைத் தவிர) மற்றவர்கள் ஆற்றலால் நடைபெறும் எனவும் அல்லாஹ்வை தவிர மற்றவைகளிடம்

193 ஷுஅபுல் ஈமான் 1176

உதவி தேடுபவர்கள். முதலாவது, அல்லாஹ்வின் இறைத்தன்மையில் இணைவைப்பு (ருபூபிய்யா) இரண்டாவது வணக்கங்களில் இணைவைப்பு (உலூஹிய்யா). இவை இரண்டில் இணைவப்பது வழிகேடு மற்றும் ஷிர்க் என்பதற்கு போதுமானதாகும். ருபூபிய்யாவில் ஷிர்க் செய்வதென்பது அல்லாஹ்வை தவிர மற்றவர்கள் அல்லது தாங்களே நடக்கும் எதார்த்தத்தை மாற்ற இயலும் என சொல்வது. அல்லாஹ் ஒருவன் மட்டுமே நடக்கும் அனைத்தையும் பரிபாலிக்கும் மற்றும் ஆற்றல் கொண்டவன். இவர்கள் தங்கள் சூனியம் மூலம் செய்வது யாவும் மக்களை ஏமாற்றும் வேலை மட்டுமே.

உலூஹிய்யாவில் ஷிர்க் செய்வதென்பது ஷைத்தனிடம் உதவி தேடுவது மூலம் நிகழ்கிறது. ஷைத்தானுக்கு தலை வணங்குதல், பலியிடுதல், இன்னும் குர்ஆன் பிரதியை இழிவுபடுத்துதல் மூலம் அவனை திருப்தி படுத்தும் வேலைகளில் ஈடுபடுவார்கள். இதற்கு பகரமாக ஷைத்தான் இவர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பதெல்லாம் பூமியில் குழப்பம் மற்றும் குஃப்ரை பரப்புவதே. சூனியக்காரன் தனக்கு உதவும் ஷைத்தானை வணங்குவதன் மூலம் அதன் உதவிகளை பெற்றுக் கொள்கிறான். இதுவே அவன் ஆதமின் மக்களிடமிருந்து எதிர்பார்க்கும் மோசமான பாவம். அல்லாஹ் கூறுகிறான் :

﴿أَلَمْ أَعْهَدْ إِلَيْكُمْ يَٰبَنِىٓ ءَادَمَ أَن لَّا تَعْبُدُوا۟ ٱلشَّيْطَٰنَ ۖ إِنَّهُۥ لَكُمْ عَدُوٌّ مُّبِينٌ﴾

ஆதமுடைய மக்களே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள்; நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான பகைவன்" என்று நான் உங்களிடம் உறுதிமொழி வாங்கவில்லையா? (அல்குர்ஆன் 36:60)

மேற்காணும் குர்ஆன், சுன்னா, இஜ்மா ஆதரங்கள் மூலம் சூனியம் ஹராம் என தெளிவாகிறது.[194]

சூனியக்காரன் ஷைத்தான் மற்றும் மக்களிடமிருந்து பயனடைபவை என்ன?

194 மஜ்மூஉல் ஃபதாவா (35/171)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியக்காரன் ஷைத்தானிடமிருந்து பல காரியங்களில் பயனடைகிறான், உதாரணமாக, ஓர் இடத்திலிருந்து மற்ற இடத்திற்கு விரைவாக பயணித்தல் போல இன்னும் பல.

சூனியக்காரன் உள்ளம் பலவீனமாக இருப்பவர்களிடமிருந்து அவர்களுக்கு சூனியம் மூலம் உதவி செய்து பொருளாதார பயன்களை அவர்களிடமிருந்து அடைந்துகொள்கிறான். மூவரும் - ஷைத்தான், சூனியக்காரம், சூனியம் செய்ய சொல்லி கேட்பவன் - தங்கள் இம்மை மற்றும் மறுமையை பாழக்கிக்கொண்டார்கள்.

சூனியம் செய்பவர்கள் எதிராக முஸ்லிம்கள் மற்றும் ஆட்சியாளர்கள் மீதுள்ள கடமை

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியம் மற்றும் அது தொடர்பான காரியங்களில் ஈடுபடுவது குறித்து முஸ்லிம்கள் மக்களை எச்சரிக்கை செய்ய வேண்டும். இஸ்லாமிய ஆட்சி நடக்கும் நாடாக இருந்தால் சூனியம் செய்பவர்கள் மற்றும் அவர்களின் இடத்தை அதிகாரிகளிடம் காட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களிடம் செல்லாமல் அவர்களுடைய சபைகளில் கலந்துகொள்ளாமல் இருப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் அவர்களின் விளம்பரம் மற்றும் பொது நிகழ்வுகளை முழுமையாக புறக்கணிக்க வேண்டும். தொலைகாட்சி, சமூக தளங்கள், செயலிகள் போன்ற எல்லா தளங்களிலும் அவர்களை புறக்கணிக்க வேண்டும்.

இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகளை இப்படிப்பட்ட சூனியக்காரர்கள் மீது நிறைவேற்றுவதே மிகப்பெரும் வணக்கம் மற்றும் அல்லாஹ்விடம் நெருக்கத்தை பெற்றுத்தரும் செயல். ஏனெனில் இவர்கள் இந்த பூமியில் குழப்பம் விளைவிப்பவர்கள்.

فعن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله (صلى الله عليه وسلم) : حدٌّ يُعمل به في الأرض خير لأهل الأرض من أن يُمطروا أربعين صباحا

அபு ஹுரைரா (ரலி) கூறினார்கள் நபி ﷺ கூறியதாக : இஸ்லாமிய தண்டனை (குற்றவாளி மீது) நிறைவேற்றப்படுவது பூமியில்

இருப்பவர்களுக்கு நாற்பது நாட்கள் மழைப்பொழிவதை விட சிறந்ததாகும்.[195]

இப்னு தைய்மிய்யா (ரஹ்) கூறினார்கள் : அவர்களின் செயலுக்கு துணை போகும் அனைத்து காரியங்களையும் அகற்ற வேண்டும். பொது இடங்களில் அவர்களை அமர அனுமதிக்கக்கூடாது, அவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுக்கக்கூடாது, இதுவே அல்லாஹ்வின் பாதையில் நாம் செய்யும் சிறந்த ஜிஹாத்களில் ஒன்று.[196]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியம் மற்றும் அதை செய்பவன், அதை செய்ய சொல்லி கேட்பவன் அவர்களின் குஃப்ர் மற்றும் அதன் மோசமான விளைவுகளை தெளிவுபடுத்தி சொல்லும் ஒரு சிறிய உரையே இது. அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيمأقول قولى هذا وأستغفر الله لى ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

<u>சூனியத்திலிருந்து தற்காத்துக் கொள்ளுதல் மற்றும் அதன் பாதிப்பிலிருந்து மீளுதல்</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சூனியத்தின் பாதிப்பிலிருந்து காலை மாலை ஓதவேண்டிய துஆக்களை அன்றாடம் ஓதுவதன் மூலம் நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

சூனியம் செய்யப்பட்டது தெரிந்தால், அந்த பொருள் பூமியில், மலைகளில் அல்லது வேறு எந்த இடத்தில் இருக்கிறது என அறிந்து அதனை அகற்ற முடியும். இது மிகவும் பயனளிக்கும் முயற்சியாகும்.

---

[195] இப்னு மாஜா : 2538, நஸாயீ : 4919, இப்னு ஹிப்பான் : 4398, அஹ்மது : 2/362, ஸஹீஹ் (அலல்பானி, அஸ்ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா 231)

[196] மஜ்மூஉ ஃபதாவா 35/94-97

ஒரு மனிதர் தன் மனைவியுடம் ஒன்றுகூடுவதில் தடை ஏற்பட்டால், இளந்தை இலையில் ஏழு இலைகளை நசுக்கி அதை ஓர் பாத்திரத்தில் போட்டு தண்ணீர் சேர்த்து அதில் ஆயத்துல் குர்ஸி, ஸூரா காஃபிரூன், ஸூரா இஃக்லாஸ், ஸூரா ஃபலக், ஸூரா நாஸ் மற்றும் ஸூரா அஃராஃப், யூஸுஃப், தாஹா ஆகிய ஸூராக்களில் வந்துள்ள சூனியம் பற்றிய வசனங்களை ஓதி அந்த நீரை மூன்று முறை குடித்து மீதமுள்ளதில் குளித்துக்கொண்டால் பிணி நீங்கும், இன்ஷா அல்லாஹ். ஒன்றுக்கும் மேற்பட்ட முறைகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவ்வாறே பிணி நீங்கும் வரை செய்வதில் தடை இல்லை.

﴿إِنَّ اللهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓـأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.

(அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத் தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களை நயவஞ்சகத்திலிருந்து தூய்மைப் படுத்துவாயாக! எங்கள் வணக்கங்களை முகஸ்துதியிலிருந்து காப்பாயாக! எங்கள் பார்வைகளை மோசடியிலிருந்து பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம்.

ربنا آتنا فى الدنيا حسنة وفى الآخرة حسنة وقنا عذاب النار. اللهم صل وسلم على نبينا محمد وآله وصحبه.

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 7

குறிபார்த்தல், சகுனம் மற்றும் ஜோதிடம்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

மறைவானவற்றின் ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

தவ்ஹீத் என்பதில் அல்லாஹ்வை அவனது பெயர் மற்றும் பண்புகளில் ஒருமைபடுத்துவதும் அடங்கும். அதிலுள்ள முக்கிய பண்புகளில் ஒன்று மறைவான ஞானம் அவனுக்கு மட்டுமே இருப்பதை நம்புவது. இது குர்ஆன் சுன்னா மற்றும் உலமாக்களின் ஏகோபித்த கருத்தின் படி ஆதாரப்பூரவ உண்மையாகும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿قُلْ لَّا يَعْلَمُ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ الْغَيْبَ اِلَّا اللّٰهُ﴾

(இன்னும்) நீர் கூறுவீராக: "அல்லாஹ்வைத் தவிர்த்து வானங்களிலும், பூமியிலும் இருப்பவர் எவரும் மறைவாயிருப்பதை அறியமாட்டார்; இன்னும், எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறியமாட்டார்கள்." (அல்குர்ஆன் 27:65)

فعن خالد بن ذكوان عن الرُّبيّع بنت مُعوِّذ أن النبيَّ (صلى الله عليه وسلم) سمع جارية تقول: وفينا نبيٌّ يَعلمُ ما في غَدِ. فقال: أَمَّا هٰذَا فَلاَ تَقُولُوهُ، مَا يَعْلَمُ مَا فِي غَدٍ إِلاَّ اللَّهُ.

ருபைய்யிஃ பின்த் முஅவ்வித் (ரலி) அறிவிக்கிறார்கள் : நபி ﷺ அவர்கள் ஒரு சிறுமி 'எங்களிடம் நாளை என்ன நடக்கும் என அறிந்த நபி இருக்கிறார்' என சொன்னதை கேட்டு 'இப்படி நீ சொல்ல வேண்டாம், நாளை இருப்பவற்றை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள்' என கூறினார்கள்.[197]

---

197 இப்னு மாஜா (1897), மூலம் புகாரி நூலில் (5147), தரம் : ஸஹீஹ் (அல்-அல்பானி)

وعن ابن عمر رضي الله عنهما أنَّ رسولَ الله (صلى الله عليه وسلم) قال: مفاتيحُ الغيب خمسٌ لا يعلمها إلاَّ الله: لا يَعلمُ ما في غَدٍ إلا الله، ولا يَعلمُ ما تَغِيضُ الأرحامُ إلا الله، ولا يعلمُ متى يأتي الـــــمطرُ أحدٌ إلاّ الله، ولا تدري نفسٌ بأيّ أرضٍ تموت، ولا يعلمُ متى تقومُ الساعة إلا الله.

நபி கூறியதாக இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள் : ஐந்து மறைவானவற்றை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள், நாளை நடக்கவிருக்கும் நிகழ்வு, கர்ப்பப்பைகள் எதை சுமக்கின்றன, மழை எப்போது பொழியும், ஓர் உயிர் எந்த பூமியில் மரணிக்கும் மற்றும் எப்போது மறுமை நிகழும் (என்றவைகளை அல்லாஹ் மட்டுமே அறிவான்).[198]

மறைவானவற்றின் ஞானம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு அதில் யாரும் இணை கிடையாது. எந்த அரசனுக்கோ அல்லது எந்த நபிக்கோ இது தெரியாது. யாரும் தனக்கோ அல்லது மற்றவருக்கோ மறைவானவகள் தெரியும் என சொல்வாரோ அவர் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தான காரியத்தில் இணை வைத்துவிட்டார். அல்லாஹ்வை படைப்புகளோடு ஒப்பிட்டு பெரும் ஷிர்க் செய்துவிட்டார். தனது காலத்தில் அஹ்லுஸ் ஸுன்னாக்களின் இமாமாக கருதப்பட்ட நுஜம் இப்னு ஹம்மாது அல்கஸாயீ கூறினார் : யார் அல்லாஹ்வை தன் படைப்புகளோடு ஒப்பிடுவாரோ அவர் காஃபிராகிவிட்டார்.

குறிசொல்பவர்கள் மற்றும் ஜோசியக்காரர்கள் யார்?

அல்லாஹ்வின் நல்லடியார்களே! சில இணைவப்பாளர்கள் அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ள மறைவான ஞானம் தமக்கும் இருப்பதாக கூறுகிறார், அவர்கள் தான் குறிசொல்பவர்கள் மற்றும் ஜோசியக்காரர்கள். ‘காஹின்’ என்பவன் எதிர்கால ஞானம் தனக்கு இருப்பதாக கூறுபவன், ‘அர்ராஃப்’ என்ற சொல் பல வகைகளில் ஜோசியம் பார்த்து எதிர்காலத்தை சொல்லும் அனைவரையும் குறிக்கும்.

ஷேக். முஹம்மத் பின் உஸைமீன் (ரஹ்) கூறினார்கள் : காஹின் என்ற சொல் ‘கஹன்’ என்ற வார்த்தையிலிருந்து வந்தது, பொய்களை

198 ஸஹீஹுல் புகாரி 4797

இட்டுக்கட்டுவது, எந்த அடிப்படையுமில்லாமல் உண்மையை கண்டறிவதாக சொல்வதே அதன் பொருள். அறியாமை காலத்தில் ஷைத்தானுடன் தொடர்பு ஏற்படுத்தி சிலர் வானிலிருந்து செய்திகளை அறிந்து அதை பல பொய்களுடன் கலந்து மக்களுக்கு மத்தியில் கூறுவார்கள், அதில் ஏதேனும் ஒன்று உண்மையாக மக்களும் அவர்களிடம் ஏமாற்றம் அடைவார்கள். இப்படிப்பட்டவர்களை தங்கள் காரியங்கள் எல்லாவற்றையும் குறித்து அறிந்துகொள்பவர்களை ஆக்கிக்கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை இவர்கள் மூலம் அறிந்துகொள்ள முயல்வார்கள்.

குறிசொல்பவர்களின் அடிப்படை மூலாதாரம் என்ன?

ஈமான் கொண்டோரே! குறிசொல்பவன் இரண்டில் ஒரு முறையை மேற்கொள்வான். ஒன்று, வானில் மலக்குமார்கள் பேசும் செய்திகளை திருடும் ஷைத்தான்களிடமிருந்து செய்தியை அறிந்து கொள்வது. அதன் ஆதாரம் ஸஹீஹ் புகாரியில் ஆயிஷா (ரலி) அறிவிக்கும் ஹதீஸ்,

إن الملائكة تنزل في العَنان، وهو السحاب، فتَذْكُرُ الأمر قُضي في السماء، فتسترق الشياطين السمع فتسمَعه، فتوحيه إلى الكهان، فيكذبون معها مائة كذبة من عند أنفسهم.

மலக்குமார்கள் மேகங்களில் இறங்கி வானத்தில் என்ன முடிவெடுக்கப்பட்டது என்பதை பகிர்ந்துகொள்வார்கள், அதை ஷைத்தான்கள் திருடி குறிசொல்பவனிடம் ஊதுவார்கள், அதனை அவன் நூறு பொய்களுடன் கலந்து (மக்களுக்கு) சொல்வான். (ஸஹீஹுல் புகாரி 3210)

குறிசொல்பவன் இந்த பொய்களை மக்களுக்கு சொல்லும்போது அதில் ஏதேனும் உண்மை இருந்தால் அது திருடப்பட்ட செய்தியாக இருக்குமே தவிர அவனிடம் உள்ள மறைவான ஞானம் காரணமல்ல. அந்த ஒரு உண்மையால் ஏமாறும் மக்கள் அவன் கலந்த பல பொய்களை கண்டு கொள்வதில்லை. ஒரு வேளை அவை அனைத்தும் பொய்யாக இருந்தால் அதை அப்படியே பூசி மழுப்பும் வேலையை செய்வான்.

இரண்டாம் முறை, ஜின்களிடம் உதவியை நாடுவது.

عن عائشة رضي الله عنها قالت: سأَلَ أناسٌ رسولَ الله (صلى الله عليه وسلم) عن الكهان، فقال لهم: ليسوا بشيء. قالوا: يا رسولَ الله، فإنهم يُحدِّثون أحياناً بالشيء يكون حقاً. فقال لهم: تلكَ قرَّ الدجاجة، فَيَخلِطون فيها أكثرَ من مائةِ الكلمةُ من الحقِّ يَخطِفُها الجني فيَقُرَّها في أُذنِ وَليِّهِ كِذبة.

ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள் : குறிசொல்பவர்களைப் பற்றி மக்கள் நபியிடம் கேட்டார்கள். அவர்கள் ஒரு பொருட்டே கிடையாது என நபி ﷺ பதிலளித்தார்கள். ஆனால் யா ரசூலல்லாஹ்! சில நேரம் அவர்கள் சொல்வது உண்மையாகிறதே! அதற்கு நபி ﷺ கூறினார்கள் : அந்த உண்மை கோழி கொத்துவது போல ஜின்கள் அவர்களின் காதுகளில் கொத்தும் செய்தியாகும், அதில் அவர்கள் நூறு பொய்களை கலந்து சொல்வார்கள். (ஸஹீஹுல் புகாரி 6213, முஸ்லிம் 2228)

குறிசொல்பவர்கள் ஜின்களோடு தொடர்பில் இருக்கிறார் என்பதற்கான ஆதாரம் இது. ஏதேனும் தொலைந்து போன பொருளை பற்றி குறிசொல்பவனிடம் கேட்டு அவனுக்கு ஜின் அந்த பொருளின் இடத்தை சொல்ல இவனும் மக்களுக்கு பொய்யை கலந்து சொல்லும்போது அது அவன் சொன்ன இடத்தில் இருந்துவிட்டால் மக்கள் இவனுக்கு மறைவான ஞானம் இருப்பதாக நம்பி வரும் காலங்களில் இவன் எஹ்டை சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

இன்னும் ஜின்களில் கரீன்களிடமிருந்து உதவி தேடும் முறையும் உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் ஜின்களிலிருந்து நன்மையை ஏவும் கரீன் மற்றும் தீமையை ஏவும் கரீன் உண்டு.

عَنِ ابْنِ مَسْعُودٍ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: " مَا مِنْكُمْ مِنْ أَحَدٍ إِلَّا وَقَدْ وُكِّلَ بِهِ قَرِينُهُ مِنَ الْجِنِّ وَقَرِينُهُ مِنَ الْمَلَائِكَةِ.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அறிவிக்கிறார்கள் : நபி ﷺ கூறியதாக : உங்களில் யாரும் ஜின்களிலிருந்து ஒரு கரீன் மற்றும் மலக்குகளிலிருந்து ஒரு கரீன் கொண்டு துணை இல்லாமல் இல்லை.

ஆக, இந்த கரீனின் உதவியை கொண்டு வரும் நபரின் தனிப்பட்ட தகவல்களாகிய பெயர், தொழில், மனைவி பெயர், தாயார் பெயர், வீட்டு விலாசம் ஆகியவைகளை அறிந்துகொள்கிறார்கள்.[199]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! குறிசொல்பவன் தனக்கு உதவும் காரணத்தால் ஷைத்தானை வணங்குவான். இதுதான் ஷைத்தான் விரும்பக்கூடியது, ஆதமின் மகனிடமிருந்து இதைவிட பெரிய காரியம் எதையும் அவன் எதிர்பாக்கவில்லை. இதுதான் அவர்களின் தொழில் இதில் மனிதர்களின் ஷைத்தான்களாகிய சூனியக்காரர்கள், குறிசொல்பவர்கள், ஜோசியக்காரர்கள் இதில் பலியானார்கள். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

ஷரீஆ அடிப்படையில் ருகைய்யா செய்பவர்கள் இவ்வாறான சூழ்ச்சியிலிருந்து தப்பிக்க ஒரு யோசனையை சொல்வார்கள். அது என்னவெனில், நமக்கே தெரியாத விஷயத்தை குறிசொல்பவனிடம் கேட்க வேண்டும், நமக்கே தெரியாதெனில் அது கரீனுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உதாரணமாக ஒரு கைப்பிடி அளவு சிறிய கற்களை அள்ளி அதில் எத்தனை கற்கள் உள்ளதென கேட்டால் அவனால் பதில் சொல்ல முடியாது. நம்மோடு இருக்கும் கரீனுக்கே தெரியாது என்றால் அது எப்படி குறிசொல்பவனுக்கு அறிவிக்க முடியும்?

குறிசொல்பவர்கள் ஜின்களிடமிருந்து உதவி கோருவார்கள், அவர்களிடம் நடந்த சம்பவங்களை பற்றி கேட்டறிந்துகொள்வார்கள். ஜின்களும் அவர்கள் உள்ளத்தில் சில வார்த்தைகளை போடுவதன் மூலம் அதை அவன் சொல்லும்போது ஏதேனும் ஒன்று உண்மையாகிவிட்டால் அவனுக்கு மறைவான ஞானம் உள்ளதாக மக்கள் நம்பிவிடுகிறார்கள். அறிவற்றவர்கள் இது ஒரு அதிசயமாக ஆச்சரியமாக பார்த்து அவர்கள் அல்லாஹ்வின் நேசர்கள் என விளங்கிக்கொள்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான் :

---

[199] ஃபத்ஹுல் பாரி - ஹதீஸ் விளக்கம் எண். **5758**,
தய்ஸீருல் அஸீஸ் அல்ஹமீது - முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப்

﴿هَلْ أُنَبِّئُكُمْ عَلَى مَنْ تَنَزَّلُ الشَّيَاطِينُ تَنَزَّلُ عَلَى كُلِّ أَفَّاكٍ أَثِيمٍ يُلْقُونَ السَّمْعَ وَأَكْثَرُهُمْ كَاذِبُونَ﴾

தாங்கள் கேள்விப்பட்டதையெல்லாம் (ஷைத்தான்கள் அவர்களின் காதுகளில்) போடுகிறார்கள்; இன்னும், அவர்களில் பெரும்பாலோர் பொய்யர்களே (26:223)

ஜோசியக்காரர்கள் :

அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் நன்மக்களே! மறைவான ஞானம்தங்கலுக்கு உண்டு என சொல்பவர்களில் ஜோசியக்காரர்களும் ஆவர். ஜோசியக்காரர்கள் என்பவர்கள் நட்சத்திரங்களின் நகர்வுகளை வைத்து காற்றின் திசை, மழைப்பொழிவு, குளிர் வெப்பம் மற்றும் இன்னும் பல எதிர்கால நிகழ்வுகளை கணித்து சொல்பவர்கள். நட்சத்திரங்களின் அமைப்பு மற்றும் இருப்புகளை வைத்து அதன் தோற்றங்கலைக் கொண்டு எதிர்காலம் தெரியும் என சொல்பவர்கள் இவர்கள். இந்த தோற்றங்களை ஷைத்தான் அவர்களுக்கு ஒரு வரபடமாக காட்டி அதன் மூலம் வழிகெடுக்கிறான். அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஜோசியத்தில் எண் ஜோதிடமும் அடங்கும். அது சில குறிப்பிட்ட எண்களை எழுதி அதன் மூலம் எதிர்காலத்தை கணிப்பதாகும்.

ابن عباس رضي الله عنهما في قوله: إن قوما يحسِبون (أبا جاد)، وينظرون في النجوم، ولا أرى لمن فعل ذلك من خَلاَق

இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள் : சில கூட்டத்தார் எண்ணுவார்கள் (எண் ஜோதிடம் செய்வார்கள்), நட்சத்திரங்களை பார்ப்பார்கள், அதை செய்பவர்களுக்கு மறுமையில் எந்த பயனும் இருப்பதாக நான் அறியவில்லை.

இதை ஜாதகமாக பார்ப்பவர்களும் உண்டு, இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு நல்லது நடக்கும் மற்றும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவருக்கு கெடுதல் நடக்கும் என பார்க்கும் வழிகேடும் உண்டு.

ஜோசியம் என்பது சூனியத்தோடு தொடர்புடையது தான். இரண்டிலும் ஷைத்தானிடம் உதவி தேடும் செயல் உள்ளது.

ابن عباس رضي الله عنهما قال: قال رسول الله صلى الله عليه وسلم: مَنِ اقْتَبَسَ عِلْماً مِنَ النُّجُومِ؛ اقْتَبَسَ شُعْبَةً مِنَ السِّحْرِ، زَادَ مَا زَادَ.

இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள் நபி صلى الله عليه وسلم கூறியதாக : யார் ஜோசியத்தில் சில கல்வியை பெறுவாரோ அவர் சூனியத்தின் ஒரு கல்வியை பெறுகிறார். அதிக (ஜோசியத்தை) கற்க அதிகம் (சூனியத்தை) பெறுகிறார். (அஹ்மது 1/311, அபூ தாவூது 3905, இப்னு மாஜா 3726)

குறிசொல்பவர்களிடம் செல்லக்கூடாது என்பதற்கான மார்க்க ஆதாரங்கள்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஷிர்க், வழிகேடு ஆகியவற்றை அறவே அகற்றுவதே ஷரீஆத்தின் சிறப்பம்சம். அதனால்தான் குறிசொல்பவர்களிடம் செல்வதை ஹராமாக்கி நம் மார்க்கம் பாதுகாக்கப்பட வழிசெய்கிறது. ஆகவே யார் குறிசொல்பவனிடமோ ஜோசியக்காரனிடமோ வெறும் கேள்வி கேட்க வந்தாலுமே அதற்கான தண்டனையை மார்க்கம் கூறுகிறது.

فقد روى مسلم عن صفية رضي الله عنها عن بعض أزواج النبي (صلى الله عليه وسلم) عن النبي (صلى الله عليه وسلم) قال: مَنْ أتى عَرَّافاً فَسَأَلَهُ عَنْ شَيْءٍ لَمْ تُقْبَلْ لَهُ صَلاَةُ أَرْبَعِينَ لَيْلَةً.

யார் ஜோசியக்காரனிடம் சென்று எதையேனும் கேட்டால் அவரது நாற்பது நாட்களின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (முஸ்லிம் ௨௨௩0)

இந்த ஹதீஸில் வரும் எச்சரிக்கை குறிசொல்பவனிடம் சென்று வெறுமனே அவனிடம் கேட்பவருக்கானது மாறாக உண்மைப் படுத்துபவருக்கானது அல்ல. அவரின் நாற்பது நாட்கள் தொழுகை ஏற்றுக்கொள்ளப்பதாது ஆனால் அவர் காஃபிராக மாட்டார்.

யார் அவர்களை நம்புவாரோ அவர் காஃபிராகி இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிடுவார். ஏனெனில், அவர்களை உண்மைப்படுத்தி நம்புவதன் மூலம் அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கக்கூடிய மறைவானவற்றின் ஞானம்

இந்த குறிசொல்பவனுக்கும் இருக்கு என இணைவைத்ததன் மூலம் முஷ்ரிக் ஆகிவிடுகிறார். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

عن أبي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال: من أتى كاهنًا أو عرافًا فصدقه بما يقول؛ فقد كفر بما أُنزل على محمد صلى الله عليه وسلم

யாரேனும் (மறைவான விஷயங்களைச் சொல்வதாக வாதிடும்) சோதிடர்களிடம் சென்று அவர்கள் சொல்வதை நம்பினால், முஹம்மத் அவர்களின் மீது இறக்கியருளப்பட்ட ஷரீஅத்தை அவர் நிராகரித்து விட்டார். (அஹ்மத் உ/சூஉசூ)

وعن عمران بن حصين رضي الله عنه قال: قال رسول الله (صلى الله عليه وسلم): ليس منا من تَطيَّرَ أو تُطيِّرَ له، أو تَكهَّنَ أو تُكُهِّنَ له، أو سَحَرَ أو سُحِرَ له، ومن أتى كاهناً فصدَّقَه بما يقول فقد كفر بما أُنزل على محمد (صلى الله عليه وسلم).

ஒருவர் சகுனம் பார்ப்பாரெனில் அல்லது அவருக்காக சகுனம் பார்க்கப்படுகிறதெனில் ஒருவர் ஜோசியம் சொல்வாரெனில் அல்லது அவருக்காக ஜோசியம் சொல்லப்படுகிறதெனில் ஒருவர் சூனியம் செய்தாரெனில் அல்லது அவருக்காக சூனியம் செய்யப்படுகிறதெனில் - இப்படிப்பட்டவர்கள் நம்மைச் சேர்ந்தோர் அல்லர். ஒருவர் ஜோசியக்காரனிடம் வந்து அவன் சொல்வதை நம்புகிறாரெனில் திண்ணமாக அவர், முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது இறக்கி யருளப்பட்ட ஷரீஅத்தை நிராகரித்தவர் ஆவார். (அல்பஸ்ஸார் ௩0சூசூ, அத்தபரானி கஅ/கசூாஉ)

<u>குறிசொல்வதை அதிகம் பின்பற்றுபவர்கள் யார்?</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஸூஃபிக்கள் மத்தியில் தான் ஜோசியம் அதிகம் பரவியுள்ளது. அவர்களின் பல ஷேக்மார்கள் குறிசொல்பவர்களாகவும் ஜோசியம் பார்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தான் தங்கள் இமாம்களுக்கு அரசு பொறுப்பு மற்றும் அதிசயங்கள் இருப்பதாக நம்புவார்கள். மேலும் மறைவான ஞானம் இருப்பதாகவும் நம்புவார்கள். அதனை 'அல்கஷ்ஃப்' என அழைப்பார்கள்.

தங்கள் போலி பிம்பம் வெளிப்பட்டுவிடும் என்பதால் அதனை மறைவான ஞானத்தை அறிதல் என வெளிப்படையாக கூறமாட்டார்கள்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஜோசியம், குறிபார்த்தல் ஆகியவையின் விளைவுகள் மற்றும் அது குறித்தான எச்சரிக்கை தான் இந்த சிறிய உரை. அதை செய்தாலோ அல்லது அதை வைத்து பொருளாதாரம் தேடுதல் அல்லது உள்ளத்தால் ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய அனைத்தும் இறைமறுப்பு ஆகும் மேலும் அதில் ஈடுபடுபவர்கள் காஃபிர்கள் ஆவார்கள். அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيم

أقول قولى هذا وأستغفر الله لى ولكم فاستغفروه إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

எதிர்காலத்தை பற்றி குறிசொல்லுதலின் சில வகைகள்

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده، أما بعد،

அல்லாஹ்வின் நல்லடியார்களே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்சிகொள்ளுங்கள்.

குறிசொல்லுதலின் ஒரு வகையாக முன் வாழ்ந்த அரபிகள் பூமியில் ஒரு கோட்டை கிழித்து அதில் நடந்து வருபவர்கள் அதன் மூலம் தங்கள் சிந்தனைகளிலிருந்து ஜோசியம் சொல்வார்கள்.

இன்னொரு வகை, மணலில் கோடு வரைந்து அதன் மூலம் குறி சொல்வார்கள். இதற்கு ‘ரம்ல்’ என பெயர்.

இன்னும், சில பொடி கற்களை உறுட்டி ஆதை பார்த்து வருபவர்களுக்கு குறிசொல்லும் வகை உண்டு.

தற்காலத்தில், பகடை காய்கள், டாமினோஸ், சீட்டுகட்டுக்கள் போன்றவைகளை வைத்து அதில் காணப்படும் எண்களை கொண்டு எதிர்காலத்தை கணிக்கும் முறையும் உண்டு. மேலும் சில தானிய வகைகளை கொண்டு இந்த செயல் நடக்கிறது.

இன்னும், தேநீர் குடித்த குவளையில் மீதமிருப்பதை வைத்து சில கோடுகல் வரைந்து அதன்மூலம் எதிர்காலத்தில் இப்படி இப்படி என சொல்லும் முறை உண்டு, அதன் பெயர் ‘ஃபின்ஜான்’ எனப்படும்.

நெருப்பு - நெருப்பின் அளவு மற்றும் அதன் உறுவம் ஆகியவை கொண்டு குறிசொல்லுதல், கைரேகை ஜோசியம், பறவை ஜோசியம் - பறவை வலதுபுறம் சென்றால் நல்ல சகுனம் மாறாக இடதுபுறம் சென்றால் கெட்ட சகுனம் என்ற நம்பிக்கை. அடிப்படையில் இது அறிவீனமானது. பறவை என்பது அல்லாஹ்வின் படைப்புகளில் ஒன்று, அதற்கு எந்த ஆற்றலும் கிடையாது.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿ألم تر إلى الطير مسخرات فى جو السماء ما يمسكهن إلا الله﴾

வான் (மண்டலத்தின் காற்று) வெளியில் (இறைக் கட்டளைக்குக்) கட்டுப்பட்டவையாக (பறந்து செல்லும்) பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அவற்றை (ஆகாயத்தில்) அல்லாஹ்வைத் தவிர (வேறு எவரும்) தடுத்து நிறுத்தவில்லை **(16:79)**

وقال عز وجل ﴿أولم يروا إلى الطير فوقهم صافات ويقبضن ما يمسكهن إلا الرحمـٰن إنه بكل شيء بصير﴾

இறக்கைகளை விரித்துக்கொண்டும், சேர்த்துக் கொண்டும், இவர்களுக்குமேல் (வானில் பறக்கும்) பறவைகளை இவர்கள் பார்க்கவில்லையா? அளவற்ற அருளாளனைத் தவிர (வேறு யாரும் கீழே விழாது) அவற்றைத் தடுத்துக்கொண்டிருக்கவில்லை; நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளையும் நோட்டமிடுபவன். **(67:19)**

சகுனம் - ஆரம்பத்தில் சகுனம் பார்த்தல் என்பது பறவைகளைக் கொண்டே நடந்தது. பறவையை பறக்கவிடும் போது அது வலப்புறம் சென்றால் நல்ல சகுனம் எனவும் இடப்புறம் சென்றால் கெட்ட சகுனம் எனவும் கருதினார்கள். ஆனால் இப்போது பல வடிவங்களில் சகுனம் பார்ப்பது வந்துவிட்டது. செவிவழியாக கேட்டல், பார்த்தல் என பல வகைகள். இன்னும் விலங்குகள், மனிதர்கள், எண்கள், ஆந்தை மற்றும் காகத்தை வைத்து சகுனம், 13 என்ற

எண், ஊனமுற்றவர் அல்லது பார்வையற்றவரை பார்த்தால் கெட்ட சகுனம் போன்ற பல. யாரேனும் ஒருவர் ஊனமுற்றவர் அல்லது பார்வையற்றவரை பார்த்துவிட்டால் இன்றைய நாள் நன்றாக இல்லை என கருதி அந்த நாளில் கடையை அடைத்துவிட்டு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடமாட்டார். ஏதோ அன்றைய நாளில் கேடு இறங்கிவிட்டதாக கருதுவார்.

இன்னும் வலது கையில் சிறிய காயம் ஏற்பட்டால் ஏதோ நல்லது நடக்கும் எனவும் இடது கையில் காயம் ஏற்பட்டால் தீங்கு நடக்கும் எனவும் நம்புவார்கள். அல்லாஹ் கேடு என சொல்லாதவற்றை இவர்களாக சில விஷயங்களை கேடாக ஆக்கிக் கொள்கிறார்கள் அந்த நாளையே கெட்ட சகுணமாக சோகமான நாளாக கருதுகிறார்கள். ஆனால் அல்லாஹ் இவை அனைத்தையும் அப்படி ஆக்கவில்லை.

சகுனம் பார்ப்பது என்பது சந்தேகமே இல்லாமல் ஷிர்க் ஆகும்.

சகுனம் ஹராம் ஆகும் இன்னும் அது இணைவைப்பாகும்.

عبد الله بن عمرو رضي الله عنهما قال: قال رسول الله (صلى الله عليه وسلم): من ردَّته الطيرة عن حاجته فقد أشرك. قالوا: يا رسول الله، ما كفارة ذلك؟ قال: أن يقول أحدهم: اللهم لا خير إلا خيرك، ولا طير إلا طيرك، ولا إله غيرك.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அறிவிக்கிறார்கள் நபி ﷺ கூறியதாக : யார் ஒருவர் தேவைக்காக செல்வதை விட்டு அவரை சகுனம் தடுக்குமோ அவர் இணைவைத்து விட்டார். யார் ரசூலல்லாஹ்! அதற்கான பரிகாரம் என்ன என்று

கேட்டோம்“இறைவா! உனது சகுனத்தைத் தவிர வேறு சகுனம் கிடையாது.

உன் நலவைத் தவிர வேறு நலவு கிடையாது.

உன்னைத் தவிர வேறு நாயனில்லை” என சொல்லுங்கள் என கூறினார்கள் (அஹ்மது ௨/௨௨0)

قال النبي (صلى الله عليه وسلم): لا عدوى ولا طيرة ولا هامَة ولا صفَر. فقوله (ولا طيرة) دليل صريح على نفي حقيقة الطيرة.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "தொற்று நோய் கிடையாது. ஸஃபர் பீடை கிடையாது. ஆந்தையால் சகுனம் பார்ப்பதும் கிடையாது" என்று கூறினார்கள். (அபூ ஹுரைரா (ரலி), புகாரி 5707, முஸ்லிம் 2220)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! எதிர்காலத்தை அறிதலில் பல வகை உண்டு. அனைத்தும் எதிர்காலத்தை பற்றிய செய்தியை அறியும் முயற்சி தான். அதில் சில ஷைத்தானோடு நேரடி தொடர்புடையதாகவும் சில ஏமாற்று வேலைகலாகவும் இருக்கிறது. அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக !

அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் நமக்கு மகத்தான கட்டளையை கொண்டு ஏவியுள்ளான்,

﴿إِنَّ اللهَ وَمَلَٰٓئِكَتَهُ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத் தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களை நயவஞ்சகத்திலிருந்து தூய்மைப் படுத்துவாயாக! எங்கள் வணக்கங்களை முகஸ்துதியிலிருந்து காப்பாயாக! எங்கள் பார்வைகளை மோசடியிலிருந்து பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம்.

ربنا آتنا فى الدنيا حسنة وفى الآخرة حسنة وقنا عذاب النار. اللهم صل وسلم على نبينا محمد وآله وصحبه.

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 8

முஸ்லிம்களுக்கு எதிராக

காஃபிர்களுக்கு துணையாக இருப்பது

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

முஃமின்களுடன் இணக்கமாக இருப்பது அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதில் ஒரு பகுதி

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக! அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டால் முஃமின்களோடு இணக்கமாக இருப்பது அவசியமாகும். இணக்கம் என்பது அவர்களை நேசித்து உதவி உபகாரங்கள் செய்வதாகும். அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَالْمُؤْمِنُونَ وَالْمُؤْمِنَاتُ بَعْضُهُمْ أَوْلِيَاءُ بَعْضٍ يَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَيُؤْتُونَ الزَّكَاةَ وَيُطِيعُونَ اللَّهَ وَرَسُولَه أولَـئِكَ سَيَرْحَمُهُمُ اللَّهُ إِنَّ اللَّهَ عَزِيزٌ حَكِيم﴾

முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள்; தீயதை விட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள்; (ஏழை வரியாகிய) ஜகாத்தை (முறையாகக்) கொடுத்துவருகிறார்கள்; அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப் படுகிறார்கள்; அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் 9:71)

காஃபிர்கள் மற்றும் அவர்களிடம் இருக்கும் குஃப்ரை வெறுப்பது அல்லாஹ்வை ஈமான் கொள்வதில் ஒரு பகுதி

ஈமான் கொண்டோரே! காஃபிர்கள் மற்றும் அவர்களிடம் இருக்கும் குஃப்ரை வெறுப்பது மற்றும் அவர்களை விட்டு விலகியிருப்பது அல்லாஹ்வை ஈமான் கொள்வதில் ஒரு பகுதி ஆகும். ஒரு உண்மையான முஃமின் அல்லாஹ்வும் அவன் தூதரும் எதை நேசித்தார்களோ அதையே அவனும் நேசிப்பான். அவர்கள் யாரை வெறுத்தார்களோ அவர்களை அவனும் வெறுப்பான். அதற்கு எதிரானது தான் இந்த உலக தேவைக்காக காஃபிர்களை இணக்கமானவர்களாக ஆக்கிக்கொள்வது, இது பெரும் பாவமாகும் ஆனால் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றாது. காஃபிர்களை நேசர்களாக ஆக்கக்கூடாது என அல்லாஹ் கூறுகிறான் :

﴿لَا يَتَّخِذِ الْمُؤْمِنُوْنَ الْـكٰفِرِيْنَ اَوْلِيَآءَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ‌ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰ لِكَ فَلَيْسَ مِنَ اللّٰهِ فِىْ شَىْءٍ﴾

முஃமின்கள் (தங்களைப் போன்ற) முஃமின்களையன்றி காஃபிர்களைத் தம் உற்ற துணைவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம்; அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி (உங்களில்) எவரேனும் அப்படிச் செய்தால், (அவருக்கு) அல்லாஹ்விடத்தில் எவ்விஷயத்திலும் சம்பந்தம் இல்லை

(அல்குர்ஆன் 3:28)

﴿يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّخِذُوْا عَدُوِّىْ وَعَدُوَّكُمْ اَوْلِيَآءَ تُلْقُوْنَ اِلَيْهِمْ بِالْمَوَدَّةِ وَقَدْ كَفَرُوْا بِمَا جَآءَكُمْ مِّنَ الْحَـقِّ﴾

ஈமான் கொண்டவர்களே! எனக்கு விரோதியாகவும், உங்களுக்கு விரோதியாகவும் இருப்பவர்களைப் பிரியத்தின் காரணத்தால் இரகசியச் செய்திகளை எடுத்துக் காட்டும் உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள்; (அல்குர்ஆன் 60:1)

காஃபிர்களுடம் உறுதுணையாக இருப்பதன் விளக்கம் மற்றும் அதன் மார்க்க நிலை

அல்லாஹ்வின் நல்லடியார்களே! காஃபிர்களுக்கு உறுதுணையாக இருப்பது அவர்களுடன் இணக்கமாக இருப்பதை விட மோசமானது. உறுதுணையாக இருப்பதென்பது முஸ்லிம்களுக்கு எதிராக காஃபிர்களுக்கு உதவி செய்வதாகும். உதாரணமாக முஸ்லிம்களுக்கும் காஃபிர்களுக்கும் போர் நடைபெறும் காலங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக காஃபிர்களுடன் நிற்பது,

அவர்களுக்கு ஆயுதம் மற்றும் நிதியுதவி செய்வது, ஆலோசனை தருவது, இது போன்ற அனைத்தும் ஒரு முஸ்லிமை இஸ்லாத்தை விட்டு வெளியேற்றிவிடும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَنْ يَّتَوَلَّهُمْ مِّنْكُمْ فَإِنَّهُ مِنْهُمْ إِنَّ اللهَ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ﴾

உங்களில் எவரேனும் அவர்களைப் பாதுகாவலர்களாக ஆக்கினால் நிச்சயமாக அவரும் அவர்களைச் சேர்ந்தவர் தான்; நிச்சயமாக அல்லாஹ் அநியாயக்கார மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான். (அல்குர்ஆன் 5:51)

காஃபிர்களுக்கு உறுதுணையாக இருந்தால் இஸ்லாம் முஸ்லிம் முஸ்லிம்களை வெறுத்தால் தான் முடியும் ஆகவே அவன் காஃபிராக ஆகிறான். அல்லாஹ் தன்னையும் தன் தூதரையும் மார்க்கத்தையும் முஸ்லிம்களையும் நேசிக்க கட்டளையிடுகிறான். அப்படியில்லாமல் காஃபிர்களுக்கு துணையாக முஸ்லிம்களுக்கு எதிராக நிற்பது இந்த கட்டளையை தகர்க்கிறது. அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

وَمَنْ يَّتَوَلَّهُمْ مِّنْكُمْ فَإِنَّهُ مِنْهُمْ என்ற வசனத்திற்கு இமாம் அஷ்ஷின்கீதி விளக்கம் கூறும்போது கூறுகிறார்கள் : இந்த இறைவசனத்தில் அல்லாஹ் கூறுவது “யார் யூதர்கள் மற்றும் கிருத்தவர்களை துணையாக ஆக்கிக்கொள்கிறார்களோ அவர்கள் அவர்களைச் சார்ந்தவராகி விடுவார். மற்றொரு இடத்தில் இந்த செயல் அல்லாஹ்வின் கோபத்திற்கும் நிரந்தர நரகத்திற்கும் காரணமாக அமைகிறது என்று அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான். முஃமினாக இருந்தால் அவர்கள் சிறிய பரிவர்த்தனையோடு நிறுத்திக்கொள்வார்கள் மாறாக துணையாக ஆக்கமாட்டார்கள்”.

ஈமான் கொண்டோரே! ஒரு முஃமின் முஸ்லிம்களுக்கு எதிராக காஃபிர்களுக்கு உதவியாக இருப்பது என்பது நினைத்துப்பார்க்க முடியாத காரியம். அப்படி செய்தால் அவன் நிச்சயம் நயவஞ்சகனாக அல்லது அவர்கள் குணம் கொண்ட ராஃபிதாக்கள் அல்லது இஸ்லாமிய நாடுகளிலிருந்து காஃபிர் நாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்று அவர்களால் தாக்கம் ஏற்பட்டவனாகத்தான் இருப்பான். அவர்கள் தான் முஸ்லிம்களுக்கு

எதிரான சண்டைகளில் அவர்கள் பார்க்கும் வேலை காரணமாக காஃபிர்களுக்கு உதவியாக இருப்பார்கள். அல்லாஹ் நம்மை காப்பானாக![200]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! முஸ்லிம்களை தோழர்களாக ஏற்று காஃபிர்கள் மற்றும் அவர்களின் குஃப்ரை வெறுத்து அவர்களுக்கு துணையாளர்களாக இருக்கக் கூடாது என்பதையும் இஸ்லாமிய கொள்கையில் அல்வலா வல்பரா என்பதை தெளிவுபடுத்தி சொல்லும் ஒரு சிறிய உரையே இது. அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا، وأستغفر الله لي ولكم فاستغفروه، إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

நீதமான இஸ்லாமிய மார்க்கத்தில் காஃபிர்களை வெறுத்தல் என்பது அவர்களுக்கு அநியாயம் செய்யலாம் என்பதல்ல.

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده،

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிகொள்ளுங்கள்! காஃபிர்களை வெறுத்தல் என்பது அவர்களோடு வாழ்வியலில், கொடுக்கல் வாங்கல், வியாபாரம், வாடகை போன்றவைகளில் அநியாயம் செய்யலாம் என்பதல்ல. இது வேறு அது வேறு. கொடுக்கல் வாங்கலில் மற்றும் குணங்களில் அவர்களோடு நல்ல முறையில் நடப்பது அவசியம். நபி صلى الله عليه وسلم காஃபிர்களையும் அவர்களின் குஃப்ரையும் வெறுத்த போதிலும் போர் கைதிகளாக இருந்தாலும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொண்டார்கள். அல்லாஹ்வின் இறை வசனத்தை நடைமுறைப்படுத்தினார்கள்.

﴿وَيُطْعِمُونَ الطَّعَامَ عَلَىٰ حُبِّهِ مِسْكِينًا وَيَتِيمًا وَأَسِيرًا﴾

[200] ஃபதாவா இப்னு தைமிய்யா (28/530-531)

மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள். (அல்குர்ஆன் 76:8)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் மனித குலத்தின் சிறந்த மனிதர், மறுமை நீர்த்தடாகம் மற்றும் சிபாரிசுக்கும் சொந்தக்காரர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத் தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் கொள்கையை பாதுகாப்பாயாக! எங்கள் உள்ளங்களை நயவஞ்சகத்திலிருந்து தூய்மைப் படுத்துவாயாக! எங்கள் வணக்கங்களை முகஸ்துதியிலிருந்து காப்பாயாக! எங்கள் பார்வைகளை மோசடியிலிருந்து பாதுகாப்பாயாக! தீயவர்களின் சூழ்ச்சியிலிருந்து எங்களை பாதுகாத்திடு! பாவங்களை விட்டு விலகியிருக்கும் உன் சுவனத்தை அடைய உதவி செய்யும் உள்ளச்சதை எங்களுக்கு தந்தருள்வாயாக!

இவ்வுலகின் சூழ்ச்சியை எதிர்கொள்ளும் உறுதியை எங்களுக்கு கொடு! எங்கள் செவி, பார்வை ஆகியவற்றில் வலிமையை ஏற்படுத்துவாயாக! நாங்கள் அறிந்த அறியாத எல்லா நன்மைகளையும் விரைவாக எங்களுக்கு கொடு யா அல்லாஹ்! நாங்கள் அறிந்த அறியாத எல்லா கேடுகளையும் விட்டு எங்களை பாதுகாத்திடு! உன்னிடம் கேட்கிறோம் ! சொர்க்கத்தையும் அதனை அடையச்செய்யும் செயல் மற்றும் சொல்லை உன்னிடம் கேட்கிறோம். நரகத்திற்கு கொண்டு செல்லும் செயல் மற்றும் சொல்லை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு கேட்கிறோம்.

யா அல்லாஹ்! உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம்.

ربنا آتنا فى الدنيا حسنة وفى الآخرة حسنة وقنا عذاب النار. سبحان ربنا رب العزة عما يصفون

وسلام على المرسلين والحمد لله رب العالمين. اللهم صل وسلم على نبينا محمد وآله وصحبه.

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 9

ஷரிஅத் சட்டத்திற்கு மாற்றமாக செயல்படுவது கூடும் என எண்ணுவது

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

ஷரிஅத் சட்டம் மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவருக்கும் பொதுவானது

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

ஷரிஅத் என்பது மறுமை வரை மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவருக்கும் பொதுவானது. அல்லாஹ் தன் நபியை பார்த்து கூறுகிறான் :

قُلْ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّىْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعَا

(நபியே!) நீர் கூறுவீராக: “மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன் (அல்குர்ஆன் 7:158)

النَّاسُ என்ற சொல் மனிதர்கள் மற்றும் ஜின்கள் என இரு படைப்புகளையும் குறிக்கும். நபி ﷺ கூறினார்கள் : எனக்கு முன்னர் யாருக்கும் வழங்கப்படாத ஐந்து விஷயங்கள் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றாக முன் அனுப்பப்பட்ட நபிமார்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு அனுப்பப்பட்டார்கள் ஆனால் நான் மனிதர் மற்றும் ஜின்கள் என அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளேன். (அல்புகாரி 335, முஸ்லிம் 521)

மற்ற தூதர்கள் முஹம்மது நபியை அடைய நேர்ந்தால் அவர்கள் நபியின் சட்டத்தைத் தான் பின்பற்றி அவருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற வாக்குறுதியை அல்லாஹ் பெற்றுக்கொண்டான்.

﴿وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ النَّبِيّٖنَ لَمَاۤ اٰتَيْتُكُمْ مِّنْ كِتٰبٍ وَّحِكْمَةٍ ثُمَّ جَآءَكُمْ رَسُوْلٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمْ لَتُؤْمِنُنَّ بِهٖ وَلَتَنْصُرُنَّهٗ قَالَ ءَاَقْرَرْتُمْ وَاَخَذْتُمْ عَلٰى ذٰلِكُمْ اِصْرِىْ قَالُوْۤا اَقْرَرْنَا قَالَ فَاشْهَدُوْا وَاَنَا مَعَكُمْ مِّنَ الشّٰهِدِيْنَ فَمَنْ تَوَلّٰى بَعْدَ ذٰ لِكَ فَاُولٰٓـئِكَ هُمُ الْفٰسِقُوْنَ اَفَغَيْرَ دِيْنِ اللّٰهِ يَبْغُوْنَ وَلَهٗۤ اَسْلَمَ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ طَوْعًا وَّكَرْهًا وَّاِلَيْهِ يُرْجَعُوْنَ﴾

(நினைவு கூறுங்கள்:) நபிமார்(கள் மூலமாக அல்லாஹ் உங்கள் முன்னோர்)களிடம் உறுதிமொழி வாங்கியபோது, "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் (இறைதூதர்) வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களாக" (எனக் கூறினான்). "நீங்கள் (இதை) உறுதிப்படுத்துகிறீர்களா? என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா?" என்றும் கேட்டான்; "நாங்கள் (அதனை ஏற்று) உறுதிப்படுத்துகிறோம்" என்று கூறினார்கள்; (அதற்கு அல்லாஹ்) "நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் (ஒருவனாக) இருக்கிறேன்" என்று கூறினான்.
எனவே, இதன் பின்னரும் எவரேனும் புறக்கணித்து விடுவார்களானால் நிச்சயமாக அவர்கள் தீயவர்கள் தாம்
அல்லாஹ்வின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப் படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன; மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும். (அல்குர்ஆன் 3:81,82,83)

ورأى النبي (صلى الله عليه وسلم) في يد عمر رضي الله عنه أوراقا من صُحُفِ أهل الكتاب فغضب وقال: والذي نفسي بيده، لو أن موسى حيا ما وسِعَه إلا أن يتبعني.

நபி ஒருமுறை உமர் (ரலி) அவர்கள் கையில் வேதம் கொடுக்கப்பட்டவர்களின் ஏட்டை பார்த்து கோபப்பட்டு 'என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ மூஸா (அலை) உயிரோடு இருந்திருந்தாலும் அவருக்கு என்னை பின்பற்றுவதைத் தவிர வேறு வாய்ப்பு கிடையாது' என கூறினார்கள். (அஹ்மது 3/387, அறிவிப்பாளர் : ஜாபி இப்னு அப்துல்லாஹ் ரலி)

மேலும் இறுதி காலத்தில் ஈஸா நபி வரும்போது அவரும் முஹம்மது நபியின் ஷரிஅத்தை கொண்டுதான் தீர்ப்பளிப்பார் என ஆதாரப்பூர்வமான செய்திகளை நாம் காணலாம். (ஸஹீஹ் முஸ்லிம் 2897, 156, 2937)

முன் இருந்த அனைத்து சட்டங்களுக்கும் மாற்றாக வந்ததே முஹம்மது நபியின் மூலம் வந்த ஷரிஅத் சட்டம்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! நபி ﷺ அவர்கள் மூலம் அல்லாஹ் நமக்கு கொடுத்த ஷரிஅத் சட்டம் முன் இருந்த அனைத்து சட்டங்களுக்கும் மாற்றாக அமைகிறது. முன் இருந்த சட்டங்களில் எதை குர்ஆன் ஏற்றுக்கொள்கிறதோ அதை தவிர மற்ற அனைத்தும் மாற்றப்பட்டுவிட்டன.

﴿وَاَنْزَلْنَا اِلَيْكَ الْكِتٰبَ بِالْحَـقِّ مُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ الْكِتٰبِ وَمُهَيْمِنًا عَلَيْهِ﴾

மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. (அல்குர்ஆன் 5:48)

அல்லாஹ் கூறுகிறான், நபியே நாம் உமக்கு இந்த குர்ஆனை அனுப்பினோம், அது அல்லாஹ்விடமிருந்து வந்தது மேலும் இதற்கு முன்னர் இருந்த அனைத்து வேதங்களையும் உண்மைபடுத்துவதோடு சில சட்டங்களையும் மாற்றியமைக்கிறது.

ஷரிஅத் சட்டம் மறுமை வரை நிலையானது

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஷரிஅத் சட்டம் என்பது நபி ﷺ காலம் முதல் இறுதி நாள் வரை நிலையானது. இது மற்ற ஷரிஅத் சட்டங்கள் போன்றதல்ல. மற்ற சட்டங்கள் சில குறிப்பிட்ட காலம் வரை அடுத்த நபி புதிய சட்டத்துடன் வரும் வரைதான் அதன் கால அளவு.

ஷரிஅத் சட்டம் இஸ்லாத்தை கொண்டும், நபித்துவம் முஹம்மது நபியை கொண்டும் வேதங்கள் குர்ஆனை கொண்டும் முழுமை அடைந்துவிட்டது :

ஷரிஅத் சட்டம் இஸ்லாத்தைக் கொண்டு நிறைவு பெற்றுவிட்டது. நபித்துவம் முஹம்மது ﷺ அவர்களைக் கொண்டு நிறவடைந்துவிட்டது மற்றும் வேதங்கள் குர்ஆனைக் கொண்டும் பூர்த்தியாகிவிட்டது.

<u>ஷரிஅத் சட்டத்திற்கு மாற்றமாக செயல்படுவது கூடும் என எண்ணுவது இறைமறுப்பாகும் :</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரங்கள் யாவும் இஸ்லாத்தில் நுழைந்து அதை முழுமையாக பின்பற்றவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இதை யாரும் அறியாதவர்களாக இருக்க முடியாது. ஷரிஅத் சட்டத்திற்கு மாற்றமாக செயல்படுவது கூடும் என யாரேனும் நம்பினால் அவர் இறைமறுப்பாளர் ஆவார். அவர் தொழுது நோன்பு நோற்பவராக இருந்தாலும் சரியே. மற்றும் இஸ்லாத்தை யூதர்கள் மற்றும் கிருத்தவர்கள் அல்லது மற்றவர்கள் பின்பற்றுவது போல பின்பற்றுவது கூடும் என சொல்பவரும் காஃபிர் தான். அல்லாஹ் நம்மை காப்பானாக ! அவ்வாறானவர்கள் அல்லாஹ்வின் கட்டளை மற்றும் குர்ஆனின் செய்தியை மறுக்கிறார்கள்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَنْ يَّبْتَغِ غَيْرَ الْاِسْلَامِ دِيْنًا فَلَنْ يُّقْبَلَ مِنْهُ وَهُوَ فِى الْاٰخِرَةِ مِنَ الْخٰسِرِيْنَ﴾

இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது; மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார். (அல்குர்ஆன் 5:85)

ஷேஃகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) கூறினார்கள் : முஹம்மது இப்னு அப்துல்லாஹ் இப்னு அப்துல் முத்தலிப் ﷺ அவர்கள் மனிதர்கள் மற்றும் ஜின்கள், அரபிகள் அரபி அற்றவர்கள், அருகில் இருப்பவர் மற்றும் தொலைவில் இருப்பவர், அரசர்கள் பொதுமக்கள் என அனைவருக்குமான இறுதி இறைத்தூதர். அவருக்கு பின் எந்த தூதரும் எந்த வேதமும் கிடையாது அவரே இறுதி இறைத்தூதர். அவருக்கு அருளப்பட்ட குர்ஆன் அவரை உண்மைப்படுத்துவதோடு அவருக்கு சான்றாக அமைகிறது.

படைப்புகளில் யாரேனும் நபியை பின்பற்ற அவசியம் இல்லை அவருக்கு அருளப்பட்ட வேதம் மற்றும் ஞானத்தை பின்பற்ற தேவையில்லை என எண்ணினால் அவர் காஃபிர் ஆகிறார். (மஜ்மூஉ ஃபதாவா 28/59)

மேலும் கூறினார் : நபியின் நேர்வழியை விட மற்ற வழிகள் முழுமையானது என நம்பினால் அல்லது நேசர்கள் யாருக்கேனும் ஷரிஅத்தை விட்டு வெறியேற அனுமதி உண்டு என ஏற்றால் அவன் காஃபிர். (மஜ்மூஉ ஃபதாவா 28/58-59, 11/401)

இந்த குழப்பத்தில் விழுந்த சில கூட்டங்கள் :

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இந்த குழப்பத்தில் ஷைத்தானின் சூழ்ச்சியால் விழுந்த முக்கிய கூட்டம் ஸூஃபிக்கள். அவர்கள் தங்களில் சிலர் யார் அல்லாஹ்வை முழுமையாக அறிதல் (மஃரிஃபா) என்ற நிலையை அடைவாரோ அவருக்கு நபியை பின்பற்றும் மற்றும் வணக்கங்களை நிறைவேற்றுவதன் கடமை நீங்கிவிடும் என நம்புகிறார்கள். இது வழிகேடு என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நபிமார்கள் தான் அல்லாஹ்வை பற்றி அறிந்த சிறந்த படைப்புகள் பின்னர் நபித்தோழர்கள். ஆனால் அவர்களே தங்கள் மரணம் வரை எந்த கடமையையும் விடாமல் அல்லாஹ்வை வணங்குபவர்களாக இருந்தார்கள் இன்னும் சிலர் ருகூவிலும் ஸுஜூது செய்த நிலையிலும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்த நிலையிலும் குர்ஆனை ஓதிய நிலையிலும் மரணித்தார்கள். இதுவே அவர்கள் அல்லாஹ்விடம் எதிர்பார்த்து பிரார்த்தித்த சிறந்த முடிவு. அல்லாஹ் நமக்கும் அதை அருள்வானாக!

அவர்களின் வழிகேட்டுக்கு அவர்கள் ஆதாரமாக கூறும் வசனம் :

﴿وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَاْتِيَكَ الْيَـقِيْنُ﴾

உமக்கு மரணம் வரும்வரை உமது இறைவனை வணங்குவீராக!

(அல்குர்ஆன் 15:99)

الْيَقِيْن என்றால் மரணம் என பல குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். இன்னும் நபி ﷺ அவர்களுக்கு முன் பின் பாவங்கள்

மன்னிக்கப்பட்டபோதிலும் அவர்கள் அல்லாஹ்வை வணக்குவதிலிருந்த பின்வாங்கவில்லை. அல்லாஹ்வை அதிகம் அஞ்சுபவராக இருக்கும் நிலையிலும் அவர் வணக்கவழிபாடுகளில் அதிகம் ஈடுபட்டார். எந்த அளவிற்கெனில் அவர்கள் கால்கள் வீங்கும் அலவிற்கு நின்று வணகுவார்கள், அதை பற்றி கேட்க்கப்பட்டால் 'அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியாராக நான் இருக்கவேண்டாமா' என பதிலளித்தார்கள். (புகாரி 1130, முஸ்லிம் 2819)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! மேலும் இந்த வரிசையில் யார் 'ஷரிஅத் என்பது கடந்த காலத்திற்கு வேண்டுமானால் பொருந்தும் ஆனால் இக்காலகட்டத்திற்கு சரிவராது, கொடுக்கல் வாங்கல் மற்றும் காரியங்கள் யாவும் புதிய வடிவம் பெற்றுவிட்டன' என்று கூறுவாரோ அவரும் காஃபிராகிறான் ஏனெனில் ஷரிஅத் அவனிடம் குறையாகவே காணப்படுகிறது. இது வழிகெட்ட பேச்சு மாறாக ஷரிஅத் என்பது எல்லா காலங்கள் மற்றும் நேரங்களுக்கு பொருந்தும். அதில் எந்த குறையோ தவறோ இல்லை. ஏனெனில் அது எல்லாம் அறிந்த ஞானமிக்க படைப்புகளை பற்றி தெரிந்த அவர்களின் மீது கருணை கொண்ட அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்தது. அல்லாஹ் இந்த ஷரிஆவை முழுமை பெற்றதாகவே நமக்கு கொடுத்துள்ளான்.

﴿اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا﴾

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்; (அல்குர்ஆன் 5:3)

அதன் பரிபூரணம் என்பது எல்லா காலங்கள் மற்றும் இடங்களுக்கும் பொருத்தமானது. அதில் யார் குறைகாண்பாரோ அவர் அதை கொடுத்த அல்லாஹ்வை குறை காண்கிறார். அல்லாஹ்வின் வசனம் சொல்வதை குறை காண்கிறார், அல்லாஹ் பரிபூரணமானது என சொல்லுமோது இவர்

குறையானது என சொன்னால் அவர் காஃபிர் அல்லாமல் வேறு யார்! அல்லாஹ் நம்மை காப்பானாக![201]

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஸ்லாமிய ஷரிஅத்தை பின்பற்றுவதில் அவசியத்தை முக்கியத்துவத்தை சொல்லும் ஒரு சிறிய உரையே இது.

இரண்டாம் உரை

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده،

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள், மேலும் அல்லாஹ்வின் வேதத்தில் சிலவற்றை ஏற்ற சிலவற்றை மறுப்பது, ஷரிஅத்தின் சில அம்சங்களை ஏற்று சிலவற்றை மறுப்பது, குறிப்பிட்ட நபிமார்களை ஏற்று மற்றவர்களை மறுப்பது என இவை யாவும் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றும் காரியங்களாகும். அல்லாஹ் வேதங்களையும் நபிமார்களையும் அனுப்பியதன் காரணம் அவர்களை முழுமையாக உள்ளத்தால் நம்பவேண்டும் என்பதற்காகவே மாறாக இதை யார் மறுப்பாரோ அவர் காஃபிர் ஆகிவிடுகிறார். அல்லாஹ் கூறுகிறான் :

﴿اِنَّ الَّذِيْنَ يَكْفُرُوْنَ بِاللّٰهِ وَرُسُلِهٖ وَيُرِيْدُوْنَ اَنْ يُّفَرِّقُوْا بَيْنَ اللّٰهِ وَرُسُلِهٖ وَيَقُوْلُوْنَ نُؤْمِنُ بِبَعْضٍ وَّنَكْفُرُ بِبَعْضٍ ۙ وَّيُرِيْدُوْنَ اَنْ يَّتَّخِذُوْا بَيْنَ ذٰ لِكَ سَبِيْلًا ۙ اُولٰٓـئِكَ هُمُ الْـكٰفِرُوْنَ حَقًّا ۚ وَ اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ عَذَابًا مُّهِيْنًا﴾

நிச்சயமாக அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் நிராகரிப்பவர்கள், அல்லாஹ்வுக்கும் அவன் தூதர்களுக்குமிடையே பாகுபாடு செய்ய விரும்பி, “நாம் (அத்தூதர்களில்) சிலர் மீது ஈமான் கொள்வோம்; சிலரை நிராகரிப்போம்” என்று கூறுகின்றனர்; (குஃப்ருக்கும், ஈமானுக்கும்) இடையே ஒரு வழியை உண்டாக்கிக் கொள்ள நினைக்கிறார்கள். இவர்கள் யாவரும் உண்மையாகவே காஃபிர்கள் ஆவார்கள்; காஃபிர்களுக்கு இழிவு தரும் வேதனையைச் சித்தப்படுத்தி வைத்துள்ளோம். (அல்குர்ஆன் 4:150,151)

[201] ஷர்ஹ் நவாகிதுல் இஸ்லாம் (ஷேக். ஸாலிஹ் பின் ஃபவ்ஸான் அல்ஃபவ்ஸான், பக்கம். 183

அல்லாஹ்வின் நல்லடியார்களே! குர்ஆனை மட்டும் ஏற்று நபியின் சுன்னாவை மறுப்பவர்களும் இந்த பிரிவில் அடங்குவர். இவை யாவும் இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள். குர்ஆன் சுன்னா என இரண்டில் ஏதேனும் ஒன்றை மறுத்தாலும் அவர் காஃபிராகிவிடுகிறார். மேலும் குர்ஆனை ஏற்று அதிலிருக்கும் சில கருத்துக்களை, உதாரணமாக ஸஹாபாக்களின் நேர்மை, நபியின் மனைவிமார்களின் தூய்மை, தீன் வேறு துன்யா வேறு, மார்க்கம் என்பது வணக்கங்களில் மட்டும் தான் மாறாக அரசியல் மற்றூம் வியாபாரங்களில் அதற்கு இடமில்லை என நம்புபவர்கள் இஸ்லாமிய ஷரிஅத்தின் சில பகுதியை ஏற்று மற்ற பகுதிகளைகளை மறுப்பவர்கள் இவர்கள் தொழுது நோன்பு நோற்று தங்களை முஸ்லிம்கள் என கூறிக்கொண்டாலும் இவர்களும் காஃபிர்கள் தான், ஏனெனில் இவர்களின் அடிப்படை நம்பிக்கை ஷரிஆவையும் அல்லாஹ்வையும் மறுப்பதில் அமைந்துள்ளது. காரியங்கள் யாவும் உள்ளத்தின் நம்பிக்கை அடிப்படையி தான் அளவிடப்படுகிறது அல்லாஹ் நம்மை காப்பானாக!

<u>ஷரிஅத் சட்டத்திற்கு மாற்றமாக செயல்படுவது கூடும் என எண்ணுவதற்கான காரணம் அறியாமை மற்றும் தற்பெறுமை :</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஷரிஅத் சட்டத்திற்கு மாற்றமாக செயல்படுவது கூடும் என எண்ணுவதற்கான காரணம் அறியாமை மற்றும் தற்பெறுமையே காரணம். அறியாமைக்கான மருந்து கல்வி மற்றும் தற்பெறுமைக்கான மருந்து அல்லாஹ்வின் வல்லமையை அறிந்துகொள்வது மற்றும் அல்லாஹ்விடம் ஒருநாள் திரும்பசெல்வோம் என்ற எண்ணத்தோடு இருப்பது மேலும் தனது பெறுமைக்காக அல்லாஹ் கேள்விகணக்கு கேட்பான் என்ற சிந்தனையோடு இருப்பது.

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அகீதாவை காப்பாயாக! அமைதி மற்றும் ரிஸ்கை உறுதிபடுத்துவாயாக!

எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தவறுமாறு செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு (ரஹ்மத் என்னும்) நல்லருளை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளியாவாய்!”

யா அல்லாஹ்! நாங்கள் அறிந்த அறியாத எல்லா நன்மைகளையும் உன்னிடம் கேட்கிறோம், மேலும் நாங்கள் அறிந்த அறியாத எல்லா பாவங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! உன்னிடம் சுவனத்தையும் அதற்கு எங்களை கொண்டு செல்லும் சொல்லையும் செயலையும் கேட்கிறோம். மேலும் நரகத்தை விட்டும் அதற்கு இட்டுச்செல்லும் சொல் மற்றும் செயல்களை விட்டும் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! ஷைத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் குழப்பங்களை விட்டு பாதுகாப்பு கேட்கிறோம்!

அனைத்து முஸ்லிம்களின் நிலைமையை நீ சீர்படுத்துவாயாக!

இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் 10
இஸ்லாத்தை புறக்கணிப்பது,
அதை கற்காமல் அதன்படி அமல் செய்யாமல் இருப்பது

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கு இட்டுச்செல்லும்.

இஸ்லாமிய ஷரிஅத்தை பின்பற்றுவது கட்டாய கடமை

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக! நபி ﷺ அவர்களை பின்பற்ற வேண்டும் என்பதை அல்லாஹ் குர்ஆனில் **33** இடங்களில் சொல்கிறான்.[202]

[202] ஷேக் இப்னு தைமிய்யா (ரஹ்) கூறுகிறார்கள் : அல்லாஹ் தனக்கு கட்டுப்படவேண்டும் என்று முப்பது இடங்களுக்கு மேல் குர்ஆனில் கூறுகிறான். தன் பெயரோடு ரசூலின் பெயரை இணைத்து கூறுவதை போலவே ரஸூலுல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதையும் மாறு செய்வதையும் தனக்கு கட்டுப்படுதல் மற்றும் மாறு செய்தலோடு இணைத்தே கூறுகிறான். (மஜ்மூஉ ஃபதாவா 19/103), இதையே ஆஜுரீ அவர்களும் தன் 'ஷரீஆ' நூலில் பக்கம் **49**ல் கூறுகிறார்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَا اٰتٰٮكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ وَ مَا نَهٰٮكُمْ عَنْهُ فَانْتَهُوْا﴾

தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்; (அல்குர்ஆன் 59:7)

﴿قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْـكٰفِرِيْنَ﴾

(நபியே! இன்னும்) நீர் கூறும்: "அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்துநடங்கள்." ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் காஃபிர்களை நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 3:32)

﴿ يٰۤـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَرَسُوْلَهٗ وَلَا تَوَلَّوْا عَنْهُ وَاَنْـتُمْ تَسْمَعُوْنَ﴾

முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள்; நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவரை புறக்கணிக்காதீர்கள். (அல்குர்ஆன் 8:20)

﴿يٰۤـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْـعُوا اللّٰهَ وَاَطِيْـعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ‌ۚ﴾

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள் (அல்குர்ஆன் 4:59)

இன்னும் நபி ﷺ பல ஆதாரப்பூர்வனான ஹதீஸ்கள் அவர்களை பின்பற்ற வேண்டும் எனவும் அவர்களின் வழியின்படி செல்லவேண்டும் எனவும் அவரின் சுன்னத்துகளை கடைபிடிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளன.

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) கூறுகிறார்கள் : 'எனது சமுதாயத்தில் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள். ஆனால் ஏற்க மறுத்தோரை தவிர' என்று கூறினார்கள். அதற்கு 'இறைத்தூதர் அவர்களே! ஏற்க மறுத்தவர்கள்; யார்?' என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், 'எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார்; எனக்கு மாறு

செய்தவர் (சத்தியத்தை) ஏற்க மறுத்தவராவார்' என்று பதிலளித்தார்கள்'. **(புஹாரி 7280)**

எனக்குக் கட்டுப்பட்டவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவராவார். எனக்கு மாறு செய்கிறவர் அல்லாஹ்வுக்கு மாறு செய்தவராவார். **(புஹாரி 2957)**

நான் எதைச் செய்ய உங்களுக்குத் தடை செய்துள்ளேனோ அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். நான் எனதச்செய்யுமாறு உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளேனோ அனத உங்களால் இயன்ற வனர செய்யுங்கள். **(புஹாரி** 7288**)**

மார்க்கத்தை புறக்கணித்தல் என்றால் என்ன மற்றும் அது இஸ்லாத்தை முறிக்கும் காரியம் என்பதன் விளக்கம்

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ் மற்றும் அவன் தூதருக்கு கட்டுப்படுவதற்கு நேர் எதிரானது தான் இஸ்லாமிய மார்க்கத்தை புறக்கணித்து அதை கற்காமல் அதன்படி அமல் செய்யாமல் இருப்பது. இஸ்லாத்தின் அடிப்படையை அறியாமல் அதை விட்டு பாராமுகமாக இருத்தல், செவி கொடுத்து கேட்காமல் உள்ளங்களால் ஏற்றுக் கொள்ளாமல், உண்மைப் படுத்த வேண்டியதை உண்மைப்படுத்தாமல் பொய்ப்பிக்க வேண்டியதை பொய்ப்பிக்காமல், மார்க்க காரியங்களில் எந்த ஒரு கவனமும் செலுத்தாமல், ஈமானிய தூண்களை அறியாமல், அந்த ஈமானை பூர்த்தி செய்யும் அமல்களான தொழுகை, ஸகாத், அல்லாஹ் மற்றும் தூதரின் நேசம் ஆகியவற்றை அறியாமல் இருப்பதே இஸ்லாத்தை முறிக்கும் காரியங்கள் ஆகும்.

﴿وَمَنْ اَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ بِاٰيٰتِ رَبِّهٖ ثُمَّ اَعْرَضَ عَنْهَا اِنَّا مِنَ الْمُجْرِمِيْنَ مُنْتَقِمُوْنَ﴾

எவன் தன்னுடைய இறைவனின் வசனங்களைக் கொண்டு நினைவு படுத்தப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணித்து விடுகிறானோ, அவனைவிட அநியாயக்காரன் எவன் (இருக்கிறான்)? நிச்சயமாக நாம் (இத்தகைய) குற்றவாளிகளை தண்டிப்போம். (அல்குர்ஆன் 32:22)

அல்லாஹ்வின் வசனங்களை புறக்கணிப்பவர்களை விட அநியாயக்காரன் யாரும் இருக்க முடியாது மேலும் அவர்களை அல்லாஹ் குற்றவாளி என அல்லாஹ் கூறுகிறான். ஷஹாதாவை வாயால் மட்டும் மொழிந்து உடலால் எந்த ஒரு அமலும் செய்யாமல் இருப்பவர்கள் காஃபிர்கள் ஆவார்கள். உண்மையில் இஸ்லாத்தை புறக்கணிப்பவர்கள் உள்ளத்தால் பாவிகள் ஏனெனில் அவர்கள் உள்ளம் சரியாக இருந்தால் அவர்கள் தங்கள் உடல் உறுப்புகளை அல்லாஹ்வை வணங்குவதில் ஈடுபடுத்தியிருப்பார்கள். உள்ளம் என்பது அரசனாகவும் உறுப்புகள் படைகளாகவும் இருக்கிறது. உள்ளம் பின்வாக்கினால் உறுப்புகளும் பின்வாங்கும், அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக ! **(மஜ்மூஉல் ஃபதாவா 7/204)**

<u>மார்க்கத்தை புறக்கணிப்பவர்கள் குறித்து வந்துள்ள எச்சரிக்கைகள்</u>

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَمَنْ اَعْرَضَ عَنْ ذِكْرِىْ فَاِنَّ لَـهٗ مَعِيْشَةً ضَنْكًا وَّنَحْشُرُهٗ يَوْمَ الْقِيٰمَةِ اَعْمٰى﴾

"எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்; மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்" என்று கூறினான். (அல்குர்ஆன் 20:124)

﴿وَمَنْ اَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ بِاٰيٰتِ رَبِّهٖ ثُمَّ اَعْرَضَ عَنْهَا ؕ اِنَّا مِنَ الْمُجْرِمِيْنَ مُنْتَقِمُوْنَ﴾

எவன் தன்னுடைய இறைவனின் வசனங்களைக் கொண்டு நினைவு படுத்தப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணித்து விடுகிறானோ, அவனைவிட அநியாயக்காரன் எவன் (இருக்கிறான்)? நிச்சயமாக நாம் (இத்தகைய) குற்றவாளிகளை தண்டிப்போம். (அல்குர்ஆன் 32:22)

﴿وَمَنْ اَظْلَمُ مِمَّنْ ذُكِّرَ بِاٰيٰتِ رَبِّهٖ فَاَعْرَضَ عَنْهَا وَنَسِىَ مَا قَدَّمَتْ يَدٰهُ﴾

எவன் தன் இறைவனுடைய வசனங்களைக் கொண்டு உபதேசிக்கப்பட்டும் அவற்றைப் புறக்கணித்துத் தன்னிரு கரங்களும் செய்த குற்றங்களை மறந்து விடுகிறானோ அவனை விடப் பெரிய அக்கிரமக்காரன் எவன் இருக்கின்றான்? (அல்குர்ஆன் 18:57)

﴿فَاِنْ اَعْرَضُوْا فَقُلْ اَنْذَرْتُكُمْ صٰعِقَةً مِّثْلَ صٰعِقَةِ عَادٍ وَّثَمُوْدَ﴾

ஆகவே, அவர்கள் புறக்கணித்து விடுவார்களாயின், "ஆது, ஸமூது (கூட்டத்தாரு)க்கு உண்டான (இடி முழக்கம், புயல்) போன்ற வேதனையைப் போல் (இடி முழக்கம், புயல்) கொண்ட வேதனையை நான் உங்களுக்கு அச்சுறுத்துகின்றேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!. (அல்குர்ஆன் 41:13)

﴿وَمَنْ يُّعْرِضْ عَنْ ذِكْرِ رَبِّهٖ يَسْلُكْهُ عَذَابًا صَعَدًا﴾

எவன் தன் இறைவனை நினைப்பதைப் புறக்கணிக்கிறானோ, அவனைக் கொடிய வேதனையில் அவன் புகுத்தி விடுவான் (அல்குர்ஆன் 72:17)

﴿قُلْ اَطِيْعُوا اللّٰهَ وَالرَّسُوْلَ فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْكٰفِرِيْنَ﴾

(நபியே! இன்னும்) நீர் கூறும்: "அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்துநடங்கள்." ஆனால் அவர்கள் புறக்கணித்துத் திரும்பி விடுவார்களானால் - நிச்சயமாக அல்லாஹ் காஃபிர்களை நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 3:32)

<u>மார்கத்தை புறக்கணிப்பவர்கள் உள்ளம் மற்றும் சிந்தனையை ஷைத்தான் ஆட்கொண்டுவிட்டான்</u>

﴿وَمَنْ يَّعْشُ عَنْ ذِكْرِ الرَّحْمٰنِ نُقَيِّضْ لَهٗ شَيْطٰنًا فَهُوَ لَهٗ قَرِيْنٌ ۞ وَاِنَّهُمْ لَيَصُدُّوْنَهُمْ عَنِ السَّبِيْلِ وَيَحْسَبُوْنَ اَنَّهُمْ مُّهْتَدُوْنَ﴾

எவனொருவன் அர் ரஹ்மானின் நல்லுபதேசத்தை விட்டும் கண்ணை மூடிக் கொள்வானோ, அவனுக்கு நாம் ஒரு ஷைத்தானை ஏற்படுத்தி விடுகிறோம்; அவன் இவனது நெருங்கிய நண்பனாகி விடுகிறான். இன்னும், அந்த ஷைத்தான்கள் அவர்களை நேரான பாதையிலிருந்து தடுத்து விடுகின்றன. ஆனாலும், தாங்கள் நேரான பாதையில் செலுத்தப்படுவதாகவே அவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். (அல்குர்ஆன் 43:36,37)

<u>அல்லாஹ்வின் மார்க்கத்தை புறக்கணிப்பது காஃபிர்கள் மற்றும் முனாஃபிக்களின் பண்பு</u>

அல்லாஹ்வின் நல்லடியார்களே! நபி ﷺ அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தை மறுப்பது காஃபிர்கள் மற்றும் நயவஞ்சகர்களின் பண்பாகும்.

﴿وَالَّذِيْنَ كَفَرُوْا عَمَّا أُنْذِرُوْا مُعْرِضُوْنَ﴾

ஆனால் நிராகரிப்பவர்களோ, தங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டதைப் புறக்கணிப்பவர்களாக இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 46:3)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இஸ்லாமிய ஷரிஅத்தை பின்பற்றுவதின் அவசியத்தை மற்றும் அதை விட்டு விலகுவதால் வரும் தீங்கை சொல்லும் ஒரு சிறிய உரையே இது.

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا وأستغفر الله لي ولكم من كل ذنب فاستغفروه، إنه كان للتوابين غفورا.

இரண்டாம் உரை

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده، أما بعد،

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், மார்க்கத்தை கடைபிடிப்பது கட்டாய கடமை என்பதை அறிந்து கொள்ளுங்கள், கல்வியை கற்று அதன்படி அமல் செய்வதே அதை அடையும் வழி. ஆகவே ஒரு முஸ்லிம் இஸ்லாமிய அடிப்படைகளை அறிந்துகொள்வது கட்டாயமாகும் குறிப்பாக இஸ்லாமிய ஐந்து தூண்கள், ஈமானிய ஆறு தூண்கள் மற்றும் அதை முறிக்கும் காரியங்களை அறிதல், அதில் மிக முக்கியமாக இஸ்லாத்தை முறிக்கும் பத்து காரியங்களை அறிதல் அதை தொடர்ந்து ஈமானை பாதிக்கும் பெரிய மற்றும் சிறிய பாவங்களை விட்டு விலகியிருத்தல் ஆகும். பாவங்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேற்றாவிட்டாலும் ஈமானில் குறைபாடை ஏற்படுத்தி மறுமையில் தண்டனை பெற காரணமாக அமைந்துவிடும்.

<u>கல்வி மற்றும் அதன்படி அமல் செய்வதன் சிறப்பு</u>

கல்வியை கற்று அதன்படி அமல் செய்பவர்களுக்கு மகத்தான நன்மை உண்டு என அல்லாஹ் வாக்களிக்கிறான். யார் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடக்கிறாரோ அவருக்கு அதன் மூலம் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை அல்லாஹ் எளிதாக்குகிறான். மக்கள் இறையில்லங்களில் ஒன்றில் ஒன்றுகூடி, அல்லாஹ்வின் வேதத்தை ஓதிக்கொண்டும் அதை ஒருவருக்கொருவர் படித்துக்கொடுத்துக் கொண்டும் இருந்தால், அவர்கள்மீது அமைதி இறங்குகிறது. அவர்களை இறையருள் போர்த்திக்கொள்கிறது. அவர்களை வானவர்கள் சூழ்ந்துகொள்கின்றனர். மேலும் இறைவன், அவர்களைக் குறித்துத் தம்மிடம் இருப்போரிடம் (பெருமையுடன்) நினைவுகூருகிறான். **(முஸ்லிம் 2699)**

أبي هريرة رضي الله عنه قال: **قال رسول الله (صلى الله عليه وسلم): قال الله عز وجل:... وما تقرب إلي عبدي بشيء أحب إلي مما افترضت عليه، وما يزال عبدي يتقرب إلي بالنوافل حتى أحبه، فإذا أحببته كنت سمعه الذي يسمع به، وبصره الذي يبصر به، ويده التي يبطش بها، ورجله التي يمشي بها، وإن سألني لأعطينه، ولئن استعاذني لأعيذنه، وما ترددت عن شيء أنا فاعله ترددي عن نفس المؤمن، يكره الموت، وأنا أكره مساءته.**

எனக்கு விருப்பமான செயல்களில் நான் கடமையாக்கிய ஒன்றை விட வேறு எதன் மூலமும் என் அடியான் என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில்லை. என் அடியான் கூடுதலான (நஃபிலான) வணக்கங்களால் என் பக்கம் நெருங்கி வந்து கொண்டேயிருப்பான். இறுதியில் அவனை நேசித்து விடும் போது அவன் கேட்கிற செவியாக, அவன் பார்க்கிற கண்ணாக, அவன் பற்றுகிற கையாக, அவன் நடக்கிற காலாக நான் ஆகிவிடுவேன். அவன் என்னிடம் கேட்டால் நான் நிச்சயம் தருவேன். என்னிடம் அவன் பாதுகாப்புக் கோரினால் நிச்சயம் நான் அவனுக்குப் பாதுகாப்பு அளிப்பேன். ஓர் இறை நம்பிக்கையாளனின் உயிரைக் கைப்பற்றுவதில் நான் தயக்கம் காட்டுவதைப் போன்று, நான் செய்யும் எச்செயலிலும் தயக்கம் காட்டுவ தில்லை. அவனோ மரணத்தை வெறுக்கிறான். நானும் (மரணத்தின் மூலம்) அவனுக்குக் கஷ்டம் தருவதை வெறுக்கிறேன். தி என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள்

கூறினார்கள்: அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள். (புகாரி சா(ரு0உ)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அகீதாவை காப்பாயாக! அமைதி மற்றும் ரிஸ்கை உறுதிபடுத்துவாயாக!

எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தவறுமாறு செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு (ரஹ்மத் என்னும்) நல்லருளை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளியாவாய்!"

யா அல்லாஹ்! நாங்கள் அறிந்த அறியாத எல்லா நன்மைகளையும் உன்னிடம் கேட்கிறோம், மேலும் நாங்கள் அறிந்த அறியாத எல்லா பாவங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! உன்னிடம் சுவனத்தையும் அதற்கு எங்களை கொண்டு செல்லும் சொல்லையும் செயலையும் கேட்கிறோம். மேலும் நரகத்தை விட்டும் அதற்கு இட்டுச்செல்லும் சொல் மற்றும் செயல்களை விட்டும் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! ஷைத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் குழப்பங்களை விட்டு பாதுகாப்பு கேட்கிறோம்!

அனைத்து முஸ்லிம்களின் நிலைமையை நீ சீர்படுத்துவாயாக!

ربنا آتنا فى الدنيا حسنة وفى الآخرة حسنة وقنا عذاب النار. سبحان ربنا رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين. اللهم صل وسلم على نبينا محمد وآله وصحبه.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (I-5)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் ஓர் உயர்ந்த நோக்கத்திற்காகவே மார்க்கங்களை விதித்துள்ளான், அவை அவர்களின் மார்க்கத்துக்கும் உலக வாழ்க்கைக்கும் நன்மை தருவனவற்றை வழிகாட்டுவதாகும். ஏனென்றால் மனித பகுத்தறிவு குறைபாடானது, அவர்களை வழிகாட்டக்கூடிய விதிகளை உருவாக்குவதற்கு அது சக்திபடைத்தது அல்ல. எனவே இது பண்புகளில் பூரணமான, சொற்களிலும் செயல்களிலும் தீர்மானங்களிலும் ஞானம்மிக்க, தன் படைப்புக்களின் நலன்கள் அனைத்தையும் நன்கு அறிந்தவனும் அவர்கள் மீது கருணையானவனுமாகிய அல்லாஹ்வின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். ஆனால் மனிதர்களோ அவர்களின் அறிவில் குறையுள்ளவர்கள்.

முஃமின்களே! மார்க்கத்திலே கட்டாயமாக தெரிந்திருக்க வேண்டியது என்னவென்றால், தெய்வீக மார்க்கம் என்பது அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்டது, எனவே அல்லாஹ் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் அவர்களுக்குப் பொருத்தமான மார்க்கத்தை எத்தி வைப்பதற்காக அவர்களிலிருந்தே ரஸூல்மர்களை அனுப்பி வைத்தான். மேலும் அவர்களை வழிகாட்டாது பராமுகமாக விட்டுவிடவுமில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்

﴿ وَلِكُلِّ قَوْمٍ هَادٍ ۝٧ ﴾ [الرعد: ٧]

“ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு வழிகாட்டி இருக்கின்றார்.” (ஸூரா அர்ரஃத் : 7)

﴿ لِكُلٍّ جَعَلْنَا مِنكُمْ شِرْعَةً وَمِنْهَاجًا ﴾ [المائدة: ٤٨]

“உங்களில் ஒவ்வொரு வ(குப்பா)ருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழியையும் நாமே ஏற்படுத்தினோம்.” (ஸூரா அல் மாஇதா : 48)

மக்களே! மனிதர்கள் அவர்களுக்கு அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபிமார்களுக்கு கட்டுப்படுமாறு ஏவப்பட்டுள்ளார்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَا أَرْسَلْنَا مِن رَّسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ ٱللَّهِ ﴾ [النساء: ٦٤]

“அல்லாஹ்வுடைய அனுமதிகொண்டு (மக்கள்) அவருக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே தவிர வேறு எதற்காகவும் நாம் எந்த தூதரையும் அனுப்பவில்லை.” (ஸூரா அந்நிஸா : 64)

முஸ்லிம்களே! தவ்றாத்தும், இன்ஜீலும், அல் குர்ஆனுமே அல்லாஹ் இறக்கிய வேதங்களில் உயர்ந்தனவாகும். பனூ இஸ்ரவேலர்களிடம் அவர்களது மார்க்கத்தை பாதுகாக்கும்படி வாக்குறுதி எடுக்கப்பட்டது, ஆனால் அவர்களோ அதை பாதுகாக்கவில்லை. மாற்றமாக அதனை மாற்றி திரிபு படுத்திவிட்டனர். எனவே அல்குர்ஆனை அல்லாஹ் தானே பாதுகாப்பதாக உறுதியளித்தான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّا نَحۡنُ نَزَّلۡنَا ٱلذِّكۡرَ وَإِنَّا لَهُۥ لَحَٰفِظُونَ ۝٩ ﴾ [الحجر: ٩]

“நிச்சயமாக நாம்தான் இவ்வேதத்தை (உம் மீது) இறக்கிவைத்தோம். ஆகவே, (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதைப் பாதுகாத்துக் கொள்வோம்.” (ஸூரா அல் ஹிஜ்ர் : 9)

அல்லாஹ், அவனது அடியார்கள் மறுமை நாள் வரை ஒரு மார்க்கத்தைக்கொண்டு அவனை வணங்குவதற்காக அதை பாதுகாப்பதானது அவனது கருணையில் ஒன்றாகும்.

முஃமின்களே! அனைத்து மார்க்கங்களும் வணக்க வழிபாடுகளில் அல்லாஹ்வை ஓர்மைப்படுத்தி, அவனுக்கு இணை வைப்பதை தடுப்பதன்பால் அழைக்கின்றன.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَمَآ أَرۡسَلۡنَا مِن قَبۡلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِيٓ إِلَيۡهِ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعۡبُدُونِ ۝٢٥ ﴾ [الأنبياء: ٢٥]

“உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம், “நிச்சயமாக என்னைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லவே இல்லை என்னையே நீங்கள் வணங்குங்கள்” என்று நாம் வஹ்யி அறிவிக்காமலில்லை.” (ஸூரா அல் அன்பியா : 25)

மேலும் கூறுகின்றான்,

﴿ وَلَقَدۡ بَعَثۡنَا فِي كُلِّ أُمَّةٖ رَّسُولًا أَنِ ٱعۡبُدُواْ ٱللَّهَ وَٱجۡتَنِبُواْ ٱلطَّٰغُوتَۖ ﴾ [النحل: ٣٦]

“(பூமியின் பல பாகங்களிலும் வசித்திருந்த) ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பியிருக்கிறோம். (அத்தூதர்கள் அவர்களை நோக்கி) “அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். (வழி கெடுக்கும்) ஷைத்தான்களிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் என்(று) கூறிச் சென்)றார்கள்.” (ஸூரா அந்நஹ்ல் : 36)

அல்லாஹ்வின் அடியார்களே! முன்னைய மார்க்கங்கள் கிளைகளில் மாறுபட்டிருந்தாலும் அடிப்படைகளில் ஒரே மாதிரியானவைகளாக இருந்தன.

அது அல்லாஹ், அவனுடைய மலக்குகள், அவனுடைய வேதங்கள், அவனுடைய தூதர்கள், மறுமை நாள், கத்ரின் நல்லதும் கெட்டதும் என்று அனைத்தையும் நம்பிக்கை கொள்வதாகும்.

மேலும் கருணைமிக்கவனின் மார்க்கங்கள் மதம், மானம், சொத்து, உயிர், அறிவு என்பவற்றை பாதுகாப்பதிலும் ஒன்றுபடுகின்றன.

இது ஷரீஅத்தினுடைய நோக்கங்களைப் புரிந்து கொள்வதற்கான ஒரு பயனுள்ள முன்னுரையாகும். இதைப் புரிந்துகொள்ளும் ஒருவருக்கு, அல்லாஹ் தனது ஷரீஅத்தில் வைத்துள்ள நுட்பங்களைப் புரிந்துகொள்ளும் வாயிலைத் திறந்துவிடுகிறான்.

இஸ்லாமிய ஷரீஅத்தின் சிறப்பம்சங்கள்

1. முஃமின்களே! அல்லாஹ் இறுதித் தூதராக முஹம்மத் (ஸல்) அவர்கள் மூலம் தனது நபிமார்கள் வரிசையை முடித்து வைத்தான், வேதங்களை அல்குர்ஆனின் மூலம் முடித்து வைத்தான், மார்க்கங்களை இஸ்லாமிய மார்க்கத்தின் மூலம் முடித்து வைத்தான். மேலும் இஸ்லாமிய மார்க்கத்தை நாற்பதுக்கும் மேற்பட்ட சிறப்பம்சங்கள் மூலம் தனித்துவப்படுத்தினான். அதில் முதலாவதாக, அது தெய்வீகமான அல்லாஹ்வின் மார்க்கம். அது அல்லாத தற்போது பரவியுள்ள ஏனைய மார்க்கங்கள் அனைத்துமே சரியான அடிப்படை மார்க்த்திலிருந்து, அதாவது ஓர்இறைக் கொள்கையை ஏவக்கூடிய மார்க்கத்திலிருந்து திரிபடைந்து வந்தவைகளாகும். உதாரணமாக் கிறிஸ்தவர்கள் ஈஸா (அலை) அவர்களை இறைவன் என்று கூறி, சிலுவையை வணங்குமளவிற்கு தங்களது மார்க்கத்தை மாற்றிக்கொண்டனர், யஹூதிகள் சில நபிமார்களை மறுத்து உஸைர் (அலை) அவர்களை வணங்குகின்றனர். இவை அனைத்துமே மனிதர்களால் உருவாக்கப்பட்ட பலதெய்வ நம்பிக்கையின் பண்புகளை கொண்டவைகளாகும்.

இந்துக்களும், பௌத்தர்களும் கற்களை வணங்குபவர்கள், ராபிழாக்களோ கப்றுகளை வணங்குபவர்கள், அவர்கள் இஸ்லாமியர்கள் என்று கூறிக்கொண்டாலும் உண்மையில் அவர்கள் இஸ்லாத்துடன் எந்த தொடர்பும் இல்லை. பெயர்கள் அல்லாமல் யதார்த்தங்களே கருத்திற்கொள்ளப்படவேண்டும்.

2. மேலும் இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று, அது பிழைகளிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ لَّا يَأْتِيهِ ٱلْبَٰطِلُ مِنۢ بَيْنِ يَدَيْهِ وَلَا مِنْ خَلْفِهِۦ ۖ تَنزِيلٌ مِّنْ حَكِيمٍ حَمِيدٍ ﴿٤٢﴾ ﴾ [فصلت: ٤٢]

“இதற்கு முன்னும் சரி, இதற்குப் பின்னும் சரி உண்மைக்கு மாறான ஒரு விஷயமும் (திரு குர்ஆனாகிய) இதை (அணுகவே) அணுகாது. மிக்க புகழும் ஞானமும் உடையவனால் (இது) இறக்கப்பட்டது.” (ஸூரா அல் புஸ்ஸிலத் : 42)

மேலும் கூறுகின்றான்,

﴿ ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِىٓ أَنزَلَ عَلَىٰ عَبْدِهِ ٱلْكِتَٰبَ وَلَمْ يَجْعَل لَّهُۥ عِوَجَا ۜ ﴿١﴾ ﴾ [الكهف: ١]

“புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியதே! அவன்தான் தன் அடியார் (நபி முஹம்மது) மீது இவ்வேதத்தை இறக்கிவைத்தான். அதில் அவன் எத்தகைய (குறைபாட்டையும்) கோணலையும் வைக்கவில்லை.” (ஸூரா அல் கஹ்ப்: 1)

மேலும் கூறுகிறான்,

﴿ وَتَمَّتْ كَلِمَتُ رَبِّكَ صِدْقًا وَعَدْلًا ۚ ﴾ [الأنعام: ١١٥]

“(நபியே!) உமது இறைவனின் வாக்கு உண்மையாகவும் நீதமாகவும் முழுமையாகி விட்டது.” (ஸூரா அல்அன்ஆம் : 115)

எனவே அல்குர்ஆன் அதன் செய்திகளில் உண்மையானது, அதன் சட்டங்களில் நேர்மையானது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம் (குர்ஆன்) ஆகும். வழிகாட்டலில் சிறந்தது முஹம்மதின் வழிகாட்டலாகும்” (முஸ்லிம் : 1573)

3. இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்புக்களில் ஒன்று, அது மாற்றப்படுவதிலிருந்தும் திரிபுபடுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்படுவதை எச்சரித்துள்ளார்கள். “புதிதாக உருவாக்கப்பட்ட விடயங்களை உங்களுக்கு எச்சரிக்கின்றேன், புதிதாக உருவாக்கப்பட்ட அனைத்தும் பித்அத் ஆகும், அனைத்து பித்அத்களும் வழிகேடாகும்.” (முஸ்லிம் : 1573)

இஸ்லாமிய அறிஞர்கள் பல நூற்றாண்டுகளாக ஹதீஸ்களில் நம்பகமானவை, பலவீனமானவை என்பவற்றை பிரித்தறிய மிகுந்த முயற்சி எடுத்துள்ளனர்.

4. இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் அது தூர்ந்து போவதை விட்டும் பாதுகாக்கப்படுவதும் ஒன்றாகும்.

அல்குர்ஆனை பாதுகாப்பதைப்பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகினறான்:

﴿ إِنَّا نَحْنُ نَزَّلْنَا ٱلذِّكْرَ وَإِنَّا لَهُۥ لَحَٰفِظُونَ ۝٩ ﴾ [الحجر: ٩]

“நிச்சயமாக நாம்தான் இவ்வேதத்தை (உம் மீது) இறக்கிவைத்தோம். ஆகவே, (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதைப் பாதுகாத்துக் கொள்வோம்.” (ஸூரா அல் ஹிஜ்ர் : 9)

அதேபோல் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் காபிர்களின் சூழ்ச்சிகள், சதிமுயற்சிகள் இருந்தபோதிலும் தலைமுறை தலைமுறையாக நூற்றாண்டிலிருந்து நூற்றாண்டிற்கு பரிமாறப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஷரீஅத் மறைவடையாமல் பாதுகாக்கப்பட்ட வழிகளில் ஒன்று, அல்லாஹ் தன் படைப்புகளில் இருந்து சிலரைப் பயன்படுத்தி அதனைப் பாதுகாத்தமையாகும். அவர்கள்தான் நபிமார்களின் வாரிசுகளான உலமாக்கள், நல்ல ஆளுநர்களும் அரசர்களும், செல்வாக்குமிக்கவர்களும் செல்வந்தர்களுமாவர். இவர்கள் மார்க்க அறிவைப் பரப்புவதன் மூலமாகவும், அதன் பாதையில் செலவு செய்வதன் மூலமாகவும் இஸ்லாத்தை ஆதரிப்பதற்காக தங்கள் பலத்தையும் பணத்தையும் அர்ப்பணித்தவர்களாவர்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, முஆவியா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் “என் சமுதாயத்தாரில் ஒரு குழுவினர் அல்லாஹ்வின் கட்டளையைச் செயல்படுத்திய வண்ணமே இருப்பார்கள். அவர்களுக்கு இடையூறு செய்பவர்கள் அவர்களுக்குத் தீங்கிழைக்க முடியாது. அவர்களை எதிர்ப்பவர்களும் அவர்களுக்குத் தீங்கு செய்ய முடியாது. இறுதியில், அவர்கள் அதே நிலையில் நீடித்திருக்க, அல்லாஹ்வின் ஆணை (இறுதி நாள்) அவர்களிடம் வரும்.” (புஹாரி : 3641)

அல்லாஹ்வின் அடியார்களே! இது பொதுவான இறை மார்க்கங்களினதும் குறிப்பாக இஸ்லாமிய மார்க்கத்தினதும் சிறப்புக்களை புரிந்துகொள்வதற்கேற்ற

ஒரு பயனுள்ள முன்னுரையாகும். யார் இதை சரியாக கற்றுக்கொள்கிறாரோ, அவர் அல்லாஹ்வால் வகுக்கப்பட்ட மார்க்கங்களின் மகத்துவத்தையும் மனிதர்கள் அமைத்துக்கொண்ட மார்க்கங்களின் பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

5. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று அதன் போதனைகள் தெளிவாக இருக்கதாகும். அதாவது, குழப்பங்கள், இரகசியங்கள் மற்றும் புதிர்கள் என்பவற்றிலிருந்து நீங்கி இருப்பதாகும். இதுவே மனிதகுலப் போதனைகளுக்குஇன்றியமையாததாக உள்ளது. இதனால் தான் இஸ்லாமிய மார்க்கப் போதனைகளை சிறியவர்கள், பெரியவர்கள், கல்வி பயில்பவர்கள், கிராமவாசிகள் என அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

அல்லாஹ்வின் அடியார்களே! இதுவே இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் ஐந்து சிறப்புக்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்ள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத்

துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (6-10)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாவில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் ஐந்து சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

6. அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பம்சங்களில் ஒன்று மூடநம்பிக்கைகள் மற்றும் கட்டுக்கதைகளைப் புறந்தள்ளி அவை பொய்யானது என்பதைத் தெளிவுபடுத்தியமையாகும். சூனியம் அவற்றில் ஒன்றாகும். அதில், சூனியக்காரன் ஷைத்தான்களின் உதவிகளைப் பெற்று, தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றான். ஷைத்தான்கள் தம்மை வணங்கினாலே தவிர, யாருக்கும் பணிவிடை செய்யமாட்டார்கள்.

இஸ்லாம் கண்டிக்கும் மூடநம்பிக்கைகளில் ஒன்று, “கஹானா” எனப்படும், மறைவான அறிவை வாதிடுதும், உள்ளத்தில் இருப்பதை அறிவித்து கொடுப்பதுமாகும். மேற்கூறிய இரண்டும் (சூனியம், கஹானா) மிகக் கடுமையாகத் தடுக்கப்பட்டுள்ளன. இவையிரண்டிலும் ஈடுபடுவது இஸ்லாத்தை முறிக்கும் காரணிகளாகும். ஏனெனில் மறைவானதை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள். அது அல்லாஹ்வின் தனித்துவங்களில் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ قُل لَّا يَعۡلَمُ مَن فِي ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ ٱلۡغَيۡبَ إِلَّا ٱللَّهُۚ وَمَا يَشۡعُرُونَ أَيَّانَ يُبۡعَثُونَ ٦٥ ﴾ [النمل: ٦٥]

“(நபியே!) கூறுங்கள்: மறைவானதை, அல்லாஹ்வைத் தவிர வானங்களிலும், பூமியிலும் உள்ள யாருமே அறியமாட்டார்கள்” (ஸூரா அந்நம்ல் : 65)

தன்னிடமும் அவ்வாறு இருப்பதாக யாராவது வாதிட்டால் மறைவான அறிவு எனும் பண்பில் அல்லாஹ்வுடன் தானும் கூட்டிணைந்துவிட்டதாக வாதிடுகின்றார். மேலும் அல்குர்ஆனின் செய்தியைப் பொய்ப்பிக்கின்றார்.

7. இஸ்லாத்தின் தனிச்சிறப்பம்சங்களில் இன்னுமொன்று அது முழுமை பெற்றிருப்பதும், நம்பிக்கை, வணக்கங்கள், கொடுக்கல், வாங்கல் அரசியல், நீதித்துறை, நடத்தைகள் என வாழ்வின் அனைத்து விவகாரங்களையும் உள்ளடக்கி இருப்பதாகும்.

- நம்பிக்கைகள் பற்றிய பாடத்தில், இஸ்லாமிய சரீஆவானது, அடிப்படை நம்பிக்கைகளாகிய அல்லாஹ்வையும், வானவர்களையும், வேதங்களையும், தூதர்களையும், மறுமை நாளையும், விதியின் நன்மை தீமைகளையும், ஈமான் கொள்வதைப் பற்றி பேசுகின்றது. மேலும் நபியவர்களை ஈமான் கொள்வதன் உள்ளடக்கங்கள் பற்றியும் பேசுகின்றது. அவற்றில் முக்கியமானது, அவர்களை ஏற்று, அவர்களுக்கு கட்டுப்படுவதாகும்.

- வணக்கம் வழிபாடுகள் பற்றிய பாடத்தில் இஸ்லாமிய சரீஆவின் போதனைகள், உள்ளம் மற்றும் உறுப்புக்களால் செய்யப்படும் வணக்கங்களைத் துள்ளியமாக உள்ளடக்கியுள்ளது. உள்ளம் சார்ந்த வணக்கங்களாவன: பொறுமை, அச்சம், எதிர்பார்ப்பு, தவக்குல், தவ்பா, நேசம் போன்றவையாகும். உறுப்புகள் சார்ந்த வணக்கங்களாவன: சுத்தம், தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ், ஜிஹாது, அழைப்பு பணி போன்றவையாகும்.

- கொடுக்கல், வாங்கல் பற்றிய பாடத்தில் இஸ்லாமிய ஷரீஆவின் போதனைகள் அவற்றின் துல்லியமான விளக்கங்களை உள்ளடக்கியுள்ளன. உதாரணமாக, வாங்குதல், விற்றல், குத்தகைக்கு வழங்குதல், பொறுப்புச் சாட்டுதல், கடன்களை பதிவு செய்தல் திருமணம் விவாகரத்து, விவசாயம் போன்றவை.

- அரசியல் எனும் தலைப்பில் ஆட்சியாளர் மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புடன் சம்பந்தப்பட்ட அம்சங்களான, பைஅத்து செய்தல், கட்டுப்படல், உபதேசித்தல், துஆக் கேட்டல், ஒற்றுமை போன்ற அனைத்தையும் உள்ளடக்கி உள்ளது. மேலும் முஸ்லிமல்லாதவர்களுடன் தொடர்பான போர், அமைதி, அமைதி உடன்படிக்கை போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் ஆட்சியாளர்களுக்கு நீதமாக நடந்து கொள்ளுமாறும், அல்லாஹ்வின் மார்க்கத்தின் உயர்வுக்காக அறப்போர் புரியமாரும், முஸ்லிம்களின் தேசத்தை பாதுகாக்குமாறும், ஐந்து அடிப்படைகளான மார்க்கம், பகுத்தறிவு, உயிர், மானம், சொத்து ஆகியவற்றைப் பாதுகாக்குமாறும் கட்டாயப்படுத்தியுள்ளது,

- நீதித்துறை பற்றிய தலைப்பில், தண்டனைகள், ஹத்துகள், பழிவாங்கல், தியத், தஃஸீர் தண்டனைகள் போன்ற பல்வேறு சட்டங்களை உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் நோக்கிலும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், குழப்பவாதிகளை குழப்பத்தை விட்டும் தடுக்கவும் விதித்துள்ளது.

- நன்னடத்தைகள் என்ற தலைப்பில் வரும்போது, இஸ்லாமிய ஷரீஆவின் போதனைகள் கணவன், மனைவி மற்றும் குடும்ப உறவுகள், ஒழுக்கம் சார் உறவுகள் எனப் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. நற்குணங்களை கடைபிடிக்குமாறு துண்டுகின்றது. அவற்றில் முக்கியமானவை, பெற்றோருக்கு உபகாரம் புரிதல், உறவுகளை சேர்ந்து நடத்தல், நாவைப் பாதுகாத்தல், பார்வையைத் தாழ்த்துதல், வெட்கம் எனும் நற்குணத்தைக் கடைபிடித்தல் போன்றவையாகும். அதேபோன்று கீழ்த்தரமான வெறுக்கத்தக்க பண்புபண்புகளை மார்க்கம் தடுக்கின்றது. மேலும்

ஒற்றுமையாக இருக்கத் தூண்டுவதுடன், பிரிவினைகளை ஏற்படுத்தி பிரிந்து போக வேண்டாம் எனவும், மக்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

அல்லாஹ்வின் அடியார்களே! இந்த உள்ளடக்கிய தன்மையை ஊடாகவே இஸ்லாமிய மார்க்கம் முழுமை பெறுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ ٱلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ ٱلْإِسْلَٰمَ دِينًاۚ ﴾ [المائدة: ٣]

“இன்று, உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக முழுமைப்படுத்திவிட்டேன். எனது அருட்கொடையையும் பரிபூரணப்படுத்திவிட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கு மார்க்கமாகப் பொருந்திக்கொண்டுவிட்டேன்.” (ஸூரா அல்மாஇதா :)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “சுவனத்திற்கு சமீபமாக்கி வைக்கும், நரகத்தை விட்டும் தூரமாக்கி வைக்கும் எதுவாக இருப்பினும் உங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டே உள்ளது.” (ஆதாரம் : தபராணி)

அபூதர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : “நபி (ஸல்) அவர்கள் எம்மை விட்டுச் செல்லும்போது, தன் இரு இறக்கையாலும் பறக்கும் எந்த பறவையாக இருப்பினும் அதைப்பற்றிக் கூட நம்மிடம் அறிவிருக்கவே செய்தது.” (இப்னு ஹிப்பான்)

8. மாற்றமடையாத, திரிபடையாத மனித இயல்புடன் அது பொருந்தி போகின்றமை. மேலும் அது உடல், உயிர்த் தேவைகள நிறைவேற்றி வைக்கின்றமை. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ فَأَقِمْ وَجْهَكَ لِلدِّينِ حَنِيفًاۚ فِطْرَتَ ٱللَّهِ ٱلَّتِي فَطَرَ ٱلنَّاسَ عَلَيْهَاۚ لَا تَبْدِيلَ لِخَلْقِ ٱللَّهِۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلْقَيِّمُ وَلَٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا يَعْلَمُونَ ٣٠ ﴾ [الروم: ٣٠]

“ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும் அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்.” (ஸூரா அர்ரூம் : 30)

௯. சரியான பகுத்தறிவுடன் அது பொருந்திப் போகின்றமை. இது ஆச்சரியமான ஒன்று அல்ல. “ஏனெனில் அது பயனுள்ள சரியான நம்பிக்கை கோட்பாடுகள், உயிரையும் அறிவையும் பக்குவப்படுத்தும் நற்குணங்கள், நிலைமைகளை சீர் செய்யும் கருமங்கள், அடிப்படை மட்டும் கிளை அம்சங்களுக்கான ஆதாரங்கள், சிலைவணக்கத்தையும், படைப்புகள் மீது நம்பிக்கை வைப்பதையும் வெறுத்தல், மார்க்கத்தை அல்லாஹ்வுக்காக மாத்திரம் தூய்மைப்படுத்தல், புலனுக்கும் அறிவுக்கும் முரண்படும், சிந்தனையைத் தடுமாறச் செய்யும் போலியான கட்டுக்கதைகளை புறந்தள்ளல், முழுமையான சீர்நிலை, அனைத்துத் கெடுதிகளையும், தீமைகளையும் தடுத்தல், எல்லா வழிகளிலும் நீதத்தை நிலைநாட்டி அநீதத்தை எதிர்த்தல், பலவகையிலும் முழுமை நிலையை அடைய வலியுறுத்தல் ஆகியவற்றிலேயே நிறுவப்பட்டுள்ளது.” (ஸிஃதீ)

“அல்லாஹ்வும் தூதரும் கூறியுள்ள செய்திகளில், புலன்களுக்கும், நடைமுறைக்கும், சீரிய பகுத்தறிவுக்கும் முரண்படும் எதுவுமே இல்லை. சட்டங்களில் அடியார்களின் நலன்களுக்கு முரண்படும் எந்த ஒன்றும் இல்லை. மாறாகவே மக்களை பரிபூரணத்தில் உயர் படித்தரங்களை நோக்கி அழைத்துச் செல்கின்றது. அவற்றை முழுமையாகவோ, பகுதியாகவோ புறக்கணிக்கும் போதுதான் குறையும் தீங்கும் ஏற்படுகின்றது” (ஸிஃதீ)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

10. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

பகுத்தறிவை செயற்படுத்துமாறும் பிரபஞ்சத்தை ஆராயுமாறும் வலியுறுத்துவதோடு புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கவும் பிரபஞ்சம் மற்றும் மனித உடல் அத்தாட்சிகளை பற்றிச் சிந்திக்கவும் ஆர்வமூட்டியுள்ளமை. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ سَنُرِيهِمْ ءَايَٰتِنَا فِى ٱلْءَافَاقِ وَفِىٓ أَنفُسِهِمْ حَتَّىٰ يَتَبَيَّنَ لَهُمْ أَنَّهُ ٱلْحَقُّ ۗ أَوَلَمْ يَكْفِ بِرَبِّكَ أَنَّهُۥ عَلَىٰ كُلِّ شَىْءٍ شَهِيدٌ ۝٥٣ ﴾ [فصلت: ٥٣]

“நிச்சயமாக (இவ்வேதம்) உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் பொருட்டு நம்முடைய அத்தாட்சிகளை (உலகத்தின்) பல கோணங்களிலும், அவர்களுக்குள்ளேயும் சீக்கிரமே நாம் அவர்களுக்குக் காண்பிப்போம் (நபியே!) உம் இறைவன் நிச்சயமாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது உமக்குப் போதுமானதாக இல்லையா?” (ஸூரா புஸ்ஸிலத் : 53)

﴿ وَفِىٓ أَنفُسِكُمْ ۚ أَفَلَا تُبْصِرُونَ ۝٢١ ﴾ [الذاريات: ٢١]

“உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?” (ஸூரா அத்தாரியாத் : 21)

இஸ்லாமிய ஷரீஆவானது, பகுத்தறிவுடன் இணங்கிப் போகின்றதே தவிர, முரண்படவில்லை. பகுத்தறிவு திகைத்துப் போகும் அம்சங்களை அது கொண்டு வருமே தவிர, பகுத்தறிவின் பார்வையில் வாய்ப்பற்றதாக உள்ள அம்சங்களைக் கொண்டுவரமாட்டாது. ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் கீழ் இயங்கும், “அறிவியல் அற்புதங்களுக்கான அமைப்பு” பெரிய அளவிலான குர்ஆன் மற்றும் சுன்னாவை அறிவியல் அற்புதங்களைத் தொகுத்துள்ளது. அவை கரு தொடர்பான அறிவு, வானவியல், வைத்தியம், கடல்கள் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இவை அனைத்தும் முஸ்லிம் அல்லாத விஞ்ஞானிகளையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன. ஏனெனில் இவை அனைத்தும் நூற்றாண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆன், ஸுன்னாவில் கூறப்பட்டிருப்பது என்பது அல்லாஹ்விடமிருந்து வந்த வஹியாக இருந்தால்

மாத்திரமே சாத்தியமாகும். ஏனெனில், இந்தக் கண்டுபிடிப்புகளை அடைந்து கொள்வதற்கான எந்த வழிமுறைகளும் அன்று இருக்கவில்லை அவர்களில் பலா் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டும் உள்ளனா்.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய மார்க்கத்தின் மேலும் சில சிறப்பம்சங்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (11-15)

إنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் பத்து சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

11. அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, முஸ்லிமல்லாத நடுநிலைவாதிகள் அதைப் பார்க்கும் போது. அதில் கவரப்படுவது மாத்திரமல்லாமல், அது உறுதியாக அல்லாஹ்விடமிருந்தே வந்துள்ளது என அறிந்தும் கொள்வார்கள். மேலும், ஒட்டுமொத்த மனித சமுதாயத்தாலும், அது போன்ற அழகான, நேர்த்தியான ஒன்றைக் கொண்டுவரமுடியாது என்பதையும் அறிந்துகொள்வார்கள். இது முஸ்லிமல்லாதவர்கள் தரப்பில் இருந்து வரும் சத்திய சாட்சியமாகும். உண்மையாளன் அல்லாஹ் தனது அல்குர்ஆனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَلَوۡ كَانَ مِنۡ عِندِ غَيۡرِ ٱللَّهِ لَوَجَدُواْ فِيهِ ٱخۡتِلَٰفٗا كَثِيرٗا ٨٢ ﴾ [النساء: ٨٢]

"(இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்." (ஸூரா அந்நிஸா : 82)

12. முஸ்லிமல்லாதவர்கள் இதைப் பார்த்து, இது அல்லாஹ்விடமிருந்துதான் வந்தள்ளது எனவும், இது மனிதர்களிடமிருந்து வெளிப்பட்டிருக்கமுடியாது எனவும் அறிந்துகொண்டுவிட்டால், இது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கான காரணமாக அமைந்துவிடும். இவ்வாறு, நிராகரிப்பாளர்களின் நாடுகளிலும், இஸ்லாமிய நாடுகளிலும் வாழக்கூடிய, கற்ற, கற்காத பலர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர்.

13. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அது, எல்லைமீறல் மற்றும் பொடுபோக்கு ஆகியவற்றிற்கு மத்தியில் நடுநிலையாக இருப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَكَذَٰلِكَ جَعَلۡنَٰكُمۡ أُمَّةٗ وَسَطٗا لِّتَكُونُواْ شُهَدَآءَ عَلَى ٱلنَّاسِ وَيَكُونَ ٱلرَّسُولُ عَلَيۡكُمۡ شَهِيدٗاۗ ﴾ [البقرة: ١٤٣]

"இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம் (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்" (ஸூரா அல்பகரா : 143)

எனவே, இஸ்லாமிய ஷரீஆவின் போதனைகள் நம்பிக்கைக் கோட்பாடு, வணக்கங்கள், கொடுக்கல் வாங்கல்கள், நடத்தைகள் என அனைத்திலும் நடுநிலை பேணுகின்றது.

14. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, ஆன்மா மற்றும் உடல் தேவைகளுக்கு மத்தியில் சமநிலை பேணுமாறு அழைப்பு விடுக்கின்றமையாகும். எனவே, ஆன்மீக, லௌகீக வாழ்க்கைகளுக்கு மத்தியில் எந்த முரண்பாடும் இல்லை. இஸ்லாமிய ஷரீஆவானது, இறைவனை சார்ந்திருத்தல், இறையச்சம், இறை எதிர்பார்ப்பு, தொழுகை, நோன்பு, ஹஜ், இறைநினைவு, நல்வழிகளில் தர்மம் செய்தல் போன்ற, உடல், உள, பொருள் சார்ந்த பல்வேறு வணக்கங்கள் ஊடாக ஆன்மாவைப் பண்படுத்திப் பக்குவப்படுத்துமாறு அழைப்பு விடுக்கின்றது. இவையனைத்தும், எழுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்ட, ஈமானின் கிளைகளில் உள்ளடங்கும் வணக்கவழிபாட்டு வகைகளாகும். ஆனால், மனிதர்களால் உருவாக்கபட்ட வாழ்க்கை முறைகள் அவ்வாறல்ல. உதாரணமாக, மதச்சார்பின்மை, ஆன்மாத் தேவையைக் கண்டுகொள்வதில்லை. மனிதன் ஒரு முழுமையான சடவாதியாக இருப்பதையே அது விரும்புகின்றது. அவனது பௌதீக நலன்கள் பற்றி மாத்திரமே அது சிந்திக்கின்றது. அது அவனது பெற்றோர்களையும், குடும்பத்தையும் பாதித்தாலும் சரியே! விளைவாக, அங்கு குடும்ப ஒழுங்கு பலவீனப்பட்டுப் போகின்றது. ஆண்-பெண்ணுக்கு இடையிலான உறவு, வெறுமனே தோழமை உணர்வாகவே மாத்திரம் மாறிவிடுகின்றது.

சடவாத, மதசார்பற்ற வாழ்க்கை முறைக்கு மறு எதிரில் இருக்கும், துறவற வாழ்க்கை முறையானது, உடலியல் தேவைகளைக் கண்டுகொள்ளாமல் விடுகின்றது. அதாவது, அது தன்னைப் பின்பற்றுபவர்களிடம், திருமணம் செய்யவேண்டாம் என வலியுறுத்துகின்றது. மேலும், - விகாரைகளில் சில கிறிஸ்தவ மதக்குருக்களிடம் உள்ளது போன்று - அல்லாஹ் அனுமதித்துள்ள சில தூய்மையான அம்சங்களையும் தடுக்கின்றது. ஆனால், இஸ்லாத்தைப் பொறுத்தவரை, உடல், ஆன்மாத் தேவைகள் மனிதனுக்கு இருப்பதை ஏற்றுக்கொள்வதுடன், அவ்விரண்டுக்கும் மத்தியில் சமநிலை பேணுமாறும் ஏவுகின்றது. எனவே, சடவாத உலகில் மூழ்கிச் செல்வதை அது எச்சரிக்கின்ற அதேவேளை, துறவறம் மற்றும் கடும்போக்கையும் அது தடுக்கின்றது. பூமியில் சென்று உழைக்குமாறும், பூமியை வளப்படுத்துமாறும் ஏவுகின்றது. மேலும், அடியானுக்கும் ரப்புக்கும் இடையில் உள்ள உறவைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் ஏவுகின்றது. வணக்கவழிபாடுகளில்

தன்னைத் தானே வருத்திக்கொள்ள நினைத்த ஒரு நபித்தோழரைப் பார்த்து நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“நிச்சயமாக உனக்கு நீ நிறைவேற்றவேண்டிய கடமைகளும் உண்டு”[203]

மேலும் சில மனிதர்கள் வந்து, தாம் இறைச்சி சாப்பிடப்போவதில்லை என்றும், வேறு சிலர், தாம் மனைவியை நெருங்கப்போவதில்லை என்றும், வேறு சிலர் தாம் விடமால் நோன்பு பிடிக்கப்போவதாகவும், இன்னொருவர், தாம் இரவில் தூங்காமல் தொழப்போவதாகவும் கூறிய போது, நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

“நான் இறைச்சி சாப்பிடுகின்றேன், மனைவியருடன் இணைகின்றேன், நோன்பு நோற்கவும் விடவும் செய்கின்றேன், தூங்கவும் தொழவும் செய்கின்றேன். எனவே, எனது வழிமுறையை யார் வெறுக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல.”[204]

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான் நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

15. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

[203] அஹ்மத் : 26308

[204] புகாரி : 5063, முஸ்லிம் : 1401

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் அழகிய போதனைகள் ஆகும். அது அழைப்புவிடுக்கும் எல்லா அம்சங்களும், பகுத்தறிவு மற்றும் ஈடேற்றமான இயல்புணர்வு ஆகியவற்றினூடாக நல்லவை என அறியப்பட்டவையாகும். மேலும் அது தடுக்கும் எல்லா அம்சங்களும், பகுத்தறிவு மற்றும் ஈடேற்றமான இயல்புணர்வு ஆகியவற்றினூடாக கெட்டவை என அறியப்பட்டவையே. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ أَفَحُكْمَ ٱلْجَٰهِلِيَّةِ يَبْغُونَ ۚ وَمَنْ أَحْسَنُ مِنَ ٱللَّهِ حُكْمًا لِّقَوْمٍ يُوقِنُونَ ۝٥٠ ﴾ [المائدة: ٥٠]

“உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிட தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்?” (ஸூரா அல் மாஇதா : 50)

மேலும் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ ۞ إِنَّ ٱللَّهَ يَأْمُرُ بِٱلْعَدْلِ وَٱلْإِحْسَٰنِ وَإِيتَآيِٕ ذِى ٱلْقُرْبَىٰ وَيَنْهَىٰ عَنِ ٱلْفَحْشَآءِ وَٱلْمُنكَرِ وَٱلْبَغْىِ ۚ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ ۝٩٠ ﴾ [النحل: ٩٠]

“நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.” (ஸூரா அந்நஹ்ல் : 90)

அப்துர்ரஹ்மான் இப்னு ஸிஃதீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : இஸ்லாமிய ஷரீஆவானது, நற்செயல்கள், நற்குணங்கள், அடியார்களுக்குத் தேவையான நலவுகள் என அனைத்தையும் ஏவுகின்றது. நீதி, நல்லுபகாரம், இரக்கம், நன்மை ஆகியவற்றை ஏவியிருப்பதுடன், அநீதி, அத்துமீறல், துர்க்குணங்கள் ஆகியவற்றைத் தடுத்தும் உள்ளது. நபிமார்கள் மற்றும் இறைத்தூதர்களால் பரிபூரண நற்குணங்கள் என உறுதிப்படுத்தப்பட்ட அனைத்தையும் இஸ்லாமிய ஷரீஆவும் ஏற்று, வலியுறுத்தியுள்ளது. ஏனைய ஷரீஆக்களில் வலியுறுத்தப்பட்ட எந்த மார்க்க, உலக நலவுகளாக இருந்தாலும் அதனை இஸ்லாம் நிலைப்படுத்தியே உள்ளது. அவற்றில் தடுக்கப்பட்ட எந்தத் தீமைகளாக இருப்பினும் அதை இஸ்லாமிய ஷரீஆவும் தடுத்தே உள்ளது.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய மார்க்கத்தின் மேலும் சில சிறப்பம்சங்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹ{ அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (16-20)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் பதினைந்து சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

16. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்களில் ஒன்று, அது அனைத்துத் தூய்மையானவற்றையும் ஹலாலாக்கி, கெட்ட அனைத்தையும் ஹராமாக்கியுள்ளமையாகும். அல்லாஹ் தனது நபியைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَيُحِلُّ لَهُمُ ٱلطَّيِّبَٰتِ وَيُحَرِّمُ عَلَيۡهِمُ ٱلۡخَبَٰٓئِثَ ﴾ [الأعراف: ١٥٧]

“தூய்மையான ஆகாரங்களையே அவர்களுக்கு ஆகுமாக்குவார் கெட்டவற்றை அவர்களுக்குத் தடுத்து விடுவார்” (ஸூரா அல்அஃராப் : 157)

17. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்களில் ஒன்று, அது உள்ளார்ந்த சுத்தத்தை நோக்கி அழைப்பு விடுப்பதாகும். அதன் போதனைகள் ஊடாக ஆத்மாக்கள் பரிசுத்தம் அடைகின்றன. உள்ளங்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ هُوَ ٱلَّذِي بَعَثَ فِي ٱلۡأُمِّيِّـۧنَ رَسُولٗا مِّنۡهُمۡ يَتۡلُواْ عَلَيۡهِمۡ ءَايَٰتِهِۦ وَيُزَكِّيهِمۡ وَيُعَلِّمُهُمُ ٱلۡكِتَٰبَ وَٱلۡحِكۡمَةَ وَإِن كَانُواْ مِن قَبۡلُ لَفِي ضَلَٰلٖ مُّبِينٖ ۝٢ ﴾ [الجمعة: ٢]

“அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான் அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்.” (ஸூரா அல்ஜுமுஆ : 02)

உதாரணமாக, தொழுகை ஆத்மாவை சுத்தப்படுத்தி, அமைதியை வழங்குகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். “பிலாலே! தொழுகைக்காக இகாமத் சொல்லுங்கள். அதைக் கொண்டு எமக்கு நிம்மதியை

ஏற்படுத்துங்கள்."[205] அதாவது, நபியவர்கள் தொழுகையையே நாடுகின்றார்கள். எழுந்துசென்று அதற்காக அதான் கூறுமாறு ஏவுகின்றார்கள்.

ஸகாத் சொத்துக்களைத் தூய்மைப்படுத்துகின்றது. ஆத்மாவை கஞ்சத்தனத்தை விட்டும் சுத்தப்படுத்துகின்றது. அதன் ஊடாக, அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்தப்படுகின்றது. நன்றி செலுத்துவதென்பது, உள்ளம் பரிசுத்தப்படுத்தப்படுவதற்கான ஒரு காரணமாகும். ஸகாத்தின் ஊடாக ஏழை, எளியவர்களின் தேவை நிறைவேற்றப்பட்டு, ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் மத்தியில் உள்ள பொறாமை நீங்கிவிடுகின்றது. எனவே, இது ஒட்டுமொத்த சமுதாயத்தையும் சுத்தப்படுத்துகின்றது.

நோன்பு, அமல்களை அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்தல் என்ற உணர்வைத் தருகின்றது. எனவே, உள்ளம் முகஸ்துதியை விட்டும் தூய்மைப்படுத்தப்படுகின்றது. அதிக உணவு மற்றும் பானத்தினால் ஏற்படும் கர்வத்தை விட்டும் உள்ளம் தூய்மைப்படுத்தப்படுகின்றது.

ஹஜ்ஜில் அனைத்து ஹாஜிகளும் இஹ்ராமுடைய ஆடையை அணிகின்றார்கள். எனவே அவர்களது உள்ளம் ஆடம்பர சிந்தனையை விட்டும் தூய்மைப்படுத்தப்படுகின்றது. எனவே, சமமான உணர்வுகளுடன் அவர்கள் நிற்கின்றார்கள். ஒருவருக்கொருவர் அறிமுகமாகி, நெருக்கமைடந்து கொள்கின்றார்கள். சமமான வணக்கவழிபாடுகள் ஊடாக அல்லாஹ்வை வணகங்குகின்றார்கள். எனவே அவர்களது உள்ளம் பரிசுத்தமடைகின்றது.

அல்லாஹ்வை நினைவுகூறுவதென்பது உள்ளத்தை பண்படுத்துவதற்கான மிகச் சிறந்த ஒரு வழியாகும். அல்குர்ஆனை ஓதுவது, காலை மற்றும் மாலை அத்கார்களை ஓதுவது, தொழுகைக்குப் பின்னால் உள்ள அத்கார்களை ஓதுவது என்பன, உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்திப், பண்படுத்துவதற்கான மிக முக்கியமான சில வழிமுறைகளாகும்.

இஸ்லாமியப் பண்பாட்டு ஒழுங்குகளான, பெற்றோருக்குப் பணிவிடை செய்தல், உறவுகள சேர்ந்து நடத்தல், குடும்பம் மற்றும் அண்டைவீட்டாருக்கு உபகாரம் புரிதல், பலவீனர்களுக்கு உதவுதல் போன்றவை மனத்தைப் பண்படுத்தித், தூய்மைப்படுத்தும் மிக முக்கிய ஒரு காரணியாகும்.

[205] mG+ jhT+j; : 4985

இவை, இஸ்லாமிய ஷரீஆவின் போதனைகள் உள்ளடக்கியுள்ள, உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் எனும் சிறப்பியல்புக்கான சில உதாரணங்களாகும்.

18. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அது உடல் சுத்தத்தை நோக்கி அழைப்பதாகும். எனவே, அது ஜும்ஆவுக்காகவும், தொடக்குக்காகவும் குளிக்குமாறு ஏவுவதோடு, வுழு செய்து சுத்தம் செய்யுமாறும், சிறுநீர் கழித்த பின்னர் நீராலோ, கற்களாலோ சுத்தம் செய்யுமாறும் ஏவுகின்றது. மேலும், மீசையைக் கத்தரித்தல், தாடியை வளர்த்தல், நகங்களைக் கத்தரித்தல், அக்குள் முடிகளை நீக்குதல், அபத்தின் முடிகளை நீக்குதல் போன்ற இயற்கை சார்ந்த ஸுன்னாக்களையும் ஏவியுள்ளது.[206]

19. இலகுபடுத்தியுள்ளமையும், சிரமங்களை நீக்கியுள்ளமையும். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

﴿ يُرِيدُ ٱللَّهُ بِكُمُ ٱلْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ ٱلْعُسْرَ ﴾ [البقرة: ١٨٥]

அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை (ஸூரா அல்பகரா : 185)

﴿ فَٱتَّقُوا۟ ٱللَّهَ مَا ٱسْتَطَعْتُمْ ﴾ [التغابن: ١٦]

*ஆகவே, உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள் (ஸூ*ரா அத்தகாபுன் : 16)

﴿ لَا يُكَلِّفُ ٱللَّهُ نَفْسًا إِلَّا وُسْعَهَا ﴾ [البقرة: ٢٨٦]

“அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவுக்கும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு கஷ்டத்தை கொடுப்பதில்லை” (ஸூரா அல்பகரா : 286)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “நான் ஏதாவதொன்றை உங்களுக்கு ஏவினால், நீங்கள் அவற்றை இயன்றளவு நடைமுறைப்படுத்துங்கள்.”[207]

20. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் தாராளத் தன்மையாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “மார்க்கங்களில்

[206] பார்க்க : புகாரி : 5889, முஸ்லிம் : 257
[207] புகாரி : 7288, முஸ்லிம் : 1337

அல்லாஹ்வுக்கு விருப்பமானது, தாராளத்தன்மை கொண்ட, இறைவன் பக்கம் முழுமையாக சார்ந்திருக்கும் மார்க்கமாகும்.” [208] கொடுக்கல், வாங்கலில் இஸ்லாம் தாராளத் தன்மையுடன் நடந்துகொள்ளுமாறு ஏவுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். “விற்கும் போதும், வாங்கும் போதும், கடனைக் கேட்டுப்பெறும் போதும் விட்டுக்கொடுப்புடனும் நடக்கும் மனிதனுக்கு அல்லாஹ் அருள் புரியட்டும்.” [209] கடனை கேட்டுப்பெறும் போது விட்டுக்கொடுப்புடன் நடப்பது என்பதன் அர்த்தமாவது, அவர் தனக்கு வரவேண்டிய கடன்களைக் கேட்டுச் செல்லும் போது கடன்பெற்றவர் ஏழையாகவோ, தேவையுள்ளவராகவோ இருந்தால் அவர்களோடு வன்மையாக நடந்துகொள்ளாமல், மிருதுவாக நடந்துகொள்வதோடு, கஷ்டத்தில் உள்ளவருக்கு மேலும் தவணை வழங்குவார். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَإِن كَانَ ذُو عُسۡرَةٖ فَنَظِرَةٌ إِلَىٰ مَيۡسَرَةٖۚ وَأَن تَصَدَّقُواْ خَيۡرٞ لَّكُمۡ إِن كُنتُمۡ تَعۡلَمُونَ ٢٨٠ ﴾ [البقرة: ٢٨٠]

“அன்றியும், கடன்பட்டவர் (அதனைத் தீர்க்க இயலாது) கஷ்டத்தில் இருப்பின் (அவருக்கு) வசதியான நிலை வரும்வரைக் காத்திருங்கள் இன்னும், (கடனைத் தீர்க்க இயலாதவருக்கு அதை) தர்மமாக விட்டுவிடுவீர்களானால் - (அதன் நன்மைகள் பற்றி) நீங்கள் அறிவீர்களானால் - (அதுவே) உங்களுக்குப் பெரும் நன்மையாகும்.” (ஸூரா அல்பகரா : 280)

இஸ்லாத்தின் தாராளத் தன்மையின் வெளிப்பாடுகளில் ஒன்று, அது தீமையை நன்மையால் தடுக்குமாறு ஏவியுள்ளமையாகும்.

﴿ ٱدۡفَعۡ بِٱلَّتِي هِيَ أَحۡسَنُ ﴾ [فصلت: ٣٤]

“நீங்கள் (தீமையை) நன்மையைக் கொண்டே தடுத்துக் கொள்வீராக!” (ஸூரா புஸ்ஸிலத் : 34)

அதேபோன்று, கோபத்தை அடக்கிக்கொள்ளுமாறும், அநீதமிழைத்தவனை மன்னிக்குமாறும் அது ஏவுகின்றது.

[208] அஹ்மத் (5-266)

[209] புகாரி : 2076

﴿ وَٱلۡكَٰظِمِينَ ٱلۡغَيۡظَ وَٱلۡعَافِينَ عَنِ ٱلنَّاسِۗ ﴾ [آل عمران: ١٣٤]

“கோபத்தை அடக்கி கொள்வார்கள் மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள்” (ஸூரா ஆலு இம்ரான் : 134)

மேலும், முஃமின்களுடன் பணிவாகவும், தாழ்மையாகவும் நடந்துகொள்ளுமாறு இஸ்லாம் ஏவியுள்ளமையும் அதன் தாராளத் தண்மையில் உள்ளதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَٱخۡفِضۡ جَنَاحَكَ لِمَنِ ٱتَّبَعَكَ مِنَ ٱلۡمُؤۡمِنِينَ ٢١٥ ﴾ [الشعراء: ٢١٥]

“மேலும், உம்மைப் பின்பற்றி நடக்கும் முஃமின்களிடத்தில் தோள்தாழ்த்தி(க் கனிவுடன்) நடந்துகொள்வீராக!” (ஸூரா அஷ்ஷு/அரா : 215)

முஃமின்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

﴿ أَذِلَّةٍ عَلَى ٱلۡمُؤۡمِنِينَ ﴾ [المائدة: ٥٤]

“அவர்கள் முஃமின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள்” (ஸூரா அல் மாஊதா : 54)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيْهِ وَسَلِّمُواْ تَسْلِيمًا ﴿٥٦﴾ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம். யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (21-25)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் இருபது சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

21. அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்புக்களில் ஒன்று, அது நல்ல முறையில் நடந்துகொள்ளுமாறு ஏவியுள்ளதாகும். அதாவது, இஸ்லாமிய சட்டங்கள் ஒவ்வொன்றிலும் அல்லாஹ் நல்லமுறையில் நடந்துகொள்வதைக் கடமையாக்கியுள்ளான். அறுத்தலிலும் அது ஏவப்பட்டுள்ளது. நபி (ஸல்) அவர்கள் அதிலும் நல்லமுறையில் நடந்துகொள்ளுமாறு ஏவியுள்ளார்கள். நபியவர்கள் கூறுகின்றார்கள் : “நிச்சயமாக அல்லாஹ் அனைத்து அம்சங்களிலும் நல்லமுறையில் நடந்துகொள்வதைக் கடமையாக்கியுள்ளான். எனவே, நீங்கள் கொன்றாலும், நல்ல முறையில் கொல்லுங்கள். நீங்கள் அறுத்தாலும் நல்ல முறையில் அறுங்கள். உங்களில் ஒருவர் தமது கத்தியைக் கூர்மையாக்கிக் கொள்ளட்டும்.

மேலும், அறுத்த பிராணியை ஆறப் போடட்டும்.”[210]

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : நல்லமுறையில் நடந்துகொள்வது எல்லா சந்தர்ப்பங்களிலும் கடமை என்பதற்கு இது ஆதாரமாகும். மனித, விலங்கு உயிர்களைக் கைப்பற்றும் போதும் இது கடமையாகும். எனவே, ஒரு மனிதன் மனிதர்களைக் கொல்வதாக இருந்தாலும், மிருகங்களை அறுப்பதாக இருந்தாலும் நல்ல முறையில் நடந்துகொள்ளவேண்டும்.[211]

210 முஸ்லிம் : 1955

211 பதாவா : 5-549

இஸ்லாமிய ஷரீஆவில் இவ்வாறாக நல்ல முறையில் நடந்துகொள்ளும் வடிவங்களில் ஒன்று, பிராணிகளுடன் மிருதுவாக நடந்துகொள்ளுமாறு ஏவப்பட்டுள்ளமையாகும். ஒரு பூனையைப் பிடித்துவைத்துக்கொண்டு, அதற்கு உணவளிக்காமலும், அதுவாகச் சென்று பூமியின் பூச்சுக்களை சாப்பிட விடாமலும் இருந்த ஒரு பெண் நரகம் நுழையவிருக்கின்றாள் என்று நபியவர்கள் அறிவித்துள்ளார்கள்.[212]

படைப்புக்களுக்கு நல்லுபகாரம் புரிவதில் மிக உயர்ந்த படித்தரத்தில் உள்ளது, பெற்றோருக்கு உபகாரம் புரிவதாகும். மார்க்கம் இதனை அல்குர்ஆனின் ஆறு இடங்களில் ஏவியுள்ளதுடன், அதற்கு மாற்றமாக நடப்பதைக் கண்டித்தும் உள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ ۞ وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعۡبُدُوٓاْ إِلَّآ إِيَّاهُ وَبِٱلۡوَٰلِدَيۡنِ إِحۡسَٰنًاۚ ﴾ [الإسراء: ٢٣]

"அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான்" (ஸூரா அல்இஸ்ரா : 23)

பொதுவாக அனைத்து மக்களுடனும் வார்த்தைகளால் நல்ல முறையில் நடந்துகொள்ளுமாறும் அல்லாஹ் ஏவியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَقُولُواْ لِلنَّاسِ حُسۡنًا وَأَقِيمُواْ ٱلصَّلَوٰةَ ﴾ [البقرة: ٨٣]

"அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான்" (ஸூரா அல்பகரா : 83)

அதற்கும் அப்பால், முஸ்லிம்களுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த ஒருவன், முஸ்லிம்களிடம் கைதியாகப் பிடிபட்டால் அவனுக்கு நல்லுபகாரம் புரியுமாறு கூட ஏவியுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَيُطۡعِمُونَ ٱلطَّعَامَ عَلَىٰ حُبِّهِۦ مِسۡكِينٗا وَيَتِيمٗا وَأَسِيرًا ٨ ﴾ [الإنسان: ٨]

[212] புகாரி : 745, முஸ்லிம் : 2242

“மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.” (ஸூரா அல் இன்ஸான் : 08)

22. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, பல்வேறுபட்ட நற்குணங்கள், ஒழுக்கங்கள் மற்றும் பண்பாடுகளை நோக்கி அழைப்பதாகும். எனவே, உணவு, பான, ஆடை ஒழுக்கங்கள், திருமண ஒழுக்கங்கள் பயணம் செய்தல் மற்றும் தங்கியிருத்தல் தொடர்பான ஒழுக்கங்கள், நல்லமுறையில் நடந்துகொள்வோர் மற்றும் தவறாக நடந்துகொள்வோர் ஆகியோருடன் பேணவேண்டிய ஒழுக்கங்கள், நெருக்கமானவர்கள், நெருக்கமற்றவர்கள், அண்டைவீட்டார், தூரமானோர், ஆட்சியாளர், மக்கள், பணியாட்கள், சிறப்புடையோர், மனைவி, பிள்ளைகள், ஆகியோருடன் பேணவேண்டிய ஒழுக்கங்கள், உயிருள்ளவர்களுடன் பேணவேண்டிய ஒழுக்கங்கள், மரணித்தவர்களுடன் தொடர்பான ஒழுக்கங்களான, குளிப்பாட்டுதல், மணம் பூசுதல், கபனிடல், அடக்கம் செய்தல், துஆக் கேட்டல் போன்றவை, எதிரியுடனும், நண்பனுடனும் பேணவேண்டிய ஒழுக்கங்கள், எமக்கெதிராக யுத்தம் செய்பவர்களுடன் யுத்தநிலையிலும், சமாதானத்திலும் பேணவேண்டிய ஒழுக்கங்கள் என பல்வேறு ஒழுக்கங்கள் பற்றிப் பேசுகின்றது. சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், நன்னடத்தைகள் எதுவாக இருப்பினும் இஸ்லாம் அதனை வலியிறுத்தி, அதற்காக கூலிகளை வைத்தே உள்ளது. எந்தத் துர்நடத்தையாக இருந்தாலும் அது தடுத்தே உள்ளது.

23. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று அது முழு உலகிற்கும் உரியதாக இருப்பதாகும். அது அனைத்து மக்களுக்கும் உரியதாகும். எல்லா மனிதர்களுக்கும் பொருந்தக் கூடியதாகும். அல்லாஹ் தனது நபியைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான்:

﴿ قُلۡ يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّي رَسُولُ ٱللَّهِ إِلَيۡكُمۡ جَمِيعًا ﴾ [الأعراف: ١٥٨]

“(நபியே!) நீர் கூறுவீராக: “மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்” (ஸூரா அல்அஃராப் : 158)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “ஒவ்வொரு நபியும் தமது சமுதாயத்திற்கு மாத்திரமே அனுப்பப்பட்டனர். நானோ, எல்லா மனிதர்களுக்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்.”[213]

24. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அது எல்லாக் காலத்திற்கும், இடத்திற்கும் பொருந்திப் போவதாகும். இஸ்லாமியப் போதனைகளில் எந்தவொரு போதனையும் மனிதகுல நாகரிக முன்னேற்றத்துடன் முரண்படமாட்டாது. இஸ்லாமிய நாகரிகம் எட்டு நூற்றாண்டுகள் உலகை ஆண்டுகொண்டிருந்தது. பின்னர், அது அதற்குப் பின்னர் வந்த நாகரிகங்களில் உருவாக்க விதையாகவும் இருந்துள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்.

﴿ أَلَا يَعْلَمُ مَنْ خَلَقَ وَهُوَ ٱللَّطِيفُ ٱلْخَبِيرُ ﴿١٤﴾ ﴾ [الملك: ١٤]

“(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன் யாவற்றையும் நன்கு தெரிந்தவன்” (ஸூரா அல்முல்க் : 14)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள்.

[213] புகாரி : 335, முஸ்லிம் : 521

25. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அதற்கு முன்னர் இருந்த மார்க்கங்களின் நல்ல அம்சங்களை அது உள்ளடக்கியிருப்பதோடு. அந்த மார்க்கத்தில் இருந்த மக்கள் செய்த பாவங்களுக்குத் தண்டனையாக அல்லாஹ் அவர்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளையும், தடைகளையும் எமக்கு நீக்கியுள்ளமையாகும். தனது நபியைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَيَضَعُ عَنْهُمْ إِصْرَهُمْ وَٱلْأَغْلَٰلَ ٱلَّتِي كَانَتْ عَلَيْهِمْ ﴾ [الأعراف: ١٥٧]

"அவர்களுடைய பளுவான சுமைகளையும், அவர்கள் மீது இருந்த விலங்குகளையும், (கடினமான கட்டளைகளையும்) இறக்கிவிடுவார்" (ஸூரா அல்அஃராப் : 157)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய மார்க்கத்தின் மேலும் சில சிறப்பம்சங்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيْهِ وَسَلِّمُواْ تَسْلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக!

அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள்,

அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (26-32)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர

வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் இருபத்தைந்து சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

26. அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்களில் ஒன்று, அது நன்மையையையும், சீர்த்திருத்தத்தையும் ஏவுவதோடு, தீமையையும், சீர்க்கேட்டையும் தடுப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَتَعَاوَنُواْ عَلَى ٱلۡبِرِّ وَٱلتَّقۡوَىٰۖ وَلَا تَعَاوَنُواْ عَلَى ٱلۡإِثۡمِ وَٱلۡعُدۡوَٰنِۚ ﴾ [المائدة: ٢]

"இன்னும் நன்மையிலும் பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள் பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்" (ஸூரா அல்மாஇதா : 02)

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் : “யாரும், யாருக்கும் தீங்கிழைப்பதோ, ஒரு தீங்கிற்காக இன்னொரு தீங்கைக் கொண்டு பலிவாங்குவதோ கூடாது.” [214]

மேலும் கூறினார்கள் : “உங்களில் யாராவது ஒரு பாவத்தைக் கண்டால், அதனைத் தனது கரத்தினால் மாற்றியமைக்கட்டும். அதற்கவர் சக்திபெறவில்லையானால், தனது நாவினால் மாற்றியமைக்கட்டும். அதற்கும் சக்திபெறாவிட்டால் உள்ளத்தால் வெறுத்து ஒதுக்கிக்கொள்ளட்டும். அதுவே ஈமானின் மிகப் பலவீனமான நிலையாகும்.”[215]

27. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்களில் ஒன்று, அது தன்னைப் பின்பற்றுபவர்களை, மார்க்க அறிவை அதிகம் தேடிக்கொள்ளுமாறு ஏவுவதாகும். ஏனெனில், ஆத்மாக்களை உயிர்வாழச் செய்வதும் அதுவே! ஈருலக சுபீட்சமும் அதிலேயே தங்கியுள்ளது. அதைக் கொண்டே இச்சமுதாயம், சிந்தனா அலைகள், மற்றும் மோசமான சிந்தனைகளை விட்டும் தன்னைக் காத்துக்கொள்கின்றது. அல்லாஹ் தனது நபியைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான்:

﴿ وَقُل رَّبِّ زِدْنِي عِلْمًا ۝١١٤ ﴾ [طه: ١١٤]

“இறைவா! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!” என்றும் நீர் பிரார்த்தனை செய்வீராக!” (ஸூரா தாஹா : 114)

மேலும், நபியவர்கள் கூறுகின்றார்கள் : “யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகின்றானோ, அவருக்கு அல்லாஹ் மார்க்கத்தில் விளக்கத்தைக் கொடுப்பான்.”[216]

28. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அது பூமியை வளப்படுத்துமாறும் ஏவியுள்ளமையாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

[214] அஹ்மத் : 2865

[215] முஸ்லிம் : 49

[216] புகாரி : 71, முஸ்லிம் : 1037

﴿ هُوَ ٱلَّذِي جَعَلَ لَكُمُ ٱلۡأَرۡضَ ذَلُولٗا فَٱمۡشُواْ فِي مَنَاكِبِهَا وَكُلُواْ مِن رِّزۡقِهِۦۖ وَإِلَيۡهِ ٱلنُّشُورُ ۝١٥ ﴾ [الملك: ١٥]

“அவனே உங்களுக்கு இப்பூமியை (நீங்கள் வாழ்வதற்கு) வசதியாக ஆக்கினான் ஆகவே, அதன் பல மருங்குகளிலும், நடந்து அவனுடைய உணவிலிருந்து புசியுங்கள் இன்னும் அவனிடமே (யாவரும்) உயிர்த்தெழவேண்டியிருக்கிறது.” (ஸூரா அல்முல்க் : 15)

மேலும் கூறுகின்றான்:

﴿ هُوَ أَنشَأَكُم مِّنَ ٱلۡأَرۡضِ وَٱسۡتَعۡمَرَكُمۡ فِيهَا ﴾ [هود: ٦١]

“அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கி, அதிலேயே உங்களை வசிக்கவும் வைத்தான்.” (ஸூரா ஹூத் : 61)

அதாவது, அவன் அதில் உங்களைப் படைத்து, உங்களை அதில் வழித்தோன்றல்களாக ஆக்கியுள்ளான். மேலும், உங்களுக்கு வெளிப்படையான, மறைமுகமான பல அருட்கொடைகளையும் வழங்கியுள்ளான். இந்தப் பூமியில் உங்களுக்கு வசதிகளையும் ஏற்படுத்தித் தந்துள்ளான். எனவே, நீங்கள் இங்கு கட்டிடங்கள் கட்டுகின்றீர்கள், மரம் நடுகின்றீர்கள், பயிர் செய்கின்றீர்கள், நீங்கள் நாடியதை நடுகின்றீர்கள், அவற்றின் பயன்களை அனுபவிக்கின்றீர்கள், நன்மைகளை பயன்படுத்துகின்றீர்கள்.

29. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அது முன்னர் இருந்த மார்க்கங்களை மாற்றியமைத்துள்ளமையாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ مُصَدِّقٗا لِّمَا بَيۡنَ يَدَيۡهِ مِنَ ٱلۡكِتَٰبِ وَمُهَيۡمِنًا عَلَيۡهِۖ ﴾ [المائدة: ٤٨]

“மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது.” (ஸூரா அல்மாஇதா : 48)

30. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, பெண்ணுரிமை, கண்ணியம் என்பவற்றில் அது கவனம் செலுத்தியிருப்பதோடு, அவளுடைய உணர்வுகளையும், எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டும் உள்ளதாகும். இஸ்லாம் ஒரு பெண்ணுக்கு உத்தரவாதப்படுத்தியுள்ள உரிமைகள் தொன்னூறுக்கும் அதிகமாக உள்ளன. இதனால், ஒரு முஸ்லிம் பெண்மணி, கண்ணியமானவளாகவும், மதிக்கத்தக்கவளாகவும் மாறுவதோடு, தனது கணவன், பிள்ளைகள் மற்றும் சமூகம் என அனைத்திற்கும் ஓர் அருட்கொடையாகவும் உள்ளாள். இதேநேரம், மேற்கிலும், கிழக்கிலும் யுவதியாகவோ, தாயாகவோ, வயோதிபராகவோ இருக்கும் எல்லாப் பெண்களும், கடுமையாக இழிவுபடுத்தப்படுகின்றார்கள். அவள் யுவதியாக இருக்கும் போது, இன்பம் தரும் ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றாள். வயோதிபத்தை அடைந்ததும், முதியோர் இல்லங்களில் விருந்தாளியாக நுழைகின்றாள். அவர்களுக்கு மத்தியில் மனநல மாத்திரைகள் மற்றும் போதைப் பொருள் பாவணை, கருக்கலைப்பு, தற்கொலை போன்றவற்றின் விகிதாசாரம் அதிகமாக இருப்பதென்பது கூறித் தான் அறியவேண்டிய ஒன்றல்ல.

31. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அதன் சட்டங்கள் இறை நுட்பங்கள் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளமையாகும். அவை வணக்கங்களோடு தொடர்புபட்டவையாகவோ, வியாபாரத்தோடு தொடர்புபட்டவையாகவோ, தண்டனையோடு தொடர்புபட்டவையாகவோ இருக்கலாம். அந்த நுட்பங்களை நாம் அறிந்தும் இருக்கலாம், அறியாமலும் இருக்கலாம். ஏனெனில், அவன் தனது செயற்களில் நுட்பமானவன். தனது வார்த்தைகளிலும் நுட்பமானவன், தனது சட்டங்களிலும் நுட்பமானவன், தனது ஏற்பாடுகளிலும் நுட்பமானவன்.

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும்

பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

32. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அறிந்துகொள்ளுங்கள்! இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அதன் முன்னறிவிப்புக்கள் உண்மையாக இருப்பதாகும். இஸ்லாம் அறிவித்துள்ள எந்த எதிர்கால விடயங்களாக இருந்தாலும், அது ஒன்றில் உண்மையில் நிகழ்ந்துவிட்டது. அல்லது பின்னர் நடக்கவிருக்கின்றது.

உதாரணமாக, நபி (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்திற்கு முன்னர் அவ்விடத்தை வந்தடைந்த போது, இணைவைப்பாளர்களின் சில முக்கியஸ்தர்கள் கொல்லப்படும் இடத்தை அடையாளப்படுத்தினார்கள். உமர் (ரலி) அவர்கள் கூறியதாக, அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் நேற்றைய தினம், “இவ்விடம் தான் நாளை இன்னார் கொல்லப்படும் இடம்” என பத்ரில் காபிர்கள் கொல்லப்படும் இடங்களைக் காட்டினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நபியவர்கள் அடையாளப்படுத்திய எந்த இடமுமே தவறவில்லை.[217]

புகாரியின் அறிவிப்பில் அனஸ் (ரலி) அவர்கள் கூறுவதாவது : நபிகள் (ஸல்) அவர்கள் முஃதா யுத்தத்திற்காக, ஸைத் பின் ஹாரிஸா அவர்களைத் தளபதியாக நியமித்து ஒரு படையை அனுப்பினார்கள். மேலும், ஸைத் அவர்கள் கொல்லப்பட்டால், ஜஃபர் தளபதியாக இருப்பார் என்றும், அவரும் கொல்லப்பட்டால், அப்துல்லாஹ் இப்னு ரவாஹா தளபதியாக இருப்பார் உபதேசம் செய்து அனுப்பினார்கள். நபித்தோழர்கள் மதீனாவில் நபியவர்களுடன் இருந்துகொண்டிருக்கும் போது. நபியவர்கள் மதீனாவில் இருந்துகொண்டே, ஸைத் (ரலி) அவர்களது மரணசெய்தியையும், பின்பு ஜஃபர் (ரலி) அவர்களது மரணசெய்தியையும், பின்பு இப்னு ரவாஹாவின் மரணசெய்தியையும் அறிவித்தார்கள்.[218]

[217] முஸ்லிம் : 2873

[218] புகாரி : 1246

அதேபோன்று, நஜ்ஜாஷீ ஹபஷாவில் மரணித்த அதே தினம் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்துகொண்டே அதை அறிவித்துவிட்டு, மறைவானவருக்குத் தொழப்படும் ஜனாஸாத் தொழுகையையும் தொழுதார்கள்.[219]

அல்லாஹ்வின் அடியார்கேள! இவை இஸ்லாமிய மார்க்கத்தின் மேலும் சில சிறப்பம்சங்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

[219] பார்க்க : புகாரி : 1245, முஸ்லிம் : 951

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (33-38)

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே

பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் கிட்டத்தட்ட முப்பது சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

33. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, யார் இஸ்லாத்தில் நுழைகின்றாரோ, அவர் - அறிவும் சீரிய சிந்தனையும் உடையவராக இருந்தால் - தனது மார்க்கத்தை வெறுத்து வெளியேறமாட்டார். இவ்வாறான ஒன்று இஸ்லாமிய வரலாற்றிலேயே அறியப்படவில்லை. ஏனெனில், ஏற்கனவே கூறியது போன்று, இஸ்லாத்தின் போதனைகள் பகுத்தறிவுக்கும், இயல்புணர்வுகளுக்கும் பொருந்திப் போவதோடு, உடல், ஆன்மாத்

தேவைகளையும் அது நிறைவேற்றிவைக்கின்றது. ஆதாரத்தை தெளிவாக வெளிக்காட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

34. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அது தனக்கு சவால்விட்டவர்களை வெற்றிகொண்டிருப்பதும், தன்னோடு மோத வந்தவர்களை இயலாமையில் வீழ்த்தியிருப்பதுமாகும். அல்குர்ஆனில் உள்ள ஒரு வசனத்தையாவது, அல்லது நபியவர்களின் ஒரு ஹதீஸையாவது பிழையென யாராலும் நிருபிக்கமுடியவில்லை. மேலும், அல்குர்ஆனின் ஒரேயொரு வசனத்தை ஒத்த இன்னொரு வசனத்தையாவது யாராலும் கொண்டுவரமுடியவில்லை. மேலும், நபியவர்களின் போதனைகளை ஒத்த, அல்லது அதற்கு சமீபமான போதனைகளை யாராலும் கொண்டுவரவும் முடியாது. உண்மையாளன் அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَلَوۡ كَانَ مِنۡ عِندِ غَيۡرِ ٱللَّهِ لَوَجَدُواْ فِيهِ ٱخۡتِلَٰفٗا كَثِيرٗا ۝٨٢ ﴾ [النساء: ٨٢]

“(இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.” (ஸூரா அந்நிஸா : 82)

35. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு மத்தியில் அது நீதம் செலுத்துவதாகும். எல்லா மனிதர்களும் ஆதம் மற்றும் ஹவ்வா ஆகிய ஒரே ஆண் மற்றும் பெண்ணிலிருந்து உருவானவர்கள் என்றும், எல்லா மனிதர்களையும் அளவிடுவதற்குப் பொறுத்தமான அளவுகோல் இறையச்சமே தவிர, தோல் நிறமோ, சமூக, பொருளாதார தரமோ அல்ல என்றும் இஸ்லாமியப் போதனைகள் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன. அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنَّا خَلَقۡنَٰكُم مِّن ذَكَرٖ وَأُنثَىٰ وَجَعَلۡنَٰكُمۡ شُعُوبٗا وَقَبَآئِلَ لِتَعَارَفُوٓاْۚ إِنَّ أَكۡرَمَكُمۡ عِندَ ٱللَّهِ أَتۡقَىٰكُمۡۚ إِنَّ ٱللَّهَ عَلِيمٌ خَبِيرٞ ۝١٣ ﴾ [الحجرات: ١٣]

“மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக

அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்." (ஸூரா அல்ஹுஜுராத் : 13)

36. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அதைப் பின்பற்றுவர்கள் உதவிசெய்யப்படுவார்கள் என்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّا لَنَنصُرُ رُسُلَنَا وَٱلَّذِينَ ءَامَنُوا۟ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا وَيَوْمَ يَقُومُ ٱلْأَشْهَـٰدُ ﴿٥١﴾ ﴾ [غافر: ٥١]

"நிச்சயமாக, நாம் நம்முடைய ரஸூல்(தூதர்)களுக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும், இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் நிலைபெறும் நாளிலும் உதவி செய்வோம்." (ஸூரா காபிர் : 51)

37. இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, அது மறுமை வரை தொடர்ந்து, நிலைத்திருப்பதாகும். நபிகள் (ஸல்) அவர்கள் கூறியதாக, முஆவியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "எனது சமுதாயத்தில் ஒரு தரப்பினர் அல்லாஹ்வின் கட்டளையில் உறுதியாக நிலைத்திருப்பார்கள். அவர்களுடன் முரண்படுபவர்களாலோ, துரோகமிழைப்பவர்களாலோ அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது. இறுதியில், அவர்கள் ஆதிக்கம் பெற்றவர்களாகவே இருக்கும் நிலையில் இறைக்கட்டளை (மறுமை) வந்துவிடும்."[220]

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

[220] புகாரி, முஸ்லிம்

இரண்டாம் குத்பா

38. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அறிந்துகொள்ளுங்கள்! இஸ்லாமிய ஷரீஆவின் தனித்துவங்களில் ஒன்று, இதனைப் பின்பற்றுபவர்கள் தாம், சிறந்த சமுதாயமாக இருப்பதாகும். அல்லாஹ் கூறுகின்றான:

﴿ كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ تَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَتَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَتُؤْمِنُونَ بِاللَّهِ ﴾ [آل عمران: ١١٠]

“மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள் இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள்” (ஸூரா ஆலு இம்ரான் : 110)

மேலும், மேற்படி வசனத்தின் விளக்கத்தில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் : “நீங்கள் எழுபதாவது சமுதாயமாக உள்ளீர்கள். அவையனைத்திலும் நீங்கள் தான் சிறந்தவர்கள் மேலும், அல்லாஹ்விடத்தில் மிகக் கண்ணியத்துக்கு உரியவர்கள்.”[221]

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய மார்க்கத்தின் மேலும் சில சிறப்பம்சங்களாகும். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித,

[221] திர்மிதி : 3001, இப்னு மாஜஹ் : 4288

ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக!

நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் (39-42)

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வைப் பயந்து, அவனை மகத்துவப்படுத்துங்கள், அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு மாறு செய்யாமலிருங்கள், மேலும் வணக்க வழிபாடுகளை செய்வதிலும் பாவங்கள் மற்றும் தவறுகளை விட்டுவிடுவதிலும் பொறுமையாக இருங்கள்.

அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ் இந்த மார்க்க சட்டங்களை, மக்களுக்கு ஈருலக நன்மைகளையும் ஈட்டித் தருதல் எனும் மாபெரும் நோக்கத்திலேயே விதித்துள்ளான். ஏனெனில் மனித பகுத்தறிவு குறையுள்ளது. நேர்வழி காட்டும் சட்டங்களை அதனால் தனித்து நின்று உருவாக்கிக் கொள்ள முடியாது. இது, தன் பண்புகளால் முழுமை பெற்றுள்ள, தனது சொற்களிலும் செற்களிலும், நிர்ணயத்திலும் நுட்பமான, தனது படைப்புக்களின் நலன்களை நன்கறிந்து அவர்களுடன் இரக்கம் கொண்டுள்ள அல்லாஹ்வின் தனித்துவங்களில் உள்ளதாகும். ஆனால் மனிதர்களோ குறைவான அறிவு உடையவர்கள்.

விசுவாசிகளே! சென்று குத்பாக்களில் இஸ்லாமிய ஷரீஆவின் தனி சிறப்பம்சங்களில் கிட்டத்தட்ட நாற்பது சிறப்பம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. இந்த குத்பாவில் அல்லாஹ்வின் உதவியுடன், இன்னும் சில சிறப்பம்சங்கள் பற்றிப் பார்ப்போம்.

39. அல்லாஹ்வின் அடியார்களே! இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அதற்கு முரணான அனைத்துக் கருத்துக்களுமே அசத்தியமாக இருப்பதாகும். அவற்றால் சத்தியத்திற்கு முன்னால் நிலைத்து நிற்கமுடியாது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَقُلۡ جَآءَ ٱلۡحَقُّ وَزَهَقَ ٱلۡبَٰطِلُۚ إِنَّ ٱلۡبَٰطِلَ كَانَ زَهُوقٗا ٨١ ﴾ [الإسراء: ٨١]

(நபியே!) இன்னும், "சத்தியம் வந்தது. அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும்" என்று கூறுவீராக. (ஸூரா அல்இஸ்ரா : 81)

மேலும் கூறுகின்றான்:

﴿ قُلۡ جَآءَ ٱلۡحَقُّ وَمَا يُبۡدِئُ ٱلۡبَٰطِلُ وَمَا يُعِيدُ ٤٩ ﴾ [سبأ: ٤٩]

கூறுவீராக "சத்தியம் வந்து விட்டது - அன்றியும் பொய் எதையும் புதிதாகச் செய்வதுமில்லை. இனிச்செய்யப் போவதுமில்லை" (ஸூரா ஸபஉ : 49)

அதாவது, அது தூர்ந்து போய்விடும், அதன் அதிகாரம் செல்லுபடியற்றதாகச் சென்றுவிடும். எனவே அது, எதையும் புதிதாகச் செய்வதுமில்லை. இனிச்செய்யப் போவதுமில்லை

40. இஸ்லாமிய ஷரீஆவின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்று, அது சவால்களுக்கு முன்னால் தாக்குப்பிடித்து, நிலையாகவும், உறுதியாகவும் நிற்பதாகும். காலங்காலமாக எதிரிகள் முயற்சித்தபோதும், பல்வேறு இடர்களுக்கு அது முகங்கொடுத்த போதும், தூர்ந்துபோகவோ, மாறவோ இல்லை. ஆனால் மனித சட்டங்கள் அவ்வாறல்ல. அவை தற்காலிகமாகவே நிலைத்திருக்கும். மேலும் தொடர்ந்து மாறிக்கொண்டும், வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டும் இருக்கும்.

வரலாற்றில் இஸ்லாமிய ஷரீஆ தாக்குப் பிடித்து நின்றமைக்கான ஆதாரங்களில் ஒன்று, கிறிஸ்தவமயமாக்கல் அலை போன்ற சிந்தனா அலைகளுக்கு முன்னால் அது உறுதியாக நின்றமையாகும். அது முழு உலகையும் கிறிஸ்தவமயப்படுத்தி, சிலுவை வணக்கத்திற்குக் கட்டுப்படவைக்கும் நோக்கத்தில் செயற்பட்டது. கிறிஸ்தவமயமாக்கலுக்கு ஆதரவளிக்கும் நாடுகளிடம் பிரமாண்டமான வசதிகள் இருந்தபோதிலும், அந்த நாடுகளில் கிறிஸ்தவம் போன்ற திரிபுபடுத்தப்பட்ட மார்க்கங்களில் நுழையும் விகிதாசாரத்தை விட இஸ்லாத்தில் நுழையும் விகிதாசாரமே கூடுதலாக உள்ளது

வரலாற்றில் இஸ்லாமிய ஷரீஆ தாக்குப் பிடித்து நின்றமைக்கான ஆதாரங்களில் ஒன்று, மார்க்கத்தை வாழ்க்கை விவகாரங்களை விட்டும் பிரித்து, அதனை

அல்லாஹ்வுக்கும் அடியாருக்கும் இடையிலான தொடர்பாக மாத்திரம் வைத்துக்கொள்ளும் நோக்கில் செயற்படும் மதசார்பின்மை அலைக்கு முன்னால் அது தாக்குப் பிடித்த நின்றமையாகும்.

வரலாற்றில் இஸ்லாமிய ஷரீஆ தாக்குப் பிடித்து நின்றமைக்கான ஆதாரங்களில் ஒன்று, தேசியவாத சிந்தனைகளுக்கு முன்னால் அது தாக்குப் பிடித்து நின்று, அவற்றைத் தூர்ந்துபோகச் செய்தமையாகும்.

வரலாற்றில் இஸ்லாமிய ஷரீஆ தாக்குப் பிடித்து நின்றமைக்கான ஆதாரங்களில் ஒன்று, அராஜக மற்றும் வன்முறை அலைகளுக்கு முன்னால் அது தாக்குப் பிடித்து நின்றமையாகும். அவ்வாறான அலைகளைத் தூண்டிவிட்டவர்கள், சில இஸ்லாமிய நாடுகளின் ஆட்சியாளர்களை பதவிகவிழ்த்து, தாம் ஆட்சியைப் பொறுப்பேற்று, நாட்டைப் பாதுகாப்பானதாகவும், செழிப்பானதாகவும் மாற்றவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த திசைதவறிய அலைகளின் விளைவாக, அவர்கள் தமது திட்டங்களை செயற்படுத்திய நாடுகள் மிக மோசமான நிலைக்குச் சென்றதை உலகமே கண்டது. அதன் விளைவாக, புனிதங்கள் பாழ்ப்படுத்தப்பட்டன, இரத்தங்கள் ஓட்டப்பட்டன, மானங்கள் கீறிக் கிழிக்கப்பட்டன, முஸ்லிம் நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலையைப் பார்த்து அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள், அவர்கள் அதனை “வசந்தம்” என்று அழைத்தார்கள்.

41. அதனை யார் எதிர்க்கின்றாரோ, அவர் இறுதியில் தோல்வியடைந்து, கைவிடப்பட்டுவிடுவார். அவர்கள் பெரும் பதவிகளில் இருப்பவர்களாகவோ, அந்தஸ்த்துக்களில் இருப்பவர்களாகவோ, அல்லது இனவாத மற்றும் சிந்தனாவாத அலைகளுக்கு உட்பட்டபவர்களாகவோ இருக்கலாம். சமவுடமைவாதம் எங்கே? தேசியவாதம் எங்கே? இவையனைத்தும் தூர்ந்தே போய்விட்டன. மறுபுறம், தான் சந்தித்த 14 நூற்றாண்டு கால சவால்களால் இஸ்லாம் அழிந்துபோனதா? சிலுவை யுத்தத்தின் தாக்கத்தினால் அது அழிந்ததா? ஐரோப்பிய காலணித்துவம் என அழைக்கப்பட்டும் காலகட்டத்தின் தாக்கத்தினால் அது அழிந்துபோனதா? ஈராக் மீது தாத்தாரியர்கள் தொடுத்த போரினால் அது அழிந்துபோனதா? அஹ்வாஸ் மற்றும் ஈராக் போன்ற பிரதேசங்களை சீஆக்கள் தாக்கிய போது அது அழிந்துபோனதா? மதச்சார்பின்மை சிந்தனைப் போர் ஊடாகஅ து அழிந்ததா? இல்லவே இல்லை. மாறாக, அது மேலும், மேலும் பலம் பெறவே செய்தது. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَقُلْ جَآءَ ٱلْحَقُّ وَزَهَقَ ٱلْبَٰطِلُ ۚ إِنَّ ٱلْبَٰطِلَ كَانَ زَهُوقًا ﴿٨١﴾ ﴾ [الإسراء: ٨١]

(நபியே!) இன்னும், "சத்தியம் வந்தது. அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியமானது அழிந்து போவதேயாகும்" என்று கூறுவீராக. (ஸூரா அல்இஸ்ரா : 81)

அல்லாஹ்வின் அடியார்களே! இவை இஸ்லாமிய ஷரீஆவின் தனிச் சிறப்பம்சங்கள் தொடர்பான பயனுள்ள சில வார்த்தைகளாகும். இவற்றை அறிந்து கொள்பவர் அல்லாஹ் விதித்துள்ள சட்டங்களில் அவனுக்குள்ள மகத்தான நுட்பங்களை அறிந்து கொள்வதோடு, மனிதன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களில் உள்ள பலவீனத்தையும் அறிந்துகொள்வார்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல்குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள், அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

42. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், ஸலவாத்தும் ஸலாமும் அவனது இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாவதாக. அல்லாஹ்வின் அடியார்களே! அவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அறிந்துகொள்ளுங்கள்! எந்த நாடுகளும், மக்களும் அதனை நடைமுறைப்படுத்துகின்றார்களோ, அவர்களுக்கு அல்லாஹ் ஈருலக சுபீட்சத்தையும் வாக்களித்துள்ளான். அப்போது அவர்கள் இவ்வுலகில் பாதுகாப்பாகவும், கண்ணியமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதோடு, மறுமையிலும் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நற்கூலி கிடைக்கும். எந்த நாடுகளும், மக்களும் அதனை நடைமுறைப்படுத்தாமல் புறக்கணிக்கின்றார்களோ, அவர்கள், பலம்மிக்க நாடுகளாக இருந்தாலும், துன்பத்திலும், சோதனைகளிலுமே வாழ்வார்கள். வலராறு அதற்க சிறந்த சாட்சியமாகும். முன்சென்றோர் இதைப் புரிந்து, நடைமுறைப்படுத்திய காரணித்தினாலேயே, இஸ்லாமிய நாகரிகம் எட்டு நூற்றாண்டுகள் நீடித்தது. அல்லாஹ்வின் பின்வரும் வசனம் அவர்களது விடயத்தில் உண்மையாகிவிட்டது :

﴿ وَعَدَ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ مِنكُمۡ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ لَيَسۡتَخۡلِفَنَّهُمۡ فِي ٱلۡأَرۡضِ كَمَا ٱسۡتَخۡلَفَ ٱلَّذِينَ مِن قَبۡلِهِمۡ وَلَيُمَكِّنَنَّ لَهُمۡ دِينَهُمُ ٱلَّذِي ٱرۡتَضَىٰ لَهُمۡ وَلَيُبَدِّلَنَّهُم مِّنۢ بَعۡدِ خَوۡفِهِمۡ أَمۡنٗاۚ يَعۡبُدُونَنِي لَا يُشۡرِكُونَ بِي شَيۡـٔٗاۚ وَمَن كَفَرَ بَعۡدَ ذَٰلِكَ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡفَٰسِقُونَ ۝٥٥ ﴾ [النور: ٥٥]

உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும், அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும், அல்லாஹ் வாக்களித்திருக்கிறான் "அவர்கள் என்னோடு (எதையும், எவரையும்) இணைவைக்காது, அவர்கள் என்னையே வணங்குவார்கள்" இதன் பின்னர் (உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரித்)கிறாரோ அவர்கள் பாவிகள்தாம் (ஸூரா அந்நூர் : 55)

அவர்கள் அல்லாஹ்வுடைய மார்க்கத்தைப் புறக்கணித்தபோது, அவர்களிடமிருந்து தலைமைத்துவத்தைப் பறித்தெடுத்தது மாத்திரமல்லாமல், அவர்கள் மீது அவர்களது எதிரிகளைச் சாட்டிவிட்டான். அதற்கு, (முஸ்லிம்களின்) தற்போதைய நிலை மிகச் சிறந்த ஆதாரமாகும்.

அல்லாஹ்வின் அடியார்களே! இந்த குத்பாவுடன், அல்லாஹ்வின் உதவியுடன் எம்மால் முடியுமான இஸ்லாத்தின் நாற்பத்தி இரண்டு சிறப்பம்சங்களைத் தொகுத்துள்ளோம். யார் இதை சரியாக கற்கின்றாரோ அவர் இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் ஞானத்தையும், இக்கால முனாபிக்குகளான, மதச் சார்பற்றவர்களின் வழிதவறுதலையும் அறிந்துகொள்வார். இவர்கள் இஸ்லாத்துக்கும் அதன் சட்டங்களுக்கும் குறை கூறுவதுடன், அது பின்தங்கிய பழைமையான மதம் என்றும் கூறுவர். இவ்வாறு வர்ணிக்கப்படுவதற்கு அவர்கள் தான் தகுதியானவர்கள். அல்லாஹ் எம்மை அவர்களது ஐயவாதங்களை விட்டும் பாதுகாப்பானாக!

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத்

துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!

அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!

யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

ஜும்ஆ நாளின் தனித்துவங்களும் சிறப்புக்களும்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ் தனது படைப்புக்கள் மீது கொண்டுள்ள இறைமையின் வெளிப்பாடுகளில் ஒன்று, தானே தனித்து நின்று தான் நாடிய மனிதர்களையும், இடங்களையும், காலங்களையும் தான் அறிந்துவைத்து நுட்பத்தின் அடிப்படையில் சிறப்பித்து வைத்துள்ளமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ ۗ ﴾ [القصص: ٦٨]

“உமது இறைவான் தான் நாடியதைப் படைத்துத் தெரிவுசெய்கின்றான்” (ஸூரா அல்கஸஸ் : 68)

அல்லாஹ் மனிதர்களில் நபிமார்களை சிறப்பித்துள்ளான். நபிமார்களில் மனவுறுதிகொண்ட தூதர்களைச் சிறப்பித்துள்ளான். அவர்கள் தாம், நூஹ், இப்ராஹீம், மூஸா, ஈஸா, முஹம்மத் (ஸல்) அவர்களாகும். அந்த ஜவரிலும், இப்ராஹீம், முஹம்மத் (ஸல்) ஆகிய இறைவனின் இரு தோழர்களையும் சிறப்பித்துள்ளான். அவ்விரு தோழர்களிலும் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளான். எனவே, அவர்கள் தாம், அனைத்து நபிமார்கள் மற்றும் தூதர்களில் சிறந்தவர்களாகும்.

இடங்களில் அல்லாஹ் மக்காவை சிறப்பித்து, அதனை தனது உலகில் சிறந்த இடமாக ஆக்கியுள்ளான். அதை அடுத்து மதீனா உள்ளது. அவ்விரு இடங்களில் உள்ள பள்ளிவாசலில் தொழுவதற்கான நன்மையைப் பன்மடங்காக்கியுள்ளான்.

அல்லாஹ் சிறப்பித்துள்ள காலங்களில் ஒன்று, ஜுமுஆத் தினமாகும். ஏனெனில், அதுவே நாட்களில் மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் அதற்கு மாத்திரம் பல சிறப்புக்களை வைத்து, பல்வேறு காரணிகள் ஊடாக, ஏனையவற்றை விட அதனை சிறப்பித்துள்ளான். பின்வருவன அவற்றுள் முக்கியமானவையாகும்:

1. அந்நாளில் சில முக்கிய நிகழ்வுகள் நிகழந்துள்ளன. நபிகள் (ஸல்) அவர்கள் கூறியதாக, அவ்ஸ் இப்னு அவ்ஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “வெள்ளிக்கிழமை உங்களது நாட்களில் மிகச் சிறந்த ஒரு நாளாகும். அந்நாளிலேயே ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அதில் தான் அவர்களது உயிர் கைப்பற்றப்பட்டது. அந்நாளிலேயே ஸூர் ஊதப்படும். உலகம் அழிக்கப்படுவதும் அந்நாளிலேயே!”[222]

நபிகள் (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “சூரியன் உதிக்கும் நாட்களில் மிகச் சிறந்தது, வெள்ளிக்கிழமையாகும். அந்நாளிலேயே ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டார்கள். அந்நாளில் தான் அவர்கள் சுவர்க்கத்திற்கும் அனுப்பப்பட்டார்கள். அதே நாளிலேயே அவர்கள் அதிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். மறுமை நாளும் அந்நாளிலேயே ஏற்படும்.”[223]

2. அது, மக்கள் ஒன்றுசேரும் தினமாகவும், படைப்பின் ஆரம்பம் மற்றும் மறுமை நாள் பற்றி அவர்களுக்கு நினைவூட்டும் தினமாகும் உள்ளது. அல்லாஹ் தஆலா, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தினத்தை வழங்கி, அதை வணக்கத்திற்காக ஒதுக்கிக் கொள்ளவும், படைப்பின் ஆரம்பம் மற்றும் மறுமை நாள் பற்றி நினைவுபடுத்திக் கொள்ளவும், அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வின் முன்னிலையில், மாபெரும் ஒன்றுகூடல் தினத்தில் தான் ஒன்றுசேருவதை நினைவுபடுத்திக் கொள்ளவும் வைத்திருந்தான். இந்த நோக்கத்திற்கு மிகப் பொருத்தமான தினமாக வெள்ளிக்கிழமை தினமே உள்ளது. அதன் சிறப்பு மற்றும் கண்ணியத்தைக் கருத்திற் கொண்டு, அதனை இந்த உம்மத்திற்கென்றே பிரத்தியேகமாக அல்லாஹ் வைத்து, அவனை

[222] அபூ தாவூத் (1043)
[223] முஸ்லிம் (854)

வணங்குவதற்காக இந்த நாளில் ஒன்றுகூடுவதையும், தாம் படைக்கப்பட்டதில் உள்ள நுட்பங்களையும், காரணங்களையும் நினைவுபடுத்திக் கொள்வதையும், பிரபஞ்சத்தின் அழிவையும், வானம், பூமிகள் சுருட்டப்படுவதையும், அவன் வாக்களித்துள்ள பிரகாரம், உண்மையாகவே, அல்லாஹ் ஆரம்பித்தது போன்று எல்லா விடயங்களும் மீண்டு செல்வதையும் நினைவூட்டிக் கொள்வதையும் மார்க்கமாக்கியுள்ளான். இதனாலேயே நபி (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளின் பஜ்ருத் தொழுகையில் ஸஜ்தா மற்றும் தஹ்ர் ஸூராக்களை ஓதியுள்ளார்கள். ஏனெனில், அவ்விரு ஸூராக்களும், பிரபஞ்சத்தின் ஆரம்பம் மற்றும் முடிவு, படைப்புக்கள் ஒன்றுதிரட்டப்படுதல், அவர்கள் கப்ருகளில் இருந்து எழுப்பப்பட்டு ஒன்றில் சுவர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ அனுப்பப்படல் ஆகிய அம்சங்களை உள்ளக்கியுள்ளன.[224]

3. அது ஒவ்வொரு கிழமையும் மீண்டும் மீண்டும் வரும் ஒரு தினமாக இருப்பது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நிச்சயமாக இது அல்லாஹ் முஸ்லிம்களுக்கு ஒரு பெருநாளாக வைத்துள்ள தினமாகும். எனவே, ஜும்ஆவுக்கு வருபவர் குளித்துக்கொள்ளட்டும். வாசனைத் திரவியங்கள் இருந்தால் அதைத் தொட்டுக்கொள்ளட்டும். பற்களை சுத்தப்படுத்துவதைக் கடைப்பிடித்துக்கொள்ளுங்கள்."[225]

4. இந்த தினத்தை, சிறந்த சமுதாயமாகிய, நபி முஹம்மத் (ஸல்) அவர்களது சமுதாயத்திற்காக பிரத்தியேகமாக வைத்து, ஏனைய உம்மத்திற்கு அவற்றை வழங்காமல் விட்டது. நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா மற்றும் ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "எமக்கு முன்னால் இருந்தவர்களுக்கு அல்லாஹ் ஜும்ஆத் தினத்தைக் கிடைக்காமல் செய்தான். எனவே, யூதர்களுக்கு சனிக்கிழமை தினமும், நஸாராக்களுக்கு ஞாயிற்றுக் கிழமை தினமும் காணப்பட்டது. அல்லாஹ் எம்மைக் கொண்டுவந்து, எமக்கு ஜும்ஆத் தினத்தைக் காட்டித் தந்தான்."[226]

5. அந்தத் தினத்தில் பஜ்ர் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுவது, ஒரு முஸ்லிம் தனது வாரம் முழுவதும் தொழும் தொழுகைகளில் சிறந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

[224] ஸாதுல் மஆத் பா 1, பக்கம் : 421,422
[225] இப்னு மாஜஹ் (1098)
[226] முஸ்லிம் : (856)

"அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்த தொழுகை, ஜமாஅத்தாகத் தொழப்படும் வெள்ளிக்கிழமை ஸுபஹுத் தொழுகையாகும்."[227]

இந்த சிறப்புக்கான காரணமாவது, பஜ்ர் தொழுகையே ஐவேளைத் தொழுகையில் சிறந்ததாகும். வெள்ளிக்கிழமை, நாட்களில் சிறந்ததாகும். மேலும் தனித்துத் தொழுழுவதை விட, ஜமாஅத்தாகத் தொழுவது சிறந்ததாகும். எனவே, இது பொதுவான சிறப்பைக் காட்டுகின்றது.

6. அன்றைய தினம் பஜ்ர் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஸூரா அஸ்ஸஜ்தாவையும், இரண்டாம் ரக்அத்தில் ஸூரா அல்இன்ஸானையும் ஓதுவது ஸுன்னாவாகும். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "நபி (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை ஸுபஹ் தொழுகையில். முதல் ரக்அத்தில் ஸூரா அஸ்ஸஜ்தாவையும், இரண்டாம் ரக்அத்தில் ஸூரா அல்இன்ஸானையும் ஓதுபவராக இருந்தார்கள்."[228]

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் : நபிகள் (ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை பஜ்ர் தொழுகையில் இவ்விரு ஸூராக்களையும் ஓதியமைக்கான காரணமாவது, இவ்விரு ஸூராக்களும் அந்நாளில் நடந்த, நடக்கப்போகின்ற அனைவற்றையும் உள்ளடக்கியுள்ளன. ஏனெனில் இவ்விரு ஸூராக்களும் ஆதம் (அலை) படைக்கப்பட்டமை, அடியார்கள் ஒன்றுதிரட்டப்படல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. அது வெள்ளிக்கிழமை தினத்திலேயே நிகழும். எனவே, இந்நாளில் இவ்விரு ஸூராக்களும் ஓதப்படுவது, இந்நாளில் நிகழ்ந்த, நிகழப்போகின்ற விடயங்களை நினைவுபடுத்துகின்றது.[229]

7. அந்நாளில் ஸூரா அல்கஹ்ப் ஓதப்படுவது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "யார் வெள்ளிக்கிழமை தினத்தில் ஸூரா அல்கஹ்பை ஓதுகின்றாரோ, அது அவருக்கு அடுத்த ஜும்ஆ வரை பிராகசம் தரக்கூடியதாக இருக்கும்."[230]

8. இந்நாளில் ஒரு நேரம் உள்ளது. அந்நேரத்தில் யாராவது அல்லாஹ்விடம் எதைக் கேட்டாலும் அல்லாஹ் கொடுக்கவே செய்வான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி (ஸல்)

---

[227] பைஹகீ, ஷு/அபுல் ஈமான் (2783)

[228] புகாரி (891), முஸ்லிம் (880)

[229] ஸாதுல் மஆத் பா 1, பக்கம் : 375

[230] ஹாகிம் பா : 2, பக்கம் : 368

அறிவிக்கின்றார்கள் : “ஜும்ஆத் தினத்தில் ஒரு நேரம் உள்ளது. சரியாக அந்த நேரத்தில் யாராவது அல்லாஹ்விடத்தில் ஒரு நல்லவிடயத்தைக் கேட்டால் அல்லாஹ் நிச்சயம் கொடுப்பான்.” பின்பு, “அது (வேகமாகக் கழிந்துவிடும்) ஒரு சிறிய நேரம்”[231] என்றும் கூறினார்கள்.

9. ஜும்ஆ நாளின் பகலிலோ, இரவிலோ யாராவது மரணித்தால் அவரை அல்லாஹ் கப்ருடைய வேதனையை விட்டும் பாதுகாப்பான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “எந்த முஸ்லிமாவது, ஜும்ஆ நாளின் பகலிலோ, இரவிலோ மரணித்தால் அவரை அல்லாஹ் நிச்சயம் கப்ருடைய வேதனையை விட்டும் பாதுகாப்பான்.”[232]

10. அந்நாளில் தான் ஜும்ஆத் தொழுகை உள்ளது. அது மிகச் சிறப்பும் முக்கியத்துவமும் கொண்ட ஒரு தொழுகையாகும். அல்லாஹ் அல்குர்ஆனில் விசேடமாக அதனை நோக்கி அழைப்பு விடுத்து, அதற்காக விரைந்துசெல்லுமாறு கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا نُودِيَ لِلصَّلَوٰةِ مِن يَوۡمِ ٱلۡجُمُعَةِ فَٱسۡعَوۡاْ إِلَىٰ ذِكۡرِ ٱللَّهِ وَذَرُواْ ٱلۡبَيۡعَۚ ذَٰلِكُمۡ خَيۡرٞ لَّكُمۡ إِن كُنتُمۡ تَعۡلَمُونَ ٩ ﴾ [الجمعة: ٩]

“ஈமான் கொண்டவர்களே! ஜுமுஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்.” (ஸூரா அல்ஜுமுஆ : 09)

11. அந்நாளில் செய்யப்படும் தர்மத்தின் நன்மை பன்மடங்காக்கப்படுதல். கஃப் (ரலி) அவர்கள் கூறியதாக, முஸன்னப் அப்துர்ரஸ்ஸாக் கிரந்தத்தில், “ஜுமுஆ நாளில் தர்மம் செய்வது, ஏனைய நாட்களில் தர்மம் செய்வதை விட சிறப்புக்குரியது” என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்னு அபீ ஷைபாவின் அறிவிப்பில், “வெள்ளிக்கிழமை தினத்தில் ஸதகாவின் நன்மை பன்மடங்காக்கப்படும்” என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[231] புகாரி (935), முஸ்லிம் (852)
[232] திர்மிதி (1080)

இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அந்நாளில் தர்மம் செய்வதற்கு ஏனைய நாட்களை விடச் சிறப்புள்ளது. இந்நாளில் தர்மம் செய்வதற்கும் ஏனைய நாட்களில் தர்மம் செய்வதற்கும் இடையில் உள்ள வித்தியாசம், ரமழானில் தர்மம் செய்வதற்கும் ஏனைய மாதங்களில் தர்மம் செய்வதற்கும் இடையில் உள்ள வித்தியாசம் போன்றதாகும். ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா அவர்கள், ஜும்ஆவுக்கு வெளியேறினால், தனது வீட்டில் இருக்கும் ரொட்டிகள் போன்றவற்றை எடுத்துக்கொண்டு போய், தான் செல்லும் பாதையில் இரகசியமாக தர்மம் செய்வார்கள். மேலும், "நபியவர்களுடன் உரையாட முன்னர் தர்மம் செய்யுமாறு அல்லாஹ் ஏவியுள்ளான் என்றால், அவனுடன் உரையாடுவதற்கு முன்னர் தர்மம் செய்வதென்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்." என்று அவர்கள் கூறுவதையும் நான் கேட்டுள்ளேன்.[233]

12. அந்நாளில் நபியவர்கள் மீது அதிகம் ஸலவாத்தும் ஸலாமும் கூறுவத ஸுன்னாவாகும். ஏனைய நாட்களுக்கு இல்லாத சிறப்பு இவ்விடயத்தில் இந்த நாளுக்கு உள்ளது. அதாவது, இந்த சமுதாயம் இவ்வுலகில் அடைந்துள்ள, ஈருலக நன்மைகள் அனைத்துமே அவர்கள் மூலமாகவே கிடைத்துள்ளது. எனவே, இந்த நாளின் இரவிலும், பகலிலும் அவர்கள் மீது அதிகம் ஸலவாத் கூறுவது அவர்களைப் புகழ்வதாகவும், நன்றிசெலுத்துவதாகவும்,அவர்களுக்கு நாம் நிறைவேற்றவேண்டிய கடமையின் ஒரு சிறிய அளவை நிறைவேற்றுவதாகவும் அமையும். அதேநேரம், அவர்கள் மீது ஸலவாத் கூறுவதன் ஆத்தமாகிய, அவரைப் புகழுமாறும், வானம் மற்றும் பூமியில் அவர்களது சிறப்பையும், அவர்கள் பற்றிய நினைவையும் உயர்த்துமாறும் அல்லாஹ்விடம் துஆக் கேட்டல் என்பதையும் நாம் மனக்கண் முன் வைத்துக்கொள்ளவேண்டும்.

இவை, ஜும்ஆ நாளுக்கு உள்ள சில சிறப்பம்சங்களாகும். இவற்றின் ஊடாக, இந்த நாள் அல்லாஹ்விடமும் அவனது படைப்புக்களிடமும் மகத்தான நாளாகவும், நாட்களிலேயே தலையாயதாகவும் மாறியுள்ளது.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும்

[233] ஸாதுல் மஆத் பா 1, பக்கம் : 407

பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக — மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ﴿٥٦﴾ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

ஜுமுஆ தொழுகைக்கு உள்ள பத்து சிறப்பம்சங்கள்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. 'அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்' நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ் தனது படைப்புக்கள் மீது கொண்டுள்ள இறைமையின் வெளிப்பாடுகளில் ஒன்று, தானே தனித்து நின்று தான் நாடிய மனிதர்களையும், இடங்களையும், காலங்களையும் தான் அறிந்துவைத்து நுட்பத்தின் அடிப்படையில் சிறப்பித்து வைத்துள்ளமையாகும். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ ﴾ [القصص: ٦٨]

"உமது இறைவான் தான் நாடியதைப் படைத்துத் தெரிவுசெய்கின்றான்" (ஸூரா அல்கஸஸ் : 68)

தொழுகைகளில் அல்லாஹ் ஜுமுஆத் தொழுகையை சிறப்பித்துள்ளான். அதற்கு சில தனித்துவங்களை வைத்து, அதற்கென சில ஸுன்னாக்களை வைத்துள்ளான். பின்வருவன அவற்றுள் மிக முக்கியமானவையாகும்:

1. இது இஸ்லாமியக் கடமைகளில் மிக முக்கியமானதாகவும், முஸ்லிம்கள் ஒன்றுகூடும் மிக மகத்தான ஒரு நிகழ்வாகவும் உள்ளமை.

2. ஜுமுஆவின் ஸுன்னாக்களில் ஒன்று அதற்காக குளிப்பதாகும். அது மிக முக்கியமான ஒரு ஸுன்னாவாகும். மேலும், நறுமணம் பூசிக்கொள்வது, பற்களை சுத்தம் செய்துகொள்வது, அழகான ஆடைகளை அணிவது என்பனவும் ஸுன்னாவாகும். நபியவர்கள் கூறியதாக, அபுத் தர்தா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "யார் ஜுமுஆத் தினத்தில் குளித்துவிட்டு, தனது ஆடைகளில் அழகானதை அணிந்துகொண்டு, மேலும், - தன்னிடம் இருக்கும் பட்சத்தில் - வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு, பின்னர் அமைதியாக ஜுமுஆவுக்கு நடந்துசென்று, யாரையும் தாண்டிச் செல்லாமலும், தொந்தரவு செய்யாமலும் இருந்து, பின்பு தனக்கு விதிக்கப்பட்டுள்ள அளவு தொழுதுவிட்டு, இமாம் திரும்பிச் செல்லும் வரை எதிர்பார்த்திருந்தால் இரண்டு ஜும்ஆக்களுக்கு இடையில் உள்ள அவரது பாவங்கள் மன்னிக்கப்படும்."[234]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, ஸல்மான் அல்பாரிஸீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "வெள்ளிக்கிழமை அன்று ஒருவர் குளிக்கிறார் தம்மால் இயன்றவரை தூய்மைப்படுத்திக்கொள்கிறார். தம்மிடமுள்ள எண்ணெயைத் தேய்த்துக் கொள்கிறார். அல்லது தமது வீட்டிலுள்ள நறுமணத்தைத் தடவிக்கொள்கிறார். பிறகு (பள்ளிவாசலுக்குப்) புறப்பட்டு வந்து (சேர்ந்து உட்கார்ந்திருக்கும்) இருவரைப் பிரிக்காமல் தமக்கு எழுதப்பட்டுள்ளதைத் தொழுகிறார் பிறகு இமாம் உரையாற்றத் தொடங்கியதும் அமைதியாக அதைச் செவியுறுகிறார் எனில், அந்த ஜுமுஆவுக்கும் அடுத்த ஜுமுஆவுக்கும் இடையில் ஏற்படும் பாவங்கள் அவருக்கு மன்னிக் கப்படாமல் இருப்பதில்லை."[235]

அபூ ஸஈத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் அறுதியிட்டுச் சொல்கிறேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "வெள்ளிக்கிழமை குளிப்பது பருவ மடைந்த ஒவ்வொருவர்மீதும் கடமை யாகும் மேலும் பல் துலக்குவதும், கிடைத்தால் நறுமணம் பூசுவதும் கடமை யாகும்" என்று கூறினார்கள்.[236]

3. இந்த நாளுக்கென்றே ஒரு ஆடையை வைத்துக்கொள்வது. ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜுமுஆத் தினத்தில்

---

234 ஆதாரம் : அஹ்மத்

235 புகாரி : 883

236 புகாரி : 880, முஸ்லிம் : 846

உரை நிகழ்த்திய போது, அவர்களிடம் நிமார் எனப்படும் ஆடையைக் கண்டார்கள். அது கிராமப் புறத்து அரபிகள் அணியும், புலித் தோல் வடிவத்தை ஒத்த ஒரு ஆடையாகும். அப்போது நபியவர்கள், “உங்களில் ஒருவருக்கு வசதி இருக்குமென்றால், தனது தொழிலுக்கு அணியும் இரு ஆடைகள் அல்லாமல், வேறு இரு ஆடைகளை (அதாவது வேட்டியும், மேலாடையும்) வைத்துக்கொண்டால் என்ன?” என்று கேட்டார்கள்.[237]

எனவே, மேற்கூறிய ஹதீஸ்கள் ஊடாக, ஜுமுஆ தொழுகைக்கு அழகான தோற்றத்தில் செல்வது வலியுறுத்தப்படுதைப் புரிந்துகொள்ளலாம்.

4. பள்ளிவாசலை நறுமணப்படுத்துவது. உமர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தினமும் நண்பகல் ஆகும் போது பள்ளிவாசலை நறுமணப்படுத்துமாறு ஏவுவார்கள்.[238]

5. ஜுமுஆவுக்காக நேரகாலத்துடன் செல்லல் மற்றும் நடந்தே செல்லல். இது வாகனத்தில் ஏறிச் செல்வதை விடச் சிறந்ததாகும். இவ்விரண்டின் நன்மைகளும் ஒன்றுபோல் இருக்கமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அவ்ஸ் இப்னு அவ்ஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யார் ஜுமுஆ நாளில் குளித்து, தன் தலையையும் நல்ல முறையில் கழுவி, நேரகாலத்துடன் பள்ளிவாசலுக்குச் சென்று, இமாமுக்கு சமீபமாக இருந்து, குத்பாவை முழுமையாகக் கேட்டு, செவிமடுத்தால் அவர் அவர் வைக்கும் ஒவ்வொரு எட்டுக்காகவும் அவருக்கு ஒரு வருடம் நோன்பு நோற்ற, நின்று வணங்கிய நன்மை எடுதப்படும்.”[239]

இங்கு வந்துள்ள “கஸ்ஸல” என்பதற்கு, மனைவியுடன் தாம்பத்தியத்தில் ஈடுபடல் என்று இமாம் அஹ்மத் விளக்கமளித்துள்ளார்கள். அதன் காரணம் தெளிவானது. ஏனெனில், தாம்பத்தியம் மனஅமைதியயைத் தருகின்றது. அவ்வமைதி தொழுபவரை ஆறுதலாகத் தொழவைக்கின்றது. (மொழிபெயர்க்கப்பட்டுள்ளது போன்று) தலையைக் கழுவுதல் என்றும் விளக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் தலைக்கு எண்ணை இடுபவர்களாக இருந்தார்கள். எனவே குளிக்க முன்னர் அதைக் கழுவுமாறு ஏவப்பட்டுள்ளது.

---

[237] அபூ தாவூத் : 1078, இப்னு மாஜஹ் : 1095

[238] அபூ யஃலா (190)

[239] திர்மிதி : 456

ஜுமுஆ நாளுக்கு நேரகாலத்துடன் வருவது பற்றி அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் பின்வரும் ஹதீஸ் பேசுகின்றது. :

“பெருந்துடக்கிற்காகக் குளிப்பதைப் போன்று வெள்ளிக்கிழமை அன்று குளித்துவிட்டுப் பள்ளிவாசலுக்கு (நேரத் தோடு) செல்பவர், ஓர் ஒட்டகத்தை ‘குர்பானி’ கொடுத்தவரைப் போன்றவர் ஆவார். இரண்டாவது நேரத்தில் செல்ப வர், ஒரு மாட்டை ‘குர்பானி’ கொடுத்த வரைப் போன்றவர் ஆவார். மூன்றாவது நேரத்தில் செல்பவர், கொம்புள்ள ஆட்டை ‘குர்பானி’ கொடுத்தவரைப் போன்றவர் ஆவார். நான்காவது நேரத்தில் செல்பவர், ஒரு கோழியைத் தர்மம் செய்தவரைப் போன்றவர் ஆவார். ஐந்தாவது நேரத்தில் செல்பவர், முட்டையைத் தர்மம் செய்தவரைப் போன்றவர் ஆவார். இமாம் (பள்ளிவாசலுக்குள்) வந்துவிட்டால் வானவர்களும் (உள்ளே) வந்து (இமாமின்) உரையைச் செவியுறுகிறார்கள்”[240]

இந்த ஹதீஸ் குத்பாவின் சிறப்பை உணர்த்துகின்றது. ஏனெனில், மலக்குமார்கள் அதனை செவிமடுப்பதற்காக உட்காருகின்றார்கள்.

6. யார் ஜுமுஆவுக்காக வருகின்றாரோ, அவர் இமாம் மிம்பரில் ஏறும் வரை தொழுவது தொழுவது ஸுன்னாவாகும். (இந்நாளில்) சூரியன் சாயும் நேரத்தில் தொழுவது வெறுக்கப்படமாட்டாது. அதற்கான ஆதாரமாக, முன்கூறப்பட்ட ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறிய, “அவருக்கு விதிக்கப்பட்டுள்ள அளவு தொழுதால்” என் வாசகம் உள்ளது. இதுவே இமாம் ஷாபிஈயின் கருத்தாகும். இப்னு தைமிய்யாவும் இதனையே தேர்ந்தெடுத்தார்கள்.

7. குத்பா உரையைக் காதுதாழ்த்திக் கேட்டல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “இமாம் உரைநிகழ்த்திக் கொண்டிருக்கும் போது உமது சகோதரனைப் பார்த்து நீ “வாய்மூடி இரு” என்று சொன்னாலும் நீ வீணாக்கிவிட்டாய்”[241]

8. அதை நிறைவேற்றுவது – பெரும்பாவங்கள் செய்யாத பட்சத்தில் - அதற்கும் அதற்கு முந்திய ஜுமுஆவுக்கும் இடையிலான பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும். நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “ஐங்காலத் தொழுகைகள், அடுத்தடுத்தடுத்த இரு

[240] புகாரி : 881, முஸ்லிம் : 1403

[241] புகாரி : 934, முஸ்லிம் : 851

ஜுமுஆக்கள் ஆகியன, - பெரும்பாவங்கள் செய்யப்படாத போது - அவற்றிற்கிடையில் உள்ள பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்."[242]

நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "யார் வுழூவை அழகான முறையில் செய்து, பின்பு ஜுமுஆவுக்காக வந்து, செவிசாய்த்துக் கேட்கின்றாரோ, அவருக்கு அந்த ஜுமுஆவுக்கும், அதற்கு முன்னைய ஜும்ஆவுக்கும் இடைப்பட்ட நாட்களின் மற்றும் மேலதிகமாக மூன்று நாட்களின் பாவங்கள் மன்னிக்கப்படும். யார் கற்களைத் தொட்டுக்கொண்டிருக்கின்றாரோ, அவர் வீணடித்துவிட்டார்."[243]

9. இரண்டு ரக்அத்களிலும், ஸூரா அல்ஜுமுஆவையும், முனாபிகூனையுமோ அல்லது அஃலாவையும், காஷியாவையுமோ ஓதுதல். நபியவர்கள் அவற்றை ஜுமுஆ தொழுகையில் ஓதுவார்கள்.[244] அல்ஜுமுஆ மற்றும் முனாபிகூன் ஸூராக்களை விசேடமாக ஜுமுஆத் தொழுகையில் ஓதுவதன் நுட்பத்தை இமாம் இப்னுல் கய்யிம் அவர்கள் இவ்வாறு விளக்குகின்றார்கள் : "அதாவது, அவை இந்தத் தொழுகையை நிறைவேற்றுமாறும், கட்டாயமாக அதற்கு விரைந்து செல்லுமாறும், அதை விட்டும் தடுக்கும் தொழில்களை விடுமாறும் ஈருலகிலும் வெற்றியடைவதற்காக அல்லாஹ்வை அதிகம் நினைவுகூறுமாறும், வலியுறுத்துவதை உள்ளடக்கியுள்ளது. ஏனெனில், இறைநினைவை மறப்பதிலேயே ஈருலக அழிவும் உள்ளது. இச்சமுதாயத்தை அழிவுதரும் நயசஞ்சகத்தனத்தை விட்டும் எச்சரிக்கும் நோக்கிலும், மேலும், அவர்களை தமது பிள்ளைகள் மற்றும் சொத்துக்கள் போன்றவை ஜுமுஆத் தொழுகை மற்றும் இறைநினைவை விட்டும் திசைதிருப்பாமல் எச்சரிப்பதற்காகவும் மேலும், அவர்கள் அவ்வாறு செய்தால் நிச்சயம் நட்டப்படுவார்கள் என்பதை உணர்த்தவும், அவர்களுக்கு சுபீட்சத்தைத் தரும் மிக முக்கிய ஒரு காரணியாகிய தர்மம் வழங்கலை ஊக்குவிக்கவும், மேலும் மரணம் அவர்களைத் தேடி வரும் போது அவர்கள் சற்று காலஅவகாசம் கேட்டு, மீண்டும் உலகுக்கு அனுப்புமாறு கேட்கும் நிலை ஏற்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்படாமல் போகும் நிலைவராமல் இருக்கும் நோக்கிலும் இரண்டாம் ரக்அத்தில் ஸூரா அல்முனாபிகூனை ஓதுவார்.

[242] முஸ்லிம் : 233

[243] முஸ்லிம் : 857

[244] முஸ்லிம் : 877

10. அஸ்ர் தொழுகையைத் தவிர, ஏனைய எந்த தொழுகைகளையும் விடுவதற்கு வந்துள்ள எச்சரிக்கைகளை விட, இதை விடுவதில் வந்துள்ளமை. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபுல் ஜஃத் அழ்ழம்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யார் நியாயமான காரணமின்றி, பராமுகமாக மூன்று ஜுமுஆக்களை விடுகின்றாரோ, அவரது உள்ளத்தில் அல்லாஹ் முத்திரையிட்டுவிடுவான்.”[245]

11. ஜுமுஆ நேரத்தில் (அமர்ந்திருக்கும்) மக்களைத் தாண்டிச் செல்வது, வீண்செயல்களில் ஈடுபவது போன்றவை கடுமையாகத் தடுக்கப்பட்டுள்ளமை. ஏனெனில், இவை மக்கள் குதுபாவுக்கு செவிசாய்ப்பதை விட்டும் கவனத்தைத் திசைதிருப்புகின்றன. மேலும், பேசிக்கொண்டிருப்பதால் குத்பாவுக்கு செவிசாய்க்காமல் உள்ளம் திசைதிருப்பப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யார் வீண்செயல்களில் ஈடுபடுகின்றாரோ, மேலும் மக்களைத் தாண்டிச் செல்கின்றாரோ, அவருக்கு அது ழுஹராக இருக்கும்”[246] அதாவது, ஜுமுஆவை நன்மையை அவர் இழந்துவிடுவார்.

எனவே, ஜுமுஆவுக்காக வருபவர்கள் உள்ளச்சம் கொண்டு, அதனை மகத்துவப்படுத்தவேண்டும். ஏனெனில் அது அல்லாஹ்வுடைய மிக முக்கிய அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும். எனவே, கற்களைத் தொட்டுக்கொண்டிருத்தல், நிலத்தில் கீறுதல், பற்களைச் சுத்தம் செய்தல் போன்ற செயற்களில் ஈடபடாமல் உறுப்புக்கள் அமைதியாக இருப்பதும், பேசிக்கொண்டிருக்காது நாவு அமைதியாக இருப்பது அதனை மகத்துவப்படுத்துவதில் உள்ளவையாகும். அவ்வாறில்லாவிடின், அவர் பாவியாவார். ஜுமுஆவின் நன்மையைத் தவறவிடுவதோடு, அவரது ஜுமுஆ ழுஹரைப் போன்று ஆகிவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : “இமாம் உரைநிகழ்த்திக் கொண்டிருக்கும் போது உமது சகோதரனைப் பார்த்து நீ “வாய்மூடி இரு” என்று சொன்னாலும் நீ வீணாக்கிவிட்டாய்”[247]

12. ஜுமுஆத் தொழுகைக்குப் பின்னர் நான்கு ரக்அத்கள் தொழுதல். நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

[245] அஹ்மத் : 15498

[246] அபூ தாவூத் : 347

[247] புகாரி : 934, முஸ்லிம் : 851

“யாராவது ஜுமுஆத் தொழுதால், அதற்குப் பின்னர் நான்கு ரக்அத்கள் தொழுதுகொள்ளட்டும்”[248]

13. இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : “ஜுமுஆத் தொழுகை, ஏனைய தொழுகைகளில் இல்லாத பல சிறப்புக்கள் கொண்டு சிறப்பிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒன்றுகூடல், குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கை இருத்தல், ஊரில் இருப்பவர்களாக இருத்தல் என்ற நிபந்தனை மற்றும் சப்தமிட்டு ஓதுதல் போன்றவை.”

அல்லாஹ்வின் அடியார்களே! இவை, ஜுமுஆத் தொழுகைக்கு, ஏனைய தொழுகைகளை விட விசேடமாக உள்ள சில சிறப்பியல்புகளாகும். இவற்றின் ஊடாக அது அல்லாஹ்விடம் மகத்துவம் மிக்க ஒன்றாக உள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த நாம் அல்லாஹ்விடம் உதவிதேடுவோம். அதன்மூலம் அவனிடம் நன்மையை எதிர்பார்ப்போம்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيْهِ وَسَلِّمُواْ تَسْلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

[248] முஸ்லிம் : 881

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

தொழுகையின் முக்கியத்துவம்

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அறிந்துகொள்ளுங்கள்! உங்களது மிகச் சிறந்த அமல்களில் ஒன்று தொழுகையாகும். அதன் முக்கியத்துவத்தை இஸ்லாமிய ஷரீஆ பத்து விதங்களில் உணர்த்தியுள்ளது.

1. கலிமாவுக்குப் பின்னர் கடமையாக்கப்பட்ட முதல் வணக்கமாக, தொழுகை உள்ளமை. எனவே, இஸ்லாத்தின் இரண்டாவது தூணாக அது உள்ளது. நபி (ஸல்) அவர்கள் கூறியதைத் தாம் கேட்டதாக, அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "இஸ்லாம் ஐந்து தூண்கள்மீது எழுப்பப்பட்டுள்ளது. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிவது, தொழுகையைக் கடைப்பிடிப்பது, (கடமையானோர்) ஸகாத் (கட்டாய தர்மம்) வழங்குவது, (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது, ரமளானில் நோன்பு நோற்பது"[249]

2. இது நபியவர்கள் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செல்வதற்கு முன்னர், நபித்துவம் கிடைத்து பத்தாவது வருடம் இஸ்ரா, மிஃராஜ் நிகழ்வில் கடமையாக்கப்பட்டமை. அதாவது, வேறு வணக்கங்கள் கடமையாக்கப்பட்டது போன்றல்லாது, நபியவர்கள் வானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, ஏழாவது வானில், எந்தவொரு மலக்கும் இடையில் இல்லாமல், நேரடியாக அல்லாஹ் அவர்களோடு பேசி, இந்த ஐவேளைத் தொழுகைகளைக் கடமையாக்கினான்.

3. வேறு எந்த வணக்கங்களுக்கும் இல்லாத சிறப்பு இதற்கு உள்ளமை. ஏனெனில், இது மார்க்கத்தின் நிலையான ஒரு தூணாகும். முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபியவர்கள் என்னிடம், "எல்லா விடயங்களினதும் தலையாய அம்சத்தையும், அவற்றின் பிரதான தூணையும், அவற்றின் உச்சத்தில் உள்ளதையும் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான், "ஆம்" என்றேன். அப்போது நபியவர்கள், "தலையாய அம்சம் இஸ்லாமாகும். அதன் தூண் தொழுகையாகும். அதன் உச்சத்தில் உள்ளது ஜிஹாதாகும்." என்று கூறினார்கள்.[250]

4. அடியானுக்கும் அவனது எஜமானுக்கும் இடையில் உரையாடல் நடைபெறும் ஒரு வழியாக அது உள்ளமை. அதாவது, இது அல்லாஹ்வை நாவினாலும், உள்ளத்தாலும், உடலாலும் நினைவுகூரும் வழிகளான, துஆக் கேட்டல், அல்லாஹ்வைப் புகழல், அல்குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், உறுப்புக்களால் பணிவைக் காட்டும், ருகூஉ, ஸுஜூது மற்றும் கண்ணியமிகு இறைவன் முன்னிலையில் தாழ்மையுடனும், பணிவுடன் உள்ளச்சத்துடனும் நிற்றல் போன்றவற்றையும்

[249] புகாரி : 8, முஸ்லிம் : 16
[250] திர்மிதி : 2616

அது உள்ளடக்கியுள்ளது. எனவே, ஏனைய வணக்கங்களில் இல்லாத, உடல்சார்ந்த பல்வேறு வணக்கங்கள் இந்தத் தொழுகையில் உள்ளன.

5. ஏனைய வணக்கங்களுக்கு இல்லாத பல்வேறு சிறப்பம்சங்கள் இதில் உள்ளமை. அவற்றுள் பின்வருவனவை மிக முக்கியமானவையாகும் :

- "அதான்" எனப்படும் அதற்கான அழைப்பு.
- அதற்காக சுத்தம் செய்துகெள்வது கட்டாயமாக உள்ளமை.
- அமைதியாகவும் கண்ணியமாகவும் அதற்காக நடந்துசெல்வது.
- ஏனைய வணக்கங்களில் இல்லாத, உடல்சார்ந்த பல்வேறு வணக்கங்கள் இதில் உள்ளமை.

6. பயணத்தில் இருத்தல், ஊரில் இருத்தல், அச்சநிலை, பாதுகாப்பு நிலை, புத்தி பேதலித்துச் செல்லும் அளவு நோய்வாய்ப்படும் நிலையைத் தவிர ஏனைய நோய்நிலை, ஆரோக்கிய நிலை என அனைத்து நிலைகளிலும் அதனை நிறைவேற்றுவது கட்டாயமாக உள்ளமை.

7. நபியவர்கள் மரணப்படுக்கையில் இருக்கும் போதும், தொழுகையில் கவனம் செலுத்துமாறு ஏவியுள்ளமை. உம்மு ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் தமது மரணபடுக்கையிலும், "தொழுகையையும், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவற்றையும் கவனித்துக்கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே இருந்தார்கள். அவர்களது நாவு முழுதும் அதையே பேசிக்கொண்டிருந்தது."[251]

8. ஒரு அடியான் மறுமையில் முதன் முதலில் அதைப் பற்றியே விசாரிக்கப்படுவான். நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "மறுமையில் மக்களிடம் அவர்களது அமல்களில் முதலாவது விசாரிக்கப்படுவது தொழுகையாகும். அல்லாஹ் - அறிந்துகொண்டே – கேட்பான் : "என்னுடைய அடியான் தொழுகையை பரிபூரணமாகவா அல்லது குறையுடனா நிறைவேற்றியுள்ளான் என்று பாருங்கள்" அவை பரிபூரணமாக இருந்தால், பரிபூரணமாகவே எழுதப்படும். அவற்றில் ஏதும் குறைகள் இருந்தால், "என்னுடைய அடியான் உபரியாக ஏதும் செய்துள்ளானா? எனப் பாருங்கள்" என்று அல்லாஹ் கேட்பான். அவ்வாறு உபரியாக செய்த ஏதும் இருந்தால், "என்னுடைய அடியானின் கடமைகளை,

[251] இப்னு மாஜஹ் : 1625

அவனது உபரியான வணக்கங்களில் இருந்து முழுமைப்படுத்துங்கள்” என்று கூறுவான். அவ்வாறு தான் அவனது அமல்கள் எடுக்கப்படும்.”[252]

9. உலகமுடிவுகாலத்தில், கடைசியாக இழக்கப்படும் ஒன்றாக அது இருக்கின்றமை. நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள். “இஸ்லாத்தின் முடிச்சுக்கள் ஒவ்வொன்றாக அவிழ்க்கப்படும். ஒவ்வொரு முடிச்சும் அவிழும் போது, மக்கள் அதற்கடுத்துள்ளதைப் பிடித்துக்கொள்வார்கள். அவற்றில் இறுதியானது தொழுகையே!”[253]

“முடிச்சுக்கள்” என்பது கடமைகளையும், மார்க்க சட்டங்களையும் குறிக்கின்றது. அதாவது, மக்கள் மார்க்கத்தைக் கடைப்பிடிக்காமல் விட ஆரம்பிப்பார்கள். மார்க்கம் மிகக் கடுமையாக அந்நியப்பட்டு, இறுதியாக மக்கள் தொழுகையைக் கூட விட்டுவிடுவார்கள். அவர்கள் கைவிடும் கடைசி விடயமாகத் தொழுகை இருக்கும். இது இறுதிக் காலத்தில் நிகழும் ஒன்றாகும்.

10. இஸ்லாத்திற்கும் நிராகரிப்புக்கும் மத்தியிலான ஒரு பிரிகோடாக தொழுகை உள்ளமை. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, புரைதா இப்னுல் ஹுஸைய்யிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “எமக்கும் அவர்களுக்கும் மத்தியில் உள்ள ஒப்பந்தம் தொழுகையாகும். எனவே, யார் அதை விடுகின்றாரோ, அவர் காபிராகிவிட்டார்.”[254]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “ஒரு மனிதனுக்கும் இணைவைப்பு மற்றும் நிராகரிப்புக்கும் மத்தியில் உள்ளது தொழுகையாகும்.”[255]

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யார் நாம் தொழுவதைப் போன்று தொழுது, நமது (தொழும் திசையான) கிப்லாவை முன்னோக்கி, நம்மால் (அல்லாஹ்வின் பெயர் கூறி) அறுக்கப் பட்டதைப் புசிக்கின்றாரோ அவர்தான் முஸ்லிம். அத்தகையவருக்கு அல்லாஹ் வின் பொறுப்பும் (காப்புறுதியும்) அவனு டைய தூதரின் பொறுப்பும் (காப்புறுதியும்) உண்டு.”[256]

[252] அபூ தாவூத் : 864
[253] அஹ்மத், இப்னு ஹிப்பான்
[254] திர்மிதி : 2621, நஸாஈ : 462, இப்னு மாஜஹ் : 1079
[255] முஸ்லிம் : 82
[256] புகாரி : 391

முஸ்லிம்களே! இவை, தொழுகையின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றும் பத்து அடையாளங்களாகும். அல்லாஹ் அனைவருக்கும் தான் ஏவியுள்ள பிரகாரம் அதை நிறைவேற்ற அருள் புரிவானாக!

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும்.

முஸ்லிம்களே! தொழுகை என்பது, அடியானுக்கும் அவனது எஜமானுக்கும் இடையில் உரையாடல் நடைபெறும் ஒரு வழியாக உள்ளது. அதாவது, இது அல்லாஹ்வை நாவினாலும், உள்ளத்தாலும், உடலாலும் நினைவுகூரும் நினைவுகூரும் வழிகளான, துஆக் கேட்டல், அல்லாஹ்வைப் புகழல், அல்குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், உறுப்புக்களால் பணிவைக் காட்டும், ருகூஉ, ஸுஜூது மற்றும் கண்ணியமிகு இறைவன் முன்னிலையில் தாழ்மையுடனும், பணிவுடன் உள்ளச்சத்துடனும் நிற்றல் போன்றவற்றையும் அது உள்ளடக்கியுள்ளது.

﴿ إِنَّ ٱلصَّلَوٰةَ تَنْهَىٰ عَنِ ٱلْفَحْشَآءِ وَٱلْمُنكَرِ ۗ وَلَذِكْرُ ٱللَّهِ أَكْبَرُ ۗ ﴾ [العنكبوت: ٤٥]

“இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை (மனிதரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும்” (ஸூரா அல்அன்கபூத் : 45)

என்ற வசனத்தை விளக்கும் போது, அப்துர் ரஹ்மான் ஸிஃதி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

பின்பு, தொழுகையில் இதை விட மிகப் பெரிய, முக்கியமான ஒரு நோக்கம் உள்ளது. அதாவது, அது உள்ளடக்கியுள்ள நாவினாலும், உள்ளத்தினாலும்,

உடலாலும் அல்லாஹ்வை நினைவுகூர்தலே அதுவாகும். ஏனெனில், அல்லாஹ் தன்னுடைய அடியார்களைத் தன்னை வணங்கவே படைத்தான். அவர்களால் செய்யப்படும் மிகச் சிறந்த வணக்கம் தொழுகையாகும். ஏனைய வணக்கங்களில் இல்லாத அளவு, உறுப்புக்கள் சார்ந்த வணக்கங்கள் இதில் உள்ளன. இதனால் தான் அல்லாஹ் "நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும்" என்று கூறுகின்றான்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான,

நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

தொழுகைக்காக விரைந்து செல்வதன் சிறப்பு

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அறிந்துகொள்ளுங்கள்! உங்களது வணக்கங்களில் மிகச் சிறந்த ஒன்று தொழுகையாகும். ஏனைய வணக்கங்களை விட அதற்கு அல்லாஹ் பல்வேறு சிறப்புக்களை வைத்துள்ளான். உதாரணமாக, அதை அல்லாஹ் வானத்தில் கடமையாகக்கியமை, அது ஐவேளைத் தொழுகையாக இருந்தாலும், ஐம்பது வேளைத் தொழுகையாக இறைவனிடம் பதிவுசெய்யப்படுகின்றமை, அது பாவங்களை மன்னிக்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றமை. அதற்காக

பள்ளிவாசல்களை நோக்கி நடப்பதும் ஒரு வணக்கமாக இருக்கின்றமை. அதிலிருந்து திரும்பிச் செல்வதும் வணக்கமாக இருக்கின்றமை. அதேபோன்று, அதற்காக சுத்தம் எடுத்துக்கொள்வதும் அதன் முக்கிய தனித்துவங்களில் ஒன்றாகும்.

- விசுவாசிகளே! தொழுகை இவ்வாறான ஒரு அந்தஸ்த்தில் உள்ள காரணத்தினால், அதற்கு நேரகாலத்துடன் செல்லுமாறு அல்லாஹ் ஏவியுள்ளான். அதற்காக நிரப்பமான கூலிகளையும் வைத்துள்ளான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “ஆண்களின் வரிசைகளில் மிகச் சிறந்தது முதல் வரிசையாகும். மிகக் கெட்டது இறுதி வரிசையாகும்.”[257]
- மேலும், நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்களே அறிவிக்கின்றார்கள் : “முன்வரிசையில் உள்ள சிறப்புக்களை அவர்கள் அறிவார்கள் என்றால், சீட்டுக்குலுக்கியே அதைப் பெறவேண்டியிருக்கும்.”[258]
- மேலும், நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்களே அறிவிக்கின்றார்கள் : “பாங்குசொல்வதிலும், முதல் ஸப்பிலும் இருக்கும் சிறப்பை அவர்கள் அறிந்து, பின்னர் சீட்டுக்குலுக்கித் தான் அதனை அடைந்துகொள்ளமுடியும் என்ற நிலைவந்தால், சீட்டுக்குலுக்கவும் செய்வார்கள். நேரகாலத்துடன் பள்ளிக்குச் செல்வதன் சிறப்பை அறிவார்கள் என்றால், அதற்காகப் போட்டிபோட்டுக்கொள்வார்கள். இஷா மற்றும் ஸுபஹுத் தொழுகையில் உள்ள சிறப்பை அறிவார்கள் என்றால், தவன்றாவது அவற்றிற்கு வருவார்கள்.”[259]
- நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறுவார்கள் என பரா இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “நிச்சயமாக, அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் முதல் வரிசைகளுக்காக ஸலவாத் கூறுகின்றனர்.”[260]
  “முதல் வரிசைகளுக்காக ஸலவாத் கூறுகின்றனர்” என்பதன் அர்த்தமாவது : மலக்குகள் முதல் வரிசையில் தொழுபவர்களுக்காக அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றார்கள். மேலும், அவர்களுக்காக பிழைபொருக்கத் தேடுகின்றார்கள். ஏனெனில், துஆ என்பதன் ஸலவாத் என்பதன் அர்த்தங்களில் ஒன்றாகும்.

[257] முஸ்லிம் : 440
[258] முஸ்லிம் : 439
[259] புகாரி : 615, முஸ்லிம் : 437
[260] அபூ தாவூத் : 664

- இர்பாழ் இப்னு ஸாரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் முன்வரிசையில் தொழுபவர்களுக்காக இரண்டு அல்லது மூன்று தடவைகள் பாவமன்னிப்புக் கேட்பவர்களாக இருந்தார்கள்.[261]
- நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "முதல் வரியை விட்டும் தொடர்ச்சியாக பின்வாங்கிக் கொண்டே இருப்பவர்களை அல்லாஹ் பிற்படுத்தியே விடுவான்."**[262]**
  அதாவது, மகத்தான சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்த்துக்களை விட்டும் அவர்களை அல்லாஹ் பிற்படுத்துவான்.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். அறிந்துகொள்ளுங்கள்! இஸ்லாத்தில் தொழுகைக்கு, வேறு எந்த வணக்கங்களும் ஈடாகாத அளவு ஒரு மதிப்பு உள்ளது. அது இஸ்லாத்தின் இன்றியமையாத தூணாகும். முஆத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபியவர்கள் என்னிடம், "எல்லா விடயங்களினதும் தலையாய அம்சத்தையும், அவற்றின் பிரதான தூணையும், அவற்றின் உச்சத்தில் உள்ளதையும் உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நான், "ஆம்" என்றேன். அப்போது நபியவர்கள், "தலையாய அம்சம் இஸ்லாமாகும். அதன் தூண் தொழுகையாகும். அதன் உச்சத்தில் உள்ளது ஜிஹாதாகும்." என்று கூறினார்கள்.[263]

- அல்லாஹ்வின் அடியார்களே!தொழுகை என்பது, அடியானுக்கும் அவனது எஜமானுக்கும் இடையில் உரையாடல் நடைபெறும் ஒரு வழியாக உள்ளது. அதாவது, இது அல்லாஹ்வை நாவினாலும், உள்ளத்தாலும், உடலாலும்

[261] நஸாஈ : 816, இப்னு மாஜஹ் : 996
[262] அபூ தாவூத் : 679
[263] திர்மிதி : 2616

நினைவுகூரும் நினைவுகூரும் வழிகளான, துஆக் கேட்டல், அல்லாஹ்வைப் புகழல், அல்குர்ஆன் ஓதுதல், தஸ்பீஹ், தஹ்மீத், தக்பீர் போன்றவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், உறுப்புக்களால் பணிவைக் காட்டும், ருகூஉ, ஸுஜூது மற்றும் கண்ணியமிகு இறைவன் முன்னிலையில் தாழ்மையுடனும், பணிவுடன் உள்ளச்சத்துடனும் நிற்றல் போன்றவற்றையும் அது உள்ளடக்கியுள்ளது.

﴿ إِنَّ ٱلصَّلَوٰةَ تَنْهَىٰ عَنِ ٱلْفَحْشَآءِ وَٱلْمُنكَرِ ۗ وَلَذِكْرُ ٱللَّهِ أَكْبَرُ ۗ ﴾ [العنكبوت: ٤٥]

"இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை (மனிதரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும்" (ஸூரா அல்அன்கபூத் : 45)

என்ற வசனத்தை விளக்கும் போது, அப்துர் ரஹ்மான் ஸிஃதி (ரஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

பின்பு, தொழுகையில் இதை விட மிகப் பெரிய, முக்கியமான ஒரு நோக்கம் உள்ளது. அதாவது, அது உள்ளடக்கியுள்ள நாவினாலும், உள்ளத்தினாலும், உடலாலும் அல்லாஹ்வை நினைவுகூர்தலே அதுவாகும். ஏனெனில், அல்லாஹ் தன்னுடைய அடியார்களைத் தன்னை வணங்கவே படைத்தான். அவர்களால் செய்யப்படும் மிகச் சிறந்த வணக்கம் தொழுகையாகும். ஏனைய வணக்கங்களில் இல்லாத அளவு, உறுப்புக்கள் சார்ந்த வணக்கங்கள் இதில் உள்ளன. இதனால் தான் அல்லாஹ் "நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும்" என்று கூறுகின்றான்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّ ۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ صَلُّوا۟ عَلَيْهِ وَسَلِّمُوا۟ تَسْلِيمًا ﴿٥٦﴾ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவா்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவா்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவா்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

ஜமாஅத் தொழுகைக்காக விரைவது கட்டாயம் மற்றும் அதனைப் புறக்கணித்து வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுவது ஹராம் என்பவற்றை உணர்த்தும் பத்து ஆதாரங்கள்

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அறிந்துகொள்ளுங்கள்! உங்களது வணக்கங்களில் மிகச் சிறந்த ஒன்று தொழுகையாகும். அல்லாஹ் தஆலா அதனை பள்ளிவாசலில் ஜமாஅத்தாக நிறைவேற்றுமாறு ஏவியுள்ளமையுடன், மார்க்கத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு

காரணத்திற்கே தவிர அதற்கு வராமல் இருக்கமுடியாது எனவும் வலியுறுத்தியுள்ளது. தொழுகையைப் பள்ளிவாசலில் நிறைவேற்றுமாறு ஏவிப் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன.

1. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : 'ஒருவர் தம் வீட்டில் அல்லது கடை வீதியில் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தி ஐந்து மடங்கு சிறந்ததாக இருக்கிறது. அதாவது, ஒருவர் உளூச் செய்து, அதை அழகாகவும் செய்து, பின்னர் தொழ வேண்டுமென்ற எண்ணத்திலேயே பள்ளிவாசலுக்குப் புறப்பட்டால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் அல்லாஹ் ஓர் அந்தஸ்தை உயர்த்துகிறான். ஒரு பாவத்தை அழிக்கிறான். அவர் தொழுமிடத்தில் அவருக்காக வானவர்கள் பிரார்த்திக்கின்றனர். தங்கள் பிரார்த்தனையில் 'இறைவா! நீ இந்த மனிதனின் மீது அருள் புரிவாயாக! உன்னுடைய கருணையை அவருக்குச் சொரிவாயாக!' என்றும் கூறுவார்கள். உங்களில் ஒருவர் தொழுகையை எதிர்பார்த்திருக்கும் போதெல்லாம் அவர் தொழுகையிலேயே இருக்கிறார்.'[264]

2. அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "யார் நாளை (மறுமை நாளில்) முஸ்லிமாக அல்லாஹ்வைச் சந்திக்க விரும்புகிறாரோ அவர் தொழுகை அறிவிப்புச் செய்யப்படும் இடங்களில் (பள்ளிவாசல்களில்) இந்தத் தொழுகைகளைப் பேணி(த் தொழுது)வரட்டும். ஏனெனில்,அல்லாஹ் உங்கள் நபி (ஸல்) அவர்களுக்கு நேரிய வழிகளைக் காட்டியுள்ளான். (கூட்டுத்) தொழுகைகள் நேரிய வழிகளில் உள்ளவையாகும். கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் தமது வீட்டிலேயே தொழுதுகொள்ளும் இன்ன மனிதரைப் போன்று நீங்களும் உங்கள் வீடுகளிலேயே தொழுதுவருவீர்களானால் நீங்கள் உங்கள் நபியின் வழிமுறைகளைக் கைவிட்டவர் ஆவீர்கள். உங்கள் நபியின் வழிமுறையை நீங்கள் கைவிட்டால் நிச்சயம் நீங்கள் வழிதவறிவிடுவீர்கள்.

யார் "அங்கத் தூய்மை" (உளூ) செய்து அதைச் செம்மையாகவும் செய்து பின்னர் இப்பள்ளிவாசல்களில் ஒன்றை நோக்கி வருகிறாரோ அவர் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடிக்கும் அவருக்கு அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான்அவருக்கு ஒரு தகுதியை உயர்த்துகிறான் அவருடைய பாவங்களில் ஒன்றை மன்னித்துவிடுகிறான். நான் பார்த்தவரை எங்களிடையே

[264] புகாரி : 647, முஸ்லிம் : 649

நயவஞ்சகம் அறியப்பட்ட நயவஞ்சகரைத் தவிர வேறெவரும் கூட்டுத் தொழுகையில் கலந்துகொள்ளாமல் இருந்ததில்லை. (எங்களில் நோயாளியான) ஒரு மனிதர் இரு மனிதருக்கிடையே தொங்கியவாறு அழைத்துவரப்பட்டு (கூட்டுத்) தொழுகையில் நிறுத்தப்பட்டதுண்டு.[265]

3. அல்லாஹ்வின் அடியார்களே! பள்ளிவாசல்களில் தொழுகையைப் பேணி நிறைவேற்றுபவர்களுக்கு அல்லாஹ் வழங்கும் சிறப்புக்களில் ஒன்று, அவ்வாறான மனிதனுக்கு, சூரியன் படைப்புக்களுக்கு மிகச் சமீபமாக இருக்கும் நாளாகிய மறுமை நாளில் தனது நிழலை வழங்குவதாகும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : அல்லாஹ் தன்னுடைய (அரியணையின்) நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத மறுமை நாளில் தன்னுடைய நிழலில் ஏழு பேருக்கு நிழல் அளிப்பான்: நீதிமிக்க ஆட்சியாளர். இறை வணக்கத்திலேயே வளர்ந்த இளைஞன். தனிமையில் அல்லாஹ்வை நினைத்து (அவனுடைய அச்சத்தில்) கண்ணீர் சிந்திய மனிதன். பள்ளிவாசலுடன் (எப்போதும்) தொடர்பு வைத்துக்கொள்ளும் இதயமுடையவர்... (ஹதீஸை முழுமையாகப் படிக்கவும்)

முஸ்லிமின் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது : பள்ளிவாசலில் இருந்து வெளியேறினால், மீண்டும் திரும்பி வரும் வரை, பள்ளிவாசலுடன் (எப்போதும்) தொடர்பு வைத்துக்கொள்ளும் இதயமுடையவர்.[266]

4. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : "பள்ளிவாசலுக்கு ஒருவர் காலையிலோ மாலையிலோ சென்றால், அவர் காலையிலும் மாலையிலும் செல்லும் போதெல்லாம் சுவர்க்கத்தில் அவருக்கு உரிய இடத்தை அல்லாஹ் தயார் செய்கிறான்."[267]

5. பள்ளிவாசல்களில் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவது கடமை என்பதை அறிவிக்கும் ஆதாரங்களில் ஒன்று, மிகச் சிரமமான சந்தர்ப்பமாகிய, யுத்தத்துடைய நேரத்திலும் அல்லாஹ் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுமாறு ஏவியுள்ளமையாகும். இந்தத் தொழுகை போர்க்காலத் தொழுகை (பயத்தின் போது தொழும் தொழுகை) என அறியப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

[265] முஸ்லிம் : 654
[266] புகாரி : 6806, முஸ்லிம் : 1031
[267] புகாரி : 662, முஸ்லிம் : 669

﴿ وَإِذَا كُنتَ فِيهِمْ فَأَقَمْتَ لَهُمُ ٱلصَّلَوٰةَ فَلْتَقُمْ طَآئِفَةٌ مِّنْهُم مَّعَكَ ﴾ [النساء: ١٠٢]

“(நபியே! போர் முனையில்) அவர்களுடன் நீர் இருந்து, அவர்களுக்கு தொழவைக்க நீர்(இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு உம்முடன் தொழட்டும்” (ஸூரா அந்நிஸா : 102)

6. அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ وَأَقِيمُواْ ٱلصَّلَوٰةَ وَءَاتُواْ ٱلزَّكَوٰةَ وَٱرْكَعُواْ مَعَ ٱلرَّٰكِعِينَ ۝٤٣ ﴾ [البقرة: ٤٣]

“தொழுகையைக் கடைப் பிடியுங்கள் ஜகாத்தையும் (ஒழுங்காகக்) கொடுத்து வாருங்கள் ருகூஃ செய்வோரோடு சேர்ந்து நீங்களும் ருகூஃ செய்யுங்கள்.” (ஸூரா அல்பகரா : 43)

ருகூஃ செய்வோர் என்பவர்கள், பள்ளிவாசலில் ஜமாஅத்தாகத் தொழுபவர்களே.

7. முஃமின்களே! பள்ளிவாசல் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றுவதில் கவனயீனமான இருப்பதை எச்சரித்தும் ஹதீஸ்கள் வந்துள்ளன. நபியவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! விறகுகளைக் கொண்டு வந்து கள்ளிகளாக உடைக்கும்படி நான் உத்தரவு பிறப்பித்துவிட்டு, பின்னர் தொழுகைக்காக அறிவிப்புச் செய்யும்படி ஆணையிட்டு, பின்னர் மக்களுக்குத் தொழுகை நடத்தும்படி ஒருவருக்குக் கட்டளையிட்டுவிட்டு, (கூட்டுத் தொழுகைக்கு வராமல் இருக்கும்) மனிதர்களைத் தேடிச் சென்று, அவர்களின் வீடுகளை அவர்களுடன் சேர்த்து எரித்துவிட வேண்டுமென நான் எண்ணியதுண்டு. என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீது சத்தியமாக! உங்களில் ஒருவருக்கு சதைத் திரட்சியுள்ள ஓர் எலும்போ அல்லது ஆட்டின் இரண்டு குளம்புகளுக்கிடையேயுள்ள இறைச்சித் துண்டுகளோ கிடைக்கும் என்றிருந்தாலும் கூட அவர் ‘இஷா’ தொழுகையில் கலந்து கொள்வார்.”

முஸ்லிமின் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது : “...பின்பு நான் சில மனிதர்களை அழைத்துக்கொண்டு சென்று, அவர்கள கொண்டுவரும் விறகுக் கட்டுக்களால்

தொழுகைக்கு வராதவர்களின் வீடுகளுக்குச் சென்று அவற்றை எரித்துவிட நாடுகின்றேன்” என்று உள்ளது.[268]

8. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “யார் பாங்கை செவிமடுத்தும் அதற்காக சமுகம் தரவில்லையோ, அவருக்கு நியாயமான காரணங்கள் இருந்தாலே தவிர, (அவரது) தொழுகைக்கு முழுமையான நன்மை இல்லை.”[269]

9. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : பார்வையற்ற ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வுடைய தூதரே! என்னைப் பள்ளிவாசலுக்கு அழைத்து வருவதற்கு யாருமில்லை” என்று கூறி, வீட்டில் தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் அனுமதி கொடுத்தார்கள். அவர் திரும்பிச் செல்லும் போது மீண்டும் அவரை அழைத்து, “தொழுகைக்கான அழைப்பை நீங்கள் கேட்கின்றீர்களா?” என்று கேட்டார்கள். அவர் “ஆம்” என்று கூறியதும், “அப்படியானால், அதற்கு பதிலளியுங்கள்” என்று கூறினார்கள்.[270]

10. ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : “நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் வெள்ளிக்கிழமை (ஜுமுஆத் தொழுகையில்) இருந்தபோது, (வியாபாரத்திற்காக உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு) ஒட்டகக் குழு ஒன்று வந்தது. (அதைக் கண்ட மாத்திரத்தில், நபிகளாரின் முன்னிலையிருந்த மக்கள்) கலைந்து சென்றார்கள். பன்னிரண்டு நபர்களே எஞ்சியிருந்தனர். அப்போதுதான்

﴿ وَإِذَا رَأَوْا۟ تِجَٰرَةً أَوْ لَهْوًا ٱنفَضُّوٓا۟ إِلَيْهَا وَتَرَكُوكَ قَآئِمًا ۚ ﴾ [الجمعة: ١١]

‘அவர்கள் வியாபாரத்தையோ விளையாட்டு வேடிக்கையையோ கண்டுவிட்டால் அவற்றின் பக்கம் விரைந்து சென்றுவிடுகின்றனர்’ எனும் (திருக்குர்ஆன் 62:11 வது) வசனத்தை அல்லாஹ் அருளினான்.

அல்லாஹ்வின் அடியார்களே! இங்கு அல்லாஹ் தஆலா, நபித்தோழர்கள் வணக்கத்தை விட்டுவிட்டு, ஓர் உலக விவகாரத்தை நோக்கிச் சென்றமைக்காகக் கண்டிக்கின்றான். பின்பு அல்லாஹ் மறுமையின் வியாபாரத்தை நோக்கி ஆர்வமூட்டியதுடன், வாழ்வாதாரம் அளிப்பவன்

[268] புகாரி : 7224, முஸ்லிம் : 651

[269] இப்னு மாஜஹ் : 793

[270] முஸ்லிம் : 653

அவனைத் தவிர யாரும் இல்லை என உறுதியாக நம்புமாறும் வலியுறுத்துகின்றான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ قُلۡ مَا عِندَ ٱللَّهِ خَيۡرٞ مِّنَ ٱللَّهۡوِ وَمِنَ ٱلتِّجَٰرَةِۚ وَٱللَّهُ خَيۡرُ ٱلرَّٰزِقِينَ ١١ ﴾ [الجمعة: ١١]

"அல்லாஹ்விடத்தில் இருப்பது, வேடிக்கையை விடவும் வியாபாரத்தை விடவும் மிகவும் மேலானதாகும் மேலும் அல்லாஹ் உணவளிப்பவர்களில் மிகவும் மேலானவன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக." (ஸூரா அல்ஜுமுஆ :11)

அதாவது, தொழுகை மற்றும் நபியவர்களுடன் உறுதியாக இருப்பது ஆகியவற்றின் நன்மை, வீண் கேளிக்கைகள் மறும் வியாபாரத்தை விடச் சிறந்தது. உடனே, அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்தார்கள். எனவே, வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவார்கள். ஆனால், அல்லாஹ்வின் கடமைகளில் ஏதாவதொன்று வந்துவிட்டால், அதனை நிறைவேற்றும் வரை, வியாபாரமோ, கொடுக்கல் வாங்கல்களோ அதனை விட்டும் திசைதிருப்பமாட்டாது. அவர்கள் தமது சொந்த விருப்பங்கள் மற்றும் தேவைகளை விட, தமது எஜமானின் விருப்பங்களையும் தேவைகளையும் முற்படுத்துபவர்களாக இருந்தார்கள். எனவேதான், அல்லாஹ் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறினான்:

﴿ رِجَالٞ لَّا تُلۡهِيهِمۡ تِجَٰرَةٞ وَلَا بَيۡعٌ عَن ذِكۡرِ ٱللَّهِ وَإِقَامِ ٱلصَّلَوٰةِ وَإِيتَآءِ ٱلزَّكَوٰةِ يَخَافُونَ يَوۡمٗا تَتَقَلَّبُ فِيهِ ٱلۡقُلُوبُ وَٱلۡأَبۡصَٰرُ ٣٧ ﴾ [النور: ٣٧]

"(அவ்வாறு துதி செய்யும்) மனிதர்களை அல்லாஹ்வை தியானிப்பதை விட்டும், தொழுகையை முறையாக நிறைவேற்றுவதை விட்டும் ஜகாத் கொடுப்பதை விட்டும் அவர்களுடைய வாணிபமோ கொடுக்கல் வாங்கல்களோ பராமுகமாக்கமாட்டா் இதயங்களும், பார்வைகளும் கலங்கித் தடுமாற்றமடையுமே அந்த (இறுதி) நாளை அவர்கள் அஞ்சுவார்கள்." (ஸூரா அந்நூர் : 37)

முஸ்லிம்களே! இவைதான், தொழுகையைப் பள்ளிவாசலில் (ஜமாஅத்தாக) நிறைவேற்றவேண்டும் என்பதற்கான பத்து ஆதாரங்களாகும். அல்லாஹ் ஏவியுள்ள பிரகாரம் அதனை நிறைவேற்ற அவனே எமக்கு அருள் புரிவானாக!

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அல் குர்ஆன் விடயத்தில் பரக்கத் செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள்

மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

- எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். அறிந்துகொள்ளுங்கள்! பள்ளிவாசலில் ஜமாஅத் தொழுகைகளில் கலந்துகொள்வது, ஈமானின் கிளைகளில் ஒன்றாகாவும், மார்க்கத்தின் அடையாளங்களில் ஒன்றாகவும் உள்ளது. எனவே, கடைகள் மற்றும் வியாபார நிலையங்களில் உள்ளவர்கள் தொழுகைக்காக அழைக்கப்பட்டவுடன் அதற்காக விரைந்துசெல்வது அவசியமாகும். அதேபோன்று, நிர்வாகக் கூட்டங்கள் போன்றவற்றில் இருப்பவர்கள், தொழுகைக்காக அழைக்கப்படும் போது, தமது கூட்டங்களை இடைநிறுத்தி, தொழுதுவிட்டு, மீண்டும் தமது கூட்டங்களைத் தொடரவேண்டும். ஏனெனில், ஜமாஅத் தொழுகைக்காக சமுகமளிப்பது என்பது, இரண்டாம் தரமான, எமது சுயதெரிவுடன் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. மேலும், காவல் காத்தல், பயணத்தில் கலந்துகொள்ளல், ஒரு நோயாளிக்கோ, துன்பத்தில் இருப்பவருக்கோ உதவுதல், பயம், மழை, கடும் காற்று போன்ற ஒரு நியாயமான காரணம் இருக்கும் பட்சத்திலேயே ஜமாஅத் தொழுகைக்கு வராமல் இருக்கமுடியும்.
- அல்லாஹ்வுடைய அடியார்களே! ஜமாஅத் என்பத் மூலம் நாடப்படுவது, பாங்கும், இகாமத்தும் சொல்லப்படும் முதல் ஜமாஅத்தே! சில மனிதர்கள் முதல் ஜமாஅத்தை விட்டும் தாமதித்து வருவதுகொண்டு சோதிக்கப்பட்டுள்ளார்கள். இதனால் பள்ளிவாசல்களில் இரண்டாம், மூன்றாம் ஜமாஅத்துக்கள் நடத்தப்படுவதைக் காணலாம். இவ்வாறு, தொழுபவர்கள் ஒரு ஜமாஅத் என்று இல்லாமல் பல ஜமாஅத்களாகக் தொழுவதுகொண்டிருக்கின்றார்கள். அல்லாஹ்வே போதுமானவன்.
- முஸ்லிம்களே! தனது விசுவாசத்தில் உண்மையாக இருக்கும் முஸ்லிம் தனது தொழுகைக்கு உரிய மதிப்பை வழங்குவான். அதனை உரிய விதத்தில் மகத்துவப்படுத்துவான். அதற்குரிய நேரகாலங்களைக் கவனித்துக்கொள்வான். அல்லாஹ் தன்னை சொத்து, உத்தியோகம் போன்வற்றின் மூலம் சோதிக்கின்றான் என்பதையும் அவன் அறிவான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا تُلۡهِكُمۡ أَمۡوَٰلُكُمۡ وَلَآ أَوۡلَٰدُكُمۡ عَن ذِكۡرِ ٱللَّهِۚ وَمَن يَفۡعَلۡ ذَٰلِكَ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡخَٰسِرُونَ ٩ ﴾ [المنافقون: ٩]

"ஈமான் கொண்டவர்களே! உங்கள் செல்வமும், உங்களுடைய மக்களும், அல்லாஹ்வின் நினைப்பை விட்டும் உங்களைப் பராமுகமாக்கிவிட வேண்டாம் - எவர் இவ்வாறு செய்கிறாரோ நிச்சயமாக அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள்." (ஸூரா அல்முனாபிகூன் : 09)

﴿ فِي بُيُوتٍ أَذِنَ ٱللَّهُ أَن تُرۡفَعَ وَيُذۡكَرَ فِيهَا ٱسۡمُهُۥ يُسَبِّحُ لَهُۥ فِيهَا بِٱلۡغُدُوِّ وَٱلۡأٓصَالِ ٣٦ رِجَالٞ لَّا تُلۡهِيهِمۡ تِجَٰرَةٞ وَلَا بَيۡعٌ عَن ذِكۡرِ ٱللَّهِ وَإِقَامِ ٱلصَّلَوٰةِ وَإِيتَآءِ ٱلزَّكَوٰةِ يَخَافُونَ يَوۡمٗا تَتَقَلَّبُ فِيهِ ٱلۡقُلُوبُ وَٱلۡأَبۡصَٰرُ ٣٧ ﴾ [النور: ٣٦-٣٧]

"இறை இல்லங்களில் அவனது பெயர் கூறப்படவேண்டுமென்றும் (அவற்றின் கண்ணியம்) உயர்த்தப்படவேண்டுமென்றும் அல்லாஹ் கட்டளையிடுகிறான். அவற்றில் காலையிலும் மாலையிலும் (முஃமின்கள்) அவனை துதி செய்து கொண்டிருப்பார்கள். (அவ்வாறு துதி செய்யும்) மனிதர்களை அல்லாஹ்வை தியானிப்பதை விட்டும், தொழுகையை முறையாக நிறைவேற்றுவதை விட்டும் ஜகாத் கொடுப்பதை விட்டும் அவர்களுடைய வாணிபமோ கொடுக்கல் வாங்கல்களோ பராமுகமாக்கமாட்டா் இதயங்களும், பார்வைகளும் கலங்கித் தடுமாற்றமடையுமே அந்த (இறுதி) நாளை அவர்கள் அஞ்சுவார்கள்." (ஸூரா அந்நூர் : 36,37)

இந்த வசனங்களில் அல்லாஹ் தஆலா, கொடுக்கல் வாங்கல்கள் மூலம் தொழுகையை விட்டும் பராக்காக இருப்பதை எச்சரிக்கின்றான். அதேபோன்று, வாழ்வாதாரம் என்பது அவனது கையில் தான் உள்ளது எனவும், தான் நாடியவர்களுக்கு அளவின்றிக் கொடுப்பதாகவும் அவன் அறிவுறுத்துகின்றான். எனவே, தொழுகை வாழ்வாதாரத்தைத் தடுக்கக்கூடியதல்ல. அதை இல்லாமல் செய்யக்கூடியதும் அல்ல. மாறாக, அதுவே வாழ்வாதரத்தையும், அபிவிருத்தியையும், அதிகரிப்பையும், வளர்ச்சியையும் கொண்டுவரும் காரணியாக உள்ளது. இவ்வாறில்லாமல் வேறு விதத்தில் சிந்திப்பவன் தனது ரப்பைப் பற்றித் தவறாகப் புரிந்துள்ளான்.

முஃமின்களே! இந்த குத்பாவை அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் (ரஹ்) அவர்களின் ஒரு பத்வாவைக் கொண்டு நிறைவுசெய்கின்றோம். அவர்கள் கூறுகின்றார்கள் :

எல்லா ஆண்களும், தொழுகைக்காக அழைக்கப்பட்டவுடன் பள்ளிவாசல்களில் அதனை ஜமாஅத்தாக நிறைவேற்றுவது கட்டாயமாகும். அரசாங்கமோ, நன்மையை ஏவித் தீமைகளைத் தடுப்பதற்குப் பொறுப்பானவர்களோ கடைகள் மற்றும் வியாபார நிலையங்கள் போன்றவற்றில் இருக்கும் யாருக்கும் ஜமாஅத்திற்குப் போகாமல் இருக்க அனுமதி வழங்கக் கூடாது. அதுவே மார்க்க ஆதாரங்களை நடைமுறைப்படுத்துவதாகவும், அல்லாஹ் அவர்களுக்கு விதித்துள்ள, பள்ளிவாசலில் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுதல் என்ற கடமையை நிறைவேற்றுவதாகவும், பின்வரும் வசனத்தில் அல்லாஹ் முஃமின்களைப் பற்றிக் கூறியுள்ளதை நடைமுறைப்படுத்துவதாகவும் அமையும். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَٱلۡمُؤۡمِنُونَ وَٱلۡمُؤۡمِنَٰتُ بَعۡضُهُمۡ أَوۡلِيَآءُ بَعۡضٖۚ يَأۡمُرُونَ بِٱلۡمَعۡرُوفِ وَيَنۡهَوۡنَ عَنِ ٱلۡمُنكَرِ وَيُقِيمُونَ ٱلصَّلَوٰةَ وَيُؤۡتُونَ ٱلزَّكَوٰةَ وَيُطِيعُونَ ٱللَّهَ وَرَسُولَهُۥٓۚ ﴾ [التوبة: ٧١]

“முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர் அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள் தீயதை விட்டும் விலக்குகிறார்கள் தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள் (ஏழை வரியாகிய) ஜகாத்தை (முறையாகக்) கொடுத்துவருகிறார்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகிறார்கள்” (ஸூரா அத்தவ்பா : 71)

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்.” (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!
யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

துல்ஹஜ் முதல் பத்தின் சிறப்புகள்

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவ மன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழுபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமல் இருங்கள்.

மனிதர்களின் மீது அல்லாஹ்வை வணங்குவதின் சிறப்பம்சம் யாதெனில் அவன் நாடியவைகளை கண்ணியப்படுத்தி மேன்மைப்படுத்துதல். அது சில மனிதர்களாக இருக்கலாம், இடமாக இருக்கலாம், நேரமாக இருக்கலாம் அல்லது குறிப்பிட்ட வணக்கமாக இருக்கலாம். அவைகளை சிறப்பித்த நோக்கம் அல்லாஹ்வே அறிவான். அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ مَا كَانَ لَهُمُ الْخِيَرَةُ﴾

மேலும், உம்முடைய இறைவன், தான் நாடியதைப் படைக்கிறான்; (தூதராகத் தான் நாடியோரைத்) தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (எனவே இத்தகு) தேர்ந்தெடுத்தல் இவர்களு(க்கு உரிமையு)டையதல்ல; (அல்குர்ஆன் 28:68)

இந்த உரையில் அல்லாஹ் சிறப்பித்த துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து இரவுகளில் அவனை மகிழ்விக்கும் செயல்கள் குறித்து பார்ப்போம். இந்த பத்து நாட்களை வருடத்தின் மற்ற நாட்களை விட சிறப்புப் படுத்தியுள்ளான். அதை குறித்து அல்லாஹ் குர்ஆனில் கூறும்போது :

﴿لِيَشْهَدُوْا مَنَافِعَ لَهُمْ وَيَذْكُرُوا اسْمَ اللّٰهِ فِىْۤ اَيَّامٍ مَّعْلُوْمٰتٍ عَلٰى مَا رَزَقَهُمْ مِّنْۢ بَهِيْمَةِ الْاَنْعَامِ﴾

தங்களுக்குரிய பலன்களை அடைவதற்காகவும்; குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ள (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) நாற்கால் பிராணிகள் மீது அவன் பெயரைச் சொல்(லி குர்பான் கொடுப்)பவர்களாகவும் (வருவார்கள்); (அல்குர்ஆன் 22:28)

‘குறிப்பிட்ட நாட்களில்’ என்பது (துல்ஹஜ்) பத்து நாட்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) வழியாக செய்தி வந்துள்ளது. (அல்-புகாரி)

துல்ஹஜ் பத்து நாட்களின் சிறப்புகள் குறித்து வந்துள்ள ஆதாரங்கள் :

ஆதாரம் க :

﴿وَالْفَجْرِ وَلَيَالٍ عَشْرٍ﴾

விடியற் காலையின் மீது சத்தியமாக, பத்து இரவுகளின் மீது சத்தியமாக
(அல்குர்ஆன் 89:1,2)

இமாம் இப்னு கஸீர் கூறுகிறார்கள் : இப்னு அப்பாஸ், இப்னுஸ் ஸுபைர், முஜாஹித் மற்றும் முன்சென்ற ஸலஃப்கள் மற்றும் பின்வந்த இமாம்கள் கூறுவது போல பத்து இரவுகள் என்பது துல்ஹஜ் மாதத்தின் பத்து நாட்கள் ஆகும்.

ஆதாரம் ௨ :

இந்நாட்களில் செய்யும் அமல்களுக்கான நன்மை மற்ற நாட்களை விட பலமடங்கு இரட்டிப்பாகும்.

فعن ابن عباس رضي الله عنهما، عن النبي صلى الله عليه وسلم قال: ما مِن أيام العمل الصالح فيهن أحب إلى الله منه في هذه الأيام العشر. قالوا: ولا الجهاد في سبيل الله؟ قال: ولا الجهاد في سبيل الله، إلا رجل خرج بنفسه وماله ولم يرجع من ذلك بشيء.[٢٧١]

நல்லமல்கள் செய்யும் நாட்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான மிகவும் சிறந்த நாட்கள் துல்ஹஜ் பத்து நாட்களாகும். அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதை விடவும் இது சிறந்ததா? என நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, ஆம் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதை விடவும் இது சிறந்தது. ஆனால் ஒருவன் அல்லாஹ்வுக்காக அவனுடைய பாதையில் தனது உயிர், பொருள் ஆகியவற்றைக் கொண்டு சென்று போர் புரிந்து, மீண்டும் திரும்பி வராமல், (காபிர்களால் ஷஹீதாக்கப்பட்டு) இருக்கின்றவனைத் தவிர எனக் கூறினார்கள். (நூல்: புகாரி ௯௬௯)

இப்னு ரஜப் (ரஹ்) கூறினார்கள் : இந்த ஹதீஸ் மகத்தான சிறப்பை கொண்ட ஹதீஸ். இந்த ஹதீஸ் சொல்வது என்னவெனில் சாதாரண அமல்கள் கூட சிறப்புமிக்க நாட்களில் செய்யப்படும்போது அது மிகச்சிறந்த அமல்களாக மாறிவிடுகிறது. ஆக துல்ஹஜ் முதல் பத்தில் செய்யப்படும் நல்லமல்கள் மற்ற நாட்களில் செய்யும் அமல்களை விட

[271] أخرجه البخاري (٩٦٩) وأحمد (١/٣٣٨-٣٣٩)، واللفظ له.

பலமடங்கு சிறப்பை பெறுகிறது. ஒருவர் தன் உடலாலும் பொருளாளும் செய்யும் அறப்போர் மட்டும் விதிவிலக்காகும்.

மேலும் இந்நாட்களில் செய்யப்படும் நஃபிலான அமல்கள் ரமலானில் செய்யப்படும் நஃபில் வணக்கங்களை விட சிறந்ததாகும். மேலும் இந்த பத்தில் செய்யப்படும் கடமையான வணக்கங்களுக்கான நன்மை மற்ற நாட்களை விட பலமடங்கு இரட்டிப்பாக்கப்படும். (ஃபத்ஹுல் பாரி 9/11-16)

1. **ஆதாரம் ௩ :**
இந்த பத்து நாட்களில் தான் அல்லாஹ் இஸ்லாமிய மார்க்கத்தை முழுமைப்படுத்திய அரஃபா தினம் உள்ளது.
அல்லாஹ் கூறுகிறான் :

﴿اَلْيَوْمَ اَكْمَلْتُ لَـكُمْ دِيْنَكُمْ وَاَ تْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ وَرَضِيْتُ لَـكُمُ الْاِسْلَامَ دِيْنًا﴾

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்; (அல்குர்ஆன் 5:3)

ஆதாரம் ௪ :

இந்த பத்து நாட்களில் தான் அறுத்து பலியிடுதல், தவாஃப், ஸயீ, முடியை மழித்தல் அல்லது கத்தரித்தல், கல்லெறிதல் போல பல வணக்கங்களை உள்ளடக்கிய அறுத்து பலியிடும் நாள், பிரதான ஹஜ் நாளும் உள்ளது.

وقد قال النبي صلى الله عليه وسلم: إِنَّ أَعْظَمَ الْأَيَّامِ عِنْدَ اللَّهِ تَبَارَكَ وَتَعَالَى يَوْمُ النَّحْرِ، ثُمَّ يَوْمُ الْقَرِّ

நாட்களிலேயே அல்லாஹ்விடத்தில் மிக மகத்தான நாள் துல்ஹஜ் மாதத்துடைய குர்பானி கொடுக்கக் கூடிய பத்தாவது நாள். அதற்கு பிறகு, பிறை *கக*-வது நாள் என்று அல்லாஹ்வுடைய தூதர் ﷺ கூறினார்கள்.
(அபூதாவூத் : 1765)

முஸ்லிம்களே! கீழ்காணும் ஆறு அமல்களை செய்வதில் அதிகம் கவனம் செலுத்துங்கள் :

2. தஹ்லீல், தக்பீர், தஹ்மீது

فعن عبد الله بن عمر رضي الله عنهما، عن النبي صلى الله عليه وسلم قال: ما من أيام أعظم عند الله ولا أحب إليه العمل فيهن من هذه الأيام العشر، فأكثروا فيهن من التهليل والتكبير والتحميد

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள் அல்லாஹ்விடத்தில் மற்ற நாட்களை விட மிக மகத்தான நாட்கள். அந்த முதல் ௧0 நாட்களில் செய்யப்படுகின்ற அமல்கள் அல்லாஹ்விடத்தில் மிக விருப்பமானது, மற்ற நாட்களில் செய்யப்படுகின்ற அமலை விட. ஆகவே, இந்த நாள்களில் அதிகம் லா இலாஹா இல்லல்லாஹ் சொல்லுங்கள். அதிகமாக தக்பீர் சொல்லுங்கள். அதிகமாக அல்லாஹ்வை புகழுங்கள். (அஹ்மது 2/131)

இமாம் புஹாரி அறிவிக்கிறார்கள் : இப்னு உமர் மற்றும் அபு ஹுரைரா (ரலி) ஆகிர இருவரும் (துல்ஹஜ் பத்து நாட்களில்) கடைவீதிக்கு சென்று தக்பீர் சொல்ல மக்களும் அவர்களை போல தக்பீர் சொல்வார்கள்.

தக்பீர் சொல்லும் முறை : ‘அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹ், வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து’

தக்பீர், தஹ்மீது மற்றும் தஹ்லீல் சொல்வது இந்த பத்து நாட்களில் சொல்வது மார்க்கத்தில் உள்ள ஒன்று. இதை சப்தமாக மஸ்ஜிதுகள், வீடுகள், வழிப்பாதைகள் மற்றும் அல்லாஹ்வை நினைவு கூறத்தகுந்த எல்லா இடங்களிலும் வணக்கத்தை வெளிப்படுத்தும் விதமாக அல்லாஹ்வை மேன்மைப்படுத்தும் வண்ணம் ஆண்களும் ஆண்கள் இருக்கும் இடங்களில் சப்தம் குறைவாக பெண்களும் கூறலாம்.

இந்த நாட்களில் தக்பீர் சொல்வது சுன்னத்தாகும். குறைந்த நபருக்கும் மட்டும் கேட்கும்படி சொல்வது உகந்ததல்ல. சுன்னாவை உயிர்ப்பிக்கும் விதமாக மறந்தவர்களுக்கு நினைவூட்டும் வண்ணம்

சத்தமாக சொல்ல வேண்டும். அனைவரும் தனித்தனியே தக்பீர் சொல்ல வேண்டும், கூட்டாக ஒரே குரலில் சொல்வது மார்க்க வழிமுறையல்ல.

3. நோன்பு

ஒரு முஸ்லிம் துல்ஹஜ் முதல் ஒன்பது நாட்கள் நோன்பு நோற்பது ஆர்வமூட்டப்பட்டது. நபி ﷺ துல்ஹஜ் முதல் பத்து நாட்கள் நோன்பு நோற்று வந்துள்ளார்கள்.

عن هنيدة بن خالد عن امرأته عن بعض أزواج النبي صلى الله عليه وسلم قالت: كان رسول الله صلى الله عليه وسلم يصوم تسعا من ذي الحجة ويوم عاشوراء وثلاثة أيام من كل شهر: أول اثنين من الشهر وخميسين.

ரஸூலுல்லாஹ் ﷺ துல்ஹஜ் மாத ஒன்பது நாட்களும், ஆஷுரா நாளிலும் மாதத்தில் மூன்று நாட்களும் நோன்பு நோற்பவராக இருந்தார்கள். மாதத்தின் முதல் திங்கள், வியாழன் மற்றும் அதை அடுத்த வியாழன். அறிவிப்பாளர் : ஹுனைதா பின் காலித் நூல் : அபூதாவூத் 2437, அந்நஸாயீ 2417.

وسَأل أبو أمامة الباهلي رضي الله عنه رسول الله صلى الله عليه وسلم فقال: (مُرني بأمر ينفعني الله به)، فقال: عليك بالصيام فإنه لا مِثل له.

அபூ உமாமா அல்பாஹிலி (ரலி) நபி ﷺ அவரிடம் : அல்லாஹ்விடம் பயனை பெற்றுத்தரும் ஒரு செயலைக் கொண்டு எனக்கு கட்டளையிடுங்கள் என கேட்க அதற்கு நபி ﷺ : 'நீ நோன்பை கடைபிடி, அதைப்போன்று வேறெதுவும் கிடையாது' என பதிலளித்தார்கள். (அந்நஸாயீ 2840, அஹ்மது 5/249)

4. அரஃபா நோன்பு :

நபி ﷺ கூறினார்கள் : அரஃபா தினத்தின் நோன்பு அதன் முந்தைய ஒரு ஆண்டு மற்றும் பிந்தைய ஒரு ஆண்டுகளின் பாவத்தை அழிக்கிறது. (முஸ்லிம் 1162)

5. ஹஜ் பெருநாள் தொழுகை : இது நாம் அனைவரும் அறிந்ததே.

6. குர்பானி :

இந்த வணக்கம் சக்திபெற்றவர்கள் மீது வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். பெருநாள் தினத்தன்று அறுக்கப்படும் குர்பானி மற்ற மூன்று நாட்களில் அறுக்கப்படுவதை விட கூடுதல் சிறப்பு பெற்றது. ஏனெனில் பெருநாள் தினம் தான் வருடத்தின் சிறந்த நாட்களான துல்ஹஜ் பத்து நாட்களின் கடைசி நாளாக இருக்கிறது. 'அய்யாமுத் தஷ்ரீக்' எனும் மற்ற நாட்கள் பத்து நாட்களில் இல்லை மேலும் நன்மையில் விரைவது சிறந்தது. (நூல் : தஸ்ஹீலுல் ஃபிக்ஹ் 9/229, ஆசிரியர் : அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் அல்ஜிப்ரீன்)

ஹஜ் மற்றும் உம்ரா :

இந்த பத்து நாட்களில் அல்லாஹ்விடம் நெருக்கத்தை பெற்றுத்தரும் முக்கிய அமல் ஹஜ் மற்றும் உம்ரா ஆகும். யாருக்கு அல்லாஹ் ஆற்றல் வழங்கியுள்ளானோ அவர்கள் அந்த அமலை செய்வதோடு அதில் எந்த சம்போகம், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு - ஆகியவை செய்தல் கூடாது. இந்த அமல் நபி ﷺ வாக்களித்த நன்மையான சுவனத்தை பெற்றுத்தரும் உன்னத அமலாக இருக்கிறது.

நபி ﷺ கூறினார்கள் : ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு கூலி சுவனத்தை தவிர வேறில்லை. (புஹாரி 1773)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! இந்த ஆறு அமல்கள் துல்ஹஜ் பத்து நாட்களில் செய்யப்படும் ஆர்வமூட்டப்பட்ட அமல்களாக இருக்கிறது. இந்த சிறப்பு வாய்ந்த நாட்களில் சிறந்த அமல்களான தொழுகை, நோன்பு, தர்மம், ஹஜ் ஆகிய அனைத்தும் ஒருசேர வருவதன் காரணத்தால் இந்நாட்கள் மற்ற நாட்களை விட கூடுதல் சிறப்பு பெறுகிறது. (இப்னு ஹஜர் (ரஹ்), ஃபத்ஹுல் பாரி 2/534)

ஆனால், ரமலான் மாதத்தின் கடைசி பத்தில் மக்கள் காட்டும் ஆர்வத்தை சிறப்பு வாய்ந்த இந்த பத்து நாட்களில் காண முடியவில்லை.

தாபியி ஸயீது இப்னு ஜுபைர் (ரஹ்) அவர்கள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாள் தொடங்கிவிட்டால் தன்னால் இயன்ற அளவுக்கு அதிகமான வணக்கங்களில் ஈடுபடுவார்கள். மேலும் 'உங்கள் விளக்குகளை இரவில் அணைத்து விடாதீர்கள்' என கூறுவார்கள், அதன் அர்த்தம் : இரவுகளில் குர்ஆன் ஓதுவது மற்றும் தொழுகையில் ஈடுபடுவதற்காக ஆர்வமூட்டுதலாகும்.

இந்த அமல்களை அதிகம் செய்து அதன் நன்மையை அடையும் வாய்ப்பை அல்லாஹ்விடம் நாம் கேட்போம். இன்று அமல்கள் மட்டுமே ஆனால் கூலி இல்லை, நாளை (மறுமையில்) கூலி மட்டுமே நன்மை செய்ய இயலாது.

﴿سَابِقُوْا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَآءِ وَ الْاَرْضِۙ اُعِدَّتْ لِلَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِه﴾

உங்கள் இறைவனின் மன்னிப்பிற்கும் சுவர்க்கத்திற்கும் நீங்கள் முந்துங்கள்; அச்சுவர்க்கத்தின் பரப்பு, வானத்தினுடையவும், பூமியினுடையவும் பரப்பைப் போன்றதாகும்; எவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவன் தூதர் மீதும் ஈமான் கொள்கிறார்களோ, அவர்களுக்கு அது சித்தம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 57:21)

இப்னு ரஜப் (ரஹ்) கூறினார்கள் : கஃபாவை ஒருமுறையேனும் தன் வாழ்வில் பார்த்துவிட வேண்டும் என்ற அந்த ஆசையை முஃமின்களின் உள்ளத்தில் போட்ட இறைவன் அதை எல்லோரும் எல்லா ஆண்டும் பார்க்க வாய்ப்பளிக்கவில்லை. ஹஜ் கடமையை வாழ்வில் ஒரு முறை சக்தி பெற்றவர்களுக்கு அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். மேலும் இந்த பத்து நாட்களை ஹஜ்

செல்பவர்கள் மற்றும் தங்கள் இடங்களில் இருப்பவர்கள் என அனைவரும் பயன்பெறும் வண்ணம் பொதுவாக்கியுள்ளான். ஹஜ் பயணம் மேற்கொள்ள இயலாதவர்கள் தங்கள் இடங்களில் செய்யும் அமல்கள் மூலம் ஹஜ்ஜை விட சிறப்பு பெற்ற ஜிஹாதின் நன்மையை விட சிறந்த நன்மையை பெற முடியும். (லதாயிஃபுல் மஆரிஃப்)

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا، وأستغفر الله لي ولكم فاستغفروه، إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

الحمد لله على فضله وإحسانه، والشكر له على توفيقه وامتنانه، وأشهد أن إله إلا الله وحده لا شريك له تعظيما لشأنه، وأشهد أن محمدًا عبده ورسوله، صلى الله عليه وعلى آله وأصحابه، وسلَّم تسليماً كثيرا، أما بعد؛

முஃமின்களே! துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து ரமலான் மாதத்தின் கடைசி பத்தை விட சிறப்புமிக்கது என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆகவே அந்நாட்களில் அதிகம் நன்மைகளை செய்ய முற்படுங்கள்.

இப்னு கஸீர் (ரஹ்) கூறினார்கள்: சுருக்கமாக, ஹதீஸில் வந்துள்ளதைப் போல இந்த பத்து நாட்கள் வருடத்தின் மிகச்சிறந்த நாட்கள் என சொல்லப்படுகிறது. இன்னும் அதிகமானோர் அதை ரமலானின் கடைசி பத்தை விட சிறப்பானது என கூறுகிறார்கள் காரணம் வருடத்தின் மற்ற நாட்களின் செய்யப்படும் அமல்களான தொழுகை, நோன்பு, தர்மம் ஆகியவை தான் இந்த நாட்களிலும் ஆர்வமூட்டப்பட்டுள்ளது ஆனால் துல்ஹஜ் முதல் பத்து நாளில் குறிப்பாக ஹஜ் கடமையும் பிரத்தியேகமாக இதில் உள்ளதால் இந்த பத்து நாட்கள் கூடுதல் சிறப்பினை பெருகிறது.

மற்றொரு கருத்து : லைலத்துல் கத்ர் ரமலானின் கடைசி பத்தில் இருப்பதன் காரணத்தால் அந்த பத்து நாட்களே சிறந்தது என மற்றொரு கருத்து உண்டு.

மற்றொரு கருத்தில் உலமாக்கள் கூறுவது : இரண்டுமே சிறப்புதான். பகல்களில் துல்ஹஜ் பத்து பகலகள் சிறந்தது இரவுகளில் ரமலானின் பத்து இரவுகள் சிறந்தது என்று நடுநிலையோடு ஆதாரங்கள் அடிப்படையில் உலமாக்கள் கூறுகிறார்கள். (தஃப்ஸீர் இப்னு கஸீர், ஸூரா ஹஜ், வசனம் : 28)

மேலும் யார் குர்பானி கொடுக்க நாடுகிறாரோ அவர் தன் முடி, நகம் மற்றும் தோல்களிலிருந்து எதையும் குர்பானிய அறுத்து பலியிடும் வரை அகற்ற கூடாது.

நபி ﷺ கூறினார்கள் :

إِذَا رَأَيْتُمْ هِلَالَ ذِي الْحِجَّةِ، وَأَرَادَ أَحَدُكُمْ أَنْ يُضَحِّيَ؛ فَلْيُمْسِكْ عَنْ شَعْرِهِ وَأَظْفَارِهِ.

நீங்கள் துல்ஹஜ் மாத பிறையை கண்டால் யார் குர்பானி கொடுக்க நாடுகிறாரோ அவர் தன் முடி மற்றும் நகங்களை அகற்றவேண்டாம்.
(முஸ்லிம்: 1977)

மற்றுபொரு அறிவிப்பில் :

إِذَا دَخَلَتْ الْعَشْرُ، وَأَرَادَ أَحَدُكُمْ أَنْ يُضَحِّيَ؛ فَلَا يَمَسَّ مِنْ شَعرِهِ وَبَشَرِهِ (أي جِلدِهِ) شَيْئًا.

(துல்ஹஜ்) பத்து தொடங்கிவிட்டால், யார் குர்பானி கொடுக்க நாடுகிறாரோ அவர் தன் முடி மற்றும் தோல்களிலிருந்து எதையும் தொட (அகற்ற) வேண்டாம். (முஸ்லிம்)

நம்பிக்கை கொண்டோரே! இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பம்சத்தில் ஒன்று மக்களின் சிரமத்தை அகற்றுவது. அவ்வாறு இருக்க, யார் தன்னுடைய முடி, நகம் மற்றும் தோல்களிலிருந்து எதையேனும் அகற்ற வேண்டிய தேவையில் இருந்தால் அவர் அதை செய்வதில் தவறில்லை.

ஷேக் இப்னு உஸைமீன் (ரஹ்) கூறினார்கள் : யார் தன்னுடைய முடி, நகம் மற்றும் தோல்களிலிருந்து எதையேனும் அகற்றவேண்டிய தேவையில் இருந்தால் அவர் அதை செய்வதில் தவறில்லை உதாரணமாக காயம் காரணமாக தன் முடியை அகற்றவேண்டிய

தேவை ஏற்பட்டால் அல்லது உடைந்த மற்றும் காயம்பட்ட தோல் பகுதியை நகத்தை முழுமையாக அகற்றநேர்ந்தால் அவ்வாறு செய்வதால் எந்த பாவமும் இல்லை. (மஜ்மூஉ ஃபதாவா இப்னு உஸைமீன் 25/161)

ஷேக். இப்னு பாஸ் மற்றும் இப்னு உஸைமீன் (ரஹ்) கூறினார்கள் : யார் ஹஜ் செய்து அதில் பிராணியை அறுத்து பலியிடுவாரோ அவருக்கும் இந்த சட்டம் பொருந்தும். அவர் உம்ராவை முடிக்கும் வரை தன் முடியை அகற்ற கூடாது. உம்ரா செய்தால் (இந்த பத்து நாட்களில்) அவர் முடியை அகற்றலாம் ஏனெனில் அது உம்ராவின் ஒரு கிரியையாக இருக்கிறது. [272]

மேலும் அறிந்துகொள்ளுங்கள் அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு ஓர் மேனானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி மீது அருள்புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக்கொள்வாயாக! மேலும் பியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் நீ பொருந்திக்கொள்வாயாக! யா அல்லாஹ், உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும்

[272] மஜ்மூஉ ஃபதாவா இப்னு பாஸ் 17/233, மஜ்மூஉ ஃபதாவா இப்னு உஸைமீன் 25/141

நல்ல செயல்களையும் கேட்கிறோம். யா அல்லாஹ்! நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீது அருள்புரிவாயாக!

ربنا آتنا في الدنيا حسنة وفي الآخرة حسنة وقنا عذاب النار.

நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான்; அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்.

அரஃபா தினத்தின் சிறப்புகள்

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே, அவனையே புகழ்கிறோம் அவனிடமே உதவியும் பாவ மன்னிப்பும் கேட்கிறோம். எமது உள்ளங்களின் தீங்குகளை விட்டும் தவறான செயல்களில் இருந்தும் பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை வழிகெடுப்போர் யாருமில்லை மேலும் யாரை அவன் வழிகேட்டில் விட்டுவிட்டானோ அவரை நேர்வழிபடுத்துபவர் யாருமில்லை. மேலும் வணக்கத்திற்குரிய ஒரே இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, அவனுக்கு இணையாக ஏதுமில்லை மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும் இறுதி தூதராகவும் இருக்கிறார் என்று நான் சாட்சி சொல்கிறேன்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமல் இருங்கள்.

மனிதர்களின் மீது அல்லாஹ்வை வணங்குவதின் சிறப்பம்சம் யாதெனில் அவன் நாடியவைகளை கண்ணியப்படுத்தி மேன்மைப்படுத்துதல். அது சில மனிதர்களாக இருக்கலாம், இடமாக இருக்கலாம், நேரமாக இருக்கலாம் அல்லது குறிப்பிட்ட வணக்கமாக இருக்கலாம். அவைகளை சிறப்பித்த நோக்கம் அல்லாஹ்வே அறிவான். அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَرَبُّكَ يَخْلُقُ مَا يَشَآءُ وَيَخْتَارُ مَا كَانَ لَهُمُ الْخِيَرَةُ﴾

மேலும், உம்முடைய இறைவன், தான் நாடியதைப் படைக்கிறான்; (தூதராகத் தான் நாடியோரைத்) தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (எனவே இத்தகு) தேர்ந்தெடுத்தல் இவர்களு(க்கு உரிமையு)டையதல்ல; (அல்குர்ஆன் 28:68)

இந்த உரையில் அரஃபா தினத்திற்கு அல்லாஹ் வழங்கியுள்ள சிறப்புகளை குறித்து பார்ப்போம்.

1. **அரஃபா நாள் தான் இஸ்லாமிய மார்க்கம் பூர்த்தி செய்யப்பட்ட நாள் :**

உமர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: 'யூதர் ஒருவர் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, "யா அமீரல் முஃமினீன்! உங்களுடைய புத்தகத்தில் ஒரு வசனம் இருக்கின்றது. இந்த வசனம் யூதர்களாகிய எங்கள் மீது இறங்கி இருந்தால் அந்த நாளை நாங்கள் பெருநாளாக எடுத்து இருப்போம்" என்று கூறினார். அப்பொழுது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "அது எந்த வசனம்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த யூதன்

﴿اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَ تْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا﴾

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; (அல்குர்ஆன் 5:3)

என்ற வசனத்தை ஓதிக் காட்டினான். அதற்கு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக இந்த வசனம் எப்பொழுது ரஸூலுல்லாஹி ﷺ மீது அல்லாஹ் இறக்கி வைத்தான் என்று எனக்குத் தெரியும். நிச்சயமாக இந்த வசனமானது ரஸூலுல்லாஹி ﷺ அரஃபா தினத்தன்று அரபாவில் நின்று கொண்டு இருந்த பொழுது அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா நபி ﷺ மீது இறக்கி வைத்தான். அந்த அரஃபா தினம் ஜும்ஆ தினமாக இருந்தது" என்று கூறினார்கள். (ஸஹீஹ் அல்-புஹாரி 45, ஸஹீஹ் முஸ்லிம் 3017)

2. அரஃபா தினத்தின் மீது அல்லாஹ் குர்ஆனில் இரண்டு இடங்களில் சத்தியம் செய்துள்ளான்.

சிறப்புவாய்ந்த காரியங்களைத் தவிர மேன்மையான இறைவன் வேறு எதன்மீதும் சத்தியம் செய்யமாட்டான். அதில் ஒன்று அரஃபாவின் தினம்.

﴿وَالْيَوْمِ الْمَوْعُوْدِ ۙ وَشَاهِدٍ وَّمَشْهُوْدٍ﴾

இன்னும், வாக்களிக்கப்பட்ட (இறுதி) நாள் மீதும் சத்தியமாக, மேலும், சாட்சிகள் மீதும், சாட்சி சொல்லப்படுவதன் மீதும் சத்தியமாக, (அல்குர்ஆன் 85:2, 3)

நபி ﷺ கூறினார்கள் : சாட்சிகள் என்பது ஜும்ஆ நாட்களாகும், சாட்சி சொல்லப்படுவதன் மீது என்பது அரஃபா தினமாகும், மேலும் வாக்களிக்கப்பட்ட நாள் என்பது மறுமை நாள் ஆகும்.

அறிவிப்பாளர் : அபு ஹுரைரா (ரலி) நூல் : அஹ்மது 7973

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ் குர்ஆனில் கூறும் ஒற்றை என்பது அரஃபா தினத்தை குறிக்கும். அவ்வாறு குறிப்பிட்டு அதன் மீது அல்லாஹ் சத்தியம் செய்துள்ளான்.

﴿وَلَيَالٍ عَشْرٍ وَّالشَّفْعِ وَالْوَتْرِ﴾

பத்து இரவுகளின் மீது சத்தியமாக, இரட்டையின் மீதும், ஒற்றையின் மீதும் சத்தியமாக, (அல்குர்ஆன் 89: 3)

நபி ﷺ கூறினார்கள் : பத்து இரவுகள் என்பது துல்ஹஜ் பத்து, ஒற்றை என்பது அரஃபா தினம் மற்றும் இரட்டை என்பது அறுத்து பலியிடும் (துல்ஹஜ்) பத்தாம் நாள் ஆகும்.

அறிவிப்பாளர் : ஜாபின் பின் அப்துல்லாஹ் (ரலி) நூல் : அஹ்மது 14511

3. **அரஃபா நாளின் நோன்பு இரண்டு வருட பாவங்களுக்கு பரிகாரமாக அமையும்**

عن أبي قتادة رضي الله عنه أن النبي (صلى الله عليه وسلم) قال: صيام يوم عرفة، أَحتسب على الله أن يكفر السنة التي قبله والسنة التي بعده

ரஸூலுல்லாஹி ﷺ கூறினார்கள், "அரஃபா தினத்தன்று நோன்பு வைப்பது முன்சென்ற வருடத்திலும் பின் வரக்கூடிய வருடத்திலும் நிகழ்ந்து விடுகின்ற பாவங்களுக்கு பரிகாரமாக இருக்கின்றது" என்று கூறினார்கள். அறிவிப்பாளர் : அபு கதாதா (ரலி) நூல்: ஸஹீஹ் முஸ்லிம் 1162

4. **அரஃபா தினம் அமைந்திருக்கும் மாதம் புனிதமானது, அதன் முன் இருக்கும் மாதமும் புனிதமானது மற்றும் அதை தொடர்ந்து அடுத்து வரும் மாதமும் புனிதமானது.**

5. **நரகவாசிகளுக்கு விடுதலை, அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் வானவர்களிடம் பெருமையாக பேசுதல்**

عن عائشة رضي الله عنها عن النبي (صلى الله عليه وسلم) قال: ما من يوم أكثر من أن يعتق الله عز وجل فيه عبداً من النار من يوم عرفة، وإنه ليَدنو ثم يُباهي بهم الملائكة فيقول: ما أراد هؤلاء؟

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அரஃபா (துல்ஹஜ் 9வெது) நாளில் அடியார்களுக்கு நரக விடுதலையளிக்கும் அளவிற்கு வேறெந்த நாளிலும் நரக விடுதலை அளிப்பதில்லை. அன்றைய தினம் அவன் (அரஃபாவிலுள்ளவர்களை) நெருங்கி, வானவர்களிடம் அவர்களைக் குறித்துப் பெருமை பாராட்டுகிறான். “இவர்கள் எதை நாடி (இங்கு குழுமி)யுள்ளார்கள்?” என்று (பெருமிதத்தோடு) கேட்கிறான். (முஸ்லிம் 1348)

وعن عبد الله بن عمرو بن العاص رضي الله عنهما أن النبي صلى الله عليه وسلم قال: إن الله عز وجل يباهي ملائكته عشية عرفة بأهل عرفة، فيقول: انظروا إلى عبادي أتوني شعثاً غبراً

அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: “பரட்டைத் தலையர்களாக, புழுதி படிந்தவர்களாக நிற்கும் எனது அடியார்களைப் பாருங்கள்” என்று அரஃபா பெருவெளியில் நிற்கும் மக்களைப் பற்றி மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த அல்லாஹ் மலக்குகளிடம் பெருமிதம் கொள்கின்றான். (அஹ்மத் 2/224)

இப்னு ரஜப் (ரஹ்) கூறினார்கள் : அரஃபா தினம் என்பது நரகத்திலிருந்து விடுதலை அளிக்கப்படும் நாள். அந்நாளில் அரஃபாவின் நின்ற மற்றும் அங்கு நிற்காமல் மற்ற ஊர்களில் இருக்கும் முஸ்லிம்களுக்கும் நரகத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கபடுகிறது. ஆகவே தான் இந்நிகழ்வில் கலந்துகொண்ட மற்றும் கலந்துகொள்ள வாய்ப்பு பெறாதவர்கள் அனைவருக்கும் அதை அடுத்து வரும் நாள் பெருநாளாக உள்ளது. (லதாயிஃபுல் மஆரிஃப்)

6.அரஃபா தினத்தில் கேட்க்கப்படும் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட அதிகம் வாய்ப்புள்ளது

நபி ﷺ கூறினார்கள் : துஆவில் சிறந்தது அரஃபா தினத்தில் கேட்கப்படும் துஆ ஆகும். நானும் மற்ற நபிமார்களும் கூறிய நீங்கள்

சொல்லவேண்டிய சிறந்த பிரார்த்தனை : ‘லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்’.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் நூல் : திர்மிதி 3585

7. அரஃபா தினம் வருடத்தின் சிறந்த தினங்களான துல்ஹஜ் பத்து நாட்களில் நிகழ்கிறது

துல்ஹஜ் பத்து நாட்களே இந்த உலகின் சிறந்து நாட்கள் ஆகும்.

فعن ابن عباس رضي الله عنهما، عن النبي صلى الله عليه وسلم قال: ما مِن أيام العمل الصالح فيهن أحب إلى الله منه في هذه الأيام العشر. قالوا: ولا الجهاد في سبيل الله؟ قال: ولا الجهاد في سبيل الله، إلا رجل خرج بنفسه وماله ولم يرجع من ذلك بشيء.[273]

நல்லமல்கள் செய்யும் நாட்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான மிகவும் சிறந்த நாட்கள் துல்ஹஜ் பத்து நாட்களாகும். அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதை விடவும் இது சிறந்ததா? என நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, ஆம் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவதை விடவும் இது சிறந்தது. ஆனால் ஒருவன் அல்லாஹ்வுக்காக அவனுடைய பாதையில் தனது உயிர், பொருள் ஆகியவற்றைக் கொண்டு சென்று போர் புரிந்து, மீண்டும் திரும்பி வராமல், (காபிர்களால் ஷஹீதாக்கப்பட்டு) இருக்கின்றவனைத் தவிர எனக் கூறினார்கள். (நூல்: புகாரி ௯௬௯)

8. ஹஜ்ஜின் முக்கிய தூண் : அரஃபா கடமை

அரஃபா நாளில் தான் ஹஜ்ஜின் முக்கிய கடமை மற்றும் அதன் தூண் என சொல்லப்படும் அரஃபா மைதானத்தின் ஒன்றுகூடும் நிகழ்வு நடைபெறும்.

قال (صلى الله عليه وسلم): الحج عرفة

நபி ﷺ கூறினார்கள் : ஹஜ் என்பதே அரஃபா தான். (அந்நஸாயீ 3016)

---

273. أخرجه البخاري (٩٦٩) وأحمد (١/٣٣٨-٣٣٩)، واللفظ له.

9. முஸ்லிம்கள் ஒன்று கூடும் மகத்தான சம்பவம்

முஸ்லிம்கள் பல இடங்களிலிருந்து வந்து ஒரே இடத்தில் ஒன்றுகூடி மகத்தான கிரியையை நிரைவேற்ற ஒன்றுகூடுவது வேறு எந்த நாட்களிலும் எந்த இடத்திலும் எந்த வணக்கத்திலும் நிகழாத ஒன்று. இது இஸ்லாத்தின் அடையாளத்தின் வெளிபாடு மற்றும் அதன் உயர்வின் ஆதாரம். அல்லாஹ்வின் அருள் இறங்குதல் மற்றும் பாவங்களை விட்டு விலகியிருப்பது (அந்நாளில்) ஷைத்தானுக்கு இகழ்வை ஏற்படுத்துகிறது.

அல்லாஹ்வின் அடியார்களே! இதுவே அல்லாஹ் சிறப்பித்த அரஃபா தினத்தின் சிறப்புகள் ஆகும். நல்லமல்களை அந்நாளில் அதிகம் செய்ய அல்லாஹ்விடம் உதவி தேடுவோம், அதன் சிறப்புகளை அடைய முந்திக்கொண்டு அதன் நன்மைகளை முழுமையாக எதிர்பார்ப்போம். இன்று இந்த உலகில் அமல்கள் மட்டுமே நாளை மறுமையில் அமல்கள் கிடையாது மாறாக கூலி மட்டுமே.!

﴿سَابِقُوْۤا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَآءِ وَ الْاَرْضِ اُعِدَّتْ لِلَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِه﴾

உங்கள் இறைவனின் மன்னிப்பிற்கும் சுவர்க்கத்திற்கும் நீங்கள் முந்துங்கள்; அச்சுவர்க்கத்தின் பரப்பு, வானத்தினுடையவும், பூமியினுடையவும் பரப்பைப் போன்றதாகும்; எவர்கள் அல்லாஹ்வின் மீதும், அவன் தூதர் மீதும் ஈமான் கொள்கிறார்களோ, அவர்களுக்கு அது சித்தம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 57: 21)

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا وأستغفر الله العظيم لي ولكم من كل ذنب فاستغفروه، إنه هو الغفور الرحيم.

இரண்டாம் குத்பா

الحمدلله على فضله وإحسانه، والشكر له على توفيقه وامتنانه، وأشهد أن لا إله إلا الله وحده تعظيماً لشأنه، وأشهد أن محمداً عبده ورسوله، صلى الله عليه وعلى آله وأصحابه، وسلم تسليماً كثيراً، أما بعد،

அரஃபா நாளில் கேட்கப்படும் துஆவின் சிறப்பு என்பது வெறும் அரஃபா இடத்திற்கு இருக்கும் ஹாஜிகளுக்கு மட்டுமல்ல மாறாக எல்லா இடத்தில் இருப்பவரும் அந்த சிறப்பை அடைந்துகொள்ள முடியும். சிறப்பு அந்த நாளுக்கு இருப்பதே இதன் காரணம். ஹாஜிகள் இடம் மற்றும் நேரம் என இரண்டு சிறப்பையும் ஒருசேர பெருகிறார்கள் என்பது அவர்களுக்கான கூடுதல் சிறப்பு.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அரஃபா தினத்தில் துஆ மற்றும் திக்ர் செய்வதற்கு மஸ்ஜிதிலேயே ளுஹர் தொழுகை முதல் மக்ரிப் வரை இருப்பது உதவியாக இருக்கும். அரஃபா தினத்தில் எல்லா கடமையான தொழுகைக்குப் பின் குறிப்பிட்ட தக்பீர் சொல்வது மார்க்கத்தில் வழிகாட்டப்பட்ட வணக்கமாகும். ஹாஜிகள் அல்லாத மற்றவர்களுக்கு அரஃபா தினத்தின் ஃபஜ்ரிலிருந்து பதிமூன்றாம் நாள் அஸ்ர் வரை தக்பீர் சொல்வது மார்க்க வழிமுறையாகும். ஹாஜிகள் அரஃபா தினத்தில் லுஹ்ர் மற்றும் அஸ்ர் தொழுத பிறகு தக்பீரை தொடங்கி முஸ்லிம்கள் தொழுகையை நிறைவேற்றிய பின் மூன்று முறை அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடி

اللهم أنت السلام ومنك السلام، تباركت يا ذا الجلال والإكرام

என்ற துஆவை ஓதிய பின்

الله أكبر، الله أكبر، لا إله الا الله، الله أكبر الله أكبر ولله الحمد

என்று இந்த தக்பீரை சொல்வார்கள்.

நம்பிக்கையாளர்களே! வருடத்தில் ஒரு முறை வரும் மகத்தான வாய்ப்பு மற்றும் அல்லாஹ்விடமிருந்து வரும் பரிசாக இந்த நாட்கள் இருக்கிறது. நாம் திக்ர், துஆ மற்றும் வனக்கங்கள் மூலம் நம்மிடமிருந்து சிறந்த செயல்களை வெளிபடுத்துவோம்.

“ஒரு அடியான் அல்லாஹ்வை ஒரு சாண் அளவு நெருங்கினால், அல்லாஹ் ஒரு முழம் அளவு அவனை நெருங்குவான். அவன் ஒரு முழம் அளவு அல்லாஹ்வை நெருங்கினால், (வலமாகவும் இடமாகவும் விரிந்த) இரு கைகளின் நீட்டளவு அவனை அல்லாஹ் நெருங்குவான். அல்லாஹ்வை நோக்கி அவன் நடந்துவந்தால், அவனை நோக்கி அல்லாஹ் ஓடிச்செல்வான்.”

இந்த ஹதீஸ் அல்லாஹ்வின் மகத்தான அருளை நமக்கு அறிவிக்கிறது. முஸ்லிம்கள் நல்லமல்களில் அதிகம் ஈடுபடுவதன் மூலம் அல்லாஹ் நல்லடியார்களுக்கு நன்மையையும் கண்ணியத்தையும் மற்றும் சிறப்புகளையும் விரைவாக வழங்குபவனாக இருக்கிறான்.

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள்புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத் தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் நீ பொருந்திக்கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்களுக்கு நாங்களே அதிகம் அறியாயம் செய்துகொண்டோம், உன்னைத் தவிர யாரும் பாவங்களை மன்னிப்பவர் யாரும் இல்லை, ஆகவே எங்களை மன்னித்து அருள்புரிவாயாக! நீயே மன்னிப்பவன் கருனையாளன்.

யா அல்லாஹ்! அரஃபா தினத்தை அடையும் வாய்ப்பை எங்களுக்கு வழங்கு, அதில் உன்னை நினைவு கூற, உன்னை அழகிய முறையில் வழிபட உதவிபுரிவாயாக!

ربنا آتنا في الدنيا حسنة وفي الآخرة حسنة وقنا عذاب النار. سبحان ربنا رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

ஈகைத் திருநாள் பேருரை

அல்லாஹு அக்பர் (ஒன்பது முறை) அல்லாஹு அக்பர் கபீரா வல்ஹம்துலில்லாஹி கஸீரா, ஸுப்ஹானல்லாஹி புக்ரதன் வ அஸீலா.

அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே, உயர்ந்தது அவனது மகிமை, பெரிதாகும் அவனது புகழ், பரிசுத்தமானவை அவனது நாமங்கள். அவனே புகழுக்குரியவன், அவனது அருள்களை எண்ணிப் பார்க்க கணக்கில் அடக்க இயலாது. அவனைத் தவிர வணக்கதிற்குரிய இறைவன் யாருமில்லை என நான் சாட்சியளிக்கிறேன்.

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறு எவரும் இல்லை, அவன் ஒருவனே, அவனுக்கெந்த இணையும் இல்லை. மேலும் நான் சாட்சியளிக்கிறேன், முஹம்மது நபி ﷺ அவர்கள் அவனுடைய அடியானும் தூதராகவும் இருக்கிறார். அல்லாஹ் அவரை வழிகாட்டலும் உண்மையான மதத்துடனும் அனுப்பினான். அல்லாஹ் அவர் மேல் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும், அவருடைய

குடும்பத்தினருக்கும் தோழர்களுக்கும் மேலும் அதிகமான சாந்தி உரித்தாகட்டும்.

அல்லாஹ்வை அஞ்சுங்கள் (தக்வா கொள்ளுங்கள்), ஏனெனில் அவனுக்கு அஞ்சுவதே சிறந்த துணை சாதனம், அது தான் மறுமை நாளில் வெற்றிக்குரிய வழி.

1. அல்லாஹ்வின் நல்லடியார்களே! நீங்கள் அல்லாஹ் சிறப்பித்த பல நாட்களில் ஒரு சிறந்த நாளில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இது அறுத்து பலியிடும் நாள், மகத்தான தியாகத் திருநாள், இஸ்லாத்தில் உள்ள மேலான கடமையான ஹஜ் கிரியையை நிறைவேற்றிய பின் வரும் நாள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்விடத்தில் மிகவும் சிறந்த நாள் யவ்முந் நஹர் (பிராணிகள் பலியிடும் நாள்), அதன் பின் வரும் நாள் யவ்முல் கர், அதாவது ஹாஜிகள் மினாவில் தங்கும் நாள். (அபூதாவூத் 1765)

யவ்முன் நஹர் - பிராணிகளை பலியிடும் தினம் மற்ற நாட்களைவிட மேலாகச் செய்யப்பட்டதற்கான ரகசியம் என்னவென்றால், ஹஜ் செயல்களில் பெரும்பாலானவை அந்த நாளில் ஒன்றாகச் சேர்வதாலாகும். ஹஜ் நிகழ்த்துவோர் 'ஜம்ரத்து அக்கபா'வுக்கு கல் எறிவதிலும், ஹதி பிராணியை அறூத்துபலிடுவதாலும், தலைமுடியை மழிப்பதாலும் அல்லது குறைப்பதாலும் ஹஜ் இஹ்ராமை களைவதிலும், 'தவாஃபுல் இஃபாதா' (கஅபாவை சுற்றுவது), ஸஃபா மற்றும் மர்வா மலைகளுக்கு இடையில் ஓடுவதிலும், ஹஜ் செய்யாதவர்களுக்கான குர்பானி பலியிடுவதிலும் ஆகிய செயல்கள் அந்த நாளில் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இந்த அம்சங்கள் வேறு எந்த நாளிலும் ஒன்றாகச் சேருவதில்லை.

الله أكبر، الله أكبر، لا إله إلا الله، والله أكبر، الله أكبر، ولله الحمد

2. அல்லாஹ்வின் அடியவர்களே! இஸ்லாமிய பண்டிகைகளை மற்ற எல்லா பண்டிகைகள் நிகழ்வுகளும் காட்டிலும் சிறப்பாக வகுப்பது என்ன வென்றால், அவை மிகவும் உயர்ந்த ஞானத்தினாலும், மகத்தான குறிக்கோள் களினாலும் சட்டமாக்கப் பட்டுள்ளன. அந்த குறிக்கோள்களில் சில : அல்லாஹ்வின் அடையாளங்களைப் பெருமை படுத்துவது, நம்பிக்கை கொண்டவர்களுக்கு மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தை ஏற்படுத்துவது, இந்த மார்க்கம் அதை பின்பற்றுபவர்களுக்கு எவ்வளவு தாராளமும் எளிமையும் கொண்டதாக இருக்கிறது என்பதைக் காட்டுவதாகும்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அரஃபா நாள், நஹ்ர் நாள் (பிராணி பலியிடும் நாள்), மற்றும் தஷ்ரீக் நாட்கள்- இஸ்லாமியர்களுடைய பண்டிகை நாட்களாகும். இவை சாப்பாடும் குடிப்பும் நடைபெறும் நாட்களாகும் (அபூதாவூத் 2419)

الله أكبر، الله أكبر، لا إله إلا الله، والله أكبر، الله أكبر، ولله الحمد.

3. ஈமான் கொண்டோரே! ஒரு அடியான் அல்லாஹ்வை நெருங்க உதவும் உண்ணதமான அமலாக இருப்பது குர்பானி பிராணியை பலியிடுதல். அது இப்ராஹீம் மற்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் இருவரின் சுன்னத்தாக இருக்கிறது.

4. குர்பானி கொடுக்கும்போது அதற்கென சில ஒழுங்குகளும் சுன்னத்துகளும் உள்ளன உதாரணமாக கிப்லாவை முன்னோக்குதல், அல்லாஹ்வின் பெயரை கொண்டு அறுத்து பலியிடுவது போன்றவை மற்றும் அறுக்கும்போது ‘அல்லாஹும்ம ஹாதா மின்க வலக, அல்லாஹும்ம ஹாதா அன்னீ வஅன் அஹ்லி பைத்தீ, அல்லாஹும்ம தகப்பல் மின்னீ’ என்ற துஆவை ஓதவேண்டும். (اللهم هذا منك ولك، اللهم هذا عني وعن أهل بيتي، اللهم تقبل مني)

5. பலியிடுபவருக்கு சாத்தியமானால் தன்னுடைய பலியை தானே வெட்டுவது விரும்பத்தக்கது, பிறகு அந்த பலியை இரு பெரிய

நரம்புகளைக் (அருகே இரண்டு பெரிய கழுத்து நரம்புகள்) வெட்டி வெட்ட வேண்டும்.

6. ஆனால், பலியிடுவதை வேறு ஒருவருக்கு நியமித்தாலும் எந்தத் தடை இல்லை. அந்த நியமித்தவர் இவ்வாறு கூறுவார்: ‘அல்லாஹ்வே, இது உங்களிடமிருந்து வரும் மற்றும் உங்களுக்கே உரியது. அல்லாஹ்வே, இது فلان (அவரது பெயரை குறிப்பிடும்) சார்பாக உள்ளது. அல்லாஹ்வே, இதைப் ஏற்றுகொள்ளவும்.

7. நீங்கள் ஒரு பிராணியை அறுப்பதாக இருந்தால் அந்தப் பிராணியின் கண்ணுக்கு எதிராக நீங்கள் கத்தியை தீட்டாதீர்கள் என்று சொன்னார்கள். ஒரு பிராணியை அறுக்கும் பொழுது இன்னொரு பிராணி அதை பார்க்கும்படி அறுக்காதீர்கள்.

8. பலியிடும் நேரம் நான்கு நாட்கள்: நஹ்ர் தினம் (துல்ஹிஜ்ஜா 10) மற்றும் தஷ்ரீக் நாட்கள் மூன்று (துல்ஹிஜ்ஜா 11, 12, 13). சிறந்தது ஈது நாள் ஆகும், ஏனெனில் அது துல்ஹிஜ்ஜாவின் பத்துநாளில் (அதாவது பாக்கியமான பத்துநாளில்) வருகிறது.

9. நபி ﷺ இரண்டு கொம்புடைய கிடாவை பலியாக கொடுத்தார். அவை வெண்மை நிறமானவையாக இருந்தன.

பலியில் (அதாவது பலியிட வேண்டிய மிருகங்களில்) நான்கு வகைகள் கூடாது:

- தெளிவாகக் கண்ணிழந்த மிருகம் (அவரின் கண்ணிழப்பானது தெளிவாக தெரியும்),
- தெளிவாக நோயுற்ற மிருகம்,
- தெளிவாக காலிழந்த அல்லது காலைச் சரிவடையாத மிருகம்,
- மூளை இல்லாத அல்லது சுத்தமாக்க முடியாத (குழப்பமான) மிருகம். (அஹ்மது 4/300)

10. நபி ﷺ ஈது நாளில் தமது பலியிலிருந்து தானே சாப்பிடாத வரை மற்ற உணவுகளை சாப்பிடமாட்டார்.

11.அல்லாஹ்வின் அடியவர்களே! நபியின் காலத்தில் முஸ்லிம்கள் ஹதி மற்றும் பலிகளை மிகவும் கவனமாக பராமரித்து, அதில் சிறந்த மற்றும் முழுமையானவற்றைத் தேர்ந்தெடுத்து கொண்டனர். பிராணியின் மதிப்பும் சிறப்பும் அதிகமானதாயின், அது அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்ததும், அதனை செய்யும் நபருக்கு அதிக நன்மையும் ஆகும். இப்னு தைமிய்யா (ரஹ்) கூறினார்: பிராணியின் நிலையை பொறுத்தே அதன் நன்மை அதிகமாக ஆகிறது.(மஜ்மூஉல்ஃபதாவா-4/468)

12.அல்லாஹ்வின் அடியவர்களே! பலி செய்யப்பட்ட மாட்டின் இறைச்சி இப்படித்தான் வழங்கப்படவேண்டும் என எந்தக் கட்டுப்பாடு இல்லாது இருந்தாலும், அதிலிருந்து சாப்பிடுவது, பயணத்திற்காக எடுத்துக்கொள்வது, ஏழைகளுக்கு உணவாக வழங்குவது போன்றவை ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன

﴿فَكُلُوا۟ مِنۡهَا وَأَطۡعِمُوا۟ ٱلۡقَانِعَ وَٱلۡمُعۡتَرَّ﴾

அவற்றிலிருந்து நீங்களும் உண்ணுங்கள்; (வறுமையிலும் கையேந்தாமல் இருப்பதைக் கொண்டு) திருப்தியாய் இருப்போருக்கும், இரப்போருக்கும் உண்ணக் கொடுங்கள் (அல்குர்ஆன் 22:36)

நபி ﷺ கூறினார்கள்: "சாப்பிடுங்கள் மற்றும் அதிலிருந்து பயணத்திற்கான உணவாக எடுத்துக்கொள்ளுங்கள்" என்றும். மற்றொரு அறிவிப்பில்: சாப்பிடுங்கள், உணவளியுங்கள் மற்றும் சேமித்துக் கொள்ளுங்கள். அல்புகாரி 1719, முஸ்லிம் 1973)
(இது பலி இறைச்சியைத் பயன்படுத்தும் ஸுன்னத் வழிமுறைகளைக் குறிக்கிறது)

13.பிராணியை பலியிட்டபின் அதிலிருந்து எதையும் விற்பனை செய்வதுஅனுமதிக்கப்படாதது - இறைச்சி மட்டுமல்லாமல் தோல் உள்ளிட்ட எதையும் விற்றுவிடக்கூடாது.

14.பலியிடப்பட்ட இறைச்சியில் இருந்து ஒரு பகுதியைக் காஃபிருக்கும் கொடுக்கலாம் - இதனால் அவருடைய மனதை இஸ்லாத்தின்பால் நெருக்கமடையச் செய்யலாம், மார்க்கத்தின் அடையாளங்களை

வெளிப்படுத்தலாம்.

15. இறைச்சி வெட்டும் தொழிலாளிக்கு (கசாப்) உழைப்புக்கான ஊதியமாக பலியிலிருந்து எதையும் - இறைச்சி, தோல் போன்றவற்றையும் - கொடுக்கக்கூடாது. ஆனால், அவருடைய உழைப்புக்காக தனியாக பணம் கொடுப்பது முறையானது.
16. அல்லாஹ்வின் அடியவர்களே! இந்த மகத்தான நாளுக்குப் பிறகு, பாக்கியமான நாட்கள் வருகின்றன - அவை தஷ்ரீக் நாட்கள். இதில் அல்லாஹ்வை அதிகம் நினைவுகூறும் படி அல்லாஹ் தன் கட்டளையை வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَاذْكُرُوا اللَّهَ فِيٓ أَيَّامٍ مَّعْدُودَٰتٍ﴾

குறிப்பிடப்பட்ட நாட்களில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்;
(அல்குர்ஆன் 2:203)

அதனால், ஈதின் நாட்களில் செய்ய வேண்டிய முக்கியமான அமல்களில் ஒன்று, தஷ்ரீக் நாட்கள் மூன்றிலும் தக்பீர் (الله أكبر...) கூறுவதை அதிகரிப்பது ஆகும்:

- **முழுமையான தக்பீர் (التكبير المطلق):** எந்த நேரத்திலும் கூறலாம் - துல்ஹிஜ்ஜாவின் கடைசி நாள் மாலை (மக்ரிப்) வரை.
- **நியமிக்கப்பட்ட தக்பீர் (التكبير المقيّد):** ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் கூறப்படும் - தஷ்ரீக் நாட்களின் மூன்றாவது நாளின் அஸர் தொழுகை வரை.

இரட்டையாக அல்லது மூன்றாக கூறலாம்.

الله أكبر الله أكبر لا إله إلا الله، الله أكبر الله أكبر ولله الحمد.

الله أكبر، الله أكبر، الله أكبر، لا إله إلا الله، والله أكبر، الله أكبر، الله أكبر، ولله الحمد.

17. அல்லாஹ்வின் நல்லடியார்களே! பெருநாள் தினம் மற்றும் தஷ்ரீக் நாட்கள் (11,12,13) என்பது உணவு உண்டு பானங்களை பருகும் நாட்கள். இந்த நாட்களில் நேன்பு நோற்பது அனுமதிக்கப்பட்டதல்ல.

நபி ﷺ கூறினார்கள் : தஷ்ரீக் நாட்கள் என்பது உணவு மற்றும் பானங்களுக்கான நாட்கள். (முஸ்லிம் 1141)

18. ஈதின் நோக்கங்களும், அதனுடைய மிகப்பெரும் நன்மைகளும், முஸ்லிம்களிடையேயான தொடர்பு, பரஸ்பர சந்திப்புகள், இதயங்களின் நெருங்காமை, ஒற்றுமை, துரோகம், வெறுப்பு மற்றும் பொறாமை ஆகியவற்றை அணைப்பதாகும். முஸ்லிம்களை ஒரே இடத்தில் கூடச் செய்து ஈது தொழுகையை நடத்தியுள்ள இஸ்லாமின் ஆற்றல், அவர்களை உண்மையின் மீது ஒன்றுபடுத்துவதிலும், தக்வா (அல்லாஹ்வை அஞ்சுதல்) மூலம் இதயங்களை இணைப்பதிலும் சான்றாகும்.

நூமான் பின் பஷீர் (ரலி) கூறுகிறார்: நபி ﷺ கூறியதாக : நம்பிக்கை கொண்டவர்களின் நட்பு, இரக்கம் மற்றும் பரிவு ஒரு உடலின் போல உள்ளது. உடலில் ஒரு உறுப்பில் வலி இருந்தால், மற்ற உறுப்புகளும் அதற்கு பதிலளித்து கவலை கொண்டு உறக்கம் குறைந்து உடல் காய்ச்சலுடன் பதிலளிக்கிறது. (முஸ்லிம் 2586)

19. ஈதில் செய்யவேண்டிய நல்ல செயல்களில் ஒன்றாக உறவுகளை பேணுவது உள்ளது. அல்லாஹ்வின் கட்டளையானது, துக்கத்திலும் மகிழ்ச்சியிலும் உறவுகளை பேணுவதுதான். உறவுகளை பேணுபவர் பேணப்படுவார்; உறவுகளை துண்டிப்பவர் துண்டிக்கப்படுவார்.

فعن عبدالرحمن بن عوف رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: قال الله عز وجل: أنا الرَّحمنُ، خلقت الرَّحِمُ، وشَقَقتُ لها مِن اسمي، فمَن يصلَها أصله، ومَن يقطَعَها أقطعه فأبُـتُّـهُ، أو قال: من يَبـتُّها أبُـتُّـهُ.

அப்துர்ரஹ்மான் பின் அவுஃப் (ரலி) கூறுகிறார்: நபி ﷺ கூறியதாக : அல்லாஹ்வின் பெயரில், நான் இரக்கமுள்ளவன்; நான் உரவுகளை பேணுவதை உருவாக்கினேன், அதை எனது பெயரிலிருந்து பிரித்தேன்.

யார் அதனை பேணினாலும், நான் அவரைக் காப்பேன்; யார் அதனை துண்டித்தாலும், நான் அவரை துண்டிப்பேன். (அஹ்மது 1/191)

அல்லாஹ்வின் அடியவர்களே! யார் தங்கள் உறவினர்களோடு, நண்பர்களோடு அல்லது அயலவர்களோடு கடுமையாக இருக்கின்றாரோ, அவர்களோடு சமாதானமாக இருக்க அவர்களை மன்னிக்கவும் முயலுங்கள்.
அல்லாஹ் கூறுகிறான் :

﴿فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُه عَلَى اللّٰهِ﴾

ஆனால், எவர் (அதனை) மன்னித்துச் சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது (அல்குர்ஆன் 42:40)

﴿اِنَّمَا الْمُؤْمِنُوْنَ اِخْوَةٌ فَاَصْلِحُوْا بَيْنَ اَخَوَيْكُمْ﴾

நிச்சயமாக முஃமின்கள் (யாவரும்) சகோதரர்களே; ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள்; (அல்குர்ஆன் 49:10)

அல்லாஹ்வின் அடியவர்களே! ஈதுக்கு வாழ்த்துக்கள் கூறுவது நன்மையும், அனுமதிக்கப்பட்டதும் ஆகும். இப்னு தைமிய்யா (ரஹ்) கூறியதாவது: ஈது நாளில், ஈது தொழுகைக்குப் பிறகு ஒருவருக்கொருவர் சந்திக்கும் போது,

(تقبل الله منا ومنكم، وأحاله الله عليك)‘அல்லாஹ் எங்களிடமிருந்தும் உங்களிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளட்டும்’, அல்லது ‘அல்லாஹ் உங்கள் மீது அதை (நன்மையை) கொண்டு வரட்டும்’ போன்றவையாக வாழ்த்துவார்கள். இது சில சஹாபாக்கள் செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன, மேலும் அஹ்மது மற்றும் பிற இமாம்கள் இதை அனுமதித்துள்ளனர் (மஜ்மூஉ ஃபதாவா 24/253)

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வின் அருள் பொறுந்திய (பெருநாள்) தினத்தை ஹராமான கேலிக்கை மற்றும் பாவங்களில்

கழிப்பதை விட்டு எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அதன் நீங்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகக் கூடும்.

الله أكبر، الله أكبر، لا إله إلا الله، والله أكبر، الله أكبر، ولله الحمد.

الله أكبر كبيرًا، والحمد لله كثيرًا، وسبحان الله بُكرةً وأصيلاً.

இரண்டாம் குத்பா

அல்லாஹ் மிகப்பெரியவன் (ஏழு முறை), அல்லாஹ் மிகப்பெரியவனாக இருக்கின்றான், வலிமைமிக்க அல்லாஹ்வுக்கு எல்லா புகழும், பகலிலும் இரவிலும் அல்லாஹ்வை பரிசுத்தப்படுத்துகிறோம் (துதிக்கிறோம்)

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده، أما بعد:

முஃமினான பெண்களே! அல்லாஹ் தனது குர்ஆனில் முஃமின்களுடைய தாய்மார்களை (நபி அவர்களின் மனைவிகளை) நோக்கி அறிவுறுத்தினான் :

﴿وَقَرْنَ فِيْ بُيُوْتِكُنَّ وَلَا تَبَـرَّجْنَ تَبَرُّجَ الْجَاهِلِيَّةِ الْاُوْلٰى وَاَقِمْنَ الصَّلٰوةَ وَاٰتِيْنَ الزَّكٰوةَ وَاَطِعْنَ اللّٰهَ وَرَسُوْلَهٗ﴾

(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள்; முன்னர் அஞ்ஞான காலத்தில் (பெண்கள்) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள்; தொழுகையை முறைப்படி உறுதியுடன் கடைப்பிடித்து தொழுங்கள்; ஜகாத்தும் கொடுத்து வாருங்கள். அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள்; (அல்குர்ஆன் 33:33)

இந்த அறிவுறுத்தல் என்பது முஃமின்களுடைய தாய்மார்களுக்காகவும், அவர்களின் பாதையில் நடக்கும் அனைத்து முஃமினான பெண்களுக்கும் மறுமை நாள் வரை ஆகும். எனவே, அல்லாஹ்வையே உங்கள் ரப்பாகவும், இஸ்லாமை உங்கள் மார்க்கமாகவும், நபி ﷺ அவர்களை உங்கள் நபியாகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட பெண்களே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். மனிதச்

சாத்தான்கள் மற்றும் ஜின் சாத்தான்களின் சூழ்ச்சித் திட்டங்களை விழிப்புடன் தவிருங்கள். வெளியிடப்படும் அழகு (தபர்ருஜ்) மற்றும் ஆண்கள் - பெண்கள் கலப்புக் கலாச்சாரத்தில் விழும் ஃபித்னாவிலிருந்து (குழப்பம்) எச்சரிக்கையுடன் இருங்கள்.

யார் பாதுகாப்பாக (இஸ்லாமிய நேர்மை வழியில்) இருக்க விரும்புகிறாரோ, அவர்கள் தங்களை நன்மை தரும் செயல்களில் ஈடுபடச் செய்யட்டும். பாவம் மற்றும் தீச்செயலில் ஈடுபடுகிறவர்களை பின் தொடர்வதை விட்டு விடட்டும். ஏனெனில், அவர்களைப் பின்தொடர்வது இதயத்தை பாழடையச் செய்வதில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.
அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَاللّٰهُ يُرِيْدُ اَنْ يَّتُوْبَ عَلَيْكُمْ وَيُرِيْدُ الَّذِيْنَ يَتَّبِعُوْنَ الشَّهَوٰتِ اَنْ تَمِيْلُوْا مَيْلًا عَظِيْمًا﴾

மேலும் அல்லாஹ் உங்களுக்குப் பாவமன்னிப்பு அளிக்க விரும்புகிறான்; ஆனால் தங்கள் (கீழ்தரமான) இச்சைகளைப் பின்பற்றி நடப்பவர்களோ நீங்கள் (நேரான வழியிலிருந்து திரும்பி பாவத்திலேயே) முற்றிலும் சாய்ந்துவிட வேண்டுமென்று விரும்புகிறார்கள் (அல்குர்ஆன் 4:27)

ஈது பண்டிகை உங்களுக்குப் பாக்கியமாக இருக்கட்டும்! அல்லாஹ் உங்கள்மீது மகிழ்ச்சியும், நல்வாழ்வும் நிலைத்திருக்கச் செய்யட்டும். ஆனந்தமும் உற்சாகமும் உங்கள்மீது பரிபூரணமாக பொழியட்டும்.

அல்லாஹ் உங்கள் நற்பணிகளை ஏற்கட்டும், உங்கள் சந்தோஷங்களை நிலைநிறுத்தட்டும், உங்கள் பாவங்களை மன்னிக்கட்டும், உங்கள் இதயங்களை நற்கிரியைகளால் மகிழ்ச்சியாக மாற்றட்டும்.

நீங்கள் ஆசைப்படும் நற்கனவுகள் நனவாகட்டும்; நல்ல செயல்களில் நீங்கள் வழிநடத்தப்படட்டும்.

பின், அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத்தும், சாந்தியும் கூறுங்கள். ஏனெனில், ஒருவர் நபி மீது ஒரு முறை ஸலவாத்து கூறினால்,

அதற்குப் பதிலாக அல்லாஹ் அவர் மீது பத்து மடங்கு ஸலவாத்து கூறுகிறான்.

اللهم صلِّ وسلِّم وبارك على عبدك ورسولك نبينا محمد، وعلى آله وصحبه أجمعين.

துல்ஹஜ் முதல் பத்தின் சிறப்புகள்

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும்

இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

அல்லாஹ் தமது படைப்பினரின் மீது உரிமையுடைய ரப்பாக இருப்பதற்கான சான்றுகளில் ஒன்றாக, சில காலங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மற்ற காலங்களைவிட உயர்வாக வைத்துள்ளார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறான காலங்களில் அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதமும் அடங்கும். அது மிகச் சிறந்ததும், பரிசுத்தமும் ஆன ஒரு மாதமாகும். இது ஹிஜ்ரி வருடத்தின் முதல் மாதமாகும் மற்றும் நான்கு பரிசுத்த மாதங்களில் ஒன்றாகும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿إِنَّ عِدَّةَ الشُّهُوْرِ عِنْدَ اللّٰهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِيْ كِتٰبِ اللّٰهِ يَوْمَ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ مِنْهَا اَرْبَعَةٌ حُرُمٌ ذٰلِكَ الدِّيْنُ الْقَيِّمُ فَلَا تَظْلِمُوْا فِيْهِنَّ اَنْفُسَكُمْ﴾

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் - அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை; இது தான் நேரான மார்க்கமாகும் - ஆகவே அம்மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்; (அல்குர்ஆன் 9:36)

அல்லாஹ் கூறுகிறான் (فلا تظلموا فيهن أنفسكم) அந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள் : இது பரிசுத்தமான அந்த நான்கு மாதங்களை குறிக்கிறது. ஏனெனில்

அவற்றில் பாவம் செய்வது மற்ற காலங்களை விட அதிக பாவமாய் கருதப்படுகிறது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இதைப் பற்றி கூறினார்கள் : فلا تظلموا فيهن أنفسكم என்பது அனைத்துக் காலங்களையும் பொருள்படுகிறது. ஆனால் அல்லாஹ் அதில் நான்கு மாதங்களைத் தனியாக குறிப்பிட்டு, அவற்றை பரிசுத்தமாக்கினான், அவற்றின் மரியாதையை உயர்த்தினான். அந்த மாதங்களில் பாவம் செய்தல் மிகப்பெரியதாகும், அதே போல் நல்ல செயலும் அதற்கான நன்மையும் மிக உயர்ந்ததாகும்.

இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் தனது தஃப்சீரில் கூறியதை சுருக்கமாகக் கூறினால்

கதாதா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் வார்த்தையான "فَلَا تَظْلِمُوا فِيهِنَّ أَنفُسَكُمْ (அந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள்) என்பது பற்றி - புனித மாதங்களில் (அஷ்ஷுஹூருல் ஹூரும்) செய்யப்படும் அநியாயம், மற்ற மாதங்களில் செய்யப்படும் அநியாயத்தைவிட மிகவும் பெரிய பாவமும் குற்றமும் ஆகும். அநியாயம் எப்போதும் பாவம்தான், ஆனால் அல்லாஹ் தனது விருப்பப்படி சில விஷயங்களை மிகவும் உயர்வாக மதிக்கிறான்.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ் தனது படைப்புகளில் சிலவற்றை தேர்ந்தெடுத்துள்ளான் - மலக்குகளிலிருந்து தூதர்களை, மக்களிலிருந்து தூதர்களை, பேச்சுகளிலிருந்து தம்முடைய ஞாபகத்தை (திக்ர்), பூமியிலிருந்து மஸ்ஜிதுகளை, மாதங்களில் இருந்து ரமலானையும் புனித மாதங்களையும், நாட்களில் இருந்து வெள்ளிக்கிழமையையும், இரவுகளில் இருந்து லைலத்துல் கதரையும் - இவையெல்லாம் அல்லாஹ் சிறப்பாக வைத்திருக்கிறான். எனவே, அல்லாஹ் உயர்வாக வைத்தவற்றை நீங்களும் உயர்வாக மதியுங்கள். அறிவும் ஞானமும்

உள்ளவர்களிடம் உள்ள விஷயங்கள், அவற்றை அல்லாஹ் எவ்வளவாக மதிக்கிறானோ அதன்படி தான் மதிக்கப்பட வேண்டும்.

وعَنْ أَبِي بَكْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: .. السَّنَةُ اثْنَا عَشَرَ شَهْرًا، مِنْهَا أَرْبَعَةٌ حُرُمٌ؛ ثَلَاثَةٌ مُتَوَالِيَاتٌ؛ ذُو الْقَعْدَةِ وَذُو الْحِجَّةِ وَالْمُحَرَّمُ، وَرَجَبُ مُضَرَ الَّذِي بَيْنَ جُمَادَى وَشَعْبَانَ.[٢٧٤]

வருடம் என்பது பன்னிரண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. (அவற்றில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருபவை. அவை துல்கஅதா, துல்ஹஜ் மற்றும் முஹர்ரம் ஆகியனவாகும். (மற்றொன்று) ஜமாதுல் ஆகிர், ஷஅபான் ஆகிய மாதங்களுக்கு இடையிலுள்ள ரஜப் மாதமாகும். (முஸ்லிம் 1163)

முஹர்ரம் மாதம் என்பது ஒரு "தடைசெய்யப்பட்ட (புனித) மாதம்" என்பதைக் குறிக்கும் வகையில் அந்த மாதத்திற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டுள்ளது - அதன் புனிதத்தையும் தடையையும் வலியுறுத்தும் பொருட்டு.

"ரஜப் முழர்" என்று அழைக்கப்படும் ரஜப் மாதத்திற்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டதற்கு காரணம், முழர் இனத்தவர்கள் அதை (அந்த மாதத்தை) மாற்றியதில்லை; எப்பொழுது வர வேண்டுமோ அந்த நேரத்தில் தான் வைத்தார்கள். ஆனால் மற்ற அரபுகளோ, அவர்களுடைய போர் நிலைமையின் அடிப்படையில் மாதங்களை மாற்றி வைத்துக் கொள்வார்கள் - இது "நஸீ (النسيء) " எனப்படும் முறையாகும்.

எனவே, இந்த புனிதமான நான்கு மாதங்களின் பெருமையை கவனமாகக் கருதி, அவை அல்லாஹ்வால் சிறப்பிக்கப்பட்டதால் அவற்றின் மரியாதையை காத்தல் வேண்டும். அவைகளில் ஒன்று: இந்த

[274] رواه البخاري (٣١٩٧)، ومسلم (١٦٧٩) .

மாதங்களில் போரைத் தொடங்குவதற்குத் தடை இருக்கிறது. மேலும், இந்த மாதங்களில் பாவங்களில் விழும் அபாயத்திலிருந்தும் அதிக கவனம் தேவை.

நபி ﷺ கூறியதாக அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்: ரமழான் மாதத்தில்
உள்ள நோன்புகளுக்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதம் முஹர்ரம்
மாதத்தின் நோன்பாகும். (முஸ்லிம்:1163)
முஹர்ரம் மாதத்தில் விருப்பமான நோன்புகளை அதிகமாகச் செய்வது மிகவும் புண்ணியமானது என்பதற்கு உறுதியான ஆதாரம் உள்ளது.
அதாவது, முஹர்ரம் மாதத்தை "அல்லாஹ்வின் மாதம்" என்று சேர்த்துக் கூறுவது, அந்த மாதம் அருமையும், புனிதத்தன்மையும் கொண்டது என்பதை உணர்த்தும்.

ஈமான் கொண்ட சகோதரர்களே!
அல்லாஹ் ரப்பாக (உயர்ந்த இறைவனாக) இருப்பதற்கான அடையாளங்களில் ஒன்று
அவன் சில நாட்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றில் செய்யப்படும் வழிபாடுகளுக்கு அதிக மகத்துவம் அளித்திருக்கிறான்.
அத்தகைய நாட்களில் ஒன்றுதான் - ஆஷூரா நாள் (இஸ்லாமிய ஹிஜ்ரி மாதமாகிய முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள்).
இந்த நாளின் பெருமைக்கு ஓர் அழகான பின்னணி உள்ளது:
அல்லாஹ் தனது தூதரான மூஸா (அலை) அவர்களை கடலில் மூழ்க விடாமல் காப்பாற்றி, ஃபிர்அவ்னும் அவனுடைய கூட்டமும் அழிக்கப்பட்டபோது,
மூஸா (அலை) அந்த உதவிக்காக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க, முஹர்ரம் மாதம் பத்து ஆம் நாளில் நோன்பு இருந்தார்கள்.

பின் அந்த நாளில் அஹ்லுல் கிதாபும் (யூதரும் நஸ்ராணிகளும்) நோன்பு இருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, அறியாமை காலத்துப் பூர்விக அரபுகளும் - வேறொரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - அந்த நாள் நோன்பை ஏற்றுக்கொண்டனர்.

மக்காவிலிருந்த குறைஷ் கோத்திரம் கூட அதனை அவர்கள் ஜாஹிலிய்யா (இஸ்லாமுக்கு முந்தைய காலம்) காலத்திலேயே நோன்பு இருந்தனர்.

பின்னர், நபி முஹம்மது ﷺ அவர்கள் மதீனாவுக்குத் ஹிஜ்ரத் செய்து வந்தபோது,

யூதர்கள் ஆஷூரா நாளில் நோன்பு இருப்பதைப் பார்த்தார்கள்.

அப்போது நபி அவர்கள் அவர்களிடம் கேட்டார்கள்: "இந்த நாள் என்ன? நீங்கள் ஏன் இதில் நோன்பு இருக்கின்றீர்கள்?"

அவர்கள் (யூதர்கள்) பதிலளித்தார்கள்: இது ஒரு மிகச் சிறப்பான நாள். இதில் அல்லாஹ் மூஸா (அலை) மற்றும் அவருடைய கூட்டத்தை காப்பாற்றி,

ஃபிர்அவ்னையும் அவனுடைய கூட்டத்தினரையும் மூழ்கடித்தான். அந்த உதவிக்காக மூஸா (அலை) நோன்பு இருந்தார், அதனால் நாங்களும் அந்த நாளில் நோன்பு இருக்கின்றோம்.

அதற்கு நபி முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்:

"மூஸா உடனான நெருக்கம் நாங்கள் கொண்டதே அதிகம்; நீங்கள் அல்ல"!

எனவே, நபி ﷺ அவர்கள் ஆஷூரா நாளில் நோன்பு இருந்தார்கள், மேலும் முஸ்லிம்களையும் நோன்பு இருக்கச் சொன்னார்கள். (புகாரி 2004)

யூதர்கள் அந்த நாளை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுவார்கள். அந்த நாளில் தங்கள் பெண்களுக்கு அழகான நகைகள் மற்றும் அழகிய

ஆடைகளை அணிவிப்பார்கள்."الشارات" என்றால் அழகான, சிறந்த உடைகள்.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:
ஆஷூரா நாளை யூதர்களும் கிருஸ்தவர்களும் மிகுந்த மரியாதையுடன் மதிக்கிறார்கள். (முஸ்லிம் 1134)

ஆயிஷா(ரழி) அறிவிக்கிறார்கள்: “முஹர்ரம் 10வது நாள் (ஆஷூரா) அன்று

அறியாமைக் காலத்தில் குறைஷிகள் நோன்பு நோற்று வந்தனர். நபி ﷺ அவர்களும் அக்காலத்தில் அதில் நோன்பு நோற்று வந்தார்கள். அவர்கள் மதீனா வந்தபோதும் அதில் தானும் நோன்பு நோற்று, பிறரையும் நோன்பு நோற்கும்படி ஏவினார்கள். ரமழான் மாத நோன்பு கடமையாக்கப்பட்டபோது ஆஷூரா நோன்புவிடப்பட்டுவிட்டது. விரும்பியவர் அதில் நோன்பு இருந்தார். விரும்பியவர் அதை விட்டுவிட்டார்கள். (புகாரி 2002)

அவர்கள் மேலும் கூறினார்கள்:
"ஆஷூரா நாள் என்பது கஅபா மீது மூடுதிரைகள் (ஸ்தூர்கள்) வைக்கப்படும் நாள் ஆகும்." (புகாரி 1592) அதாவது, அந்த நாளில் கஅபாவை மதித்து அதன் மீது துணி முதலியவற்றால் அழகான போர்வைகள் போர்த்தப்பட்டு, அதன் புனிதத்தை பரைசாற்றுவார்கள்.

பின்னர், அல்லாஹ் ரமலான் மாத நோன்பை கட்டாயமாக்கிய பின் நபி ﷺ அவர்கள் முஸ்லிம்களிடம் கூறினார்கள்:
ஆஷூரா நாளில் யார் நோன்பு இருக்க விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நோன்பு இருக்கலாம்; யார் விரும்பவில்லையோ அவர்கள் நோன்பு இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதாவது, ஆஷூரா நோன்பு, ரமலான் மாத நோன்பு போல கட்டாயமில்லை,

ஆனால் விருப்பத்திற்குரிய (முஸ்தஹப்) நற்செயலாகும். அதில் நோன்பு

இருந்தால், அதிக நன்மையை பெரும் வாய்ப்பு அல்லாஹ்வின் நாட்டத்தால் கிடைக்கும்.

ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து கேட்டார்: "நீங்கள் எவ்வாறு நோன்பு இருக்கிறீர்கள்?"

அதற்கு நபி அவர்கள் பதிலளித்தார்கள்: "மாதத்திற்கு மூன்று நாட்கள் நோன்பு இருக்கிறேன்.ரமலான் மாதம் முதல் அடுத்த ரமலான் வரைக்கும் - அதாவது வருடம் முழுவதும். இது முழு வாழ்நாள் முழுவதுமான நோன்பு போலும்.

மற்றொரு ஹதீஸில், நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "அறஃபா நாளின் நோன்பு அதற்கு முந்தைய வருடம் மற்றும் பின்வரும் வருடத்தின் பாவத்தையும் அல்லாஹ் மன்னித்து விடுவான் என்று ஆதரவு வைக்கிறேன்."

"ஆஷூரா நாளின் நோன்பு - அது மூலம், அதற்கு முந்தைய வருடத்தின் (பாவங்களை) அல்லாஹ் மன்னிப்பான் என்று ஆதரவு வைக்கிறேன்." (முஸ்லிம் 1162)

மனிதன் கடந்த ஆண்டில் செய்துள்ள சிறிய பாவங்கள், இந்த நாளில் நோன்பு இருப்பதனால் அல்லாஹ் மன்னித்து விடுவான். இது அல்லாஹ்வின் அருளின் ஒரு பெரிய சான்று, ஒரு நாளின் நோன்பு மூலம் முழு ஆண்டின் பாவங்களை நீக்குகிறான். ஆனால், பெரிய பாவங்கள் (கபீரா) பொருத்தவரை, உளத்தூய்மையோடு பாவமன்னிப்பு கேட்டால் மட்டுமே மன்னிப்பான். அல்லாஹ்வே மிகப்பெரும் அருளாளன்.

ஈமான் கொண்டோர்களே! ஆஷூரா நாளில் நோன்பு இருப்பது மிக முக்கியமானது என்பதால், நபி ﷺ அவர்கள் இந்த நாளில் நோன்பு இருப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நான் நபியை ﷺ பார்த்த போது, அல்லாஹ் சிறப்பாக மதித்த நோன்புகளுக்குள்

அவர் மிகுந்த முயற்சி செய்த நாள் இது தான், ஆஷூரா நாளும், மேலும் ரமலான் மாதமும் தான்." (புகாரி 2006, முஸ்லிம் 1132)

ஸலஃப்களில் சிலர், ஆஷூரா நாளில் நோன்பு இருந்தார்கள், அத்துடன் பயணத்திலும் அதனை விட்டு விடாமல் இருந்தனர் - அதனால் அது தவறிப் போகுவதை அச்சமாக நினைத்தார்கள் என்று கூறப்படுகின்றது.

இப்னு ரஜப் (رحمه الله) கூறினார்: ஸலஃப்களில் ஒருசிலர் ஆஷூரா நாளில் பயணத்திலிருந்தும் நோன்பு இருந்தார்கள்; அவர்களில்: இப்னு அப்பாஸ், அபு இஸ்ஹாக் அஸ்ஸபீயி, அஸ்ஸுஹ்ரி போன்றோர் உள்ளனர்.

அஸ்ஸுஹ்ரி மேலும் கூறினார்: "ரமளான் மாதத்திற்கு மற்ற நாட்களில் நோன்பு நோற்க அனுமதி இருப்பதால் (காரணம் இருந்தால்) நோன்பை விட்டு விடலாம், ஆனால் ஆஷூரா நாளை தவற விடக் கூடாது.

பயணங்களில் நோன்பு நோற்கலாம் என்று இமாம் அஹ்மது அவர்கள் அறிவிப்பில் வந்துள்ளது. (லதாயிஃபுல் மஆரிஃப், பக்கம்.110)

ஸஹாபாக்கள் (رضي الله عنهم) ஆஷூரா நாளில் தங்கள் சிறுவர்களுக்கு நோன்பை பழக்கமாக்க கற்பித்தனர்.

அதன்பற்றி, ருபைய்யிஃ பின்த் முஅவ்வித் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"நபி ﷺ ஆஷூரா நாளின் காலையில் அன்ஸாரிகளின் கிராமங்களுக்கு தூதுவரை அனுப்பி கூறினார்கள் : 'யார் காலை உணவு எடுத்துக் கொண்டாரோ, அவர் பகல் முழுவதும் நோன்பை நிறைவேற்ற வேண்டும்; யார் காலை உணவு எடுத்துக் கொள்ளவில்லையோ அவர் அப்படியே நோன்பை தொடரட்டும்'.

அவர் கூறினார்: "அதன்பிறகு நாங்கள் ஆஷூரா நாளில் நோன்பு வைத்தோம், நாங்கள் சிறுவர்களுக்கும் நோன்பை பழக்கமாக்கினோம், அவர்கள் அதில் சோம்பல் ஆகாமல் விளையாட்டு பொருள்களை

கொடுத்தோம். உணவைத் நினைத்து அழுகிறானால் அதை கொடுத்து, இஃப்தார் நேரம் வரை காக்க வைத்திருப்போம். (புகாரி 1960)

அல்லாஹ்வின் நல்லடியார்களே!

ஆஷூரா நாளில் நோன்பு இருப்பது ஸுன்னத் முறைகளில் ஒன்று, அதனுடன் ஒன்பதாம் நாளும் நோன்பு இருத்தல் ஸுன்னத் ஆகும்.

இதற்கு ஆதாரம்: நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "அடுத்த வருடம் நான் இருந்தால், நான் ஒன்பதாம் நாளிலும் நோன்பு இருப்பேன்" என்று சொன்னது.

அதாவது, "நான் அடுத்த ஆண்டு இருந்தால், பத்தாம் நாளுடன் ஒன்பதாம் நாளையும் நோன்பு நோற்பேன்" என்று அர்த்தம். ஆனால், நபி ﷺ அவர்கள் அடுத்த ஆண்டின் ஆஷூரா நாளை அடையுமுன் மரணித்துவிட்டார்கள்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! ஆஷூரா நாளான பத்தாம் நாளுடன் ஒன்பதாம் நாளும் நோன்பு இருப்பதற்கான காரணம் என்னவெனில் - யூதர்கள் பத்தாம் நாளில் நோன்பு இருப்பதால், அவர்களைப் போல முஸ்லிம்கள் ஒப்பாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது வகுத்தளிக்கப்பட்டது. யூதர்கள் ஆஷூரா நாளான **பத்தாம் நாளில்** மட்டுமே நோன்பு இருந்தனர். நபி ﷺ அவர்கள் அவர்களது வழிபாடு முறைகளில் அவர்களைப் போன்றே இருப்பதை விரும்பவில்லை. அதனால், **முஸ்லிம்கள் அவர்களிடம் ஒத்துபோகாத வண்ணம்** பத்தாம் நாளுடன் **ஒன்பதாம் நாளையும் நோன்பு இருக்க** வழிகாட்டினர்.

இது தான் **இஸ்லாமிய ஷரீஅத்தின் தனிச்சிறப்பு** - முஸ்லிம்கள் தங்களது வழிபாடுகளில் மற்ற மதத்தவர்களிடமிருந்து தனித்தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதே அதன் நெறி.

இப்போது ஒரு கேள்வி:

ஆசூரா நாளான பத்து ஆம் நாளை மட்டும் நோன்பு இருக்கலாமா?

பதில்: **ஆம்**, அது அனுமதிக்கப்பட்டது.

ஆனால், **மிகச் சிறந்தது**, பத்து ஆம் நாளுடன் **ஒன்பதாம் நாளையும்** சேர்த்து நோன்பு இருத்தல். ஏனெனில் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: **அடுத்த வருடம் நான் இருந்தால், நான் ஒன்பதாம் நாளிலும் நோன்பு இருப்பேன்** என்று.

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم،

أقول قولي هذا، وأستغفرالله لي ولكم فاستغفروه، إنه هو الغفور الرحيم.

இரண்டாம் உரை

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده، أما بعد،

ஓ முஸ்லிம்களே! அல்லாஹ் பகலையும் இரவையும் மிகப் பெரிய நோக்கத்திற்க்காக உருவாக்கினான், அது அவனை வழிபடுவதாகும். அவை விளையாட்டாக அல்லது வெறுமைக்காக உருவாக்கப்படவில்லை.

அல்லாஹ் கூறுகிறான் :

وَهُوَ الَّذِىْ جَعَلَ الَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً لِّمَنْ اَرَادَ اَنْ يَّذَّكَّرَ اَوْ اَرَادَ شُكُوْرًا

இன்னும் சிந்திக்க விரும்புபவருக்கு, அல்லது நன்றி செலுத்த விரும்புபவருக்கு அவன்தான் இரவையும், பகலையும் அடுத்தடுத்து வருமாறு ஆக்கினான். (அல்குர்ஆன் 25:62)

اۨلَّذِىْ خَلَقَ الْمَوْتَ وَالْحَيٰوةَ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا

உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்; (அல்குர்ஆன் 67:2)

عَنْ أَبِي بَرْزَةَ الأَسْلَمِيِّ رضي الله عنه قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: لَا تَزُولُ قَدَمَا عَبْدٍ يَوْمَ القِيَامَةِ حَتَّى يُسْأَلَ عَنْ عُمُرِهِ فِيمَا أَفْنَاهُ، وَعَنْ عِلْمِهِ فِيمَ فَعَلَ، وَعَنْ مَالِهِ مِنْ أَيْنَ اكْتَسَبَهُ وَفِيمَ أَنْفَقَهُ، وَعَنْ جِسْمِهِ فِيمَ أَبْلَاهُ.[٢٧٥]

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : மறுமையில் அடியான் தன்னுடைய வாழ்நாளை எவ்வாறு கழித்தான்? அவனுடைய கல்வியை கொண்டு என்ன செய்தான்? செல்வத்தை எப்படி சம்பாதித்தான்? எவ்வழியில் செலவு செய்தான்? அவனுடைய உடலை எவ்வழியில் பயன்படுத்தினான்? ஆகிய கேள்விகளுக்கு அவன் பதிலளிக்காமல் அவனுடைய பாதங்கள் நகராது. (திர்மிதி 2417)

நம்பிக்கையாளர்களே, இந்த நாட்களில் நாங்கள் ஒரு ஆண்டினை விட்டு போகின்றோம், புதிய ஒரு ஆண்டை வரவேற்கின்றோம். நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்கிறேன் : கடந்த ஆண்டில் நாம் என்னென்ன அமல்களை செய்தோம்? புதிய ஆண்டில் நாம் என்ன அமல்களை செய்வோம்? ஆண்டுகள் விரைவாக கடந்து போகின்றன. இந்நிகழ்ச்சி கடந்த வருடம் ஒரு நாள் போன்று, அல்லது ஒரு மணிநேரம் போன்று உணரப்படுகின்றது. ஆகவே, நாம் நம் செயற்பாடுகளை மதிப்பிட வேண்டும். எவ்வளவு நேரத்தை இறைவனின் சுவனத்துக்கான வழியில் மற்றும் நரகத்திலிருந்து தூரமாகவும் பயன்படுத்தினோம்? அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதில் எவ்வளவு விரைவாக செயல்பட்டோம்? எவ்வளவு நஃபிலான தொழுகை மற்றும் நோன்புகளை நோற்றோம்? எவ்வளவு ஸதகா செய்தோம்? எவ்வளவு இறைவனை நினைவு கூர்ந்தோம்? எவ்வளவு நாட்கள் பள்ளிவாசலுக்கு விரைவில் சென்றோம்? நாங்கள் பாவங்களையும் தவறுகளையும் தவிர்த்துள்ளோமா? ஹராமான காட்சிகளை விட்டு நம் பார்வைகளை தாழ்த்தியுள்ளோமா? நம் நாவுகளை புறம் மற்றும் கெட்ட

275 رواه الترمذي (٢٤١٧) وقال: هَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ.

பேச்சுக்களிலிருந்து பாதுகாத்தோமா? நாங்கள் மனங்களைக் கஷ்டங்களிலிருந்து, பொறாமையிலிருந்து, வெறுப்பிலிருந்து சுத்தமாக்கினோமா? நாம் நம் உறவுகளுடன், நண்பர்களுடன், குடும்பத்தினருடன் நல்ல முறையில் பேணி வாழ்ந்தோமா? நம் மனைவிமார்கள் மற்றும் பெண் மக்களுக்கு எவ்வளவு ஹிஜாபின் நோக்கத்தை குறித்தும் வெட்கத்தை குறித்தும் அறியாமை கால பெண்கள் போல வெளியே சுற்றித்திரிவது குறித்தும் ஆண் பெண் கலப்பு குறித்தும் எச்சரித்துள்ளோம்?

மக்களே! ஒரு ஆண்டின் முடிவும் மற்றொரு ஆண்டின் துவக்கமும் நமக்கு மூன்று முக்கியமான விஷயங்களை உணர்த்துகிறது: முதலில், இறைவனை நன்றி கூறுவது, ஏனெனில் அவன் நமக்கு அதிக காலம் வாழ வாய்ப்பளித்தான். இரண்டாவது, கடந்த காலத்தை நாம் எப்படி இருந்தோம் என நம்மை நாமே மதிப்பிடுவது. மூன்றாவது, எஞ்சிய காலத்தில் நமது வாழ்க்கையை சரிசெய்யும் முயற்சிகளை மேற்கொள்ளுவது.

உமர் (ரலி) கூறினார் : நீங்கள் விசாரிக்கப்படும் முன் உங்களை நீங்களே விசாரித்துக்கொள்ளுங்கள். மிகப் பெரும் நோக்கத்திற்காக உங்களை (அமல்களால்) அழகுபடுத்திக் கொள்ளுங்கள். நிச்சயமாக யார் உலகில் தன்னை தானே விசாரித்துக்கொண்டாரோ அவருடைய மறுமையில் விசாரணை எளிமையானதாக இருக்கும். ஆகவே, அமல்களை (செய்யுங்கள்) என் அன்பான முஸ்லிம்களே! நம் இறுதிநேரம் வரும் முன்னால் அமல்கள் அமல்கள் என அதில் கவனமாக இருங்கள். (திர்மிதி 2459க்கு பின்)

அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் நமக்கு மகத்தான கட்டளையை கொண்டு ஏவியுள்ளான்,

﴿إِنَّ اللّٰهَ وَمَلٰٓئِكَتَهٗ يُصَلُّوْنَ عَلَى النَّبِيِّ ۚ يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நாட்களில் சிறந்தது ஜுமுஆ (வெள்ளிக்கிழமை) நாளாகும். எனவே, அதில் என்மேல் அதிகமாக ஸலவாத் சொல்லுங்கள். ஏனெனில், உங்கள் ஸலவாத்துகள் எனக்கு எடுத்துக் காட்டப்படும்

اللهم صل وسلم على عبدك ورسولك محمد، وارض عن أصحابه، وعن التابعين، ومن تبعهم بإحسان إلى يوم الدين.

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி ﷺ மீது அருள் புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக் கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அகீதாவை காப்பாயாக! அமைதி மற்றும் ரிஸ்கை உறுதிபடுத்துவாயாக!

எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தவறுமாறு செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு (ரஹ்மத் என்னும்) நல்லருளை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளியாவாய்!"

யா அல்லாஹ்! நாங்கள் அறிந்த அறியாத எல்லா நன்மைகளையும் உன்னிடம் கேட்கிறோம், மேலும் நாங்கள் அறிந்த அறியாத எல்லா பாவங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! உன்னிடம் சுவனத்தையும் அதற்கு எங்களை கொண்டு செல்லும் சொல்லையும் செயலையும் கேட்கிறோம். மேலும் நரகத்தை விட்டும் அதற்கு இட்டுச்செல்லும் சொல் மற்றும் செயல்களை விட்டும் பாதுகாவல் தேடுகிறோம்.

யா அல்லாஹ்! ஷைத்தானின் சூழ்ச்சிகள் மற்றும் குழப்பங்களை விட்டு பாதுகாப்பு கேட்கிறோம்!

அனைத்து முஸ்லிம்களின் நிலைமையை நீ சீர்படுத்துவாயாக!

ஈதுல் பித்ர் பெருநாள் உரை

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது! நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடமே பாவமன்னிப்புத் தேடுகின்றோம். எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயற்களின் தீங்குகளை விட்டும் அவனிடமே பாதுகாப்புத் தேடுகின்றோம். அவன் யாரை நேர்வழிப்படுத்துகின்றானோ, அவரை யாராலும் வழிகெடுக்கமுடியாது. யாரை அவன் வழிதவறச் செய்கின்றானோ, அவரை யாராலும் நேர்வழிப்படுத்தமுடியாது. ‘அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படத் தகுதியான கடவுள் யாரும் இல்லை, அவனுக்கு எந்த ஒரு நிகரும் இல்லை எனவும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது அடியாரும் தூதரும் ஆவார் எனவும்’ நான் சாட்சியம் அளிக்கின்றேன்,

அல்லாஹ்வுடைய அடியார்களே! அல்லாஹ்வை அஞ்சவேண்டிய முறையில் அஞ்சுங்கள். இஸ்லாத்தின் பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். இந்த மாதத்தை பரிபூரணமாக அடையச் செய்தமைக்காக அல்லாஹ்வைப் புகழுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அது மாபெரும் அருட்கொடையே. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿وَلِتُكۡمِلُواْ ٱلۡعِدَّةَ وَلِتُكَبِّرُواْ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمۡ وَلَعَلَّكُمۡ تَشۡكُرُونَ ١٨٥﴾

(سورة البقرة : ١٨٥)

“குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).” (ஸூரா அல் பகரா: 185)

இதோ நாம் எண்ணிக்கையை முழுமைப்படுத்திவிட்டோம். அல்லாஹ்வைப் பெருமைப்படுத்திவிட்டோம். நன்றிசெலுத்துதல் எனும் வணக்கம் மாத்திரமே எஞ்சியுள்ளது.

2. முஸ்லிம்கள் “குறிப்பிட்ட சில நாட்கள்” என்ற அல்லாஹ்வுடைய வார்த்தை எவ்வளவு உண்மையானது! எவ்வளவு வேகமாக அந்த நாட்கள் சென்றுவிட்டன! அவை எங்களைக் கடந்து பயணித்துவிட்டன. அவை எவ்வாறு சென்றன என்பதை உங்களால் உணரமுடிந்ததா? அவை எவ்வாறு எம்மை விட்டுச் சென்றன என்பதை புரிந்துகொள்ள முடிந்ததா?

3. விசுவாசிகளே! உங்களுக்கு சுபசோபனம் உண்டாகட்டும்! உங்கள் இந்த மாதத்தில் நோன்பு நோற்றீர்கள். உங்களுக்கு வாழ்த்துக்கள்! அதன் இரவுகளில் நின்று வணங்கினீர்கள். உங்களுக்கு வாழ்த்துக்கள்! சில மக்கள் இந்த மாதத்தின் இறுதி வரை அடைய முன்னர் மரணித்துவிட்ட நிலையில், நீங்கள் அதன் இறுதி வரை இருந்தீர்கள். அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவனுக்கே எல்லாப் புகழும்.

4. விசுவாசிகளே! ரமழான் நோன்பு எனும், இஸ்லாமியக் கடமைகளில் ஒரு கடமையை நிறைவுசெய்யும் தருவாயில் வரும் எமது பெருநாளை முன்னிட்டு உங்களுக்கு வாழ்த்துக்கள்! நீங்கள் அல்லாஹ்வைப் பெருமைப்படுத்துகின்றீர்கள்! அவனை ஒருமைப்படுத்துகின்றீர்கள்! அவனை மகத்துப்படுத்துகின்றீர்கள்! - அல்லாஹ்வின் உத்தரவைக் கொண்டு -உங்கள் நன்மைகள் அதிகரித்துவிட்டன. பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன உங்கள் அந்தஸ்த்துக்கள் உயர்த்தப்பட்டிருக்கும்.

5. அல்லாஹ்வுடைய அடியார்களே! அல்லாஹ்வுடைய அறிவுஞானத்தின் அடிப்படையில், இரு முக்கியமான நிகழ்வுகளுக்குப் பின்னர் எங்களுக்கு இரு பெருநாட்களை மார்க்கமாக்கியுள்ளான். அதாவது, எமது நோன்பை நிறைவுசெய்த பின்னர், ஈதுல் பித்ர் மற்றும் எமது ஹஜ் கடமையை நிறைவுசெய்த பின்னர் ஈதுல் அழ்ஹா. எனவே எமது பெருநாட்கள் மார்க்கமாகவும், வணக்கமாகவும் உள்ளன. தொழுகையாகவும், தக்பீராகவும் உள்ளன. ஸகாதுல் பித்ராகவும், ஸகாது நப்ஸ் (உளத்தூய்மை) ஆகவும் உள்ளன. மகிழ்ச்சியாகவும், உறவுகளை சேர்ந்து நடப்பதாகவும் உள்ளன. ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வதாகவும், நேசமாகவும் உள்ளன. கடந்தவற்றை மன்னிப்பதாகவும், உறவுகளை மீட்டெடுப்பதாகவும் உள்ளன. வலிகளையும், குரோதங்களையும் மறப்பதாக உள்ளன. எனவே, தனது உறவினருடன், அல்லது நண்பருடன் குரோதமாகவோ, விரோதித்தோ இருந்தவர், இந்தப் பெருநாளை, மீண்டும் சேர்ந்து நடக்கவும், உங்களில் சந்தோசத்தை ஏற்படுத்திடவும் வாய்ப்பாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

6. விசுவாசிகளே! . இணைவைப்பாளர்கள் மற்றும் வழிகேடர்கள் போன்ற ஏனையோரது பெருநாட்கள் போன்றல்லாது வரும் எமது பெருநாளை முன்னிட்டு உங்களுக்கு வாழ்த்துக்கள்! ஏனெனில், அவர்களது பெருநாட்கள் பாவத்தையும், அல்லாஹ்வை விட்டும் தூய்மைப்படுத்துவதையுமே அறிவிக்கின்றன.

அல்லாஹ்வுடைய அடியார்களே! இந்த அருட்கொடைகளைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள். அல்லாஹ் கூறுகின்றான் :

﴿ قُلْ بِفَضْلِ ٱللَّهِ وَبِرَحْمَتِهِۦ فَبِذَٰلِكَ فَلْيَفْرَحُوا۟ هُوَ خَيْرٌ مِّمَّا يَجْمَعُونَ ﴿٥٨﴾ ﴾[يونس: ٥٨]

“அல்லாஹ்வின் அருட்கொடையினாலும், அவனுடைய பெருங்கிருபையினாலுமே (இது வந்துள்ளது, எனவே) - இதில் அவர்கள் மகிழ்ச்சியடையட்டும், அவர்கள் திரட்டி வைத்திருக்கும் (செல்வங்களை) விட இது மிக்க மேலானது” என்று (நபியே!) நீர் கூறும்” (ஸூரா யூனுஸ் : 58)

அல்லாஹ்விடம் மேலும் கேளுங்கள்.

7. முஸ்லிம்களே! அழகுபடுத்திக்கொள்ளுங்கள்! அலங்காரம் எடுத்துக்கொள்ளுங்கள்! நறுமணம் பூசிக்கொள்ளுங்கள்! இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒவ்வொரு பெருநாளிலும், மனம் பூசுவதையும், அலங்காரம் எடுத்துக்கொள்வதையும் அறிஞர்கள் விரும்பத்தக்கதாகக் கருதியுள்ளதைக் கேட்டுள்ளேன்.”

8. விசுவாசிகளே! உங்கள் வீடுகளையும், உள்ளங்களையும் திறந்தவிடுங்கள்! ரமழானின் அமல்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென ஒருவருக்கொருவர் பிரார்த்தித்துக்கொள்ளுங்கள்! ஒருவரையொரவர் வாழ்த்திக்கொள்ளுங்கள்! நபித்தோழர்கள் ஒருவருக்கொருவர், “அல்லாஹ் எம்மிடமிருந்தும், உங்களிடமிருந்தும் ஒப்புக்கொள்வானாக!” என்று பிரார்த்தித்துக்கொள்வார்கள்.

9. முஸ்லிம்களே! நடந்துமுடிந்தவற்றை மன்னித்துவிடுவது மிகச் சிறந்த வணக்கங்களில் ஒன்றாகும். அதற்கு அல்லாஹ் அளவில்லாத கூலிகளை வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ وَجَزَٰٓؤُا۟ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا ۖ فَمَنْ عَفَا وَأَصْلَحَ فَأَجْرُهُۥ عَلَى ٱللَّهِ ۚ إِنَّهُۥ لَا يُحِبُّ ٱلظَّٰلِمِينَ ﴿٤٠﴾ ﴾

[الشورى: ٤٠]

“எவர் (அதனை) மன்னித்துச் சமாதானம் செய்கிறாரோ அவருக்குரிய நற்கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது” (ஸூரா அஷ்ஷூரா : 40)

எனவே, கூலி இருப்பதாக வாக்களித்த அவன் அதனை வரையறுக்கவில்லை. எனவே அது மகத்தானது என்பது அறியப்படுகின்றது.

விசுவாசிகளே! உள்ளங்களை சீர்செய்வதும், பரிசுத்தப்படுத்தவதும் மிகச் சிறந்த வணக்கங்களில் உள்ளவையாகும். அதற்கு வெற்றி இருப்பதாக அல்லாஹ் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ قَدۡ أَفۡلَحَ مَن زَكَّىٰهَا ۝٩ وَقَدۡ خَابَ مَن دَسَّىٰهَا ۝١٠ ﴾ [الشمس: 9-10]

“அதை (ஆத்மாவை)ப் பரிசுத்தமாக்கியவர் திடமாக வெற்றியடைந்தார். ஆனால் எவன் அதைப் பாவத்தில்) புகுத்தினானோ அவன் திட்டமாகத் தோல்வி அடைந்தான்.” (ஸூரா அஷ்ஷம்ஸ் : 9-10)

அல்லாஹ்வுடைய அடியார்களே! பெருநாளின் மகிழ்ச்சியை அதிகப்படுத்தும் காரணிகளில் ஒன்று, சமூக உறவுகளை சீர்செய்துகொள்வதும், அவற்றைப் புதுப்பிப்பதும், பலப்படுத்துவதும், கடந்து ஒரு வருட காலத்தில் உள்ளங்களில் ஒட்டியிருந்த குரோதங்கள் மற்றும் பெறுப்புக்களை விட்டு உள்ளத்தைக் கழுவுவதுமாகும். எனவே, பெருவநாளைப் பயன்படுத்தி, பிரிந்துள்ள தம்பதியினருக்கு இடையில் சேர்த்தவைத்து, தூரப்பட்டுப் போய் இருந்த உள்ளங்களை ஒன்றிணைத்து, அக்குடும்பப் பிள்ளைகளின் மகிழ்ச்சியை மீட்டெடுக்கக் காரணமாக இருந்தவர்கள் அல்லது ஒரு கொலைக் குற்றத்தை மன்னிக்கவோ, கடனைத் தள்ளுபடி செய்யவோ, உறவுகளுக்கு இடையில் இருந்த வேற்றுமைகள் நீங்கவோ யாரெல்லாம் காரணமாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

யா அல்லாஹ்! இந்த மாதத்தை முழுமையாக அடையச் செய்து, பெருநாள் எனும் அருட்கொடையை அடையச் செய்த உனக்கே எல்லாப் புகழும்.

செய்வானாக! அதில் உள்ள வசனங்கள் மற்றும் நுட்பமான படிப்பினைகள் மூலம் பயன்தருவானாக! இவ்வாறு நான் கூறுவதோடு, எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன். நீங்களும் பாவமன்னிப்புத் தேடுங்கள். அவன் மன்னித்துக் கிருபை செய்பவனாக உள்ளான்.

இரண்டாம் குத்பா

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். அறிந்துகொள்ளுங்கள்!

10. அல்லாஹ்வுடைய அடியார்களே! மகத்தான மகிழ்ச்சி என்பது, அல்லாஹ்வை நாம் நல் அமல்களுடன் சந்திக்கும் தினத்திலேயே உள்ளது.

“அல்லாஹ் (மறுமையில்) சொர்க்க வாசிகளை நோக்கி, ‘சொர்க்கவாசிகளே!’ என்று அழைப்பான். அதற்கு அவர்கள் “எங்கள் அதிபதியே! இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறோம்” என்று பதிலளிப்பார் கள். அப்போது அல்லாஹ் “திருப்தி அடைந்தீர்களா?” என்று கேட்பான். அதற்கு அவர்கள் “உன் படைப்புகளில் யாருக்கும் நீ வழங்கியிராத (அருட்செல்வங்கள், இன்பங்கள் ஆகிய)வற்றை எங்களுக்கு நீ வழங்கியுள்ளபோது நாங்கள் திருப்தி அடையாமல் இருப்போமா?” என்று கூறுவார்கள்.” அப்போது அல்லாஹ் “அதைவிடவும் சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் வழங்கப்போகிறேன்” என்பான். அவர்கள் “அதிபதியே! அதைவிடச் சிறந்தது எது?” என்று கேட்பார்கள். அதற்கு அல்லாஹ் “உங்கள்மீது என் அன்பை அருளுகிறேன். இனி ஒருபோதும் உங்கள்மீது கோபப்பட மாட்டேன்” என்று கூறுவான். [276]

11. விசுவாசிகளே! இந்த ரமழான் எமது பாதையை சரிசெய்துகொள்வதற்கும், அல்லாஹ்வுடன் நிரந்தரமாக எமது உறவைப் பலப்படுததிக்கொள்வதற்கும் உண்டான ஒரு வாய்ப்பாகும். எனவே, வணக்கங்களைத் தொடர்ந்து பேணிக்கொள்வோம். வணக்கங்கள் ரமழான முடிவோடு நின்றுவிடுவதில்லை. மாறாக, மரணத்துடனேயே நிற்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான்:

﴿ إِنَّا نَحْنُ نَزَّلْنَا ٱلذِّكْرَ وَإِنَّا لَهُۥ لَحَٰفِظُونَ ۝٩ ﴾[الحجر: ٩٩]

“உமக்கு மரணம் வரும்வரை உமது இறைவனை வணங்குவீராக!” (ஸூரா அல் ஹிஜ்ர் : 99)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “அமல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவை, குறைவாக இருந்தாலும் தொடராக இருப்பவையே!”[277]

முஸ்லிம்களே! ரமழானுக்குப் பின்னரும் அமல்களைத் தொடர்ந்து பேணிக்கொள்வது, இறை பாக்கயத்தை அடைந்தமைக்கும், அமல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்குமான ஆதாரமாகும். அக்காலத்துடன் மாத்திரம் அமல்களை சுருக்கிக் கொள்வது, அறிவில் குறைாக இருப்பதையும், இறைப்பாக்கியம் குறைவாக இருப்பதையுமே உணர்த்துகின்றது. ரமழான் மாதத்தின் இரட்சகன் தான் எல்லா மாதங்களுக்குமாக இரட்சகன். ரமழானில் இபாதத்களில் அதிகம் ஈடுபட்டுவிட்டு, ஏனைய நாட்களில் செய்யாமல்

[276] புகாரி : 6549, முஸலிம் : 2829

[277] புகாரி : 5861

விட்டுவிடுபவர்களைப் பற்றி ஸலபுகளில் ஒருவரிடம் கேட்கப்பட்ட போது, “அவர்கள் மோசமான கூட்டத்தனர், ரமழானிலே தவிர அவர்கள் அல்லாஹ்வை அறியமாட்டார்கள்.

விசுவாசிகளே! ஒரு முஸ்லிமின் மிகச் சிறந்த பண்புகளில் ஒன்று, அவன் “கானிதீன்களில்” ஒருவரா இருப்பதாகும். கானித் என்பது, வணக்கவழிபாடுகளில் தொடராக இருப்பவரைக் குறிக்கும். அவ்வாறான பண்புகளைக் கொண்டவர்களை அல்லாஹ் புகழ்ந்து கூறியுள்ளான்.

﴿ إِنَّ ٱلْمُسْلِمِينَ وَٱلْمُسْلِمَٰتِ وَٱلْمُؤْمِنِينَ وَٱلْمُؤْمِنَٰتِ وَٱلْقَٰنِتِينَ وَٱلْقَٰنِتَٰتِ وَٱلصَّٰدِقِينَ وَٱلصَّٰدِقَٰتِ وَٱلصَّٰبِرِينَ وَٱلصَّٰبِرَٰتِ وَٱلْخَٰشِعِينَ وَٱلْخَٰشِعَٰتِ وَٱلْمُتَصَدِّقِينَ وَٱلْمُتَصَدِّقَٰتِ وَٱلصَّٰٓئِمِينَ وَٱلصَّٰٓئِمَٰتِ وَٱلْحَٰفِظِينَ فُرُوجَهُمْ وَٱلْحَٰفِظَٰتِ وَٱلذَّٰكِرِينَ ٱللَّهَ كَثِيرًا وَٱلذَّٰكِرَٰتِ أَعَدَّ ٱللَّهُ لَهُم مَّغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا ﴾[الأحزاب: ٣٥]

“நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும் நன்னம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் இறைவழிபாடுள்ள ஆண்களும், பெண்களும் உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும் பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும் (அல்லாஹ்விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண்களும், பெண்களும் தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும் நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும் தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றான்.” (ஸூரா அல்அஹ்ஸாப் : 35)

12. அல்லாஹ்வுடைய அடியார்களே! ரமழான் நோன்புக்குப் பின்னர், ஷவ்வால் மாதத்தின் ஆறு நாட்கள் நோன்பு நோற்பது விரும்பத்தக்க ஒரு ஸுன்னாவாகும். அதற்கு அல்லாஹ் மகத்தான ஒரு கூலியை வைத்துள்ளான். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ அய்யூப் அல் அன்ஸாரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “யார் ரமழானில் நோன்பு நோற்று, பின்னர் ஷவ்வால்

மாதத்திலும் ஆறு நாட்கள் நோன்பு நோற்கின்றாரோ, அவர்கள் அவ்வருடம் முழுதும் நோன்பு நோற்றவரைப் போன்றவர்."[278]

மேலும், ஷவ்வால் மாதத்தின் இந்த அறு நோன்புகளையும் நோற்பதன் நோக்கங்களில் ஒன்று, ரமழான் மாதத்தின் கடமையான நோன்பில் நிகழ்ந்த குறைகளை சரிசெய்வதாகும். ஏனெனில், நோன்பாளியிடமிருந்து தவறுகளோ, கடமையான நோன்பில் பாதிப்பை ஏற்படுத்தும் பாவங்களோ நிச்சயம் நிகழ்ந்திருக்கும். எனவே, நபிலான நோன்புகள் அந்தக் குறையை நிவர்த்தி செய்யக்கூடியதாக அமையும்.

இவை, பத்துக் குறிப்புக்களாகும். ஒரு முஸ்லிம் ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தன்று அதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அப்போது தான் அவனது பெருநாள் வெறுமனே ஒரு வழமையாக அல்லாமல், ஒரு வணக்கமாக இருக்கும்.

முஸ்லிம்களே! அல்லாஹ் உங்களுக்கு ஒரு முக்கிய கட்டளையை விதித்துள்ளான். அதை அவனாகவே முதலில் ஆரம்பித்து, பின்பு தன் புகழைத் துதிக்கும் மலக்குமார்களை இரண்டாவதாகக் கூறி, மூன்றாவதாக – மனித, ஜின் முஸ்லிம்களே! - உங்களைத்தான் அவன் கூறியுள்ளான். அவன் கூறுகின்றன்:

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ٥٦ ﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." (ஸூரா அல் அஹ்ஜாப் : 56)

யா அல்லாஹ்! உனது அடியாரும் தூதரும் ஆகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக! அவரது தோழர்களாகிய கலீபாக்களையும், தாபிஈன்களையும், அழகிய முறையில் அவர்களைப் பின்பற்றியவர்களையும் பொருந்திக் கொள்வாயாக!
யா அல்லாஹ்! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக! இணைவைப்பையும் இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக! உனது எதிரிகளாகிய, மார்க்கத்தின் எதிரிகளை அழித்து விடுவாயாக! உனது ஓரிறைக் கொள்கை அடியார்களுக்கு உதவுவாயாக!

[278] முஸ்லிம் : 1164

யா அல்லாஹ்! எமது நாடுகளில் பாதுகாப்பை தருவாயாக! எமது தலைவர்களை சீராக்குவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும் நேர்வழி காட்டுப்பவர்களாகவும் மாற்றி விடுவாயாக!
அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கும் உனது வேதத்தை கொண்டு தீர்ப்பளிக்கவும் உனது தீனை கண்ணியப்படுத்தவும் அருள் புரிவாயாக! அவர்களைத் தமது பிரஜைகளுக்கு அருளாக ஆக்குவாயாக!
யா அல்லாஹ்! உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து நன்மைகளையும் நாம் உன்னிடம் கேட்கின்றோம். உடனடியான, தாமதமான, நாம் அறிந்த, அறியாத, அனைத்து தீமைகளையும் விட்டு நாம் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! சுவனம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை உன்னிடம் கேட்பதோடு, நரகம் மற்றும் அதன் பால் நெருக்கமாக்கி வைக்கும் சொல், செயற்களை விட்டும் உன்னிடம் பாதுகாப்புக் கேட்கின்றோம்.
யா அல்லாஹ்! எங்களில் உள்ள நோயாளிகளுக்கு சுகத்தையும், மரணித்தவர்களுக்கு கருணையையும், சோதனைக்குள்ளானவர்களுக்கு ஆரோக்கியத்தையும் வழங்குவாயாக!

இறைவா! எமது நடத்தைக்குப் பாதுகாப்பாக உள்ள எமது மார்க்கத்தை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் வாழ வேண்டிய இம்மையை எமக்குச் சீர்படுத்துவாயாக! நாம் திரும்பி வரவுள்ள மறுமையை எமக்குச் சீர்படுத்துவாயாக! வாழ்க்கையை, எல்லா நன்மைகளையும் கூடுதலாகச் செய்வதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக! மரணத்தை, எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு எமக்குக் காரணமாக்குவாயாக!)

யா அல்லாஹ்! எமக்க இவ்வுலகிலும், மறுமையிலும் நலவைத் தருவாயாக! நரகவேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!
அல்லாஹ்வின் அடியார்களே! நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும், உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான் அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான். மகத்தான அல்லாஹ்வை நீங்கள் நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவுகூறுவான். அவனது அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துங்கள், அவன் அதிகப்படுத்தித் தருவான். இறைநினைவே மிகப் பெரியது! நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்.

سبحان ربك رب العزة عما يصفون وسلام على المرسلين والحمد لله رب العالمين.

குத்பா தயாரிப்பு : மாஜித் பின் ஸுலைமான் அல் - ரஸ்ஸி, ஜுபைல், ஸவூதி அரேபியா.

ரமழானுடைய க0 இரகசியங்கள் (1)

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானது, நாம் அவனைப் புகழ்ந்து அவனிடமே உதவி தேடி, அவனிடமே பாவமன்னிப்பு தேட வேண்டும். எங்களிடமும், எங்கள் செயல்களிலும் ஏற்படும் பாதிப்புகளை விட்டும் அவனிடமே பாதுகாப்பு தேட வேண்டும். அவன் யாருக்கு நேர்வழி காட்டிவிட்டானோ அவனை யாராலும் வழிகெடுக்க முடியாது. அவன் யாரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ, அவர்களை நேர்வழியிலும் செலுத்த முடியாது. இணையற்ற, வணங்குவதற்குத் தகுதியான, உண்மையான ஒரே இறைவன் அவனைத்தவிரவேறுயாருமில்லை எனநான்சாட்சிகூறுகிறேன். முஹம்மத் அவர்கள் அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இறுதித்தூதரும், அவனின் அடியானும் ஆவார்கள் என சாட்சி கூறுகிறேன்.

இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன், பேச்சுக்களிலே சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மத் அவர்களின் வழிகாட்டுதலாகும். இஸ்லாத்தில் புதிதாதக தோற்றுவிக்கப்படும் அனைத்தும் மிகத் தீய செயல்களாகும். புதிதாக உருவாக்கப்படும் அனைத்தும் பித்அத்களாகும். ஒவ்வொரு பித்அத்களும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்துக்கே இட்டுச் செல்லும்.

அன்புள்ள இஸ்லாமியர்களே, அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறு எனக்கும் உங்களுக்கும் வஸிய்யத் செய்கிறேன். இது முன்சென்றோருக்கும், பின்னால் வர இருப்போருக்குமான அல்லாஹ்வின் வஸிய்யத்தாகும். அல்லாஹ் கூறுகிறான்,

"உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசம் செய்தோம்" (அல்குர்ஆன் 04:131).

அல்லாஹ்வை அஞ்சி, அவனுக்கு வழிபடுங்கள். அவனுக்கு மாறு செய்யாதீர்கள். அல்லாஹ் தனது அடியார்களுக்கு செய்துள்ள அருட்கொடைகளில் மிகவும் சிறந்த அருட்கொடை அவர்கள் நன்மை

செய்வதற்காக அவர்களுக்கென பருவ காலங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளதாகும். இதில் அவர்கள் செய்யும் நன்மைகளை பன்மடங்காக்கி, அவர்கள் செய்யும் தீமைகளை அழித்துவிடுகிறான். இதன் மூலம் முஃமினுக்கு வழங்கவுள்ள சுவனத்தின் அந்தஸ்த்தையும் உயர்த்துகிறான். இது அல்லாஹ்வின் மாபெரும் திட்டமிடலாகும். அல்லாஹ் தனது கட்டளையிலும், செயல்களிலும், விதியை நிர்ணயிப்பதிலும் நுட்பமானவன்.

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே, அல்லாஹ் தனது கட்டளையில் ஏற்படுத்தியுள்ள நுட்பம் தான் ரமழான் மாத கடமையாக்கி நோன்பை இருப்பதாகும் இதில் சூரியன் உதித்ததிலிருந்து, மறையும் வரை உண்ணாமலும், பருகாமலும், உடலுறவில் ஈடுபடாமலும் தனது உள்ளத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

<u>ரமழான் மாத நோன்பின் இரகசியங்கள் :</u>

01.ரமழான் மாத நோன்பை அல்லாஹ் பலநோக்கங்களுக்காக கடமையாக்கியுள்ளான். அதில் மிக உயரிய நோக்கம் தக்வாவை அடைந்துகொள்வதாகும். அல்லாஹ் கூறுகிறான்.

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ١٨٣ ﴾

"ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம்." (அல்குர்ஆன் 02:183).

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனத்தில் ரமழான் மாத நோன்பு கடமையாக்கப்பட்டுள்ள நோக்கம் தக்வாவை

உறுதிப்படுத்திக்கொள்வதாகும் என தெளிவாக கூறப்பட்டுள்ளது. தக்வா என்பது ஒரு அடியான் அல்லாஹ் ஏவியவைகளை எடுத்து நடந்தும், அவன் தடுத்தவைகளை விட்டு தவிர்ந்து நடந்தும் அவனுக்கும், அல்லாஹ்வின் வேதனைக்கும் இடையில் பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வதாகும். நோன்போடு ஒருவர் இருக்கும் போது அவர் அல்லாஹ்வின் கண்கானிப்பில் உள்ளார் என அவரது உள்ளம் பயிற்றுவிக்கப்படுவதால் தடுக்கப்பட்ட ஒன்றை செய்ய இயலுமாக இருந்தும் அதை விட்டும் தவிர்ந்துகொள்கிறார்.

02. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றிசெலுத்துவதற்கான வாய்ப்பு இதனால் ஏற்படுகிறது என்பது இரண்டாவது இரகசியமாகும். உணவு, குடிபானம், உடலுறவு என்பது அல்லாஹ்வின் உயரிய அருட்கொடைகளில் சிலவாகும். ஒருவர் நோன்பிருக்கும் போது இவற்றை விட்டும் தன்னை தடுத்துக்கொள்வதால் இவற்றின் பெறுமதியை உணர ஆரம்பிக்கிறார். அருட்கொடை என்பது புத்திக்கு புலப்படாமலே இருக்கும். எப்போது அவை எம்மை விட்டும் நீங்குகிறதோ அப்போதே அதன் பெறுமதியை உணர ஆரம்பிக்கிறோம். உணவு, குடிபானம்,உடலுறவு போன்ற அத்தியாவசிய அருட்கொடைகள் எம்மை விட்டும் தற்காலிகமாக நீங்கியிருக்கும் போது அதன் பெறுமதியை இந் நோன்பு புரியவைக்கிறது. இதனாலே ஒருவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தத் தயாராகிறார்.

03. விட்டும் அல்லாஹ் தடுத்துள்ளவற்றை தவிர்ந்திருப்பதற்கான வாய்ப்பு ஏற்படுவது ரமழான் நோன்பின் அடுத்த இரகசியமாகும். ஏனெனில் நோன்பென்பது உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தவும், அதி உட்சாகம், வயிறு புடைப்பு போன்றவற்றை கட்டுப்படுத்தவும் உதவிசெய்கிறது. இதன் போது யதார்த்தமான சிந்தனைகள் உருவாகவும், படைப்பாளனுக்கு கட்டுப்பட வேண்டுமென்ற எண்ணம் ஏற்படவும் இது

துணைபுரிகிறது. இதற்கு மாற்றமாக எப்போதும் வயிறு புடைத்திருப்பதும், மனம் தன்னிலையற்று இருப்பதும் ஒருவரை பெண்கள் விடயத்தில் மோசமானவராக மாற்றுவதுடன், எப்போதும் வழிகேட்டின் பக்கமே அவரை கொண்டு செல்லும்

04. ரமழான் மாத நோன்பு மனோ இச்சைகளைக் கட்டுப்படுத்த உதவுவதும் அதன்இரகசியங்களில் ஒன்றாகும். ஏனெனில்வயிறு நிறைந்திருக்கும் போது மனோ இச்சைகளும் அதிகரிக்கிறது. வெரும் வயிறுடன் இருக்கும் போது ஆசைகளும், இச்சைகளும் அடங்கிவிடுகிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

يا مَعْشَرَ الشَّبابِ مَنِ اسْتَطَاعَ الباءَةَ فَلْيَتَزوَّجْ، فَإِنَّهُ أَغَضُّ لِلْبَصَرِ وَأَحْصَنُ لِلْفَرْجِ، وَمَن لَمْ يَسْتَطِعْ فَعليه بالصَّوْمِ، فإنه له وجاء

(الراوي: عبد الله بن مسعود ، التخريج: صحيح البخاري ١٩٠٥، ٥٠٦٥)

"இளைஞர்களே! யார் தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றிருக்கிறாரோ அவர் திருமணம் செய்துகொள்ளட்டும்; ஏனெனில், அது (தகாத) பார்வையைக் கட்டுப்படுத்தும்; கற்பைக் காக்கும். யார் அதற்குச் சக்தி பெறவில்லையோ அவர் நோன்பு நோற்கட்டும். அது அவரது இச்சையைக் கட்டுப்படுத்தும்" (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் நூல்: புஹாரி 1905, 5065).

05. நோன்பின்இரகசியங்களில் அடுத்தது ஏழை எளியோர்மீது இரக்க சுபாவத்தை உருவாக்குவதாகும். ஒருவர் நோன்பிருக்கும் போது சில வேளைகளில் பசியை உணர ஆரம்பிக்கிறார். இதை விட எத்தனையோ பேர் உண்ணாமலும், பருகாமலும் இருப்பார்களே என்ற எண்ணத்தை

உண்டாக்குகிறது. இதனாலே ஏழை எளியோர் மீது அதீத அன்பு ஏற்பட்டு, அவர்களுக்கு உதவ வேண்டுமென்ற இரக்க சுபாவம் ஏற்படுகிறது. இதற்காக தான தர்மங்கள் செய்யவும், தொண்டு நிறுவனங்களை ஆரம்பித்து பெரிதாக உதவிக்கரம் நீட்டவும், சமூக மேம்பாட்டை உருவாக்கவும் அவர்கள் ஆரம்பிக்கின்றனர். இத்தகையதோர் சமூக உணர்வை இந்நோன்பு ஒருவரிடத்தில் ஏற்படுத்துகிறது.

06. இந்நோன்பின் மூலம் ஷைத்தானையும், அவனின் சிந்தனைகளையும் அடக்கும் திறன் ஒருவருக்கு ஏற்படுகிறது. இதுவும் நோன்பின் இரகசியங்களுள் ஒன்றாகும். இதன் மூலம் வீணான சிந்தனைகளும், வீண் சந்தேகங்களும், தடுமாற்ற மனோநிலையும் பலவீனமடைந்து, பாவம் செய்யும் மனப்பான்மையும் குறைவடைகிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

فَإِنَّ الشَّيْطَانَ يَجْرِي مِنَ ابْنِ آدَمَ مَجْرَى الدم.

(الراوي: صفية أم المؤمنين : التخريج البخاري ٢٠٣٩، المسلم (٢١٧٥)

"நிச்சயமாக ஷைத்தான் ஆதமுடைய மகனின் (மனிதனின்) இரத்த நாளங்களில் ஓடுகிறான்" (அறிவிப்பவர்: ஸஃபிய்யா, நூல்: புஹாரி 2039, முஸ்லிம் 2175)

நோன்பின் மூலம் பகல் பொழுதுகளில் இரத்த நாளங்கள் அனைத்தும் நலிவடைவதால் ஷைத்தானின் தீண்டுதல்கள் குறைவடைகின்றன. இதன் மூலம் தீயவைகளை விட்டும் தவிர்ந்து, நல்லவைகள் செய்வதற்கான உந்துதல் கிடைக்கிறது.

0௭. ரமழான் மாதத்தில் அதிக வணக்கங்களில் ஈடுபடுவது தொடர்பழக்கமாக மாற்றமடைவதும் நோன்பின் இரகசியங்களில் ஒன்றாகும். நோன்புடன் ஒரு மாதம் முழுவதும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, அல்குர்ஆனை ஓதி, தொழுகைகளுடன் மேலதிக தொழுகைகளையும் தொழுது, அதிக வணக்கங்கள் புரிவதால் அவற்றை ஒருவருக்கு தொடர் பழக்கமாக இந்நோன்பு மாற்றிவிடுகிறது. ரமழான் முடிந்தும் தொடராக வணக்கங்கள் புரிவதற்கான தாக்கம் இதனால் ஏற்படுகிறது.

08. ரமழான் நோன்பின் மூலம் உலக வாழ்வின் ஈர்ப்பு
சற்று குறைவதாலும், மனோ இச்சைகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் கிடைப்பதாலும் உலக வாழ்வின் மீது ஒருவித பற்றற்ற நிலை ஏற்படுகிறது. இது அல்லாஹ்விடம் கிடைக்க இருக்கும் வெகுமதிகளின் மீதான ஆர்வத்தைத் தூண்டுகிறது.

09. நோன்பு எனும் வணக்கம் உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு தெரிய வருவது இதன் இன்னொரு இரகசியமாகும். உலக முஸ்லிம்கள் அனைவரும் இம்மாதத்தில் நோன்புடன் சேர்த்து ஏனைய வணக்கங்களிலும் அதிக ஈடுபாட்டுடன் இருப்பார்கள். இந்நேரத்தில் முஸ்லிமாக இருப்பவர் கூட நோன்பு விட நேர்ந்தால் பகிரங்கமாக சாப்பிட கூச்சப்படுவார். முஸ்லிம் அல்லாத சகோதரர்களும் முஸ்லிம்களை கண்ணியப்படுத்தும் வகையில் அவர்களுக்கு முன்னால் சாப்பிடுவதை குறையாகப் பார்ப்பார்கள். முஸ்லிம்களின் வணக்க வழிபாடுகளில் பிரதான வழிபாடான நோன்பின் மீது உலக மக்கள் அனைவரது கவனமும் குவிவதென்பது பல நல்ல விடயங்களுக்கும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

10. நோன்பின் மூலம் பல மருத்துவ நலன்கள் உடலுக்கு கிடைப்பதென்பதும் இதன் இரகசியங்களுள் ஒன்றாகும். இது

இதயத்துக்கான இரத்த ஓட்டத்தை எவ்விதத் தடையுமில்லாமல் சென்றடைய உதவி செய்கிறது. கொழுப்பு, எண்ணெய் போன்ற படிவங்களிலிருந்துஇரத்தைசுத்தப்படுத்துகிறது. இரைப்பைக்கும், குடலுக்கும் ஓய்வைக் கொடுத்து சமிபாட்டுத்தொகுதியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. அவ்வாறே நோன்பு உடல் பருமனிலிருந்து ஒருவரைப் பாதுகாத்து, உடலில் தங்கியிருக்கும் நச்சுக் கொழுப்புகளையும் அகற்றுகிறது. இரத்த அழுத்தம், நீரிழிவு போன்றவற்றையும் கட்டுக்குள் வைத்திருக்கிறது.

ஆக இவையே ரமழான்மாத நோன்பின் பத்து இரகசியங்களாக கோர்வை செய்து உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன். சிறந்த வழிகாட்டுதலை எமக்கு மார்க்கமாக வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும். இறைவா!, இந்த ரமழான் மாத நோன்பை நீ விரும்பும் வகையில் நோற்பதற்கு எமக்கு உதவிசெய்வாயாக!, உன்னை நினைவு கூர்ந்து, உனக்கு நன்றி செலுத்தி, நல்ல முறையில் வணக்க வழிபாடுகளை செய்வதற்கு எமக்கு உதவி புரிந்தருள்வாயாக!,

குர்ஆனின் போதனைகளை பின்பற்றுவதற்கு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக!, அதன் அத்தாட்சிகள், தீர்க்கமான சட்டதிட்டங்கள் போன்றவற்றை எனக்கும் உங்களுக்கும் பிரயோசனமானதாக ஆக்கித்தருவானாக!, இதை எனது வார்த்தைகளாக நான் கூறுகிறேன், அனைத்து பாவமான காரியங்களிலிருந்தும் எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ் பாவமன்னிப்பை வழங்குவானாக!, அவனிடமே பாவமன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அவன் மாத்திரமே பாவமன்னிப்பை ஏற்று, அனைத்தையும் மன்னிப்பவன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும், அவனின் அருள் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவர் மீதும் உரித்தாகட்டும் என்ற இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன்,

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே, ஒவ்வொரு முறை பிறை பார்க்கும் போதும் அதற்கான துஆவை ஓதுவது நபி அவர்களின் வழிகாட்டுதலில் ஒன்றாகும்.

اللَّهُ أَكْبَرُ اللَّهُمَّ أَهِلَّهُ عَلَيْنَا بِالْأَمْنِ وَالْإِيمَانِ، وَالسَّلَامَةِ وَالْإِسْلَامِ
وَالتَّوْفِيقِ لِمَا تُحِبُّ رَبَّنَا وَتَرْضَى رَبُّنَا وَرَبُّكَ اللَّهُ.

(الراوي: طلحة بن عبيد الله ، التخريج: أحمد ١٦٢٨، صحيح الجامع ٤٧٢٦)

பொருள்: அல்லாஹ் மிகப்பெரியவன், அல்லாஹ்வே,பாதுகாப்பு, நம்பிக்கை, ஈடேற்றம், வழிபடுதல் மேலும் உனது விருப்பத்திற்கும், மகிழ்ச்சிக்கும் உரியதைச் செய்வதற்கும் காரணமான பிறையாக இதை உதிக்க வை, (பிறையை நோக்கி) எங்கள் இறைவனும், உனது இறைவனும் அல்லாஹ்தான். (அறிவிப்பவர்: தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் , நூல்: அஹ்மத் 01/162, ஸஹீஹுல் ஜாமிஃ 4726)

இது ரமழான் மாத்திரமின்றி ரமழான் அல்லாத காலங்களிலும் பிறையைப் பார்க்கும் போதெல்லாம் கூற வேண்டும். இப்பிரார்த்தனையில் அதிக நன்மைகள் இருப்பதால் நல்ல விடயங்கள் செய்வதற்கு பெரிதும் உதவியாய் இருக்கும்.

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே!, இப் புனித மாதத்தை அடைவதற்கான பாக்கியத்தை அல்லாஹ் எமக்கு இலகுவாக வழங்கியிருப்பதை நாம் சாதாரனமாக எண்ணிவிடக்கூடாது. பகலில் நோன்பிருத்தல், இரவில் நின்று வணங்குதல், உள்ளத்தை கட்டுப்படுத்தல் போன்ற இம்மாதத்துக்கென உரித்தான வணக்கங்களை சரியான முறையில்செய்கிறோமா இல்லையாஎன்பதை பரீட்சிப்பதற்கான சோதனையாகவும் இது இருக்கலாம்.

இதில் அதிக ஈடுபாட்டுடன், உட்சாகமாக நல்ல செயல்களை செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். குறிப்பிட்ட நாட்களில் வந்த தடயமும் இல்லாமல் ரமழான் முடிந்து விடும். எனவே பாதையோரங்களிலும்,

மார்கெட்டுகளிலும் சுத்திக்கொண்டு, கெட்ட பழக்கங்கள் உள்ளவர்களுடன் சகவாசம் வைத்து, ஷைத்தானிய சிந்தனையில் சிக்கிக்கொள்ளாமல் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வீனான நிகழ்ச்சி நிரல்கள், இரவுக் கழியாட்டங்கள், தொடர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கும் அனைத்து செயல்களிலிருந்தும் தவிர்ந்திருக்க வேண்டும்.

முன்சென்ற இஸ்லாமிய அறிஞர்கள் ரமழான் காலங்களில் தமது கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு விடுமுறை அளித்து நோன்பிருப்பதிலும், நின்று வணங்குவதிலும், அல்லாஹ்வை திக்ர் செய்வதிலும், அல்குர்ஆனை ஓதுவதிலும் அவர்களின் நேரங்களை செலவிடுவார்கள். ஆனால் இன்று ஏனைய வேலைகளுக்கு நேரங்களை ஒதுக்கி மேற்சொன்ன நான்கு வணக்கங்களுக்கும் நேரம் ஒதுக்க முடியாமல் இருக்கும் மனிதர்களை என்னவென்று சொல்வது?

அல்லாஹ்வின் நல்லடியார்களே!, நிச்சயமாக அல்லாஹ் மிக முக்கியமான விடயம் பற்றி ஏவியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்.

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ﴾

"இந்தநபியின்மீது அல்லாஹ் அருள்புரிகிறான். மலக்குகளும் முஃமின்களே அவருக்காக அருளைத் தேடுகின்றனர்.நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்" (அல்குர்ஆன் 33:56).

இறைவா!, உனது அடியாரும் தூதருமாகிய முஹம்மத் மீது நீ அருள்புரிவாயாக, இஸ்லாத்தின்தலைவர்களாக இருந்த அவரின் தோழர்களையும் பொருந்திக்கொள்வாயாக, மறுமை நாள் வரைக்கும் யாரெல்லாம் நபி அவர்களை பின்பற்றினார்களோ,

பின்பற்றிக்கொண்டிருக்கிறார்களோ, பின்பற்ற இருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொள்வாயாக!,

இறைவா!, இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக!, இணைவைப்பையும், இணைவைப்பாளர்களையும் இழிவிபடுத்துவாயாக!, உன்னை ஒருமைப்படுத்தும் உன் அடியார்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பாயாக!

இறைவா!. எங்கள் நாட்டையும், எமது பிரதேசங்களையும் பாதுகாப்பாயாக!, எங்கள் தலைவர்களையும், மேலதிகாரிகளையும் சீர்திருத்துவாயாக!, அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழியைக் காட்டக்கூடியவர்களாகவும் மாற்றுவாயாக!.

இறைவா!, அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் உனது வேதத்தின் அடிப்படையில் அவர்களின் ஆட்சியை அமைத்துக்கொள்வதற்கும், உனது மார்க்கத்தை மேலோங்கச் செய்ய பணி புரிபவதற்கும் அவர்களுக்கு உதவுவாயாக!, அவர்களின் குடிமக்களுக்கு நல்லது செய்பவர்களாக அவர்களை ஆக்குவாயாக!!

இறைவா!, ரமழானை அடையும் பாக்கியத்தை எமக்கு தந்தருள்வாயாக!, அதில் நோன்பை நோற்று, நின்று வணங்கும் சந்தர்ப்பத்தை எமக்கு வழங்குவாயாக!, இறைவா!, இவ்வுலகிலும், மறுவுலகிலும் நல்லதையே எமக்கு வழங்குவாயாக!, நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!, யாரெல்லாம் அவனால் கடவுள் பற்றி தவறான வர்ணனைகள் வழங்குகிறார்களோ அவை அனைத்தை விட்டும் எமது இறைவன் பரிசுத்தமானவன். இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும் அவனின் அருளைப் பெற்றவர்கள். அகிலத்தாரின் இரட்சகனாகிய எமது இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

ரமழான் நோன்பின் ௫0 சிறப்பம்சங்கள் - 0௧

إِنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானது, நாம் அவனைப் புகழ்ந்து அவனிடமே உதவி தேடி, அவனிடமே பாவமன்னிப்பு தேட வேண்டும். எங்களிடமும், எங்கள் செயல்களிலும் ஏற்படும் பாதிப்புகளை விட்டும் அவனிடமே பாதுகாப்பு தேட வேண்டும். அவன் யாருக்கு நேர்வழி காட்டிவிட்டானோ அவனை யாராலும் வழிகெடுக்க முடியாது. அவன் யாரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ, அவர்களை நேர்வழியிலும் செலுத்த முடியாது. இணையற்ற, வணங்குவதற்குத் தகுதியான, உண்மையான ஒரே இறைவன் அவனைத்தவிரவேறுயாருமில்லைஎனநான்சாட்சிகூறுகிறேன். முஹம்மத் ﷺ அவர்கள் அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இறுதித்தூதரும், அவனின் அடியானும் ஆவார்கள் என சாட்சி கூறுகிறேன்.

இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன், பேச்சுக்களிலே சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மத் அவர்களின் வழிகாட்டுதலாகும். இஸ்லாத்தில் புதிதாதக தோற்றுவிக்கப்படும் அனைத்தும் மிகத் தீய செயல்களாகும். புதிதாக உருவாக்கப்படும் அனைத்தும் பித்அத்களாகும். ஒவ்வொரு பித்அத்களும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்துக்கே இட்டுச் செல்லும்

அன்புள்ள இஸ்லாமியர்களே, அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறு எனக்கும் உங்களுக்கும் வஸிய்யத் செய்கிறேன். இது முன்சென்றோருக்கும், பின்னால் வர இருப்போருக்குமான அல்லாஹ்வின் வஸிய்யத்தாகும். அல்லாஹ் கூறுகிறான்,

﴿ وَلَقَدْ وَصَّيْنَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَـٰبَ مِن قَبْلِكُمْ وَإِيَّاكُمْ أَنِ ٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ ﴿١٣١﴾ ﴾

"உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசம் செய்தோம்" (அல்குர்ஆன் 04:131)

அல்லாஹ்வை அஞ்சி, அவனுக்கு வழிபடுங்கள். அவனுக்கு மாறு செய்யாதீர்கள் அறிந்துகொள்ளுங்கள் அல்லாஹ் தான் நாடியவைகளை படைக்கிறான், அவற்றில் தனது நுட்பத்தின் அடிப்படையில் நாடிய சிலவற்றை தேர்வு செய்கிறான் மலக்குமார்களில் சிலரை விட சிலரை சிறப்பாக்கியுள்ளான் வேதங்களில் சிலதை விட சிலதை சிறப்பாக்கியுள்ளான் நபிமார்களில் சிலரை விட சிலரை சிறப்பாக்கியுள்ளான் இடங்களில் சிலதை விட சிலதை சிறப்பாக்கியுள்ளான் பருவ காலங்களில் சிலதை விட சிலதை சிறப்பாக்கியுள்ளான் அவ்வாறே மாதங்களிலும் சிலதை விட சிலதை சிறப்பாக்கியுள்ளான். இது மக்கள் நல்லசெயல்களில் அதிகம் ஈடுபடுவதற்கும், பன்மடங்கு நன்மைகள் பெற்று, பாவங்களை அழித்து, சுவனத்தில் உயரிய அந்தஸ்த்துகளைப் பெற்றுக்கொள்வதற்குமான ஏற்பாடாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே, ரமழான் மாதத்திற்கென கிட்டத்தட்ட 30 சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. இன்று அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

01. இது இஸ்லாத்தின் ஈ வது ருக்னாகும். நபி அவர்கள் கூறினார்கள்,

بني الإسلام على خمس شهادة أن لا إله إلا الله، وإقام الصلاة. وإيتاء الزكاة، والحج، وصيام رمضان. (الراوي: عبد الله بن عمر ، التخريج :البخاري ٠٨ مسلم(16)

"அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும், முஹம்மத் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதிமொழிவது, தொழுகையைக் கடைப்பிடிப்பது, (கடமையானோர்) ஸகாத் (கட்டாய தர்மம்) வழங்குவது. (இயன்றோர் இறையில்லம் கஅபாவில்) ஹஜ் செய்வது, ரமளானில் நோன்பு நோற்பது ஆகிய ஐந்து தூண்கள்மீது இஸ்லாம் எழுப்பப்பட்டுள்ளது." (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் , நூல்: புஹாரி 08, முஸ்லிம் 16).

02 இந்த ரமழான் மாத நோன்பு இதற்கு முன்னர் வேதம்கொடுக்கப்பட்ட கடையாக்கப்பட்டுள்ளது. ஏனைய அல்லாஹ் மதத்தினருக்கும் கூறுகிறான்,

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ١٨٣ ﴾

"ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும்(அது) விதிக்கப்பட்டுள்ளது (அதன் மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம்." (அல்குர்ஆன் ௦௨ : க௮௩).

03. ஏனைய வணக்கங்களைப் போல் அல்லாமல் ரமழான் மாத நோன்பை அல்லாஹ் தனதாக்கிக் கொண்டுள்ளான் அல்லாஹ் கூறியதாக நபி அவர்கள் கூறினார்கள்,

كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ له، إلَّا الصِّيَامَ؛ فإنَّه لي، وأنا أجزي به.

(الراوي: أبو هريرة التخريج البخاري ١٩٠٤، مسلم ١١٥١)

"ஆதமுடைய மகனின் (மனிதனின் ஒவ்வொரு செயலும் அவனுக்கே உரியதாகும். ஆனால், நோன்பைத் தவிர! நிச்சயமாக, நோன்பு எனக்கு (மட்டுமே) உரியது; அதற்கு நானே நற்பலன் அளிப்பேன்" (அறிவிப்பவர்: அபூஹுரைரா ,நூல்: புஹாரி க௯௦௪, முஸ்லிம் கக௫க)

அல்லாஹ்வின் நல்லடியார்களே, ஏனைய வணக்கங்களை விடவும் நோன்பை மாத்திரம் தனக்கு உரித்தானதாக அல்லாஹ் ஆக்கியுள்ளமை அந்த அடியானின் மீது அல்லாஹ் கொண்டுள்ள அன்பையும், கண்ணியத்தையும் குறிக்கிறது. நோன்பென்பது அடியானுக்கும் அல்லாஹ்வுக்கும் மத்தியில் மாத்திரம் பேணப்படும் இரகசியமாகும். நோன்பிருக்கும் ஒருவர் மக்களை விட்டும் ஒதுங்கியிருந்து, நோன்பை முறிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தும் அல்லாஹ் என்னை பார்த்துக்கொண்டிருக்கிறான் எனும் உள்ளச்சத்தின் காரணமாகவும், உளத்தூய்மை காரணமாகவும் அதிலிருந்து தவிர்ந்துகொள்கிறான் பகல் பொழுதில் உண்ணல், பருகல், உடலுறவு போன்றவற்றை செய்வது தன்மீது தடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்தும், அல்லாஹ்வின் தண்டனைகளுக்குப் பயந்தும் அவற்றிலிருந்து ஒதுக்கிக் கொள்கிறான் இவ்வாறு பேணப்படும் உளத்தூய்மைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே அல்லாஹ் ஏனைய வணக்கங்களை விடவும் நோன்பை மாத்திரம் தனதாக்கிக்கொண்டுள்ளான்.

04. மேற்கூறப்பட்ட ஹதீஸில் நோன்பிற்கான கூலியையும் ஏனைய தானே கொடுப்பதாக அல்லாஹ் கூறுகிறான். வணக்கங்களுக்கான கூலிகளை இவ்வளவு தான் எனவும், இத்தனை மடங்குகள் எனவும் மட்டிட்டு அல்லாஹ் கூறியுள்ளான். ஆனால் நோன்பிற்கான கூலியை மட்டிடாமல் அதற்கு கூலி கொடுப்பது அவன் பொறுப்பு எனக் கூறியுள்ளது அல்லாஹ் தான் நாடிய அளவில் கணக்கிடாமல் அவர்களுக்கு கூலி வழங்குவான் என்பதைக் குறிக்கிறது. அல்லாஹ் கொடை கொடுப்பதில் மிகவும் உயர்ந்தவன்.

05. ரமழான் மாத நோன்பில் மூன்று வித பொறுமைகள் ஒன்று சேர்கின்றன. வணக்க வழிபாடுகளை செய்வதில் பொறுமையாக இருத்தல், அல்லாஹ் தடுத்தவற்றை செய்யாது பொறுமையாக இருத்தல்,

பசி, தாகம், உடல் பலவீனம், உள பலவீனம் போன்றநோவினையை உண்டாக்கும் அல்லாஹ்வின் விதியில் பொறுமையாக இருத்தல் போன்றனவே அவையாகும். இவ்வாறு பொறுமையாக இருப்பதற்கும் அல்லாஹ் அளவற்ற கூலிகளை வழங்குகிறான், அல்லாஹ் கூறுகிறான்.

6. ﴿إِنَّمَا يُوَفَّى ٱلصَّٰبِرُونَ أَجۡرَهُم بِغَيۡرِ حِسَابٖ ۝١٠﴾

"பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாகக் கணக்கின்றிப் பெறுவார்கள்" (அல்குர்ஆன் ௩௯:௧௦).

ரமழான் மாத நோன்பை நோற்போருக்கு சுவனத்தில் நுழைவதற்காக பிரத்தியேக வாயிலை அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

إِنَّ فِي الجَنَّةِ بابًا يُقال له: الرَّيَّانُ، يَدْخُلُ منه الصّائِمُونَ يَومَ القِيامَةِ، لا يَدْخُلُ منه أَحَدٌ غَيْرُهُمْ، يُقالُ: ايْنَ الصَّائِمُونَ؟ فَيَقُومُونَ لا يَدْخُلُ منه أَحَدٌ غَيْرُهُمْ، فَإِذَا دَخَلُوا أَغْلِقَ فَلَمْ يَدْخُلْ منه أَحَدٌ (الراوي: سهل بن سعد الساعدي ، التخريج: ١٨٩٦، مسلم ١١٥٢)

"சொர்க்கத்தில் 'ரய்யான்' எனப்படும் ஒரு நுழைவாயில் இருக்கிறது. மறுமை நாளில், அதன் வழியாக நோன்பாளிகளே நுழைவார்கள்; அவர்களைத் தவிர வேறு யாரும் அதன் வழியாக நுழையமாட்டார் கள் நோன்பாளிகள் எங்கே?' என்று கேட்கப்படும்; உடனே அவர்கள் எழுவார் கள்; அவர்களைத் தவிர வேறு யாரும் அதன் வழியாக நுழையமாட்டார்கள்; அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் அடைக்கப்பட்டுவிடும்; அதன் வழியாக வேறு யாரும் நுழையமாட்டார்கள்" (அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஃத் அஸ்ஸாஇதீ நூல்: புஹாரி 1896, முஸ்லிம் 1152).

07. ரமழான் மாத நோன்பை நோற்போருக்கு நரகிலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

الصِّيَامُ جُنَّةٌ مِنَ النَّارِ كَجُنَّةِ أحدِكم من القتال.

(الراوي: عثمان بن أبي العاص التخريج النسائي ٢٢٣٠، ابن ماجه ١٣٣٦)

"யுத்தத்தில் கேடயம் எப்படி உங்களைப் பாதுகாக்கிறதோ, அவ்வாறே நரகிலிருந்து நோன்பு ஒருவரைப் பாதுகாக்கிறது" (அறிவிப்பவர்: உஸ்மான் இப்னு அபுல்ஆஸ் , நூல்: நஸாஈ 2230, இப்னுமாஜா 1336)

08. ரமழான் மாத நோன்பை ஈமானோடும், நன்மையை எதிர்பார்த்தும் நோற்பதால் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

مَن صَامَ رَمَضَانَ، إيمانًا واحتسابًا غُفِرَ له ما تَقَدَّمَ مِن ذَنْبِهِ.

(الراوي: ابو هريرة ، التخريج البخاري ٣٨ مسلم ٧٦٠)

"யார் இறைநம்பிக்கையோடும் நன்மையை எதிர்பார்த்தும் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்கிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்." (அறிவிப்பவர்: அபூஹுரைரா நூல்: புஹாரி ௩௮, முஸ்லிம் எ௬௰).

அபூஹுரைரா அவர்கள் கூறினார்கள்,

أن النبي صعد المنبر فقال: (آمين آمين آمين). قيل: يا رسول الله ! إنك صعدت المنبر فقلت: «آمين آمين آمين. فقال: إن جبرائيل + أتاني فقال: من أدرك شهر رمضان فلم يُغفّر له فدخل النار فأبعده الله، قل: (آمين)، فقلتُ: (آمين). (الراوي: أبو هريرة التخريج: صحيح الترغيب (٩٩٧

"நபி அவர்கள் மின்பரில் ஏறி, 'ஆமீன், ஆமீன், ஆமீன்' எனக் கூறினார்கள், அப்போது 'அல்லாஹ்வின் தூதரே, நீங்கள் மின்பரில் ஏறி, ஆமீன், ஆமீன், ஆமீன் எனக் கூறினீர்களே' எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'ஜிப்ரீல் : அவர்கள் என்னிடம் வந்து, 'யார் ரமழான் மாதத்தை அடைந்தும் பாவமன்னிப்பைப் பெறவில்லையோ அவர் நரகில் நுழையட்டும். அல்லாஹ் அவரை தன்னை விட்டும் தூரமாக்கட்டும், இதற்கு ஆமீன் கூறுங்கள்' என்றார்கள், நானும் ஆமீன் என்றேன்" (அறிவிப்பவர். அபூஹுரைரா நூல்: ஸஹீஹுத் தர்ஹீப் ௯௯௭).

09. ரமழான் மாத நோன்பை நோற்பது மிகவும் இலகுவானது. இதற்கான காரணம் தன்னை சூழ இருக்கும் அத்தனை முஸ்லிம்களும் இந்நோன்பை நோற்கிறார்கள் இதனால் ரமழான் காலங்களில் செய்யும் அனைத்து வணக்கங்களையும் இலகுவாக செய்ய முடியும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே, அல்லாஹ் விரும்பும் விதத்தில் ரமழான் மாதத்தை பயன்படுத்திக்கொள்வதற்கு அவன் எமக்கு தவ்ஃபீக் செய்ய வேண்டும். அவனை திக்ர் செய்து, அவனுக்கு நன்றி செலுத்தி, வணக்க வழிபாடுகளை நல்ல முறையில் செய்வதற்கு அவன் எமக்கு உதவிபுரிய வேண்டும்.

குர்ஆனின் போதனைகளை பின்பற்றுவதற்கு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக!, அதன் அத்தாட்சிகள், தீர்க்கமான சட்டதிட்டங்கள் போன்றவற்றை எனக்கும் உங்களுக்கும் பிரயோசனமானதாக ஆக்கித்தருவானாக!, இதை எனது வார்த்தைகளாக நான் கூறுகிறேன், அனைத்து பாவமான காரியங்களிலிருந்தும் எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ் பாவமன்னிப்பை வழங்குவானாக!, அவனிடமே பாவமன்னிப்புக் கேளுங்கள் நிச்சயமாக அவன் மாத்திரமே பாவமன்னிப்பை ஏற்று, அனைத்தையும் மன்னிப்பவன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும், அவனின் அருள் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவர் மீதும் உரித்தாகட்டும் என்ற இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன், அல்லாஹ்வை அஞ்சி, அவனுக்கு மாத்திரம் வழிபடுங்கள்.

10. ரமழான் மாதத்தில் நோன்பிருக்கும் ஒருவரின் பிரார்த்தனைகள் அனைத்தும் அல்லாஹ்விடம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

ثلاث دعوات لا تُرَدُّ: دعوة الوالد لولده، ودعوة الصائم، ودعوة المسافر الراوي: أنس بن مالك .. التخريج البيهقي.(6619)

"தந்தை தன் பிள்ளைக்கு செய்யும் பிரார்த்தனை, நோன்பாளி கேட்கும் பிரார்த்தனை, பிரயாணம் செய்பவர் கேட்கும் பிரார்த்தனை ஆகிய மூன்றும் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது'' (அறிவிப்பவர்: அனஸ் இப்னு மாலிக் நூல் : பைஹகீ ௬௬௧௯).

நபி அவர்கள் கூறினார்கள்,

ثلاثة لا يُرَدُّ دُعاؤهم الإمام العادل، والصائم حتى يُفطر، ودعوة المظلوم.

الراوي: أبو هريرة . التخريج: الترمذي **٣٥٩٨** أحمد.(**9743**)

"நீதமானதலைவர், நோன்பிருப்பவர்,அநீதம்செய்யப்பட்டவர் ஆகிய மூவரின் துஆக்களும் எவ்வித திரையுமின்றி ஏற்றுக்கொள்ளப்படும்" (அறிவிப்பவர்: அபூஹுரைரா ,நூல் : திர்மிதி ௩௫௯௮, அஹ்மத் ௯௭௪௩).

11. ரமழான் மாத இரவில் நின்றுவணங்குவதால் முன்சென்ற பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. நபி அவர்கள் கூறினார்கள்,

مَن قَامَ رَمَضَانَ إيمانًا واحتسابًا غُفِرَ له ما تَقَدَّمَ مِن ذَنْبِهِ

(الراوي: ابو هريرة ، التخريج البخاري ٣٧ مسلم ٧٥٩)

"யார் இறைநம்பிக்கையோடும் நன் மையை எதிர்பார்த்தும் ரமளான் மாதத்தில் நின்று வழிபடுகிறாரோ அவரது முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்." (அறிவிப்பவர்: அபூஹுரைரா நூல்: புஹாரி ௩௭, முஸ்லிம் ௭௫௯)

12 இரவுத் தொழுகையில் இமாமோடு நின்று தொழுவதற்கும் அல்லாஹ் நன்மைகளை வைத்துள்ளான் நபி அவர்கள் கூறினார்கள்,

من قام مع الإمام حتى ينصرف كُتِبَ له قيام ليلة

(الراوي: أبو ذر الغفاري .. التخريج الترمذي ٨٠٦ النسائي ١٣٦٣ أبو داود ١٣٧٥)

"யார் இமாம் வெளியேறும் வரை அவருடன் நின்று வணங்குகிறாரோ அவர் ஒரு இரவு முழுதும் நின்று வணங்கிய நன்மையைப் பெறுகிறார்" (அறிவிப்பவர்: அந்தர் அல்கிஃபாரி , நூல்:திர்மிதி ௮௦௬, நஸாஈ ௧௩௬௩, அபூதாவுத் ௧௩௭௫)

13.ரமழான் மாதத்தில் அதிக தானதர்மம் செய்யுமாறு இஸ்லாம் எமக்குக் கூறுகிறது. இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகிறார்கள்,

كان رسولُ اللهِ أَجْوَدَ النَّاسِ، وكان أجود ما يكونُ في رَمَضَانَ.

(الراوي: عبد الله بن عباس .. التخريج البخاري ٣٢٢٠ مسلم ٢٣٠٨)

"அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மக்களிலேயே அதிகமாக வாரி வழங்கக் கூடியவர்களாக இருந்தார்கள்; ரமளான் மாதத்தில் (வழக்கத்தைவிட) அதிகமாகவாரி வழங்குவார்கள்"(அறிவிப்பவர். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் நூல்: புஹாரி ௩௨௨௦, முஸ்லிம் ௨௩௦௮).

14. ரமழான் மாதத்தில் உம்ரா நிறைவேற்றினால் அதற்கும் அதிக கூலிகளை அல்லாஹ் வழங்குகிறான், நபி அவர்கள் கூறினார்கள்,

فَإِنَّ عُمْرَةٌ فِي رَمَضَانَ تَقْضِي حَجَّةً أَوْ حَجَّةً مَعِي.

(الراوي: عبد الله بن عباس التخريج البخاري ١٨٦٣ مسلم ١٢٥٦)

"ரமளானில் செய்யப்படும் ஓர் உம்ரா என்னுடன் ஹஜ்ஜுச் செய்வதற்கு நிகராகும்' (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ,நூல்: புஹாரி கஅசாந, முஸ்லிம் கஉ(ருசா)

15. ரமழான் மாத ஒவ்வொரு இரவிலும் நோன்பிருக்கும் ஒருவருக்கு நரக விடுதலையை அல்லாஹ் வழங்குகிறான், நபி அவர்கள் கூறினார்கள்,

إذا كانت أول ليلة من رمضانَ صُفُدتِ الشَّياطين ومردة الجن وغلقت أبَوَابُ النَّارِ فلم يُفتح منها باب وفتحت أبواب الجنَّةِ فلم يُغْلَقُ منها باب ونادى مناد يا باغي الخير أقبل ويا باغي الشَّرِّ اقصر ولله عتقاءُ مِنَ النَّارِ وذلك في كل ليلة.

الراوي: أبو هريرة ... التخريج الترمذي ٦٨٢. ابن ماجه ١٦٤٢

"ரமழானின் முதலாம் இரவு வந்துவிட்டால் ஷைத்தான்களும், கெட்ட ஜின்களும் விலங்கிடப்படுகிறார்கள். நரகத்தின் கதவுகள் மூடப்படுகின்றன. அதில் ஒன்றும் திறக்கப்படமாட்டாது. சுவனத்தின் வாயில்கள் அனைத்தும் திறக்கப்படுகின்றன. அவற்றில் எந்தவொன்றும் மூடப்படாது. அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒரு அழைப்பாளர், நன்மை செய்ய இருப்போரே, முன்வாருங்கள். தீமை செய்ய இருப்போரே, தவிர்ந்துகொள்ளுங்கள் எனக் கூறுவார். அதன் ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரக விடுதலையை அளிக்கிறான்' (அறிவிப்பவர்: அபூஹுரைரா , நூல்: திர்மிதி சாஅஉ, இப்னுமாஜா கசாசஉ).

நபி அவர்கள் கூறினார்கள்,

إن لله عند كل فطر عتقاء وذلك في كل ليلة.

الراوي: جابر بن عبدالله في التخريج: أحمد ٢٢٢٠٢ ابن ماجه(1340)

"ஒவ்வொரு நாள் நோன்பு திறக்கும் இரவு வேளையில் அல்லாஹ் நரக விடுதலையை வழங்குகிறான்" (அறிவிப்பவர்: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் நூல்: அஹ்மத் ௨௨௨௦௨, இப்னு மாஜா ௧௩௪௦).

16,17.ரமழான் மாதத்தில் சுவனத்தில் வாயில்கள் திறக்கப்பட்டு, நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. நபி அவர்கள் கூறினார்கள்,

إِذَا دَخَلَ رَمَضانُ فُتُحَتْ أَبْوَابُ الجَنَّةِ وغُلِّقَتْ ابْوَابُ جَهَنَّمَ وَسُلْسِلَتِ الشياطين.

(الراوى: أبو هريرة التخريج البخارى 3277 مسلم 1079)

"ரமளான் மாதம் வந்துவிட்டால் சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் கதவுகள் மூடப்படுகின்றன, ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது." (அறிவிப்பவர்: அபூஹுரைரா ,நூல்:புஹாரி 3277, முஸ்லிம் 1079).

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே, இன்று 17 சிறப்பம்சங்களோடு போதுமாக்கிக் கொள்வோம். மீண்டும் வருகிற ஜும்ஆவில் இதன் அடுத்த தொடரை பார்ப்போம். ஒவ்வொரு முஸ்லிமும் இவற்றை அறிந்து, அதன்படி செயற்பட ஆரம்பித்தால் ஈமானோடும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பிருக்க முடியும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே, நிச்சயமாக அல்லாஹ் மிக முக்கியமான விடயம் பற்றி ஏவியுள்ளான் அல்லாஹ் கூறுகிறான்,

﴿ إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَاأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்" (அல்குர்ஆன் 33:56).

இறைவா!, உனது அடியாரும் தூதருமாகிய முஹம்மத் மீது நீ அருள் புரிவாயாக, இஸ்லாத்தின் தலைவர்களாக இருந்த அவரின் தோழர்களையும் பொருந்திக்கொள்வாயாக, மறுமை நாள் வரைக்கும் யாரெல்லாம் நபி அவர்களை பின்பற்றினார்களோ, பின்பற்றிக்கொண்டிருக்கிறார்களோ, பின்பற்ற இருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொள்வாயாக!,

இறைவா! இஸ்லாத்தையும், கண்ணியப்படுத்துவாயாக! முஸ்லிம்களையும் இணைவைப்பையும், இணைவைப்பாளர்களையும் இழிவிபடுத்துவாயாக! உன்னை ஒருமைப்படுத்தும் உன் அடியார்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பாயாக!

இறைவா! எங்கள் நாட்டையும், எமது பிரதேசங்களையும் பாதுகாப்பாயாக! எங்கள் தலைவர்களையும், மேலதிகாரிகளையும் சீர்திருத்துவாயாக! அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழியைக் காட்டக்கூடியவர்களாகவும் மாற்றுவாயாக!

இறைவா! அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் உனது வேதத்தின் அடிப்படையில் அவர்களின் ஆட்சியை அமைத்துக்கொள்வதற்கும், உனது மார்க்கத்தை மேலோங்கச் செய்ய பணி புரிபவதற்கும் அவர்களுக்கு உதவுவாயாக! அவர்களின்குடிமக்களுக்கு நல்லது செய்பவர்களாக அவர்களை ஆக்குவாயாக!.

இறைவா!, ரமழான் மாதத்தில் அதிக நன்மைகளை செய்வதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்தருள்வாயாக, இறைவா!, உனது அருள் நீங்குவதிலிருந்தும், எம் மீதான உனது கருணைப் பார்வை மாற்றமடைவதிலிருந்தும், திடீரென வரும் உனது தண்டனைகளிலிருந்தும், உனது அனைத்து கோபப் பார்வைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக!,

இறைவா! இவ்வுலகிலும், மறுவுலகிலும் நல்லதையே எமக்கு வழங்குவாயாக! நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக! யாரெல்லாம் கடவுள் பற்றி தவறான வர்ணனைகள் வழங்குகிறார்களோ அவை அனைத்தை விட்டும் எமது இறைவன் பரிசுத்தமானவன் அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும் அவனின் அருளைப் பெற்றவர்கள் அகிலத்தாரின் இரட்சகனாகிய எமது இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

ரமழானுடைய க0 இரகசியங்கள் (2)

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِيَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

முதல் குத்பா

புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானது, நாம் அவனைப் புகழ்ந்து அவனிடமே உதவி தேடி, அவனிடமே பாவமன்னிப்பு தேட வேண்டும். எங்களிடமும், எங்கள் செயல்களிலும் ஏற்படும் பாதிப்புகளை விட்டும் அவனிடமே பாதுகாப்பு தேட வேண்டும். அவன் யாருக்கு நேர்வழி காட்டிவிட்டானோ அவனை யாராலும் வழிகெடுக்க முடியாது. அவன் யாரை வழிகேட்டில் விட்டுவிட்டானோ, அவர்களை நேர்வழியிலும் செலுத்த முடியாது. இணையற்ற, வணங்குவதற்குத் தகுதியான, உண்மையான ஒரே இறைவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை என நான் சாட்சிகூறுகிறேன். முஹம்மத் அவர்கள் அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இறுதித்தூதரும், அவனின் அடியானும் ஆவார்கள் என சாட்சி கூறுகிறேன்.

இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன், பேச்சுக்களிலே சிறந்தது அல்லாஹ்வின் பேச்சாகும். வழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மத் அவர்களின் வழிகாட்டுதலாகும். இஸ்லாத்தில் புதிதாக தோற்றுவிக்கப்படும் அனைத்தும் மிகத் தீய செயல்களாகும். புதிதாக உருவாக்கப்படும் அனைத்தும் பித்அத்களாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கே இட்டுச் செல்லும்.

அன்புள்ள இஸ்லாமியர்களே, அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறு எனக்கும் உங்களுக்கும் வஸிய்யத் செய்கிறேன். இது முன்சென்றோருக்கும், பின்னால் வர இருப்போருக்குமான அல்லாஹ்வின் வஸிய்யத்தாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَلَقَدْ وَصَّيْنَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَـٰبَ مِن قَبْلِكُمْ وَإِيَّاكُمْ أَنِ ٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ﴾

“உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசித்தோம்.” (அல்குர்ஆன் 04:131)

அல்லாஹ்வை அஞ்சி, அவனுக்கு வழிபடுங்கள். அவனுக்கு மாறு செய்யாதீர்கள். அறிந்துகொள்ளுங்கள்: அல்லாஹ் தான் நாடியவைகளைப் படைக்கிறான், அவற்றில் தனது நுட்பத்தின் அடிப்படையில் நாடிய சிலவற்றைத் தேர்வு செய்கிறான். மலக்குமார்களில் சிலரை விட சிலரைச் சிறப்பாக்கியுள்ளான். வேதங்களில் சிலதை விட சிலதைச் சிறப்பாக்கியுள்ளான். நபிமார்களில் சிலரை விட சிலரைச் சிறப்பாக்கியுள்ளான். இடங்களில் சிலதை விட சிலதைச் சிறப்பாக்கியுள்ளான். பருவ காலங்களில் சிலதை விட சிலதைச் சிறப்பாக்கியுள்ளான். அவ்வாறே மாதங்களிலும் சிலதை விட சிலதைச் சிறப்பாக்கியுள்ளான்.

இது மக்கள் நல்ல செயல்களில் அதிகம் ஈடுபடுவதற்கும், பன்மடங்கு நன்மைகள் பெற்று, பாவங்களை அழித்து, சுவனத்தில் உயரிய அந்தஸ்துகளைப் பெற்றுக்கொள்வதற்குமான ஏற்பாடாகும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே, சென்ற வெள்ளிக்கிழமை ரமழான் மாதத்துக்கான சிறப்பம்சங்கள் பற்றி அறிந்துகொண்டோம். அவற்றை ௩௦ சிறப்பம்சங்களாகத் தொகுத்திருந்தேன். அதில் ௧௫ மாத்திரமே பார்த்தோம். இன்று மீதமுள்ள ௧௫ சிறப்பம்சங்கள் பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம்.

நோன்பின் சிறப்பம்சங்களில் பிரதானமான இரு சிறப்பம்சங்கள் இருக்கின்றன. அவை சுவன வாயில்கள் திறக்கப்படுவதும், நரக வாயில்கள் மூடப்படுவதும், ஷைத்தான்கள் விலங்கிடப்படுவதுமாகும்.

நபி அவர்கள் கூறினார்கள்:

قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم: إِذَا دَخَلَ رَمَضَانُ فُتِّحَتْ أَبْوَابُ الْجَنَّةِ وَغُلِّقَتْ أَبْوَابُ جَهَنَّمَ وَسُلْسِلَتِ الشَّيَاطِينُ.

“ரமளான் மாதம் வந்துவிட்டால் சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன; நரகத்தின் கதவுகள் மூடப்படுகின்றன; ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது.”
(அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூல்: புஹாரி ௩௨௭௭, முஸ்லிம் ௧௦௭௯)

18. மேலே உள்ள ஹதீஸில் இடம்பெற்றது போல் ரமழான் மாதத்தில் ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. அவர்களில் மோசமான ஷைத்தான்கள் சங்கிலியால் கட்டப்படுவர். ஏனைய மாதங்களில் உலகில் உலா வருவது போன்று ரமழான் மாதத்தில் அவர்களால் உலா வர முடியாது. அது தவிர ஷைத்தானின் ஏனைய ஊசலாட்டங்கள் இருந்துகொண்டே தான் இருக்கும்.

19. ரமழான் மாதம் அல்குர்ஆனின் மாதம் என்பதால் அதை அதிகம் ஓதுவது விரும்பத்தக்கதாகும். நபி அவர்கள் ஒவ்வொரு வருட ரமழானிலும் ஜிப்ரீல் அவர்கள் முன்னிலையில் அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பார்கள். அதை பின்பற்றும் வகையில் எமக்கு முன்சென்ற அறிஞர்களும் ரமழான் மாதத்தில் அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார்கள்.

20. ரமழான் மாத நோன்பு மறுமையில் தன்னை நோற்றோரின் அந்தஸ்தை உயர்த்துமாறும், அவர்களின் பாவங்களை மன்னிக்குமாறும் அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யும்.

நபி அவர்கள் கூறினார்கள்:

رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ: " الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ، يَقُولُ الصِّيَامُ: رَبِّ إِنِّي مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ فَشَفِّعْنِي فِيهِ، وَيَقُولُ الْقُرْآنُ: مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ فَيُشَفَّعَانِ

“கியாமத்து நாளில் நோன்பும் அல்குர்ஆனும் அடியானுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைக்கும். ‘இறைவா! நான் அவனை உணவு உட்கொள்வதில் இருந்து தடுத்தேன், பகலில் அவனது உணர்வுகளை

கட்டுப்படுத்தினேன். எனவே எனக்காக அவனுக்கு பரிந்துரை செய்வாயாக!' என்று நோன்பு மன்றாடும். அதேபோன்று அல்குர்ஆன் 'இரவில் தூக்கத்தினை விட்டும் அவனைத் தடுத்தேன், எனவே எனக்காக அவனுக்கு பரிந்துரை செய்வாயாக' என்று மன்றாடும்.''

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர், நூல்: அஹ்மத் **சூசூஉசூ**, ஹாகிம் **உ௦ரூசூ**)

21. நோன்பிருக்கும் ஒருவரின் வாய்வாடை அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட நறுமணம் மிக்கதாக இருக்கும்.

நபி அவர்கள் கூறினார்கள்:

لَخُلُوفُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللهِ مِنْ رِيحِ الْمِسْكِ

''முஹம்மதின் உயிர் எவன் கையில் உள்ளதோ அவன்மீது சத்தியமாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை, அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியின் மணத்தைவிட நறுமணமிக்கதாகும்.''

(அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூல்: புஹாரி கசூ௦சு, முஸ்லிம் ககருக)

22. ரமழான் மாத நோன்பை நோற்பவருக்கு இரு சந்தோஷங்கள் ஏற்படுகின்றன. நோன்பு திறக்கும் போது ஏற்படும் சந்தோஷமும், மறுமையில் அல்லாஹ்வைக் காணும்போது ஏற்படும் சந்தோஷமுமே அவையாகும்.

நபி அவர்கள் கூறினார்கள்:

لِلصَّائِمِ فَرْحَتَانِ يَفْرَحُهُمَا: إِذَا أَفْطَرَ فَرِحَ، وَإِذَا لَقِيَ رَبَّهُ فَرِحَ بِصَوْمِهِ

''நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு துறக்கும்போது அவர் மகிழ்ச்சியடைகிறார்; தம் இறைவனைச் சந்திக்கும்போது நோன்பின் காரணமாக அவர் மகிழ்ச்சியடைகிறார்.''

(அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூல்: புஹாரி க௯௦௪, முஸ்லிம் கக௫க)

23. ரமழான் மாதத்தில்தான் அல்குர்ஆன் இறங்கியது.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ شَهۡرُ رَمَضَانَ ٱلَّذِىٓ أُنزِلَ فِيهِ ٱلۡقُرۡءَانُ ﴾

“இந்தக் குர்ஆன் ரமளான் மாதத்தில் அருளப்பட்டது.”
(அல்குர்ஆன் ௦உ:க௮௫)

அதுவும் லைலதுல் கத்ர் இரவில் அருளப்பட்டது. அல்லாஹ் கூறுகிறான்:

﴿ إِنَّآ أَنزَلۡنَٰهُ فِى لَيۡلَةِ ٱلۡقَدۡرِ ١ ﴾

“மகத்துவமிக்க இரவில் இதை (குர்ஆனை) நாம் அருளினோம்.”
(அல்குர்ஆன் ௯௭:௦க)

இது மகத்துவமிக்க இரவாகும். இவ்விரவில் லவ்ஹுல் மஹ்ஃபூல் ஏட்டிலிருந்து பைதுல் இஸ்ஸா எனும் கீழ்வானத்திலுள்ள இடத்திற்கு மொத்தமாக அல்லாஹ் இறக்கினான். பின்னர் காலத்திற்கு ஏற்றவாறு ஜிப்ரீல் அவர்கள் மூலம் நபி அவர்களுக்கு பகுதிபகுதியாக இறக்கினான்.

இவ்விரவில் அதிக மகத்துவங்கள் பொருந்தியுள்ளதால் தான் இதற்கு லைலதுல் கத்ர் - மகத்துவமிக்க இரவு என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அவ்வாறே இவ்விரவில் ஒரு வருடத்துக்கான விதி நிர்ணயிக்கப்படுவதால் அதற்காகவும் லைலதுல் கத்ர் - விதி நிர்ணயிக்கப்படும் இரவு எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ فِيهَا يُفۡرَقُ كُلُّ أَمۡرٍ حَكِيمٍ ٤ ﴾

“அதில் தான் உறுதியான காரியங்கள் யாவும் பிரிக்கப்படுகின்றன.”
(அல்குர்ஆன் ௪௪:௦௪)

இமாம் இப்னுல் கையும் அவர்கள், இதுவே சரியான காரணம் எனக் கூறியுள்ளார்கள். (பார்க்க: ஷஃபாஉல் அலீல் - ௧/௧௧௦. அவ்வாறே இக்கருத்து தஃப்ஸீர் கலை அறிஞர்களிடமும் பிரபலமான கருத்தாகும்).

லைலதுல் கத்ர் எனும் இவ்விரவு பாக்கியம் பொருந்தியது என அல்லாஹ் கூறுகிறான் :

﴿ إِنَّآ أَنزَلۡنَٰهُ فِي لَيۡلَةٖ مُّبَٰرَكَةٍۚ إِنَّا كُنَّا مُنذِرِينَ ﴿٣﴾ ﴾

“இதை பாக்கியம் நிறைந்த இரவில் நாம் அருளினோம்.”
(அல்குர்ஆன் ௪௪:௦௩)

24. பாக்கியம் நிறைந்த இவ்விரவின் மகத்துவத்தை உணர்ந்து யார் ஈமானோடு இரவுத் தொழுகைகளைத் தொழுது, இதற்காக அல்லாஹ் தர இருக்கும் கூலிகளை எதிர்பார்த்து அவற்றை உயிர்ப்பிக்கிறாரோ அவரின் முன்சென்ற பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகிறது.

நபி அவர்கள் கூறினார்கள்:

عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ: مَنْ قَامَ لَيْلَةَ الْقَدْرِ إِيمَانًا وَاحْتِسَابًا، غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ، وَمَنْ صَامَ رَمَضَانَ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ.

“யார் ‘லைலத்துல் கத்ர்’ எனும் மகத்துவமிக்க இரவில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வழிபடுகிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்.” (அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூல்: புஹாரி ௧௯௦௧, முஸ்லிம் ௭௬௦)

25. பாக்கியமிக்க இவ்விரவை தொழுகையின் மூலம் உயிர்ப்பித்ததால் அதற்கான கூலிகள் ௮௩ வருடங்கள் தொடர்ந்து நன்மைகள் செய்வதை விடவும் அதிகமாக கிடைக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ لَيۡلَةُ ٱلۡقَدۡرِ خَيۡرٞ مِّنۡ أَلۡفِ شَهۡرٖ ﴿٣﴾ ﴾

“மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது.”
(அல்குர்ஆன் 97:03)

நபி அவர்கள் கூறினார்கள்:

قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم: «أَتَاكُمْ رَمَضَانُ شَهْرٌ مُبَارَكٌ، فَرَضَ اللهُ عز وجل عَلَيْكُمْ صِيَامَهُ، تُفْتَحُ فِيهِ أَبْوَابُ السَّمَاءِ وَتُغْلَقُ فِيهِ أَبْوَابُ الْجَحِيمِ، وَتُغَلُّ فِيهِ مَرَدَةُ الشَّيَاطِينِ، لِلهِ فِيهِ لَيْلَةٌ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ، مَنْ حُرِمَ خَيْرَهَا فَقَدْ حُرِمَ

“ரமழான் மாதம் உங்களை வந்தடைந்துள்ளது. இது மகத்துவமிக்க இரவாகும். இதில் நோன்பு நோற்பதை அல்லாஹ் உங்களுக்கு கடமையாக்கியுள்ளான். இதில் வானத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் கதவுகள் மூடப்படுகின்றன. தீய ஷைத்தான்கள் விலங்கிடப்படுகிறார்கள். இதில் ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஒரு இரவு இருக்கிறது. அதில் யார் நன்மைகளை இழக்கிறாரோ அவர் முழு நன்மைகளையும் இழந்துவிடுகிறார்.”
(அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூல்: நஸாஈ 2106)

இப்னு ஸஃதி அவர்கள் கூறினார்கள்:

“லைலதுல் கத்ர் விடயத்தில் அறிவாளிகளும், புத்திஜீவிகளும் தடுமாற்றமடைகின்றனர். பலவீனமான இந்த சமூகத்திற்கு அதிக நன்மைகளை சம்பாதித்துக்கொள்வதற்காக ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்த ஒரு இரவை வழங்கியிருப்பது அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்துள்ள அருளாகும்.” (பார்க்க: தஃப்ஸீர் அஸ்ஸஃதி - ஸூரதுல் கத்ர்)

26. ரமழான் மாத கடைசிப்பத்தில் பள்ளியில் இஃதிகாஃப் இருப்பது விரும்பத்தக்கதாகும். இஃதிகாஃப் என்பது அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்காக பள்ளியில் தங்கியிருப்பதற்குச் சொல்லப்படும்.

ஆஇஷா அவர்கள் கூறினார்கள்:

أَنَّ النَّبِيَّ صلى الله عليه وسلم «كَانَ يَعْتَكِفُ الْعَشْرَ الْأَوَاخِرَ مِنْ رَمَضَانَ حَتَّى تَوَفَّاهُ اللهُ، ثُمَّ اعْتَكَفَ أَزْوَاجُهُ مِنْ بَعْدِهِ.

“நபி அவர்கள் இறக்கும்வரை ரமழானின் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்துவந்தார்கள்; அவர்களுக்குப்பின் அவர்களின் துணைவியர் இஃதிகாஃப் இருந்தனர்.”

(அறிவிப்பவர்: ஆஇஷா, நூல்: புஹாரி உ0உசா, முஸ்லிம் ககஎஉ)

ரமழானின் இறுதிப் பத்து நாட்களில் நபி அவர்கள் லைலதுல் கத்ரை அடைவதற்காகவே இஃதிகாஃப் இருந்துள்ளார்கள்.

إِنِّي اعْتَكَفْتُ الْعَشْرَ الْأُوَلَ أَلْتَمِسُ هَذِهِ اللَّيْلَةَ، ثُمَّ اعْتَكَفْتُ الْعَشْرَ الْأَوْسَطَ، ثُمَّ أُتِيتُ، فَقِيلَ لِي: إِنَّهَا فِي الْعَشْرِ الْأَوَاخِرِ فَمَنْ أَحَبَّ مِنْكُمْ أَنْ يَعْتَكِفَ فَلْيَعْتَكِفْ

“இந்த (ரமளானில் லைலத்துல் கத்ர்) இரவைத் தேடியவாறு நான் முதல் பத்து நாட்களில் ‘இஃதிகாஃப்’ இருந்தேன். பின்னர் நடுப்பத்து நாட்களிலும் ‘இஃதிகாஃப்’ இருந்தேன். பிறகு ‘அந்த இரவு இறுதிப் பத்து நாட்களில் உள்ளது’ என (வானவர் மூலம்) என்னிடம் வந்து சொல்லப்பட்டது. ஆகவே, உங்களில் (இறுதிப்பத்து நாட்களில்) ‘இஃதிகாஃப்’ இருக்க விரும்புகின்றவர் இஃதிகாஃப் இருக்கட்டும்.”

(அறிவிப்பவர்: அபூஸஈத் அல்ஹுத்ரீ, நூல்: முஸ்லிம் கக67)

அல்லாஹ்வின் நல்லடியார்களே, அல்லாஹ் விரும்பும் விதத்தில் ரமழான் மாதத்தை பயன்படுத்திக்கொள்வதற்கு அவன் எமக்கு தவ்ஃபீக் செய்ய வேண்டும். அவனை திக்ர் செய்து, அவனுக்கு நன்றி செலுத்தி, வணக்க வழிபாடுகளை நல்ல முறையில் செய்வதற்கு அவன் எமக்கு உதவிபுரிய வேண்டும்.

குர்ஆனின் போதனைகளை பின்பற்றுவதற்கு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக! அதன் அத்தாட்சிகள், தீர்க்கமான சட்டதிட்டங்கள் போன்றவற்றை எனக்கும் உங்களுக்கும்

பிரயோஜனமானதாக ஆக்கித்தருவானாக! இதை எனது வார்த்தைகளாக நான் கூறுகிறேன். அனைத்து பாவமான காரியங்களிலிருந்தும் எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ் பாவமன்னிப்பை வழங்குவானாக! அவனிடமே பாவமன்னிப்புக் கேளுங்கள். நிச்சயமாக அவன் மாத்திரமே பாவமன்னிப்பை ஏற்று, அனைத்தையும் மன்னிப்பவன்.

இரண்டாம் குத்பா

ரமழான் நோன்பின் ௫௦ சிறப்பம்சங்கள் - ௦௨

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும், அவனின் அருள் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவர்மீதும் உரித்தாகட்டும் என்ற இறைவாழ்த்துக்குப்பின் கூறுகின்றேன், அல்லாஹ்வை அஞ்சி, அவனுக்கு மாத்திரம் வழிபடுங்கள்.

27. ரமழான் மாதம் முடிவுக்கு வரும் போது ஸகாதுல் ஃபித்ர் எனும் கடமையை அல்லாஹ் விதியாக்கியுள்ளான். இது ஒருவர் ரமழான் மாத நோன்பில் வீணான விடயங்கள், கெட்ட பேச்சுக்கள் போன்றவற்றில் ஈடுபட்டிருப்பாரானால் அவற்றைச் சுத்தப்படுத்துவதற்கான ஓர் பரிகாரமாகும்.

«فَرَضَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم زَكَاةَ الْفِطْرِ طُهْرَةً لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ»

“வீணான விடயங்கள், தீய பேச்சுக்கள் போன்றவற்றிலிருந்து ஒருவரைச் சுத்தப்படுத்தவும், ஏழைகளுக்கு உணவுக்காகவும் நபி அவர்கள் ஸகாதுல் ஃபித்ரை கடமையாக்கினார்கள்.”

(அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், நூல்: அபூதாவுத் ௧௬௦௯, இப்னுமாஜா ௧௮௨௭)

28. ரமழான் மாதம் முடிந்ததும் நோன்புப் பெருநாள் கொண்டாட வேண்டும். அல்லாஹ் மாபெரும் இரு கடமைகளுக்குப் பின் இரு பெருநாட்களைக் கடமையாக்கியுள்ளான். அவை ரமழான் மாத நோன்பிற்குப் பின் நோன்புப் பெருநாளும், ஹஜ் கடமைக்குப் பின் ஹஜ்ஜுப் பெருநாளுமாகும்.

நோன்புப் பெருநாள் என்பது முஸ்லிம்கள் ரமழான் மாத நோன்பை முழுமையாகப் பிடித்ததன் பின் நரகத்திலிருந்து விடுதலையைப் பெறுகின்றனர். ஸகாதுல் ஃபித்ரும், பெருநாள் தொழுகையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய இம்மாபெரும் அருளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கடமையாக்கப்பட்ட வணக்கங்களாகும்.

இத்தினத்தில் முஸ்லிம்கள் அனைவரும் ஜும்ஆத் தினத்தை விடவும் அதிக அளவில் ஒன்று திரள்வார்கள். இதில் அவர்களின் சந்தோஷத்தையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காக இஸ்லாம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் திடலுக்கு செல்லுமாறு கூறுகிறது. மாதவிடாய் ஏற்பட்ட பெண்களும் திடலுக்குச் செல்ல வேண்டுமென்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

அவ்வாறே அறஃபாவில் ஹாஜிகள் தங்கியதற்குப் பின் ஹஜ்ஜுப் பெருநாளையும் அல்லாஹ் பெருநாள் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளான். அறஃபா மைதான வணக்கத்திற்குப் பின்னரும் அல்லாஹ் நரக விடுதலையை வழங்குகிறான். இத்தினத்தை விட வருடத்தின் வேறு எந்த தினத்திலும் பாவ மன்னிப்பையும், நரக விடுதலையையும் அல்லாஹ் வழங்குவதில்லை. இதனாலே இத்தினத்திற்குப் பின்னர் பெருநாளை அல்லாஹ் விதியாக்கியுள்ளான். இதுவே மாபெரும் பெருநாளாகும்.

29. ரமழான் நோன்பு முடிந்ததும் தக்பீர் கூற வேண்டும். இதற்கான நேரம் ரமழான் மாத இறுதி நாளின் சூரியன் மறைந்ததிலிருந்து பெருநாள் தொழுகை முடியும் வரை நீடிக்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَلِتُكْمِلُوا۟ ٱلْعِدَّةَ وَلِتُكَبِّرُوا۟ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ﴾

“குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின்

மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).” (அல்குர்ஆன் ௦௨:௧௮௫)

நோன்பை ௨௯ ஆகவோ அல்லது ௩௦ ஆகவோ பூர்த்தி செய்து, அது முடிந்ததும் அல்லாஹ்வுக்கு தக்பீர் சொல்லி, நோன்பெனும் வணக்கத்தை இலகுவாக்கித் தந்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காகவே இவ்வாறு அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான்.

தக்பீர் சொல்லும் முறை:

الله أكبر، الله أكبر، لا إله إلا الله، والله أكبر، الله أكبر ولله الحمد

இதை வீடுகளிலும், வியாபார நிலையங்களிலும், வீதிகளிலும் ஆண்களும், பெண்களும் கூறிக்கொள்ள வேண்டும். ஆண்கள் சத்தமாகவும், ஆண்கள் இருக்கும் இடத்தில் இருக்கும் பெண்கள் சத்தமில்லாமலும் கூறிக்கொள்ள வேண்டும்.

உம்மு அதிய்யா அவர்கள் கூறினார்கள்:

«كُنَّا نُؤْمَرُ أَنْ نَخْرُجَ يَوْمَ الْعِيدِ، حَتَّى نُخْرِجَ الْبِكْرَ مِنْ خِدْرِهَا، حَتَّى نُخْرِجَ الْحُيَّضَ، فَيَكُنَّ خَلْفَ النَّاسِ، فَيُكَبِّرْنَ بِتَكْبِيرِهِمْ، وَيَدْعُونَ بِدُعَائِهِمْ، يَرْجُونَ بَرَكَةَ ذَلِكَ الْيَوْمِ وَطُهْرَتَهُ.»

“பெருநாளன்று (பெண்களாகிய) நாங்கள் (தொழும் திடலுக்குப்) புறப்பட்டுச் செல்ல வேண்டுமெனவும், திரையினுள் இருக்கும் குமரிப் பெண்களையும் புறப்படச் செய்ய வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்தோம். மாதவிடாய் ஏற்பட்டுள்ள பெண்களைக்கூடப் புறப்படச் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டோம். பெண்கள் (தொழும் திடலுக்குச் சென்று) ஆண்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு ஆண்கள் தக்பீர் சொல்லும்போது அவர்களும் தக்பீர் சொல்வார்கள்; ஆண்கள் பிரார்த்திக்கும்போது அவர்களும் பிரார்த்திப்பார்கள். அந்த நாளின் அருள் வளத்தையும் (பாவத்) தூய்மையையும் எதிர்பார்ப்பார்கள்.”

(அறிவிப்பவர்: உம்மு அதிய்யா, நூல்: புஹாரி ௯௭௧, முஸ்லிம் ௮௯௦)

பெருநாள் தொழுகையின் போது இமாம் இஹ்ராம் தக்பீர் கூறி, ஆறு தக்பீர்கள் கூறுவார். அவ்வாறே இரண்டாம் ரக்அத்துக்காக வரும் போது தக்பீர் கூறி, அதோடு ஐந்து தக்பீர்கள் கூறுவார்.

இரு பெருநாள் தினங்களிலும் தக்பீர் கூறுவதற்கென மகத்துவங்கள் இருக்கின்றன. அல்லாஹ்வைப் பெரிதுபடுத்தவும், அவனுக்கு செய்ய வேண்டிய உரிமைகளைப் பெரிதுபடுத்தவும் இத்தினத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அல்லாஹ் அனைத்தையும் விடவும் பெரியவன். அவனின் தன்மையிலும், பண்புகளிலும் அனைவரை விடவும், அனைத்தையும் விடவும் பெரியவன். முஸ்லிம்கள் செய்யும் வணக்கமான நோன்பு, ஹஜ் போன்றவற்றிற்குத் தகுதியான பெரியவனும் அவன் தான்.

இவ்வணக்கங்களை செய்து விட்டு பெருநாள் தினத்தில் அவர்கள் ஒன்று திரள்வது அவர்களின் பலத்தையும், ஒற்றுமையையும் மனிதர்கள், ஜின்களிலுள்ள எதிரிகளுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

30. ரமழான் மாத நோன்பு முடிந்த பின்னர் ஷவ்வால் மாதத்திலும் ஆறு நோன்புகளைப் பிடிக்குமாறு இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. ரமழான் நோன்புகளோடு இவ்வாறு ஆறு நோன்புகளையும் நோற்பது வருடம் முழுவதும் நோன்பிருந்த நன்மையைப் பெற்றுத் தருகிறது.

நபி அவர்கள் கூறினார்கள்:

رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قَالَ: « مَنْ صَامَ رَمَضَانَ، ثُمَّ أَتْبَعَهُ سِتًّا مِنْ شَوَّالٍ، كَانَ كَصِيَامِ الدَّهْرِ

“ரமளான் மாதம் நோன்பு நோற்று அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தில் ஆறு நோன்பு நோற்றவர், காலமெல்லாம் நோன்பு நோற்றவரைப் போன்றவராவார்.”

(அறிவிப்பவர்: அபூ அய்யூப் அல்அன்ஸாரி, நூல்: முஸ்லிம் ௧௧௬௪)

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே, இவையே ரமழான் மாதத்தின் ௩௦ சிறப்பம்சங்களாகும். ஒவ்வொரு முஸ்லிமும் இவற்றை அறிந்து, அதன்படி செயல்பட ஆரம்பித்ததால் ஈமானோடும், நன்மையை எதிர்பார்த்தும் நோன்பிருக்க முடியும்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே!, நிச்சயமாக அல்லாஹ் மிக முக்கியமான விடயம் பற்றி ஏவியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

﴿إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாம் சொல்லுங்கள்.”

(அல்குர்ஆன் ௩௩:௫௬)

இறைவா!, உனது அடியாரும் தூதருமாகிய முஹம்மத் மீது நீ அருள் புரிவாயாக, இஸ்லாத்தின் தலைவர்களாக இருந்த அவரின் தோழர்களையும் பொருந்திக்கொள்வாயாக, மறுமை நாள் வரைக்கும் யாரெல்லாம் நபி அவர்களைப் பின்பற்றினார்களோ, பின்பற்றிக்கொண்டிருக்கிறார்களோ, பின்பற்ற இருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொள்வாயாக!

இறைவா!, இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக!, இணைவைப்பையும், இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக!, உன்னை ஒருமைப்படுத்தும் உன் அடியார்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பாயாக!

இறைவா!, எங்கள் நாட்டையும், எமது பிரதேசங்களையும் பாதுகாப்பாயாக!, எங்கள் தலைவர்களையும், மேலதிகாரிகளையும் சீர்திருத்துவாயாக!, அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழியைக் காட்டக்கூடியவர்களாகவும் மாற்றுவாயாக!

இறைவா!, அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் உனது வேதத்தின் அடிப்படையில் அவர்களின் ஆட்சியை அமைத்துக்கொள்வதற்கும், உனது மார்க்கத்தை மேலோங்கச் செய்ய பணி புரிவதற்கும் அவர்களுக்கு உதவுவாயாக!, அவர்களின் குடிமக்களுக்கு நல்லது செய்பவர்களாக அவர்களை ஆக்குவாயாக!

இறைவா!, ரமழான் மாதத்தில் அதிக நன்மைகளைச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்தருள்வாயாக, இறைவா!, உனது அருள் நீங்குவதிலிருந்தும், எம் மீதான உனது கருணைப் பார்வை மாற்றமடைவதிலிருந்தும், திடீரென வரும் உனது தண்டனைகளிலிருந்தும், உனது அனைத்து கோபப் பார்வைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக!

இறைவா!, இவ்வுலகிலும், மறுவுலகிலும் நல்லதையே எமக்கு வழங்குவாயாக!, நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!, யாரெல்லாம் கடவுள் பற்றி தவறான வர்ணனைகள் வழங்குகிறார்களோ அவை அனைத்தையும் விட்டும் எமது இறைவன் பரிசுத்தமானவன். அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும் அவனின் அருளைப் பெற்றவர்கள். அகிலத்தாரின் இரட்சகனாகிய எமது இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

ரமழான் மாதத்தில் அதிகமாக அல்குர்ஆனை ஓதுதல்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அன்புள்ள இஸ்லாமியர்களே, அல்லாஹ்வை அஞ்சி நடக்குமாறு எனக்கும் உங்களுக்கும் வஸிய்யத் செய்கிறேன். அதுவே மறுமையை நோக்கி பிரயாணம் செய்யும் ஒருவர் திரட்டிக்கொள்ள வேண்டிய சாதனங்களாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَتَزَوَّدُوا۟ فَإِنَّ خَيْرَ ٱلزَّادِ ٱلتَّقْوَىٰ ﴾

“தேவையானவற்றைத் திரட்டிக் கொள்ளுங்கள்! திரட்டிக் கொள்ள வேண்டியவற்றில் (இறை) அச்சமே மிகச் சிறந்தது.”
(அல்குர்ஆன் ௦௨:௧௯௭)

இது முன்சென்றோருக்கும், பின்னால் வர இருப்போருக்குமான அல்லாஹ்வின் வஸிய்யத்தாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَلَقَدْ وَصَّيْنَا ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْكِتَـٰبَ مِن قَبْلِكُمْ وَإِيَّاكُمْ أَنِ ٱتَّقُوا۟ ٱللَّهَ ﴾

“உங்களுக்குமுன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும், உங்களையும் அல்லாஹ்வுக்கே பயந்து நடக்குமாறு (வஸிய்யத்து) உபதேசித்தோம்.”
(அல்குர்ஆன் ௦௪:௧௩௧)

தக்வாவுடன் இருப்போருக்கு அல்லாஹ் சுவனத்தை தயார் செய்து வைத்துள்ளான்.

﴿ وَلَنِعْمَ دَارُ ٱلْمُتَّقِينَ ۝٣٠ ﴾

“(இறைவனை) அஞ்சுவோரின் உலகம் மிகவும் நல்லது.”
(அல்குர்ஆன் ௧௬:௩௦)

அல்லாஹ்வின் நல்லடியார்களே, **ரமழான் மாதம் என்பது அல்குர்ஆனின் மாதமாகும்.** இம்மாதத்தில் அல்லாஹ் மொத்தமாக அல்குர்ஆனை அடிவானத்தில் உள்ள பைதுல் இஸ்ஸாவிற்கு இறக்கினான். அங்கிருந்து காலத்திற்கு ஏற்ப பகுதி பகுதியாக ௨௩ வருடங்களாக நபி ﷺ அவர்களுக்கு இறக்கினான்.

அவ்வாறே அல்குர்ஆன் அல்லாத ஏனைய வேதங்களையும் ரமழான் மாதத்திலே அல்லாஹ் இறக்கியுள்ளான்.

أنزلت صحف إبراهيم أول ليلة من شهر رمضان وأنزلت التوراة لست مضت من رمضان وأنزل الإنجيل لثلاث عشرة مضت من رمضان وأنزل الزبور لثمان عشرة خلت من رمضان وأنزل القرآن لأربع وعشرين خلت من رمضان

“இப்றாஹீம் عليه السلام அவர்களுக்கு வழங்கப்பட்ட நன்னெறி ஏடுகள் ரமழான் மாத முதல் இரவில் இறக்கப்பட்டன. தவ்றாத் வேதம் ரமழான் மாத ௦௬ம் நாள் இறக்கப்பட்டது. இன்ஜீல் வேதம் ரமழான் மாத ௧௩ம் நாள் இறக்கப்பட்டது. அல்குர்ஆன் ரமழான் மாத ௨௪ம் நாள் இறக்கப்பட்டது.” (அறிவிப்பவர்: வாஸிலா இப்னு அல்அஸ்கஃ அல்-லைஸி رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் ஜாமிஃ ௧௪௯௭)

அன்புள்ள அல்லாஹ்வின் நல்லடியார்களே, ரமழான் மாதத்தில் செய்யும் வணக்கங்களில் மிகவும் தலையாய வணக்கம் **அல்குர்ஆனை ஓதுவதாகும்.**

எமக்கு முன்சென்ற அறிஞர்கள் ரமழான் மாதத்தில் பல தடவைகள் அல்குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பார்கள். அதில் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கு ஒரு தடவை முழுமையாக அல்குர்ஆனை ஓதி

முடித்தவர்களும் உள்ளனர். நான்கு நாட்களுக்கு ஒரு தடவை முடித்தவர்களும் உள்ளனர். அதை விட சற்று அதிக நாட்களில் முடித்தவர்களும் உள்ளனர்.

அன்புள்ள சகோதரர்களே, இரவுத் தொழுகைகளிலோ, தொழுகைகளுக்கு வெளியிலோ அல்குர்ஆனை ஓதுவது அல்லாஹ்வின் பக்கம் எம்மை நெருங்கச் செய்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ إِنَّ ٱلَّذِينَ يَتۡلُونَ كِتَٰبَ ٱللَّهِ وَأَقَامُواْ ٱلصَّلَوٰةَ وَأَنفَقُواْ مِمَّا رَزَقۡنَٰهُمۡ سِرّٗا وَعَلَانِيَةٗ يَرۡجُونَ تِجَٰرَةٗ لَّن تَبُورَ ٢٩ لِيُوَفِّيَهُمۡ أُجُورَهُمۡ وَيَزِيدَهُم مِّن فَضۡلِهِۦٓۚ إِنَّهُۥ غَفُورٞ شَكُورٞ ٣٠ ﴾

“அல்லாஹ்வின் வேதத்தைப் படித்து தொழுகையை நிலைநாட்டி நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து இரகசியமாகவும், வெளிப்படையாகவும் (நல்வழியில்) செலவிடுவோர் நட்டமில்லாத ஒரு வியாபாரத்தை எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் அவர்களின் கூலிகளை அவன் முழுமையாக அளிப்பான். தனது அருட்கொடைகளில் அவர்களுக்கு இன்னும் அதிகமாகவும் அளிப்பான். அவன் மன்னிப்பவன்; நன்றி செலுத்துபவன்.” (அல்குர்ஆன் ௩௫:௨௯-௩௦)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم: «مَنْ قَرَأَ حَرْفًا مِنْ كِتَابِ اللهِ فَلَهُ بِهِ حَسَنَةٌ»، وَالْحَسَنَةُ بِعَشْرِ أَمْثَالِهَا، لَا أَقُولُ (الم) حَرْفٌ، وَلَكِنْ أَلِفٌ حَرْفٌ، وَلَامٌ حَرْفٌ، وَمِيمٌ حَرْفٌ.

“எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினால் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும். ‘அலீஃப், லாம், மீம்’ ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலீஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்துமாகும்.” (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் رضي الله عنه, நூல்: திர்மிதி ௨௯௧௦)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

قال رسول الله صلى الله عليه وسلم :مَثَلُ المُؤْمِنِ الذي يَقْرَأُ القُرْآنَ كَمَثَلِ الأُتْرُجَّةِ، رِيحُها طَيِّبٌ وطَعْمُها طَيِّبٌ، ومَثَلُ المُؤْمِنِ الذي لا يَقْرَأُ القُرْآنَ كَمَثَلِ التَّمْرَةِ، لا رِيحَ لها وطَعْمُها حُلْوٌ، ومَثَلُ المُنافِقِ الذي يَقْرَأُ القُرْآنَ مَثَلُ الرَّيْحانَةِ، رِيحُها طَيِّبٌ وطَعْمُها مُرٌّ، ومَثَلُ المُنافِقِ الذي لا يَقْرَأُ القُرْآنَ كَمَثَلِ الحَنْظَلَةِ، ليسَ لها رِيحٌ وطَعْمُها مُرٌّ

“குர்ஆனை ஓதுகின்ற (நல்ல)வரின் நிலையானது நாரத்தைப் பழம் போன்றதாகும். அதன் சுவையும் நன்று; வாசனையும் நன்று.

(மற்ற நற்செயல்கள் புரிந்துகொண்டு) குர்ஆன் ஓதாமலிருப்பவர், பேரீச்சம் பழத்தைப் போன்றவராவார். அதன் சுவை நன்று; (ஆனால்) அதற்கு வாசனை கிடையாது.

தீயவராக (நயவஞ்சகராகவும்) இருந்துகொண்டு, குர்ஆனையும் ஓதிவருகின்றவனின் நிலையானது, துளசிச் செடியின் நிலையை ஒத்திருக்கின்றது. அதன் வாசனை நன்று; சுவையோ கசப்பு.

தீமையும் செய்துகொண்டும், குர்ஆனையும் ஓதாமலிருப்பவரின் நிலையானது குமட்டிக்காயின் நிலையை ஒத்திருக்கிறது. அதன் சுவையும் கசப்பு; அதற்கு வாசனையும் கிடையாது.” (அறிவிப்பவர்: அபூமூஸா அல்அஷ்அரீ رضي الله عنه, நூல்: புஹாரி ௫0௨0, முஸ்லிம் ௭௬௯)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

أن النبي (صلى الله عليه وسلم) قال: لا حَسَدَ إلَّا في اثْنَتَيْنِ؛ رَجُلٌ عَلَّمَهُ اللَّهُ القُرْآنَ، فَهو يَتْلُوهُ آناءَ اللَّيْلِ وآناءَ النَّهارِ، فَسَمِعَهُ جارٌ له، فقالَ: لَيْتَنِي أُوتِيتُ مِثْلَ ما أُوتِيَ فُلانٌ، فَعَمِلْتُ مِثْلَ ما يَعْمَل. ورَجُلٌ آتاهُ اللَّهُ مالًا فَهو يُهْلِكُهُ في الحَقِّ، فقالَ رَجُلٌ: لَيْتَنِي أُوتِيتُ مِثْلَ ما أُوتِيَ فُلانٌ، فعَمِلْتُ مِثْلَ ما يَعْمَلُ

“இரண்டு விஷயங்களைத் தவிர வேறெதற்காகவும் பொறாமை கொள்ளக் கூடாது. முதலாவது, ஒரு மனிதருக்கு அல்லாஹ்

குர்ஆனைக் கற்றுத்தந்தான். அவர் அதை இரவு, பகல் என எல்லா நேரங்களிலும் ஓதிவருகிறார். இதைக் கேள்விப்பட்டு அவருடைய அண்டை வீட்டுக்காரரர், 'இன்னாருக்கு வழங்கப்பட்டதைப் போன்று எனக்கும் வழங்கப்பட்டிருந்தால் நானும் அவர் செயல்படுவது (ஓதுவது)போல் செயல்பட்டிருப்பேனே!' என்று கூறுகின்றார்.

இரண்டாவது, இன்னொரு மனிதருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கினான். அவர் அதை அறவழியில் செலவிட்டுவருகிறார். (இதைக் காணும்) ஒரு மனிதர், 'இன்னாருக்கு வழங்கப்பட்டதைப் போன்று எனக்கும் (செல்வம்) வழங்கப்பட்டிருக்குமானால் அவர் (தர்மம்) செய்ததுபோல் நானும் செய்திருப்பேனே' என்று கூறுகின்றார்." (அறிவிப்பவர்: அபூஹுரைரா رضي الله عنه, நூல்: புஹாரி (ருoஉசா)

وعن عائشة رضي الله عنها، عن النبي (صلى الله عـليه وسلم) قال :مَثَلُ الذي يَقْرَأُ القُرْآنَ وهو حافِظٌ له؛ مع السَّفَرَةِ الكِرامِ البَرَرَةِ، ومَثَلُ الذي يَقْرَأُ وهو يَتعاهَدُهُ؛ وهو عليه شَدِيدٌ؛ فَلَهُ أجْرانِ

"குர்ஆனை மனனமிட்டு (சிரமமின்றி) ஓதிவருபவர் கண்ணியம் நிறைந்த தூதர்களான வானவர்களுடன் இருப்பவரைப் போன்றவராவார். குர்ஆனை (மனனம் செய்திராவிட்டாலும் அதைச்) சிரமத்துடன் தொடர்ந்து ஓதிவருகின்றவர் இரு மடங்கு நன்மைகளுக்குரியவரைப் போன்றவராவார்." (அறிவிப்பவர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: புஹாரி சூசொ௫ள)

قال رسول الله صَلَّى اللَّهُ عليه وسلَّم: أَيُحِبُّ أحَدُكُمْ إذا رَجَعَ إلى أهْلِهِ أنْ يَجِدَ فيه ثَلاثَ خَلِفاتٍ عِظامٍ سِمانٍ؟ قُلْنا: نَعَمْ، قالَ :فَثَلاثُ آياتٍ يَقْرَأُ بِهِنَّ أحَدُكُمْ في صَلاتِهِ، خَيْرٌ له مِن ثَلاثِ خَلِفاتٍ عِظامٍ سِمان.

"உங்களில் ஒருவர் தமது தொழுகையில் மூன்று வசனங்களை ஓதுவது மூன்று பெரிய கொழுத்த சினை ஒட்டகங்களைவிடச் சிறந்ததாகும்." (அறிவிப்பவர்: அபூஹுரைரா رضي الله عنه, நூல்: முஸ்லிம் அoசா)

وعن عقبة بن عامر رضي الله عنه قال: خَرَجَ رَسولُ اللهِ (صلى الله عليه وسلم) وَنَحْنُ فِي الصُّفَّةِ، فَقالَ: أَيُّكُمْ يُحِبُّ أَنْ يَغْدُوَ كُلَّ يومٍ إلى بُطْحَان، أَوْ إلى العَقِيق، فَيَأْتِيَ منه بناقَتَيْنِ كَوْمَاوَيْنِ (أي سمينتين) فِي غيرِ إِثْمٍ وَلَا قَطْعِ رَحِمٍ؟ فَقُلْنَا: يا رَسولَ اللهِ، نُحِبُّ ذلكَ. قالَ: أَفلا يَغْدُو أَحَدُكُمْ إلى المَسْجِدِ فَيَعْلَمُ أَوْ يَقْرَأُ آيَتَيْنِ مِن كِتَابِ اللهِ عَزَّ وَجَلَّ خَيْرٌ له مِن نَاقَتَيْنِ، وَثَلَاثٌ خَيْرٌ له مِن ثَلَاثٍ، وَأَرْبَعٌ خَيْرٌ له مِن أَرْبَعٍ، وَمِنْ أَعْدَادِهِنَّ مِنَ الإِبِلِ؟

“உங்களில் ஒருவர் காலையில் பள்ளிவாசலுக்குப் புறப்பட்டுச் சென்று அல்லாஹ்வின் வேதத்திலிருந்து இரு வசனங்களைக் கற்றுக்கொள்வது அல்லது ஓதுவது இரு ஒட்டகங்களைவிடச் சிறந்ததாகும். மூன்று வசனங்கள் மூன்று ஒட்டகங்களைவிடவும், நான்கு வசனங்கள் நான்கு ஒட்டகங்களைவிடவும் சிறந்ததாகும்.” (அறிவிப்பவர்: உக்பா இப்னு ஆமிர் رضي الله عنه, நூல்: முஸ்லிம் ௮0௩)

“குர்ஆனை ஓதிவாருங்கள். ஏனெனில், குர்ஆன் ஓதிவருபவர்களுக்கு அது மறுமையில் வந்து (இறைவனிடம்) பரிந்துரை செய்யும். இரு ஒளிச்சுடர்களான ‘அல்பகரா’ மற்றும் ‘ஆலு இம்ரான்’ ஆகிய இரு அத்தியாயங்களையும் ஓதிவாருங்கள்...”

ஆக, மேற்கூறப்பட்ட அனைத்து ஹதீஸ்களும் அல்குர்ஆனை ரமழான் மாதம் மாத்திரமின்றி எல்லாக் காலங்களிலும் நாம் எந்தளவுக்கு ஓத வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் ஹதீஸ்களாகும்.

குர்ஆனின் போதனைகளை பின்பற்றுவதற்கு அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் பரக்கத் செய்வானாக! அதன் அத்தாட்சிகள், தீர்க்கமான சட்டதிட்டங்கள் போன்றவற்றை எனக்கும் உங்களுக்கும் பிரயோசனமானதாக ஆக்கித்தருவானாக!

இரண்டாம் குத்பா
ரமழான் மாதத்தில் அதிகமாக அல்குர்ஆனை ஓதுதல்

அறிந்துகொள்ளுங்கள் அல்லாஹ்வின் நல்லடியார்களே, ஒரு முஃமின் அதிகமாக அல்குர்ஆனை ஓதி, நோன்பையும் பிடித்தால் மறுமையில்

இவை இரண்டினதும் பரிந்துரையைப் பெறுவான். இதன் மூலம் தனது அந்தஸ்தை உயர்ந்து, பாவங்களும் அழிக்கப்படுகின்றன.

أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ: " الصِّيَامُ وَالْقُرْآنُ يَشْفَعَانِ لِلْعَبْدِ، يَقُولُ الصِّيَامُ: رَبِّ إِنِّي مَنَعْتُهُ الطَّعَامَ وَالشَّهَوَاتِ بِالنَّهَارِ فَشَفِّعْنِي فِيهِ، وَيَقُولُ الْقُرْآنُ: مَنَعْتُهُ النَّوْمَ بِاللَّيْلِ فَيُشَفَّعَانِ"

“கியாமத்து நாளில் நோன்பும் அல்குர்ஆனும் அடியானுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைக்கும். ‘இறைவா! நான் அவனை உணவு உட்கொள்வதில் இருந்து தடுத்தேன், பகலில் அவனது உணர்வுகளை கட்டுப்படுத்தினேன் எனவே எனக்காக அவனுக்கு பரிந்துரை செய்வாயாக!’ என்று நோன்பு மன்றாடும். அதேபோன்று அல்குர்ஆன் ‘இரவில் தூக்கத்தினை விட்டும் அவனைத் தடுத்தேன், எனவே எனக்காக அவனுக்கு பரிந்துரை செய்வாயாக’ என்று மன்றாடும்.” (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் رضي الله عنه, நூல்: அஹ்மத் ௬௬௨௬, ஹாகிம் ௨௦௩௬)

அல்லாஹ்வின் நல்லடியார்களே, ரமழான் மாதம் எம்மிடம் வந்துள்ள, நன்மைகளை அதிகம் சம்பாதிக்கும் மிகச் சிறந்த பருவகாலமாகும். அல்குர்ஆனையும், நோன்பையும் சேர்த்து வணக்கம் புரிவது போல் இரு வித கஷ்டங்களையும் நாம் அழகிய முறையில் எதிர்கொள்ள வேண்டும். பகல் பொழுதில் நோன்பிருக்கும் கஷ்டத்தை அழகிய முறையில் அணுக வேண்டும். இரவில் நின்று வணங்குவதில் உள்ள கஷ்டத்தையும் அழகிய முறையில் அணுக வேண்டும். இவற்றின்போது பொறுமையைக் கடைபிடித்து அல்லாஹ் எமக்கு அளிக்க இருக்கும் அளவே இல்லாத நன்மைகளை அடைய முயற்சிக்க வேண்டும்.

﴿ إِنَّمَا يُوَفَّى ٱلصَّٰبِرُونَ أَجۡرَهُم بِغَيۡرِ حِسَابٖ ﴾

“பொறுமையுள்ளவர்கள் தங்கள் கூலியை நிச்சயமாக கணக்கின்றிப் பெறுவார்கள்.” (அல்குர்ஆன் ௩௯:௧௦)

அல்லாஹ்வின் நல்லடியார்களே!, நிச்சயமாக அல்லாஹ் மிக முக்கியமான விடயம் பற்றி ஏவியுள்ளான்.

﴿إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾

“இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாம் சொல்லுங்கள்.” (அல்குர்ஆன் ௩௩:௫௬)

இறைவா!, உனது அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ﷺ மீது நீ அருள் புரிவாயாக, இஸ்லாத்தின் தலைவர்களாக இருந்த அவரின் தோழர்களையும் பொருந்திக்கொள்வாயாக, மறுமை நாள் வரைக்கும் யாரெல்லாம் நபி ﷺ அவர்களைப் பின்பற்றினார்களோ, பின்பற்றிக்கொண்டிருக்கிறார்களோ, பின்பற்ற இருக்கிறார்களோ அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொள்வாயாக!

இறைவா!, இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் கண்ணியப்படுத்துவாயாக!, இணைவைப்பையும், இணைவைப்பாளர்களையும் இழிவுபடுத்துவாயாக!, உன்னை ஒருமைப்படுத்தும் உன் அடியார்களுக்கு எப்போதும் உதவியாக இருப்பாயாக!

இறைவா!, எங்கள் நாட்டையும், எமது பிரதேசங்களையும் பாதுகாப்பாயாக!, எங்கள் தலைவர்களையும், மேலதிகாரிகளையும் சீர்திருத்துவாயாக!, அவர்களை நேர்வழி பெற்றவர்களாகவும், நேர்வழியைக் காட்டக்கூடியவர்களாகவும் மாற்றுவாயாக!

இறைவா!, அனைத்து முஸ்லிம் தலைவர்களையும் உனது வேதத்தின் அடிப்படையில் அவர்களின் ஆட்சியை அமைத்துக்கொள்வதற்கும், உனது மார்க்கத்தை மேலோங்கச் செய்ய பணிபுரிவதற்கும் அவர்களுக்கு உதவுவாயாக!, அவர்களின் குடிமக்களுக்கு நல்லது செய்பவர்களாக அவர்களை ஆக்குவாயாக!.

இறைவா!, ரமழான் மாதத்தில் அதிக நன்மைகளை செய்வதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்தருள்வாயாக. இறைவா!, உனது அருள் நீங்குவதிலிருந்தும், எம் மீதான உனது கருணைப் பார்வை

மாற்றமடைவதிலிருந்தும், திடீரென வரும் உனது தண்டனைகளிலிருந்தும், உனது அனைத்து கோபப் பார்வைகளிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக!

இறைவா!, இவ்வுலகிலும், மறுவுலகிலும் நல்லதையே எமக்கு வழங்குவாயாக!, நரக வேதனையை விட்டும் எம்மைப் பாதுகாப்பாயாக!, யாரெல்லாம் கடவுள் பற்றி தவறான வர்ணனைகள் வழங்குகிறார்களோ அவை அனைத்தையும் விட்டும் எமது இறைவன் பரிசுத்தமானவன். அவனால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும் அவனின் அருளைப் பெற்றவர்கள். அகிலத்தாரின் இரட்சகனாகிய எமது இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகட்டும்.

பைத்துல் முகத்தஸ் மற்றும் மஸ்ஜிதுல் அக்ஸாவின் பத்து சிறப்புகள்

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.
பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ﷺ அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்திற்கு இட்டுச்செல்லும்.

முஸ்லிம்களே! நான் எனக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வை பயந்து வாழும்படி முதலில் அறிவுறுத்துகிறேன். அது முன் சென்றோருக்கும் பின்வருவோருக்கும் அல்லாஹ் அளித்த உபதேசமாகும். அல்லாஹ் கூறுகிறான்:
“நிச்சயமாக, உங்களுக்கு முன் வேதம் கொடுக்கப்பட்டவர்களையும்,

உங்களையும் நாம் அல்லாஹ்வை பயந்து நடக்கும்படி அறிவுறுத்தினோம்.''

ஆகையால், அல்லாஹ்வை பயந்து நடந்து, அவனை எந்நேரமும் நினைவில் கொள்ளுங்கள். அவனை கீழ்ப்படியுங்கள்; அவன் கட்டளைகளை மீறாதீர்கள்.

மேலும், அல்லாஹ் தன் ஞானத்திற்கேற்ப தான் விரும்பியதை
உருவாக்கி,
அதில் சிலவற்றை தேர்ந்தெடுக்கிறான் என்பதை
அறிந்துகொள்ளுங்கள்.
அவன் சில மலக்குகளை மற்றவர்களை விட உயர்த்தினான்.
சில வேதங்களை மற்றவற்றை விட மேன்மையாக்கினான்.
சில நபிமார்களை மற்றவர்களை விட உயர்த்தினான்.
சில காலங்களை மற்ற காலங்களை விட சிறப்பித்தான்.
சில இடங்களை மற்ற இடங்களை விட மேன்மையாக்கினான்.

அதிலிருந்து, புனிதமான நிலம் (பரிசுத்த பூமி) மற்ற இடங்களை விட சிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் பைத்துல் முகத்தஸ் மற்றும் அதன் சுற்றுப்புறமும் அடங்கும்.

இது அல்லாஹ்வின் ஞானத்தினாலும், அவனின் சிறந்த தேர்வினாலும் நிகழ்ந்ததாகும்.
''மேலும், உம்முடைய இறைவன், தான் நாடியதைப் படைக்கிறான்; (தூதராகத் தான் நாடியோரைத்) தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (எனவே இத்தகு) தேர்ந்தெடுத்தல் இவர்களு(க்கு உரிமையு)டையதல்ல''

''பைத்துல் முகத்தஸ்'' என்பதன் அர்த்தம் : **ஷிர்க் (அல்லாஹ்விற்கு இணை வைப்பது) போன்றவற்றிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட வீடு.**

அல்லாஹ்வின் அடியார்களே! பைத்துல் முகத்தஸ் பத்து
சிறப்பம்சங்களை உடையதாகும் :

1. **முதல் சிறப்பு:** அல்லாஹ் அதை குர்ஆனில் “பரக்கத் (ஆசீர்வாதம்) பெற்ற இடம்” என்று வர்ணிக்கிறான்.
அல்லாஹ் கூறுகிறான்:

﴿ سُبۡحَٰنَ ٱلَّذِيٓ أَسۡرَىٰ بِعَبۡدِهِۦ لَيۡلٗا مِّنَ ٱلۡمَسۡجِدِ ٱلۡحَرَامِ إِلَى ٱلۡمَسۡجِدِ ٱلۡأَقۡصَا ٱلَّذِي بَٰرَكۡنَا حَوۡلَهُۥ لِنُرِيَهُۥ مِنۡ ءَايَٰتِنَآۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ١ ﴾

(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து (கஃபத்துல்லாஹ்விலிருந்து தொலைவிலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான்; (மஸ்ஜிதுல் அக்ஸாவின்) சுற்றெல்லைகளை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம் (அல்குர்ஆன் 17:1)

2. **இரண்டாவது சிறப்பு:** அல்லாஹ் அதை “பரிசுத்தமான நிலம்” (முகத்தஸ்) என்று வர்ணித்துள்ளான், அதாவது தூய்மைப்படுத்தப்பட்ட நிலம்.
மூஸா (அலை) அவர்களின் வாயிலாக அல்லாஹ் கூறுகிறான்:

﴿ يَٰقَوۡمِ ٱدۡخُلُواْ ٱلۡأَرۡضَ ٱلۡمُقَدَّسَةَ ٱلَّتِي كَتَبَ ٱللَّهُ لَكُمۡ ﴾

“என் சமூகத்தோரே! உங்களுக்காக அல்லாஹ் விதித்துள்ள புண்ணிய பூமியில் நுழையுங்கள்; (அல்குர்ஆன் 5:21)

அந்த புண்ணிய பூமி என்பது பைத்துல் முகத்தஸ் ஆகும்.

3. **மூன்றாவது சிறப்பு:** அல்லாஹ் மூஸா (அலை) அவர்களுக்கு அங்கு வாழ்ந்த வலிமையான, சிலை வழிபாடு செய்த மக்களை எதிர்த்து போரிடவும், அந்த நிலத்தை அவர்களிடமிருந்து மீட்டெடுக்கவும் கட்டளையிட்டான். அங்கே தவ்ஹீதை நிலைநாட்டவும், ஷிர்க்கை

நீக்கவும் உத்தரவிட்டான். மூஸா (அலை) அவர்கள் தமது மக்களிடம் கூறினார்கள்:

﴿ يَٰقَوۡمِ ٱدۡخُلُواْ ٱلۡأَرۡضَ ٱلۡمُقَدَّسَةَ ٱلَّتِي كَتَبَ ٱللَّهُ لَكُمۡ وَلَا تَرۡتَدُّواْ عَلَىٰٓ أَدۡبَارِكُمۡ فَتَنقَلِبُواْ خَٰسِرِينَ ۝٢١ ﴾

“என் சமூகத்தோரே! உங்களுக்காக அல்லாஹ் விதித்துள்ள புண்ணிய பூமியில் நுழையுங்கள்; இன்னும் நீங்கள் புறமுதுகு காட்டி திரும்பி விடாதீர்கள்; (அப்படிச் செய்தால்) நீங்கள் நஷ்ட மடைந்தவர்களாகவே திரும்புவீர்கள்” என்றும் கூறினார். (அல்குர்ஆன் 5:21)

4. **நான்காவது சிறப்பு:** நபி ﷺ அவர்கள் கூறியதாவது, மூஸா (அலை) அவர்களை மரணம் நெருங்கியபோது, அந்த பரிசுத்த நிலத்துக்கு அருகில் மரணிக்க அல்லாஹ்விடம் வேண்டினார், ஒரு கல்லை எறியும் தூரத்திற்கு அருகில் இருந்தாலும் பரவாயில்லை என்று கேட்டுக்கொண்டார்கள். இது அவர்களின் பைத்துல் முகத்தஸ் மீதான அன்பை காட்டுகிறது. அப்போது அந்த நிலம் சிலை வழிபாட்டாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால், அவர்கள் அங்கே சென்று மரணிக்க முடியவில்லை; அதனால் அருகில் இருக்க விரும்பினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:
நான் அங்கு இருந்திருந்தால் செம்மணல் குன்றுக்கு அருகிலுள்ள பாதையோரத்தில் அவரது அடக்கத்தலத்தை உங்களுக்கு நான் காட்டியிருப்பேன். (புகாரி 1339, முஸ்லிம் 2372)

5. **ஐந்தாவது சிறப்பு:** யூஷஃ இப்னு நூன் (அலை) அவர்கள் அந்த வலிமையான மக்களுடன் போரிடும்போது, இருள் நெருங்கியதால், சூரியன் அஸ்தமிக்காமல் தற்காலிகமாக நிறுத்தப்படும்படி அல்லாஹ்விடம் வேண்டினார். அல்லாஹ் அதை ஏற்றுக்கொண்டான்; இதன் மூலம் பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்டது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "சூரியன் யாருக்காகவும் நிறுத்தப்படவில்லை; யூஷஃ (அலை) அவர்களுக்காக மட்டும் அது நிறுத்தப்பட்டது, அவர் பைத்துல் முகத்தஸ் நோக்கிச் சென்ற போது." (அஹ்மது:அ௩௧௫)

6. **ஆறாவது சிறப்பு:** பைத்துல் முகத்தஸின் வெற்றி கியாமத் நாளின் அறிகுறிகளில் ஒன்றாகும்.
நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

فَقَالَ : اعْدُدْ سِتًّا بَيْنَ يَدَيِ السَّاعَةِ، مَوْتِي، ثُمَّ فَتْحُ بَيْتِ الْمَقْدِسِ

"கியாமத்திற்கு முன் ஆறு விஷயங்களை எண்ணிக் கொள்ளுங்கள்: எனது மரணம், பின்னர் பைத்துல் முகத்தஸின் வெற்றி...(புகாரி 3176)

7. **ஏழாவது சிறப்பு:** அல்-மஸீஹ் அத்-தஜ்ஜால் (ஒரு கண் குருடனான பொய்யன்) அங்கு நுழைய முடியாது; அவன் அதன் அருகில் கொல்லப்படுவான். அவரை ஈஸா இப்னு மர்யம் (அலை) அவர்கள் "லுத்" என்ற இடத்தின் வாசலில் கொல்வார்கள்; அது பைத்துல் முகத்தஸின் அருகில் உள்ளது.

8. **எட்டாவது சிறப்பு:** குஃப்ரின் தலைவர்களும் அவர்களின் அரசியல் தலைவர்களின் முடிவும் பாலஸ்தீனில் இருக்கும். தஜ்ஜால் அங்கு ஈஸா (அலை) அவர்களால் கொல்லப்படுவான். இது ஒரு கடுமையான பெரிய போராக இருக்கும்; அதில் தஜ்ஜால் யூதர்களின் தலைவனாக இருப்பான்.
ஈஸா (அலை) மற்றும் அவரின் படை தஜ்ஜாலும், அவனது படையையும் அழித்துவிடுவார்கள். மேலும், சரியான நம்பிக்கையுடன் ஈஸா (அலை) அவர்களை நபியாக ஏற்காத கிறிஸ்தவர்கள் அழிக்கப்படுவார்கள். அவர்கள் வழிபடும் சிலுவை உடைக்கப்படும். பன்றிகளும் கொல்லப்படும். (பார்க்க, முஸ்லிம்:2897)

9. **ஒன்பதாவது சிறப்பு:** இறுதி காலத்தில், முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் நடைபெறும்போது, மரங்களும் கற்களும் யூதர்களை

காட்டிக்கொடுக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்தார்கள், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: “முஸ்லிம்கள் யூதர்களுடன் போரிடாத வரை மறுமை நாள் ஏற்படாது. (அந்தப் போரில்) முஸ்லிம்கள் அவர்களைக் கொல்வார்கள். எந்தளவிற்கென்றால், யூதர்கள் கல்லுக்கும் மரத்திற்கும் பின்னால் ஒளிந்துகொள்வார்கள். அப்போது கல்லோ அல்லது மரமோ, ‘முஸ்லிமே! அல்லாஹ்வின் அடியாரே! இதோ எனக்குப் பின்னால் ஒரு யூதன் இருக்கிறான்; வந்து அவனைக் கொல்!’ என்று கூறும். ‘கர்கத்’ மரத்தைத் தவிர; ஏனெனில், அது யூதர்களின் மரமாகும்.” (புகாரி:2926, முஸ்லிம்:2922)

10. பைத்துல் முகத்தஸின் மிகப் பெரிய சிறப்புகளில் ஒன்று, அதில் **மஸ்ஜிதுல் அக்ஸா** இருப்பதாகும். இது குர்ஆன் மற்றும் நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்ட மூன்று பெருமைமிக்க பள்ளிவாசல்களில் ஒன்றாகும்.

இதன் முக்கியத்துவம் பல அம்சங்களில் உயர்ந்தது. அவற்றில் முக்கியமான பத்து அம்சங்கள் :

முதலாவது: நபி ﷺ அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு இரவில் அழைத்துச் செல்லப்பட்டார்கள் (இஸ்ரா), பின்னர் அங்கிருந்து விண்ணுக்கு உயர்த்தப்பட்டார்கள் (மிஃராஜ்). அல்லாஹ் கூறுகிறான்:

﴿ سُبۡحَٰنَ ٱلَّذِيٓ أَسۡرَىٰ بِعَبۡدِهِۦ لَيۡلٗا مِّنَ ٱلۡمَسۡجِدِ ٱلۡحَرَامِ إِلَى ٱلۡمَسۡجِدِ ٱلۡأَقۡصَا ٱلَّذِي بَٰرَكۡنَا حَوۡلَهُۥ لِنُرِيَهُۥ مِنۡ ءَايَٰتِنَآۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ١ ﴾

(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன்; அவன் தன் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து (கஃபத்துல்லாஹ்விலிருந்து

தொலைவிலிருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான்; (அல்குர்ஆன் 17:1)

பின்னர் அவர்கள் விண்ணிலிருந்து திரும்பும்போது மீண்டும் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு வந்து, அங்கிருந்து மக்காவிற்கு திரும்பினார்கள்.இதனால் மஸ்ஜிதுல் அக்ஸாவை இரண்டு முறை கடந்து சென்றது, அதன் பெருமையையும் முக்கியத்துவத்தையும் காட்டுகிறது.

இரண்டாவது: இஸ்ரா பயணத்தின் போது, மிஃராஜ் முடிந்தபின் நபி ﷺ அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவில் அனைத்து நபிமார்களுக்கும் இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

... فَحَانَتِ الصَّلَاةُ فَأَمَمْتُهُمْ ...

பிறகு தொழுகை நேரம் வந்தபோது, நான் அவர்களுக்கு (இமாமாக நின்று) தொழுகை நடத்தினேன். (முஸ்லிம் 172)

மூன்றாவது: மஸ்ஜிதுல் அக்ஸாவின் சிறப்புகளில் ஒன்று : அல்லாஹ் அதை நபி ﷺ அவர்களுக்கு வெளிப்படையாக கண்முன்னே காட்டினான். இஸ்ரா சம்பவத்தை பற்றி அவர்கள் கூறியபோது முஷ்ரிக்குகள் (பொய்யாகக் கூறுவோர்) அதை மறுத்தனர். அவர்கள் நபி ﷺ அவர்களிடம் அதன் விவரங்களை கேட்டு சோதித்தனர், ஏனெனில் அவர்கள் முன்னதாகவே நபி ﷺ அவர்கள் அங்கு சென்று இருக்கவில்லை என்று அறிந்திருந்தனர். அப்போது அல்லாஹ் மஸ்ஜிதுல் அக்ஸாவை அவர்களுக்கு தெளிவாகக் காட்டினான்; அவர்கள் அதன் கட்டிட அமைப்பையும் அம்சங்களையும் பார்த்தபடியே விவரித்தார்கள். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

لَمَّا كَذَّبَنِي قُرَيْشٌ قُمْتُ فِي الْحِجْرِ، فَجَلاَ اللَّهُ لِي بَيْتَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم يَقُولُ: الْمَقْدِسِ، فَطَفِقْتُ أُخْبِرُهُمْ عَنْ آيَاتِهِ وَأَنَا أَنْظُرُ إِلَيْهِ

'குறைஷிகள் என்னைப் பொய்யாக்கியபோது (மிஃராஜ் பயணத்தைப் பற்றி நான் கூறியதை நம்ப மறுத்தபோது) நான் அல்-ஹிஜ்ரில் (கஅபாவின் அருகில் உள்ள ஹிஜ்ர் இஸ்மாயீலில்) நின்றேன். அப்போது அல்லாஹ் எனக்கு பைத்துல் முகத்தஸை வெளிப்படுத்திக் காட்டினான். நான் அதைப் பார்த்துக்கொண்டே அதன் அடையாளங்களை (அதாவது அதன் அமைப்பையும், அம்சங்களையும்) அவர்களுக்கு விவரிக்கலானேன்.' (புகாரி 3886)

நான்காவது: மஸ்ஜிதுல் அக்ஸா முஸ்லிம்களின் முதல் கிப்லா (தொழுகை திசை) ஆகும்.

فعن البراء بن عازب رضي الله عنه قال: صَلَّيْنَا مع رَسولِ اللهِ صَلَّى اللَّهُ عليه وسلَّمَ نَحْوَ بَيْتِ المَقْدِسِ سِتَّةَ عَشَرَ أوْ سَبْعَةَ عَشَرَ شَهْرًا، ثُمَّ صُرِفْنَا نَحْوَ القبلة.

பரா இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "நாங்கள் நபி ﷺ அவர்களுடன் சுமார் பதினாறு அல்லது பதினேழு மாதங்கள் பைத்துல் மக்திஸை நோக்கி தொழுதோம்; பின்னர் நாங்கள் (கஅபாவை நோக்கி) திருப்பப்பட்டோம். (புகாரி 4492, முஸ்லிம் 525)

ஐந்தாவது: மஸ்ஜிதுல் அக்ஸா, வழிபாட்டிற்காக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்ட மூன்று பள்ளிவாசல்களில் ஒன்றாகும்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

وَلاَ تُشَدُّ الرِّحَالُ إِلاَّ إِلَى ثَلاَثَةِ مَسَاجِدَ مَسْجِدِ الْحَرَامِ، وَمَسْجِدِ الأَقْصَى، وَمَسْجِدِي هَذَا

மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் அக்ஸா மற்றும் (மதீனாவிலுள்ள) என்னுடைய இந்த மஸ்ஜித் ஆகிய மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெந்தப் பள்ளிவாசலுக்கும் (விசேஷ நன்மையை நாடிப்) பயணம்

மேற்கொள்ளக் கூடாது. (புகாரி:1995,முஸ்லிம்:827)

அதாவது, வழிபாட்டிற்காக பூமியில் எந்த இடத்திற்கும் பயணம் செய்ய அனுமதி இல்லை; இந்த மூன்றுக்கு மட்டும் அனுமதி உள்ளது.

ஆறாவது: மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழும் தொழுகை, 250 தொழுகைக்கு சமமான சிறப்புடையது. அபூ தர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: “நாம் நபி ﷺ அவர்களுடன் இருந்தபோது, ‘எது சிறந்தது - நபியின் பள்ளிவாசலா அல்லது பைத் அல்-மக்திஸா?’ என்று பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ‘என் பள்ளிவாசலில் ஒரு தொழுகை, அங்குள்ள நான்கு தொழுகைகளைவிட சிறந்தது, அது ஒரு நல்ல தொழுகை இடமாகும். விரைவில் ஒரு மனிதருக்கு தனது குதிரையின் கயிற்றளவு நிலத்தின் தூரத்திலிருந்து பைத்துல் மக்திஸை காண முடிந்தால் அது உலகமும் அதில் உள்ள அனைத்தையும் விட சிறந்ததாக இருக்கும்.’ (தபரானி 2983, முஸ்தத்ரக் ஹாகிம் 4509)

மஸ்ஜிதுந் நபவியில் தொழும் தொழுகை ஆயிரம் தொழுகைகளைவிட சிறந்தது என்பதால், மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுகை உ௫o தொழுகைகளை விட சிறந்ததாகும்; ஏனெனில் அது அதன் நான்கில் ஒரு பங்கு.

ஏழாவது: மஸ்ஜிதுல் அக்ஸா பூமியில் நிறுவப்பட்ட இரண்டாவது பள்ளிவாசல் ஆகும்.

عَنْ أَبِي ذَرٍّ ـ رضى الله عنه ـ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ. أَىُّ مَسْجِدٍ وُضِعَ أَوَّلُ قَالَ " الْمَسْجِدُ الْحَرَامُ

"". قُلْتُ ثُمَّ أَىٌّ قَالَ " ثُمَّ الْمَسْجِدُ الأَقْصَى ". قُلْتُ كَمْ كَانَ بَيْنَهُمَا قَالَ " أَرْبَعُونَ

அபூ தர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான், "அல்லாஹ்வின் தூதரே! முதலில் அமைக்கப்பட்ட மஸ்ஜித் எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அல்-மஸ்ஜிதுல் ஹராம்" என்றார்கள். நான், "பிறகு எது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "அல்-மஸ்ஜிதுல்

அக்ஸா" என்றார்கள். நான், "அவ்விரண்டுக்கும் இடையே எவ்வளவு (காலம்) இருந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "நாற்பது (ஆண்டுகள்)" என்றார்கள்.

(புகாரி 3425, முஸ்லிம் 520)

எட்டாவது: சுலைமான் இப்னு தாவூத் (அலை) அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை மறுபடியும் கட்டினார். மேலும் அங்கு தொழுவோருக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பை வேண்டினார். அல்லாஹ் அவரது துஆவை ஏற்றுக் கொண்டான்.

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، عَنْ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أَنَّ سُلَيْمَانَ بْنَ دَاوُدَ صلى الله عليه وسلم لَمَّا بَنَى بَيْتَ الْمَقْدِسِ سَأَلَ اللَّهَ عَزَّ وَجَلَّ خِلاَلاً ثَلاَثَةً سَأَلَ اللَّهَ عَزَّ وَجَلَّ حُكْمًا يُصَادِفُ حُكْمَهُ فَأُوتِيَهُ وَسَأَلَ اللَّهَ عَزَّ وَجَلَّ مُلْكًا لاَ يَنْبَغِي لأَحَدٍ مِنْ بَعْدِهِ فَأُوتِيَهُ وَسَأَلَ اللَّهَ عَزَّ وَجَلَّ حِينَ فَرَغَ مِنْ بِنَاءِ الْمَسْجِدِ أَنْ لاَ يَأْتِيَهُ أَحَدٌ لاَ يَنْهَزُهُ إِلاَّ الصَّلاَةُ فِيهِ أَنْ يُخْرِجَهُ مِنْ خَطِيئَتِهِ كَيَوْمِ وَلَدَتْهُ أُمُّهُ

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: "சுலைமான் பின் தாவூத் (அலை) அவர்கள் பைத்துல் மக்திஸைக் கட்டி முடித்தபோது, வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்விடம் மூன்று விஷயங்களைக் கேட்டார்கள்: (முதலாவதாக,) அவனுடைய தீர்ப்புக்கு இசைவான ஒரு தீர்ப்பை (வழங்கும் ஞானத்தை) அல்லாஹ்விடம் கேட்டார்கள், அது அவர்களுக்கு வழங்கப்பட்டது. (இரண்டாவதாக,) தங்களுக்குப் பிறகு வேறு எவருக்கும் இல்லாத ஒரு ஆட்சியை (அதாவது, மனிதர்கள், ஜின்கள், பறவைகள் மற்றும் காற்றுகள் மீது ஆதிக்கம் செலுத்தும் தனித்துவமான ஆட்சியை) அல்லாஹ்விடம் கேட்டார்கள், அதுவும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (மூன்றாவதாக,) அவர்கள் அந்த மஸ்ஜிதைக் கட்டி முடித்தபோது, அங்கே தொழுவதற்காக மட்டுமே

(எந்த உலக நோக்கமும் இல்லாமல்) எவரேனும் அங்கு வந்தால், அவருடைய தாய் அவரைப் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போல பாவங்களிலிருந்து விடுபட்டவராக அவர் வெளியேற வேண்டும் என்று அல்லாஹ்விடம் கேட்டார்கள்." (அஹ்மது 2/176, நஸாயீ 693)

ஒன்பதாவது: மஸ்ஜிதுல் அக்ஸாவை சுலைமான் (அலை) அவர்கள் மட்டுமல்லாமல், அவருக்கு முன் பல நபிமார்களும் (இப்ராஹீம், யாகூப் (அலை) போன்றோர்) புதுப்பித்து கட்டியுள்ளனர்.

பத்தாவது: மஸ்ஜிதுல் அக்ஸாவின் சிறப்புகளில் ஒன்று, அதை வெற்றி கொண்டவர் நேர்மையான கலீபா உமர் இப்னு அல்கத்தாப் (ரலி) ஆவார்.
அவரது காலத்தில் முஸ்லிம் படை ஹிஜ்ரி 15ஆம் ஆண்டு (கி.பி. 636) குத்ஸை முற்றுகையிட்டது. அந்த படையை புகழ்பெற்ற ஸஹாபி அபூ உபைதா ஆமிர் இப்னு அல்-ஜர்ராஹ் (ரலி) அவர்கள் வழிநடத்தினர். ஆறு மாத முற்றுகைக்கு பின், கிறிஸ்தவ தலைவர் சரணடைந்தார். ஆனால் ஒரு நிபந்தனை வைத்தார், அது - முஸ்லிம்களின் கலீபா உமர் (ரலி) அவர்கள் நேரில் வர வேண்டும் என்று.

ஹிஜ்ரி கசாஆம் ஆண்டு, கலீபா உமர் (ரலி) அவர்கள் குத்ஸுக்கு பயணம் செய்து, நகரத்தின் சாவிகளை பெற்றுக்கொண்டு, அது முஸ்லிம் ஆட்சிக்குள் நுழைந்ததை அறிவித்தார். நபி ﷺ அவர்கள் இஸ்ரா இரவில் நுழைந்த அதே வாசலின் வழியாக மஸ்ஜிதுல் அக்ஸாவிற்குள் நுழைந்தார் உமர் (ரலி). அங்கு தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகையை தாவூத் (அலை) அவர்களின் மிஹ்ராபில் தொழுதார். அடுத்த நாள், முஸ்லிம்களுக்கு ஃபஜ்ர் தொழுகையை நடத்தினார். முதல் ரக்அத்தில் “ஸாத்” ஸூராவையும், இரண்டாவது ரக்அத்தில் “பனி இஸ்ராயீல்” (ஸூரா இஸ்ரா) யையும் வாசித்தார்.

அப்போது “உமரிய்யா ஒப்பந்தம்” எழுதப்பட்டது. அதில் ஷாம் பகுதியின் கிறிஸ்தவர்களுக்கான நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டன. அந்த

ஒப்பந்தத்தில், இஸ்லாமிய ஆட்சிக்குள் பாலஸ்தீனில் வாழ விரும்பும் கிறிஸ்தவர்களுக்கு முஸ்லிம்கள் வழங்கும் உரிமைகள் விளக்கப்பட்டன. அதில் முக்கியமானது : அவர்கள் அங்கு பாதுகாப்புடனும் மரியாதையுடனும் வாழ அனுமதி பெறுவதற்காக ஜிஸ்யா (வரி) செலுத்த வேண்டும் என்பது.

அல்லாஹ்வின் அடியார்களே! இவ்வாறு அல்லாஹ் பைத்துல் முகத்தஸிற்கு பத்து சிறப்புகளையும், மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கும் பத்து சிறப்புகளையும் வழங்கியுள்ளான். அவற்றின் மகத்துவத்தையும் உயர்ந்த நிலையும் காட்டுவதற்காக. ஒவ்வொரு முஸ்லிமும் இதை அறிந்து, தமது குழந்தைகளுக்கும் கற்பிக்க வேண்டும்.

பாலஸ்தீன் பிரச்சனை என்பது வெறும் பொருளாதார அல்லது அரசியல் பிரச்சனை அல்ல. அது ஒரு **நம்பிக்கை (அகீதா) தொடர்பான விஷயம்**.
இதில் அலட்சியம் காட்டுவது, நம் மார்க்கத்தில் ஒரு குறைபாடாகும்.

பூமியின் சிறந்த அரசர்களில் சிலர், அங்கிருந்து ஆக்கிரமிப்பை அகற்ற பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். இன்றைய காலத்தில், இந்த உம்மாவின் மஜூஸ் (இறைநம்பிக்கை குலைத்தவர்கள்) ஆகிய ராஃபிதா ஈரான், ‘‘குத்ஸை விடுவிப்போம்’’ என்ற கோஷங்களை எழுப்புகின்றனர் ஆனால் அவர்கள் நோக்கம் மஸ்ஜிதுல் அக்ஸாவை அடைந்து, தங்கள் ஷிர்க் கொடிகளை அங்கு ஏற்றுவதும், தங்கள் ஆட்சியை நிலைநாட்டுவதும் ஆகும். கஅபாவின் இறைவனைச் சத்தியமாக அவர்கள் தோல்வியடைவார்கள்! பாலஸ்தீனை உமர் (ரலி) அவர்கள் வெற்றி கொண்டார். பின்னர் ஸாலாஹுத்தீன் அதை மீண்டும் வெற்றி கொண்டார். உமர் மற்றும் ஸலாஹுத்தீனை திட்டுபவர்கள், அதை மீண்டும் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது!

بارك الله لى ولكم فى القرآن العظيم ونفعنى وإياكم بما فيه من الآيات والذكر الحكيم أقول قولى هذا وأستغفر الله لى ولكم من كل ذنب فاستغفروه إنه هو الغفور الرحيم

இரண்டாம் உரை

அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் உரியது! அவனது அடியார்கள் மீது அமைதி உண்டாகுக.
ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வின் அடியார்களே! யூதர்கள், மஸ்ஜிதுல் அக்ஸா மீது தங்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்று கூறுகின்றனர். அவர்கள் இதற்கான ஆதாரமாக, நபி சுலைமான் (அலை) அவர்கள் அதை கட்டியதாகவும், தாங்கள் அவர்களின் சந்ததியினர் என்பதையும் முன்வைக்கின்றனர். இந்தக் கூற்று ஏழு காரணங்களால் தவறானது :

1. முதலாவது: சுலைமான் (அலை) அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை ஆரம்ப கட்டுமானமாக கட்டவில்லை. அதனை மறுபடியும் புதுப்பித்தார்கள். அதன் அடிப்படை கட்டுமானம் அவர்களுக்கு முன்பே நடந்தது. சிலர் அதை ஆதம் (அலை) அவர்கள் கட்டியதாகவும், சிலர் வேறு கருத்துகளையும் கூறுகின்றனர்.

2. இரண்டாவது: மஸ்ஜிதுல் அக்ஸா, சுலைமான் (அலை) அவர்களுக்கு முன்பே பல நபிமார்களால் இப்ராஹீம், யாகூப் (அலை) போன்றோர்களால் புதுப்பிக்கப்பட்டது. அது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் மக்களுக்கான வழிபாட்டு இடமாக இருந்தது. யூதர்களுக்கான தனிப்பட்ட ஆலயமாக அல்ல.

3. மூன்றாவது: சுலைமான் (அலை) அவர்கள் தவ்ஹீத் (ஒன்றே இறைவன்) நம்பிக்கையுடையவர். ஆனால் யூதர்கள் தங்கள் நபிமார்களின் பாதையை பின்பற்றவில்லை. மாறாக அவர்களை எதிர்த்தார்கள், தவ்ராத் மற்றும் இஞ்சீலை மாற்றினார்கள், மேலும் இறைமறுப்பில் விழுந்தார்கள். அதனால், அவர்களின் குஃப்ரின் காரணமாக உண்மையான பனி இஸ்ராயீலிலிருந்து பிரிந்துவிட்டார்கள் - நூஹ் (அலை) அவர்களிடமிருந்து அவர்களின் மகன் பிரிந்தது போல, இப்ராஹீம் (அலை) அவர்களிடமிருந்து அவர்களின் தந்தை ஆஸர் பிரிந்தது போல, நபி முஹம்மது ﷺ அவர்களிடமிருந்து அவர்களின் சிரிய தந்தை அபூ லஹப் பிரிந்தது போல. குஃப்ர் முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் இடையேயான உறவை முறிக்கும். ஆகையால், பனி

இஸ்ராயீலுக்கு இருந்த சிறப்புகள் யூதர்களுக்கு இல்லை. அவர்கள் குஃப்ர் காரணமாக அதிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

4. நான்காவது: சுலைமான் (அலை) அவர்கள் மஸ்ஜிதை கட்டியதாக இருப்பது, அந்த இடம் அவர்களுக்குச் சொந்தம் என்ற பொருளில் அல்ல.
அவர் அதை அனைத்து மக்களும் தொழுவதற்காக புதுப்பித்தார். அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும். நபிமார்களின் அழைப்பு இன அடிப்படையிலானது அல்ல மாறாக அது தவ்ஹீத் மற்றும் தக்வா அடிப்படையிலானது.

5. ஐந்தாவது: உமர் (ரலி) அவர்கள் பைத்துல் மக்திஸை வெற்றிகொண்டபோது, ஒரு ஒப்பந்தத்தை செய்தார். அது இன்றுவரை நிலைத்திருக்கிறது.
அதில் பாலஸ்தீன் முஸ்லிம்களுக்கு உரியது என்றும், ஆட்சி மற்றும் அதிகாரம் அவர்களுக்கே என்றும் குறிப்பிடப்பட்டது. யூதர்களுக்கு அங்கு வாழ அனுமதி மட்டும் உண்டு, அவர்கள் முஸ்லிம் ஆட்சியின் கீழ் ஜிஸ்யா செலுத்த வேண்டும்.

6. ஆறாவது: அல்லாஹ் தனது வேதத்தில் பூமி அவனுக்குரியது என்றும், அதை அவன் தனது நல்ல அடியார்களுக்கு வாரிசாக்குவான் என்றும் கூறுகிறான் :

﴿وَلَقَدۡ كَتَبۡنَا فِي ٱلزَّبُورِ مِنۢ بَعۡدِ ٱلذِّكۡرِ أَنَّ ٱلۡأَرۡضَ يَرِثُهَا عِبَادِيَ ٱلصَّٰلِحُونَ﴾

நிச்சயமாக நாம் ஜபூர் வேதத்தில், (முந்திய வேதத்தைப் பற்றி) நினைவூட்டிய பின்: "நிச்சயமாக பூமியை (ஸாலிஹான) என்னுடைய நல்லடியார்கள் வாரிசாக அடைவார்கள் என்று எழுதியிருக்கிறோம். (அல்குர்ஆன் 21:105)

நிச்சயமாக, உண்மையானவர்கள் இஸ்லாத்தை பின்பற்றுபவர்களே. யூதர்கள் நபிமார்களின் எதிரிகளும், சில நபிமார்களை கொன்றவர்களுமாக உள்ளனர்.

இப்னு உதைமீன் (ரஹ்) அவர்கள் கூறியதன் சாராம்சம்: பனி இஸ்ராயீல், அவர்கள் ஈமான் கொண்டிருந்தபோது, பரிசுத்த நிலத்திற்கு உரிமை பெற்றவர்கள். அவர்கள் பனி இஸ்ராயீல் என்பதற்காக அல்ல, அவர்கள் ஈமான் கொண்டவர்களாக இருந்ததால். அதேபோல், அல்லாஹ் பனி இஸ்ராயீலுக்கு ஃபிர்அவ்னின் நிலத்தை வழங்கியதைப் போல, நபி முஹம்மது ﷺ அவர்களை பின்பற்றும் முஸ்லிம்களுக்கும் அந்த நிலம் வழங்கப்படும்.

7. ஏழாவது: பொதுவாக பள்ளிவாசல்களின் நிர்வாகமும், குறிப்பாக மூன்று பெரிய பள்ளிவாசல்களின் நிர்வாகமும், ஈமான் கொண்டவர்களுக்கே உரியது. காபிர்களுக்கு அல்ல. அல்லாஹ் கூறுகிறான் :

﴿ مَا كَانَ لِلْمُشْرِكِينَ أَن يَعْمُرُوا۟ مَسَـٰجِدَ ٱللَّهِ شَـٰهِدِينَ عَلَىٰٓ أَنفُسِهِم بِٱلْكُفْرِ ۚ أُو۟لَـٰٓئِكَ حَبِطَتْ أَعْمَـٰلُهُمْ وَفِى ٱلنَّارِ هُمْ خَـٰلِدُونَ ﴿١٧﴾ إِنَّمَا يَعْمُرُ مَسَـٰجِدَ ٱللَّهِ مَنْ ءَامَنَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ وَأَقَامَ ٱلصَّلَوٰةَ وَءَاتَى ٱلزَّكَوٰةَ وَلَمْ يَخْشَ إِلَّا ٱللَّهَ ۖ فَعَسَىٰٓ أُو۟لَـٰٓئِكَ أَن يَكُونُوا۟ مِنَ ٱلْمُهْتَدِينَ ﴿١٨﴾ ﴾

“குஃப்ரின்” மீது தாங்களே சாட்சி சொல்லிக் கொண்டிருக்கும், இந்த முஷ்ரிக்குகளுக்கு அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்ய உரிமையில்லை; அவர்களுடைய (நற்)கருமங்கள் (யாவும் பலன் தராது) அழிந்துவிட்டன - அவர்கள் என்றென்றும் நரகத்தில் தங்கிவிடுவார்கள். அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்யக்கூடியவர்கள், அல்லாஹ்வின் மீதும் இறுதிநாள் மீதும் ஈமான் கொண்டு தொழுகையைக் கடைப்பிடித்து ஜகாத்தை (முறையாகக்) கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள்தாம் - இத்தகையவர்கள்தாம் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்களில் ஆவார்கள். (அல்குர்ஆன் 9:17,18)

அல்லாஹ்வின் அடியார்களே! வெற்றி அல்லாஹ்வால் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது - தாழ்மையுடன் சுஜூத் செய்யும் நெற்றிகளுக்கும், தவ்ஹீத் கொண்ட இதயங்களுக்கும், உழு செய்த கைகளுக்கும்,

உண்மையான நாவுகளுக்கும். அல்லாஹ் தனது வாக்குறுதியில் உண்மையானவன். அவன் ஒருபோதும் வாக்குறுதியை மீறமாட்டான்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَعَدَ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُواْ مِنكُمۡ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ لَيَسۡتَخۡلِفَنَّهُمۡ فِي ٱلۡأَرۡضِ كَمَا ٱسۡتَخۡلَفَ ٱلَّذِينَ مِن قَبۡلِهِمۡ وَلَيُمَكِّنَنَّ لَهُمۡ دِينَهُمُ ٱلَّذِي ٱرۡتَضَىٰ لَهُمۡ وَلَيُبَدِّلَنَّهُم مِّنۢ بَعۡدِ خَوۡفِهِمۡ أَمۡنٗاۚ يَعۡبُدُونَنِي لَا يُشۡرِكُونَ بِي شَيۡـٔٗاۚ وَمَن كَفَرَ بَعۡدَ ذَٰلِكَ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡفَٰسِقُونَ ﴾

உங்களில் எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நற்செயல்கள் புரிகிறார்களோ அவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை(ப் பூமிக்கு) ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும், இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும், அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும், அல்லாஹ் வாக்களித்திருக்கிறான்; "அவர்கள் என்னோடு (எதையும், எவரையும்) இணைவைக்காது, அவர்கள் என்னையே வணங்குவார்கள்;" இதன் பின்னர் (உங்களில்) எவர் மாறு செய்(து நிராகரிக்)கிறாரோ அவர்கள் பாவிகள்தாம். (அல்குர்ஆன் 24:55)

மேலும் அறிந்துகொள்ளுங்கள் அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு ஓர் மேனானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿ إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا ﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

யா அல்லாஹ்! உன் அடியார் மற்றும் தூதர் முஹம்மது நபி மீது அருள்புரிவாயாக, அவரை பின்பற்றிய நபித்தோழர்கள் நேர்மையான இமாம்களை நீ பொருந்திக்கொள்வாயாக! மேலும் தாபியீன்களையும் மற்றும் மறுமை வரை உளத்தூய்மையோடு அவர்களை பின்பற்றியவர்களையும் நீ பொருந்திக்கொள்வாயாக! யா அல்லாஹ், உன்னிடம் நிம்மதியான வாழ்வையும் பயனளிக்கும் செல்வத்தையும் நல்ல செயல்களையும் கேட்கிறோம். யா அல்லாஹ்! நபியின் மீதும் அவர் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீது அருள்புரிவாயாக!

யா அல்லாஹ்! இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் நீ கண்ணியப்படுத்துவாயாக! ஷிர்க் மற்றும் முஷ்ரிக்களை இழிவுபடுத்துவாயாக! உன் எதிரிகள் மற்றும் இந்த மார்க்கத்தின் எதிரிகளை நீ அழிப்பாயாக! உன்னயே வணங்கும் அடியார்களுக்கு உதவி செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் நாடுகளில் அமைதியை நிலயச்செய்வாயாக! இமாம்கள் மற்றும் ஆட்சியாளர்களை சீரான வழியில் செலுத்துவாயாக! அவர்கள் நேர்வழியில் அழைத்து செல்பவர்களாக ஆக்குவாயாக!

அல்லாஹ்வே!யூதர்கள் எல்லைகளை மீறி அத்துமீறி நடந்து, பூமியில் அதிகமான அழிவை ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் நபிமார்களை கொன்றுள்ளனர், நல்லோரின் இரத்தத்தை சிந்தியுள்ளனர், வீடுகளைகைப் பற்றியுள்ளனர், செல்வங்களை கொள்ளையடித்துள்ளனர்.

அல்லாஹ்வே! அவர்கள்மீது தண்டனைகளையும் நோய்களையும் இறக்குவாயாக.
அல்லாஹ்வே! அவர்கள்மீது பயமும் அச்சமும் ஏற்படுத்துவாயாக. உன்னிடமே நாங்கள் முறையிடுகிறோம், உன்னையே நாங்கள்

நம்புகிறோம்.
உன்னாலன்றி எங்களுக்குச் சக்தியும் வல்லமையும் இல்லை.
அல்லாஹ்வே! மஸ்ஜிதுல் அக்ஸாவை உயர்ந்ததும் கண்ணியமானதுமாக வைத்திருப்பாயாக. அதை யூதர்களின் அசுத்தப்படுத்தலிலிருந்து பாதுகாப்பாயாக!

سبحان ربنا رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

ஆக்கம் : மாஜித் பின் ஸுலைமான் அர்ரஸ்ஸீ - 9, ஷவ்வால், 1442 - ஜுபைல், சவூதி அரேபியா, +966 505906761

பூமியில் அநியாயமும் குழப்பமும் செய்யக் கூடாது

إِنَّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள், அவனை மேன்மை படுத்துங்கள் மேலும் அவனுக்கு கட்டுப்பட்டு மாறு செய்யாமலிருப்பீராக!

அல்லாஹ் சீர்திருத்தத்தைக் கொண்டு (இஸ்லாஹ்) ஆணையிட்டுள்ளான், மேலும் குழப்பத்தையும் தடை செய்துள்ளான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.
நபி ஷுஐப் (அலை) தமது மக்களிடம் கூறினார்:

﴿ إِنْ أُرِيدُ إِلَّا ٱلْإِصْلَٰحَ مَا ٱسْتَطَعْتُۚ وَمَا تَوْفِيقِىٓ إِلَّا بِٱللَّهِۚ عَلَيْهِ تَوَكَّلْتُ وَإِلَيْهِ أُنِيبُ ﴾

“என்னால் இயன்ற வரையில் (உங்களின்) சீர் திருத்தத்தையேயன்றி வேறெதையும் நான் நாடவில்லை; மேலும், நான் உதவி பெறுவது அல்லாஹ்வைக் கொண்டல்லாது வேறில்லை, அவனிடமே பொறுப்புக் கொடுத்திருக்கிறேன்; இன்னும் அவன் பாலே மீளுகிறேன்..”

(அல்குர்ஆன் 11:88)

அல்லாஹ் சீர்திருத்தம் செய்பவர்களுக்கு மிகப்பெரிய பலனை வாக்களித்துள்ளான் :

﴿ وَٱلَّذِينَ يُمَسِّكُونَ بِٱلْكِتَٰبِ وَأَقَامُوا۟ ٱلصَّلَوٰةَ إِنَّا لَا نُضِيعُ أَجْرَ ٱلْمُصْلِحِينَ ١٧٠ ﴾

எவர்கள் வேதத்தை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொண்டு, தொழுகையையும் நிலைநிறுத்துகிறார்களோ (அத்தகைய) சீர்திருத்தம் செய்யும் நல்லோர்களின் கூலியை நாம் நிச்சயமாக வீணாக்க மாட்டோம். (அல்குர்ஆன் 7:170)

மேலும், ஒரு ஊரின் மக்கள் சீர்திருத்தம் செய்பவர்கள் ஆக இருந்தால், அல்லாஹ் அதை அழிக்கமாட்டான் என்று கூறுகிறான்:

﴿ وَمَا كَانَ رَبُّكَ لِيُهۡلِكَ ٱلۡقُرَىٰ بِظُلۡمٖ وَأَهۡلُهَا مُصۡلِحُونَ ١١٧ ﴾

“உங்கள் இறைவன் அநியாயமாக எந்த ஊர்களையும் அழிப்பவன் அல்ல; அவற்றின் மக்கள் சீர்திருத்தம் செய்பவர்கள் ஆக இருந்தால்.” (அல்குர்ஆன் 11:117)

முஸ்லிம்களே! சீர்திருத்தத்திற்கு எதிரானது குழப்பமாகும். அல்லாஹ் குழப்பத்தையும் குழப்பம் செய்பவர்களையும் வெறுக்கிறான்:

﴿ وَٱللَّهُ لَا يُحِبُّ ٱلۡمُفۡسِدِينَ ﴾

அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 5:64)

அதைச் செய்ய வேண்டாம் என்றும் தடை செய்துள்ளான்:

﴿ وَلَا تَعۡثَوۡاْ فِي ٱلۡأَرۡضِ مُفۡسِدِينَ ١٨٣ ﴾

மேலும், நீங்கள் பூமியில் குழப்பம் செய்பவர்களாக அலையாதீர்கள். (அல்குர்ஆன் 26:183)

மேலும் குழப்பம் செய்பவர்களுக்கு எச்சரிக்கை வழங்கியுள்ளான் :

﴿ فَٱنظُرۡ كَيۡفَ كَانَ عَٰقِبَةُ ٱلۡمُفۡسِدِينَ ١٤ ﴾

இந்த குழப்பம் செய்பவர்களின் (விஷமிகளின்) முடிவு என்ன வாயிற்று என்பதை நீர் கவனிப்பீராக. (அல்குர்ஆன் 27:14)

அல்லாஹ் பல குழப்பம் விளைவித்த சமூகங்களை அழித்துள்ளான். ஃபிர்அவ்னை பற்றி கூறும்போது :

﴿ إِنَّ فِرۡعَوۡنَ عَلَا فِي ٱلۡأَرۡضِ وَجَعَلَ أَهۡلَهَا شِيَعٗا يَسۡتَضۡعِفُ طَآئِفَةٗ مِّنۡهُمۡ يُذَبِّحُ أَبۡنَآءَهُمۡ وَيَسۡتَحۡيِۦ نِسَآءَهُمۡۚ إِنَّهُۥ كَانَ مِنَ ٱلۡمُفۡسِدِينَ ﴾

நிச்சயமாக ஃபிர்அவ்ன் இப்பூமியில் பெருமையடித்துக் கொண்டு, அந்த பூமியிலுள்ளவர்களைப் (பல) பிரிவினர்களாக்கி, அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தாரை பலஹீனப்படுத்தினான்; அவர்களுடைய ஆண் குழந்தைகளை அறுத்(துக் கொலை செய்)து பெண் குழந்தைகளை உயிருடன் விட்டும் வைத்தான்; நிச்சயமாக அவன் குழப்பம் செய்வோரில் ஒருவனாக இருந்தான். (அல்குர்ஆன் 28:4)

மேலும், அல்லாஹ் முனாஃபிக்குகளை குழப்பம் செய்பவர்கள் என விவரிக்கிறான். அவர்கள் தங்கள் குழப்பத்தை சீர்திருத்தம் என்று கூறுகிறார்கள்:

﴿ وَإِذَا قِيلَ لَهُمۡ لَا تُفۡسِدُواْ فِي ٱلۡأَرۡضِ قَالُوٓاْ إِنَّمَا نَحۡنُ مُصۡلِحُونَ أَلَآ إِنَّهُمۡ هُمُ ٱلۡمُفۡسِدُونَ وَلَٰكِن لَّا يَشۡعُرُونَ ﴾

“பூமியில் குழப்பத்தை உண்டாக்காதீர்கள்” என்று அவர்களிடம் சொல்லப்பட்டால் “நிச்சயமாக நாங்கள் தாம் சமாதானவாதிகள்” என்று அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் தாம் குழப்பம் உண்டாக்குபவர்கள் அன்றோ; ஆனால் அவர்கள் (இதை) உணர்கிறார்களில்லை. (அல்குர்ஆன் 2:11,12)

அல்லாஹ் சீர்திருத்தம் செய்பவர்களுக்கும் குழப்பம் விளைவிப்பவர்களுக்கும் இடையே வேறுபாடு காட்டுகிறான்:

﴿ أَمۡ نَجۡعَلُ ٱلَّذِينَ ءَامَنُواْ وَعَمِلُواْ ٱلصَّٰلِحَٰتِ كَٱلۡمُفۡسِدِينَ فِي ٱلۡأَرۡضِ أَمۡ نَجۡعَلُ ٱلۡمُتَّقِينَ كَٱلۡفُجَّارِ ﴾

அல்லது ஈமான் கொண்டு (ஸாலிஹான) நல்லமல்கள் செய்வோரை பூமியில்

குழப்பம் செய்வோரைப்போல் நாம் ஆக்கிவிடுவோமா? அல்லது, பயபக்தியுடையோரைப் பாவிகளைப் போல் நாம் ஆக்கிவிடுவோமா? (அல்குர்ஆன் 38:28)

ஈமான் கொண்டவர்களே! குழப்பம் என்பது நம்பிக்கை, வழிபாடு, ஒழுக்கம் மற்றும் பரிவர்த்தனைகள் அனைத்திலும் இடம்பெறக்கூடியது.

நம்பிக்கையில் ஏற்படும் குழப்பங்களில் சில: அல்லாஹ்வைத் தவிர பிறவற்றில் நாட்டம் கொள்ளுதல், அல்லாஹ்வைத் தவிர பிறரின் பெயரில் சத்தியம் செய்வது, அல்லாஹ்வின் சட்டத்திற்கு மாறாக தீர்ப்பு கேட்பது.

வழிபாட்டில் ஏற்படும் குழப்பங்களில் சில : ஃபஜ்ர் தொழுகையை சூரியன் உதயமாகும் வரை அறிந்தே தாமதப்படுத்துவது, இஸ்லாத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட செயல்கள் (பித்அத்) மூலம் அல்லாஹ்வுக்கு நெருக்கமாக முயற்சிப்பது; உதாரணமாக நபி ﷺ அவர்களின் பிறந்தநாளை கொண்டாடுவது.

ஒழுக்கத்தில் ஏற்படும் குழப்பங்களில் சில: அலங்காரத்தை மற்றவர்களுக்கு வெளிகாட்டுதல், வேலைத்தளங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலப்பு, நாவினால் செய்யும் பிழைகள், இசைக்கருவிகள் மற்றும் பாடல்களை கேட்பது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

النَّبِيَّ صلى الله عليه وسلم يَقُولُ : لَيَكُونَنَّ مِنْ أُمَّتِي أَقْوَامٌ يَسْتَحِلُّونَ الْحِرَ وَالْحَرِيرَ وَالْخَمْرَ وَالْمَعَازِفَ

என் சமுதாயத்தில் (உம்மத்தில்) சிலர் தோன்றுவார்கள்; அவர்கள் விபச்சாரம் (அல்-ஹிர்), பட்டு (ஆண்களுக்கு), மது மற்றும் இசைக் கருவிகள் ஆகியவற்றை ஆகுமானதாகக் (ஹலால்) கருதுவார்கள். (அல்-புஹாரி 5590)

பரிவர்த்தனைகளில் ஏற்படும் குழப்பங்களில் சில : வட்டி (ரிபா) மூலம் பரிவர்த்தனை செய்வது. அல்லாஹ் கூறுகிறார்:

﴿ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا تَأْكُلُوا۟ ٱلرِّبَوٰٓا۟ أَضْعَـٰفًا مُّضَـٰعَفَةً ۖ وَٱتَّقُوا۟ ٱللَّهَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ﴾

ஈமான் கொண்டவர்களே! பல மடங்கு அதிகரிக்கும் வட்டியை உண்ணாதீர்கள்; அல்லாஹ்வை பயப்படுங்கள், நீங்கள் வெற்றி பெறுவீர்கள்." (அல்குர்ஆன் 3:130)

لَعَنَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم آكِلَ الرِّبَا وَمُوكِلَهُ وَكَاتِبَهُ وَشَاهِدَيْهِ وَقَالَ هُمْ سَوَاءٌ .

அவர்கள் வட்டி உண்ணுபவரை சபித்தார்கள்: "வட்டி ﷺநபி உண்ணுபவன், கொடுப்பவன், எழுதுபவன் மற்றும் சாட்சி தருபவன் - அனைவரும் சமம்" என்று கூறினார்கள். (முஸ்லிம் 1598)

பரிவர்த்தனைகளில் மிகவும் பரவலாக உள்ள இன்னொரு குழப்பம் : லஞ்சம். அதாவது, ஒருவருக்கு உரிமையில்லாததைப் பெற அல்லது தன்னிடம் இருக்கும் கடமையை தவிர்க்க மற்றொருவருக்கு பணம் கொடுப்பது.

لَعَنَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الرَّاشِي وَالْمُرْتَشِي

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "லஞ்சம் கொடுப்பவனும், வாங்குபவனும் சபிக்கப்பட்டவர்கள்." (அஹ்மது 6532)

லஞ்சம் 'குலூல்' (துரோகம்) என்றும் அழைக்கப்படுகிறது.

النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَنْ اسْتَعْمَلْنَاهُ عَلَى عَمَلٍ فَرَزَقْنَاهُ رِزْقًا فَمَا أَخَذَ بَعْدَ ذَلِكَ فَهُوَ غُلُول

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "ஒருவரை ஒரு பணிக்கு நியமித்து அவருக்கு சம்பளம் வழங்கிய பின், அதற்கு மேலாக எதையாவது எடுத்தால் அது துரோகம் ஆகும்." (அபுதாவூத் 2943)

இந்த ஹதீஸ் மூலம், அரசு அல்லது தனியார் பணியில் சம்பளம் பெறும் ஒருவர் தனது பணியின் காரணமாக கூடுதல் பணம் அல்லது பரிசு பெறுவது அனுமதிக்கப்படாதது என்பது தெளிவாகிறது.

லஞ்சத்தின் பெயரை மாற்றுவது அதன் தன்மையை மாற்றாது; அதை 'பரிசு' அல்லது 'இனாம்' என்று அழைத்தாலும், அது லஞ்சமே. தன்மைக்கு தான் மதிப்பு உண்டு, பெயர்களுக்கு அல்ல.

அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் குர்ஆனின் மூலம் நன்மை அளிப்பானாக! அதில் உள்ள வசனங்களும் நமக்கு பயன் தரட்டும். எனக்கும் உங்களுக்கும் எல்லா பாவங்களுக்கும் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்கிறேன். அவனிடமே பாவமன்னிப்பு கேட்போம்; நிச்சயமாக அவனே பாவங்களை மன்னிப்பவன்.

இரண்டாம் உரை

الحمد لله وحده، والصلاة والسلام على من لا نبي بعده،

استعمل رسول الله صلى الله عليه وسلم رجلًا ليجمع الزكاة من بني سُليم يُدْعَى ابْنَ اللُّتْبِيَّة، فَجاءَ حِينَ فَرَغَ مِن عَمَلِهِ فقالَ: يا رَسولَ اللَّهِ، هذا لَكُمْ وهذا أُهْدِيَ لِي.

فقالَ له: أفَلا قَعَدْتَ في بَيْتِ أبِيكَ وأُمِّكَ، فَنَظَرْتَ أيُهْدَى لكَ أمْ لا؟

ثُمَّ قامَ رَسولُ اللَّهِ صَلَّى اللهُ عليه وسلَّمَ عَشِيَّةً بَعْدَ الصَّلاةِ، فَتَشَهَّدَ وأَثْنَى علَى اللَّهِ بما هو أهْلُهُ، ثُمَّ قالَ: أمَّا بَعْدُ، فَما بالُ العامِلِ نَسْتَعْمِلُهُ، فَيَأْتِينا فيَقولُ: (هذا مِن عَمَلِكُمْ، وهذا أُهْدِيَ لِي)، أفَلا قَعَدَ في بَيْتِ أبِيهِ وأُمِّهِ فَنَظَرَ هلْ يُهْدَى له أمْ لا، فَوالذي نَفْسُ مُحَمَّدٍ بيَدِهِ، لا يَغُلُّ أحَدُكُمْ مِنْها شيئًا إلَّا جاءَ به يَومَ القِيامَةِ يَحْمِلُهُ علَى عُنُقِهِ، إنْ كانَ بَعِيرًا جاءَ به له رُغاءٌ وإنْ كانَتْ بَقَرَةً جاءَ بها لها خُوارٌ وإنْ كانَتْ شاةً جاءَ بها تَيْعَرُ، فقَدْ بَلَّغْتُ.

فقالَ أبو حُمَيْدٍ: ثُمَّ رَفَعَ رَسولُ اللَّهِ صَلَّى اللهُ عليه وسلَّمَ يَدَهُ، حتَّى إنَّا لَنَنْظُرُ إلى عُفْرَةِ إبْطَيْهِ

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு ஊழியரை நியமித்தார்கள். அந்த ஊழியர் தனது வேலையை முடித்த பிறகு திரும்பி வந்து,

"அல்லாஹ்வின் தூதரே ﷺ! இது (அரசுக்குச் சேர வேண்டியது) உங்களுக்கானது; இது எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது" என்று கூறினார்.

அதற்கு நபி ﷺ அவர்கள் அவரிடம், "நீர் உம்முடைய தந்தை மற்றும் தாயின் வீட்டில் உட்கார்ந்திருந்து, உமக்கு அன்பளிப்பு வழங்கப்படுகிறதா இல்லையா என்று பார்த்திருக்கக் கூடாதா?" என்று கேட்டார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மாலையில் தொழுகைக்குப் பிறகு எழுந்தார்கள். ஏகத்துவ உறுதிமொழி (தஷஹ்ஹுத்) கூறி, அல்லாஹ்வுக்குத் தகுதியான விதத்தில் அவனைப் புகழ்ந்துவிட்டுப் பிறகு கூறினார்கள்: "இனி விஷயத்திற்கு வருவோம்! நாம் பணியில் அமர்த்தும் அந்த ஊழியருக்கு என்ன நேர்ந்தது? அவர் நம்மிடம் வந்து, 'இது உங்கள் பணி மூலம் வந்தது; இது எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது' என்று கூறுகிறாரே! அவர் தனது தந்தை மற்றும் தாயின் வீட்டில் உட்கார்ந்திருந்து, அவருக்கு அன்பளிப்பு வழங்கப்படுகிறதா இல்லையா என்று பார்த்திருக்கக் கூடாதா?
முஹம்மதுவின் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! உங்களில் எவரேனும் அதிலிருந்து (பொதுச் சொத்திலிருந்து) எதையாவது மோசடி செய்தால், அவர் மறுமை நாளில் அதைத் தன் கழுத்தில் சுமந்து கொண்டே வருவார். அது ஒட்டகமாக இருந்தால், அது கனைத்துக்கொண்டிருக்கும் நிலையில் அவர் அதைச் சுமந்து வருவார்; அது ஒரு பசுவாக இருந்தால், அது கத்திக்கொண்டிருக்கும் நிலையில் அவர் அதைச் சுமந்து வருவார்; அது ஒரு ஆடாக இருந்தால், அது கத்திக்கொண்டிருக்கும் நிலையில் அவர் அதைச் சுமந்து வருவார்." பிறகு நபி ﷺ அவர்கள், "(இறைவா!) நான் (உன் செய்தியை) எத்திவைத்துவிட்டேன்" என்று கூறினார்கள். அபூ ஹுமைத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "பிறகு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தங்கள் கைகளை உயர்த்தினார்கள்; எந்த அளவிற்கென்றால் நாங்கள் அவர்களின் அக்குள்களின் வெண்மையைப் பார்த்தோம்." (அல்-புஹாரி 6636)

அல்லாஹ் உங்கள் மீது அருள் புரிவானாக!

மனிதர்களில் சிறந்தவர், மிகப் பரிசுத்தமானவர் முஹம்மது இப்னு

அப்துல்லாஹ் ﷺ அவர்கள்மீது ஸலவாத் செலுத்துங்கள். அவர் ஹவ்த் (நீர்த்தடாகம்) மற்றும் மறுமையில் பரிந்துரைக்கும் உரியவர் ஆவார்.

இதை அல்லாஹ்வே உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

﴿ يَأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾

முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

அல்லாஹ்வே! உமது அடியாரும் தூதருமான முகம் ஒளிவீசும் நெற்றி பிரகாசிக்கும் முஹம்மது ﷺ அவர்கள்மீது அருள், அமைதி, ஆசீர்வாதம் ஆகியவற்றை வழங்குவாயாக.
அல்லாஹ்வே! அவர்களின் நான்கு கலீபாக்களான அபூபக்கர், உமர், உஸ்மான், அலி (ரழி) அனைவர்களையும் பொருந்திக் கொள்வாயாக! மேலும் நபி ﷺ அவர்களின் அனைத்து தோழர்கள்மீதும், தாபிஈன்கள்மீதும், அவர்களை நன்மையுடன் பின்பற்றியவர்கள் மீதும் கியாமத் நாள் வரை திருப்தியடைவாயாக. எங்கள் மீதும் உமது மன்னிப்பு, அருள், கருணை மற்றும் நற்குணங்களுடன் அருள் புரிவாயாக !
அல்லாஹ்வே ! இஸ்லாமையும் முஸ்லிம்களையும் உயர்த்துவாயாக! ஷிர்க்கையும், ஷிர்க் செய்பவர்களையும் தாழ்த்துவாயாக! உமது மார்க்கத்தையும், உமது வேதத்தையும், உமது நபியின் ஸுன்னாவையும், உமது ஈமான் கொண்ட அடியார்களையும் வெற்றியடையச் செய்.
அல்லாஹ்வே! கவலையில் உள்ள முஸ்லிம்களின் கவலைகளை நீக்குவாயாக!
துன்பத்தில் இருப்போரின் துயரங்களை அகற்றுவாயாக! கடனில் உள்ளவர்களின் கடன்களை அடைக்க உதவுவாயாக! அனைத்து நோயாளிகளையும் குணமாக்குவாயாக!

அல்லாஹ்வே! எங்கள் உள்ளங்களில் தக்வாவை ஏற்படுத்துவாயாக. அவற்றை தூய்மைப்படுத்துவாயாக; நீயே சிறந்த தூய்மைப்படுத்துபவன். நீயே அதன் பாதுகாவலனும் அதிபதியும் ஆவாய்.

அல்லாஹ்வே! எங்கள் நாடுகளில் எங்களுக்கு பாதுகாப்பை வழங்குவாயாக.

எங்கள் தலைவர்களையும் ஆட்சியாளர்களையும் சீர்படுத்துவாயாக. உன்னைப் பயந்து நடக்கும், உன் திருப்தியைப் பின்பற்றும் நபர்களின் கையில் எங்கள் ஆட்சி இருக்கச்செய் யா அல்லாஹ்!

அல்லாஹ்வே! அனைத்து முஸ்லிம் ஆட்சியாளர்களையும் உமது வேதத்தின்படி ஆட்சி செய்ய வழிநடத்துவாயாக! உமது மார்க்கத்தை உயர்த்த அவர்களுக்கு உதவுவாயாக. அவர்களை அவர்களின் மக்கள் மீது கருணை கொண்டவர்களாக ஆக்குவாயாக!

﴿رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ﴾

“எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகில் நன்மையையும், மறுமையில் நன்மையையும் வழங்கி, நரகத்தின் தண்டனையிலிருந்து எங்களை காத்தருள்வாயாக.”

அல்லாஹ் எங்கள் நபி முஹம்மது ﷺ அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர் மீதும், தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானத்தையும் உண்டாக்குவாயாக!

கொரோனா - நோயும் நிவாரணமும்

إنّ الْحَمْدَ لِلهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلّ لَهُ وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِىَ لَهُ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

முஸ்லிம்களே! அல்லாஹ்வை பயந்து நடந்து, அவனை எந்நேரமும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கு கீழ்ப்படியுங்கள், அவன் வரம்புகளை மீறாதீர்கள்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும் அளிப்பதில் மிகுந்த ஞானமுள்ளவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.
அவற்றில் ஒன்றாக, அவன் அவர்களின் பொறுமையை கீழ்ப்படிதலில் நிலைத்திருப்பதிலும், பாவங்களைத் தவிர்ப்பதிலும் சோதிக்கிறான்.

அதேபோல், உயிர்கள், விளைச்சல்கள் மற்றும் செல்வங்களில் ஏற்படும் குறைவுகளையும் அவர்கள் பொறுமையுடன் ஏற்கிறார்களா என்றும் சோதிக்கிறான்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿وَنَبْلُوكُمْ بِالشَّرِّ وَالْخَيْرِ فِتْنَةً﴾

"பரீட்சைக்காக கெடுதியையும், நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கிறோம்." (அல்குர்ஆன் 21:35)

அதாவது, நாங்கள் உங்களை செல்வத்தாலும் வறுமையாலும், கௌரவத்தாலும் அவமதிப்பாலும், வாழ்வாலும் மரணத்தாலும்,

ஆரோக்கியத்தாலும் நோயாலும், தொற்றுநோயாலும் சோதிக்கிறோம் - உங்களில் யார் நல்ல செயல்களைச் செய்கிறார், (அல்லாஹ்விடம்) மனந்திரும்புகிறார் என்பதை அறியவும், யார் தனது பாவங்களில் தொடர்ந்து, அல்லாஹ்வின் கட்டளையை கவனிக்காமல் இருக்கிறார் என்பதை அறியவும் இவ்வாறு செய்கிறோம்.

ஈமான் கொண்டோர்களே! நம் காலத்தில் அல்லாஹ் நம்மீது விதித்த மிகப் பெரிய சோதனைகளில் ஒன்று கொரோனா (தொற்றுநோய்) என்பது நாம் அறிந்ததே. இந்த நோய் மக்களின் அன்றாட வாழ்க்கையை புரட்டி போட்டது, பல மரணங்களை ஏற்படுத்தியது, மேலும் பொருளாதார மற்றும் மனித இழப்புகளையும் உண்டாக்கியது.

ஆகையால், அறிவுள்ள முஸ்லிம் ஒருவர் இதிலிருந்து தனக்கான ஒரு பாடத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது.
இந்த நோய் ஏற்பட்டது கரணமல்லாமல் அல்ல. மாறாக அது ஒரு பெரிய ஞானத்திற்காகவே நிகழ்ந்தது.

அதை அல்லாஹ் குர்ஆனில் பலமுறை குறிப்பிட்டுள்ளான் :
மக்கள் பாவங்களிலும் தவறுகளிலும் மூழ்கிப் போவது.
அதனால், அவர்கள் செய்த செயல்களின் ஒரு பகுதியின் தண்டனையை இந்த உலகிலேயே அவர்களுக்கு சுவைக்கச் செய்கிறான் - அவர்கள் திரும்பி மனந்திரும்புவார்களா என்று பார்க்க.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿ ظَهَرَ ٱلۡفَسَادُ فِي ٱلۡبَرِّ وَٱلۡبَحۡرِ بِمَا كَسَبَتۡ أَيۡدِي ٱلنَّاسِ لِيُذِيقَهُم بَعۡضَ ٱلَّذِي عَمِلُواْ لَعَلَّهُمۡ يَرۡجِعُونَ ﴾

மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின; (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான் (அல்குர்ஆன் 30:41)

மேலும் கூறுகிறான்:

﴿ وَمَآ أَصَٰبَكُم مِّن مُّصِيبَةٖ فَبِمَا كَسَبَتۡ أَيۡدِيكُمۡ وَيَعۡفُواْ عَن كَثِيرٖ ﴾

அன்றியும் தீங்கு வந்து உங்களை அடைவதெல்லாம், அது உங்கள் கரங்கள் சம்பாதித்த (காரணத்)தால் தாம், எனினும், பெரும்பாலானவற்றை அவன் மன்னித்தருள்கின்றான். (அல்குர்ஆன் 42:30)

இந்த பேரழிவு பாவங்கள் மற்றும் கட்டுப்பாடற்ற செயல்கள் காரணமாகவே ஏற்பட்டது. இதை நாம் தெளிவாக அன்றாடம் காண்கிறோம். ஊடகங்களில் ஒழுக்கக்கேடு பரவியுள்ளது, இசை, வீண்பொழுது மற்றும் மார்க்கம் மற்றும் அதை பின்பற்றுபவர்களை கிண்டல் செய்வது என்பன அதிகரித்துள்ளது.
வட்டி பரிவர்த்தனை சாதாரண விஷயமாக மாறியுள்ளது, அது பாவமாகவே கருதப்படவில்லை.
வேலைத்தளங்களிலும் சந்தைகளிலும் ஆண்கள் பெண்கள் கலப்பு பரவியுள்ளது. பெண்கள் தங்கள் ஹிஜாப்களில் அலட்சியம் காட்டுகின்றனர். அழகாக அலங்கரிக்கப்பட்ட, உடலமைப்பை வெளிப்படுத்தும் உடைகள் அணிவதும் அதிகரித்துள்ளது.

தொழுகைகளை தவிர்த்து தூங்குவது, பள்ளிவாசல்களை விட்டு விலகுவது, வியாபாரங்களில் மூழ்குவது - இவை எல்லாம் பரவலாகிவிட்டன. இத்தகைய நிலைகளுக்குப் பிறகும் இந்த பேரழிவு ஏற்பட்டது ஆச்சரியப்பட வேண்டிய விஷயமா?

அல்லாஹ்வின் அடியார்களே!
நோய்களையும் தொற்றுநோய்களையும் அல்லாஹ் ஏற்படுத்துவதில் உள்ள ஞானங்களில் ஒன்று என்னவெனில், மனிதன் தனது உள்ளத்தை எப்போதும் அல்லாஹ்வுடன் இணைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதை நியாபகமூட்டுவதாகும்.
தன்னிடம் உள்ள நலவுகளும் செல்வமும் அல்லாஹ்விடமிருந்து கிடைத்த வரமாகும் என்பதை உணர வேண்டும்.
அல்லாஹ் அதை எந்த நேரத்திலும் மாற்றக்கூடியவன் என்பதால், மனிதன் எப்போதும் அல்லாஹ்வின் கட்டளையைப் பின்பற்றி நடக்க வேண்டும். அவன் கட்டளைகளை மீறுவதில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனெனில், அந்த பரக்கத் நீங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

உண்மையில், பரக்கத் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நிலைத்திருக்கும்; நன்றியின்மை காட்டப்பட்டால் அவை நீங்கிவிடும்.

மேலும், நோய்களையும் தொற்றுநோய்களையும் அல்லாஹ் ஏற்படுத்துவதில் உள்ள மற்றொரு ஞானம்: அது அலட்சியமாக வாழ்பவர்களுக்கும் பாவங்களில் ஈடுபடுபவர்களுக்கும் ஒரு நினைவூட்டலாகும். அவர்கள் தங்கள் இறைவனிடமே திரும்பி, அவனிடம் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக.

அவர்கள் தங்களுக்கு மேல் கண்காணித்து கொண்டிருக்கும் ஒரு இறைவன் இருக்கிறான், அவன் பாவங்களுக்கு தண்டனை அளிப்பவன் என்பதை உணர வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான் :

﴿ وَبَلَوْنَٰهُم بِٱلْحَسَنَٰتِ وَٱلسَّيِّـَٔاتِ لَعَلَّهُمْ يَرْجِعُونَ ١٦٨ ﴾

அவர்கள் (நன்மையின் பால்) திரும்பும் பொருட்டு அவர்களை நன்மைகளைக் கொண்டும், தீமைகளைக் கொண்டும் சோதித்தோம்.
(அல்குர்ஆன் 7:168)

﴿ فَلَوْلَآ إِذْ جَآءَهُم بَأْسُنَا تَضَرَّعُوا۟ ﴾

நம்மிடமிருந்து அவர்களுக்கு வேதனை வந்தபோது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா? (அல்குர்ஆன் 6:43)

அல்லாஹ்வின் ஞானங்களில் ஒன்றாக, இந்தத் தொற்றுநோய் நிகழ்வதன் மூலம் சில பாவிகளின் இதயங்கள் கடினமாகிப் போவதும் வெளிப்படுகிறது. அவர்கள் பாவங்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். ஷைத்தான் அதை அவர்களுக்கு அழகாக காட்டுகிறான். இதனால் அவர்கள் தாங்கள் செய்வது நல்லது என்று நினைக்கின்றனர். அது உலகில் ஏற்படும் அழிவுகளுக்கும் பேரிடர்களுக்கும் எந்தத் தாக்கமும் இல்லை என்று கருதுகின்றனர்.

மேலும், அல்லாஹ் அவர்களைப்பிடிக்க (இஸ்தித்ராஜ்) அவர்களுக்கு அவகாசம் அளிக்கிறான். அவர்கள் பாவங்களிலும் அலட்சியத்திலும் இருந்தபடியே, அவர்களுக்கு மேலும் சந்தர்ப்பங்களை வழங்குகிறான் - அவர்கள் எதிர்பாராத நேரத்தில் பிடிக்கப்படுவதற்காக.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ سَنَسْتَدْرِجُهُم مِّنْ حَيْثُ لَا يَعْلَمُونَ وَأُمْلِي لَهُمْ ۚ إِنَّ كَيْدِي مَتِينٌ ﴾

அவர்களைப் படிப்படியாக அவர்கள் அறியா வண்ணம் பிடிப்போம். (இவ்வுலகில்) நான் அவர்களுக்கு அவகாசம் கொடுக்கின்றேன்; நிச்சயமாக எனது திட்டம் மிகவும் உறுதியானது. (அல்குர்ஆன் 7:182,183)

﴿ فَلَمَّا نَسُوا مَا ذُكِّرُوا بِهِ فَتَحْنَا عَلَيْهِمْ أَبْوَابَ كُلِّ شَيْءٍ حَتَّىٰ إِذَا فَرِحُوا بِمَا أُوتُوا أَخَذْنَاهُم بَغْتَةً فَإِذَا هُم مُّبْلِسُونَ ﴿٤٤﴾ ﴾

அவர்களுக்கு நினைவூட்டப்பட்ட நற்போதனைகளை அவர்கள் மறந்துவிட்ட போது, அவர்களுக்கு (முதலில்) எல்லாப் பொருட்களின் வாயில்களையும் நாம் திறந்து விட்டோம் - பின்னர், அவர்களுக்கு கொடுக்கப்பட்டதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்த வேளை (நம் வேதனையைக் கொண்டு) அவர்களை திடீரெனப் பிடித்துக் கொண்டோம்; அப்போது அவர்கள் நம்பிக்கை இழந்தவர்களாக ஆகிவிட்டனர். (அல்குர்ஆன் 6:44)

﴿ وَلَقَدْ أَخَذْنَاهُم بِالْعَذَابِ فَمَا اسْتَكَانُوا لِرَبِّهِمْ وَمَا يَتَضَرَّعُونَ ﴿٧٦﴾ حَتَّىٰ إِذَا فَتَحْنَا عَلَيْهِم بَابًا ذَا عَذَابٍ شَدِيدٍ إِذَا هُمْ فِيهِ مُبْلِسُونَ ﴿٧٧﴾ ﴾

திடனாக நாம் அவர்களை வேதனையைக் கொண்டு பிடித்திருக்கிறோம்; ஆனால், அவர்கள் தங்கள் இறைவனுக்குப் பணியவுமில்லை; தாழ்ந்து பிரார்த்திக்கவுமில்லை. எதுவரையிலெனின், நாம் அவர்கள் மீது கடும் வேதனையின் வாயிலைத் திறந்து விடுவோமானால், அவர்கள் அதனால் நம்பிக்கை இழந்துவிடுகிறார்கள். (அல்குர்ஆன் 23:76,77)

மேலும், நோய்களையும் தொற்றுநோய்களையும் அல்லாஹ் ஏற்படுத்துவதில் உள்ள மற்றொரு ஞானம்: அதை பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, அல்லாஹ்விடம் நன்மை எதிர்பார்த்து திருப்தியுடன் இருப்பவர்களுக்கு மிகுந்த நன்மை வழங்கப்படுகிறது.

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم عَجَبًا لأَمْرِ الْمُؤْمِنِ إِنَّ أَمْرَهُ كُلَّهُ خَيْرٌ وَلَيْسَ ذَاكَ لأَحَدٍ إِلاَّ لِلْمُؤْمِنِ إِنْ أَصَابَتْهُ سَرَّاءُ شَكَرَ فَكَانَ خَيْرًا لَهُ وَإِنْ أَصَابَتْهُ ضَرَّاءُ صَبَرَ فَكَانَ خَيْرًا لَهُ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஃமினுடைய காரியம் ஆச்சரியமானது! நிச்சயமாக, அவருடைய காரியங்கள் அனைத்தும் நன்மையே. இது ஒரு முஃமினைத் தவிர வேறு எவருக்கும் இல்லை. அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டால் அவர் (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகிறார்; அது அவருக்கு நன்மையாக அமைகிறது. அவருக்குத் துன்பம் ஏற்பட்டால் அவர் பொறுமை காக்கிறார்; அதுவும் அவருக்கு நன்மையாக அமைகிறது.” (முஸ்லிம் 2999)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஃமினுக்கும் முஃமினத்துக்கும் தொடர்ந்து சோதனைகள் அவர்களின் உடலிலும், குழந்தைகளிலும், செல்வங்களிலும் ஏற்பட்டு கொண்டே இருக்கும்; இறுதியில் அவர்கள் அல்லாஹ்வை சந்திக்கும் போது அவர்களுக்கு எந்தப் பாவமும் இருக்காது.”

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم مَا يَزَالُ الْبَلاَءُ بِالْمُؤْمِنِ وَالْمُؤْمِنَةِ فِي نَفْسِهِ وَوَلَدِهِ وَمَالِهِ حَتَّى يَلْقَى اللَّهَ وَمَا عَلَيْهِ خَطِيئَةٌ

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்தார்கள், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: "முஃமினான ஆணுக்கும், முஃமினான பெண்ணுக்கும் அவர்களுடைய உடலிலும், பிள்ளைகளிலும், செல்வங்களிலும் சோதனைகள் வந்துகொண்டே இருக்கும்; இறுதியில் அவர்கள் எந்தப் பாவமும் இல்லாத நிலையில் அல்லாஹ்வை சந்திப்பார்கள்." (திர்மிதீ 2399, அஹ்மது 7859)

இந்தத் தொற்றுநோயில் அல்லாஹ்வின் ஞானங்களில் ஒன்றாக, மனிதர்களின் பலவீனமும் இயலாமையும் வெளிப்படுவது ஆகும். இந்தச் சிறிய நோய்க்கு முன்பாக மனிதர்கள் எவ்வளவு நிலைத்தன்மையற்றவர்களாக உள்ளனர் என்பது தெளிவாகிறது.

வளர்ச்சி, நாகரிகம், தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள் மற்றும் ஆக்கப்பூர்வ முன்னேற்றங்களை அடைந்த நாடுகள்கூட, இந்தச் சிறிய தொற்றுநோயின் முன் குழப்பத்துடன் கதிகலங்கி நிற்கின்றன. அதை எதிர்கொள்ள முடியாமல் இயலாமையில் இருந்தன.

﴿مَنْ اَشَدُّ مِنَّا قُوَّةً﴾

"எங்களை விட வலிமையில் மிக்கவர்கள் யார்?" (அல்குர்ஆன் 41:15)

இந்தத் தொற்றுநோயால், அவற்றின் அகந்தையும் பெருமையும் உடைந்துவிட்டன. மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, தங்களது நிலையைப் பற்றியே கவலைப்பட்டன.

﴿ وَلَوْ أَنَّ قُرْءَانًا سُيِّرَتْ بِهِ ٱلْجِبَالُ أَوْ قُطِّعَتْ بِهِ ٱلْأَرْضُ أَوْ كُلِّمَ بِهِ ٱلْمَوْتَىٰ ۗ بَل لِّلَّهِ ٱلْأَمْرُ جَمِيعًا ۗ أَفَلَمْ يَا۟يْـَٔسِ ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَن لَّوْ يَشَآءُ ٱللَّهُ لَهَدَى ٱلنَّاسَ جَمِيعًا ۗ وَلَا يَزَالُ ٱلَّذِينَ كَفَرُوا۟ تُصِيبُهُم بِمَا صَنَعُوا۟ قَارِعَةٌ أَوْ تَحُلُّ قَرِيبًا مِّن دَارِهِمْ حَتَّىٰ يَأْتِىَ وَعْدُ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ لَا يُخْلِفُ ٱلْمِيعَادَ ﴾

நிராகரிப்போரை, அவர்கள் செய்து கொண்டிருக்கும் (தீயச்) செயல்கள் காரணமாக ஏதேனும் ஒரு கேடு வந்தடைந்து கொண்டேயிருக்கும், அல்லது அவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சமீபமாகவேனும், (அக்கேடு) சம்பவித்து, (உங்கள் வெற்றி குறித்து) அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியே தீரும் - நிச்சயமாக அல்லாஹ் (தன்) வாக்குறுதியில் மாறுசெய்யமாட்டான். (அல்குர்ஆன் 13:31)

மேலும் கூறுகிறான் :

﴿ فَكُلًّا أَخَذْنَا بِذَنۢبِهِۦ ۖ فَمِنْهُم مَّنْ أَرْسَلْنَا عَلَيْهِ حَاصِبًا وَمِنْهُم مَّنْ أَخَذَتْهُ ٱلصَّيْحَةُ وَمِنْهُم مَّنْ خَسَفْنَا بِهِ ٱلْأَرْضَ وَمِنْهُم مَّنْ أَغْرَقْنَا ۚ وَمَا كَانَ ٱللَّهُ لِيَظْلِمَهُمْ وَلَٰكِن كَانُوٓا۟ أَنفُسَهُمْ يَظْلِمُونَ ﴾

இவ்வாறு, நாம் ஒவ்வொருவரையும் அவரவர் செய்த பாவத்தின் காரணமாகப் பிடித்தோம்; அவர்களில் சிலர் மீது கடும்புயல் மூலமாக கல்மாரியை அனுப்பினோம்; அவர்களில் சிலரை பேரிடி முழக்கம் பிடித்துக்

கொண்டது; அவர்களில் சிலரைப் பூமியினுள் அழுந்தச் செய்தோம்; அவர்களில் சிலரை மூழ்கடித்தோம்; ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்வதற்காக இருக்கவில்லை; அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டார்கள். (அல்குர்ஆன் 29:40)

﴿ وَكَمۡ أَهۡلَكۡنَا مِن قَرۡيَةِۭ بَطِرَتۡ مَعِيشَتَهَاۖ ﴾

தங்களுடைய வாழ்க்கை வசதிகளின் செருக்கினால் (அழிச்சாட்டியம் செய்து கொண்டிருந்த) எத்தனையோ ஊ(ரா)ர்களை நாம் அழித்திருக்கிறோம். (அல்குர்ஆன் 28:58)

முஸ்லிம்களே! சிலர் இந்த உம்மத்துக்கு ஏற்பட்ட இந்தத் தொற்றுநோயை முழுமையாக பொருளாதார காரணங்களையே காரணம் காட்டுகின்றனர். உதாரணமாக, எதிர்ப்பு மருந்துகளை சரியாக பயன்படுத்தாதது, அல்லது நோய் பரவிய இடத்தில் அதை கட்டுப்படுத்தாதது போன்ற காரணங்களைச் சொல்கிறார்கள். இவ்வாறு பேசுபவர்கள், தக்தீர் (அல்லாஹ்வின் தீர்மானம்) மீது நம்பிக்கை இல்லாதவர்கள். இது குறுகிய பொருளாதார பார்வையாகும். மேலும் அறிவும் ஈமானும் குறைவாக இருப்பதற்கான சான்றாகும்.

உண்மையில், இந்தத் தொற்றுநோய் ஏற்படுவதை நிர்ணயித்தது அல்லாஹ் மட்டுமே. அதை நீக்குவதும் அவனுடைய கைகளில்தான் உள்ளது.

அவர்கள் அல்லாஹ்வின் இந்த வார்த்தையை வாசிக்க வேண்டாமா.

﴿ أَفَأَمِنَ أَهۡلُ ٱلۡقُرَىٰٓ أَن يَأۡتِيَهُم بَأۡسُنَا بَيَٰتٗا وَهُمۡ نَآئِمُونَ ٩٧ أَوَأَمِنَ أَهۡلُ ٱلۡقُرَىٰٓ أَن يَأۡتِيَهُم بَأۡسُنَا ضُحٗى وَهُمۡ يَلۡعَبُونَ ٩٨ أَفَأَمِنُواْ مَكۡرَ ٱللَّهِۚ فَلَا يَأۡمَنُ مَكۡرَ ٱللَّهِ إِلَّا ٱلۡقَوۡمُ ٱلۡخَٰسِرُونَ ٩٩ ﴾

அவ்வூர்வாசிகள் இரவில் நித்திரை செய்து கொண்டிருக்கும் போதே, நமது வேதனை அவர்களை வந்து அடையாது என பயமில்லாமல் இருக்கின்றார்களா? அல்லது அவ்வூர் வாசிகள் (கவலையில்லாது) பகலில் விளையாடிக்கொண்டிருக்கும் போதே, நமது வேதனை அவர்களையடையாது என பயமில்லாமல் இருக்கின்றார்களா? அல்லாஹ்வின் சூழ்ச்சியிலிருந்து அவர்கள் அச்சம் தீர்ந்து விட்டார்களா?

நஷ்டவாளிகளான மக்களை தவிர, வேறு எவரும் அல்லாஹ்வின் சூழ்ச்சியிலிருந்து அச்சம் தீர்ந்து இருக்க மாட்டார்கள். (அல்குர்ஆன் 7:97-99)

﴿ قُلۡ هُوَ ٱلۡقَادِرُ عَلَىٰٓ أَن يَبۡعَثَ عَلَيۡكُمۡ عَذَابٗا مِّن فَوۡقِكُمۡ أَوۡ مِن تَحۡتِ أَرۡجُلِكُمۡ أَوۡ يَلۡبِسَكُمۡ شِيَعٗا وَيُذِيقَ بَعۡضَكُم بَأۡسَ بَعۡضٍۗ ٱنظُرۡ كَيۡفَ نُصَرِّفُ ٱلۡأٓيَٰتِ لَعَلَّهُمۡ يَفۡقَهُونَ ٦٥ ﴾

(நபியே!) நீர் கூறும்: "உங்கள் (தலைக்கு) மேலிருந்தோ அல்லது உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்குத் துன்பம் ஏற்படும்படி செய்யவும்; அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி உங்களில் சிலர் சிலருடைய கொடுமையை அனுபவிக்கும்படிச் செய்யவும் அவன் ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான்." அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக (நம்)வசனங்களை எவ்வாறு (பலவகைகளில் தெளிவாக்கி) விவரிக்கின்றோம் என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக. (அல்குர்ஆன் 6:65)

இந்தத் தொற்றுநோயில் அல்லாஹ்வின் ஞானங்களில் ஒன்றாக, இந்த நோயிலிருந்து அல்லாஹ் காப்பாற்றியவர்களின் பாதுகாப்பில் உள்ள பெரிய நன்மை வெளிப்படுகிறது. அது என்னவெனில், முஸ்லிம்களின் ஆட்சியாளர்களுக்கு கீழ்ப்படிதல், ஒற்றுமையாக இருப்பது, ஒருமித்த கருத்தில் நிற்றல், ஆட்சி மற்றும் மக்களுக்கிடையிலான ஒற்றுமை ஆகியவை.

அதன் பகுதியாக, வீடுகளில் தங்குவது, வெளியே செல்வதைத் தடை செய்வது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுவது, பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிப்பது, மற்றும் இந்த நோய் பரவாமல் இருக்க மருத்துவ வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது ஆகியவை அடங்கும்.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை பயந்து நடக்குங்கள் - வெளிப்படையாகவும் மறைவாகவும் அவனை நினைவில் கொண்டு கண்காணிப்புடன் வாழுங்கள். அவனை மறந்து அலட்சியமாக இருப்பதிலிருந்தும், அவன் கட்டளைகளை மீறுவதில் தொடர்வதிலிருந்தும் எச்சரிக்கையாக இருங்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: “உங்கள் உள்ளங்களில் உள்ளதை அல்லாஹ் அறிந்திருக்கிறான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்; ஆகவே அவனை பயப்படுங்கள்.”

நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு இந்தத் தொற்றுநோயை ஏற்படுத்தியவன், நமக்கும் அதையே ஏற்படுத்த வல்லவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆகையால், எல்லா பாவங்களிலிருந்தும் உண்மையான அழகிய தப்பாவைச் செய்யுங்கள். ஏனெனில் அதுவே இந்த பேரழிவிலிருந்து வெளியேறும் திறவுகோல் ஆகும்.

உமர் (ரலி) அவர்கள் “ஆம் அல்-ரமாதா” என்ற வறட்சிக் காலத்தில் மக்கள் மழைக்காக வேண்டிக் கொண்டபோது கூறியதுபோல்:
“அல்லாஹ்வே! எந்தத் துன்பமும் பாவங்களால் தவிர இறங்கவில்லை. அது மனந்திரும்பலால் தவிர நீங்கவில்லை. இதோ எங்கள் கைகள் பாவங்களுடன் உம்மிடம் உயர்கின்றன, எங்கள் நெற்றிகள் தவ்பாவுடன் உம்மிடம் திரும்புகின்றன.”

بارك الله لي ولكم في القرآن العظيم، ونفعني وإياكم بما فيه من الآيات والذكر الحكيم، أقول قولي هذا واستغفر الله لي ولكم من كل ذنب فاستغفروه، إنه كان للتوابين غفورا.

இரண்டாம் உரை

الحمد لله وكفى، وسلام على عباده الذين اصطفى، أما بعد،

முஸ்லிம்களே! கொரோனா போன்ற தொற்றுநோய்களிலிருந்தும் மற்ற தீமைகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுவதற்கான முக்கியமான காரணங்கள் ஆறு, அவை :

முதலாவது: அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பது (தவக்குல்)
அதாவது முழுவதும் அல்லாஹ்வின் மீது சார்ந்திருக்க வேண்டும். அதே நேரத்தில், தீமைகளிலிருந்து பாதுகாப்புக்கான நடைமுறை காரணங்களையும் மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَمَن يَتَوَكَّلۡ عَلَى ٱللَّهِ فَهُوَ حَسۡبُهُۥٓۚ ﴾

"யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பாரோ, அவருக்கு அவன் போதுமானவன்." (அல்குர்ஆன் 65:3)

"போதுமானவன்" என்றால் - அவருக்கு தேவையான அனைத்தையும் வழங்குபவன்.

இரண்டாவது: இந்தத் தொற்றுநோயோ அல்லது வேறு எந்தத் துன்பமோ ஏற்படுவது, அதில் பாதிக்கப்படுவதோ அல்லது அதிலிருந்து பாதுகாக்கப்படுவதோ அல்லாஹ்வின் தீர்மானத்தினால்தான் என்பதை அறிதல்.

மனிதன் அனைத்து காரணங்களையும் செய்தாலும், அல்லாஹ் அவனுக்கு துன்பம் ஏற்படுமென நிர்ணயித்திருந்தால் அது அவனைத் தவறாமல் அடையும்.

அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَإِن يَمۡسَسۡكَ ٱللَّهُ بِضُرّٖ فَلَا كَاشِفَ لَهُۥٓ إِلَّا هُوَۖ وَإِن يَمۡسَسۡكَ بِخَيۡرٖ فَهُوَ عَلَىٰ كُلِّ شَيۡءٖ قَدِيرٞ ﴾

"(நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவதொரு துன்பத்தை ஏற்படுத்திவிட்டால் அவனைத் தவிர (வேறு யாரும்) அதை நீக்க முடியாது. இன்னும் அவன் ஒரு நன்மையை உண்டாக்கிவிட்டால், (அதை எவரும் தடுக்க முடியாது.) அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 6:17)

மூன்றாவது: அதிகமாக வழிபாடு செய்வது.

அல்லாஹ் கூறுகிறான்: "அல்லாஹ் தனது அடியாருக்கு போதுமானவனல்லவா?"

இந்த வசனத்தில், அல்லாஹ் தனது அடியாரை தீமைகளிலிருந்து பாதுகாப்பது, அவனின் 'அடியாராக இருப்பது' (அதாவது வழிபாட்டில் ஈடுபடுவது) என்பதுடன் தொடர்புடையது. எனவே, அதிகமாக வழிபாடு

செய்யும் ஒருவர், தீமைகளிலிருந்தும் பேரிடர்களிலிருந்தும் அதிக பாதுகாப்பைப் பெற தகுதியானவர்.

நான்காவது: அல்லாஹ் தனது அடியாரை தீமைகளிலிருந்து பாதுகாப்பதற்கான காரணங்களில் ஒன்று, நபி ﷺ அவர்கள்மீது அதிகமாக ஸலவாத் சொல்லுதல் ஆகும்.

ஆதாரம்: கஅப் (ரலி) அவர்கள் நபி ﷺ அவர்களிடம், "நான் உங்கள்மீது அதிகமாக ஸலவாத் சொல்வேன். என் துஆவில் அதற்கு பெரும்பங்கு கொடுப்பேன்" என்று கூறியபோது, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "அப்படியானால், உன் கவலைகள் நீக்கப்படும், உன் பாவங்கள் மன்னிக்கப்படும்." (திர்மிதீ 2407)

ஐந்தாவது: அல்லாஹ் தனது அடியாரை தீமைகளிலிருந்து பாதுகாப்பதற்கான மற்றொரு காரணம், காலை (துஹா நேரத்தில்) இரண்டு இரண்டு ரக்அத்தாக நான்கு ரக்அத் தொழுகை செய்வது.

ஆதாரம்: அல்லாஹ் ஹதீஸ் குத்ஸியில் கூறுகிறான்:
"ஆதமின் மகனே! நாள் தொடக்கத்தில் எனக்காக நான்கு ரக்அத் தொழு; நாள் முடிவை நான் உனக்குப் பாதுகாப்பேன்." (திர்மிதீ 405)

"நாள் முடிவை பாதுகாப்பேன்" என்றால், அந்த நாளில் ஏற்படக்கூடிய தீமைகளும் பாதிப்புகளும் இருந்து பாதுகாப்பேன் என்பதாகும்.

ஆறாவது: அல்லாஹ் தனது அடியாரை தீமைகளிலிருந்தும் பாதிப்புகளிலிருந்தும் பாதுகாப்பதற்கான மிக முக்கிய காரணங்களில் ஒன்று, காலை மற்றும் மாலை நேர திக்ர்களையும் துஆக்களையும் தொடர்ந்து ஓதுதல் ஆகும். அவற்றில் சில:

ஸூரா இக்லாஸ் மற்றும் முஅவ்விததைன் (ஸூரா ஃபலக், ஸூரா நாஸ்) ஆகியவற்றை காலை மற்றும் மாலை மூன்று முறை ஓதுதல்.
இதற்கான

ஆதாரம்: நபி ﷺ அவர்கள் அப்துல்லாஹ் இப்னு குபைப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: 'குல் ஹுவல்லாஹு அஹத்' மற்றும் முஅவ்விததைன் ஆகியவற்றை காலை மற்றும் மாலை மூன்று முறை ஓது;

அது உனக்கு எல்லாவற்றிலும் போதுமானதாக இருக்கும்." (அபுதாவூது 5082)

மேலும், அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்கள் இந்த துஆக்களை காலை மற்றும் மாலை விடாமல் கூறுவார்கள்:

اللَّهُمَّ إني أسألُكَ العافيَةَ في الدُنيا والآخرة، اللَّهُمَّ إني أسألُكَ العفوَ والعافيَةَ في ديني ودنياي وأهلي ومالي، اللَّهُمَّ استُرْ عوراتي، وآمِن رَوْعَاتِي، اللَّهُمَّ احفظني مِنْ بين يدي ومن خلفي، وعن يميني وعن شِمالي ومن فوقي، وأعوذُ بعظمتِكَ أن أُغْتَالَ مِن تحتي

"அல்லாஹ்வே! இந்த உலகிலும் மறுமையிலும் எனக்கு நலனையும் பாதுகாப்பையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! என் மார்க்கத்திலும், என் உலக வாழ்க்கையிலும், என் குடும்பத்திலும், என் செல்வத்திலும் மன்னிப்பையும் நலனையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! என் குறைகளை மறைத்தருள்வாயாக. என் பயங்களை பாதுகாப்பாக மாற்றுவாயாக.
அல்லாஹ்வே! என்னை முன்புறத்திலிருந்து, பின்னாலிருந்து, வலப்புறத்திலிருந்து, இடப்புறத்திலிருந்து, மேலிருந்து பாதுகாப்பாயாக. உன் மகத்துவத்தால், கீழிருந்து (திடீர் அழிவிலிருந்து) நான் கொல்லப்படுவதிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்." (அபுதாவூது 5074, இப்னு மாஜா 3871)

மாலை நேர திக்ர்களில் ஒன்றாக, மாலை வந்தபோது **ஸூரா பகராவின் கடைசி இரண்டு வசனங்களை** ஓதுவது ஆகும்.

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم : الآيَتَانِ مِنْ آخِرِ سُورَةِ الْبَقَرَةِ مَنْ قَرَأَهُمَا فِي لَيْلَةٍ كَفَتَاهُ

"சூரத்துல் பகராவின் கடைசி இரண்டு வசனங்களை யார் ஓர் இரவில் ஓதுகிறாரோ, அவை அவருக்குப் போதுமானவையாகும் (புகாரி 4008, முஸ்லிம் 807)

ஒரு முஸ்லிம் தனது வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது அவரை பாதுகாக்கும் திக்ர்களில் ஒன்று,

النَّبِيَّ صلى الله عليه وسلم قَالَ " إِذَا خَرَجَ الرَّجُلُ مِنْ بَيْتِهِ فَقَالَ بِسْمِ اللَّهِ تَوَكَّلْتُ عَلَى اللَّهِ لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللَّهِ " . قَالَ " يُقَالُ حِينَئِذٍ هُدِيتَ وَكُفِيتَ وَوُقِيتَ فَتَتَنَحَّى لَهُ الشَّيَاطِينُ فَيَقُولُ لَهُ شَيْطَانٌ آخَرُ كَيْفَ لَكَ بِرَجُلٍ قَدْ هُدِيَ وَكُفِيَ وَوُقِيَ "

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:"ஒருவர் தம் வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது, **'பிஸ்மில்லாஹி, தவக்கல்து அலல்லாஹி, லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்'** (அல்லாஹ்வின் பெயரால்; நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தேன்; அல்லாஹ்வைக் கொண்டல்லாமல் எந்தச் சக்தியும் ஆற்றலும் இல்லை) என்று கூறினால், அப்போது (வானவர்களால்) அவரிடம், 'நீர் நேர்வழி காட்டப்பட்டீர், உமக்கு (அனைத்துத் தேவைகளும்) போதுமாக்கப்பட்டன, மேலும் நீர் (தீமைகளிலிருந்து) பாதுகாக்கப்பட்டீர்' என்று கூறப்படும். அப்போது ஷைத்தான்கள் அவரை விட்டு விலகிச் செல்வார்கள். மற்றொரு ஷைத்தான் (அவனைப் பார்த்து), 'நேர்வழி காட்டப்பட்ட, (தேவைகள்) போதுமாக்கப்பட்ட மற்றும் (தீமைகளிலிருந்து) பாதுகாக்கப்பட்ட ஒரு மனிதனிடம் உன்னால் என்ன செய்ய முடியும்?' என்று (கேலியாகக்) கூறும்." போதுமானவையாகும் (அபுதாவூத் 5095)

மேலும், பாதுகாப்பளிக்கும் திக்ர்களில் ஒன்று :

سَلُوا اللَّهَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فَإِنَّ أَحَدًا لَمْ يُعْطَ بَعْدَ الْيَقِينِ خَيْرًا مِنَ الْعَافِيَةِ..

“அல்லாஹ்விடம் மன்னிப்பையும் (அல்-அஃப்வு), ஈடேற்றத்தையும் (அல்-ஆஃபியஹ் - அதாவது, உடல்நலம், பாதுகாப்பு, நல்வாழ்வு, பாவங்களிலிருந்து விலகி இருத்தல் போன்ற அனைத்து நன்மைகளையும்) கேளுங்கள்! ஏனெனில், (ஈமான் எனும்) உறுதியான நம்பிக்கைக்குப் பிறகு, அல்-ஆஃபியஹ்வை விட சிறந்த ஒன்று எவருக்கும் கொடுக்கப்படவில்லை.” (திர்மிதீ 3558)

وكان (صلى الله عليه وسلم) يدعو في قنوته فيقول: وَعَافِنِي فِيمَنْ عَافَيْتَ.[279]

[279] رواه أحمد (١/١٩٩)، وصححه محقق «المسند» برقم (١٧١٨).

நீ நல்வாழ்வு (ஆரோக்கியம், பாதுகாப்பு, சோதனைகளிலிருந்து விடுதலை போன்ற முழுமையான ஆஃபியா) அளித்தவர்களுடன் சேர்த்து எனக்கும் நல்வாழ்வு அளிப்பாயாக. (அஹ்மது 1718)

مِنْ دُعَاءِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ وَتَحَوُّلِ كَانَ عَافِيَتِكَ وَفُجَاءَةِ نِقْمَتِكَ وَجَمِيعِ سَخَطِكَ

அல்லாஹ்வே! உனது அருட்கொடைகள் நீங்குவதிலிருந்தும் (அவை இல்லாமல் போவதிலிருந்தும்), உனது நல்வாழ்வு (ஆரோக்கியம், பாதுகாப்பு, நிம்மதி) மாறிவிடுவதிலிருந்தும், உனது திடீர் தண்டனையிலிருந்தும் (அல்லது கோபத்தின் வெளிப்பாட்டிலிருந்தும்), உனது அனைத்து அதிருப்தியிலிருந்தும் (அல்லது கோபத்திலிருந்தும்) நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன் (முஸ்லிம் 2739)

நோய்களிலிருந்து பாதுகாப்பு பெற அல்லாஹ்விடம் கேட்கும் திக்ர்களில் சில:

حديث أَنَسٍ رضي الله عنه أَنَّ النَّبِيَّ (صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ) كَانَ يَقُولُ: اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ الْبَرَصِ وَالْجُنُونِ وَالْجُذَامِ وَمِنْ سَيِّئِ الْأَسْقَامِ.[280]

நபி ﷺ அவர்கள் (வழக்கமாக) கூறுவார்கள்:
"அல்லாஹ்வே! வெண்குஷ்டம், பைத்தியம், தொழுநோய் மற்றும் மோசமான நோய்களிலிருந்து (அதாவது, சமூகத்தால் வெறுக்கப்படும், உடல் உறுப்புகளைச் சிதைக்கும், அல்லது திடீரெனத் தாக்கி மரணத்தை ஏற்படுத்தும் கடுமையான நோய்களிலிருந்து) உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்." (அபுதாவூத் 1554)

குஷ்டநோய் (ஜுதாம்) என்பது மனிதனின் உடலின் உறுப்புகள் (முனை பகுதிகள்) மீது தாக்கம் ஏற்படுத்தும் ஒரு நோயாகும்; அது படிப்படியாக முழு உடலையும் பாதித்து அழிவிற்கு கொண்டு செல்லக்கூடும்.

தீமைகளிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாக வந்துள்ள ஹதீஸ்களும் திக்ர்களும் மிக அதிகமாக உள்ளன. அவை துஆ நூல்களில்

[280] رواه أحمد (١٩٢/٣)، وقال محققو «المسند»: إسناده صحيح على شرط مسلم.

பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சில: இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்களின் “**அல்-கலிமுத் தையிப்**”, நவவி (ரஹ்) அவர்களின் “**அல்-அத்கார்**”, மற்றும் அல்-கஹ்தானி அவர்களின் “**ஹிஸ்னுல் முஸ்லிம்**” போன்ற நூல்கள் மற்றும் பல நூல்கள் ஆகும்.

பார்வைக்கு தெரியாத அளவு சிறியதாக இருந்தாலும், கொரோனாவை உருவாக்கி அனுப்பிய இறைவனுக்கு மகிமை.

அவன் அடியார்களுக்கு அவர்களின் பலவீனத்தை காட்டுகிறான்.

கண்களால் காண முடியாத ஒரு வைரஸ்,
ஆனால் உலக மக்களின் பெரும்பாலானவர்களை அது தாக்கியது.

எத்தனை பொருளாதாரங்கள் அதன் உயர்வுக்குப் பிறகு வீழ்ந்தன,
எத்தனை இயக்கங்களும் இந்த பூமியில் நிறுத்தப்பட்டன.

சிப்பி உள்ளே அடங்கிய முத்தைப் போல மக்களை அவர்களின்
முயற்சியிலிருந்தும், பயணத்திலிருந்தும் தடுத்து,
வீடுகளுக்குள் கட்டுப்படுத்தியது.

“தொட தடை” என்பது மக்களின் பயமாக மாறியது;
ஒவ்வொருவரும் தொட்டால் ஆபத்து என அஞ்சினர்.

எத்தனை சமூகங்கள் கடினமான வாழ்க்கைக்கு மாறின.
முன்பு நலங்களிலும் செல்வத்திலும் பெருமை கொண்டிருந்தவை.

இரு நேசர்களின் ஸலாம் கூட தூரத்திலிருந்தே அமைந்தது;
சுருங்கிய கைகள் போல, நெருங்காமலே விலகி இருந்தது.

பார்வைக்கு தெரியாத சிறிய ஒன்றின் மூலம்,
அவன் தன் படைப்புகளை அச்சுறுத்தினான் - பயமும் நினைவூட்டலுமாக.

அவர்கள் விழித்தெழுந்து அலட்சியத்திலிருந்து மீள்வார்களாக;
அகந்தையும் அடக்குமுறையும் அகற்றப்படட்டும்.

அவர்கள் மறந்திருந்த நலன்களை மீண்டும் உணர்வார்களாக;
எத்தனை அருட்கள் பழக்கத்தில் மறக்கப்பட்டிருந்தன.

நாம் கருணையுள்ள இறைவனின் பொறுமையை காணலாம்,
அவன் விரும்பினால் ஒரே நொடியில் அனைத்தையும் அழிக்க வல்லவன்.

ஓ இறைவா! சிரமத்துக்குப் பிறகு எளிமையை விரைவாக அளிப்பாயாக; எங்களை விடுவிப்பாயாக - ஏனெனில் நோன்பு மாதம் நெருங்கியுள்ளது

எழுத்து : ஷேக். அலி பின் யஹ்யா அல்ஹத்தாதி

அல்லாஹ்வின் அடியார்களே! இந்தத் தொற்றுநோய் உயிர்களுக்கு மிக ஆபத்தானது. அதன் பரவல் மிகவும் வேகமானது. ஆகையால், முஃமின் ஒருவர் அதிலிருந்து பாதுகாப்பு வேண்டி அல்லாஹ்விடம் அதிகமாக துஆ செய்ய வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு பெரிய அருள் (நிஃமத்) ஆகும். அல்லாஹ் தனது அடியார்களின் உயிர்களை அவர்களிடம் ஒப்படைத்திருக்கிறான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "உனக்கு உன்னிடம் ஒரு கடமை உள்ளது."

மேலும் அறிந்துகொள்ளுங்கள்! அல்லாஹ் உங்கள் மீது கருணைபுரிவானாக! அல்லாஹ் உங்களுக்கு மேனானவற்றை கொண்டு கட்டளையிட்டுள்ளான் :

﴿إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَاأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا﴾

இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

மேலும் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: "உங்களின் சிறந்த நாட்களில் ஒன்று வெள்ளிக்கிழமை. அதில் ஆதம் (அலை) படைக்கப்பட்டார், அதில் அவர் உயிர் எடுத்துக் கொள்ளப்பட்டார், அதில் கியாமத் நடக்கும் சூர் ஊதல் இருக்கும், அதில் மயக்கம் ஏற்படும். ஆகையால் என்மீது அதிகமாக ஸலவாத் சொல்லுங்கள்; ஏனெனில் உங்கள் ஸலவாத் எனக்கு சமர்ப்பிக்கப்படுகிறது."

அல்லாஹ்வே! உமது அடியாரும் தூதருமான முஹம்மது ﷺ அவர்கள்மீதும் அருள் மற்றும் அமைதி ஏற்படுத்துவாயாக. அவர்களின் ஸஹாபாக்கள் (கலீபாக்கள்) மீதும் திருப்தி அடைவாயாக. தாபிஈன்கள் மற்றும் அவர்களை நன்மையுடன் பின்பற்றியவர்கள்மீதும் கியாமத் நாள் வரை திருப்தி அடைவாயாக.

அல்லாஹ்வே! எந்தத் துன்பமும் பாவத்தால் தவிர இறங்கவில்லை. அது தவ்பாவால் தவிர நீங்கவில்லை. இதோ எங்கள் கைகள்

பாவங்களுடன் உன்னிடம் உயர்கின்றன. எங்கள் நெற்றிகள் தவ்பாவுடன் உன்னிடம் திரும்புகின்றன.

அல்லாஹ்வே! எங்களிடமிருந்து இந்தப் பேரிடரை நீக்குவாயாக, நாங்கள் முஸ்லிம்களாக இருக்கிறோம்.

அல்லாஹ்வே! இந்த நோயால் மரணித்த முஸ்லிம்கள்மீது கருணை புரிவாயாக.
நோயுற்றவர்களுக்கு நன்மையும் ஆரோக்கியமும் ஒன்றாக வழங்குவாயாக.

அல்லாஹ்வே! எங்களை ரமலானை அடையச் செய்; எங்களை ரமலானை அடையச் செய்; எங்களை ரமலானை அடையச் செய்.

“எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் நன்மை அளிப்பாயாக. மறுமையிலும் நன்மை அளிப்பாயாக; நரகத் தண்டனையிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக.”

سبحان ربنا رب العزة عما يصفون، وسلام على المرسلين، والحمد لله رب العالمين.

ஆக்கம் : மாஜித் பின் ஸுலைமான் அர்ரஸ்ஸீ